நூலாசிரியர் உரை

ஸ்ரீ லங்கா புத்தகசாலையின் வெளியீடாக வரும் திருக்குறள் கதைகள் பற்றி வாசகர்களாகிய உங்களுடன் எனது அனுபவத்தைப் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். நான் எழுதிய ஆத்திசூடிக் கதைகளுக்கு பெருவரவேற்புக் கிடைத்தது. உலகில் உள்ள சைவர்கள் எவருக்குமில்லாத கௌரவமாக நான் எழுதிய இந்நூல்கள் மலேசியாவில் 2003ஆம் ஆண்டு வைகாசி மாதம் ஒன்பதாம் திகதி நடைபெற்ற உலக சைவ மாநாட்டில் வெளியிடப்பட்டன. 1973 இல் இருந்து எழுதிவரும் நான் ஆத்திசூடிக் கதைகளுக்குப் பிறகு திருக்குறள் கதைகளை எழுதி முடித்துவிட்டு ஸ்ரீ லங்கா புத்தகசாலை உரிமையாளர் திரு. ..... அவர்களை நாடியபோது அவர் பெருமகிழ்வுடன் அவற்றை வெளியிட முன்வந்தார். அத்துடன் முழுக் குறள்களுக்கும் உரையையும் எழுதுமாறு கேட்டுக்கொண்டார்.

திருக்குறள் முழுவதற்கும் கதை எழுத வேண்டும் என்று நினைத்து எழுதத் தொடங்கினேன். ஆரம்பத்தில் மிகவும் பயமாக இருந்தது. ஆனால் எழுதத் தொடங்கிய பின்பு இலகுவாகவும் உற்சாகமாகவும் இருந்தது. அறமும் நீதியும் ஒழுக்கமும் தற்போது மக்களிடையே அருகி வருகின்றன. ஆத்திசூடி, திருக்குறள், நாலடியார் போன்ற நல்ல பல நூல்கள் எமக்குத் துணையாக இருந்தும் அவை கூறும் கருத்தைப் பின்பற்றாமையால் மக்கள் அவல நிலைக்குள்ளாக்கப்படுகின்றனர். இந்நிலை மாறவேண்டும். திருக்குறளுக்கு உரை எழுதியோர் பலர். எல்லோரும் இரு வரியிலேயே பொருள் கூறியுள்ளனர். இப்பொருளும் குறள் போலவே இருப்பதால் பலருக்குப் புரிவதில்லை. அதனால் குறளின் பொருளை நன்கு உணர வேண்டுமென்பதற்காக கதைகள் எழுதியுள்ளேன். இக்கதைகள் மிகவும் இலகுவான தமிழில் எழுதப்பட்டுள்ளன. எல்லோரும் வாசித்து இன்புற வேண்டும் என்பதே எனது விருப்பம்.

இக்குறள் கதைகளை எழுத உற்சாகப்படுத்தி கணனிப் பிரதியைச் சரிபார்த்து உதவிய கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய உப அதிபர் திருமதி. சாந்தினி வாகீசன் அவர்களுக்கும், கணினிப் பிரதியை சரி பார்த்து உதவிய பொன். இராசதுரை, திரு. க. கணேசராஜா ஆசிரியர் ஆகியோர்க்கும் நன்றி.

இக்கதைகளை கணினியில் பதித்து அழகுற வடிவமைத்துத் தந்த செல்வி. கஜனி தம்பித்துரையின் சேவை அளப்பரியது. அவருக்கு எனது பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். மீண்டும் சந்திப்போம்.

கே. வி. குணசேகரம்,

அதிபர்,

யா.∴. கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.

அணிந்துரை

கே.வி.குணசேகரம் நாடறிந்த நல்ல எழுத்தாளர். நாவல், சிறுகதை , சிறுவர் கதை , கவிதை முதலானவற்றிலே ஆழமான தடத்தினைப் பதித்துள்ளார். எழுத்துத் துறையில் பல பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றவர். இவர் ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றும் அனுபவங்களின் வெளிப்பாடும் இக்கதைகளினூடு துல்லியமாகத் தெரிகின்றது. இந்நூலாசிரியர் எனது மாணவர். பட்டப்படிப்பு மாணவனாக இருக்கும் காலத்திலே எழுத்துத் துறையில் ஆர்வத்துடன் ஈடுபட்டவர். இவர் நல்ல ஆளுமைமிக்க அதிபராகத் திகழ்கின்றார். இவர் ஏலவே எழுதிய ஆத்திசூடிக் கதைகள் ஈழத்திலும் தமிழகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

இப்பொழுது கே.வி.குணசேகரத்தின் திருக்குறள் கதைகள் என்னும் நூல் வெளிவருகின்றது. சிறுவர்களின் வாசிப்புப் பழக்கம் அருகிவரும் இக்காலத்திலே இத்தகைய துணை வாசிப்பு நூல்கள் மிகவும் அவசியமாகும்.

மாணவர்களின் மொழிவளத்தை , ஆக்கத்திறனை , சிந்தனை விருத்தியை ஒழுக்க வாழ்வை மேம்படுத்த திருக்குறள் கதைகள் பெரிதும் உதவும் என நம்புகின்றேன். சில காலத்துக்கு முன்னர் இலங்கையி லும் தமிழகத்திலும் திருக்குறள் கதைகள் என்னும் நூல்கள் வெளிவந்துள்ளன. ஏல்லாத் திருக்குறள்களுக்கும் அல்லாமல் தெரிவு செய்யப்பட்ட சில குறள்களுக்கே கதைகள் எழுதப்பட்டன என்று எண்ணுகின்றேன். ஆனால் கே.வி.குணசேகரம் எல்லாக் குறள்களுக்கும் கதை எழுதும் உற்சாகத்துடன் இருக்கின்றார். 250 குறள்களுக்கான விளக்கக் கதைகளை இப்போது எழுதியுள்ளார்.

இன்றைய காலச் சூழ்நிலையிலே சிறுவர்களின் வாசனைப் பழக்கத்தைச் சாகடிக்கும் வகையிலே தொலைக்காட்சி முதலிய ஊடகங்களின் செயற்பாடுகள் அமைந்து விட்டன. தற்காலச் சிறுவர்களின் மொழித்திறன், சிந்தனைத் திறன் , ஆக்கத் திறன் முதலியன வளர்ச்சியடைய வேண்டுமானால் இத்தகைய துணை வாசைன நூல்கள் பெருமளவு வரவேண்டியது அவசியமாகும்.

தமிழ்க் கல்வியைப் பொருத்தமட்டில் அது தொடங்கிய காலத்திரலிருந்தே அறநீதிக் கருத்துக்களை வலியுறுத்தி வந்துள்ளது. இங்கு வந்த கிறிஸ்தவ மிசனறிமாரின் பாடசாலைகளிலே கூடத் திருக்குறள் , நாலடியார் , ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலான நீதி நூல்கள் கற்பிக்கப் பட்டமைக்கான சான்றுகள் உள்ளன. நல்ல ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க இளமையிலே நீதிநூல்களைப் போதிக்க வேண்டுமென்று நம் முன்னோர் கருதினர். காலப் போக்கிலே கல்வி வணிக மயமாக்கப்பட்டு போட்டிப் பரீட்சைகளுக்கு முகங் கொடுக்கும் பண்டமாக மாறியபின் அறநீதிக் கல்வி மெல்ல மெல்ல வலுவிழக்கத் தொடங்கியது. நமது முன்னோரின் வழிநடத்தலிலே எதிர்காலச் சந்ததிகள் நடைபயில வேண்டும் என்று விரும்பிய கே.வி.குணசேகரம் மிகவும் துணிச்சலுடன் கதைகளை எழுதியுள்ளார்.

ஓவ்வொரு குறளுக்கும் அமைவாக பொருள் நயம் சிந்தமாமல் சிதறாமல் கதை எழுதுவதென்பது இலகுவான காரியம் அல்ல. எழுத்தனுபவமும் சிந்தனை

வீச்சும் உடைய கே.வி.குணசேகரம் இந்த வகையிலே பெரு வெற்றிபெற்றுள்ளார் என்று துணிந்து கூறலாம்.

ஏளிய இனிய வசனங்ளினூடு சமூக , தனிமனித நீதியை குறள்வழிநின்று ஆசிரியர் சிறப்பான கதைகளாக எழுதியிருக்கின்றார். இக்கால மாணவர்களின் தேவையை உணர்ந்து , அவர்களின் உளப்பாங்கை மனங்கொண்டு கதைகளைத் தொடர்கதைகளைப் போல எழுதிச் செல்வது பாராட்டுக்குரியது

மாணவர்களின் மனதிலே நின்று நிலைக்கக் கூடிய சம்பவங்கள் - நிகழ்ச்சிகளைப் பொருத்தமான பாத்திரங்களினூடடு கதையாகப் பின்னிச் செல்லும் திறம் ஆசிரியரிடம் நிரம்பவே காணப்படுகின்றது.

செந்தமிழும் பேச்சுத்தமிழும் விரவி வர இக் கதைகள் புனையப் பட்டுள்ளன. மாணவர்களின் மனோபாவத்துக்கு ஏற்றவகையிலே கதாபாத்திரங்களின் உரையாடல்கள் அமைந்துள்ளன.

கற்பனை வளமும் கருத்துச் செறிவும் மிக்க இவரது கதைகள் மாணவர் சமுதாயத்துக்கு நன்கு வழிகாட்டும் என உறுதியாக நம்பலாம். கே.வி.குணசேகரத்தின் பணிகள் தொடர வாழ்த்துவோமாக.

கலாநிதி .எஸ்.சிவலிங்கராசா
தமிழ்த்துறை
யாபழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை 05.03.2004

முதல்வன்

கணேசபிள்ளை நாவலடிக் கிராமத்தில் வாழும் பெரும் பணக்காரர். அவரின் மனைவி சகுந்தலா. தனது குடும்பத்தவர்களின் மனம் மட்டுமல்ல, மற்றவாகளின் மனங்கள் கூடக் கோணாதபடி நடந்துகொள்ளும் உத்தமி. கணேசபிள்ளையின் ஏகபுத்திரன் கஜமுகன். திருமணமாகிப் பல வருடங்கள் பிள்ளையில்லாதிருந்த கணேசபிள்ளை நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதியின் ஆலயத்தில் நோன்பிருந்து பெற்ற மகன் கஜமுகன்.

கஜமுகனை கணேசபிள்ளை பாசத்துடன் வளர்த்து வந்தார். அவனுக்கு பத்து வயதான போது காய்ச்சல் நோய் அவனைப் பீடித்தது. பெரும் பணக்காரரான கணேசபிள்ளை நகரில் உள்ள பிரபல வைத்தியர்களிடமெல்லாம் கஜமுகனைக் கொண்டு சென்றார். ஆனால் நோய் குணமாவதற்குப் பதிலாக அதிகரித்துக் கொண்டிருந்தது. பட்டணத்தில் உள்ள பெரிய தனியார் மருத்துவமனையில் கஜமுகன் அனுமதிக்கப்பட்டிருந்தான். அதைவிடப் பெரிய மருத்துவமனை அந்நாட்டில் இல்லை. அம்மருத்துவமனையில் கடமையாற்றும் மருத்துவர்களாலும் கஜமுகனது நோயைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

கணேசபிள்ளை ஆடிப்போனார். அவரால் செயற்பட முடியவில்லை. கஜமுகன் நோய்வாய்ப்பட்ட நாளில் இருந்து நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் தினமும் அவனின் நலன்வேண்டி பூசை செய்வித்தார். தினமும் கோயிலில் அன்னதானம் செய்தார். ஏழைகளுக்கு உதவினார். இருந்தும் கஜமுகனுக்கு நோய் குணமாகவில்லை.

கணேசபிள்ளையாலும் சகுந்தலாவாலும் எதையும் சிந்திக்க்கூட முடியவில்லை. கணேசபிள்ளைக்கு உலகத்தின் மீது வெறுப்பு ஏற்பட்டது. வாழ்க்கையின் மீது வெறுப்பேற்பட்டது. தற்கொலை செய்ய எண்ணினார். தான் தற்கொலை செய்து கொண்டால் உணர்வில்லாமல் இருக்கும் கஜமுகனையும், உருக்குலைந்திருக்கும் தனது மனைவியையும் கவனிக்க யாரும் இல்லாது போய்விடுவார்கள் என்று எண்ணி அந்த யோசனையைக் கைவிட்டார். அவரால் இயங்க முடியவில்லை.

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய மண்டபத்தில் தங்கியிருந்து மக்களுக்கு தொண்டாற்றுபவர் ஸ்ரீனிவாசன். திருமணமாகாதவர். பெரும்பாலான நேரங்களில் நிஷ்டையில் இருப்பார். மக்கள் தமது குறைநிறைகளை அவரிடம் சொல்லி ஆறுதலடைவார்கள். கோயிலுக்கு வரும் பக்தர்களில் சிலருக்கு பின்பு

நடைபெறவுள்ள நிகழ்வுகளைப் பற்றிக் கூறுவார். அருளுரைகள் கூறுவார். கோயிலுக்குச் செய்ய வேண்டிய பணிகளைப் பற்றிக் கூறுவார். அதனால் துன்பம் நேர்ந்த மக்கள் அவரிடம் செல்வார்கள். அவராக எதுவும் கூறினால் சரி. அவரிடம் எதையும் கேட்க முடியாது. யாருடனும் அவர் பேசமாட்டார்.

கணேசபிள்ளை மகன் சுகவீனமடைந்த பின்பு பலமுறை சுவாமியாரின் அருகில் சென்று இருந்தும் அவர் எதுவும் கூறவில்லை. சகுந்தலாவும் பலமுறை சுவாமியாரிடம் சென்றாள். அவனுக்கும் அவர் எதுவும் கூறவில்லை. அதனால் கணேசபிள்ளையும் சகுந்தலாவும் நம்பிக்கை இழந்துவிட்டனர்.

அன்று மஹா கணபதி ஆலயப் பூசை முடிந்ததும் ஸ்ரீனிவாசன் கோயிலின் மேற்குத் திசையாகச் செல்லும் வீதியால் நடக்கத் தொடங்கினார். அவருடன் வாழும் வீமன் என்ற நாய் அவருக்கு முன்னே சென்றது. சுவாமியார் செல்வதைக் கண்ட மக்கள் அவரின் பின்னால் சென்றனர்.

ஸ்ரீனிவாசன் கணேசபிள்ளையின் வீட்டுக்குச் சென்றார். அவரைக் கண்ட கணேசபிள்ளை பரபரப்புடன் ஓடிவந்தார். சுவாமியாரை ஆசனத்தில் இருத்தினார். வீமன் அவரது காலடியில் சென்று படுத்தது. மக்கள் பலர் முற்றத்தில் குழுமி நின்றனர்.

“எமக்கெல்லாம் கடவுளே முதல்வனாவார். எழுத்துக்கள் யாவும் அகரத்தை முதலாய் உடையன போல உலகம் கடவுளை முதல்வனாய் உடையது. அரசின் ஆணைப்படி மக்கள் நடக்கிறார்கள். அரசன் இறைவனின் ஆணைப்படி நடக்கிறான். உலகம் இறைவனால் படைக்கப்பட்டது. இதில் கோழி முந்தியதா? முட்டை முந்தியதா? பெற்றோர் முந்தியவர்களா? பிள்ளைகள் முந்தியவர்களா? மரம் முந்தியதா? வித்து முந்தியதா? என்ற கேள்விக்கு இடமில்லை. ஏனென்றால் கோழியையும் முட்டையையும் பெற்றோரையும் பிள்ளையையும் மரத்தையும் வித்தையும் படைத்தவன் இறைவன். நாம் எமது விருப்பு வெறுப்புகளுக்கிணங்க நடக்க முடியாது. விருப்பு வெறுப்பில்லாத இறைவனின் சித்தப்படியே நடக்கிறோம். திடகாத்திரமான ஒருவன் நூறு வருடம் வாழ்வேன் என நினைத்துக் கொள்கிறான். ஆனால் திடீரென நிகழும் விபத்தால் அவன் மறுநாளே இறக்கலாம். நாளை என்ன நடைபெறும் என எதிர்வுகூற முடியாது. நிம்மதியாகப் படுத்துறங்கிய ஆயிரக் கணக்கானோர் நிலநடுக்கம் போன்ற கொடிய அழிவுகளால் மறுநாள் தூக்கத்தில் இருந்து எழவில்லையென நாம் செய்தி ஊடகங்கள் மூலம் அறிகிறோம். பலரும் நம்பாத பல விடயங்கள் தினந்தோறும் உலகில் நடந்துகொண்டிருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் காரணமானவன் இறைவன். இறைவனை நம்பியவனுக்கு இடர் வராது. இறுதி வரையும் நம்பிக்கையோடு வாழ்பவன் வெற்றியடைவான். திறமை, அறிவு,

நுட்பம், அதிஷ்டம், உயர்வு, தாழ்வு யாவும் இறைவனால் நமக்கு வழங்கப்பட்டவை. இறைவனால் படைக்கப்பட்ட அனைத்தையும் இறைவனால் தான் அழிக்க முடியும். கணேசபிள்ளைக்கு உண்டான கஷ்டகாலம் கழிந்துவிட்டது. இனி மகிழ்ச்சி தான்'' என்றார் சுவாமிகள்.

மக்கள் ''அரோகரா'' என்றனர். கணேசபிள்ளையின் தகப்பனார் பட்டணத்தில் இருந்த வைத்தியசாலையில் இருந்து அவசரமாக வந்து சொன்னார்; ''பேரன் பிழைச்சிட்டான். எழும்பியிருந்து கதைக்கிறான்...''

கணேசபிள்ளைக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

1. அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
   பகவன் முதற்றே உலகு.

எழுத்துக்களெல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதைப் போல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டது.

கனம்

மேற்கு வானில் சரிந்து புதைந்திருந்த சூரியன் மெதுவாக மறையத் தொடங்கினான். இருள் தனது போர்வைக்குள் பூமாதேவியை முற்றாக மூடிப்போர்த்துவிட வானமெங்கும் மெல்லிய ஓட்டைகளால் நட்சத்திரங்கள் பூமாதேவியைப் பார்த்துக் கண்சிமிட்டிக் கொண்டிருந்தன.

இரவு எட்டு மணியாகியது. நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் சமயச் சொற்பொழிவாற்றுவதற்கு மாணிக்கவாசகர் வந்திருந்தார். ஆனால் கேட்பதற்கு ஒருவரும் வரவில்லை. மாணிக்கவாசகர் சிறந்த கல்விமான். தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை மட்டுமன்றி வடமொழி இலக்கண இலக்கிய நூல்களையும் நன்கு கற்றறிந்தவர். ஆங்கில மொழியில் பாண்டித்தியம் பெற்றவர். அவ்வூரில் உள்ளவர்கள் தமிழில் கடிதங்கள் எழுதுவதானாலும் கூட அவரையே நாடிவருவார்கள். அயல் பிரதேசங்களில் உள்ள கற்றவர்கள், மேலதிகாரிகள், பேராசிரியர்கள் கூட தமக்கு தமிழில் வடமொழியில் ஆங்கிலத்தில் எழும் சந்தேகங்களை அவரிடம் வந்து கூறி விளக்கம் கேட்டுச் செல்வது வழக்கம்.

ஆரம்பத்தில் அவர் எல்லோரையும் மதித்து அவரவரது தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தார். நாளாக ஆக அவருக்குக் கர்வம் ஏற்படத் தொடங்கியது. அதனால் தன்னைவிட அந்நாட்டில் கற்றவர்கள் இல்லையென்ற எண்ணம் அவரின் மனதில் தோன்றி வளர்ந்து விருட்சமாகியது. இதனால் கற்றவர்களையும் பாமரர்களையும் அவர் தனது மேதாவித்தனத்தால் கிண்டல் செய்யத் தொடங்கினார்.

கற்றவர்கள் ஏன் வம்பு எனக்கருதி ஒதுங்கிக் கொண்டனர். பாமரர்கள் அவர் கேலி செய்தாலும் தமக்கு அவை விளங்காததைப் போல் நடந்தனர்.

அன்று இரவு பிள்ளையார் கோயிலில் மாணிக்கவாசகரது பிரசங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாணிக்கவாசகர் பட்டுப்பீதாம்பரம் அணிந்து ராஜா போல் வந்திருந்தார். தனது பேச்சைக் கேட்க ஏராளமான மக்கள் வருவார்கள் எனக் கருதினார். வழமையாக மாணிக்கவாசகர் பேசுகிறார் என்றால் அவ்வூரவர் மட்டுமன்றி, அயல் ஊரில் உள்ளவர்களும் நூற்றுக்கணக்கில் திரண்டிருப்பார்கள். பல புதிய விடயங்களை மாணிக்கவாசகர் கூறுவார். அதை அறிந்து கொள்ளவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கும். பல்கலைக்கழகங்களில் கற்கும் மாணவர்கள் தமது கல்விக்குத் தேவையானவற்றை அவர் கூறுவார் என நினைத்து வந்திருப்பர். வயது சென்றோர், இளைஞர்கள், குடும்பத்தவர்கள் பொழுதை பயனுள்ள வகையில் கழிக்கலாமென்ற நோக்குடன் பிரசங்கம் தொடங்கு முன்பே வந்து காத்திருப்பார்கள்.

அண்மைக்காலமாக மாணிக்கவாசகரின் பேச்சு திசைமாறி இருந்தது. அடுத்தவர்களைக் கிண்டல் செய்வதும் தனது மேதாவித் தனத்தை புகழ்வதும் அவ்வூரிலும் அயல் ஊர்களிலும் வாழ்ந்துவரும் அறிஞர் பெருமக்கள் கூறியவற்றை மறுத்துரைத்து அவர்களுக்கு எதுவும் தெரியாதென நிறுவுவதும், அதற்கான பதிலைச் சொல்வதும் சவால் விடுவதுமாகவே இருந்தது. அதனால் அவரது பேச்சுக்கு மக்கள் வருவதைக் குறைத்துக் கொண்டனர்.

அன்று பிள்ளையார் கோயிலில், ‘‘கோயில்களில் மிருகங்களைப் பலியிடல் சரியா?’’ என்ற தலைப்பில் மாணிக்கவாசகர் பேச ஆயத்தம் செய்திருந்தார். அதற்காக பல வடமொழி தமிழ்மொழி நூல்களில் இருந்து பல ஆதாரங்களை தேடிக் கண்டெடுத்து வந்திருந்தார். அவற்றை நூலாக வெளியிடவும் திட்டமிட்டிருந்தார்.

நேரம் நகர்ந்து கொண்டிருந்ததே தவிர மக்கள் வரவில்லை. நாலைந்து வயது சென்ற பெண்களும், ஐந்தாறு இளைஞர்களும் சில பெரியவர்களுமே வந்திருந்தனர். அது மாணிக்கவாசகருக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. மக்கள் வருவார்கள் வருவார்களெனக்

காத்திருந்தார். ஆலயக் குருக்கள் அவரின் அருகே வந்து; ‘‘இனி யாரும் வரமாட்டார்கள். வந்திருப்போரும் மிகக் குறைவானவர்களே. எனவே பேச விரும்பினால் பேசுங்கள். இல்லாவிட்டால் நிகழ்ச்சியை ரத்துச் செய்வோம்’’ என்றார்.

மக்கள் குறைவாக வந்தாலும் தனது கருத்தைச் சொன்னால் அது கட்டாயம் ஊரில் உள்ள பெரியவர்களுக்குச் செல்லும் என்று நினைத்து பேசுவதற்கு முடிவு செய்தார்.

‘‘அடியார்களே ஆலயங்களில் மிருகங்களைப் பலியிடலாமா பலியிடக்கூடாதா என்ற கருத்து வேதகாலம் முதல் மக்களின் மனதில் இருந்து வருகிறது. ஒரு சாரார் பலியிடலாமெனவும், மறு சாரார் பலியிடக்கூடாதென்றும் கூறி வருகின்றனர். இதில் எது சரி என்பதைப் பற்றி விரிவாகப் பார்ப்போம். வேதகாலத்தில் ஆலயங்களில் உயிர்கள் பலியிடப்பட்டன.’’

மாணிக்கவாசகர் பேசிக்கொண்டிருக்கும் போது நவரத்தினம் என்பவன் குறுக்கிட்டான். ‘‘வேதம், உபநிடதம் கூறுவதைப்பற்றி ஆராய்ச்சி செய்யத் தேவையில்லை. ஏனென்றால் அவை கூறிய கருத்துக்களைப் படிக்கலாம் பேசலாமே தவிர ஆய்வு செய்து முடிவெடுக்க முடியாது. ஏனென்றால் அவையெல்லாம் முடிந்த முடிபுகள். நாம் ஆதரிப்பதையோ எதிர்க்கருத்துக் கூறுவதையோ யாரும் ஏற்கமாட்டார்கள். ஏற்காத ஒன்றைப் பற்றிய ஆய்வு தேவைதானா....? உயிரைப் பலியிடுவது பாவம் என்று மதங்கள் கூறுகின்றன. எண்ணிப் பார்த்தால் குழந்தைகள் கூட உயிர்களைப் பலியிடுவது பாவம் என்று சொல்லும். அத்துடன் புனிதர்களாக கோயிலுக்குச் செல்லல் வேண்டும், உயிர்களைக் கொல்வது பாவம் என்று பாடசாலைகளில் கற்பித்துவிட்டு கோயில்களில் உயிர்களைக் கொல்லலாம் எனப் பேசுவது எவ்வளவு தவறு...? இதற்கு ஒரு மேடை தேவைதானா? நெஞ்சின் இலக்கணம் தெரியாதவனுக்கு பஞ்ச இலக்கணம் பற்றித் தெரிந்து என்ன பலன்...?’’ நவரத்தினம் கல்வியறிவு இல்லாதவன். குடிகாரன். அவனை ஊரில் யாரும் மதிப்பதில்லை. அவன் கூறிய கருத்துக்கள் மாணிக்கவாசகரைச் சிந்திக்கச் செய்தன. இவ்வளவு காலமும் அவர் பேசும்போது அறிஞர்கள் கூட கேள்விகள் கேட்பதில்லை. இன்று ஒரு குடிகாரனின் பேச்சுக்கு விடைகூற முடியாது தத்தளிக்கும் மாணிக்கவாசகரை மக்கள் அனுதாபத்துடன் பார்த்தனர். மறுநாள் அவ்வூரிலும், அயல் ஊர்களிலும் இதைப்பற்றியே மக்கள் பேசிக்கொண்டனர்.

2. கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஅர் எனின்.

பேரறிவாளனான இறைவனைத் தொழாதவனின் கல்வியாலும் நல்ல மனிதர்களை மதிக்காதவனின் கல்வியாலும் ஆகும் பயன் என்ன?

நீடு வாழ்வோர்

ஸ்ரீநிவாசன் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய மண்டபத்தில் அமர்ந்திருந்தால் கோயிலுக்கு வரும் பெரும்பாலான பக்தர்கள் அவரைச் சுற்றி இருப்பார்கள். தெய்வீகக் களை வீசும் அவரது முகத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதில் மக்களுக்கு ஓர் ஆனந்தம் உண்டாகும். அவரின் நெற்றியில் இடப்பட்டிருக்கும் திருநீற்றின் குறி மிகவும் நேர்த்தியாக இருக்கும். வளைவுகள் இல்லாமல் சமாந்தரமாகச் செல்லும் நேர்கோடுகளைப் போல் அவை ஏற்ற இறக்கமின்றி சமமாக இருக்கும். நெற்றியின் மத்தியில் பெரியதொரு சந்தனப்பொட்டு. அதற்குள் அளவான குங்குமப் பொட்டு சுடர்விடும். நீண்ட வெள்ளைத்தாடி, கருணை பூத்திருக்கும் விழிகள், சாந்தமான சிரிப்பு.

மற்றைய கோவில்களைப் போலல்லாது நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயம் எவ்வேளையிலும் மிகவும் அமைதியாக இருக்கும். பூசை நேரத்தில் ஒலிக்கும் மங்கல ஒலிகளைத் தவிர மற்றைய வேளைகளில் மனதிற்கு இரம்மியமான அமைதி அப்பிரதேசத்தைச் சூழ்ந்திருக்கும். கோவிலைச் சுற்றிவர உள்ள வயல்களில் இருந்து வரும் காற்று உடலைச் சிலிர்க்க வைக்கும்.

ஸ்ரீனிவாசனைச் சுற்றி இருக்கும் மக்களுடன் அவர் அன்பாகப் பேசுவார். அவர்களது துன்பதுயரங்களைப் பற்றிக் கேட்பார். ஆலோசனைகள் சொல்வார். சாஸ்திரம் சொல்வார். பரிகாரமும் செய்வார். ஆனால் தினமும் அவர் மக்களுடன் கதைப்பார் என்று சொல்லமுடியாது. சிலவேளைகளில் இரண்டு, மூன்று தினங்கள் அசையாமல் நிஷ்டையில் இருப்பார். சிலவேளைகளில் மண்டபத்தில் அமைதியாக அமர்ந்திருப்பார். ஆனால் யாருடனும் பேசமாட்டார். பேச விரும்பினால் மக்களை அழைப்பார். ஒருவர் அவருக்கருகில் வந்து அமர்ந்துவிட்டால் அவருடன் பேச ஆரம்பிப்பார். அவர் பேச ஆரம்பித்ததும் கோயிலுக்கு வரும் மக்கள் அவரின் அருகில் வந்து அமர்வார்கள்.

அன்று பூரணை நாள். இரவு எட்டு மணிக்கு நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய பூசைகள் யாவும் முடிந்துவிட்டன. கோயில் பிரதமகுரு இராஜசங்கரக் குருக்கள் ஸ்ரீனிவாசனுக்கு திருநீறு

கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்ட ஸ்ரீனிவாசன் கோயிலின் முன்னால் உள்ள அரசமரத்தின் கீழ் சென்று அமர்ந்தார்.

கோயிற்பூசை முடிவடைந்ததால் மக்கள் வீடுகளுக்குச் செல்ல ஆரம்பித்தனர். ஸ்ரீனிவாசன் அரசமர நிழலில் அமர்ந்திருந்ததைப் பார்த்த தணிகாசலம் அவரை வணங்கிவிட்டுச் சென்றான்.

''தணிகாசலம்'' ஸ்ரீனிவாசன் அழைத்தார். தணிகாசலம் அவரின் அருகே வந்தான். ''இப்படி இரு'' என்றார் ஸ்ரீனிவாசன். தணிகாசலம் நிலத்தில் அமர்ந்ததும் வீட்டுக்குச் சென்ற பக்தர்கள் பலர் அங்கு வந்து அமர்ந்தனர். அதிபர் விக்னேஸ்வரமூர்த்தியும், சிவசுந்தரமூர்த்தியும், கணேசமூர்த்தியும் வந்து அமர்ந்தனர்.

''தணிகாசலம் உனக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒருவன் தூய மனத்தோடு இறைவனை வணங்கி தனது செயல்களைச் செய்துவந்தால் மிகவும் நல்ல நிலையை அடைவது உறுதி. நீ நல்லவன். நல்ல முறையில் வாழ்கிறாய். இப்பொழுது உனக்குப் பெருங்கஷ்டம் தான். எல்லாக் கஷ்டமும் விரைவில் தீர்ந்துவிடும். நீ நல்ல நிலைக்கு வந்த பின்பும் உனது நற்செயல்களைக் கைவிட்டு விடாதே... வரலாற்று ரீதியாக நாம் எடுத்துப் பார்ப்போமேயானால் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பும் நற்செயல்களைச் செய்தவர்களது நாமங்கள் இன்றும் பூசிக்கப்படுகின்றன. இதிகாச புராண நாயகர்கள் இன்றும் வாழ்கிறார்கள். நமது நாயன்மார்கள் இன்றும் வாழ்கிறார்கள். இந்த உலகம் இருக்கும் வரை வாழ்வார்கள். அவர்களைப் போற்றாதவர்கள் யார்...? பூசிக்காதவர்கள் யார்...? அவர்கள் கூறிய அறிவுரைகளை ஏற்காதவர்கள் யாரும் இருக்கிறார்களா...? அவர்கள் பேசப்படுவதற்குக் காரணம் அவர்கள் இறைவனின் திருவடிகளைப் பேரன்போடு தியானித்தமையும், நற்செயல்களைச் செய்தமையும் தான். இறைவனின் திருவடிகளைப் பூசியாது தீயசெயல்களைச் செய்தோரை இன்றும் உலகம் பரிகாசம் செய்கிறது. உலகம் உள்ளவரை நல்லவர்கள் பேசப்படுவார்கள். தீயவர்கள் ஏசப்படுவார்கள் என்பதை உலகில் வாழும்மக்கள் உணர்ந்துகொண்டால் எவரும் தீய செயல்களில் ஈடுபடமாட்டார்கள். நல்லவர்கள் வாழ்த்தப்படுவதும் தீயவர்கள் தூற்றப்படுவதும் இயல்பு. ஏனென்றால் உலகில் வாழும் மக்கள் நல்லவற்றின் பயன்களையும் தீயவற்றின் பயன்களையும் அறிந்துகொள்ளல் வேண்டும் என்பதற்காகவே.''

''நல்ல மரங்களை நாட்டி நீரூற்றி பசளையிட்டு வளர்க்கும் நாம் முட்செடிகளை வேரோடு களைகிறோம். இதை மக்கள் உணர்ந்துகொள்ளல் வேண்டும். நல்லவர்கள் பயன்தரும் மரங்களைப் போன்றவர்கள். அவர்கள் நீடித்து வாழ்வார்கள். அவர்கள் நீடித்து வாழ இறைவன் அருள்புரிவான். தீயவர்கள் முட்செடிகளைப் போல்

அழிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை புராண இதிகாசங்கள் எமக்குக் கூறுகின்றன.'' ஸ்ரீனிவாசன் கதைத்துக்கொண்டிருந்தார். அமைதியாக ஓடும் ஒரு கங்கையின் இனிய ஓசை அங்கு கேட்டுக்கொண்டிருந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் அவரின் அருளுரையைக் கேட்டுக்கொண்டிருந்தனர். பூரண சந்திரன் அரசமரக் கிளைகளை விலத்தி ஸ்ரீனிவாசனைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

3. மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்

நிலமிசை நீடுவாழ் வார்.

அடியார்களின் மலர் போன்ற உள்ளத்தில் வீற்றிருக்கும் இறைவனின் திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர்கள் இன்ப உலகில் நிலைத்து வாழ்வர்.

துன்பம் இல்லாதோர்

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி மீது அளவுகடந்த அன்பு வைத்துள்ளவர் ஸ்ரீனிவாசன். அதிகாலையில் நித்திரை விட்டெழுந்து குளித்துவிட்டு மஹா கணபதியின் ஆலயப் பூந்தோட்டத்தில் மலர்களைப் பறிப்பார். கோயில் மண்டபத்தில் இருந்து அழகான மாலைகள் கட்டுவார். மாலைகட்டி முடிந்ததும் மஹா கணபதி ஆலய மண்டபத்தைக் கழுவிச் சுத்தம் செய்வார். வீதிகளைக் கூட்டி குப்பை கூழங்களை அள்ளிச்சென்று ஓரிடத்தில் கொட்டி நெருப்பு மூட்டுவார். பின் குளித்து திருநீறு பூசிக்கொண்டு வந்து தான் கட்டிவைத்த மாலைகளை குருக்களிடம் கொடுப்பார். பூசை முடிவுற்றதும் பஞ்சபுராணங்களைப் பண்ணோடு ஓதுவார்.

அவர் திருமணம் செய்யவில்லை. ஊரில் உள்ள பாடசாலையொன்றில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். மஹா கணபதி ஆலயத்திற்கு அருகே தான் குடியிருந்த வீட்டை ஆலயத்திற்கு எழுதிக்கொடுத்துவிட்டார். அவரின் வீடு மடமாகப் பாவிக்கப்படுகிறது. புண்ணிய தினங்களில் அங்கு பெரும் அன்னதானம் இடம்பெறும். ஸ்ரீனிவாசனுடன் கோயிற் தொண்டு புரியும் மகாதேவனும் அருணாசலமும் அவ்வீட்டில் இருந்தனர்.

காலைப்பூசை முடிவுற்றதும் கோயில் மண்டபத்தில் ஒரு பானையை வைத்து சமைப்பார் ஸ்ரீனிவாசன். அப்பானைக்குள் முதலில்

அரிசியும், பயறும் போட்டு அவிப்பார். அவை அவிந்ததும் காய்கறிகள் பலவற்றை வெட்டிப்போடுவார். அதன் பின் உப்பு, புளி, மிளகாய்த்தூள் என்பவற்றைப் போடுவார். யாவும் நன்றாக அவிந்த பின்பு இறக்கி வைப்பார்.

ஸ்ரீனிவாசனுடன் எப்பொழுதும் நாலைந்து பேர் அமர்ந்து சாப்பிடுவார்கள். அவர் தனக்கு மட்டும் சமைப்பதில்லை. ஆறேழு பேருக்கு சமைப்பார். பகலில் சிலவேளைகளில் அவருக்கு உணவு கிடையாமலும் போகும். சிலவேளைகளில் எஞ்சினால் இரவு சாப்பிடுவார். எஞ்சாவிட்டால் தேநீர் குடித்துவிட்டுப் படுப்பார். காலையில் அவர் ஒருபோதும் சாப்பிடுவதில்லை.

மத்தியானம் சமைத்து முடிந்ததும் கால்,கை,முகம் கழுவுவார். பின் தலைவாழை இலைகளை வெட்டி நீர் தெளித்து சமைத்த உணவைப் படைப்பார். பின் தேவாரம் பாடிவிட்டு அதிதிகளுடன் உணவு அருந்துவார். கோயிலில் பலர் விசேட தினங்களுக்குப் பொங்குவார்கள். அவ்வேளையில் அவருக்கு பொங்கலைக் கொடுப்பார்கள். அப்படியான நாட்களில் இரவில் சமைப்பார்.

ஒருநாள் ஸ்ரீனிவாசன் தனது நண்பர் ஒருவரை தன்னுடன் சாப்பிட வருமாறு அழைத்தார். நண்பர் வந்து உணவு அருந்தும்போது பலவகையான கறிவகைகளைப் பரிமாறினார். அக்கறிகள் மிகவும் சுவையாக இருந்தன. ‘‘தனியே இவ்வளவு கறிகளையும் எப்படிச் சமைத்தாய்’’ என்று நண்பர் கேட்டார்.

ஸ்ரீனிவாசன் சிரித்தார். பின் ‘‘என்னிடம் ஒரே ஒரு பானைதான் உள்ளது. சோற்றை அதில் காய்ச்சி அதை எடுத்து வைத்துவிட்டு கறி வைப்பேன். எல்லா மரக்கறி வகைகளையும் ஒரே பானையில் போட்டு அவித்துவிட்டு பின் ஒவ்வொன்றையும் வேறாக்கி பரிமாறுவேன்...’’ என்றார்.

விஜயதசமியின் போது அக்கிராமத்தில் உள்ள பலர் தமது பிள்ளைகளுக்கு ஸ்ரீனிவாசனைக் கொண்டு ஏடு தொடக்குவார்கள். கிராமத்தில் உள்ள பலர் தமது பிள்ளைகளின் திருமணத்தின் போது அவரை வந்து வாழ்த்தும்படி கூறுவார்கள். மக்கள் கூப்பிடும் எந்த வைபவத்திற்கும் அவர் மகிழ்வுடன் செல்வார்.

அவர் பலமணிநேரம் தியானத்தில் இருப்பார். அவ்வேளைகளில் மெதுவாகச் சிரிப்பார். சிலவேளைகளில் பெரிதாகச் சிரிப்பார். ஏதேதோ கதைப்பார். இவற்றைக் காணும் மக்கள் ‘‘அவர் மஹா கணபதியுடன் கதைத்துக்கொண்டிருக்கிறார்’’ என்பார்கள். தியானத்தில் இருக்காத வேளைகளில் அவர் கிராமத்தைப் பற்றியும், அங்கு வாழ்கின்ற மக்களைப் பற்றியும், கோயிலைப் பற்றியும் சொல்வார். அவரின் வாக்கை தேவவாக்காக ஏற்று மக்கள் அதன்படி நடப்பர்.

அவர் எந்த நேரமும் மகிழ்வுடன் இருப்பார். மக்களுடன் அன்பாகக் கதைப்பார். இறைவனின் நாமங்களைச் சொல்வார். திருவிழாக் காலங்களில் அவர் தலைமை வகித்து எதையும் செய்யமாட்டார். கோயில் கடமைகளை முடித்துவிட்டு தியானத்தில் அமர்ந்துவிடுவார்.

4. வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு

யாண்டும் இடும்பை இல.

எவ்வுயிர் மீதும் விருப்பு வெறுப்பில்லாத இறைவனின் திருவடிகளை நினைக்கின்றவர்களுக்கு ஒருபோதும் துன்பம் இல்லை.

வினைகள் அற்றோர்

நல்லூரில் ஆறுமுகசாமி என்றொரு முனிவர் வாழ்ந்து வந்தார். ஊர்க்கோடியில் உள்ள ஒரு சிறிய பிள்ளையார் ஆலயத்தின் அருகிலுள்ள அரசமர நிழலில் எந்நேரமும் நிஷ்டையில் அமர்ந்திருப்பார். பகலில் அவர் நிஷ்டையில் இருந்து எழுவதில்லை. அவ்வாலயத்தில் அவ்வூரில் வாழும் மக்கள் வருடத்திற்கு ஒரு தினத்தில் மட்டும் தான் கூடுவார்கள். அன்று இரவு அவ்வூர்ப் பண்ணையாரான முருகேசர் தலைப் பொங்கற் பானையை வைத்து பொங்கலை ஆரம்பிப்பார்.

அவ்வூரில் பிறந்து வளர்ந்து அயல் ஊர்களில் திருமணஞ் செய்தவர்கள் அன்றைய தினம் அவ்வாலயத்திற்கு வருகை தருவார்கள்.

இரவிரவாக பொங்கல் நடைபெறும். எல்லோரும் பொங்கி முடித்த பின்புதான், மக்கள் தாம் பொங்கியவற்றை விநாயகருக்கு படைப்பார்கள்.

மோதகம் கடகக் கணக்கில் அவிக்கப்படும். ஆரம்பத்தில் பொங்கல் மிகவும் விமரிசையாக நடைபெற்று வந்தது. காலப்போக்கில் பொங்கல் தினத்தன்று கலைநிகழ்ச்சிகளும் நடைபெறத் தொடங்கின. அக்கலைநிகழ்ச்சிகள் ஆரம்பத்தில் சிறிதாகவே இருந்தன. பின் படிப்படியாக வளர்ச்சியடைந்து வெளியூர்களிலுள்ள பிரபல்யமான கலைஞர்களை பல ஆயிரம் ரூபா கொடுத்து நிகழ்ச்சிகளை நடத்த அழைத்து வந்தனர்.

ஆலயம் மிகவும் சிறியது. சிறியதொரு ஓலைக் கொட்டிலிலேயே விநாயகர் அமர்ந்திருந்தார். விசேடமாக பொங்கல் பூசை, கலைநிகழ்ச்சிகளைச் செய்துவிட்டுச் செல்லும் மக்கள் பின் அடுத்த வருடப் பொங்கல் தினத்திற்கு இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்புதான் வந்து கோயிலைத் துப்புரவு செய்து பொங்கிப் படைப்பார்கள். இவ்வழக்கம் நூறு வருடங்களாக நடைபெற்று வருகிறது.

பொங்கல் நடைபெற்ற பின்பு அக்கோயிற் பக்கம் மக்கள் வரப் பயப்படுவார்கள். பிள்ளையார் மதிய நேரத்தில் அருகில் உள்ள குளத்தில் மனித வேடத்தில் குளிப்பதாகவும், மக்களைக் கண்டால் காட்டுமிருகமாக மாறிக் கலைப்பதாகவும் மக்கள் பேசிக்கொண்டனர். இதைவிடப் பல கதைகள் வதந்தியாக ஊரில் உலவுவதால் யாரும் அப்பக்கம் போவதில்லை.

ஒருமுறை பொங்கல் விழாவுக்காக ஊர்மக்கள் பலர் ஒன்று சேர்ந்து கோயிற் சூழலை துப்புரவு செய்யச் சென்றபோது அரசமர நிழலில் நீண்டதாடி மீசைகளுடன் ஒருவர் அமர்ந்திருப்பதைக் கண்டனர்.

மக்கள் எவரும் அவரின் அருகில் செல்லவில்லை. அவர் மக்களின் அருகில் வந்தார். அன்பாகக் கதைத்தார். தனது பெயர் ஆறுமுகசாமி எனத் தெரிவித்தார். பொங்கல் நடைபெற்ற பின்பு மக்கள் சென்றுவிட்டனர். அவரையும் மறந்து விட்டனர்.

பொங்கல் நடைபெற்று சில மாதங்கள் கழிந்த பின்பு அவ்வூரில் அடிக்கடி திருட்டுக்கள் நடைபெற்றன. அவ்வூரில் உள்ள பெரிய பெரிய பணக்காரரின் வீடுகளில் திருட்டுக்கள் நடைபெற்றன. அவ்வூர் நகர்க் காவலரால் திருடர்களைப் பிடிக்க முடியவில்லை.

காட்டு விநாயகர் கோயிலில் முனிவர் வேஷத்தில் இருக்கும் ஆசாமிதான் திருட்டுக்களைச் செய்கிறானென வதந்திகள் உலாவியது. மக்கள் எல்லோரும் ஒன்று திரண்டு காட்டு விநாயகர் கோயிலுக்குச் சென்று கற்பூரம் கொழுத்தி ஆராதனை செய்துவிட்டு ஆறுமுகசுவாமியைத் தேடினர். அவரைக் காணவில்லை. அவர் அமர்ந்திருக்கும் அரச மரத்தைச் சுற்றிப் பார்த்தனர். அரச மரத்தில் பெரிய கிளையொன்றில் ஒரு முடிச்சுத் தென்பட்டது. அதை எடுத்து பிரித்துப் பார்த்தனர். எல்லாம் பொன்னாலான நகைகள்.

மக்கள் கூட்டம் கூட்டமாகப் பிரிந்து ஆறுமுகசாமியைத் தேட ஆரம்பித்தனர். அவர் ஆலயத்தின் அருகில் பற்றைக் காடாகக் கிடந்த குளத்தில் குளித்துக்கொண்டிருந்தார்.

மக்கள் அவரைப் பிடித்து கிராமத்திற்குக் கொண்டு சென்றனர். வழி முழுவதும் ஒருவர் மாறி ஒருவராக அவருக்கு அடித்தனர்.

ஊரின் மத்தியில் உள்ள நூலகமொன்றின் அருகில் இருந்த மரத்தில் அவரைக் கட்டி விசாரணை செய்தனர். அவர் தான் திருடவில்லை என்று மட்டும் சொன்னார். அதனாற் கோபமடைந்த மக்கள் ஆத்திரத்துடன் அவரைத் தாக்கினர். அதனால் அவர் மயக்கமடைந்தார்.

அப்பொழுது நகர் காவலர் அவ்வூரில் வாழும் இராசதுரை என்பவனை அவ்விடத்திற்கு அழைத்து வந்தனர். அவன் தானும் தனது நண்பர்களுமாகச் சேர்ந்துதான் கிராமத்தில் திருட்டை நடத்தியதாக ஒப்புக் கொண்டான். கோயிலுக்கு யாரும் செல்லாமல் தடுக்க பல கட்டுக்கதைகளை தாமே ஊரில் கட்டிவிட்டதாகவும் கூறினான். கோயிலில் தாம் கூடி திருட்டை நடத்த திட்டமிடுவதாகவும், ஆறுமுகசாமி வந்தபின் தமக்கு கஷ்டமேற்பட்டதால் ஆறுமுகசாமியை கோயிலை விட்டகற்றவே தாம் திருடிய நகைகளை அரச மரத்தில் வைத்ததாகவும் கூறினான்.

ஊர்மக்கள் ஆறுமுகசாமியிடம் மன்னிப்புக் கேட்டனர்.

ஆறுமுகசாமி சிரித்துவிட்டு நகர்ந்தார்.

ஊரவர் பயபக்தியுடன் அவரை அணுகினர். 'ஐயா நீங்கள் தான் கள்ளன் என்றெண்ணி உங்களைக் கொடுமையாகத் தண்டித்த எம்மை தயவு செய்து மன்னித்தேன்' என்று கூறுங்கள் என்றனர்.

''அறியாமையால் நீங்கள் செய்தவற்றை அறிவுள்ள நான் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை. காட்டு விநாயகன் மீது மட்டில்லா பற்று வைத்திருக்கும் என்னை யாராலும் எதுவும் செய்துவிட முடியாது. நீங்கள் தந்த தண்டனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். எப்பொழுதோ நான் பாவம் செய்திருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் இப்படி நடக்காது'' என்று கூறிவிட்டு புன்முறுவலுடன் காட்டு விநாயகர் கோயிலை நோக்கி நடந்தார் ஆறுமுகசாமி.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்

பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இறைவனின் மகிமையை அறிந்து, அன்பு செலுத்துபவர்களை பிறவித்துயருக்குக் காரணமான நல்வினையும் தீவினையும் சேர்வதில்லை.

ஒழுக்கநெறி நிற்போர்

தணிகாசலம் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதியின் பக்தன். மஹா கணபதியின் மீது நம்பிக்கை வைத்துள்ளவன். அவன் எந்தக் காரியத்தைத் தொடங்கும் போதும் மஹா கணபதி ஆலயத்திற்கு வந்து கற்பூரம் கொழுத்தி, தேங்காய் உடைத்து வணங்கிவிட்டுத் தான் வேலையை ஆரம்பிப்பான். வேலையை ஆரம்பிக்கும் போது மஹா கணபதிக்கு நேர்த்தியும் வைப்பான். அவன் மிகவும் வறியவன். நிலபுலன்கள் பெரிதாக இல்லாதவன். வறுமையாக வாழ்ந்த போதும் ஊர்மக்களால் பெரிதும் மதிக்கப்படுபவன். வேலை நல்ல முறையில் முடிவடைந்தால் ஒருகட்டி கற்பூரம் கொழுத்தி ஒரு தேங்காய் மட்டும் அடிப்பேன் என்று நேர்த்தி வைப்பான். அப்படி வைத்தாலும் மாதத்தில் நூறு இருநூறு ரூபா மஹா கணபதிக்கு நேர்த்திக்கடனுக்காக செலவு செய்யவேண்டிய நிலை அவனுக்கு ஏற்படும். மஹா கணபதியை அவன் எப்படி மதித்து வணங்குகிறானோ அதேபோல் ஸ்ரீனிவாசனையும் மதித்துப் போற்றி வணங்குவான். அதேபோல் ஸ்ரீனிவாசனும் அவன் மீது அளவில்லா அன்பும் நம்பிக்கையும் வைத்திருந்தார்.

ஸ்ரீனிவாசன் கோயில் பகற்பூசை முடிந்தவுடன் சிலநேரங்களில் அவ்வூரில் வாழும் மக்களது வீடுகளுக்குச் செல்வார். ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் வாழும் அக்கிராமத்தில் யாராவது ஒருவரது வீட்டுக்கு எப்போதாவது இருந்துவிட்டு ஸ்ரீனிவாசன் செல்வார். அவரைக் கண்டதும் அவ்வீட்டுக்காரர் கடவுளை நேரில் கண்டது போல் நடந்துகொள்வார்கள். அவர் செல்லும் வீடுகளைக் கண்டு கிராமத்தவர்கள் பொறாமை கொள்வார்கள். பெரும் பெரும் பணக்காரர்களும், பெரும் பெரும் உத்தியோகத்தர்களும், நிலச்சுவாந்தர்களும் வாழும் அக்கிராமத்தில் ஒவ்வொருவரும் ஸ்ரீனிவாசனது வரவை தினமும் எதிர்பார்த்திருப்பர். அவர் தமது வீட்டுக்கு வந்தால் பெரும் அதிஷ்டம் வருமென்று ஒவ்வொருவரும் நம்பினர்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு நடனபாதம் என்ற ஒரு கூலிக்காரனது வீட்டுக்குச் சென்றார் ஸ்ரீனிவாசன். நடனபாதம் அவ்வூரில் கூலி வேலை செய்பவன். அவனுக்கு பத்துப் பிள்ளைகள். மிகவும் நல்லவன். நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் காலையும், மாலையும் தொண்டுகள் செய்பவன். களவு, வஞ்சகம், சூது அறியாதவன். ஒப்படைக்கப்பட்ட வேலையை மிகவும் நேர்த்தியாகச் செய்பவன். பத்துப் பிள்ளைகளும் பாடசாலைக்குச் செல்வதால் அவனது மனைவியும் கூலித்தொழில் செய்துவந்தாள். அவர்களது வீடு மாட்டுத் தொழுவத்தைப் போன்றது.

அன்று மாலை ஆறு மணியளவில் திடீரென்று ஸ்ரீனிவாசன் நடனபாதத்தின் வீட்டுக்குச் சென்றார். அவரைக் கண்ட நடனபாதம்

திகைத்துத் திகிலடைந்து போனான். அவனின் கண்களால் கண்ணீர் வழிந்தது. ‘‘சுவாமியாரே ஏன் இன்று எனது வீட்டுக்கு வந்தீர்கள், உங்களை அமர்த்தக்கூடிய ஆசனம் எதுவும் என்னிடமில்லை. உங்களுக்கு குடிப்பதற்குத் தர ஒரு சிரட்டை கஞ்சிகூட என்னிடத்திலில்லை....’’ அழுதான் நடனபாதம்.

ஸ்ரீனிவாசன் சிரித்தார். ‘‘பணம், பொருள், ஆடம்பர வசதிகள் யாவும் எல்லோரிடமும் வரும், போகும். ஆனால் நிறைந்த அன்பு கொண்ட வஞ்சகமில்லா உள்ளம் எல்லோரிடமும் இல்லை. அன்புடன் தண்ணீர் தா; அது எனக்கு அமிர்தமாக இருக்கும்’’ என்றார் ஸ்ரீனிவாசன்.

மறுவாரம் அதிஷ்டலாபச் சீட்டு மூலம் நடனபாதத்திற்கு பதினைந்து இலட்சம் ரூபா கிடைத்தது.

இன்னொரு முறை சுந்தரலிங்கத்தின் வீட்டுக்குச் சென்றார் ஸ்ரீனிவாசன். சுந்தரலிங்கம் நல்ல வசதியானவன். நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்திற்குப் பல புனருத்தாரண வேலைகள் செய்பவன். கஷ்டப்பட்டு உழைப்பவன். உழைப்பின் பெரும்பகுதியை ஆலய நிர்மாண வேலைகளுக்கும் ஏழைகளுக்கும் செலவு செய்பவன். அவன் ஸ்ரீனிவாசனைக் கண்டதும் ஓடோடி வந்தான். ‘‘சுவாமிஜி யாரிடமாவது சொல்லி அனுப்பியிருந்தால் வந்திருப்பேனே. தாங்கள் வேகாவெயிலில் நடந்து வந்திருக்கிறீர்கள்...’’ என்றவாறு அவரது கால்களை குளிர்ந்த நீரால் கழுவினான். பின் அதைத் துடைத்துவிட்டு ஆசனத்தில் அவரை அமரச் செய்து தான் அவரது காலடியில் அமர்ந்து அவரது கால்களை வருடினான். அவனது மனைவி வெள்ளித்தட்டில் பால் கொண்டுவந்தாள்.

பாலைக் குடித்த ஸ்ரீனிவாசன் ‘‘மிகவும் சுவையாக உள்ளது. காலையும் மாலையும் மஹா கணபதிக்கு பாலைக்கொடு. மஹா கணபதியின் தெற்கு வாசற் பகுதியைத் திருத்தம் செய்... உனது பிள்ளைகள் இருவரும் போற்றப்படுவார்கள்’’ என்று கூறிவிட்டுச் சென்றார்.

சுந்தரலிங்கம் திகைத்துப்போனான். மஹா கணபதிக்கு காலையும் மாலையும் பால் அனுப்புவதையிட்டு பெருமகிழ்வு கொண்டான். மஹா கணபதி தான் தன்னில் விருப்பம் கொண்டு ஸ்ரீனிவாச சுவாமிகளை அனுப்பியிருக்கிறார் என நினைத்தான்.

ஆறு மாதங்கள் கழிந்தன. சுந்தரலிங்கத்தின் இரட்டைப் பிள்ளைகளான வசந்தனும், சயந்தனும் மருத்துவக் கல்லூரியில் அனுமதி பெற்றனர்.

அதனால் அவ்வூர் மக்கள் ஸ்ரீனிவாசனை தெய்வமாக மதித்தனர். அவர் தமது வீட்டுக்கு வராரா என நினைத்து ஏங்கினர். பலர் அல்லும் பகலும் அவருடன் இருந்தனர். சிலர் அவருக்கு அறுசுவை உணவு வகைகளைச் சமைத்து கோயிலுக்குக் கொண்டு சென்று கொடுத்தனர். ஆனால் அவற்றை வாங்கி அவர் உண்ணமாட்டார். தற்செயலாக யாராவது ஒருவனிடம் வாங்கி உண்பார். இது இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடக்கும்.

அன்று பகல் தணிகாசலத்தின் வீட்டுக்குச் சென்றார் ஸ்ரீனிவாசன். அவர் கோயில் எல்லையைத் தாண்டி நடக்கத் தொடங்கினால் அச்செய்தி ஊர் முழுவதும் பரவிவிடும். ஒவ்வொருவரும் அவரை வரவேற்கத் தயாராகி விடுவார்கள். தணிகாசலத்தின் வீடு ஊர்க்கோடியில் இருந்தது. அதனால் சுமார் இரண்டு மைல் தூரம் நடந்து சென்றார் ஸ்ரீனிவாசன். நூற்றுக் கணக்கான மக்களுடன் ஊர்வலமாக வந்த ஸ்ரீனிவாசனை வரவேற்க முடியாது திணறிப்போய் நின்றான் தணிகாசலம்.

‘‘பற்றுக்கள் ஏதுமின்றி இறைவனைத் தொழுகின்றவர்களும் இறைவனோடு சேர்ந்தவர்களே.. நீ என்னுடைய அன்புக்கு உட்பட்டவன். என் மீதும், மஹா கணபதி மீதும் அளவில்லாத அன்பைச் சொரிபவன். அப்படியான நீ தினமும் இருமுறை என்னைச் சந்தித்துக் கதைக்க வருகிறாய். நான் ஒருமுறை உன்னைச் சந்திக்க உன் வீடு தேடி வந்துள்ளேன்.’’ என்றார்.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க

நெறிநின்றார் நீடுவாழ் வார்.

ஐம்பொறிகளால் உண்டாகும் ஆசைத் தீயினை அவித்த இறைவனின் பொய்யற்ற ஒழுக்கநெறியில் நின்றோர் என்றும் இன்பமாக வாழ்வர்.

மனக்கவலை மாறாதோர்

அன்று நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் தேர்த்திருவிழா நடைபெற்றுக்கொண்டிருந்தது. அழகாகச் செய்யப்பட்ட சித்திரத் தேரினில் மஹா கணபதி வீற்றிருந்தார். தேரின் முன் மலைபோல் தேங்காய் குவிந்திருந்தது. அவ்வூரில் வாழும் மக்கள் ஒவ்வொருவரும் தம்மாலியன்றளவு தேங்காய்களைக் கொண்டுவந்து

தேர்முட்டியின் வாசலில் குவித்து வைத்திருந்தனர். கோயிலின் பிரதம குரு இராஜசங்கரக் குருக்கள் இராஜகுமாரனைப் போல் தேரில் வீற்றிருக்கும் மஹா கணபதிக்கு தீபம் காட்டிக்கொண்டிருந்தார். கரும்சிவப்பு வேட்டியை குறுக்காக மடித்து தாறுபாய்ச்சிக் கட்டியிருந்தார். அதற்கேற்ற சிவப்பு கரையிட்ட மஞ்சள் சால்வையை அழகாக மடித்து தோளின் குறுக்கே கட்டியிருந்தார். தலையில் சிவப்பும் மஞ்சளும் கலந்த பட்டால் செய்யப்பட்ட தலைப்பாகை. தேரில் பிள்ளையாரின் அருகில் நிற்கும் குருக்கள் அணிந்திருந்த உடையின் அழகு அடியார்களை மெய்மறக்கச் செய்தது.

குருக்கள் பஞ்சாராத்தியைக் காட்டும் போது தணிகாசலம் ஸ்ரீனிவாசனுக்கு அருகில் வந்து ஒரு தேங்காயைக் கொடுத்தான். கடந்த பல வருடங்களாக ஸ்ரீனிவாசன் தேர்த்திருவிழாவன்று தனது தலையில் அடித்து நூற்றுக் கணக்கான தேங்காய்களை உடைப்பது வழக்கம். அவர் உடைக்கும் போது குவியலாக இருக்கும் தேங்காய்களை தானே எடுத்து தனது தலையில் அடித்து உடைப்பார். சிலவேளைகளில் பக்தர்கள் சிலர் தேங்காயை எடுத்து ஸ்ரீனிவாசனுக்குக் கொடுப்பார்கள். ஆனால் அவற்றை அவர் சிலசமயம் வாங்கமாட்டார். கடந்த இரண்டு வருடங்களாக ஸ்ரீனிவாசன் தலையில் அடிக்கும் தேங்காய்களை தணிகாசலமே எடுத்துக்கொடுப்பது வழக்கம்.

அவர் தணிகாசலத்தின் வீட்டுக்குச் சென்று வந்த பின்பு, வெளிநாட்டில் வசிக்கும் தணிகாசலத்தின் உறவினன் ஒருவன் ஏராளமான பணத்தை மாதந்தோறும் அவனுக்கு அனுப்பிக்கொண்டிருந்தான். அதனால் தணிகாசலத்தின் வறுமை நீங்கிவிட்டது.

தணிகாசலம் கொடுத்த தேங்காயை வாங்கிப் பார்த்த ஸ்ரீனிவாசன் சிரித்தார். தணிகாசலம் அவரின் சிரிப்பைப் புரிந்துகொள்ளாது அவரின் கையில் இருந்த தேங்காயைப் பார்த்தான். அது வட்டமாக வெடித்திருந்தது. தணிகாசலம் திகைத்துப்போனான். பரபரப்புடன் ‘‘சுவாமி நான் நன்றாகப் பார்த்துத்தான் தேங்காயைத் தேர்ந்தெடுத்தேன்....’’ அவன் பேசிக்கொண்டிருக்கும் போது ஸ்ரீனிவாசன் குறுக்கிட்டார். ‘‘பிழை உன்னுடையது அல்ல. இறைவனின் விளையாட்டு. எது எது நடக்க வேண்டுமோ அது அது அந்தந்த வேளை நடக்கும். எனக்கு விடுதலை கிடைத்துவிட்டது’’ என்றவாறு தணிகாசலம் கொடுத்த தேங்காய்களை வாங்கித் தலையில் அடித்து உடைத்தார்.

பக்தர்கள் ‘‘அரோகரா’’ என்று கோஷமிட மஹா கணபதியின் தேர்ப்பவனி ஆரம்பமானது.

என்றும் இல்லாதவாறு தேரின் முன்பாக நடந்த ஸ்ரீனிவாசன் தெற்கு வீதியில் இருந்து தெற்குத் திசையாகச் செல்லும்

ஒழுங்கையூடாகச் சென்றார். மக்கள் அவர் செல்லும் திசையைப் பார்த்துக்கொண்டு நின்றனர். தணிகாசலம் அவரின் பின்னால் சென்றான். நடந்து சென்ற ஸ்ரீனிவாசன் திடீரெனத் திரும்பிப் பார்த்தார். தணிகாசலமும் வேறு பலரும் தனக்குப் பின்பாக வருவதைக் கண்டார். ‘‘என்னைக் கடமை அழைக்கிறது. என் வழியே நான் செல்கிறேன். உங்கள் கடமையை நீங்கள் செய்யுங்கள்.’’

‘‘அடியேன் வரலாமா சுவாமி...?’’ தணிகாசலம் கேட்டான்.

‘‘சரி நீ மட்டும் வா...’’ நடந்தார் ஸ்ரீனிவாசன்.

கோயிலுக்கு சிறிது தூரத்தில் இருந்த அவரது வீட்டுக்கு இருவரும் சென்றனர். ஸ்ரீனிவாசனது தாய் வெளியே இருந்த திண்ணையில் படுத்திருந்தாள்.

‘‘அம்மா...’’

‘‘மகனே வந்து விட்டாயா...? நெஞ்சில் வலி பொறுக்க முடியவில்லை. எல்லோரும் கோயிலுக்குச் சென்றதால் உன்னைக் காணாமல் போய்விடுவேனோ எனப் பயந்தேன். வந்துவிட்டாய்...’’

ஸ்ரீனிவாசன் திண்ணையில் அமர்ந்து கொண்டு தாயின் தலையைத் தூக்கி தனது மடியில் வைத்தார். திண்ணையில் கரைத்து வைக்கப்பட்டிருந்த பாலை எடுத்துப் பருகினார். தாயார் இரண்டு முறை குடித்த பின் விக்கல் எடுத்தார்.

ஸ்ரீனிவாசனின் தாயார் சிறிது நேரத்தில் இறந்துவிட்டார். அவர் இறந்த சில நிமிடங்களில் அவரது உடல் மயானத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. கொள்ளி வைத்த ஸ்ரீனிவாசன் வீட்டுக்குத் திரும்பிவந்து தாயார் இறந்த அந்தத் திண்ணையில் அமர்ந்துகொண்டார். தணிகாசலமும் ஊரவர்களும் அவரைச் சுற்றி நின்றனர். நாட்கள் நகர்ந்தனவே தவிர அவர் நிஷ்டையில் இருந்து எழவில்லை.

தாய் இறந்து முப்பத்தியொராவது நாள் நிஷ்டையால் எழுந்தார். ஆகவேண்டிய கருமங்களைச் செய்தார். மீண்டும் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதியின் ஆலயத்திற்குச் சென்று தன் அன்றாடக் கருமங்களைச் செய்யத் தொடங்கினார். அதன்பின் தாய் வாழ்ந்த அந்த வீட்டை தாயாரைப் பராமரித்த குடும்பத்தினருக்கு எழுதிக்கொடுத்தார்.

7. தனக்குஉவமை இல்லாதான்தாள் சேர்ந்தார்க்கு அல்லால்

மனக்கவலை மாற்றல் அரிது.

ஒப்புவமை இல்லாத இறைவனது பாதங்களைச் சேராதவர்களுக்கு மனக்கவலையை மாற்றுதல் முடியாது.

நீத்தல் அரிது

ஸ்ரீனிவாசனின் உபதேசத்தைக் கேட்பவர்களில் ஒருத்தி சாவித்திரி. சாவித்திரி நல்ல அழகி. காண்போர் திரும்பித்திரும்பிப் பார்த்து ரசிக்கக்கூடிய பேரழகு அவளில் குடிகொண்டிருந்தது. சாவித்திரி கோயிலுக்கு வரக்கூடிய நாட்கள் அத்தனையிலும் காலையிலும் மாலையிலும் வருவாள். கோயிலைக் கூட்டித் துப்புரவு செய்வாள். வெளி மண்டபங்களைக் கழுவுவாள். மாலைகட்டிக் கொடுப்பாள்.

பதினெட்டு வயதான அவளுக்கு ஸ்ரீனிவாசன் மீது அளவு கடந்த பற்று இருந்தது. அந்தப் பற்று நாளடைவில் காதலாக மாறியது. ஸ்ரீனிவாசனைக் காணாமல், அவரோடு பேசாமல் அவளால் இருக்க முடியவில்லை. அதனால் அவரைப் பார்த்து பேசுவதற்காக தினமும் காலையிலும் மாலையிலும் கோயிலுக்கு வந்தாள். கோயிலுக்கு வந்து ஒப்புக்கு மஹா கணபதியை வணங்கிவிட்டு ஸ்ரீனிவாசன் அமர்ந்திருக்கும் இடத்திற்கு வந்து அவருக்கருகில் அமர்ந்திருப்பாள். அவருடன் தேவையில்லாத விஷயங்களைப் பற்றிக் கதைப்பாள்.

ஆரம்பத்தில் சாவித்திரியோடு அன்னியோன்னியமாகக் கதைத்த ஸ்ரீனிவாசன், அவள் அடிக்கடி வந்து தேவையில்லாத விடயங்களைப் பற்றிக் கதைக்கும் போது அவளது மனநிலையை அறிந்துகொண்டார். ‘‘சாவித்திரி பெண்கள் அடக்கமானவர்கள். அமைதியானவர்கள். ஒழுக்கமுடையவர்களாக வாழவேண்டியவர்கள். அவர்கள் தவறு செய்யக்கூடாது. நீ கோயிலுக்கு வந்து வணங்குவது நல்லது. ஆனால் கும்பிடுபவர்களைக் குழப்புதல் கூடாது. நீ என்னுடன் வந்து கதைப்பதால் நான் மஹா கணபதியை வணங்கும் நேரம் குறைவடைகிறது. எனவே நீ கோயிலுக்கு வந்தால் மஹா கணபதியை வணங்கிவிட்டுச் செல். என்னைக் குழப்பாதே...’’ என்றார்.

அவர் அப்படிச் சொல்லியும் அவள் கேட்கவில்லை. அதனால் அவர் அவளின் தந்தையை அழைத்துச் சொன்னார்; ‘‘உனது மகள் பேரழகி. அவளின் அழகு கண்டவர்களைக் கொள்ளை கொள்ளக்கூடியது. அதனால் அவளைக் கண்டபடி செல்லவிடாதே.

கோயிலுக்கு வருவதுகூட நல்லதல்ல. உடனே நல்லவனாகப் பார்த்து திருமணம் செய்து வை'' என்றார்.

மறுவாரம் சாவித்திரிக்கும் ஹரிகணனுக்கும் மஹா கணபதி ஆலயத்தில் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் ஸ்ரீனிவாசனின் பாதங்களைப் பணிந்தனர்.

திருமணமான பின் சாவித்திரி கோயிலுக்கு வந்து வணங்குவாள். பின் ஸ்ரீனிவாசனுடன் கதைப்பாள். அவரது உபதேசங்களைக் கேட்பாள். ஸ்ரீனிவாசன் அவளை அவதானித்துப் பார்த்தார். அவளது முகத்தில் ஒரு தெய்வீகக்களை இருந்தது. மகாலட்சுமி போல் காட்சியளிக்கும் அவளின் பாதங்களைத் தொட்டு மனதுள் வணங்கினார். பராசக்தியாகத் தோன்றினாள் அவள்.

அவ்வூரில் பரமநாதர் என்றொரு பணக்காரர் இருந்தார். அவருக்கு எழுபது வயது. கோடி கோடியாகச் சொத்திருந்தும் அவருக்குப் பிள்ளைகள் இல்லை. பிள்ளைகள் பிறக்கும் என்ற நோக்குடன் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதிக்கு பல கட்டடங்கள் கட்டிக்கொடுத்தார். அன்னதானம் செய்தார். ஏழைகளுக்கு உதவினார். இருந்தபோதும் அவருக்கு குழந்தைப்பேறு கிடைக்கவில்லை. அதனால் மனம் வருந்திய பரமநாதர் ஸ்ரீனிவாசனிடம் வந்து தனது மனக்குறையைக் கூறினார்.

''ஒருவன் முற்பிறப்பில் செய்த பாவ, புண்ணியங்களுக்கு ஏற்பத்தான் இப்பிறப்பில் வசதிகள், வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. நீர் முற்பிறப்பில் ஏதோ கொடிய பாவம் செய்துவிட்டீர் போலத் தெரிகிறது. மக்கட்பேறில்லாதவன் மகாபாவி என்று கூறுவார்கள். அவன் இறந்த பின்பு கடமைகளைச் செய்ய பிள்ளைகள் வேண்டும். ஆனால் உம்மைப் பொறுத்தவரை இப்பிறப்பில் தானதர்மங்கள் செய்வதால் உம்மிடம் பொருட்களைப் பெற்றோர் செய்யும் கடமை உம்மை வந்தடையும்'' என்றார்.

''சுவாமி பொருட்கள் எனக்கு சுமையாக உள்ளது. அவற்றை உங்களிடம் ஒப்படைக்கிறேன். நீங்கள் அவற்றைப் பெற்று மக்களுக்கு தானமளியுங்கள்...'' என்றார் பரமநாதர்.

ஸ்ரீனிவாசன் சிரித்தார். பலமாகச் சிரித்தார். ''நான் பொன், பொருள், பூமி யாவற்றையும் துறந்து பலகாலமாகிவிட்டது. எனக்கு ஏனப்பா பொருள். நீ உனது பொருட்களை தானம் செய்...''

''யாருக்கு நான் கொடுப்பது என்று கூறுங்கள். மகா கணபதியின் பெயரில் எழுதவா...?''

மீண்டும் சிரித்தார் ஸ்ரீனிவாசன்; ‘‘மகா கணபதிக்கு எதற்குப் பொருள்? உலகைப் படைத்து, உயிர்களைப் படைத்து, உணவளித்துக், காக்கின்ற கடவுளுக்கு பொருள் எதற்கு? வசதியானவன் கோயிலில் மண்டபம் கட்டுவது மக்கள் தங்குவதற்காக, தேர் கட்டுவது மக்களைப் பீடித்துள்ள மலங்களை அகற்றுவதற்காக... இப்படி ஒவ்வொரு காரணத்துடன் தான் மக்கள் செயற்படுகிறார்களே தவிர கடவுள் இருப்பதற்காகவோ அல்லது கடவுள் பவனி வருவதற்காகவோ அல்ல. நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களும் மற்றவர்களைச் சீர்திருத்த வேண்டும். இதற்காகத் தான் கோயில்களை அபிவிருத்தி செய்யச்சொல்லி நம்முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். நீ உனது பொருட்களைத் தானம் செய். இல்லாவிட்டால் கோயிலின் கட்டடங்களை புனருத்தாரணம் செய். இல்லாவிட்டால் புதிய கட்டடங்களைக் கட்டு. அன்னதானமடம் திருத்த வேண்டியுள்ளது. அதைத் திருத்தினால் எமது கிராமத்தின் வடக்குப் பகுதியில் வாழும் மக்கள் மழைகாலத்தில் வந்து இருப்பார்கள்’’ என்றார்.

பரமநாதர் திருப்தியுடன் சொன்னார் ‘‘சுவாமி நான் உங்களிடம் எனது பொருட்கள் யாவற்றையும் ஒப்படைத்துவிட்டு சிவனே என்று இருக்க வந்தேன். நீங்கள் என்னைச் செயலாற்றும்படி பணித்துள்ளீர்கள். அதன்படி நான் நடப்பேன்’’ என்று ஸ்ரீனிவாசனின் பாதங்களைப் பணிந்தார் பரமநாதர்.

8. அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்

பிறஆழி நீந்தல் அரிது.

இறைவனுடைய திருவடிகளைச் சேராதவர்களுக்கு பொருள், இன்பம் ஆகிய பிற கடல்களை நீந்திக் கடக்க முடியாது.

பயனில்லாத் தலை

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தைப்பற்றி அதிகம் விமர்சிப்பவன் கேசவமூர்த்தி. அவன் ஒரு பட்டதாரி ஆசிரியன். அவ்வூர் மகா வித்தியாலயத்தில் கற்பிப்பவன். எவ்வேளையிலும் மகா கணபதி ஆலயத்தைப் பற்றி விமர்சிப்பான். இந்துக்கள் மகா சோம்பேறிகள். மணித்தியாலக் கணக்காக பூசை செய்வதையும், வழிபாடு செய்வதையும் விட்டுவிட்டு உழைத்தால் முன்னேறலாம். கடவுள் யாருக்கும் எதுவும் கொடுக்கமாட்டார். நாம் உழைத்தால் தான்

வசதியாக வாழலாம் என்பான். கோயிலில் பூசை செய்வது முட்டாள் தனமானது. கோபுரங்கள் கட்டுவதும், மண்டபங்கள், மடங்கள் கட்டுவதும் தேவையற்றது. கல்லாலான கடவுளுக்கு இத்தனை பெரிய கோயில்கள் தேவையா என்று கேட்பான். அபிடேகத்திற்காக ஊற்றப்படும் பால் போன்ற திரவியங்கள் வீணாக மண்ணோடு கலக்கின்றன. அவற்றை விற்கலாம் என்பான். அன்னதானம் செய்வது அவனுக்குப் பிடிப்பதில்லை. கூடி இருந்து சாப்பிடுவதைத் தவிர வேறு எந்தப் பிரயோசனமும் இல்லை. ஒரு நேரச் சோற்றுக்காக எத்தனை பேர் காத்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் உழைத்தால் பெரும்பணம் சம்பாதிக்கலாம் என்பான்.

இவற்றையே தான் கற்பிக்கும் மாணவர்களுக்கும் போதிப்பான். இதனால் மாணவர்கள் சிலரும் அவனுடன் சேர்ந்துகொண்டு வேண்டத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுவர். பெரும்பாலும் மஹா கணபதி கோயில் உற்சவ காலங்களில் கேசவமூர்த்தியும் சில மாணவர்களும் சேர்ந்து கோயிலடியில் வீணான கதைகளைக் கதைப்பார்கள். துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவார்கள். இதனால் கோயிலடியில் பெரும் பிரச்சினைகள் ஏற்படும். சிலசமயம் கைகலப்பும் ஏற்படும்.

தமது பிள்ளைகளைக் கேசவமூர்த்தி கெடுக்கிறார் என்று பெற்றோர்கள் ஒன்றுகூடி ஒருமுறை பாடசாலைக்கு ஊர்வலமாகச் சென்றனர். அதிபர் அவர்களது கோரிக்கையை ஏற்று கேசவமூர்த்தியை அழைத்துச் சொன்னார் “ஓர் ஆசிரியரின் கடமை நற்பிரஜைகளை உருவாக்குதலே தவிர தன்னுடைய கொள்கைகளைக் கூறுதல் அல்ல. உமக்கு கடவுள் மீது நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். அது உமது விருப்பம். அதை நீர் மற்றையோர்களிடம் திணிப்பது முறையல்ல. மாணவர்களின் மனம் மென்மையானது. இலகுவில் நம்பும் தன்மை உடையது. அதைப் பயன்படுத்தி நீர் செய்யும் உபதேசங்களால் தம்பிள்ளைகள் கெட்டழிந்து போகிறார்களென பெற்றோர் எனக்கு முறையிட்டுள்ளனர். இனிமேலாவது நீர் திருந்தி நடக்க முயற்சிக்கவும். உமது விருப்பு வெறுப்புக்களை உம்மோடு வைத்திரும். அதை வளர்ந்தவர்களுக்குச் சொல்லும். சிறுவர்களுக்குச் சொன்னால் அவர்களை அது பாதிக்கும்” என்றார்.

அதன்பின் கேசவமூர்த்தி பாடசாலையில் இப்படியான கதைகளைக் குறைத்துக்கொண்ட போதும் வெளியே மாணவர்களைச் சேர்த்து கோயில்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டான்.

அன்று நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் சிவராத்திரி விழா கொண்டாடப்பட்டது. முதற் சாமப்பூசை முடிந்ததும் கேசவமூர்த்தியும் அவரது மாணவர்களும் சிவராத்திரி விழாவை அவமதித்து துண்டுப்பிரசுரங்களை மக்களுக்குக் கொடுத்தனர்.

வெகுண்டெழுந்த மக்கள் கூட்டம் கேசவமூர்த்தியையும், மாணவர்களையும் பிடித்துவந்து கோயிற் தூண்களில் கட்டிவிட்டனர்.

அங்கு வந்த ஸ்ரீனிவாசன் கேசவமூர்த்தியைப் பார்த்துச் சொன்னார் ‘‘சமயம் மனிதனுக்கு ஒழுக்கத்தைப் போதித்து பூமியில் நல்லபடி வாழ வழிவகுக்கிறது. பழிபாவங்களைச் செய்யவிடாது தடுக்கிறது. அநியாயங்களைச் செய்யவிடாது தடுக்கிறது. நீதி, நியாயங்களை எடுத்துச் சொல்கிறது. வாழ்க்கை முறையை அமைத்துக் கொடுக்கிறது. பெரியோரை மதிக்கக் கற்றுக் கொடுக்கிறது.’’ ஸ்ரீனிவாசன் பேசிக்கொண்டிருக்கும் போது கேசவமூர்த்தி ஆத்திரத்துடன் பேச முற்பட்டான். கூடி இருந்த மக்கள் கூட்டம் அவனைப் பேசவிடாது ஆத்திரத்துடன் தடுத்தது. அவ்வூர்ப் பெரியவரான தணிகாசலம் சொன்னார்; ‘‘சுவாமி பேசி முடிந்த பின் நீ பேசு. சுவாமியின் உபதேசத்தைக் கேட்டால் உனது மனம் மாறும்...’’

‘‘இவனுக்கு மூளை இருந்தால் எல்லோ மனம் மாறும். இவன் தலையில்லாதவன்...’’

‘‘பொறுமையாக இருங்கள்’’ என்ற ஸ்ரீனிவாசன் கேசவமூர்த்தியைப் பார்த்துச் சொன்னார்; ‘‘உனக்கு விருப்பமில்லாவிட்டாலும் பெரும்பான்மை மக்களின் விருப்பத்தை நீ ஏற்றுத்தான் நடக்கவேண்டும். இல்லாவிட்டால் நீ கற்ற கல்வியால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லாமல் போய்விடும். அன்னதானம் ஏழைகளுக்குக் கொடுப்பது மட்டுமல்ல, கோயிலில் சகலரும் சமம் என்பதையும் உணர்த்துகிறது. ஒற்றுமையை வலியுறுத்துகிறது. இப்பிரதேசத்தில் உள்ள ஜீவராசிகளுக்கு (பூச்சி, புழுக்கள்) உணவளிக்கிறது. சமநிலையைப் பேணுகிறது. கட்டடங்கள் கட்டல், தேர், மஞ்சம், வாகனங்கள் செய்தல் போன்றன எமது கலைத்திறனை வெளிப்படுத்துகின்றன. பல தொழிலாளர்களுக்கு தொழிலைக் கொடுக்கின்றன. அழகுணர்வை வளர்க்கின்றன. பொங்கல், பூசைகள், படையல்களால் தானிய விளைச்சல் அதிகரிக்கின்றது. சமயம் என்றவுடன் கடவுளைக் கும்பிடுவது மட்டும்தான் என்று நீ நினைக்காதே... கோயில்கள் மூலம் எமது கலாசாரம், கல்வி, பண்பாடு போன்றன பேணப்படுகின்றன. பூதங்கள் ஐந்து, பொறிகள் ஐந்து, சுவைகள் ஆறு, சுரங்கள் ஏழு, குணங்கள் எட்டு, கிரகங்கள் ஒன்பது என எம்மவர் வகுத்து வைத்துள்ளனர். இத்தனையும் ஒன்றுசேர அடங்கியவன் தான் இறைவன் என்று எமது சமயம் கூறுகிறது. நீ இதை நம்பாவிட்டாலும் நம்பிக்கை உள்ளவர்களைக் கெடுக்காதே’’ என்றார் ஸ்ரீனிவாசன்.

‘‘நீங்கள் கூறுவது எதையும் நம்பமாட்டேன்...’’

“படித்தவன் சிந்திக்காவிட்டால் மூளையிருந்தும் பைத்தியக்காரனாக இருப்பான். ஒரு காலத்தில் தவறான சிந்தனைகளால் அவன் பைத்தியக்காரனாகி விடுவான்” என்றார் ஸ்ரீனிவாசன்.

9. கோள்இல் பொறிஇல் குணம்இலவே எண்குணத்தான்

தாளை வணங்காத் தலை.

கேட்காத செவி, பார்க்காத கண் என்பன போல் எண்குணங்களை உடைய இறைவனை வணங்காத தலையும் பயனற்றதாகும்.

பெருங்கடல்

கேசவமூர்த்தியின் நாஸ்திகப் பிரசாரத்தை ஏற்றுக்கொள்ளாத அவ்வூர் மக்கள் ஊர்வலமாகச் சென்று கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கத்திடம் அவரை இடமாற்றம் செய்யும்படி மகஜர் ஒன்றைக் கையளித்தனர். அதில் நூற்றுக்கும் மேற்பட்ட பெற்றோர் கையொப்பமிட்டிருந்தனர். சுந்தரலிங்கம் அவர்கள் கொடுத்த மகஜரை வாங்கிப் படித்தார்; “ஐயா, கேசவமூர்த்தி என்ற ஆசிரியர் எமது ஊர் மகா வித்தியாலயத்தில் உயர்தர மாணவர்களுக்கு தமிழ்மொழி கற்பிக்கிறார். அவர் பாடவேளைகளிலும், பாடசாலை இல்லாத நேரங்களிலும் எமது பிள்ளைகளுக்கு கடவுளைப் பற்றி தவறாகப் பிரசாரம் செய்கிறார். அதை நம்பிய எமது பிள்ளைகளில் சிலர் வீட்டில் உள்ள கடவுள்களின் உருவப்படங்களை எடுத்து உடைக்கிறார்கள். கோயில்களில் கேசவமூர்த்தியுடன் சேர்ந்து கலாட்டா செய்கிறார்கள். சென்ற வெள்ளிக்கிழமை நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் பக்தர் ஒருவர் பொங்கிய பொங்கற்பானையை தூக்கி எறிந்துவிட்டார்கள். இதனால் நாம் மிகுந்த மனவருத்தம் அடைந்துள்ளோம். இதுநாள்வரை எமது கிராமத்தில் கடவுளை யாராவது அவமதித்தது கிடையாது. தற்பொழுது ஆசிரியர் கேசவமூர்த்தியின் நாஸ்திகப் பிரசாரத்தால் எமது பிள்ளைகள் கெட்டழிந்து போகிறார்கள். இதைத் தடுக்க வேண்டுமேயானால் கேசவமூர்த்தி ஆசிரியரை இடமாற்றம் செய்தல் வேண்டும்.” சுந்தரலிங்கம் கடிதத்தை வாசித்துவிட்டு தனக்கு முன்பாக இருந்த மகஜர் கொண்டுவந்த பிரமுகர்களைப் பார்த்தார். நூற்றுக் கணக்கான மக்கள் அவரது அலுவலகத்திற்கு வெளியே கூடி நின்றனர்.

“கேசவமூர்த்தியை வேறு பாடசாலைக்கு மாற்றினாலும் அவர் அங்கு கற்கும் மாணவர்களுக்கு நாஸ்திகப் பிரசங்கம் செய்வார் தானே...”

“ஆம் ஐயா... அதனால் அவரை வேலையில் இருந்து நீக்கிவிடுங்கள். முன்பு நாம் பாடசாலை அதிபருக்குச் சொன்னோம். அவர் புத்திமதி சொல்லியும் கேட்கவில்லை.”

“சரி நீங்கள் சென்று வாருங்கள். நல்லதொரு முடிவை எடுக்க எனக்கு சில நாட்கள் அவகாசம் தாருங்கள்” என்றார் சுந்தரலிங்கம்.

மறுநாள் சுந்தரலிங்கம் கேசவமூர்த்தியை அழைத்துச் சொன்னார்; “நீர் உமது கொள்கையை உம்முடன் வைத்துக்கொள்ளும், அல்லது பாடசாலைக்கு வெளியே வயது வந்தவர்களுக்கு பிரசாரம் செய்யும், பாடசாலையில் கற்கும் சிறுபிள்ளைகளுக்கு உபதேசம் செய்து அவர்களைக் கெடுத்தல் மிகவும் பாரதூரமான குற்றம். உம்மை நான் இன்னொரு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யலாம். அதனால் பிரயோசனமில்லை. ஏனெனில் நீர் அப்பாடசாலையில் சென்றும் இதையே தான் செய்வீர். எனவே இனிமேல் திருந்தி நடக்கப்பாரும்...” என்றார்.

கேசவமூர்த்தி எதுவும் சொல்லவில்லை. சுந்தரலிங்கம் கூறியவற்றை மௌனமாகக் கேட்டுக்கொண்டு நின்றுவிட்டு அவர் கூறி முடிந்ததும் வெளியே சென்றார்.

மறுநாள் நாவலர் ஸ்ரீ வித்தியா கணபதி ஆலயத்தில் பொங்கிய ஒருவரின் பானையை காலால் உதைத்தார் கேசவமூர்த்தி. அதனால் கோபமுற்ற ஊர்மக்கள் திரண்டுவந்து அவரைக் கம்புகளாலும், பொல்லுகளாலும் தாக்கினார்கள். குற்றுயிராகக் கிடந்த அவரை காவல் துறையினர் வந்து ஏற்றிச்சென்று வைத்தியசாலையில் சேர்த்தனர்.

காவல்துறையினர் பலமுறை அங்கு வந்து விசாரித்தும் கேசவமூர்த்தியைத் தாக்கியவர்கள் யார் என்று அவ்வூர் மக்கள் எவரும் சொல்லவில்லை. ஆறுமாதகாலம் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றபோதும் கேசவமூர்த்தியால் முன்புபோல் எழுந்து நடமாட முடியவில்லை. அவர் நடக்க முடியாது கஷ்டப்பட்டார். கையால் எழுத முடியவில்லை. ஆறு மாதங்களாக வேலைக்குச் செல்லாததால் பாடசாலை அதிபர் அவரது சம்பளப் பணத்தை கல்வித் திணைக்களத்திற்கு திருப்பி அனுப்பினார்.

கேசவமூர்த்தியின் தந்தை விவசாயம் செய்பவர். வருமானம் மிகவும் குறைவான குடும்பம். அதனால் கேசவமூர்த்திக்கு ஒழுங்காகச் சிகிச்சை செய்ய முடியவில்லை. மிகவும் கஷ்டப்பட்டார்.

ஒருவாறு தேறி அவர் பாடசாலைக்குச் சென்றபோது அவ்வூர் மக்கள் அவரைப் பாடசாலைக்குள் செல்லவிடாது தடுத்தனர். அதனால் கேசவமூர்த்தியை சிறியதொரு பாடசாலைக்கு கல்வித் திணைக்களம் இடமாற்றம் செய்தது. துவிச்சக்கரவண்டி ஓடமுடியாது கஷ்டப்பட்ட கேசவமூர்த்தியை அவரது சகோதரன் தினமும் துவிச்சக்கரவண்டியில் ஏற்றிச்சென்று பாடசாலையில் விட்டான். பின் பாடசாலை விட்டதும் பாடசாலைக்குச் சென்று அவன் ஏற்றிவந்தான்.

பாடசாலையில் கேசவமூர்த்தி கற்பிக்கக் கஷ்டப்பட்டார். அதனால் பாடசாலை அதிபர் அவரை வேறு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யுமாறு கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்தார். கேசவமூர்த்திக்கு பல இலட்ச ரூபா சீதனத்துடன் அயலூரில் திருமணம் முற்றாகி இருந்தது. அவரது நிலமையை அறிந்த பெண் வீட்டார் அவரை வேண்டாமென்றனர். பல வழிகளாலும் துன்பப்பட்ட கேசவமூர்த்தியைக் கண்ட அவரது நண்பன் ஒருவன் சொன்னான்; ‘‘இறைவனின் பாதங்களைத் தொழாதவர்கள் வாழ்க்கையில் பெரும் துன்பங்களை அடைவார்கள். தொழுபவர்களைத் துன்பங்கள் நெருங்காது. இது காலங்காலமாக மக்கள் உணர்ந்த உண்மை. நாம் நினைத்தது எவையும் நடக்கமாட்டாது. எனவே நீ கடவுளைத் தொழாவிட்டாலும் அவரை நிந்தனை செய்யாமல் இரு’’ என்றான்.

‘‘கடவுளால் எதுகும் செய்ய முடியாது. எங்கே உனது கடவுளைக் காட்டு பார்க்கலாம்.....’’ என்றார் கேசவமூர்த்தி.

‘‘என்னை மன்னித்துக் கொள். உன்னோடு கதைத்ததே பிழை’’ என்று கூறிவிட்டு நகர்ந்தான் அவனது நண்பன்.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்

இறைவன் அடிசேரா தார்.

இறைவனின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்களால் மட்டும் பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியும். மற்றவர்களால் கடக்க முடியாது.

அமிழ்து

வரதபுரம் செல்வச் செழிப்பான ஒரு ஊர். மாதம் மும்மாரி பொழிவதால் அங்கு உணவுக்குப் பஞ்சமே இல்லை. அந்நாட்டின் உயர்ந்த மலையில் இருந்து பாய்ந்து வரும் ஆற்றை அணைகட்டி குளங்களுக்குள் நீரைத்தேக்கி வைத்திருந்து மக்கள் வருடம் பூராவும் பயிர்களைச் செய்து வந்தனர். அவ்வூரில் இரப்பாரே இல்லை. அயல் ஊர்களில் இருந்து வரும் இரப்போர்க்கு மக்கள் அள்ளி அள்ளிக் கொடுத்தனர். அதனால் அங்கு எந்நேரமும் அயல் ஊர் மக்கள் வந்து செல்வதுண்டு.

கோயில் திருவிழாக்கள் கோலாகலமாக நடைபெறும். கோயில்களில் தினமும் அன்னதானம் நடைபெறும்.

வரதபுரத்தின் அயல் ஊர்களான தருமபுரம், விசாகப்பட்டணம், திருநல்லூர் என்பன நெய்தல் நிலங்கள். அங்கு மழை பெய்வது குறைவு. கிணற்று நீர் உவர்த்தன்மையானது. அதனால் பயிர்கள் செய்ய முடியாது. கடற்றொழிலை நம்பியுள்ள மக்கள் அதிகம் அங்கு வாழ்வதால் தமது கல்வித் தேவைக்காகவும், வியாபாரத் தேவைக்காகவும் அவ்வூர் மக்கள் வரதபுரத்தையே நம்பியிருந்தனர்.

வரதபுரம் மிகவும் செழிப்பான ஊராகையால் அங்கு எல்லாச் செல்வமும் குவிந்து கிடந்தது. எனவே அயற்கிராம மக்களை வரதபுர மக்கள் தமது வேலைகளுக்கு அமர்த்தி வைத்திருந்தனர்.

வரதபுரத்தில் விழாக்கள் கோலாகலமாக நடைபெறும். முத்தமிழ் விழாக்கள் மாதக் கணக்கில் நடைபெறும். அவ்வூர் மக்கள் சிறந்த நடன நாடக நிகழ்வுகளைத் தயாரித்து மேடையேற்றுவர்.

அரசன் சிறந்தவற்றிற்கு பொன்னும் பொருளும் அளித்து கலைஞர்களைக் கௌரவிப்பான். சபையில் புலவர்கள் தாம் ஆக்கிய காப்பியங்களைச் சமர்ப்பித்து பரிசுகள் பெறுவர்.

அரசன் வருடந்தோறும் சித்திரைப் புத்தாண்டன்று எத்துறையிலாவது சிறந்தவற்றை ஆக்குபவர்களுக்கு பரிசுகள் அளிப்பது வழக்கம்.

அந்த வருடம் தருமபுரம், விசாகப்பட்டணம், திருநல்லூர்க் கிராமங்களில் மழை பெய்யவில்லை. பயிர்த்தொழிலை நம்பியிருந்த மக்கள், பயிர்கள் யாவும் அழிந்ததால் உணவின்றிக் கஷ்டப்பட்டனர். ஒரு வேளைக்குக் கூட அவர்களுக்கு உணவு கிடைக்கவில்லை. கால்நடைகள் நீரின்மையால் இறக்கத் தொடங்கின. குளங்கள், குட்டைகள் வற்றியதால் பறவைகளும், காட்டு விலங்குகளும் அவ்வூர்களை விட்டு வெளியேறிவிட்டன. மக்கள் வரதபுரத்திற்கு வந்து அரசனைச் சந்தித்து தமது பஞ்சத்தைப் போக்குமாறு கேட்டனர். அரசன் வரதபுரத்தில் முகாம் அமைத்து அவர்களைத் தங்க வைத்தான்.

அம்முறை புத்தாண்டுக்கான போட்டியை அரசன் அறிவித்தான். ‘‘உலகில் சிறந்த சுவையுள்ள அமிழ்தான பொருள் எது? அதைக் கொண்டு வருபவர்களுக்கு ஒரு இலட்சம் பொன் வழங்கப்படும்’’ என நாடு முழுவதும் இச்செய்தி முரசு மூலம் அறிவிக்கப்பட்டது.

அன்று சபை கூடியது. புலவர்களும், அறிஞர்களும், பொதுமக்களும் சபையில் கூடியிருந்தனர்.

‘‘அமிழ்தான பொருளை சமர்ப்பிக்கலாம்’’ என்று அரசன் அறிவித்தான்.

நாட்டின் முதுபெரும் புலவரான தாண்டவராயர் எழுந்து சொன்னார் ‘‘திருமுறைகள் தான் அமிழ்தானவை’’. சபையில் கரகோஷம். யாரும் அதை மறுத்துரைக்கவில்லை. சிறிதுநேரத்தில் சபை அமைதியானது. அரசன் எழுந்து சொன்னான்; ‘‘திருமுறைகள் அமிழ்தானது என்பது உண்மை. அது எல்லோருக்கும் அமிழ்தாகாது.’’

இன்னுமொரு புலவர் எழுந்தார். ‘‘திருக்குறள், இராமாயணம், பகவத்கீதை போன்ற நூல்கள் அமிழ்தானவை.’’

அரசன் இல்லையென தலையசைத்தான்.

‘‘அன்னையின் பால்’’ குடிமகன் ஒருவன் சொன்னான்.

‘‘இறைவனுக்கு படைக்கப்பட்ட பஞ்சாமிர்தம்’’ இன்னொரு குடிமகன் சொன்னான்.

‘‘தேனில் ஊறிய பலாச்சுளை’’ புலவர் ஒருவர் கூறினார்.

‘‘இல்லை’’ அரசன் மறுத்தான்.

குடிமக்களின் பகுதியில் அமர்ந்திருந்த ஒரு முதியவர் எழுந்தார். ‘‘அரசே நான் தருமபுரத்தைச் சேர்ந்த குடிமகன். நான் எமது ஊரில் இல்லாத அமிழ்தான பொருளைக் கொண்டு வந்துள்ளேன். தங்களுக்குத் தரலாமா...?’’

‘‘தாராளமாகத் தரலாம். தருமுன் அதன் பெயரைச் சொன்னால் நல்லது’’ என்றான் அரசன்.

‘‘மழை நீர் அரசே.’’

“சரியாகச் சொன்னீர். உமக்குத்தான் ஒரு இலட்சம் பொன் பரிசாகக் கிடைக்கும். மழை நீர்தான் மண்ணுக்கு அமிழ்து. அதன் மூலம் தான் மண் மக்களுக்கு அமிழ்தைக் கொடுக்கிறது.”

11. வான்நின்று உலகம் வழங்கி வருதலால்

தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று

மழை பெய்வதால் உலகம் வாழ்கிறது. அதனால் உலகத்தில் வாழும் உயிர்களுக்கு மழையானது அமிழ்தம் என்று உணரத்தக்கது.

உணவு

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய மண்டபத்துள் அரசடிக் கிராம மக்கள் கூடியிருந்தனர். நாவலடிக் கிராமத்தின் அயற்கிராமம் அரசடி. அரசடி ஒரு காலத்தில் பெருவிளைச்சலைப் பெறுகின்ற வயல்களை உடைய கிராமமாக விளங்கியது. முன்பெல்லாம் அரசடிக் கிராமத்தில் ஏராளமான குளங்கள் இருந்தன. அவற்றில் மழைநீர் தேங்கி நின்றதால் கிராமத்தில் உள்ள கிணறுகள் நன்றாக இருந்தன. குடிப்பதற்கு அமிழ்தான நீரைக் கிணறுகள் கொடுத்தன. குளங்கள் வருடம் பூராகவும் வயல்களுக்கு நீர்பாய்ச்சக் கூடியனவாக இருந்தமையால் வருடத்தில் மும்முறை நெல் பயிரிடக்கூடியதாக இருந்தது. பலகாலம் குளங்களும், குளங்களுக்கு நீர் செல்லும் வாய்க்கால்களும் திருத்தப்படாமையால் கிணற்று நீர் உவர்த்தன்மையாகிவிட்டது. குளத்தில் மழைநீர் தேங்கி நிற்காமல் அரசடிக் கிராமத்திற்குக் கிழக்கேயுள்ள கடலுக்குள் சென்றது. இதனால் மக்கள் விவசாயம் செய்ய முடியாமற் போய்விட்டது. அரசடிக்கிராம மக்கள் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயக் கிணற்றிலே குடிநீர் பெற்றுவந்தனர்.

அரசடிக் கிராமத்தின் மத்தியில் தணிகாசலத்திற்கு பதினைந்து பரப்பு வயற்காணி இருந்தது. அவர் மாரி காலத்தில் அவ்வயலில் நெல் விதைப்பார். எனினும் பெரும் விளைச்சலைப் பெற முடிவதில்லை. அறுவடையின் பின் தக்காளி, பூசிணி, வெண்டி போன்ற பயிர்களை தணிகாசலம் பயிரிட்ட போதும் இலாபம் கிடைப்பதில்லை. அதனால் அவர் கடந்த சில வருடங்களாக வயற்செய்கையைக் கைவிட்டிருந்தார். அரசடிக் கிராம மக்கள் சிலருக்கு நாவலடிக் கிராமத்தில் செம்மண் தோட்டங்கள் இருந்தமையால்

அத்தோட்டக்காரர்கள் வயற்செய்கையை கைவிட்டு விட்டனர். நாவலடிக் கிராமத்தில் தோட்டமில்லாதோர் அங்கு கூலிவேலை செய்து தமது சீவியத்தை கஷ்டப்பட்டு நடத்தி வந்தனர்.

தணிகாசலம் அரசடிக் கிராம மக்கள்படும் துன்ப, துயரங்களைக் கண்டு வேதனைப்பட்டார். அதனால் அக்கிராம மக்கள் அனைவரையும் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய மண்டபத்திற்கு அழைத்தார். நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி விவசாய மன்றத் தலைவர் வேலாயுதபிள்ளையின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. ‘‘அன்பான எமது அயற்கிராமமான அரசடி மக்களே, இவ்வூர்ப் பிரமுகர்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கம். நீங்கள் ஏன் இங்கே கூடி வந்திருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். சமூகத் தொண்டரும் பெரும் மனிதருமான தணிகாசலம் அவர்களின் விருப்பம் என்னவென்றால், ஒரு காலத்தில் பெரும் விவசாயக் கிராமமாக இருந்த அரசடிக் கிராமத்தை பழைய நிலைக்கு கொண்டுவர வேண்டும் என்பதேயாகும். உங்கள் கிராமத்தில் பெய்யும் மழைநீரில் ஒருதுளி கூட முன்பு கடலுக்குச் சென்று அடைவதில்லை. இன்று ஒருதுளி கூட கிராமத்தில் தங்குவதில்லை. ஆழமான குளங்கள் எல்லாம் வயல்கள் போல் சமதரையாக மாறிவிட்டமையால் தான் இந்நிலை தோன்றியது. வாய்க்கால்கள் எல்லாம் பற்றைக் காடாக உள்ளன. அதனால் நீர் வடிந்தோட முடியாமையால் குடியிருப்புக்களுக்குள் நுழைகிறது. இதனால் பல்வேறு விதமான நோய்கள் பரவி மனிதனின் ஆரோக்கியத்தைக் கெடுக்கின்றன. மழைநீர் அமிர்தம் என்று சொல்வார்கள். அதைத் தேக்கினால் நல்ல குடிநீரைப் பெறலாம். அதேபோல் தேக்கிவைத்து வயல்களுக்குப் பாய்ச்சினால் உணவுத் தானியங்களைப் பெறலாம். எனவே மக்கள் எல்லோரும் சேர்ந்து குளங்களை ஆழமாக்குவோம். வாய்க்கால்களை துப்புரவு செய்வோம். இந்த நிகழ்வில் நாவலடிக் கிராம மக்களாகிய நாமும் பங்குகொள்கிறோம். ஏனெனில் எமது கிராமத்தில் பெய்யும் மழைநீர் உங்கள் கிராமத்தினூடாகத்தான் காலம் காலமாகச் செல்கிறது. உங்களின் கிராமங்களில் உள்ள வாய்க்கால்கள் சேதமாகியதால் மழைநீர் ஓடமுடியாமல் எமது கிராமத்தில் தங்கிவிடுகிறது. இதனால் எமக்கும் பெரும் சிரமமாக உள்ளது. எனவே நாளை முதல் எமது கிராம மக்கள் ஐந்நூறு பேர் ஒரு வாரத்திற்கு உங்கள் கிராமத்தில் சிரமதான வேலைகள் செய்வார்கள். வசதியுள்ள பலர் ஆயுதங்களும், உணவுப் பண்டங்களும் தர முன்வந்துள்ளனர்’’ என்றார்.

இரண்டு கிராம மக்களும் ஒற்றுமையாக நேர அட்டவணை வகுத்து ஒருமாதகாலம் சிரமதான வேலைகளில் ஈடுபட்டனர். வேலைகள் திட்டமிட்டதை விட விரைவாக முடிவடைந்தன. அரசடிக் கிராமத்தில் இருந்த ஒன்பது குளங்கள் ஆழமாக்கப்பட்டன. மழைகாலம் தொடங்கியது. முன்பென்றால் அரசடிக் கிராமத்தின்

வடக்குப் பகுதியில் இருக்கும் மக்கள் மழைகாலத்தில் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய அன்னதான மடத்தில் வந்து தங்குவார்கள். இம்முறை வழமையை விட மழை அதிகமாகப் பெய்தும் அவர்களின் குடியிருப்புப் பகுதிக்குள் வெள்ளநீர் செல்லவில்லை. அதனால் அவர்கள் அன்னதான மடத்திற்கு வரவில்லை.

ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் தான் அங்கு மழைபெய்வது வழக்கம். அதன்பின் அரசடிக்கிராம மக்கள் குடிநீருக்காக நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய கிணற்றிற்குச் செல்லவில்லை. வருடம் முழுவதும் குளங்களில் நீர் தேங்கி நின்றமையால் அக்குள நீரையே மக்கள் குடிநீராகப் பயன்படுத்தினர். வருடம் முழுவதும் விவசாயம் செய்தனர். நல்ல செயற்திட்டத்தை வகுத்து நடைமுறைப்படுத்திய தணிகாசலத்தையும், உதவிகள் புரிந்த நாவலடிக் கிராம மக்களையும் அவர்கள் பாராட்டினார்கள். 'ஒவ்வொரு வருடமும் குளங்களைப் புனரமைக்க வேண்டும்' என்று தணிகாசலம் கேட்டுக்கொண்டார்.

12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்

துப்பாய தூஉம் மழை.

உயிர்களுக்கு உண்ண உணவுப் பொருட்களை விளைவித்துக் கொடுப்பதோடு, பருகுபவர்களுக்கு ஓர் உணவாகவும் இருப்பது மழையாகும்.

பசி

இரண்டு வருடகாலமாக நாவலடி, அரசடிக் கிராமங்களில் மழை பெய்யவில்லை. நாவலடி மக்களும், அரசடி மக்களும் சேர்ந்து குளங்களை ஆழமாக்கினர். மழைநீர் குளங்களுக்குச் செல்லும் வாய்க்கால்களைத் துப்புரவு செய்தனர். இரண்டு வருடங்களுக்கு முன்பு தணிகாசலத்தின் தலைமையில் குளத்தை ஆழமாக்கி வாய்க்கால்களைத் துப்பரவு செய்தமையால் ஒருவருட காலமாக குடிப்பதற்கும் விவசாயம் செய்வதற்கும் போதியளவு நீர் இருந்தது. அந்த வருடம் மூன்று முறை நெல் விதைத்தனர். நெல்லும் நன்றாக விளைந்தது. அதனால் உணவுக்குப் பஞ்சம் ஏற்படவில்லை. மக்கள் பசி என்றால் என்னவென்று அறியாது இருந்தனர். மழை பெய்யாததால்

அடுத்த வருடம் விதைக்க முடியவில்லை. முதல் வருடம் அமோகமாக நெல் விளைந்ததால் அடுத்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களும் கையிருப்பில் உள்ள நெல்லில் உண்ண முடிந்தது.

தொடர்ந்து இரண்டு வருடங்கள் மழை பெய்யாததால் மக்கள் பசியால் அவதிப்பட்டனர். மழைபெய்யாததால் தோட்டங்களில் வேலைகள் இல்லாமல் இருந்தது. கிணற்று நீரை நம்பி விவசாயம் செய்யும் நாவலடி மக்கள் மழை பெய்யாததால் கிணற்று நீர் வற்ற குடிநீருக்குக் கஷ்டப்பட்டனர்.

தணிகாசலம் தோட்டம் செய்வதை கைவிட்டுவிட்டார். கொஞ்சத் தோட்டமாவது செய்யலாமென்றால் கிணற்றில் நீர் இருக்கவில்லை. தோட்டம் செய்யும் போதே அவருக்குக் கஷ்டம். தோட்டமும் செய்யாது இருந்தால் எப்படி இருக்கும். அவருக்கு நான்கு பிள்ளைகள். அவரது தாயும் தந்தையும் அவருடனே இருந்தனர். அதனால் எல்லோருக்கும் உணவளிக்க மிகவும் சிரமப்பட்டார் தணிகாசலம்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது மாத வேதனத்தில் காலத்தைப் போக்கினாலும் குடிப்பதற்கு நீர் இன்றிக் கஷ்டப்பட்டனர். காலையில் புறப்பட்டு ஐந்து மைல்களுக்கு அப்பால் உள்ள கிராமத்துப் பிள்ளையார் கோயிற் கேணியிலேயே நீர் எடுத்தரல் வேண்டும். பிள்ளையார் கோயிற் கேணியின் ஊற்று வற்றாதது. எத்தனை ஆயிரம் பேர் நீர் எடுத்தாலும் ஊறிக்கொண்டே இருந்தது.

தணிகாசலம் நாலைந்து வீட்டுக்காரர்களுக்கு பெரிய கொள்கலன்களில் நீர் எடுத்துக்கொண்டு வந்து கொடுப்பார். அவர்கள் அதற்குக் கூலி கொடுப்பார்கள். கணபதி மத்திய மகா வித்தியாலயத்திற்கு மாணவர்களின் வரவு மிகவும் குறைந்தது. பாடசாலைக்கு வரும் மாணவர்களும் பசியால் மயங்கி விழுந்தனர். அதிபர் விக்னேஸ்வரமூர்த்திக்கு மாணவர்களின் நிலையைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. அதனால் அங்கு பணிபுரியும் ஆசிரியர்களின் உதவியோடு இலைக்கஞ்சி காய்ச்சிக் கொடுத்தார்.

வேலாயுதபிள்ளையின் இருமகன்மார் வெளிநாட்டில் பணிபுரிந்து வந்தனர். வேலாயுதபிள்ளை தனது மகன்மாருக்கு நாவலடிக் கிராமத்தின் பஞ்சநிலை பற்றிக் கடிதம் எழுதினார். விக்னேஸ்வரமூர்த்தியும் வெளிநாடுகளில் உள்ள தனது மாணவர்களுக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் உதவி செய்யக்கோரி கடிதம் எழுதினார். அவர்கள் பணம் சேகரித்து அனுப்பி வைத்தனர். அதனால் பாடசாலையில் உணவு கொடுக்கத் தொடங்கினர். அதனால் மாணவரின் வரவு கூடியது.

அன்று தணிகாசலத்தின் வீட்டில் சமைக்கவில்லை. பிள்ளைகள் பாடசாலையில் மதிய உணவை உண்டமையால் அவர்கள் பசியென்று சொல்லவில்லை. காலை முதல் எதுவும் சாப்பிடாததால்

தணிகாசலத்திற்கு மயக்கம் வருவது போல் இருந்தது. மெதுவாக எழுந்து வேலாயுதபிள்ளையின் வீட்டுக்குச் சென்றார்.

“வா தணிகாசலம்” என்று வேலாயுதபிள்ளை தணிகாசலத்தை வரவேற்றார். தணிகாசலத்தின் நிலைமை வேலாயுதபிள்ளைக்குத் தெரியும். அவர் பலதடவைகள் தணிகாசலத்திற்கு உதவி செய்திருக்கிறார்.

“வேலாண்ணை இன்று முழுக்கச் சமைக்கேல்லை. பிள்ளைகள் மத்தியானம் பாடசாலையில் சாப்பிட்டுதுகள். நானும், மனைவியும், அப்புவும், ஆச்சியும் பட்டினி....” அவர்கள் கதைத்துக்கொண்டிருக்கும் போது வேலாயுதபிள்ளை குறுக்கிட்டார். “நீ என்ன மனிசன்... என்னட்டைக் கேட்க உனக்கு என்ன வெட்கம்? நான் வசதியானனான். என்ரை பிள்ளைகள் வெளிநாட்டிலை வேலை செய்யுதுகள். நீ தோட்டக்காரன். மழை இல்லாததாலை தோட்டச் செய்கையை விட்டுட்டாய். என்னைக் கேட்டிருக்கலாம். இந்தா பிடி” என்று வேட்டி மடிப்பிற்குள் சுருட்டி வைத்திருந்த பணத்தை எடுத்துக் கொடுத்தார். அவர் சட்டை அணிந்தாலும் வேட்டி மடிப்புக்குள் தான் பணத்தைச் சுருட்டி வைத்திருப்பார்.

“பத்துக் கொத்து அரிசியும் தாறன். கொண்டு போய்ச்சமை. அரசாங்கம் தாற நிவாரணம் எத்தனை நாட்களுக்குப் போதும். நீ நேர்மையான மனிசன். ஒழுக்கமானனி. உனக்குத்தர நான் கொடுத்து வைக்கவேண்டும். நீ எப்போது வேண்டுமானாலும் என்னிடம் உதவி கேட்கலாம்” என்றார் வேலாயுதபிள்ளை.

தணிகாசலம் உருகிப் போனார். கண்களில் நீர் மல்கச் சொன்னார் “இந்த உதவியை நான் மறக்கமாட்டன்...”

“வானம் பொய்த்தால் நாம் இரக்கத்தான் வேண்டும். எம் போன்றவர்களை வாட்டும் பசி தீராது” என்று நினைத்தவாறு நடந்துகொண்டிருந்தார் தணிகாசலம். பசியால் இரக்கவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

13. விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து

உள்நின்று உடற்றும் பசி.

மழை பெய்யாதுவிடின் கடலினாலே சூழப்பட்ட அகன்ற உலகில் வாழும் உயிர்களைப் பசி உள்ளே நிலைத்து நின்று வருத்தும்.

வருவாய்

கந்தையா, சீனித்தம்பி, சிவசுப்பிரமணியம், தர்மரட்ணம், தணிகாசலம் என்போர்கள் நாவலடிக் கிராமத்தின் விவசாயிகள். மற்றைய விவசாயிகளுக்கு விதைப்புக் காலங்களில் விதைத்து, உழுது நடுபவர்கள். இவர்கள் கைராசி மிக்கவர்கள் என்று நாவலடி விவசாயிகளும், அரசடி விவசாயிகளும் நம்பியிருந்தனர். விதைப்புக் காலங்களில் இரவுபகலாக இவர்கள் விதைப்பு வேலைகளில் ஈடுபடுவார்கள். சென்ற வருடம் குளத்தில் மழைநீர் தேங்கி நின்றமையால் அவ்வூர் விவசாயிகள் மூன்று முறை நெல் விதைத்தனர். அதனால் இவர்களுக்கு ஓய்வே கிடைக்கவில்லை. இந்த வருடம் மழை பெய்யாததால் இவர்கள் கலப்பையைத் தொடவே இல்லை. கலப்பையில் உள்ள மண்ணைத்துடைத்து வீட்டுத்தாழ்வாரத்தில் கலப்பையைக் கட்டி ஆறுமாதங்களுக்கு மேலாகிவிட்டது. முன்பென்றால் விவசாயிகள் கலப்பையை வீட்டுக்குக் கொண்டுவருவதில்லை. தினமும் கலப்பைகளை வயலிலேயே வைத்துவிட்டு வருவர்.

கந்தையாவும், மணியமும் தணிகாசலத்தைத் தேடிவந்தனர். ‘‘தணிகாசலம் அண்ணை இப்போதைக்கு வானம் இரங்கமாட்டுது போலை தெரியுது. கொடும்பாவி கட்டி இழுத்தும் ஒருதுளி மழைகூடப் பெய்யவில்லை. உழவைத் தவிர வேறை ஒரு தொழிலும் தெரியாத நான் என்ன செய்யிறது...’’ என்று கேட்டான் கந்தையா.

‘‘அது தானேயடாப்பா. எனக்கும் ஐம்பது வயதாச்சு. என்ரை காலத்திலை இப்படி மழைபெய்யாமல் இருந்ததை நான் அறியேல்லை. மணிவண்ணன் நான் படுற கஷ்டத்தைப் பார்த்திட்டு கடையிலை வந்து வேலை செய்யச்சொல்லி சொல்லுறான். அந்த நாளையிலை எட்டாம் வுகுப்புப் படிச்சனான். கணக்குப்பிள்ளை செத்துப்போனாராம். என்னை வரச் சொல்லுறான். தொட்டாட்டு வேலை செய்ய இரண்டு பேர் வேணுமாம். நீங்களும் வாருங்கோவன்’’ என்றார் தணிகாசலம்.

‘‘இனிமேலும் கலப்பையை நம்பிச் சீவிக்கேலாது; கலப்பையைத் தூக்கிப் பரணிலை கட்டிப்போட்டு ஏதாவது வேலைகள் செய்யவேண்டியது தான்’’ என்றான் மணியம்.

‘‘மற்றவனுக்கு அடிமைப்படாமல் அடுத்தவன் ஏவாமல் சுதந்திரமாய் உழுது விதைத்து அறுவடை செய்து சந்தோசமாய்

வாழ்ந்த நாங்கள், இப்ப மழை பெய்யாததாலை மற்றவன்ரை கையை எதிர்பார்க்கவேண்டியிருக்கு. அவன் வைச்சது தானே சட்டம். இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன்னம் தேடுவாரற்று இருந்த மணிவண்ணன் பட்டணத்திலை ஒரு கடைபோட்டான். இப்ப அவன் பெரியவன். அவனிட்டை நாங்கள் கைகட்டிச் சேவகம் செய்யவேண்டியிருக்கு'' என்றான் கந்தையா. அவனது குரல் கரகரத்தது. வேதனையின் தாக்கத்தால் கண்கள் பொங்கின.

''என்னடாப்பா செய்யிறது. மழை பெய்தால் அவன் வந்து எங்களிட்டை கைநீட்டிக்கொண்டு நிற்பான். நாங்கள் உழுது, விதைத்து, அறுவடை செய்து வைத்திருக்கிற நெல்லை தனக்குத் தரச்சொல்லி கெஞ்சி மன்றாடுவான். அதோடை பேரம்பலம் கைலாயநாதன் என்று எத்தனை பேர்...? இப்ப...'' பெருமூச்சுவிட்டார் மணியம்.

''காலம் இப்பிடித் தானடாப்பா. மழை பெய்தால் நாங்கள் மகாராஜாக்கள். மழை பெய்யாதத்தாலை அவன் மகாராஜா ஆகிட்டான். எத்தனை காலத்திற்கு மழை பெய்யாமல் விடப்போகுது. மழை பெய்யுமட்டும் கலப்பையைத் தூக்கி வைச்சிட்டு வேறு தொழில்களைச் செய்வம். இதிலை வெட்கப்பட ஒன்றுமில்லை. நான் நாளைக்குத் தொடக்கம் கடையிலை வேலைசெய்யப் போகப்போறன். நீங்களும் விருப்பமென்றால் வாருங்கோ. மழை இன்றைக்குப் பெய்யும், நாளைக்குப் பெய்யும் என்று நம்பி வர்ற தொழிலைக் கைவிடேலாது'' என்றான் தணிகாசலம்.

''நானும் வாறன். நீ என்ன மாதிரி மணியம்'' என்று கேட்டான் கந்தையா.

''நீங்கள் இரண்டு பேரும் போகேக்கை நான் கௌரவத்தைப் பார்க்க முடியுமே, நானும் வாறன்'' என்றான் மணியம்.

14. ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்

வாரி வளங்குன்றிக் கால்.

மழை எனப்படும் வருவாய் குறையுமேயானால் உயிர்களுக்கு உணவளிக்கும் உழவர் தமது கலப்பையைக் கொண்டு உழமாட்டார்.

கொடுப்பதும் கெடுப்பதும்

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் மழைவேண்டி பூசை நடைபெற்றுக்கொண்டிருந்தது. கோயிலின் உள்வீதியிலும் வெளிவீதிகளிலும் மக்கள் பலர் பொங்கிக் கொண்டிருந்தனர். பொங்க இயலாதவர்கள் கொடுத்த அரிசியைக் கிடாரங்களில் அவித்துக்கொண்டிருந்தனர். உள்ளே குருக்கள் சுவாமியை அலங்காரம் செய்துகொண்டிருந்தார். முன் மண்டபத்திற்கு நேரே தீ மிதிப்பதற்காக பெரியபெரிய மரக்குற்றிகளைப் போட்டு எரியூட்டிக்கொண்டிருந்தனர்.

ஸ்ரீனிவாசன் சுவாமியார் கோயிலின் முன்பக்கத்தில் நின்ற அரசமர நிழலில் இருந்தார். அவருக்கு அருகில் கைகட்டியவாறு அமர்ந்திருந்தார் தணிகாசலம். சுவாமிகளுக்கு தணிகாசலத்தை மிகவும் பிடிக்கும். கோயில் காரியம் எது செய்யவேண்டுமென்றாலும் தணிகாசலத்தோடு தான் கதைப்பார். சுவாமிகள் தணிகாசலத்தைப் பார்த்தார். அவனது முகத்தில் சோகம் படர்ந்திருந்தது. கண்கள் குழிவிழுந்திருந்தன. முக எலும்புகள் வெளியே தள்ளிக்கொண்டிருந்தன. ‘‘எதற்கும் யோசிக்காதை தணிகாசலம். இறைவன் எம்மைச் சோதிப்பது எமக்கு நல்வாழ்வைக் கொடுப்பதற்காகத்தான். விரைவில் மழைபெய்யும். இந்தப் பூமி குளிரும். மக்கள் முன்பைவிட உற்சாகத்துடன் உழைத்து மேல்நிலைக்கு வருவார்கள்.’’

‘‘தங்கள் திருவாக்கு ஒருபோதும் பொய்ப்பதில்லை. ஐந்து வருடங்களுக்கு முன்பு அகால வேளையில் மழைபெய்து பயிர்களை அழித்து மக்களைத் துன்புறுத்தும் என்றீர்கள். அதேபோல் அறுவடை காலத்தில் அளவுக்கதிகமான மழைபொழிந்து எமது பயிர்களையெல்லாம் அழித்தது. அந்தக் காலத்திலும் மக்கள் பசியாலும் பட்டினியாலும் வாடினர். அடுத்த வருடம் விதைப்பதற்கே தானியங்கள் இல்லாமல் இருந்தது. இப்பொழுது மழைபெய்யாததால் அந்நிலை ஏற்பட்டிருக்கிறது. மக்கள் படும் வேதனைகள் வார்த்தைகளால் சொல்லமுடியாதவை. இன்றைய பூசைக்கு என்னால் ஒருபிடி அரிசியைக் கூடக் கொடுக்கமுடியவில்லை என்பதை நினைக்க கவலையாக உள்ளது. மஹா கணபதி இப்படி ஏன் என்னைச் சோதிக்கிறார்’’ அழுதான் தணிகாசலம்.

‘‘அழாதை தணிகாசலம். துன்பத்தை எதிர்த்துப் போராடினால் தான் மனிதனாக வாழலாம். நாம் துன்பப்படும் காலங்களிற் தான் தைரியமாக இருத்தல் வேண்டும். வேதனைப்படாதே. மிகவிரைவில் மழைபெய்யும். உங்கள் துன்பம் யாவும் நீங்கும்... போ போய் ஆகவேண்டியவற்றைக் கவனி’’ என்றார் ஸ்ரீனிவாசன்.

பூசைகள் முடிந்தன. மக்கள் தாம் பொங்கியவற்றை மஹா கணபதிக்குப் படைத்தனர். மஹா கணபதி எலிவாகனத்தில் உள்வீதி சுற்றிவந்து முன்மண்டபத்தில் இருந்த சகடையில் அமர்ந்துகொண்டார். முன் மண்டபத்தின் இடது கரையில் நெருப்புத்தணல் தகதகவென மின்னியது. ஒரு அடி உயரத்திலும் மூன்று அடி அகலத்திலும் எட்டடி நீளத்திலும் பரவியிருந்த நெருப்புத்தணலைச் சுற்றி மக்கள் நின்றனர்.

''அரோகரா'' என்று பலமாகக் கூறியவாறு ஸ்ரீனிவாசன் சுவாமியார் தீயின் மேல் மிகவும் மெதுவாக நடந்தார். மக்கள் ''அரோகரா'' எனப் பலமாக முழக்கமிட சுவாமியார் ஐந்துமுறை தீயின்மீது நடந்தார். அவர் நடந்து முடிந்ததும் தணிகாசலம் தேங்காய்களைக் கொண்டுவந்து சுவாமியாரிடம் கொடுத்தான். அவர் அதை வாங்கி தனது தலையில் அடித்து உடைத்தார். அதைத் தொடர்ந்து தணிகாசலம் தீமிதித்தார். பக்தர்கள் பலர் ''அரோகரா'' எனக் கூறியவாறு தீமிதித்தனர்.

தீமிதிப்பு நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் கேசவமூர்த்தி அங்கே வந்தார். ''தீமிதிப்பது பெரிய வேலையா...? அதற்குப் பக்தி தேவையில்லை. நானும் தீமிதிக்கிறேன் பாருங்கள். மழைபெய்யாவிட்டால் விஞ்ஞான முறையில் செயற்பட வேண்டுமே தவிர, கோயிலில் பூசை வைக்கக் கூடாது. நான் கமத்தொழிற் திணைக்களத்துக்கு எழுதியுள்ளேன். அவர்கள் வந்து செயற்கை மழை பெய்விப்பார்கள்'' என்று கூறியவாறு தீயில் இறங்கினார். மறுகணம் வேதனையால் ''ஐயோ அம்மா'' என அலறியபடி தீயை விட்டு வெளியே ஓடிவந்தார். மக்கள் அவரை தீமிதிக்கும்படி வற்புறுத்தி அவர் தீயில் இருந்து வெளியேறாதவாறு தடுத்தனர்.

கேசவமூர்த்தி அழுது குழறினார். அவரது காற்பாதத்தில் உள்ள தோல் பொங்கியது. ஸ்ரீனிவாசன் சுவாமிகள் தீக்குள் போய் நின்றார். வெகுநேரம் வரை நின்றார். அவர் அலறவில்லை. கேசவமூர்த்தி வியப்புடன் அவரைப் பார்த்துக்கொண்டு நின்றார். சிறிது நேரத்தில் வேதனையால் பலமாகக் குழறிய கேசவமூர்த்தியை தணிகாசலமும், வேலாயுதபிள்ளையும் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

15. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே

எடுப்பதூஉம் எல்லாம் மழை

பெய்யாமல் வாழ்வைக் கெடுப்பதும், கெடுத்தவர்களின் வாழ்வை பெய்து சிறப்பிப்பதும் மழையாகும்.

காண்பதரிது

அன்று விநாயகர் சதுர்த்தி. இரவு எட்டு மணியாகியும் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்திற்கு மக்கள் அதிகம் வரவில்லை. முன்னைய ஆண்டுகளில் விநாயகர் சதுர்த்தியன்று பகல் முழுவதும் பொங்கல் பூசைகள் நடைபெறும். இரவு மஹா கணபதிக்கு பெருந்தொகையான பக்தர்கள் பால், இளநீர் கொண்டுவந்து கொடுப்பதால் அபிடேகம் முடிய பலமணிநேரம் செல்லும். பூக்களும், அறுகம்புல்லும் மலைபோலக் குவிந்திருக்கும். இராஜசங்கரக் குருக்களும் அவரது உதவியாளர்களும் சுவாமியை அலங்கரிப்பதற்காக பல்வேறு விதமான வர்ணப் பூக்களை மட்டும் தெரிந்தெடுத்து மாலை கட்டுவார்கள். பக்தர்களால் பூச்சரங்கள் கட்டிக் கொண்டுவரப்படும். அச்சரங்களால் வெளிமண்டபத்தை அலங்காரம் செய்வார்கள். அன்று முழுவதும் அன்னதான மடத்தில் அன்னதானம் நடைபெற்றுக்கொண்டிருக்கும். நாவலடிக் கிராமத்தைச் சேர்ந்த மக்களும், ஒன்று சேர்ந்து அன்னதானம் செய்வார்கள்.

இம்முறை மழை பெய்யாததால் கிராமத்தில் கடும் பஞ்சம் நிலவியது. ஆவணி மாதத்தில் வரும் விநாயக சதுர்த்தியை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடும் மக்கள் அன்று காலை முதல் ஆலயப் பக்கமே வரவில்லை. தனபாலசிங்கமும், வேலாயுதபிள்ளையும் வழமைபோல் பொங்கினர். இரண்டு வருடங்களுக்கு முன்பு பத்துப் பதினைந்து ரூபாவுக்கு விற்பனையான வாழைக்குலை ஒன்று இந்த வருடம் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு விலைப்பட்டது. அதுகும் சந்தையில். வேலாயுதபிள்ளை இரண்டு சீப்பு வாழைப்பழம் சந்தையில் வாங்கி வந்திருந்தார்.

சத்தியநாதன் அவ்வருட அன்னதான நிகழ்வைப் பொறுப்பேற்றிருந்தான். அவன் பத்து மூடை அரிசியும், காய்கறி வகைகளையும் கொண்டுவந்து மடத்தில் கொடுத்திருந்தான். பகல் அன்னதான நிகழ்வு முடிவடைந்ததும் இரவுப்பூசை ஆரம்பமானது.

இரவுப்பூசைக்கு பூ, இளநீர், அறுகம்புல் என்பன வரவில்லை. குருக்கள் வந்து தணிகாசலத்திடம் சொன்னார், ‘‘மற்றைய வருடங்களில் அறுகும், பூவும், இளநீரும், கரும்பும் மலைபோலக் குவிந்திருக்கும். இம்முறை ஒருபிடி அறுகுகூட வரவில்லை.’’

‘‘என்ன செய்வது குருக்கள். ஒருமாசம் இரண்டு மாசமே மழை பெய்யேல்லை, பதினெட்டு மாதம் முடிஞ்சுது. ஒரு காலத்திலை தோட்ட வாய்க்காலிலை வளர்ந்த அறுகம்புல்லை அழிக்க முடியாமல் விவசாயிகள் திண்டாடினவை. இப்ப ஒருபிடி அறுகு பிடுங்கேலாமற்

கிடக்கு. இரண்டு வரிசத்துக்கு முன்னம் பிடித்து வைத்த பிள்ளையாரை பாதுகாத்து வைத்துத்தான் கும்பம் வைக்கிறம். மழை பெய்யாட்டில் புல்லின்ரை நுனியைக் காணேலாது குருக்கள். எதுக்கும் அரசடிக்கிராமப் பக்கம் போய்ப் பார்ப்பம்....'' என்று தணிகாசலம் புறப்பட வேலாயுதபிள்ளையும் அவருடன் சேர்ந்து புறப்பட்டார்.

தோட்டவெளிக்கு அவர்கள் வந்தபோது காற்றுப் பலமாக அடித்தது. அதனால் வெளியெங்கும் தூசி பறந்தது. சில கணங்கள் எதிரே இருப்பன ஒன்றும் தெரியவில்லை.

''ஆடு, மாடுகளின்ரை தீவனப் பிரச்சினை பெரிய பிரச்சினையாய்க் கிடக்கு. சனம் எல்லாம் கால்நடைகளைக் கொண்டுபோய் வன்னீலை விட்டுவிட்டு வரூதுகள். நான் விநாயகர் சதுர்த்திக்காக நின்றனான். விடிய வன்னிக்குப் போறன்'' என்றார் தணிகாசலம்.

தோட்டவெளி எங்கும் இருவரும் அறுகம்புல்லைத் தேடினர். ஒரு புல்லின் பசியதழை கூட அந்தப் பிராந்தியத்தில் தென்படவில்லை. அரசடிக் கிராமத்தில் உள்ள ஒரு குளத்தின் நடுவே வளர்ந்திருந்த வில்வை மரத்தின் காய்ந்த நிலையில் இருந்த சில இலைகளைப் பறித்துக்கொண்டு அவர்கள் திரும்பி வந்தனர்.

கோயிலில் பத்துப்பேர் வரை நின்றனர். அப்பொழுது மணிவண்ணன் கொழும்பில் இருந்து ஒரு கூடை பூவுடன் வந்தான். அவன் வந்த வாகனத்தில் பத்துப் பதினைந்து இளநீர்க் குலைகளும், கரும்பும், அறுகம் புல்லும், பாலும், தயிரும் இருந்தன.

''பிள்ளையார் ஒருபோதும் குறைவிடமாட்டார். எனக்குத் தெரிந்தவரை விநாயகர் சதுர்த்தி வெகு விமர்சையாகத்தான் கொண்டாடப்பட்டது. இம்முறைதான் மழை இல்லாததால் பூசைப் பொருட்கள் எவையும் வரவில்லை எனக் கவலைப்பட்டேன். ஆனால் கடைசி நேரத்தில் எல்லாம் வந்துவிட்டன'' என்றார் தணிகாசலம்.

வேலாயுதபிள்ளையும் தணிகாசலமும் வண்டியில் இருந்த பொருட்களை இறக்கினர். குருக்கள் இரவு பூசைக்கான ஆயத்தங்களைச் செய்தார். காண்டாமணி முழங்கத் தொடங்கியது.

16. விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே

பசும்புல் தலைகாண்பு அரிது.

மழைத்துளியாவது வானத்தில் இருந்து விழாதுவிடுமாயின் மண்ணில் பசிய புல்லின் நுனியைக் கூடக் காண முடியாது.

பாத்திரமறிந்து

குருநாத முதலியார் சேனையூரில் வாழ்ந்து வரும் பெரியார். அவரிடம் ஏராளமான நிலபுலங்கள் இருந்தன. அவற்றில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் தனது குடும்பச் செலவு போக மிகுதியைத் தான தர்மம் செய்வார். அவர் ஒரு சிறந்த அறிஞர். அவரிடம் ஏராளமான தமிழ், வடமொழி நூல்கள் இருந்தன. அவற்றை யார் வந்து கேட்டாலும் கொடுத்து விடுவார். பெரும்பாலும் அவை திரும்பி வருவது குறைவு. அவரிடம் நூல்களை வாங்கிச் செல்வோர் தாம் பயன்படுத்திவிட்டு அப்படியே வைத்துவிடுவார்கள். இல்லாவிட்டால் தேவைப்படும் யாருக்காவது கொடுத்து விடுவார்கள். இப்படியாக ஒரு புத்தகம் ஒரு சில மாதங்களுள் பல கை மாறிவிடும். அப்புத்தகத்தைப் பெறவிரும்பும் ஒருவன் பலரிடம் சென்று விசாரித்துத்தான் பெறுவான். சில புத்தகங்களை எப்படி விசாரித்தாலும் பெற்றுக்கொள்ள முடியாது.

குருநாத முதலியார் தன்னிடம் பொருள் உதவியோ, பண உதவியோ கோரி வந்த எவருக்கும் அவர்கள் கேட்பதைக் கொடுத்து விடுவார். பின் தான் கொடுத்ததைக் கேட்கமாட்டார். அவரது பலவீனத்தை அறிந்த சிலர் அடிக்கடி அவரிடம் உதவி கேட்டு வருவார்கள். குருநாத முதலியாரும் தான் கொடுத்ததைத் திருப்பித் தரவில்லையே எனக் கேட்கமாட்டார். தொடர்ந்து உதவி செய்வார்.

இதனால் குடும்பத்தில் பற்றாக்குறை நிலவும். இவ்வேளைகளில் அவரது மனைவியான இலட்சுமியம்மாள் அவருக்கு ஆலோசனை வழங்குவாள். ‘‘உங்களுக்கு நான் ஆலோசனை கூறுகிறேன் என்று நினைத்து விடாதீர்கள். எமது பொருளாதார நிலமை மோசமாக உள்ளது. எமக்குப் பிள்ளைகள் நால்வர் இருக்கின்றனர். பிற்காலத்தில் அவர்களுக்கு ஏதாவது கொடுத்தாக வேண்டும். ஏழைகளுக்கும், நோயாளர்களுக்கும் கொடுப்பதை நான் தடைசெய்யவில்லை. உங்கள் நல்ல குணத்தைப் பயன்படுத்தி சிலர் தமது பிழைப்பை நடாத்துகிறார்கள். நல்ல வசதியாக வாழ்பவர்கள் கூட உங்களிடம் வாங்கும் பொருட்களைத் திருப்பித் தருவதில்லை. தானதர்மம் ஏழைகளுக்கு மட்டும்தான் செய்தல் வேண்டும். ‘‘பாத்திரமறிந்து பிச்சையிடு’’ என்று நம்முன்னோர் சொல்லியிருக்கிறார்கள்.’’

“பலருக்கு நான் பிச்சை இடவில்லை, உதவிதான் செய்துள்ளேன். அவர்கள் பொருட்கள் உள்ள வேளை கட்டாயம் திருப்பித் தருவார்கள்” என்றார் முதலியார்.

நாட்கள் நகர்ந்தன. அம்முறை வரட்சி நிலவியதால் தானியங்களின் விளைச்சல் குறைந்தது. அத்துடன் நோய்த்தாக்கமும் அதிகமாக இருந்தது. அதனால் விதை தானியத்திற்கு தட்டுப்பாடாக இருந்தது.

பெரும் விவசாயியான குருநாத முதலியார் தான் செய்கை பண்ணிய தானியத்தின் பெரும்பகுதியை விதைதானியமாகச் சேமித்து வைத்தார்.

விளைச்சல் குறைவாக இருந்ததால் ஏழை விவசாயிகள் தமது தேவைக்காக தானியங்களை விற்றும், உணவுத் தேவைகளுக்காக எடுத்தும் விட்டனர்.

விதைப்புக்காலம் வந்தது. ஊரில் உள்ள அனைவரும் முதலியாரின் வீட்டுக்கு வந்து விதை தானியம் கேட்டனர். இல்லையென்று கூற மனம் இல்லாத முதலியார் அவர்களுக்கு விதைதானியங்களைக் கொடுத்தார்.

முதலியார் தனது பயிர் செய்யும் நிலம் முழுவதையும் பண்படுத்தி வைத்திருந்தார். ஆனால் கால்வாசி நிலத்தில் கூட அவரால் பயிர் செய்ய முடியவில்லை.

பணம் கொடுத்தவர்களும் திருப்பிக் கொடுக்காததால் அயலூர் விவசாயிகளிடமிருந்தும் அவரால் விதை தானியங்களைக் கொள்வனவு செய்ய முடியவில்லை. அதனால் அவருக்கு பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

17. நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்துஎழிலி

தான்நல்காது ஆகி விடின்.

மேகமானது கடலிடத்தே நீரினைப் பெற்று மழையாகப் பெய்யாதுவிடின் நீர் கொடுத்த பெருங்கடலும் வற்றிவிடும்.

நடவாதன

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் நவராத்திரி விழாவுக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. வழக்கமாக ஐந்நூறுக்கு மேற்பட்ட நாவலடிக் கிராம மக்களும் அரசடிக் கிராம மக்களும் சேர்ந்து ஆலயச் சூழலைத் துப்புரவு செய்வார்கள். திருவிழா தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே சிரமதானம் ஆரம்பமாகும். விழாக்காலங்களில் சிரமதானம் நடைபெற்றபோதும் தினநாட்களில் மாலை வேளையில் பலர் வந்து கோயிற் சுற்றாடலை துப்புரவு செய்வார்கள். கோயில் மடப்பள்ளிக்கு அருகே உள்ள ஓர் அறையில் சிரமதானத்துக்குரிய விளக்குமாறு, மண்வெட்டி, குப்பைவிறாண்டி, கடகம் போன்றன இருக்கும். கோயிலைக் கூட்டி துப்புரவு செய்ய விரும்புவோர் அவ்வறைக்குச் சென்று தேவையானவற்றை எடுத்து வந்து துப்புரவு செய்துவிட்டு கொண்டுசென்று வைப்பர். மஹா கணபதியின் ஆலயத்தைச் சுற்றி பெருவிருட்சமாக மரங்கள் பல நிற்பதால் பகல் வேளையில் கூட சூரியஒளி நிலத்தில் விழாது. அவ்விருட்சங்களில் பழுக்கும் இலைகளாலும், விருட்சங்களில் தங்கும் பறவைகளின் எச்சங்களாலும் நிறைந்திருக்கும் ஆலயச் சூழலை தினமும் மக்கள் துப்புரவு செய்வார்கள்.

இரண்டு வருடகாலமாக மழை பெய்யாததால் கோயில் சூழலில் நின்ற பெரும்பான்மையான மரங்கள் பட்டுவிட்டன. பெருவிருட்சங்கள் இலையை உதிர்த்துவிட்டு மொட்டையாக நின்றன. கோயிலைத் துப்புரவு செய்ய வருவோர் தொகை மிகவும் குறைவாகவே இருந்தது. கோயிற் கிணறுகள் வற்றியமையால் கர்ப்பக்கிரகத்தையும் மண்டபங்களையும் கழுவுவதற்கு போதிய நீர் கிடைக்கவில்லை.

தணிகாசலமும், வேலாயுதபிள்ளையும், தனபாலசிங்கமும் கோயிலைக் கூட்டித் துப்புரவு செய்துகொண்டிருந்தனர். திருவிழாக் காலங்களில் கணபதி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர்களும், மாணவர்களும் கோயிலைத் துப்புரவு செய்வது வழக்கம். திருவிழா தொடங்குவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு பாடசாலை மாணவர்கள் வருவார்கள். ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் வந்து ஒருமணிநேரத்துக்குள் கோயிற் பிரதேசம் முழுவதும் துப்புரவாகிவிடும். நவராத்திரி தொடங்க இன்னும் இரண்டு தினங்கள் இருந்தன. சிரமதான வேலைகளில் ஈடுபடுவோர்க்கு அன்னதான மடத்தில் தேனீர் கொடுப்பார்கள். இந்த முறை நீர் இல்லாமையால் தேனீர் தயாரிக்க முடியவில்லை.

குருக்கள் வெளி மண்டபத்துக்கு வந்து தணிகாசலத்தை அழைத்தார். “தணிகாசலம் இந்தமுறை கொடியேறி திருவிழாக்கள் ஒழுங்காக நடைபெறவில்லை. மக்கள் தான் வருகை தந்தது குறைவு என்று பார்த்தால் நைவேத்தியச் சாமான்கள் ஒன்றுகூட வரவில்லை. அறுகம்புல், பால், தயிர், பழவகைகள், பூக்கள் ஒன்றும் இல்லை. திருவிழாவுக்குப் பஞ்ச வில்வங்களால் தான் பூசை செய்தது. திருவிழாவின் போது ஒருபிடி அறுகுகூட எடுக்க முடியவில்லை.

திருவிழாவின் பின்பும் மழை பெய்யவில்லை. அதனால் தினப் பூசைக்கு பூவெடுப்பதே கஷ்டமாக உள்ளது. அதைவிட நவராத்திரிப் பூசையைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. அரிசி, பயறு, உழுந்து, தேங்காய் ஒன்றுமில்லை. பூக்கள் எடுக்க முடியாமல் இருக்கு, எப்படிப் பூசை செய்வது...?''

''நாங்கள் என்ன குருக்கள் செய்யிறது. பஞ்ச வில்வங்கள் எடுப்பது கூடக் கஷ்டமாகத்தான் இருக்கு. வழமையாய் நவராத்திரிக் காலத்தில் அரசடி அம்மன் கோயிலுக்கு வேட்டைத் திருவிழாவுக்கு மஹா கணபதி போகேக்கை நாவலடி வெள்ள வாய்க்காலுக்கை முழங்காலளவு தண்ணீர் நிற்கும். இப்ப இரண்டு வரிசமாய் தண்ணீர் இல்லாமல் இருக்கு'' என்றார் வேலாயுதபிள்ளை.

''நான் மனைவியையும், பிள்ளைகளையும் கொண்டுபோய் தகப்பனாருடைய வீட்டிலை விட்டுட்டு வரப்போறன். எனக்கு வருமானமில்லை. மாமனார் கொழும்பில் பெரிய கோயிலில் பூசை செய்கிறார். மழை வந்தாப் பிறகு அவர்களைக் கூட்டிவருவம்...'' என்றார் குருக்கள்.

தணிகாசலம் எதுகும் பேசவில்லை. வரட்சியால் மக்கள் இடம்பெயர்ந்து செல்லும்போது குருக்களை எப்படி மறிப்பது என்று நினைத்தார்.

''ஏதோ மஹா கணபதி வழிவிடுவார். நீங்கள் உங்கடை விருப்பப்படி செய்யுங்கோ. நீங்கள் வரும்வரை பூசைக்கு யாரையாவது ஒழுங்கு செய்யுங்கோ'' என்றார் தனபாலசிங்கம்.

''எனக்கு மஹா கணபதி மேலை வெறுப்பெண்டு நினைக்காதைங்கோ. எங்கடை பரம்பரை பூசை செய்த கோயில். மழையில்லாதத்தாலை வருமானம் குறைவு. அதோடை யாராவது தானியங்களைத் தந்தால் தானே நான் செய்து படைக்கலாம். வேலையும் இல்லை. பூசையும் இல்லை. அதாலை தான் சொல்லுறன்'' என்றார் குருக்கள்.

''உங்கடை நிலமை எங்களுக்குப் புரியது. நீங்கள் சந்தோசமாகப் போட்டு வாங்கோ'' என்றார் தணிகாசலம்.

18. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்

வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

வானமானது மழை பெய்யாமல் போகுமானால் இவ்வுலகில் வானோர்க்காக நடைபெறும் திருவிழாக்களும், தினப் பூசைகளும் நடைபெறாது.

தங்காதவை

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய வசந்த மண்டபத்துக்கு அருகே நின்ற பெரியதொரு வேப்பமரம் வெயிற்கொடுமையால் பட்டுவிட்டது. அதை வெட்டி பலகையாக அறுத்துவைக்க தணிகாசலம் விரும்பினார். தனது விருப்பத்தை அவர் பலருக்குச் சொல்லியும் யாரும் அதைக் காதில் விழுத்தவில்லை. அதனால் அந்த விஷயத்தை விக்னேஸ்வரமூர்த்திக்குச் சொன்னார்.

‘‘தணிகாசலம் இவ்வூர் மக்களில் அதிகமானோர் விவசாயிகள். கடந்த இரண்டு வருடங்களாக மழை இல்லாததால் பெருங் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கை இல்லாமற் போய்விட்டது. தானம் செய்வோரின் தொகை மிகக் குறைந்துவிட்டது. மற்றைய வருடங்களில் வருடாந்தத் திருவிழாவுக்கும், விநாயக சதுர்த்திக்கும், நவராத்திரிக்கும் மஹா கணபதிக்கு படைக்கும் உணவுகள் எவ்வளவு. மக்களுக்கு கொடுத்த பின்பு எஞ்சியிருப்பது எவ்வளவு. இந்த வருடம் மழையில்லாததால் மஹா கணபதிக்கு படைப்பதற்கே தானியங்கள் இல்லை. இந்த நிலையில் வேம்பை பலகையாக அறுக்க யாரிடம் காசு உள்ளது? ஒவ்வொருவரும் இரந்துகொண்டு திரிகிறார்கள். காலையில் கடன் கேட்டு வீட்டுக்கு எத்தனை பேர் வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் என்னால் கொடுக்க முடியவில்லை. அது எனக்கு வேதனையாக உள்ளது.’’

‘‘அந்த வேப்பமரம் அநியாயமாய்ப் போய்விடும் என்று கவலையாக இருக்கு’’ என்றார் தணிகாசலம்.

‘‘தறுமூன்ரை மகன் சரியான கெட்டிக்காரன். வாற சித்திரைக்கு உயர்தரப் பரீட்சை எடுக்கிறான். கட்டாயம் பல்கலைக்கழகத்திற்குப் போவான். அவனைப் பள்ளிக்கூடத்தாலை மறித்து கொழும்பிலை கடையிலை விட்டிருக்கினை.’’ நான் கேட்டதற்கு தறுமு சொல்லுது ‘‘வாத்தியார் சுவர் இருந்தால் தானே சித்திரம் வரையலாம். சாப்பாடில்லாமல் மகன் சாகிறத்தை விட படிப்பை விட்டுட்டு உயிரைக் காப்பாற்றுறது மேலானது என்கிறான். நான் எதுகும் சொல்லவில்லை’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

தணிகாசலம் அதன் பின் எதுகும் பேசவில்லை. அன்று இரவு வீசிய புயற்காற்றினால் பட்ட அவ்வேப்பமரம் வசந்த மண்டபத்தின் மேல் முறிந்து விழுந்துவிட்டது. வசந்த மண்டபத்திற்கு பெரும் சேதம் ஏற்பட்ட போதும் யாரும் கோயிற்பக்கம் வரவில்லை. தணிகாசலமும், தனபாலசிங்கமும் வேலாயுதபிள்ளையும் முறிந்த மரத்தை வெட்டி கோயிலைத் துப்பரவு செய்தனர்.

கோயிற் குருக்கள் தனது மனைவியையும், பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு கொழும்புக்குச் சென்றுவிட்டார். அவர் ஒழுங்குசெய்த குருக்கள் ஒருவர் மாலைநேரம் வந்து பூசை செய்தார். ஆறுகாலப் பூசை நடைபெற்ற அக்கோயிலில் ஒருவேளையே பூசை நடைபெற்றது.

மஹா கணபதி ஆலய அரசின் கீழ் எவ்வேளையிலும் இருக்கும் ஸ்ரீனிவாச சுவாமிகளை நாலைந்து நாட்களாகக் காணவில்லை. மக்கள் பலவாறு கதைத்தனர். வேலாயுதபிள்ளையும் தணிகாசலமும் அயல் ஊர்களுக்குச் சென்று அவரைத் தேடிப் பார்த்தனர். அவரைக் காணவில்லை. சுவாமிகளைக் காணாதது தணிகாசலத்திற்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது.

அன்று தணிகாசலத்தின் மனைவியின் தந்தையார் காலமானார். பூ , தானியங்கள், தேங்காய், பழம், பாக்கு முதலியன இல்லாமலே அபரக் கிரிகைகள் நடைபெற்றன. மறுநாள் சுடலையை ஆற்றுவதற்காக செய்யப்படும் கிரிகைகளுக்குத் தேவையான பால், பழங்கள், நவதானியங்கள் இன்மையால் அக்கிரிகைகள் செய்யப்படவில்லை. அக்கிராமத்தில் மரணவீடு நடைபெற்றால் ஒருமாத காலத்திற்கு அயலவர்கள், நண்பர்கள், உறவினர்கள் அவ்வீட்டுக்கு உணவு கொண்டுசென்று கொடுப்பதால் அயல் வீட்டாரும், உறவினர்களும் ஒருமாத காலத்திற்கு அங்கேயே சாப்பிடுவார்கள். ஆனால் அன்று தணிகாசலத்தின் வீட்டுக்கு யாரும் உணவு கொண்டுசென்று கொடுக்காமையால் அவர்களே சமைத்து உண்டனர்.

மஹா கணபதி ஆலயக் குருக்கள் குறித்த தவணையில் வராமையால் பூசை செய்ய வந்த குருக்கள் பூசைக்கு வராது நின்றுவிட்டார். அதனால் பல நாட்களாக மஹா கணபதி ஆலயம் பூசையின்றி மூடி இருக்கிறது. “குருக்கள் வந்ததும் பிராயச்சித்த அபிஷேகம் செய்துவிட்டு பூசையை ஆரம்பிக்க வேண்டும்” என்று நினைத்தார் தணிகாசலம்.

19. தானம் தவம்இரண்டும் தங்கா வியனுலகம்

வானம் வழங்காது எனின்.

வானம் மழையை வழங்காது விடுமேயானால் பூவுலகில் தானம் வழங்கலும் தவம் செய்தலும் இல்லாது ஒழிந்துவிடும்.

ஒழுக்கம்

நாவலடிக் கிராமத்தில் பெரும் பணக்காரன் கணேசமூர்த்தி. அவனிடம் பெருந்தொகையான தோட்டநிலம் இருந்தது. இருநூறு ஏக்கர் வயல்நிலம் இருந்தது. குடியிருப்புக் காணிகள் நாவலடி, அரசடி, பருத்திமலை போன்ற கிராமங்களில் ஏராளமாக இருந்தன. தென்னந்தோப்பு, பனந்தோப்பு, வாழைத்தோப்புகள் பல ஊர்களிலும் இருந்தன. அவனது மூதாதையர் தேடிவைத்த சொத்துக்களை கணேசமூர்த்தி குடித்தும், விபச்சாரங்களில் ஈடுபட்டும் அழித்துக்கொண்டிருந்தான்.

கணேசமூர்த்தியை யாரும் மதிப்பது கிடையாது. அவன் இளைஞனாக இருந்த காலத்திலேயே பல பெண்களுடன் தொடர்புள்ளவன். அதனால் ஒழுக்கமாக வாழ்கின்ற குடும்பஸ்தர்கள் அவனை அண்டுவதில்லை, நல்ல கெட்ட விஷயங்களுக்குச் சொல்வதில்லை. பெரும் பணக்காரனான அவனின் நடத்தை சரியில்லாததால் ஊரில் எவரும் அவனுக்கு பெண் கொடுக்க முன்வரவில்லை. அதனால் வெகுதூரத்தில் உள்ள கிராமத்தில் மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணையே அவன் திருமணம் செய்தான். இருந்தபோதும் அவன் மனைவியுடன் ஒற்றுமையாக வாழ்ந்த நாட்கள் மிகவும் குறைவு. அரைவாசி நாட்கள் அவள் கணேசமூர்த்தியுடன் பிரச்சினைப்பட்டுக்கொண்டு தனது பிறந்த வீட்டுக்குச் சென்றுவிடுவாள்.

கணேசமூர்த்திக்கு பின்னால் ஒரு கும்பல் உலாவித்திரியும். அவனோடு சேர்ந்து குடிப்பதும் அடாவடித்தனங்களில் ஈடுபடுவதும் அக்கும்பலின் தொழில். இரண்டு வருடகாலமாக மழைபெய்யாததால் முன்பு நேர்மையாக வாழ்ந்து வந்த பலர் பொழுதுபோகாமையாலும், வருமானத்திற்காகவும் கணேசமூர்த்தியுடன் சேர்ந்து திரியும் கும்பலில் சேர்ந்துகொண்டனர்.

சிவபூரணனும், மனைவி தாரணியும் மஹா கணபதியே தஞ்சமென நினைத்து நேர்மையாக வாழ்பவர்கள். சிவபூரணன் தோட்டம் செய்து வந்தான். அவனது தோட்ட வருமானம் அவர்களது குடும்பத்தேவைக்கு மேலாக இருந்தமையால் அவர்கள் பிறர் தயவின்றி தானதர்மங்கள் செய்து வாழ்ந்து வந்தனர்.

கணேசமூர்த்திக்கு தாரணி மீது ஒரு கண் இருந்தது. தாரணி நல்ல அழகி. காண்பவர்களை காந்தம் போல் அவளின் அழகும், அங்கங்களின் பொலிவும் சுண்டி இழுக்கும் தன்மை வாய்ந்தன. சிவபூரணன் அவளை விரும்பித் திருமணம் செய்தமையால் அவளின் அழகை ஆராதித்தான். எவ்வேளையிலும் அவள் அழகாக இருக்கவேண்டுமென்று நினைப்பான். அவர்களது வீடு கணேசமூர்த்தியின் வீட்டுக்கு அருகில் இருந்தது. தாரணியைக் காணும் வேளையில் கணேசமூர்த்தி போதை மிகுதியால் பிதற்றுவான். அவளோடு தொடர்புகொள்ள முயற்சிப்பான். பண உதவிகள் செய்ய முன்வருவான். எனினும் தாரணி அவனை மதிப்பதில்லை. இது கணேசமூர்த்திக்கு வேதனையைக் கொடுத்தது. காலம் கனியுமெனக் காத்திருந்தான்.

இரண்டு வருடகாலமாக மழை பெய்யாததால் சிவபூரணன் விவசாயத்தைக் கைவிட்டான். அவன் வளர்த்து வந்த ஆடு, மாடு, கோழிகள் யாவும் இறந்துவிட்டமையால் அவனும், தாரணியும், பிள்ளைகளும் வறுமையால் வாடினர். சிவபூரணன் தொழில் நிமிர்த்தம் பட்டணத்திற்குத் தினமும் செல்வான்.

அன்று கணேசமூர்த்தி தாரணியின் வீட்டுக்குச் சென்றான். ஒருநாளும் இல்லாதவாறு தாரணி அவனை இன்முகத்துடன் வரவேற்றாள்.

“வாருங்கோ.... இருங்கோ....” கணேசமூர்த்திக்கு அவளின் வரவேற்பு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவளது கவர்ச்சியான சிரிப்பு அவனது உணர்வுகளைத் தட்டி எழுப்பியது. மெதுவாக அவளுக்குக் கிட்டச் சென்றான். அவள் எதுகும் சொல்லவில்லை. அதன்பின் கணேசமூர்த்தி அடிக்கடி சிவபூரணனின் வீட்டுக்குச் சென்றுவந்தான்.

குறிப்பிட்ட தினத்தில் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்ற நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய பிரதமகுரு இராஜசங்கரக் குருக்கள் ஒருமாதம் கழித்து கோயிலுக்கு வந்தார். மஹா கணபதிக்கு ஒரு மாதகாலம் பூசை நடைபெறவில்லை என்பதை அறிந்து கவலைப்பட்டார். பிராயச்சித்த அபிடேகம் செய்வதற்கு ஆயத்தம் செய்தார். கோயில் கழுவுவதற்கு போதியளவு நீர் கிடைக்கவில்லை. மக்கள் ஆசாரசீலராக வருவதற்கும் போதிய நீர் கிடைக்கவில்லை. அதனால் சாஸ்திர ரீதியாக கிரிகைகள் செய்யமுடியவில்லை.

பூசைக்குத் தேவையான பொருட்கள் மிகவும் குறைவாகவே இருந்தன. அயல் ஊர்களில் இருந்து விசேடமாக அழைக்கப்பட்ட பிராமணர்களுக்கு போதியளவு நீர் கிடைக்காமையால் அவர்களால் கிரிகைகளை ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. பக்தர்கள் இருந்த சிறிதளவு நீரில் கால்களை மட்டும் கழுவிவிட்டு உள்ளே சென்றனர். பிந்திவந்த அடியார்களுக்கு கால்கழுவக் கூட நீர் கிடைக்கவில்லை.

பல நாட்களாக காணாமல் போயிருந்த ஸ்ரீனிவாச சுவாமிகள் பிராயச்சித்தப் பூசைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது திடீரென்று கோயிலுக்கு வந்தார். அவரைக் கண்டதும் மக்கள் பரபரப்புடன் அவரைச் சூழ்ந்து நின்றனர்.

ஸ்ரீனிவாசன் சுவாமிகள் மக்களின் முகத்தைப் பார்த்தார். எல்லோருடைய முகங்களையும் சோகம் கௌவியிருந்தது. "பயப்படாதீர்கள், இன்று இரவு பெருமழை பெய்யும். அதன் பின்பு உங்கள் வாழ்வு மலரும்..."

மக்கள் உணர்ச்சிபூர்வமாக "அரோகரா" என்றார்கள். சுவாமிகள் தான் வழமையாக இருக்கும் அரச மரத்தின் கீழ் சென்று அமர்ந்தார்.

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய பூசை முடிவடைந்தது. மக்கள் தமது வீடுகளுக்குச் செல்ல ஆயத்தமானார்கள். அப்பொழுது வானத்தில் இருந்து மழைத்துளிகள் சிதற ஆரம்பித்தன. அன்று இரவு பெருமழை பெய்தது.

20. நீர்நின்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்

வான் இன்றுஅமையாது ஒழுக்கு.

நீர் இல்லாவிட்டால் உலகம் வாழாது. அத்துடன் மழை இல்லாவிட்டால் உலகில் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.

நூலின் முடிவு

இரண்டு வருட வரட்சியின் பின் பெருமழை மூன்று நாட்களாகத் தொடர்ந்து பெய்ததால் அரசடிக் கிராமக் குளங்கள் யாவும் நிரம்பி வழிந்தன. கிணறுகள் யாவற்றிலும் தண்ணீர் நிரம்பி நின்றது. மக்கள் பெருமகிழ்வுடன் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய மண்டபத்தில் கூடி நின்றனர். இராஜசங்கரக் குருக்கள் மஹா கணபதிக்கு பூசை செய்தார். அரச மரத்தின் கீழ் அமர்ந்திருந்த ஸ்ரீனிவாசனைச் சுற்றி மக்கள் நின்றனர்.

ஸ்ரீனிவாசன் ஆசிரியராகக் கடமையாற்றுங் காலத்தில் ஒழுக்கமுடையவராக அறவாழ்வு வாழ்ந்தார். பின் அதினின்று விடுபட்டு துறவியானார். அவரின் பெருமைகளை எழுதி நூலாக வெளியிட வேண்டுமென வேலாயுதபிள்ளை விரும்பினார். அது விடயமாக அவர்

விக்னேஸ்வரமூர்த்தியின் உதவியை நாடினார். விக்னேஸ்வரமூர்த்திக்கும் ஏற்கனவே அந்த எண்ணம் மனதில் இருந்தது.

கணபதி மத்திய மஹா வித்தியாலயத்தில் அவர் ஆசிரியராகப் பணிபுரியும் காலத்தில் அவர் தான் சம்பளமாகப் பெற்ற பணத்தின் பெரும்பகுதியை மாணவர்களின் நலனுக்காகவே செலவுசெய்தார். நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதியின் மேல் அளவு கடந்த பற்றும், பாசமும் வைத்திருந்த அவர் அத்திருத்தலத்திற்குச் செய்த தொண்டுகள் ஏராளம். அதன்பின் துறவியாகி நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தின் அரசமர நிழலில் இருந்து ஆற்றிய சொற்பொழிவுகளையும், நற்சிந்தனைகளையும் தனபாலசிங்கமும், வேலாயுதபிள்ளையும், ரவீந்திரனும், தணிகாசலமும் குறித்து வைத்திருந்தனர். அவற்றைத் தொகுத்து நூலாக வெளியிட்டால் எதிர்காலச் சந்ததியினர் பயனடைவார்களென விக்னேஸ்வரமூர்த்தி நினைத்தார்.

ஸ்ரீனிவாச சுவாமிகள் நூல் வெளியீட்டுச்சபை ஒன்று வேலாயுதபிள்ளையின் அயராத முயற்சியால் உருவாக்கப்பட்டது. அதன் தலைவராக விக்னேஸ்வரமூர்த்தியும், செயலாளராக வேலாயுதபிள்ளையும், பொருளாளராக ரவீந்திரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ரவீந்திரன் ஸ்ரீனிவாசக சுவாமிகளின் பிறப்புத் தொடக்கம் இன்று வரையான தகவல்களைத் திரட்டினான். ரவீந்திரனைத் தலைவராகக் கொண்ட கணபதி மத்திய மஹா வித்தியாலய ஆசிரியர் குழுவொன்று ஸ்ரீனிவாச சுவாமிகளின் வரலாற்றை ஆய்வுசெய்து எழுதத் தொடங்கியது.

விக்னேஸ்வரமூர்த்தி கணபதி மத்திய மஹா வித்தியாலய வருடாந்த மலரில் ஸ்ரீனிவாச சுவாமிகளின் பெருமையைப் பற்றி பெரியதொரு கட்டுரை எழுதியிருந்தார். நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி சனசமூக நிலையத்தினர் ஸ்ரீனிவாச சுவாமிகளின் சிந்தனையில் உருவான பொன்மொழிகளை அச்சிட்டு கிராமத்தில் உள்ள அனைவருக்கும் விநியோகித்தனர்.

ரவீந்திரன் எழுதிய ‘‘ஸ்ரீனிவாச சுவாமிகளின் சரித்திரமும் சிந்தனைகளும்’’ என்ற கையெழுத்துப் பிரதியை ஆய்வுசெய்த மலர்க்குழு அதை அச்சேற்றலாம் எனச் சிபார்சு செய்தது. வேலாயுதபிள்ளை பட்டணத்திற்குச் சென்று பெரியவர்களிடம் நிதியுதவி கோரினார். பட்டணத்தில் உள்ள நூல் வெளியிடும் நிறுவனமான கலையரசி பதிப்பகத்தினர் சுவாமிகளைப்பற்றி எழுதிய நூலை வெளியிடச் சம்மதித்தனர்.

ஆவணிமாத விநாயக சதுர்த்தி தினத்தன்று சுவாமிகளைப் பற்றிய நூல் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய மண்டபத்தில் வெளியிடப்பட்டது. அதன் ஆய்வுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சிவலிங்கராசா அவர்கள் நிகழ்த்தினார். 'உலகியலில் சிறப்பானதென பெரியவர்களால் வகுக்கப்பட்ட ஒழுக்க நெறிகளில் நின்று ஒழுகிய பின், அவற்றில் இருந்து விடுபட்டு துறவிகளானோரின் சிறப்புக்களையும், ஒழுக்கநெறிகளையும், அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய அரிய சிந்தனைகளையும் போற்றுவதே சிறந்த நூல்களின் இயல்பாகும். நாவலடி வாழ் மக்களால் வெளியிடப்பட்ட "ஸ்ரீனிவாச சுவாமிகளின் சரித்திரமும் சிந்தனைகளும்" என்ற நூல் துணிவுடன் சுவாமிகளின் சிந்தனைகளை எடுத்துரைக்கிறது. சுவாமிகள் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றை மிகவும் எளிமைப்படுத்தி சாதாரண மக்களும் புரிந்து அதன்படி நடக்கும் வண்ணம் கூறியுள்ளார். இதன் மூலம் எமது சமயத்திற்கு அவர் பெரும்பணியாற்றியுள்ளார். அவருடைய அரிய கருத்துக்களை நூலுருவாக்கிய நூல் வெளியீட்டுச் சபையினருக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும். அத்துடன் என்னை ஆய்வுரைக்கு அழைத்தமையால் சுவாமிகளுடைய அரிய பல கருத்துக்களை யான் அறிந்துகொள்ள முடிந்தது. அதற்காக நான் சம்மந்தப்பட்டவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். சுவாமிகளது அருளுரைகள் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றன. எதிர்காலத்தில் அவற்றையும் தொகுத்து வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
    வேண்டும் பனுவல் துணிவு.

ஒழுக்கநெறியில் வழுவாது வாழ்ந்து பின் துறவறம் மேற்கொண்டோரின் பெருமைகளைச் சிறப்பித்துக் கூறுவதே நூல்களின் முடிவு ஆகும்.

எண்ணிக்கை

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய மண்டபத்தில் "ஸ்ரீனிவாச சுவாமிகளின் சரித்திரமும் சிந்தனைகளும்" என்ற நூல்

வெளியீட்டு விழாவில் எனது குருவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர் கலாநிதி சிவலிங்கராஜா அவர்களது ஆய்வுரையை அடுத்து சுவாமிகளின் பெருமைகளை கணபதி மத்திய மஹா வித்தியாலய அதிபர் திரு. விக்னேஸ்வரமூர்த்தி அவர்கள் இப்பொழுது கூறுவார்கள் என்று நூல் வெளியீட்டு விழாவுக்கு தலைமை வகித்த திரு. வேலாயுதபிள்ளை அவர்கள் கூற அதிபர் விக்னேஸ்வரமூர்த்தியவர்கள் எழுந்து பேச ஆரம்பித்தார்.

“இவ் அரிய நூல் வெளியீட்டு விழாவுக்கு தலைமை தாங்கும் தலைவர் திரு. வேலாயுதபிள்ளை அவர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, என் அன்புக்குப் பாத்திரமானவர்களே; இன்றைய விழாவில் சுவாமியுடைய பெருமைகளைப்பற்றி என்னை எடுத்து இயம்புமாறு நூல் வெளியீட்டுச் சபையினர் வேண்டியுள்ளனர். சுவாமிகளுடைய அருமை, பெருமைகள் யாவற்றையும் நீங்கள் கண்டும், கேட்டும் உணர்ந்திருக்கிறீர்கள். ஆனால் அவற்றின் தன்மையை, உட்பொருளை, தத்துவத்தை யாரும் சரிவர உணர்ந்துகொள்ளவில்லை. சுவாமிகளின் பெருமைகளை அளவிட்டுக் கூறுவதாக இருந்தால் இவ் உலகிலே இன்றுவரை பிறந்து, இறந்தோரின் எண்ணிக்கையை நாம் அறிந்துகொள்ள முயல்வதற்கு ஒப்பானதாகும். எனவே அவரது சரித்திரத்தைப்பற்றி அறிந்தவற்றை நூலாக வெளியிட்டுள்ளோம். அதன்படி அதன் உட்பொருளில் சிறிதளவை இன்று உங்கள் முன் பேச நினைத்துள்ளேன்.

சுவாமிகள் ஆயிரத்து தொளாயிரத்து முப்பதாம் ஆண்டு ஆவணிமாத மூல நட்சத்திரத்தில் பிறந்தார். சுவாமிகளின் பெற்றோர்களான சுப்பிரமணியத்திற்கும், வள்ளியம்மைக்கும் திருமணம் நடைபெற்று பத்து ஆண்டுகள் கழித்தே சுவாமிகள் பிறந்தார். சுவாமியின் பெற்றோர் பிள்ளைவரம் வேண்டி நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதியை வேண்டி விரதமிருந்தனர். பத்து வருடங்களாக கடும் விரதமிருந்தும் அவர்களுக்கு புத்திரபாக்கியம் கிடைக்கவில்லை. அதனால் மனமுடைந்த சுப்பிரமணியமும், வள்ளியம்மையும் மார்கழி மாதம் பிள்ளையார் கதை நடைபெற்றபோது வீட்டைவிட்டு வந்து மஹா கணபதியின் ஆலயத்திலேயே தங்கினர். தமக்கு பிள்ளைப்பேற்றைப் பற்றிய நல்ல முடிவில்லாமல் ஆலயத்தைவிட்டு வீட்டுக்குச் செல்வதில்லையென்றும், பிள்ளையார் கதை முடிய உணவின்றி மஹா கணபதியின் ஆலயத்தில் தங்குவதென்றும் முடிவுசெய்து அதன்படியே நடந்தனர்.

பிள்ளையார் கதை முடிந்து மூன்று தினங்கள் கழிந்தன. சுப்பிரமணியமும், வள்ளியம்மையும் நீரோ, ஆகாரமோ உண்ணாது இருந்தனர். அவர்களுடன் ஊரவர்களும் இருந்தனர். ஐந்தாம் நாள் இரவு மூசிக வாகனத்தில் தோன்றிய மஹா கணபதி “வீட்டுக்குப்

போய் உனது கடமையைச் செய்'' என்று உத்தரவிட்டார். அதன்பின் வள்ளியம்மை கருவுற்று பிறந்தவர் தான் சுவாமிகள்.

அவர் தனது கல்வியை கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் பயின்றார். பின் அங்கேயே ஆசிரியராகப் பணிபுரிந்தார். அவரது காலத்தில் கணபதி மத்திய மகா வித்தியாலயம் பல வழிகளாலும் முன்னேறியது. அவர் மாணவர்களிடத்தில் பேரன்பு பூண்டமையால் திருமணம் செய்யவில்லை. பாடசாலையில் கற்கும் மாணவர்கள் அனைவரையும் தன் பிள்ளைகளாக நினைத்தார். தனது வருமானம் முழுவதையும் மாணவர்களின் நலனுக்காகவே செலவு செய்தார். அவர்மேல் பற்றுவைத்த மாணவர்களில் நானும் ஒருவன். நாம் கற்கும் போது கடவுளைப்பற்றியும், ஒழுக்க நெறிகளைப் பற்றியும் கூறுவார். இன்று பாடசாலையும், கிராமமும், மக்களும் முன்னேறக் காரணமாக இருந்தவர் சுவாமிகள்.''

''அவர் நடப்பதைச் சொல்வார். நடக்கப் போவதைச் சொல்வார். மக்கள் ஒவ்வொருவருக்கும் வரப்போகும் துன்பங்களைப் பற்றிச் சொல்வார். அவர்களின் முன்னேற்றத்தைப் பற்றிச் சொல்வார். மஹா கணபதியின் தேவைகளைப் பற்றிச் சொல்வார். இரண்டு வருடங்களுக்கு மழை பெய்யாது என்று சொன்னார். இன்று மழை பெய்யும். இனி உங்களுக்குத் துன்பமில்லை என்றார். அவரது வாக்குப் பலிக்கும், சொன்னது நடக்கும். நாம் பாடசாலையில் எக்கருமத்தைத் தொடங்குவதாக இருந்தாலும் சுவாமிகளின் ஆசியை வேண்டியபின்தான் செய்வோம். இவ்வூர் மக்கள் மட்டுமன்றி அயலூரவர்களும் சுவாமிகளின் பாதங்களைப் பணிந்து வணங்கி நற்பேறடைவதை நாம் தினமும் கண்டுகொண்டிருக்கிறோம். சுவாமிகளின் பெருமைகளைக் கூறமுடியாது. கூறுவதற்கு சொற்கள் இல்லை. அவரது பெருமைகளைக் கூறுவதாயின் இதுவரை உலகில் பிறந்து இறந்தவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுவது போன்றதாகும். ஆதலால் சுவாமிகளின் பாதங்களைப் பணிந்து எனது உரையை முடிக்கிறேன்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

22. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து

இறந்தாரை எண்ணிக்கொண்டு அற்று

துறவு பூண்டோரின் பெருமைகளை அளவிட்டுக் கூறுவதாயின், இவ்வுலகில் இன்றுவரை பிறந்து இறந்தோரின் எண்ணிக்கையை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்றதாகும்.

இருமை வகை

“ஸ்ரீனிவாச சுவாமிகளின் சரித்திரமும் சிந்தனைகளும்” என்ற நூலின் ஆசிரியர் ரவீந்திரன் அவர்கள் நூலைப்பற்றிய தகவல்களைச் சேகரிக்கும் போதும், எழுதும் போதும் உண்டான அனுபவங்களைப் பற்றி இப்போது உரையாற்றுவார் என விழாவின் தலைவர் திரு. வேலாயுதபிள்ளை அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து அதன் ஆசிரியர் திரு. ரவீந்திரன் அவர்கள் உரையாற்றினார்.

“பெருமைசால் தலைவர் அவர்களே, அதிபர் அவர்களே, விழா மேடையில் வீற்றிருக்கும் பெரியோர்களே, மற்றும் இக்கிராமத்தின் சான்றோரே, மாணவ மணிகளே சுவாமியின் பாதாரவிந்தங்களைப் பணிந்து, சுவாமிகளின் சரித்திரம் பற்றிய தேடலினையும், அதை எழுதும் போது ஏற்பட்ட இனிமையான உணர்வுகளையும் உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் பெருமகிழ்வடைகிறேன். சுவாமிகள் இருமைகளின் இயல்புகளை உணர்ந்து துறவு பூண்ட பெருமகான். இருமைகள் என்று சொல்லும்போது இன்பம் துன்பம், நன்மை தீமை, இகம் பரம், நல்வினை தீவினை, இம்மை மறுமை, உயர்வு தாழ்வு இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். சுவாமிகளின் அமுதவாக்குக்களை எடுத்து நோக்கினால் இவற்றின் தன்மை புரியும். அவரது வாழ்க்கையை எடுத்து நோக்கினால் இவற்றைப் பற்றிப் புரிந்துகொள்ளலாம்.

நானும் மலர்க்குழுவினரும் இவ்வூரில் உள்ள பெரும்பான்மையோரைப் பேட்டி கண்டோம். சுவாமிகளைப் பற்றி வெளிவந்த நூல்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாய்மொழிகளைப் பார்த்தபோதும், கேட்டபோதும் வியப்புக்கலந்த ஆச்சரியமான பல்வேறு உணர்வுகள் இதயத்தில் கிளர்ந்தெழுந்தன. சுவாமிகள் இளைஞராக இருக்கும் காலத்தில் ஓர் ஓலைக்குடிசையில் கந்தவனம் என்பவர் வாழ்ந்துவந்தார். பலவருடகாலம் மஹா கணபதியை வணங்கியமையால் அவருக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. அந்தப் பிள்ளைக்கு ஆறுமாதமாகும் போது விஷம் தீண்டி மரணமடையுமென சோதிடன் ஒருவன் கூறியிருந்தான். பிள்ளைக்கு ஆறுமாதம் நடைபெறும் போது பெற்றோர் மஹா கணபதி கோயிலையே தஞ்சமென நினைத்திருந்தனர். அன்று தொட்டிலில் குழந்தை உறங்கிக்கொண்டிருந்த வேளையில் தொட்டிலுக்குள் நாகமொன்றும் படுத்திருந்தது. எங்கிருந்தோ வந்த சுவாமிகள் வீட்டுக்குள் சென்று பாம்பைக் கையால் தூக்கிவந்து வெளியே போட்டுவிட்டுச் சொன்னார் “கந்தவனத்தின் குழந்தைக்கு பாம்பால் ஆபத்து வந்துள்ளது, போய்க் காப்பாற்று என்று கற்பித்துக்கொண்டிருந்த எனக்கு மஹா கணபதி சொன்னார்” என்று

ஸ்ரீனிவாசன் கூறினார். அந்தப் பிள்ளை வேறுயாருமல்ல, எம்மால் மதிக்கப்படுகின்ற தணிகாசலம் அவர்கள்தான்.

இதைவிட எத்தனையோ அற்புதங்களை சுவாமிஜி செய்திருக்கிறார். அத்தனையையும் இந்நூலில் எழுதியுள்ளோம். இவற்றை எழுதும்போது சிலசமயங்கள் உணர்வுகள் இல்லாமல் இருக்கும். யாரோ தூரத்தில் இருந்து சொல்வது போல் இருக்கும். கனவுபோல் இருக்கும். இந்நூலை எப்படி எழுதத் தொடங்கினோம், எப்படி முடித்தோம், எப்படி பிரசுரித்தோம் என என்னால் சொல்லமுடியவில்லை.

சுவாமிகள் இன்பத்தையும், துன்பத்தையும் ஒரே விதமாகப் பார்த்தார். அவரது முகம் எவ்வேளையிலும் மலர்ந்தே இருக்கும். விருப்பு, வெறுப்பு இல்லாமலே வாழ்ந்தார், வாழ்ந்து வருகிறார். அவர் எதையும் விரும்பி உண்டதில்லை. அதேபோல் எதையும் உண்ணாமல் கழித்து வைத்ததும் இல்லை. அவர் உணவு தேவையான போது தானே சமைத்து உண்டார். பலருக்குக் கொடுத்து உண்டார். பலர் அவருக்கு சுவையான உணவு வகைகளைக் கொண்டுவந்து கொடுத்தபோதும் அவர்களிடம் அவர் அவற்றைப்பெற்று உண்ணவில்லை. அறுசுவையான உணவுகளை பக்தர்கள் கொண்டுவந்து வைப்பார்கள். அவற்றை அடியார்களும், பறவைகளும், மிருகங்களும் உண்டன.

ஆலயத்தில் பக்தர்கள் பொங்கிப் படைத்தால் சுவாமிகள் எழுந்துசென்று யாராவது ஒருவரின் பொங்கலை எடுத்து உண்பார். அதேபோல் வருடத்தில் ஓரிருமுறை யாராவது ஒருவரின் வீட்டுக்குச் செல்வார். அவர் பெரும்பாலும் செல்வது மிகவும் தாழ்ந்தநிலையில் உள்ளவர்களிடம் தான். சுவாமிகள் உற்சவகாலத்தில் மஹா கணபதி ஆலய புணருத்தாரன வேலைகளைப்பற்றிக் கதைப்பார். பெரும்பெரும் செல்வர்கள் எல்லாம் தம்மை அழைத்துச் சொல்ல மாட்டாரா என்று ஏங்கும் வேளைகளில் சுவாமிகள் தான் விரும்பும் ஒருவனின் பெயரைச் சொல்லி அழைத்து கோயில் வேலைகளைச் சொல்வார். யாருக்காவது உதவி செய்யும்படி சொல்வார்.

“மஹா கணபதிக்கு மஞ்சம் தேவைப்படுகிறது. சுந்தரமூர்த்தி நீ மஞ்சம் செய்துகொடு” என்று ஒருமுறை சொன்னார். சுந்தரமூர்த்தி அன்றாட உணவுக்கே திண்டாடுபவன். அவன் எதுகும் பேசத் தோன்றாது நின்றான். சுவாமிகள் சிரித்துவிட்டு “ஒன்றும் யோசிக்காதை, எல்லாம் நடக்கும்” என்றார். அடுத்த வாரம் கப்பல் வாணிபம் செய்யும் ஆரூரன் கோயிலடிக்கு வந்து “மஹா கணபதி மஞ்சம் தேவையென்றும் சுந்தரமூர்த்தியிடம் காசைக் கொடு என்று சொன்னார்” என்றுகூறி அதற்கான செலவைக் கொடுத்தான்.

இப்படியான அற்புத விளையாட்டுக்களை நிகழ்த்துவதில் வல்லவர் சுவாமிகள்.

சில வருடங்களுக்கு முன்பு மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவான நகுலேஸ்வரன் மிகவும் ஏழை. சுவாமிகள் பெரும் பணக்காரரான சந்திரலிங்கத்தின் கனவில் போய் ‘‘நகுலேஸ்வரனைப் படிப்பீ, அவன் உனது மகளைத் திருமணம் செய்வான்’’ என்று கூறினார். அதன்படி சந்திரலிங்கம் நகுலேஸ்வரனைப் படிப்பித்தார். இன்று நகுலேஸ்வரன் சந்திரலிங்கத்தின் மகளைத் திருமணம்செய்து இன்பமாக வாழ்கிறான். இப்படி சுவாமிகளின் சரித்திரத்தைச் சொல்லிக்கொண்டே இருக்கலாம். பிறப்பு வீடு என்பன போல இரண்டிரண்டாக உள்ளவற்றின் வேறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அறத்தை மேற்கொண்ட சுவாமிகளின் பெருமையைப் பற்றி நாம் சொல்லிமுடிக்க முடியாது’’ என்று ரவீந்திரன் தனக்கேற்பட்ட பல்வேறு விதமான அனுபவங்களைப் பற்றிக் கூறிக்கொண்டிருந்தான்.

23. இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.

நல்வினை தீவினையின் பயன் அறிந்து துறவு பூண்டோரின் பெருமையே உலகில் உயர்ந்தது.

உளவலிமை

இரவு ஒன்பது மணிக்கு உணவை உண்டுவிட்டு ஸ்ரீனிவாச சுவாமிகளின் சரித்திரமும் சிந்தனைகளும் என்ற நூலை எடுத்து வாசிக்க ஆரம்பித்தார் வேலாயுதபிள்ளை.

‘‘மனவலிமை உள்ள ஒருவனால் எதையும் செய்யமுடியும். மனவலிமை உள்ள ஒருவனுக்கு பற்று இராது. பாசம் இராது. விருப்பு வெறுப்பு இராது. உயர்வு, தாழ்வு இராது. நல்லவை, தீயவை என்று எவற்றையும் மனவலிமை படைத்தோர் விலக்கி வைப்பதில்லை. மன உறுதி உள்ளவன் மகான் ஆவான் என்பதற்கு அறவழியில் வாழ்ந்து துறவுகொண்ட பலரை உதாரணமாகக் கூறலாம். ஸ்ரீனிவாச சுவாமிகள் மன உறுதி மிக்கவர் என்பதை நாம் அவரது வாழ்க்கையைப் பற்றி அறியச்சென்றபோது அறிந்துகொண்டோம்.

இளைஞனான ஸ்ரீனிவாசன் உடல் உறுதியுள்ள ஆண்அழகன். அவரது அமைதியான சுபாவமும், அன்பான பேச்சும், கருணையான பார்வையும் காண்பவர்களை காந்தமாக இழுக்கும். கோபம் கொள்ளாது அமைதியாகப் பேசிச் சிரிக்கும் அவரை மணாளனாகக் கொள்ளப் பல கன்னிப் பெண்கள் போட்டியிட்டனர். பல செல்வந்தர்கள் ஆள்மேல் ஆள்விட்டு தம்தம் பெண்பிள்ளைகளைத் திருமணம் செய்யும்படி கேட்டனர். பட்டணத்து வணிகனான தனசேகரன் அவரின் வீடு தேடிவந்து கோடிக்கணக்கான சொத்துக்களைக் கொடுத்து ஸ்ரீனிவாசனை மாப்பிளையாக்க விரும்பினான். ஆனால் ஸ்ரீனிவாசன் ஒத்துக்கொள்ளவில்லை.

ஸ்ரீனிவாசனின் உயிர்நண்பன் ஞானசம்பந்தன். ஞானசம்பந்தனின் வீட்டுக்கு அடிக்கடி ஸ்ரீனிவாசன் சென்றுவந்தார். ஞானசம்பந்தனின் தங்கை அமுதவல்லி ஸ்ரீனிவாசனை உயிருக்குயிராக நேசித்தாள். தன்னை ஏற்றுக்கொள்ளும்படி கெஞ்சி மன்றாடினாள். ஆனால் ஸ்ரீனிவாசன் ஒத்துக்கொள்ளவில்லை. அவள் தன்னை ஏற்றுக்கொள்ளாவிட்டால் தற்கொலை செய்யப் போவதாகச் சொன்னாள்.

‘‘பிறப்பும் இறப்பும் ஆண்டவனின் விருப்புப்படி நடைபெறுவது. நீ இறக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டால் அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. எனவே உனது விருப்பப்படி செய்’’ என்ற ஸ்ரீனிவாசன் அதன்பின் ஞானசம்பந்தனின் வீட்டுக்குச் செல்லவில்லை.

மஹா கணபதி ஆலயத்தில் உற்சவ காலங்களில் ஒலிபெருக்கியில் சினிமாப் பாடல்களை ஒலிபரப்புவார்கள். சினிமாப் பாடல்களை இசைக்கும் குழுக்களை பெரும் பணச் செலவில் அழைத்துவந்து பாடச் செய்வார்கள். இது சுவாமிகளுக்குப் பிடிப்பதில்லை. பத்து வருடங்களுக்கு முன் உற்சவம் தொடங்குவதற்கு சிலநாட்களுக்கு முன் கோயிலின் நிர்வாகசபை உறுப்பினர்களை அழைத்துச்சொன்னார்; ‘‘இறைவன் இசைப்பிரியன். இறைவனில் இருந்துதான் ஏழு சுரங்களும் உண்டாயின. நாம் கோயிலில் செய்யும் ஒவ்வொரு செயல்களும் ஆன்மாவின் விடுதலைக்காகவும், நித்திய இன்பத்திற்காகவுமே செய்யப்படல் வேண்டும். இம்முறையில் இருந்து சினிமாப் பாடல்களை ஒலிபரப்பாதீர்கள். சினிமாப் பாடலை இசைக்கும் குழுக்களையும் அழைக்காதீர்கள்’’ என்றார். அதன்பின் கோயிலில் பஞ்சபுராணங்களைத் தவிர வேறு பாடல்கள் ஒலிபரப்பப்படுவதில்லை.

சுவாமிகள் சுவையைத் தவிர்த்தார். உப்பு, புளி, இனிப்பு என்பவற்றை அவர் உண்பதில்லை. தனக்கு வேண்டிய உணவை தானே தயாரித்தார். ஒரு மண்பானை மட்டும்தான் அவரது சமையல் உபகரணம். பானைக்குள் அரிசியையும், காய்கறிகளையும் ஒன்றாகப்

போட்டு வேகவைத்துவிட்டு கோயிலுக்குச் செல்வார். பசித்த வேளை வந்து பானையை இறக்கி உணவு அவிந்தாலென்ன, அவியாவிட்டாலென்ன பானையுள் உள்ளதை எடுத்துச் சாப்பிடுவார். சுவையான உணவுகளை வழங்கப் பலர் காத்திருந்த போதும் யாரிடமும் வாங்கி உண்ணாத பழக்கம் அவரிடமிருந்தது. ஒருமுறை ஆலயக்குருக்கள் தனது வீட்டில் இருந்து உணவு கொண்டுவந்து ஸ்ரீனிவாசனுக்குக் கொடுத்தார். ‘‘ஐயா தாங்கள் தரும் உணவை உண்பதன் மூலம் எனது நா சுவையை அறிந்துகொள்ளும். பின் நித்தமும் அதே உணவைக் கேட்கும். அது எனது துறவு வாழ்வுக்கு எதிரியாகிவிடும். அதனால் தான் நான் யாரிடமும் யாசித்து உண்பதில்லை. தயவுசெய்து இவ் உணவைக் கொண்டுசென்று யாராவது ஒரு அதிதிக்குக் கொடுங்கள்’’ என்றார். அதன்பின் குருக்கள் ஸ்ரீனிவாசனுக்கு உணவு கொடுப்பதில்லை.

‘‘உள வலிமையினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கிக் காக்க வல்லவன் மேலான வீட்டிற்கு விதை போன்றவன்’’ என்பதை சுவாமிகள் வாழ்ந்த வாழ்க்கை எமக்கு எடுத்துக் கூறுகிறது. ஐம்பொறிகளும் ஆசையைத் தூண்டி அறவாழ்வு வாழ விடமாட்டாது என்பதை சுவாமிகள் நன்கு உணர்ந்திருந்தார்.’’ வேலாயுதபிள்ளை புத்தகத்தை மூடிவைத்துவிட்டு அவற்றை மனதுள் நினைத்துப்பார்த்தார்.

24. உரன்என்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான்

வரன்எனும் வைப்பிற்குஓர் வித்து.

மனவலிமையால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்குபவனே முத்திக்கு விதை போன்றவன்.

சாட்சி

சிறிது நேரம் ஸ்ரீனிவாச சுவாமிகளின் சரித்திரமும் சிந்தனைகளும் என்ற நூலை மூடிவைத்துவிட்டு தான் வாசித்த பகுதிகளை மனதுள் மீட்டுப்பார்த்த வேலாயுதபிள்ளை மீண்டும் அந்நூலை வாசிக்க ஆரம்பித்தார்.

சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் எவ்விடத்திலும் அவரது உறுதியான மனவலிமையைக் கண்டுகொள்ள முடியும். எந்த வேளையிலும் எச்சந்தர்ப்பத்திலும் சுவாமிகள்

ஐம்பொறிகளையும் தனது கட்டுக்குள் வைத்திருந்தார். கேசவமூர்த்தி கோயிலில் வந்து அட்டகாசம் செய்யும் காலத்தில் அவர் ஆத்திரப்படவில்லை, கோபப்படவில்லை. கேசவமூர்த்தியின் அட்டகாசங்கள் கோயிலில் அதிகரித்த போதும் அவர் அமைதியாக இருந்தார். கேசவமூர்த்தியின் அட்டகாசங்களைத் தாங்கமுடியாத மக்கள் பொங்கி எழுந்த வேளைகளில் அன்பான வார்த்தைகளால் மக்களை ஆசுவாசப்படுத்தினார். ‘‘என் அன்புக்குரியவர்களே, அறியாமையால் கேசவமூர்த்தி அநியாயங்களைச் செய்கிறான். அதை அவன் உணர்ந்து திருந்துதல் வேண்டும். பலாத்காரத்தால் திருத்தினால் அவன் முன்னையை விட வேகமாக செயற்படுவான். அன்பால் திருந்துபவன் தான் செய்வது தவறு என்று உணர்ந்த பின் திருந்துவான். அவசரப்பட்டால் உங்களுக்கும் கேசவமூர்த்திக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?. அமைதியாக இருங்கள். இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் அவன் மஹா கணபதியின் பக்தனாக மாறுவான்’’ என்றார். அதன்பின் மக்கள் கேசவமூர்த்தியுடன் பிரச்சினைக்குச் செல்லவில்லை.

ஒருநாள் கோயிலில் பொங்கிக்கொண்டிருக்கும் போது கேசவமூர்த்தி பொங்கல் பானையைக் காலால் உதைத்தான். வெகுண்டெழுந்த மக்கள் சுவாமிக்குத் தெரியாது அவனுக்கு அடித்துவிட்டனர். அவனுக்கு அடித்த மக்களை அழைத்த சுவாமி அவர்கள் அத்தனை பேர்களையும் மஹா கணபதியிடம் கேசவமூர்த்தியின் நலன்வேண்டி பிரார்த்தனை செய்யச்சொன்னதோடு அவன் தங்கியிருந்து சிகிச்சைபெற்ற மருத்துவமனைக்குச் சென்று சுகம் விசாரிக்கச் சொன்னார். சுவாமிகளின்பால் பேரன்பு பூண்ட அவர்கள் மருத்துவமனைக்கு அன்பளிப்புப் பொருட்களுடன் சென்றனர். அதனால் மனம் திருந்திய கேசவமூர்த்தி சுகமாகி வந்ததும் சுவாமிகளிடம் வந்து மன்னிப்புக் கேட்டான். பின் அவரது சீடரானான்.

வாய்க்கு சுவையான தின் பண்டங்கள் எவற்றையும் சுவாமிகள் உண்டதில்லை. சுவாமிகள் தானே சமைத்து உண்டார். சமைக்காத வேளைகளில் காய்கனிகளையும், இலைகுலைகளையும் பச்சையாக உண்டார். கீரைவகைகள், முசுட்டை, கொவ்வை, பொன்னாங்காணி, பிரண்டை, வல்லாரை, குறிஞ்சா போன்ற இலைவகைகளை பச்சையாக சுவாமிகள் பல நாட்கள் உண்டபோதும் அவரது முகத்தில் களை தெரியவில்லை. நாவை தனது மனவலிமையால் அடக்கிய சுவாமிகளின் முகத்தில் எந்நேரமும் ஓர் ஒளி தென்படும்.

சகலவிதமான பொருட்களும் சுவாமிக்கு கொடுக்க பலர் ஆவலாக இருந்தபோதும் சுவாமிகள் எதையும் யாரிடமும் பெறாது மனதை அடக்கி வாழ்ந்துவந்தார். ஐம்பொறிகளையும் தனது கட்டுக்குள் வைத்திருப்பவனது ஆற்றலுக்கு விண்ணவரின் தலைவரான இந்திரனே தக்க சான்றாவான். அந்த இந்திரன் தான் மக்களின்

நலன்கருதி மஹா கணபதி ஆலயத்தில் ஸ்ரீனிவாச சுவாமிகளாக வந்து அவதரித்துள்ளாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

சுவாமிகளின் பெருமைகளை அறிந்த கற்குழிக் கிராமத்தைச் சேர்ந்த பரமசிவம் என்பவர் சுவாமிகளின் உண்மைநிலையை அறிய எண்ணி அவ்வூரில் வாழ்ந்த விலைமகள் ஒருத்தியை அழைத்துக்கொண்டு சுவாமிகளிடம் வந்து தனதுமகள் என அறிமுகப்படுத்தி அவருக்கு பணிவிடை செய்யுமாறுவிட்டார்.

அவள் சேவை செய்வதைவிட அவரைத் தன்வயப்படுத்துவதிலேயே கண்ணாக இருந்தாள். கோயிலில் ஆட்களில்லாத சமயங்களில் அரைகுறை ஆடையுடன் சுவாமிகளின் முன் வலம்வருவாள். ஒருநாள் இரவு பரமசிவம் அவளை அழைத்துக்கொண்டு சுவாமிகளிடம் வந்து அவளை விட்டுவிட்டு மறைந்திருந்தார். அவள் சுவாமிகளின் பாதங்களை வருடினாள். உடலைப் பிடித்துவிட்டாள். இன்னும் எதை எதையோ செய்தாள். எத்தனையோ ஆண்களின் உடலைத் தொட்ட அவளுக்கு சுவாமிகளின் உடல் மரக்கட்டைபோல் தென்பட்டது. ‘‘குழந்தாய் உங்கள் இருவரினதும் எண்ணத்தை யாம் அறிவோம். நீ எதை நினைத்துக்கொண்டு என்னத்தைத் தொடுகிறாயோ அதன்படி நடக்கும்’’ என்றார்.

அவள் பதறிப் போனாள். சுவாமிகளை அவள் தொட்டபோது குழந்தையைத் தொடுவது போன்ற உணர்வு வந்தது. பின் தெய்வத்தைத் தொடுவதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. பின் தந்தையைத், தாயைத் தொடுவது போன்ற பிரமை ஏற்பட்டது. அவள் பயந்து போனாள். பரமசிவத்தைத் திட்டினாள். தவறை உணர்ந்த பரமசிவம் சுவாமிகளிடம் மன்னிப்புக் கேட்டான்.

வேலாயுதபிள்ளைக்கு மெய்சிலிர்த்தது. சிலகணங்கள் உணர்வற்று இருந்தார்.

25. ஐந்துஅவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்

இந்திரனே சாலும் கரி.

ஐம்பொறிகளையும் அடக்கி வாழ்பவனின் ஆற்றலுக்கு வானுலகில் வாழும் இந்திரனே தக்க சான்றாவான்.

செயல்கள்

சேனையூர் ஒரு விவசாயக் கிராமம். கிராமத்தின் மத்தியில் பாய்கின்ற அருவியாற்றை அணைகட்டி குளத்தில் பாய்ச்சி அவ்வூர் மக்கள் விவசாயம் செய்து வந்தனர். கடும்கோடை காலங்களில் அருவிநீர் முற்றாக வற்றிவிடும். அக்காலத்தில் குளத்தில் தேங்கி நிற்கும் நீரை மக்கள் விவசாயத்திற்கும், தமது அன்றாட தேவைகளுக்கும் பயன்படுத்துவர். மாரிகாலத்தில் அருவி ஆறு கரை புரண்டோடும். குளம் நிரம்பிய பின் அருவியாற்றின் பெரு வாய்க்கால் உடைப்பெடுத்தால் அருவிநீர் குடிமனைக்குள் நுழைந்துவிடும். இதனால் பள்ள நிலங்களில் இருக்கும் மக்கள் மேட்டு நிலங்களுக்கு குடியேறுவர்.

மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து மாரிகாலம் வருமுன் அருவியாற்றின் வாய்க்கால்களை உயரமாகக் கட்டுவார்கள். பல ஆண்டுகளுக்கு ஓரிரு முறைதான் அருவியாறு பொங்கி எழுந்து அணைகளை உடைத்து ஊருக்குள் நுழைந்து மக்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கும். அப்படியான வேளைகளில் யாரோ அருவியாற்றங் கரையில் இருக்கும் விநாயகருக்கு பிடிக்காத செயல்களைச் செய்துவிட்டார்கள் என்று மக்கள் பேசிக் கொள்வார்கள்.

வருடா வருடம் ஆவணிச் சதுர்த்தியன்று அருவியாற்றங்கரை விநாயகர் ஆலயத்தில் அவ்வூர் மக்களெல்லாம் நின்று கூடி பொங்கிப் படைப்பார்கள்.

மழைகாலம் தொடங்கியது. அம்முறை மழை என்றுமில்லாதவாறு பொழியத் தொடங்கியது. நாலைந்து தினங்கள் மழை ஓயாது பெய்தது. அதனால் அருவியாறு கரைபுரண்டு ஓடியது. சேனையூரின் வடக்குப் பக்கமாக உள்ள கிராமத்தவர்கள் பெருமழை தொடங்கு முன்பு சேனையூரின் தெற்குப்பக்கத்தில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு வந்துவிடுவது வழக்கம். ஆனால் அம்முறை என்றுமில்லாதவாறு மழை பெய்ததால் அம்மக்கள் பாடசாலைக்கு வர முடியாமல் போய்விட்டது. வடக்குப் பக்கத்தில் இருபத்தைந்து குடும்பங்கள் இருந்தன. அப்பகுதி மிகவும் தாழ்ந்த பிரதேசம். எப்படியும் மூன்றடி வெள்ளமாவது அங்கு தேங்கி நிற்கும்.

அம்மக்களின் உறவினர்கள் பலர் கூடி கிராமத்தலைவருடன் ஆராய்ந்தனர். உணவு, சுகாதார வசதிகள் செய்ய முடியாத இடம். அப்பகுதி மக்களை எப்படியாவது தெற்குப்பகுதிக்குக் கொண்டுவரல் வேண்டுமெனக் கேட்டனர்.

கிராமத் தலைவர் அப்பகுதி நிலைமையை விளக்கிச் சொன்னார். ‘‘அது மிகவும் தாழ்ந்த பிரதேசம். அருவியாற்றின் குறுக்குப் பகுதியைத் தாண்டித்தான் உள்ளே செல்லல் வேண்டும். ஆறு ஓடும்

தன்மையைப் பார்த்தால் ஆற்றைத் தாண்டவே முடியாது. இரண்டு தினங்கள் பொறுத்துப் பார்ப்போம்''

மழை விட்டபாடில்லை. ஊர்மக்கள் அனைவரும் கவலைப்பட்டார்களே தவிர உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

முருகானந்தன் அவ்வூரில் உள்ள துடிப்பான இளைஞன். அவன் தனது நண்பர்கள் ஐவரோடு சேனையூரின் வடபகுதிக்குச் செல்லத் தீர்மானித்தான். அதைப் பலர் எதிர்த்தனர். ஆனால் முருகானந்தன் கேட்கவில்லை.

பலமான கயிறொன்றைத் திரித்தான். அதன் ஒரு பகுதியை மரத்தில் கட்டிவிட்டு அதைப் பிடித்துக் கொண்டு முருகானந்தனும், நண்பர்களும் ஆற்றைக் கடந்தனர்.

அவர்கள் மிகவும் சிரமப்பட்டு சேனையூரின் வடபகுதிக்குச் சென்றபோது அவ்வூர் மக்கள் மரங்களில் பரண் அமைத்து இருந்தனர். முருகானந்தனும், நண்பர்களும் தாம் கொண்டுவந்த மருந்து வகைகளையும், உணவுப் பொருட்களையும் அவர்களுக்குக் கொடுத்தனர். பின் அவர்களை அழைத்துக்கொண்டு அருவியாற்றங்கரைக்கு வந்தனர். பல கஷ்டங்களுக்கு மத்தியில் அவர்களை பலகைகளால் அமைக்கப்பட்ட கட்டுமரங்களில் ஏற்றி தென்பகுதிக்குக் கொண்டு சென்றனர்.

26. செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்

செயற்கரிய செய்கலா தார்.

செய்வதற்கரிய செயல்களைச் செய்பவர்கள் பெரியவர்கள். அச்செயல்களைச் செய்யமாட்டாதவர் சிறியோர்.

ஐந்தின் வகை

சுவாமிகளின் பெருமைகளைக் கண்டும் கேட்டும் அறிந்த வேலாயுதபிள்ளைக்கு ஸ்ரீனிவாச சுவாமிகளின் சரித்திரமும் சிந்தனைகளும் என்ற நூலை வாசிக்க வாசிக்க மெய்சிலிர்த்தது. சுவைத்தல், காணுதல், உணர்தல், கேட்டல், மணத்தல் என்னும் ஐம்புலன்களின் செயற்பாடுகளை சுவாமி அவர்கள் தனது

மனவலிமையால் கட்டுக்குள் வைத்திருந்ததை வாசிக்க வாசிக்க சுவாமிகள் மீதிருந்த பக்தி பெருகியது.

வேலாயுதபிள்ளை நூலைத்தொடர்ந்து வாசித்தார். ஐம்புலன்களை தனது கட்டுக்குள் வைத்திருப்பவன் உலகைத் தன்கைக்குள் வைத்திருப்பான். இவற்றைக் கட்டுப்படுத்தி வைத்தமையால் சுவாமிகள் மீது உயிர்கள் அனைத்தும் உயிரையே வைத்திருந்தன.

தணிகாசலத்திடம் வீமன் என்றொரு நாய் இருந்தது. அது மஹா கணபதி மீது அதீத பற்று வைத்திருந்தது. தணிகாசலத்தின் வீட்டைச்சுற்றி பல கோயில்கள் இருந்தன. காலையில் ஒவ்வொரு கோயிலிலும் மணி அடிக்கும். மஹா கணபதி கோயில் மணி அடித்தால் உடனே வீமன் ஊளையிடும். கோயிலை நோக்கி ஓடிவரும். இது ஊரவர்களுக்குப் பிடிப்பதில்லை. அதைக் கல்லால் அடித்துக் கலைப்பார்கள். ஆனால் சுவாமிகள் அதைத் தன்னருகில் அழைப்பார். வீமன் அவருக்கு அருகில் சென்று ஊளையிடும். ஊளையிடும் போது சுவாமிகள் வீமனின் முதுகைத் தடவிக்கொடுப்பார். சிலகாலம் செல்ல வீமன் சுவாமிகளுடன் தங்கிவிட்டது. சுவாமிகள் தான் உண்ணும் உணவை அதற்கும் வைப்பார். அது அதை விரும்பி உண்ணும். தணிகாசலம் பலமுறை வீமனைக் கட்டிவைத்தும் பிரயோசனமில்லாததால் பின் அவிழ்த்து விட்டுவிட்டார். அது சுவாமிகளுடன் தங்கிவிட்டது. சுவாமிகள் செல்லும் இடமெல்லாம் அதுவும் செல்லும். அதை வீதியில் கண்டால் ஊரவர் சுவாமிவருகிறார் என்பதை உணர்ந்து கொள்வார்கள். காலப்போக்கில் சுவாமிகளுக்குக் கொடுக்கும் மரியாதையை வீமனுக்கும் கொடுக்கத் தொடங்கினார்கள்.

கோயில் மண்டபத்தில் வசிக்கும் புறாக்களுக்கு சுவாமிகள் தானியம் போடுவார். புறாக்கள் வந்து தானியங்களை உண்டுவிட்டு சுவாமிகளின் அருகே நிற்கும். சில புறாக்கள் சுவாமிகளுக்குக் கிட்டவரும். அவர் அதைப்பிடித்துத் தடவுவார். பின் விடுவார். அதனால் புறாக்கள் சுவாமிகளுடன் எந்நேரமும் இருக்கும். வீமனும் புறாக்களுடன் விளையாடும். இந்த விளையாட்டைப் பார்ப்பதற்காக சிறுவர்களும், பெரியவர்களும் கோயிலுக்கு வருவார்கள். சிறுவர்கள் வரும்போது புறாக்களுக்கு தானியங்களும், வீமனுக்கு உணவும் கொண்டுவருவார்கள்.

விரதமிருப்போர் வீமனுக்கும் புறாக்களுக்கும் உணவு கொண்டுவந்து வைப்பார்கள். தாம் அவற்றிற்குக் கொடுப்பது சுவாமிகளுக்குக் கொடுப்பதைப் போன்றது என்று நினைப்பார்கள். சில நாட்கள் வீமனும் சாப்பிடாது. வீமன் சாப்பிடாவிட்டால் தாம் சமைத்ததில் ஏதோ குறைபாடு இருக்கிறது என்று மக்கள் நினைத்து வருந்துவார்கள்.

சுவாமிகளைப் போல் வீமனும் தனது ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்தி வாழ்ந்துவந்தது. ஆரம்பத்தில் ஊரவர் கொண்டுவந்து வைத்த உணவை உண்ட வீமன் பின் அவற்றை உண்பதில்லை. சுவாமி வைக்கும் உணவையே உண்டது. தணிகாசலத்தின் வீட்டில் இருக்கும்போது குரைத்துக் கடித்த வீமன் கோயிலில் அமைதியாகப் படுத்திருந்தது. கோயிலுக்கு வருவோருடன் வரும் நாய்களை வீமன் கடிப்பதில்லை. சுவாமியின் உற்ற துணையாக வீமன் இருந்தது. அவர் நிஷ்டையில் இருந்தால் வீமன் அவரின் அருகிலேயே படுத்திருக்கும். அவர் எழும்போதுதான் அதுவும் எழும்பும். அவர் குளிக்கும்போது வீமனும் குளிக்கும்.

சுவாமிகளின் வாழ்வோடு இணைந்த வீமன் என்ற நாயின் சரித்திரம் வேலாயுதபிள்ளைக்கு நன்கு பிடித்தது. சுவாமிகளின் சரித்திரத்தோடு இணைந்ததால் வீமனின் வரலாறும் எழுதப்பட்டது என்று நினைத்தார் வேலாயுதபிள்ளை.

27. சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்

வகைதெரிவான் கட்டே உலகு.

சுவைத்தல், காணுதல், உணர்தல், கேட்டல், மணத்தல் என்னும் ஐந்தினதும் வகைகளை அறிந்து அவற்றைக் கட்டுப்படுத்தி வாழ்பவனின் அறிவில் தங்கியுள்ளது உலகம்.

மறைமொழி

பயன்நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் பெருமையை அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய பொன்மொழிகள் சான்றாய் நின்று உலகிற்கு வெளிப்படுத்தும் என்பதற்கிணங்க சுவாமியவர்கள் அவ்வப்போது கூறியவற்றைத் தொகுத்துத் தருவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தணிகாசலம் வறியவர். தனது குடும்ப விடயங்களைக் கூடக் கவனியாது மஹா கணபதியின் கோயில் வேலைகளைக் கவனிப்பார். அப்பொழுது சுவாமிகள் கூறுவார் ‘‘எவனொருவன் பொறுப்புக்களைக் கடவுளிடம் ஒப்படைத்துவிட்டு காரியமாற்றுகிறானோ அவனது தொழில் நல்லமுறையில் முடிவடையும்’’

உற்சவ காலங்களில், வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் மஹா கணபதி ஆலயத்திற்குப் பக்தர்கள் அதிகம் வருவார்கள். அப்பொழுது சுவாமிகள் உரையாற்றுவார்.

''அடுத்தவனைக் கெடுக்க நினைப்பவன் தன்னைத் தானே கெடுத்துக்கொள்கிறான். அடுத்தவனுக்கு உதவுவதன் மூலம் தனக்கு உதவிகளைத் தேடிக்கொள்கிறான்.''

''கற்றவர்கள் கூறுவதெல்லாம் சரியானவை அல்ல. கற்றவர்கள் பலர் அடுத்தவர்களைக் கெடுப்பதற்காக பலவற்றைச் செய்கிறார்கள். இல்லாவிட்டால் தான் மேதாவி என்பதைக் காட்டச் செய்கிறார்கள். எவற்றையும் ஆராய்ந்து அறிந்த பின்பு முடிவெடுங்கள்.''

''உயிர்கள் ஒருபோதும் அழிவதில்லை. அவை இரண்டு நிலைக்கு உட்படுகின்றன. ஒன்று மீண்டும் பிறக்காத நிலை. இரண்டாவது மீண்டும் மீண்டும் பிறக்கும் நிலை. நல்லவற்றைச் செய்பவன் பிறவாத நிலைக்கு ஆட்படுகிறான். தீமைகள் செய்பவன் மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்து துன்பப்படுகிறான். செயல்கள் மட்டும்தான் பாவபுண்ணியங்களை உண்டாக்குவன அல்ல. நினைவுகளும் உண்டாக்கும். எனவே புண்ணியம் செய்ய நினைப்போர் நினைவுகளாலும் புனிதர்களாக இருத்தல் வேண்டும்.''

''நம்பிக்கைதான் வெற்றிக்கும், இன்பத்திற்கும் அடிப்படையானது. ஒன்றில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டால் வெற்றி தானாக வரும். அது கடவுள் நம்பிக்கையாக இருந்தால் எப்படிப்பட்ட கஷ்டமான செயலானாலும் வெற்றியைத் தேடித் தரும்.''

''எல்லாத் துன்பங்களுக்கும் விதிதான் காரணம் என்று நீ நம்பாதே. விதியை மதியால் வென்ற வரலாற்றை நாம் இதிகாச புராணங்களில் காண்கிறோம். நல்லவற்றைச் சிந்தித்து நல்லவற்றைச் செயற்படுத்த விரும்புவோர்க்கு விதி துணைபுரியும். கெட்டவற்றைச் சிந்தித்து கெட்டவற்றைச் செய்வோர்க்கு விதி யமனாக மாறும்.''

''இறைவனை வழிபடுங்கள். உங்கள் துன்பதுயரங்கள் மட்டுமல்ல, இறைவன் உங்களுக்களித்த இன்பங்களையும் எடுத்துச் சொல்லுங்கள். துன்பமான வேளையில் நாம் முன்பு அனுபவித்த இன்பங்களை நினைப்பதன் மூலம் துன்பத்தின் சுமைகளைக் குறைக்கலாம். துன்பங்களைக் குறைக்க நம்பிக்கையே முக்கியம். அது கடவுள் நம்பிக்கையாக இருந்தால் துன்பங்கள் யாவும் பஞ்சாய்ப் பறந்துவிடும்.''

''ஒவ்வொருவரும் தத்தமக்குத் தாமே துன்பங்களை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். துன்பங்கள் ஒருவனது செயல்களாலே உண்டாகின்றன. அதை மற்றையோரால் நீக்கமுடியாது. நீ ஏற்படுத்திய

துன்பத்தை நீயே நீக்கவேண்டும். இல்லாவிட்டால் அந்தத் துன்பம் உன்வாழ்வைக் கெடுத்துவிடும். ஒருவன் தனது பொறுப்புக்களைத் தன் தோள்மீது சுமப்பானானால் பொறுப்புக்கள் இலகுவில் தீர்ந்துவிடும். உனது விதியை வேறுயாரும் படைக்கமுடியாது. உன்னுள் இறைவனால் படைக்கப்பட்ட, உனக்குத் தேவையான எல்லாச் சக்திகளையும் நீ பயன்படுத்தினால் உனது வாழ்வு பிரகாசமாகும் என்பதை என்றும் நினைவில் வைத்திரு. தெரியாதவற்றைத் தேடிக் கல். இல்லாதவற்றை உழைத்துப் பெறு. உன்வாழ்வு சொர்க்கமாகும். சொர்க்கம் ஒவ்வொருவருக்கும் மிக அருகிலேயே உள்ளது. நற்செயல்கள் மூலம் நீ அங்கு செல்லலாம்.''

''மக்கள் அறியாமையால் தமது வாழ்க்கையில் உள்ள குறைபாடுகளை மற்றவர்கள் மீது சுமத்தி ஆறுதலடைகிறார்கள். இல்லாவிட்டால் தெய்வத்தின் மீது சுமத்துகிறார்கள். இல்லாவிட்டால் விதி, தலையெழுத்து என்று என்றுமே காணாத ஒன்றின்மீது பழியைச் சுமத்துகிறார்கள். இவையெல்லாம் சரியானவை அல்ல. உனக்குள் இருக்கும் ஆற்றல் புறத்தில் வெளிப்படும் வகையில் நீ நடந்துகொண்டால் குற்றங்களை நீ உன்மீதே காண்பாய். உன் மனம்தான் யாவற்றிற்கும் காரணம். உன்னை ஆன்மீகவாதியாக்குவதும், தனவந்தனாக்குவதும், கல்வியாளனாக மாற்றுவதும் உனது மனம் என்பதை நீ ஒப்புக்கொண்டால் நீ பிறந்ததன் பயனை நன்கு அனுபவிப்பாய்.''

''நீ மற்றையோர்க்கு உதவி செய்வதாக நினைத்துச் செய்யாதே. மாறாக அவருக்குச் சேவை செய். உதவியென்று செய்தால் பின் நீ அதை எதிர்பார்ப்பாய். சேவை செய்தால் எதிர்பார்ப்பு இராது. கடவுளால் படைக்கப்பட்ட ஆத்மாக்களுக்குத் தொண்டுசெய். அத்தொண்டு ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாக மாறும். சந்தர்ப்பங்கள் உன்னைத் தேடிவரும்போது நல்லவற்றை ஆண்டவன் உனக்குக் கொடுத்தால் அதைச் செய்துமுடி. நல்ல சந்தர்ப்பங்களை ஆண்டவன் உனக்குக் கொடுப்பதன் மூலம் நீ பாக்கியசாலியாவாய். கெட்டதை விலக்கிவை. கெட்டவற்றைச் செய்வதன்மூலம் நீ பாவியாவாய். உன்னை நீ உயர்த்திக் கொள்ளவும், உன்னை நீ தாழ்த்திக் கொள்ளவும் உனது செயல்களே முன்நிற்கின்றன என்பதை நீ உணரல் வேண்டும்.''

வேலாயுதபிள்ளை அவற்றை வாசிக்கும்பொழுது கண்கள் கலங்கி எழுத்துக்களை மறைத்தன.

28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து

மறைமொழி காட்டி விடும்

பயன் நிறைந்த மொழியினைப் பேசிய சான்றோர்களது பெருமைகளை அவர்கள் பேசிய மொழியே சான்றாக நின்று வெளிப்படுத்தும்.

அரிது

வேலாயுதபிள்ளை சிலகணங்கள் சுவாமியின் பொன்மொழிகளை மெய்மறந்து சுவைத்தார். உலக வாழ்வைப்பற்றி சுவாமிகள் கூறிய வார்த்தைகள் அவரை மெய்சிலிர்க்க வைத்தது. சிலகணங்கள் கண்மூடி சுவாமிகளைத் தொழுத வேலாயுதபிள்ளை தொடர்ந்து அந்நூலை வாசித்தார்.

அன்று மகா சிவராத்திரி. முதல் ஜாமப்பூசை ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் முடிவடைந்தது. அன்றைய தினம் சொற்பொழிவாற்ற வந்த சிவத்தமிழ்வித்தகர் சிவமகாலிங்கம் அவர்கள் திருமந்திரத்தைப்பற்றி பேசத் தொடங்கினார். சிவமகாலிங்கம் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர், கல்விமான், சிறந்த சமயப் பேச்சாளர். திருமந்திரத்தை பாலுடன் தேனைக்கலந்து குடிப்பதைப் போல் கலக்கிக் குடித்தவர். திருமந்திரம் சம்பந்தமான எந்த ஒரு கேள்விக்கும் உடனே பதில் சொல்லக்கூடிய பெருங்கல்விமான்.

ஆசிரியப் பணியோடு திருமந்திரத்தைப்பற்றி உலகில் உள்ள இந்துக் கோயில்களுக்கெல்லாம் சென்று இலகு தமிழில் குழந்தைகளுக்குக் கூட விளங்கும் வகையில் சொற்பொழிவாற்றுபவர். நாவலடி, அரசடிக் கிராம மக்கள் அனைவரும் அன்று சிவமகாலிங்கத்தின் பேச்சைக் கேட்பதற்காக குழுமியிருந்தனர்.

கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம் மஹா கணபதியின் மேல் பேரன்பு பூண்டவர். ஸ்ரீனிவாச சுவாமிகளைத் தனது குருவாக ஏற்று அவர் பாதம் பணிபவர். சிவராத்திரி தினமான அன்று தனது ஊரில் இருந்து வெகு தூரத்தில் உள்ள மஹா கணபதி ஆலயத்திற்கு குடும்பத்துடன் வந்திருந்தார். கோயிலின் பிரதமகுரு இராஜசங்கரக் குருக்களின் அர்ச்சனையில் அவர் மயங்கியவர். அதனால் மாதத்தில் நான்கு அல்லது ஐந்து முறை கோயிலுக்கு அர்ச்சனை செய்ய வருவார்.

சிவமகாலிங்கம் பேசும்போது குருக்கள் தணிகாசலத்திடம் வந்து “தனபாலசிங்கம் இரண்டாம் ஜாமப்பூசைக்கு தாமரைப்பூ கொண்டுவந்து தாறதென்று சொன்னவர். இன்னும் காணவில்லை. போய் ஒருக்கால் பார்த்துவா” என்றார்.

தணிகாசலம் தனபாலசிங்கத்தின் வீட்டுக்குச் சென்றபோது வழியில் தனபாலசிங்கம் முனகியபடி நிலத்தில் கிடந்தார். தலையில் இருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. தாமரைப்பூக்கள் வீதியெங்கும் சிதறிக்கிடந்தன. ‘‘என்ன நடந்தது?’’ பதறினார் தணிகாசலம்.

‘‘கேசவமூர்த்தியும் வேறு நாலைந்து பேரும் சேர்ந்து எனக்கு அடித்துவிட்டு ‘‘பிள்ளையாருக்கு ஏனடா தாமரைப்பூ என்றுசொல்லி தாமரைப்பூ முழுவதையும் சிந்திவிட்டார்கள்.’’

தணிகாசலம் கோயிலுக்குச் சென்று நிலமையை விளக்கியபோது பலர் தனபாலசிங்கம் தாக்கப்பட்ட இடத்திற்கு ஓடிவந்தனர். அவர்களுடன் சுவாமியாரும், வீமனும் வந்தனர்.

தனபாலசிங்கம் இரத்தம் அதிகம் வெளியேறியதால் மயங்கிக் கிடந்தார். தாமரைப்பூக்கள் நிலமெங்கும் சிதறிக் கிடந்தன. சுவாமிக்கு ஒரு கணம் என்றுமில்லாத கோபம் வந்தது ‘‘நான்தான் கேசவமூர்த்தியைக் கெடுத்து வருகிறேன். அன்புக்குத் திருந்தாதவனை அடி கொடுத்துத்தான் திருத்தல் வேண்டும். தனபாலசிங்கத்தை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லுங்கள். கேசவமூர்த்தியையும் அவனது அடியாட்களையும் அடித்து உதையுங்கள்’’ என்றார். பின் சுந்தரலிங்கத்தின் பக்கம் திரும்பி ‘‘கேசவமூர்த்தி ஊருக்கு உதவாதவன், அவனை தண்ணீர் இல்லாத இடத்திற்கு மாற்றுங்கள்’’ என்றார்.

சுவாமியார் தடுத்து வைத்திருந்தமையால் அமைதியாக இருந்த மக்கள் ஆத்திரத்துடன் திரண்டு ஓடினர். தணிகாசலம் பதறிப்போனார். பெரும் விபரீதம் நடக்கப்போவதை உணர்ந்த தணிகாசலம் ‘‘சுவாமி’’ என்றழைத்தார்.

‘‘ஒருகணம் உணர்ச்சி வசப்பட்டதனால் பெருங்கோபத்திற்காளாகிவிட்டேன். ஓடிச்சென்று விபரீதம் நடக்குமுன் தடுத்துநிறுத்து’’ என்றார்.

தணிகாசலம் செல்லுமுன் பெரும் விபரீதம் நடந்து முடிந்துவிட்டது. கேசவமூர்த்தியை வீட்டுக்குள் இருந்து வெளியே இழுத்துவந்த மக்கள் அவனை அடித்தனர். ஆத்திரம் கொண்ட சிலர் கேசவமூர்த்தியின் வீட்டைக் கொழுத்தினர். கேசவமூர்த்தியோடு சேர்ந்த அடியாட்கள் ஐவரைப் பிடித்து அடித்ததோடு மரங்களிலும் கட்டினர். தணிகாசலம் வந்து சொன்னபோது அதை நம்ப மக்கள் மறுத்தனர். வீறுகொண்டெழுந்த மக்களை அடக்க முடியாத தணிகாசலம் ஓடிவந்து சுவாமிகளுக்குச் சொன்னார். சுவாமிகள் வந்த பின்புதான் நிலமை கட்டுக்கடங்கியது.

கேசவமூர்த்தி வேதனையால் முனகினான். வீடு முழுவதும் எரிந்து சாம்பலானதால் கேசவமூர்த்திக்குப் பல இலட்சரூபா நட்டமேற்பட்டது. சுவாமிகளின் கணநேரக் கோபம் பெரிய நட்டத்தை ஏற்படுத்தியதை தணிகாசலம் உணர்ந்துகொண்டார்.

கேசவமூர்த்திக்கு நேர்ந்ததை எண்ணிக் கவலைப்பட்ட வேலாயுதபிள்ளை சுவாமிகள் கூறியது போல் கெட்டவற்றைச் செய்பவன் கெட்டழிந்துபோவான் என்பது உண்மையானது என்று நினைத்தார்.

29. குணம்என்னும் குன்றுஏறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

நல்ல பண்புகளில் மலை போல உயர்ந்து நிற்கும் பெரியோர், ஒரு கணப்பொழுதே கோபம் கொள்வர். ஆயினும் அதிலிருந்து ஒருவரைக் காத்தல் அரிதாகும்.

அந்தணர் என்போர்

நாவலர் ஸ்ரீவித்தியா மஹா கணபதி ஆலய பிரதம குரு இராஜசங்கரக் குருக்கள் அன்பே உருவானவர். உயிர்களிடத்து பேரன்பு மிக்கவர். மக்கள் படும் துயரை தன் துயராக நினைத்து உதவிகள் பலவும் புரிபவர். தமிழ் மொழியையும் வடமொழியையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர். சித்த மருத்துவம் தெரிந்தவர். பூசை நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் மக்களுக்கு வைத்தியம் செய்வார். மிகவும் கைராசியுடைய வைத்தியராக அவர் திகழ்ந்தமையால் அக்கிராம மக்கள் மட்டுமன்றி அயற்கிராம மக்களும் அவரிடம் வைத்தியம் செய்து வந்தனர்.

சாஸ்திரம் பூரணமாகத் தெரிந்தவர். பூசை முறைகள் அனைத்தும் கற்றவர். மக்களின் சாதகத்தைக் கணித்து பலன் சொல்வதிலும் வல்லவர். அதனால் எந்நேரமும் அவரின் வீட்டில் மக்கள் கூட்டம் நிறைந்திருக்கும்.

வைத்தியம் செய்வதற்கென்று தனியாக ஒரு மண்டபம் அமைத்து வைத்திருந்தார். அங்கு வைத்துத்தான் அவர் வைத்தியம் செய்வார். சோதிடம் சொல்வார்.

சின்னத்தம்பி முதலியார் நாவலர் ஸ்ரீவித்தியா மஹா கணபதியின் பக்தர். பெரும் பணக்காரரான அவர் ஆலயத்திற்கு நிதியை அதிகமாகக் கொடுப்பார். திருவிழாக்களின் போது நைவேத்தியப் பொருட்களை அதிகமாகக் கொடுப்பார். கட்டடங்களை கட்டும் போது நிதியுதவிகள் செய்வார். இராஜசங்கரக் குருக்களின் வீட்டு வைபவங்களுக்கு பொருட்களாகவும், பணமாகவும் அள்ளிக் கொடுப்பார்.

இராஜசங்கரக் குருக்கள் பணம் பொருளில் ஆசையில்லாதவர். தனது குடும்பத் தேவைக்கு தேவையான பொருட்களை எடுத்துக்கொண்டு மிகுதியை ஏழை எளியவர்களுக்குக் கொடுத்து விடுவார். வைத்தியம், கிரகசாந்தி போன்றன செய்வோரிடம் பணமோ, பொருளோ பெறமாட்டார். அவர்கள் தம்மாலியன்ற நிதியை வைத்திய நிலையத்திலுள்ள பெட்டியில் போட்டுவிட்டுச் செல்வார்கள்.

இராஜசங்கரக் குருக்கள் எல்லோரையும் ஒரே விதமாக மதித்து வந்தார். இது சின்னத்தம்பி முதலியாருக்கு பிடிப்பதில்லை. தன்னை மற்றையோரை விட கூடுதலாக மதிக்க வேண்டும் என்று விரும்பினார்.

ஆவணி மாதத்தில் வரும் விநாயக சதுர்த்தியை சின்னத்தம்பி முதலியாரே செய்து வந்தார். சதுர்த்தி விழா மிகவும் கோலாகலமாக வருடா வருடம் நடைபெறும். கோயிலில் நடைபெறும் எந்த வைபவத்திற்கென்றாலும் சின்னத்தம்பி முதலியார் குறித்த நேரத்திற்கு வருவதில்லை. குறைந்தது ஒரு மணித்தியாலமாவது தாமதமாகத்தான் வருவார்.

இது பற்றி குருக்கள் பல தடவைகள் சின்னத்தம்பி முதலியாருக்கு எடுத்துக்கூறியும் முதலியார் கேட்கவில்லை. அதனால் குருக்களுக்கும் முதலியாருக்கும் இடையில் அடிக்கடி பிரச்சினைகள் வரும். ஏதாவதொரு பிரச்சினையைக் காட்டி குருக்களை பூசையில் இருந்து நிறுத்த முடிவு செய்தார் சின்னத்தம்பி. அதற்கான வாய்ப்பை எதிர்நோக்கிக் காத்திருந்தார்.

அன்று விநாயக சதுர்த்தி தினம். கோயிலில் பூசைக்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தார் இராஜசங்கரக் குருக்கள். அப்பொழுது குருக்களின் மகன் அவசரமாக வந்து ‘‘கந்தையனுக்கு நாகம் தீண்டிவிட்டது. மயக்கநிலையில் கொண்டு வந்திருக்கிறார்கள்’’ என்றான்.

பூசைக்கான ஏற்பாடுகளை உதவிக் குருக்களிடம் ஒப்படைத்துவிட்டு கோயிலை விட்டு வெளியே வந்தார் இராஜசங்கரக் குருக்கள். வாசலில் நின்ற சின்னத்தம்பி முதலியார் ‘‘ஐயா பூசையை முடித்துவிட்டுப் போங்கள்’’ என்றார்.

சின்னத்தம்பி முதலியாரின் கதையைக் கேளாதவர் போல் விரைந்து சென்றார் குருக்கள்.

வைத்தியம் பார்க்கும் மண்டபத்திலுள்ள பலகைக் கட்டிலொன்றில் கந்தையனை வளர்த்தியிருந்தனர். அவனது வாயிலிருந்து நுரை வந்துகொண்டிருந்தது. மிகவும் ஆபத்தான நிலையில் இருந்த அவனை மிகுந்த அக்கறையுடன் கவனித்தார் குருக்கள். இரண்டுமணி நேரம் சிகிச்சை செய்தும் கந்தையனது மயக்கம் தீரவில்லை. குருக்கள் உதவியாளர்களை அழைத்து கந்தையனைக் கவனிக்கும்படி கூறிவிட்டு கிணற்றடிக்குச் சென்று தோய்ந்துவிட்டு கோயிலுக்குச் சென்றார்.

அவர் கோயிலுக்குச் சென்றபோது சின்னத்தம்பி முதலியார் உருத்திர மூர்த்தியாக நின்றார். ‘‘இன்றிலிருந்து நீர் பூசை செய்வதற்கு அருகதையற்றனீர். தீட்டுத் துடக்குள்ளவர்களுக்கெல்லாம் வைத்தியம் பார்த்துவிட்டு சுவாமிக்கு பூசை செய்வது குற்றம். கந்தையனின் மயக்கம் தீரவில்லை. செத்துப் போனானோ தெரியாது. சாதாரண மக்களின் பிரேதத்தை குருக்கள்மார் பார்க்கக்கூடாது. உம்மை வைத்தியம் செய்யக்கூடாதென்று பலமுறை கூறியும் நீர் கேட்பதாகத் தெரியவில்லை. நீர் வீட்டுக்குப் போம்’’ என்றார் சின்னத்தம்பி முதலியார்.

இராஜசங்கரக் குருக்கள் எதுகும் பேசவில்லை. ‘‘வித்தியா கணபதி நீதான் இவர்களைத் திருத்த வேண்டும்’’ என்று கூறிவிட்டுச் சென்றார்.

இரண்டு தினங்கள் கழிந்தன. கந்தையன் சுகமடைந்துவிட்டான்.

குருக்கள் கந்தையனுக்கு மருந்து கொடுத்துக் கொண்டிருக்கும் போது சின்னத்தம்பி முதலியாரை நாலைந்து பேர் தூக்கிக்கொண்டு வந்தனர்.

‘‘குருக்கள் ஐயா சாப்பிட்டுக் கொண்டிருந்தார். திடீரென்று நெஞ்சு வலிக்குதென்று கூறி மயங்கிவிட்டார்.’’ என்று அழுதாள் சின்னத்தம்பி முதலியாரின் மனைவி.

சின்னத்தம்பி முதலியாரை பலகைக் கட்டிலில் வளர்த்திவிட்டு சிகிச்சை அளிக்கத் தொடங்கினார் இராஜசங்கரக் குருக்கள். ‘‘பக்தி என்பது கடவுளிடத்து வைக்கும் அன்பு மட்டுமல்ல, உயிர்களிடத்து வைக்கும் அன்பும் பக்தி தான்’’ என்று நினைத்தார் குருக்கள்.

30. அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்

செந்தண்மை பூண்டுஒழுக லான்.

எல்லா உயிர்கள் மீதும் பாகுபாடற்ற அன்பினைக் கொண்டவர்களே அந்தணர்கள் ஆவர்.

ஆக்கம்

நாவலடிக் கிராமத்தில் இரகுநாதன் என்பவர் வாழ்ந்து வந்தார். அவரது தந்தையார் சிங்கப்பூரில் பிறந்தவர். இரகுநாதன் கணிதத்திலும், ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர். வேலை தேடிச்சென்ற இரகுநாதனின் பெற்றோர் தாயகம் திரும்பும்போது இரகுநாதனும் அவர்களுடன் வந்தார்.

இரகுநாதன் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி மீது தீவிர அன்பு கொண்டவர். அவருக்கு இரு ஆண்பிள்ளைகளும், இரு பெண்பிள்ளைகளும் இருந்தனர். நால்வரும் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்விகற்று வந்தனர். இரகுநாதனின் தந்தை சிங்கப்பூரில் நல்ல தொழில் செய்தமையால் ஏராளமான பணத்துடன் தாயகம் திரும்பியிருந்தார். அவர் நாவலடியில் ஏராளமான தோட்டநிலத்தை வாங்கி மகனுக்கு முதுசமாகக் கொடுத்தார். அதனால் இரகுநாதன் வேறு வேலைக்குச் செல்லாமல் விவசாயம் செய்துவந்தார்.

இரகுநாதன் இரக்க சுபாவம் மிக்கவர். தனது வீடுதேடிவரும் அனைவர்க்கும் உணவளிப்பார். விவசாயிகளுக்கு விதைப்பு வேளையில் பணக்கஷ்டம் ஏற்பட்டால் அவர்களுக்குப் பணஉதவி செய்வார். அப்பணத்திற்கு பொறுப்பாக பொருட்கள் ஏதும் வாங்கமாட்டார். வட்டிப் பணமும் பெறமாட்டார். கோயிலுக்கு தன்னாலான உதவிகளைச் செய்வார்.

இரவு வேளைகளில் தனது பிள்ளைகளுக்கு கணிதமும், ஆங்கிலமும் சொல்லிக் கொடுப்பார். அப்பொழுது அயலில் உள்ள மாணவர்களையும் அழைத்துவந்து பாடங்களைச் சொல்லிக்கொடுப்பார். பாடசாலையில் விளங்காத மாணவர்கள் அவரிடத்தில் வந்து விளக்கம் கேட்பார்கள். நல்ல தேர்ச்சி பெற்ற ஆசிரியரைப்போல் அவர்களுக்கு அவர் விளக்கமளிப்பார். அயற்கிராமங்களில் இருந்தும் அவரிடம் ஆங்கிலம் கற்க பலர் வருவார்கள். யாரிடமும் கற்பித்தலுக்கான பணத்தை அவர் பெறமாட்டார்.

அவர் தனது தோட்டத்தில் வேலை செய்யும்போது அவரது நண்பர்கள் பலர் அவருடன் கூடிநின்று வேலை செய்வார்கள். அவரும் தனது நண்பர்களது தோட்டங்களுக்குச் சென்று வேலை செய்வார். அவர் தோட்டவேலை செய்யும்போதும் மாணவர்கள் அவரிடத்தில் வந்து தமக்குச் சந்தேகமான விடயங்களைப் பற்றிக் கேட்பார்கள். அவரது கைகள் வேலை செய்யும். வாய் மாணவர்களுக்கு விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கும்.

காலம் கடந்து கொண்டிருந்தது. இரகுநாதனின் மக்கள் இருவரும் மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவாகினர். இரண்டு மகள்மாருக்கும் அவர் மாப்பிளை தேடினார். பலர் அவர்களைத் திருமணம் செய்யப் போட்டிபோட்டனர்.

இரகுநாதனிடம் ஆங்கிலமும், கணிதமும் கற்று பொறியியலாளரான ஆரூரன் அவரது மூத்த மகளைத் திருமணம் செய்தான். அவரது இன்னொரு மாணவனான சம்பந்தன் அவரது இரண்டாவது மகளைத் திருமணம் செய்தான். சம்பந்தன் அவ்வூர்ப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறான்.

பேரப்பிள்ளைகள் பிறந்த பின்பும் இரகுநாதன் தன்னைத் தேடிவரும் மாணவர்களுக்கு ஆங்கில பாடமும், கணித பாடமும் கற்பித்தார். இரகுநாதனின் மாணவன் என்றுகூறி பெருமைப்படுவோர் பலர் நாவலடிக் கிராமத்தில் இருந்தனர். அவர்மீது மதிப்பும், மரியாதையும் வைத்திருக்கும் விக்னேஸ்வரமூர்த்தி கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றுகிறார்.

அவரது பேரக்குழந்தைகள் பொறியியலாளர்களாகவும், மருத்துவர்களாகவும் கடமை புரிகின்றனர். இப்பொழுது அவர் பீட்டப்பிள்ளைகளுக்கும், கிராமத்தில் உள்ள பிள்ளைகளுக்கும் ஆங்கிலம் சொல்லிக்கொடுக்கிறார். அவரது வீட்டுவாசலில் பல ஆடம்பர உந்துருளிகளில் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும், மாணவர்களும் வந்திறங்கி அவரோடு மகிழ்வுடன் உரையாடிச் செல்கின்றனர்.

31. சிறப்புஈனும்; செல்வமும் ஈனும்; அறத்தின்ஊஉங்கு

ஆக்கம் எவனோ உயிர்க்கு?

அறமானது சிறப்பையும் செல்வத்தையும் தரும். ஆகையால் அத்தகைய அறத்தை விட உலகில் நன்மை தருவது வேறு எது?

ஆக்கமும் கேடும்

இரகுநாதனின் மூத்தமகன் பாலகுமாரன். இளைய மகன் உதயகுமாரன். இருவரும் மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் பட்டம் பெற்று வந்தபோது இருவரையும் அழைத்து இரகுநாதன் சொன்னார்; ‘‘என் அருமைப் பிள்ளைகளே, நீங்கள் ஒழுக்கசீலர்கள் தயவு, தாட்சணியம் மிக்கவர்கள். ஏழைகளின் பால் அன்பும், இரக்கமும் கொண்டவர்கள் என்பது எனக்குத் தெரியும். எனினும் கடவுளுக்குச் சமமான தொழிலை ஏற்கப்போகும் உங்களுக்கு நான் சில புத்திமதிகளைச் சொல்லுகிறேன் என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். பணத்தைத் தேடி நீங்கள் சென்றால் அன்பு, கருணை, பண்புகள் யாவும் போய்விடும். உங்களைத் தேடிப் பணம்வந்தால் மதிப்பு, மரியாதை, கௌரவம் என்பவற்றையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டுவரும். புனிதமான மருத்துவத் தொழிலை கண்ணியமாகச் செய்யுங்கள். ஒருபோதும் ஓய்ந்து இருக்காதீர்கள். இருபத்திநான்கு மணிநேரமும் விழிப்பாக இருக்கவேண்டியவர்கள் மருத்துவர்கள். அவர்கள் ஓய்வு எடுத்தால் உயிர்கள் பலியாகிவிடும்.’’

பிள்ளைகள் இருவரும் இரகுநாதனின் பாதங்களைப் பணிந்தார்கள். ‘‘அப்பா நீங்கள் சொன்னவற்றை நாம் மட்டுமல்ல, எமது பிள்ளைகளையும் கடைப்பிடிக்க வைப்பது எமது கடமை. உங்கள் பெயரைச் சொன்னாலே நாவலடியிலும், அயற்கிராமங்களிலும் வாழும் மக்கள் எழுந்து நிற்பர். அதை நாம் கெடுக்கமாட்டோம்’’ என்றனர்.

பாலகுமாரனும், உதயகுமாரனும் இரகுநாதனின் சொற்படி நடந்துவந்தனர். அன்று பாலகுமாரனுக்குச் சரியான காய்ச்சல். உதயகுமாரன் வந்து அவனைப் பரிசோதித்து மருந்து கொடுத்துவிட்டு ஐந்துநாட்கள் கட்டாயம் ஓய்வு எடுக்கும்படி கூறிவிட்டுச் சென்றான். பாலகுமாரன் வேலை செய்த மருத்துவமனையில் இருவர் வைத்தியர்களாகக் கடமை புரிந்தனர். பாலகுமாரனுக்குக் கீழ் வேலைசெய்யும் உதவி மருத்துவரது தாய் இறந்தமையால் அவர் ஒருவாரகாலம் விடுமுறையில் சென்றுவிட்டார். அதனால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் சிகிச்சை பெறாமல் திரும்பிவிடுவார்கள் என்பதால் பாலகுமாரன் மிகவும் சிரமப்பட்டு மருத்துவமனைக்குச் சென்றான். நோயாளர்கள் அன்று அதிகமாக வந்திருந்தனர். பாலகுமாரன் மிகவும் கஷ்டப்பட்டு நோயாளர்களைப் பரிசோதித்து மருந்து எழுதிக்கொடுத்தான். கடுமையாக வேலை

செய்தமையால் காய்ச்சலின் வேகம் கூடியது. அவன் மயக்கமடைந்தான். எனினும் சிகிச்சை பெற்றுவிட்டு மறுநாள் மருத்துவமனைக்கு வந்துவிட்டான்.

தனபாலசிங்கத்திற்கு கேசவமூர்த்தி அடித்தமையால் கோபங்கொண்டெழுந்த மக்கள் கேசவமூர்த்தியை கடுமையாகத் தாக்கினார்கள். கேசவமூர்த்தி பாலகுமாரன் வேலைசெய்யும் மருத்துவமனையிலே தங்கிச் சிகிச்சை பெற்றுவந்தான். சுகமாக இருந்த கேசவமூர்த்திக்கு திடீரென்று வலிப்புநோய் உண்டானது. வாயால் நுரைதள்ள கைகால்களை ஆட்டினான் கேசவமூர்த்தி. அதைக் கண்ட பணியாட்கள் பாலகுமாரனிடம் ஓடிச்சென்றனர். நோயின் உபாதையைத் தாங்க முடியாத பாலகுமாரன் மருந்தைக் குடித்துவிட்டு அப்பொழுதுதான் படுத்தான். படுத்ததும் களைப்பால் கண்ணயர்ந்துவிட்டான். நோயுடன் படுத்திருந்த பாலகுமாரனை இரகுநாதன் எழுப்பினார். விஷயமறிந்த பாலகுமாரன் உடனே மருத்துவமனைக்குச் சென்றான்.

கேசவமூர்த்தி வலியால் துடிதுடித்துக் கொண்டிருந்தான். கேசவமூர்த்திக்கு முதல் உதவிச் சிகிச்சை அளித்துக்கொண்டிருந்த பணியாட்கள் பாலகுமாரனைக் கண்டதும் விலகிக் கொண்டனர். பாலகுமாரன் கேசவமூர்த்தியைப் பரிசோதனை செய்துவிட்டு தாதியிடம் மருந்து கொடுக்கும்படி கூறினான்.

மருந்து கொடுத்த சில நிமிடங்களில் கேசவமூர்த்தி மெதுவாகக் கண்விழித்தான். அவனது கண்களால் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. ஏதோ சொல்ல முயன்றான்.. ‘‘ஒருவன் நோயாளியாவதற்கு மனம்தான் முக்கிய காரணம். மனதைக் கட்டுப்படுத்தி நல்லவற்றை நினைப்பவனுக்கு ஒருபோதும் துன்பங்கள் வரமாட்டாது. துன்பங்களால் தான் நோய்கள் வருகின்றன. நீங்கள் எவற்றைப் பற்றியோ கடுமையாக யோசிக்கிறீர்கள். உங்கள் நோயைப்பற்றி கடுமையாக யோசித்தாலும் வலி வருவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. கடுமையாக யோசிக்காதீர்கள். அமைதியாக இருங்கள். மன அமைதிக்கும், மன ஒருமைப்பாட்டிற்கும் பிரார்த்தனை உதவும். கடவுளைப் பிரார்த்தியுங்கள், மனதில் உள்ள பயம் அற்றுப்போம்’’ என்றார் பாலகுமாரன்.

கேசவமூர்த்தி எதுவும் பேசவில்லை.

32. அறத்தின்ஊஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை

மறத்தலின் ஊங்குஇல்லை கேடு.

ஒருவனது வாழ்க்கைக்கு அறத்தைவிட ஆக்கம் தருவது எதுவும் இல்லை. அதேபோல் அறத்தை மறப்பதை விடக் கெடுதியானது எதுவும் இல்லை.

காலமறிந்து

மதிவதனன் இருபத்தைந்து வயது இளைஞன். பொது நோக்குக் கொண்டவன். ஏழைகளுக்கும், நண்பர்களுக்கும், அயலவர்களுக்கும் தன்னாலியன்ற உதவிகளைச் செய்பவன். ஊரில் ஆளுதவி இல்லாதவர்கள் ஏதாவது உதவி கேட்டால் அதை மறுக்காது உடனே செய்துவிடும் சுபாவம் உடையவன். அநேகமாக உதவியில்லாத நோயாளர்களையும், உறவினர்களையும் தனது துவிச்சக்கர வண்டியில் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு செல்வான். அவர்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றால் அவர்களுக்கான உணவுவகைகளை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று கொடுப்பான். அவர்களுக்கு துணையாக வீட்டில் தங்குவான்.

ஊரில் உள்ள நூல் நிலையத்தையும், கோயிலையும் கூட்டித் துப்புரவு செய்வது அவனது அன்றாட வேலையாகும்.

யாருக்காவது ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் உடனே அவர்கள் மதிவதனனையே நாடிச் செல்வார்கள். அக்கிராமத்தில் உள்ள பிள்ளைகள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தால் அவர்களது பெற்றோர் தமது பிள்ளைகளை எப்பிரிவில் கல்விகற்க வேண்டுமென்று மதிவதனனைக் கேட்பார்கள். அவன் அவர்களின் பிள்ளைகளோடு கலந்துரையாடி என்னென்ன பிரிவுக்குச் சேரலாமென்று ஆலோசனை கூறுவான். அதன்படியே அவர்கள் தமது உயர்கல்வியை மேற்கொள்வார்கள்.

அவ்வூரில் நாகராசா என்றொரு விவசாயி வாழ்ந்து வந்தார். ஒருமுறை வயல் விதைக்கும் நேரத்தில் அவருக்கு திடீரென்று நோய் வந்துவிட்டது. பிள்ளைகள் வயதில் குறைந்தவர்கள். இனத்தவர்கள் அவரை வந்து பார்த்துவிட்டு தமது விதைப்பு முடிந்த பின் அவருக்கு விதைத்துத் தருவதாகக் கூறிச் சென்றனர். நாகராசா சிறந்த தொழிலாளி. அவர் தான் அக்கிராமத்தில் முதலில் விதைப்பார். முதலில் விதைப்பதன் மூலம் அதிக பயனைப் பெறலாமென அவர் நம்பினார். மதிவதனன் அவரைப் பார்க்க வந்தபோது தனது எண்ணத்தை மதிவதனனுக்குக் கூறினார் நாகராசா.

‘‘நீங்கள் எதற்கும் யோசிக்க வேண்டாம். எமது வயலில் வேலை செய்ய அப்பாவும், அண்ணாமாரும் இருக்கிறார்கள். என்னை அவர்கள் வேலை செய்ய விடுவதில்லை. நான் உங்களுடைய வயலை

விதைத்துத் தருகிறேன். அதன் மூலம் எனக்கு தொழிற்பயிற்சி ஏற்படும்'' என்றான்.

நாலைந்து தினங்களில் நாகராசாவின் உதவியோடு மதிவதனன் நாகராசாவின் வயலை உழுது நெல் விதைத்தான்.

மூன்று மாதங்கள் பயிரைப் பராமரித்து அறுவடை செய்தும் கொடுத்தான்.

நாட்கள் சில கடந்தன. மதிவதனன் இலங்கை அரசின் நிர்வாக சேவைப் பரீட்சை எழுதியிருந்தான். அன்று அவன் பரீட்சையில் சித்தியடைந்ததாக கடிதம் வந்தது.

முதலாம் திகதி நியமனக் கடிதத்தை கொழும்பில் வந்து பெற்றுக் கொள்ளும்படி அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

இருபத்தேழாம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தான் மதிவதனன்.

இருபத்தேழாம் திகதி காலை நாகராசாவுக்கு மீண்டும் நெஞ்சுவலி வந்துவிட்டதாக நாகராசாவின் மனைவி வந்து மதிவதனனிடம் கூறினாள். அவன் உடனே நாகராசாவின் வீட்டுக்குச் சென்று நாகராசாவை மருத்துவமனைக்குக் கொண்டுசென்று அனுமதித்துவிட்டு வர மாலை நான்கு மணியாகிவிட்டது.

மறுநாள் அவன் கொழும்புக்கு சென்று நியமனக் கடிதத்தைப் பெற்றான்.

அவனது கிராமத்திற்கு உதவி அரச அதிபராக நியமிக்கப்பட்ட கடிதம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

33. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே

செல்லும்வா யெல்லாம் செயல்.

ஒவ்வொருவரும் தமக்கு இயன்ற வரையில், ஏற்ற இடங்களிலெல்லாம் அறச் செயல்களைச் செய்தல் வேண்டும்.

மாசிலன்

கேசவமூர்த்தி இரகுநாதனைத் தேடிவந்தார். அவர் மக்களால் தாக்கப்பட்ட பின் முற்றாக மனம் உடைந்து மனநோயாளி ஆகிவிட்டார். அவருடன் சேர்ந்து திரிந்தவர்கள் அவருடன் சேர்ந்தால் தமக்கும், தம் குடும்பத்திற்கும் ஆபத்து வரும் என்று நினைத்து விலகிவிட்டனர். கேசவமூர்த்தி தனது வலதுகை போல இருந்து அனைத்து உதவிகளையும் புரிந்த கேசவனிடம் முதலில் சென்றார்.

"வாத்தியார் இளமையால் ஏற்பட்ட வீறுகாரணமாக நான் உங்களுடன் சேர்ந்து அடாத செயல்களில் ஈடுபட்டுவிட்டேன். எனது தந்தையார் மஹா கணபதியின் பக்தர். கோயில் வேலைகள் யாவற்றையும் செய்பவர். அத்துடன் ஸ்ரீனிவாச சுவாமிகளின் சீடர். ஸ்ரீனிவாச சுவாமிகள் சென்ற வருடம் ஒருமுறை எமது வீட்டுக்கு வந்து உணவருந்திவிட்டுச் சென்றார். அதன்பின் அப்பாவுக்கு இருந்த நோய் குணமாகி விட்டது. தொழிலும் விருத்தியடைந்தது. நான் உங்களோடு சேர்ந்து தனபாலசிங்கத்தைத் தாக்கிய பிறகு அப்பா கோயிலுக்குச் செல்வதில்லை. மஹா கணபதி சக்தியுள்ள தெய்வமாக இருந்தால் எனது மகனை கோயிலுக்கு அழைக்கட்டும், அதன் பின்தான் நான் கோயிலுக்குச் செல்வேன் என்று பிடிவாதமாக இருக்கிறார். என்னால் எனது தந்தையின் துன்பங்களைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதனால் நேற்று நான் கோயிலுக்குச் சென்றேன். எனது தந்தையார் நேற்றுப் போல் மகிழ்ந்ததை நான் இதுவரை காணவில்லை. அதனால் தயவுசெய்து இனிமேல் என்னிடம் வராதீர்கள்..." என்றான். அதேபோல் கேசவமூர்த்தியின் ஏனைய நண்பர்களும் சொன்னதால் கேசவமூர்த்தி மனஅமைதியைத் தேடி இரகுநாதனிடம் வந்தார்.

"ஐயா, எனது நண்பர்கள் எல்லோரும் என்னைவிட்டு விலகிவிட்டனர். ஊரில் உள்ளவர்கள் பெரியவர்கள் என்று நினைக்கும் வேலாயுதபிள்ளை, தனபாலசிங்கம், தணிகாசலம் போன்றோரிடம் செல்ல எனக்கு விருப்பமில்லை. அவர்களை நல்லவர்கள் என்றோ, ஒழுக்கமானவர்கள் என்றோ என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எவ்வளவோ ஏழைகள் கஷ்டப்படும்போது மஹா கணபதிக்குக் கட்டிடங்கள் கட்டுகிறார்கள். அந்நிதியை நல்லதொரு முன்னேற்றமான விடயத்திற்குச் செலவு செய்யலாம் தானே. இதைக் கேட்கப் போனால் சண்டைக்கு வருகிறார்கள். இந்துக் கோயில்களில் எவ்வளவு உணவு வீண் விரையமாகிறது. இவற்றை ஏழைகளுக்குக் கொடுக்கலாம் தானே..."

கேசவமூர்த்தி கூறுவதை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த இரகுநாதன் சொன்னார்; "ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழிகளில் செயல்களைச் செய்கிறார்கள். அவற்றில் நல்லவை எவையென்றும், தீயவை எவையென்றும் மக்கள்தான் தீர்மானிக்கிறார்கள். பெரும்பான்மையான மக்களின் விருப்பத்தை அனுசரித்து நடக்கவேண்டியது சிறுபான்மையினரின் கடமை. இந்தக் கிராமத்தில்

நீங்கள் ஒருவர்தான் மற்றவர்களின் செயல்களைக் குறைகூறுகிறீர்கள். நான் பெரிதாக கோயிலுக்குச் செல்வதில்லை. கடவுளை மனதில் நினைத்துக்கொண்டு மனச் சுத்தத்துடன் சேவையாற்றி வருகிறேன். தமிழர்களைப் பொறுத்தமட்டில் செய்யும் தொழில்தான் தெய்வம். ஒருவன் மனத்தூய்மையுள்ளவனாக வாழ்வதே அறம். மனத் தூய்மையில்லாமல் செய்பவை எவையும் அறமாகாது''என்றார் ரகுநாதன்.

''நான் மற்றையவர்களிடம் எதையும் எதிர்பார்க்கவில்லை, அடுத்தவரின் முன்னேற்றத்தைக் கண்டு பொறாமைப்படுவதில்லை, அடுத்தவனின் பொருளுக்கு ஆசைப்படுவதில்லை, அவாப்படுவதில்லை'' என்றார் கேசவமூர்த்தி.

''மனம் சுத்தமாக இருந்தால் ஆசை, பொறாமை, அவா போன்றன வராது. ஆனால் அடுத்தவனின் செயல்களைப் பற்றி நீர் ஏன் விமர்சிக்கிறீர். சுதந்திரமான நாட்டில் ஒருவன் எதையும் செய்யலாம். ஒருவன் கோயிலுக்குச் செல்லக்கூடாது, பூசை செய்யக்கூடாது, கட்டடம் கட்டக்கூடாது என்றுசொல்ல உமக்கு என்ன உரிமை இருக்கிறது? உமது செயல்களையும், கொள்கைகளையும் நீர் உம்முடன் வைத்துக்கொள்ளும். உமது கொள்கைகளை மற்றவன் விமர்சிப்பது உமக்குப் பிடிக்காததைப் போல் நீர் அடுத்தவனை விமர்சிப்பது அவனுக்குப் பிடிக்காது என்பதை நீர் உணரல் வேண்டும்''

கேசவமூர்த்தி எதுவும் பேசவில்லை, மௌனமாக சில கணங்கள் இருந்துவிட்டு எழுந்து நடந்தார். இரகுநாதன் அவர் செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

34. மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்துஅறன்;

ஆகல நீர பிற.

ஒருவன் மனத்தூய்மையுடன் வாழ்வதே அறமாகும். மற்றயனவெல்லாம் வெறும் ஆரவாரங்களாகும்.

நான்கும்

ஸ்ரீனிவாச சுவாமிகளின் கோபம் ஒரு கணப்பொழுதுதான் நின்றது. அதன் பலன் இவ்வளவு பயங்கரமாக இருக்குமென்று தணிகாசலம் சற்றும் எதிர்பார்க்கவில்லை. கேசவமூர்த்தி தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தான். அவனைப் பார்ப்பதற்கு மருத்துவமனைக்கு எவரும் செல்லவில்லை. மருத்துவமனையில் கொடுக்கப்படும் உணவையே வாங்கி உண்டான். அவனது பெற்றோரோ, சகோதரர்களோ, உறவினர்களோ அவனைச் சென்று பார்க்கவில்லை. அதனால் தணிகாசலம் கேசவமூர்த்திக்கு தினமும் மூன்று வேளையும் உணவு கொண்டுசென்று கொடுத்தார்.

கேசவமூர்த்தியின் வீடு முற்றாக எரிந்தமையைக் கண்ட தணிகாசலம் வேலாயுதபிள்ளையிடம் சென்றார். ‘‘வேலாயுதம் கேசவமூர்த்தி செய்த அடாவடித்தனத்திற்காக அவனது பெற்றோரைத் தண்டிப்பது நியாயம் அல்ல. பாவம், வயதுபோன நேரத்தில் மரத்திற்குக் கீழ் சமைத்து உண்கிறார்கள். இரவில் மரத்திற்குக் கீழ் படுக்கிறார்கள். அதற்கு ஏதாவது ஒரு முடிவு செய்தல் வேண்டும்.’’

‘‘கெட்டவர்களைத் தண்டித்துத்தான் திருத்துதல் வேண்டும். ஆகவே அவன் மருத்துவமனையால் வந்து வீட்டைத் திருத்தட்டும். அப்போதுதான் அவன் திருந்துவான்’’ என்றார் வேலாயுதபிள்ளை கோபமாக.

‘‘இது என்ன பேச்சு வேலாயுதபிள்ளை. உண்மையான ஒழுக்கமுள்ளவன் கடும்சொல் பேசமாட்டான். கோபப்படமாட்டான். நியாயம் இல்லாதவற்றையும் அமைதியாகக் கேட்பான். நீங்கள் என்னடாவென்றால் சண்டைக்கு வருகிறீர்கள். நீங்கள் எனக்கு உதவியாக சுவாமியாரிடம் வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன்’’ என்றார் தணிகாசலம்.

ஒருகணம் உணர்ச்சிவசப்பட்ட வேலாயுதபிள்ளை பின் அமைதியாகச் சொன்னார்; ‘‘சுவாமியைக் கேளாமல் நாம் முடிவெடுக்கக் கூடாது, வா அவரிடம் செல்வோம்’’.

சுவாமி அரசமர நிழலில் இருந்தார். அவருடன் சபாநாயகமும், சிவசுந்தரமூர்த்தியும் கதைத்துக்கொண்டிருந்தனர். தணிகாசலத்தைக் கண்டதும் சுவாமியார் சொன்னார் ‘‘உன்னைப் போல் ஒரு மனிதனை நான் காணவேயில்லை. கேசவமூர்த்திக்கு தினமும் மூன்று வேளையும் உணவு கொண்டுசென்று கொடுக்கிறாயாமே...’’

“ஓம் சுவாமியார். நீங்கள் தணிகாசலத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. எல்லாரிடமும் நல்ல பெயர் வாங்குவதற்காக எதையும் செய்வான்” என்றார் சிவசுந்தரமூர்த்தி.

சுவாமியார் பலமாகச் சிரித்தார். “சுந்தரமூர்த்தி அறம் என்பது கொடுத்தல் மட்டுமல்ல. உண்மையான அறம் யாதெனில் பொறாமை, பேராசை, கோபம், கடும்சொல் கூறல் என்பவற்றைத் தவிர்த்தல் ஆகும். கொடிய பாவங்களைச் செய்தவனையும் மன்னித்தல் வேண்டும். தன்னைக் கொல்ல வந்த கஜமுகனை கணபதி தனது வாகனமாக்கவில்லையா...? பழிக்குப் பழியும், அடிக்கு அடியும் கொடுப்பதல்ல அறம். எதிரியையும் நண்பனாகக் கருதல் வேண்டும். உறவினர்களால் ஒதுக்கப்பட்டவனுக்கு உதவி அளித்தல் வேண்டும்.”

“சுவாமி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்” பதறினான் சிவசுந்தரமூர்த்தி.

“கேசவமூர்த்திக்கு அடித்தது காணாது. சுவாமி சொன்னதாய் தணிகாசலம் வந்து தடுக்காவிட்டால் கேசவமூர்த்தியைக் கொன்றிருப்பார்கள். அவனைக் கொல்லவேணும்” என்றான் சபாநாயகம்.

“படைக்கப்பட்ட உயிர்களை தன்னோடு ஏற்றுக்கொள்ள கடவுள் ஒருவரால்தான் முடியும். கேசவமூர்த்தி திருந்துவான். நீங்கள் இருவரும் பலரின் வளர்ச்சியில் பொறாமைப்படுகிறீர்கள். தணிகாசலத்திற்கு பேரும் புகழும் கிடைக்கிறதே என்று பொறாமையும், கோபமும் கொள்கிறீர்கள். தணிகாசலம் உத்தமமான மனிதன். பொறாமை, பேராசை இல்லாதவன். கோபம் என்பதே அவனுக்கு வராது. அதனால் தான் கேசவமூர்த்திக்கு தினமும் மூன்று வேளையும் உணவு கொண்டுசென்று கொடுக்கிறான். இப்பொழுதும் அவன் வந்தது கேசவமூர்த்தியின் வீட்டைத் திருத்திக்கொடுப்பதற்காக. தணிகாசலம் இந்தா, இதைப்பிடி, கொண்டுபோய் கேசவமூர்த்தியின் வீட்டைத் திருத்திக்கொடு” என்றவாறு சுவாமியார் கையை நீட்டினார். தணிகாசலம் பணிவுடன் இரண்டு கைகளையும் நீட்டினான். பல ஆயிரம் ரூபா பணத்தை சுவாமியார் தணிகாசலத்திடம் கொடுத்தார். சபாநாயகமும், சிவசுந்தரமூர்த்தியும் திகைத்துப் போனார்கள்.

35. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது அறம்.

பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொற்கள் ஆகிய நான்கையும் தவிர்த்து வாழ்தலே உண்மையான அறமாகும்.

துணையாய் வருவன

கதிர்காமநாதன் அரசடிக் கிராமத்தில் வாழும் பணக்காரர். ஏராளமான நிலபுலங்களுக்குச் சொந்தக்காரர். நல்ல மனம் படைத்தவர். ஏழைகளுக்கு உதவிகள் பல செய்யவேண்டுமென்று நினைப்பவர். ஆனால் எதையும் நேரத்திற்கு செய்யமாட்டார். எதற்கெடுத்தாலும் தவணை சொல்லிப் பழக்கப்பட்டவர்.

கதிர்காமநாதன் அரசடி அம்மன் கோயிலில் நின்றபோது அவ்வூரில் வாழும் ஆறுமுகசாமி என்பவர் அவரிடத்தில் பதற்றத்துடன் வந்தார். ‘‘ஐயா எனது மகனுக்கு சுகமில்லாமல் இருக்கிறது. ஆயிரம் ரூபா தந்துதவினீர்களானால் பெரும் உதவியாக இருக்கும். ஒரு மாதத்தில் திருப்பித் தந்துவிடுகிறேன்’’ என்றார்.

‘‘இப்பொழுது என்னிடம் பணம் இல்லை. நாளைக் காலையில் வீட்டுக்கு வா தருகிறேன்’’ என்றார். வீட்டில் அவரிடம் பணம் இருந்தது. உடனே அதை எடுத்துக் கொடுக்க அவருக்குப் பஞ்சியாக இருந்தது.

‘‘மகன் கடும் நோய்வாய்ப்பட்டிருக்கிறான், உடனே அவனை மருத்துவமனைக்கு கொண்டுசெல்லல் வேண்டும்’’ ஆறுமுகசாமி கெஞ்சினான்.

‘‘யாரிடமாவது மாறு. நாளைக்கு கட்டாயம் தருகிறேன்’’ என்றார் கதிர்காமநாதன்.

ஆறுமுகசாமி வேதனையோடு வீட்டுக்கு வந்தார். மகன் பாயில் சுருண்டு படுத்திருந்தான். அப்பொழுது அங்கே வந்த தணிகாசலம் ஆறுமுகசாமியின் மகனைப் பார்த்துவிட்டுச் சொன்னார்; ‘‘உடம்பு நெருப்பாய்க் கொதிக்குது. உடனே மருத்துவமனைக்கு கொண்டுசெல்வதை விட்டுவிட்டு என்ன செய்கிறாய்’’

‘‘கையிலை ஒரு சதமும் இல்லை அண்ணை. தற்செயலாக மருந்து வாங்க வேண்டுமென்றால் என்ன செய்வது?’’

‘‘நான் காசு தாறன் வா’’ என்று தணிகாசலம் ஆறுமுகசாமியின் மகனை மருத்துவமனைக்குக் கொண்டுசென்றார். மருத்துவமனையில் கடமையில் இருந்த மருத்துவர் பாலகுமாரன் ஆறுமுகசாமியை ஏசினார். ‘‘வருத்தம் முற்றுமட்டும் ஏன் வீட்டில் வைத்திருந்தீர்கள்.

இன்னும் சிலமணிநேரம் தாமதித்திருந்தால் பிள்ளையை உயிரோடு பார்க்க முடியாது''

ஆறுமுகசாமி தணிகாசலத்தைக் கட்டிப்பிடித்து அழுதார். ''தெய்வம் போல் வந்து என்னுடைய பிள்ளையைக் காப்பாற்றினீர்கள்'' என்றார்.

வாரம் ஒன்று கழிந்தது. ஆறுமுகசாமியின் மகன் சுகமடைந்து வீட்டுக்கு வந்தான்.

அரசடி அம்மன் கோயிலின் பரிபாலன சபைத்தலைவர் கதிர்காமநாதன். அவ்வூர் மக்கள் அம்மனுக்குத் தேர் செய்யவிரும்பி பணத்தைச் சேர்த்துக் கொடுத்தார்கள். கதிர்காமநாதன் அப்பணத்தை வங்கியில் வைப்பிலிட்டார். மக்கள் தேர் வேலையைத் தொடங்குமாறு கேட்டுக்கொண்டிருந்தனர். தேர் செய்வதற்கான பணம் முழுவதும் சேர்ந்தபின்தான் தேரைச் செய்யத் தொடங்கலாம் என்று கதிர்காமநாதன் கூறினார்.

அன்னதான மடம் ஒன்றை அம்மன் கோயிலில் கட்டுவதற்கு அவ்வூரில் வாழும் சிவநாதன் விரும்பினார். பணம் முழுவதையும் சேர்த்த பின்புதான் அன்னதான மடம் கட்ட முடியும் என்று கூறினார் கதிர்காமநாதன். வேலையைத் தொடங்கினால் சேர்த்துக் கட்டலாம் என்று சிவநாதன் கூறியபோதும் அவர் கேட்கவில்லை.

ஆறுமுகசாமியின் மூத்தமகன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானான். ஆறுமுகசாமி பரம ஏழை. அதனால் பரிபாலன சபையினர் பண உதவிசெய்ய முன்வந்தனர். கதிர்காமநாதன் நிர்வாகசபையிடம் இருந்த காசைக் கொடுத்துவிட்டு மக்களிடம் சேர்க்க விரும்பவில்லை. மக்களிடம் சேர்த்துக் கொடுக்கச் சொன்னார். பணம் சேர பலமாதங்கள் சென்றமையால் அவனது கல்வி தடைப்பட்டது.

ஒருநாள் திடீரென்று ஸ்ரீனிவாச சுவாமிகள் அம்மன் கோயிலுக்கு வந்தார். அவரை மக்கள் ஒன்றுகூடி வரவேற்றனர். பிரசித்தி பெற்ற அவ் அம்மன் கோயில் பாழடைந்திருப்பதைக் கண்ட சுவாமிகளுக்கு வேதனையாக இருந்தது.

''நாம் அறம் செய்வதை பிற்போடாது உடனே செய்தல் வேண்டும். ஒருவனது இறப்பு என்று நடக்குமென்று யாருக்கும் தெரியாது. எனவே ஒருவன் இறக்கும் காலத்திலும், இறவாத துணையாய் உதவுவது அறம் ஒன்றுதான். எனவே அன்றே அறத்தைச் செய்தல் வேண்டும். கதிர்காமநாதனால் அது முடியாத காரியம். பரிபாலன சபைப் பொறுப்பை இன்னொருவரிடம் கொடுங்கள், விரைவில் யாவும் முடியும்'' என்றார் சுவாமிகள்

மக்கள் எல்லோருமாகச் சேர்ந்து சிவநாதனைத் தலைவராகத் தெரிந்தனர். ஒரு வருட காலத்தில் அம்மனுக்கு தேர் உருவானது. அன்னதான மடமும் கட்டப்பட்டது.

36. அன்றுஅறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றுஅது

பொன்றும்கால் பொன்றாத் துணை.

பின்பு செய்வோம் என்று நினைக்காது அன்றே அறத்தைச் செய்தல் வேண்டும். ஒருவன் இறந்த பின்பு அவனுடன் துணையாக கூடச்செல்வது அறம் ஒன்றுதான்.

அறத்தின் பயன் அல்ல

வேலாயுதமும் அவரது சகோதரன் சுப்பிரமணியமும் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதியின் தீவிர பக்தர்கள். அவர்களது தந்தை ஈஸ்வரநாதன் தனது சொத்தை இரண்டு சம பங்குகளாகப் பிரித்து இருவருக்கும் கொடுத்துவிட்டுச் சொன்னார் ‘‘வேலாயுதம் நீ நல்ல உழைப்பாளி. சுறுசுறுப்பானவன். ஆனால் சுப்பிரமணியம் கடும் சோம்பேறி. உழைப்பதற்கு விரும்பாதவன். எனது சொத்தின் சிறுபகுதியை உனக்குத் தந்தாலும் அதை வைத்துக்கொண்டு முன்னேறிவிடுவாய். ஆனால் நான் நினைப்பது பிற்காலத்தில் நடக்காது போனால் நீ மனம் நோவாய் என்பதற்காக எனது சொத்தை சரிசமமாகப் பங்கீடு செய்தேன். சுப்பிரமணியம் கஷ்டப்பட்டுப்போனால் உன்னாலான உதவிகளைச் செய். எமது குலதெய்வமான நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதிக்குத் தொண்டுசெய்ய மறக்காதே. அத்துடன் நலிந்தவர்களுக்கும், ஏழைகளுக்கும் உன்னாலான எல்லா உதவிகளையும் செய்’’

வேலாயுதம் தந்தையின் வார்த்தைகளை மந்திர வாக்காக ஏற்று நடந்தான். ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்காது கஷ்டப்பட்டு உழைத்தான். அவனது மனைவியும் அவருடன் வேலை செய்வாள். அவரது நான்கு பிள்ளைகளும் பாடசாலை இல்லாத நேரங்களில் தகப்பனுடன் தோட்டத்தில் வேலை செய்வார்கள்.

பயிர்களை நடுமுன் தோட்டத்தை நன்றாகப் பண்படுத்துவான். வேண்டியளவு பசளை இடுவான். பயிர்களுக்கு நோய் வராமல் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவான். முறைக்கு முறை நீர் பாய்ச்சுவான்.

உரிய நேரத்தில் களை எடுப்பான். அதனால் அவனுக்கு வருடாவருடம் பெருவிளைச்சல் கிடைக்கும்.

வேலாயுதத்திடம் நூற்றுக் கணக்கான மாடுகள் நின்றன. அவற்றை அவன் தோட்டங்களிலும், வயல்களிலும் கட்டுவான். ஒரு மாட்டிற்கு நோய் வந்தால் அதை அவன் தன் பிள்ளைக்கு நோய் வந்ததாய்க் கருதி அக்கறையுடன் சிகிச்சையளிப்பான்.

வேலாயுதம் தன்பிள்ளைகளை அன்போடும், கண்டிப்போடும் வளர்த்தான். அதனால் அவர்கள் பல்கலைக்கழகத்தில் கற்கும்போதும் தோட்ட வேலைகளை வெட்கப்படாமல் செய்வார்கள். அவனது முத்தமகன் படிப்பு முடிந்து பட்டணத்தில் பெரியதொரு வேலையில் இருந்ததால் அவனுக்கு வேலாயுதம் இரண்டு இலட்ச ரூபாவுக்கு உந்துருளி வாங்கிக் கொடுத்தார். அவன் பல்கலைக்கழகத்தில் கற்கும் தனது தங்கையர் இருவரையும் உந்துருளியில் ஏற்றிச்சென்று பல்கலைக்கழகத்தில் விட்டுவிட்டு வேலைக்குச் செல்வான்.

சுப்பிரமணியம் சோம்பியிருந்ததால் அவனது தோட்டங்களிலும், வயல்களிலும் பெருவிளைச்சலைப் பெறமுடியவில்லை. விவசாயத்தின் மூலம் வரும் வருமானம் அவனது குடும்பத்தைக் கவனிக்கப் போதுமானதாக இருந்தபோதும் வேலாயுதத்தைப் போல் ஆடம்பரமாக அவனால் வாழமுடியவில்லை. சுப்பிரமணியத்தின் மகன் படிப்பில் கெட்டிக்காரனாக இருந்தபோதும் சுப்பிரமணியம் அவனைச் சரியாகக் கவனிக்காததால் அவன் உயர்தரப் பரீட்சைகளில் சாதாரணமாகவே சித்தியடைந்தான். அத்துடன் பட்டணத்தில் சிறியதொரு வேலையில் சேர்ந்தான். அதனால் அவன் தினமும் துவிச்சக்கரவண்டியிலேயே வேலைக்குச் சென்றுவந்தான்.

வேலாயுதம் தனது பிள்ளைகள் நல்ல உணவு வகைகளை உண்ணும்போதும் சுப்பிரமணியத்தின் பிள்ளைகள் சத்தில்லா உணவுகளை உண்பதை அறிந்து இடைக்கிடை உதவிசெய்வான். நல்ல உடுபுடைவைகள் வாங்கிக்கொடுப்பான். மஹா கணபதி ஆலயத்தில் பெரும் பொங்கல் செய்யும் போதும் சுப்பிரமணியத்தையும் ஒப்புக்குச் சேர்த்துக்கொள்வான். மஹா கணபதி கோயில் கட்டட வேலைகளுக்கு தான் பணம் கொடுக்கும்போது சுப்பிரமணியத்தின் பெயரிலும் கொடுப்பான். விஷயம் ஊர் மக்களுக்குத் தெரியும். சுப்பிரமணியத்தின் பிள்ளைகள் அதிகம் படிக்காததால் தனது தோட்டநிலத்தை சுப்பிரமணியத்தின் பிள்ளைகளுக்கு செய்கை பண்ணுவதற்காகக் கொடுத்தான். அதைச் செய்வதற்கு பணமும் கொடுத்தான். எனினும் அவர்களால் முன்னேற முடியவில்லை. அது வேலாயுதத்திற்கு பெரும் மனவருத்தத்தைக் கொடுத்தது.

37. அறத்தாறு இதுஎன வேண்டா; சிவிகை

பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

பல்லக்கைச் சுமப்பவனையும், அதில் பயணம் செய்பவனையும் கண்டு இதுதான் அறத்தின் பயன்னென எண்ண வேண்டாம்.

வழியடைக்கும் கல்

ஸ்ரீனிவாச சுவாமிகளின் சரித்திரமும், சிந்தனைகளும் என்ற நூலை ஒருமுறை படித்துப் பார்த்தார் தணிகாசலம். பத்து வருடங்களாக சுவாமிகள் அவ்வப்போது கூறும் சிந்தனைகளை தணிகாசலம் எழுதிவந்தார். அவர் எழுதியவற்றின் பெரும்பகுதி அந்நூலில் தொகுக்கப்பட்டிருந்தது. பத்து வருடங்களுக்கு முன்பு எழுதிய குறிப்பொன்றை அவர் அடிக்கடி வாசித்துப் பார்ப்பார். அதன்பின் அதன்படி நடந்துகொள்வார். அன்று அக்குறிப்பை எடுத்து நூலோடு ஒத்துப் பார்த்தார். சுவாமி கூற தான் எழுதியது அப்படியே அச்சுருப்பெற்றிருந்தது. "நல்லவற்றை தினமும் செய்யுங்கள். ஒருவன் தவறாது அறம் செய்வானானால் அதுவே அவன் வாழும் நாளாகக் கருதப்படும். இந நல்லறமானது அவனது பிறவிகளை அடைக்கும் கல்லாகச் செயற்படும்."

அதன்பின் தணிகாசலம் தினமும் யாருக்காவது உதவி செய்தலை வழக்கமாகக் கொண்டிருந்தார். வேலாயுதத்திடமும், சுப்பிரமணியத்திடமும் ஏராளமான மாடுகள் நின்றன. சுப்பிரமணியம் மாடுகளை தோட்டங்களில் பட்டியாக அடைப்பார். மாடுகளை பட்டியாக அடைப்பதற்கு தினமும் தணிகாசலம் உதவிசெய்வார். அத்துடன் மாடுகள் நீர் குடிப்பதற்கு வசதியாக கிணற்றடியில் சிறிய தொட்டியொன்று உள்ளது. தினமும் அத்தொட்டியை நிரப்பிவிடுவார். மேய்ச்சல் மாடுகள் தாகமேற்பட்டால் அந்த தொட்டிக்கு வந்து நீர் குடிக்கும்.

தினமும் காலையில் நான்கு மணிக்கு நித்திரைவிட்டு எழும்பிவிடுவார். நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி கோயிற் பூந்தோட்டத்திற்கு நீர் இறைப்பது அவர்தான். நீர் இறைத்த பின்பு தனது தோட்டத்திற்குச் சென்று வேலை செய்வார். இடையில் பாடசாலை வேலைகள், சனசமூக நிலைய வேலைகள், பாலர் பாடசாலை வேலைகள் என்று பல வேலைகள் அவருக்கு இருந்தபோதும் எல்லாவற்றையும் மகிழ்வுடன் செய்வார்.

அவரை ஓய்வாக இருக்க அவ்வூர் மக்கள் விடமாட்டார்கள். நடுச்சாமத்திலும் யாராவது ஒருவர் வந்து அவரது நித்திரையைக் கெடுப்பர். அவரது நித்திரையைக் கெடுப்பதில் முக்கிய பங்கு வகிப்பவன் சேனாதிராசா. சேனாதிராசா நன்றாகக் குடித்துவிட்டு வந்து இரவில் மனைவியுடன் சண்டைபிடிப்பான். சண்டையின் போது பல தடவைகள் சட்டி, பானைகளை உடைப்பான். அவனது அட்டகாசத்தால் வீட்டில் இருக்கப் பயப்படும் அவனது மனைவியும், பிள்ளைகளும் அவர்களது வீட்டிற்கு அருகில் இருக்கும் தணிகாசலத்தின் வீட்டிற்கு வருவார்கள்.

தணிகாசலம் சேனாதிராசாவைத் திருத்த எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. இரவு மனைவியுடன் சண்டை பிடித்தால் மறுநாட் காலை சேனாதிராசா தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்து அழுவான். தான் இனிச் சண்டை பிடிக்கமாட்டேன் என்று சத்தியம் செய்வான். அதன்படி நாலைந்து தினங்களுக்கு நடந்துகொள்வான். பின் பழையபடி குடித்துவிட்டு மனைவியை அடிப்பான். சேனாதிராசா தணிகாசலத்திற்கு தீராத தலைவலியைக் கொடுத்துக்கொண்டிருந்த போதும் அவன் ஒரு காலத்தில் திருந்துவான் என நம்பியிருந்தார்.

நாவலடிக் கிராமத்தில் உள்ள அரசினர் மருத்துவமனைக்கு தினமும் செல்லும். தணிகாசலம் அங்கு தங்கியிருக்கும் உதவி இல்லாதோருக்கு தன்னாலான உதவிகளைச் செய்வார். சகோதரர்களுக்கிடையில் ஏதாவது பிரச்சினைகள் வந்தால் அதைத் தீர்த்து வைப்பார். மருத்துவமனையில் தங்கியிருப்போரை உறவினர்கள், சகோதரர்கள் கவனிக்காவிட்டால் சம்மந்தப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று பாவபுண்ணியங்களை எடுத்துக்கூறி சமாதானப்படுத்தி நோயாளர்களைக் கவனிக்கச் செய்வார். என்னதான் வேலை இருந்தாலும் இரவு எட்டுமணி தொடக்கம் ஒன்பது மணிவரை நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய மண்டபத்திற்கு முன்னால் உள்ள அரசமர நிழலில் சுவாமிகளுடன் இருப்பார். அந்த மரத்தடியில் அவருடன் இருபத்தைந்து முப்பது பேர் இருப்பார்கள். அதில் பெரும்பான்மையான ஊர்ப் பிரச்சினைகள் தீர்ந்துவிடும். தணிகாசலத்தை சந்திக்க விரும்புவோர் தினமும் அந்நேரம் கோயிலடியில் வந்து சந்தித்துக்கொள்வர். எல்லாப் பிரச்சினைகளையும் அவர் மஹா கணபதியை முன்நிறுத்தி முடித்து வைப்பார்.

38. வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அ∴தொருவன்

வாழ்நாள் வழியடைக்கும் கல்.

ஒருவன் தான் தவறாது அறச் செயல்களைச் செய்து வருவானேயானால், அதுவே அவனது பிறவிக்கான வழியை அடைக்கும் கல்லாகும்.

இன்பம்

சிவஞானம் புகழ்மிக்க மருத்துவர். அவர் வாழ்கின்ற அரசடியின் அயற்கிராமங்களிலிருந்தெல்லாம் இரவும் பகலும் சிகிச்சைக்காக மக்கள் வந்து செல்வார்கள். கிராமத்தின் மத்தியில் பெரியதொரு ஆஸ்பத்திரியை தனது செலவில் கட்டி வைத்தியம் செய்து வந்தார் சிவஞானம்.

சிவஞானம் கண்டிப்பானவர். பேராசை நிறைந்தவர். எந்த நோயாளிக்கும் கடனுக்கு வைத்தியம் செய்யமாட்டார். நோயாளிகளுடன் பண்பாகப் பழகமாட்டார். நோயின் வேதனையால் கஷ்டப்படுபவர்களை தகாத வார்த்தைகளால் ஏசுவார். சேவை மனப்பாங்கு அவரிடம் அறவே கிடையாது. பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டவர்.

ஆரம்பத்தில் பண ஆசையால் இரவு பகல் பாராது தனது தொழிலை செய்து வந்தார். காலப்போக்கில் தனது வேலை நேரத்தைக் குறைத்து சம்பளத்திற்கு வைத்தியர்களை அமர்த்தி மக்களுக்கு சிகிச்சையளித்து வருகிறார்.

மிகுந்த கைராசிக்காரரான அவர் தொட்டாலே தமக்கு நோய் தீர்ந்துவிடும் என்று மக்கள் நம்பினர். அயற்கிராம மக்கள் அவரது வைத்தியசாலையின் முன்பு இரவில் வந்து தங்கி அனுமதிச்சீட்டு எடுத்து சிகிச்சை பெற்று வந்தனர்.

அரசடியில் சின்னத்தம்பி என்ற ஓர் ஆசிரியர் இருந்தார். அவருக்கு ஆறு பிள்ளைகள். அவரது வருமானம் அவரது குடும்பத்தை கொண்டு நடத்தப் போதாமல் இருந்தது. ஊரில் உள்ள ஆசிரியர்கள் எல்லோரும் பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தியும், தோட்டம் செய்தும் சம்பாதித்து வந்தனர். ஆனால் சின்னத்தம்பி எட்டரை மணிக்கு தொடங்கும் பாடசாலைக்கு ஏழுமணிக்கே சென்று விடுவார். காலையில் அந்த வருடம் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்களை நடாத்துவார். எட்டு மணிக்கு அவரது மகன் பாடசாலைக்கு செல்லும்போது அவருக்கு காலை உணவு கொண்டு வருவான். பாடசாலை இரண்டு முப்பது மணிக்கு விட்டபின்பும் மாலை நேர வகுப்புக்கள் வைப்பார். அவரின் வீட்டுக்கு அருகில் இருக்கும்

பெற்றோர் யாராவது ஒருவர் அவரது வீட்டுக்குச் சென்று மதிய உணவை எடுத்து வந்து பாடசாலையில் கொடுப்பார்கள். அவர் வீட்டுக்கு வர ஐந்து மணியாகிவிடும்.

ஐந்து மணிக்கு வீட்டுக்கு வந்து தேனீரை அருந்திவிட்டு கோயிலுக்குச் செல்வார். கோயிலுக்குச் சென்று குருக்களோடும் நிர்வாகத்தினருடனும் கதைத்துவிட்டு நூல்நிலையத்திற்கு வருவார். நூல் நிலையத்தில் இருந்து அவர் புறப்பட எப்படியும் இரவு பத்து மணியாகிவிடும். அந்த நூல் நிலையத்தில் மாதர் சங்கம், இளைஞர் மன்றம், தாகசாந்தி நிலையம், கூட்டுறவுப் பண்டகசாலை, பாலர் பாடசாலை என்பன இயங்கி வந்தன. எல்லாவற்றிற்கும் ஆலோசகர் சின்னத்தம்பி தான்.

அன்று நூல் நிலையத்தால் இரவு பதினொரு மணிக்கு வீட்டுக்கு வந்த சின்னத்தம்பியை மனைவி கோபத்தோடு வரவேற்றாள். ‘‘பொழுது புலர வெளிக்கிட்ட நீங்கள் நடுச்சாமத்தில் வாறியள். வீட்டில் நான் படும் கஷ்டம் ஆருக்குத் தெரியும். சமையல் மட்டுமே? ஆடுமாடு, கோழிகளைப் பராமரிக்க வேண்டும். பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டும். ஒண்டெண்டாலும் சொல்லுக் கேட்குதில்லை...’’

‘‘பேசாதையும். என்னிலை பிழைதான். இனிமேல் நான் எல்லாவற்றையும் கவனிக்கிறன்...’’

‘‘இப்பிடித்தான் நெடுகச் சொல்லுறியள். எப்பெண்டாலென்ன செய்தனீங்களே...’’

சின்னத்தம்பி பெரிதாகச் சிரிப்பார். அத்துடன் சண்டை முடிந்துவிடும்.

நாட்கள் நகர்ந்தன. பாலகுமாரன் நாவலடிக் கிராம வைத்தியசாலைக்கு பொறுப்பான வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டார். மக்களோடு அன்பாகவும், பண்பாகவும் பழகினார். கஷ்டப்பட்டவர்களை அரவணைத்தார். முகமலர்வுடன் மக்களோடு பழகினார். எந்நேரமும் மருத்துவமனையில் இருந்தார். அதனால் மக்கள் அரச மருத்துவமனையை நாடிச் சென்றனர். நாளடைவில் சிவஞானத்திடம் சிகிச்சைக்காக எவரும் செல்லவில்லை.

சின்னத்தம்பி பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்றார். அன்றைய தினம் ஊரே விழாக்கோலம் பூண்டது. பாடசாலையில் இருந்து அவரை மக்கள் சிவிகையில் ஏற்றிச் சுமந்து வந்தனர். வீதிகள் எங்கும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீட்டு வாசல்களிலும் பூரண கும்பம் வைத்து மாலை சூடி சின்னத்தம்பி ஆசிரியரின் காலைத் தொட்டு மக்கள் வணங்கினர்.

அதை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார் சிவஞானம்.

39. அறத்தான் வருவதே இன்பம்;மற் றெல்லாம்
புறத்த; புகழும் இல.

அறச் செயல்களால் வருவதுதான் இன்பம். அறமற்ற செயல்களால் துன்பம் வருவதோடு புகழும் கெடும்.

செயலும் தவிர்ப்பும்

பாலகுமாரன் நாவலடிக் கிராம அரசினர் மருத்துவமனையில் மருத்துவராக நியமிக்கப்பட்ட நாள்முதல் தந்தையின் சொற்படி கடமையாற்றி வந்ததால் நாவலடிக் கிராம மக்களிடத்து நல்ல பெயரைப் பெற்றார். வசதியான வீடு கிராமத்தில் இருந்தபோதும் அவர் மருத்துவமனையில் மருத்துவர்கள் தங்குவதற்கென அமைக்கப்பட்ட வசதிகள் குறைந்த வீட்டிலேயே தங்கினார். அவரது தாயார் தமது வீட்டில் தங்கும்படி வற்புறுத்திய போதும் பாலகுமாரன் அதற்குச் சம்மதிக்கவில்லை. தினமும் பாலகுமாரன் காலையில் நேரத்திற்கு மருத்துவமனைக்குச் சென்றுவிடுவதால் காலை உணவை இரகுநாதன் கொண்டுபோய்க் கொடுப்பார். மத்தியானமும் இரவும் பாலகுமாரன் வீட்டுக்கு வந்து உணவை உண்பார்.

இரகுநாதன் தினமும் பாலகுமாரனுக்கு அறப்போதனை செய்வார். ‘‘ஒருவன் தனது வாழ்நாளில் முயன்று செய்யவேண்டியது நல்ல அறச் செயல்களையே. அவன் தவிர்க்க வேண்டியது தீராத பழியை விளைவிக்கும் மறச் செயல்களையே’’ என்று சொல்வார். அத்துடன் ‘‘நாம் வேலை செய்யும்போது சகல விஷயங்களையும் கவனித்துக்கொள்ளல் வேண்டும். எமக்குக் கீழ் வேலைசெய்யும் அனைவரும் தத்தமக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை நல்ல முறையில் செய்து முடிக்கிறார்களா என்று கவனிப்பது அறத்தின் பாற்பட்டது. அவர்களைக் கவனிக்காது விட்டால் அவர்கள் ஒழுங்காக வேலை செய்யமாட்டார்கள். அதனால் நோயாளருக்கு மருத்துவமனையில் கொடுக்கப்படும் உணவுகள் ஒழுங்கான முறையில் கொடுக்கப்படுகின்றதா எனக் கவனிப்பதோடு நோயாளரிடமும் அபிப்பிராயம் கேட்டல் வேண்டும்’’ என்பார்.

அன்று இரகுநாதன் கூறியதற்கிணங்க பாலகுமாரன் மதிய உணவை நோயாளர்களுக்குக் கொடுத்தபின் அங்குசென்று பார்த்தார். பல நோயாளர்களுக்கு எழுதப்பட்டபடி உணவு கொடுக்கப்படவில்லை. ஆறுமுகம் என்ற நோயாளிக்கு காலையும், மாலையும் பால் கொடுக்குமாறும், வேறு ஆறு நோயாளர்களுக்கு தோடம்பழங்கள் கொடுக்குமாறும், ஐந்து நோயாளர்களுக்கு இளநீர் கொடுக்குமாறும் அவர் எழுதியிருந்தார். ஆனால் அவை எதுகும் கொடுக்கப்படவில்லை. அவை யாவும் கொடுக்கப்பட்டதாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

அவர் சம்மந்தப்பட்ட நோயாளிகளை விசாரித்தபோது ஒருவன் சொன்னான்; ‘‘ஐயா, இங்கு உங்களால் எழுதப்படும் எந்த உணவு வகைகளும் கொடுக்கப்படுவதில்லை. சோறும், உப்புச் சப்பில்லாத கறிகளும் தருவார்கள்.’’

‘‘நீங்கள் ஏன் சொல்வதில்லை...?’’

‘‘சொன்னால் மருத்துவமனை நிர்வாகம் குறை நினைக்குமென்று நினைத்தோம். அத்துடன் இரண்டொரு நாட்தானே, ஏன் வீண்வம்பு என்று பேசாமல் இருந்துவிடுவோம்...’’

பாலகுமாரன் சம்மந்தப்பட்ட உத்தியோகத்தரை அழைத்து விசாரித்தார். அவர் உணவை சமைத்துக் கொடுப்பவரோடு சேர்ந்து செயற்படுவது தெரிந்து உணவை மருத்துவமனைக்கு வழங்குபவரை அழைத்து விசாரித்தார். ‘‘இனிமேல் தவறுகள் செய்யமாட்டேன்’’ என்றார் அவர்.

அதன்பின் பாலகுமாரன் அடிக்கடி மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களுக்கு கொடுக்கப்படும் உணவைப்பற்றி விசாரித்துக்கொண்டிருந்தார். அதனால் நோயாளர்களுக்கு நல்ல உணவு கிடைத்தது.

அன்று உணவருந்த வந்த பாலகுமாரனுக்கு இரகுநாதன் சொன்னார் ‘‘மருத்துவர்கள் எழுதும் விலையுயர்ந்த மருந்துக் குளிகைகள் ஒழுங்காக நோயாளிக்குச் சென்றடைகிறதா என்று கவனித்துப்பார்’’

அன்று மாலை வந்த நோயாளி ஒருவருக்கு நோய்க்கு ஏற்ற விலையுயர்ந்த மருந்துக் குளிகைகள் பதின்நான்கை எழுதினார் பாலகுமாரன். சிறிது நேரம் கழித்து அந்நோயாளி மருந்து வாங்கியதும் பாலகுமாரன் அங்குசென்று அந்நோயாளியிடம் மருந்துச்சரையை வாங்கி பிரித்துப் பார்த்தார். தான் எழுதிய குளிகைகள் பதின்நான்குக்குப் பதிலாக ஏழு குளிகைகள் இருந்தன. பாலகுமாரன் மருந்தாளரை அழைத்து விசாரித்தார். மருந்தாளன் நடுநடுங்கினான்.

“நான் செய்தது மிகவும் பெரிய தவறு என்பதை ஒத்துக்கொள்கிறேன். இனிமேல் அப்படிச் செய்யமாட்டேன்” என்று அழுதான்.

“நீ நோயாளிகளின் உயிரோடு விளையாடுகிறாய். குறிப்பிட்ட மருந்தை நோயாளி குடிக்காவிட்டால் எப்படி நோய் குணமாகும். எனவே உனக்குத் தண்டனை தருதல் வேண்டும். நான் மேலிடத்திற்கு உன்னைப்பற்றி கட்டாயம் அறிவிப்பேன்” என்றார் பாலகுமாரன். அதன்பின் அவர் அம் மருத்துவமனையின் சகல விடயங்களையும் உன்னிப்பாகக் கவனித்தார். அதனால் தொழிலாளர் எல்லோரும் தத்தமது கடமைகளை ஒழுங்காகச் செய்தனர். “கடமை தவறுவதும் மறச்செயல்தான்” என்று தந்தை சொன்னதில் எவ்வளவு உண்மை பொதிந்திருக்கிறது என்று நினைத்தார் பாலகுமாரன்.

40. செயற்பாலது ஓரும் அறனே; ஒருவற்கு
உயற்பாலது ஓரும் பழி.

ஒருவன் தனது வாழ்நாளில் செய்யத்தக்கது அறமே. செய்யாமல் தவிர்க்க வேண்டியது பழியைத் தரும் மறச் செயல்களே.

மூவர்க்கும் துணை

இரகுநாதன் எப்பொழுதும் இரண்டு மூன்று பேருக்கு கூடுதலாக உணவு சமைத்து வைக்கச்சொல்லி தனது மனைவிக்குக் கூறியுள்ளார். வெளியூர்களில் இருந்து நாவலடிக் கிராம மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வருவோர், பிரமச்சாரிகள், துறவிகள், ஏழை எளியவர்கள் என்று யார் வந்தாலும் மக்கள் இரகுநாதனின் வீட்டைக் காண்பிப்பார்கள். வந்தவர்கள் அங்கு வந்து களைப்பாறி உணவு உண்டுவிட்டுச் செல்லலாம். இதை அவர் ஒரு நோன்பாக நெடுநாட்களாகக் கைக்கொண்டு வருகிறார்.

நவராத்திரி பூசை ஆரம்பமானால் பத்து நாட்களும் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் அன்னதானம் நடைபெறும். அந்தப் பத்து நாட்களுக்குமான அன்னதானப் பொறுப்பை இரகுநாதன் ஏற்றுக்கொள்வார்.

அவரிடம் ஆங்கிலம் கற்ற மாணவர்கள் பலர் வெளியூரில் வேலை செய்கிறார்கள். அவர்கள் இரகுநாதனின் வீட்டுக்கு வந்தால்

கட்டாயம் உணவு அருந்தித்தான் செல்லவேண்டும். சேனாதிராசா சரியான குடிகாரன். குடித்துவிட்டு மனைவியையும், பிள்ளைகளையும் அடிப்பான். ஒழுங்காக வேலைக்குச் செல்லமாட்டான். அதனால் அவனது பிள்ளைகள் மூவரும் பாடசாலைக்குச் செல்வதில்லை. நன்றாகப் படிக்கக்கூடிய அவர்களை பாடசாலைக்கு அனுப்பும்படி பலதடவைகள் தணிகாசலம் சேனாதிராசாவைக் கேட்டுக்கொண்டபோதும் அவன் அதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. அதனால் மனம் வருந்திய தணிகாசலம் இரகுநாதனிடம் சென்றார். ‘‘ஐயா, சேனாதிராசா தினமும் குடித்துவிட்டு மனைவியையும், பிள்ளைகளையும் அடித்து உதைப்பதால் அவர்கள் தனியே சென்று வாழ்கிறார்கள். அவனது பிள்ளைகள் மூவரும் கல்வியில் வல்லவர்கள். தகப்பனின் குடியால் அவர்களது கல்வியும், முன்னேற்றமும் கெட்டுவிட்டது. நான் அவ்வப்போது உதவிகள் செய்வேன். எனது வருமானம் எனது குடும்பத்திற்கே போதாதுள்ளது. எனவே தயவுசெய்து அவர்களது கல்விக்கு உதவி செய்யுங்கள்’’ என்றார்.

‘‘உன்னால் முடியாது என்று எனக்குத் தெரியும். ஆனால் என்னால் உதவிசெய்ய முடியும். எப்படிச் செய்வது என்றுதான் புரியவில்லை. நான் கொடுப்பதை சேனாதிராசா விடுவானா...?’’

‘‘தங்கள் மூன்று ஆண்பிள்ளைகளையும் உங்கள் வீட்டில் கூட்டிவந்து வைத்துக் கற்பியுங்கள். பாடசாலை வேளை முடிய நீங்கள் கற்பிக்கலாம்’’ என்றார் தணிகாசலம்.

இரகுநாதன் அதற்கு ஒப்புக்கொண்டார். சேனாதிராசாவின் பிள்ளைகள் மூவரையும் வீட்டுக்கு அழைத்துவந்து அவர்கள் கல்வி கற்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்தார். பாடசாலையில் அவர்கள் கற்கும் நேரம் தவிர்ந்த நேரங்களில் ஆங்கிலத்தை அவர்களுக்குக் கற்பித்தார். மாலை வேளைகளில் தனது தோட்டத்திற்கு கூட்டிச்சென்று தோட்டவேலைகளைச் செய்வித்தார். அதற்கான கூலிப்பணத்தை மூவரினதும் பெயரில் வங்கியில் வைப்பிலிட்டார். ஸ்ரீனிவாச சுவாமிகளுக்கு ஒருவேளையென்றாலும் உணவுகொடுக்க வேண்டுமென்று விரும்பினார். அதற்காக அவர் பல தடவைகள் உணவைச் சமைத்துக் கொண்டுபோய் சுவாமிகளுக்குக் கொடுத்தார். சுவாமி அதை வாங்கவில்லை. அதனால் வீமனுக்கு வைத்தார். வீமனும் அதைச் சாப்பிடவில்லை. அது இரகுநாதனுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தபோதும் அவர் அதை யாரிடமும் கூறவில்லை.

அன்று மகா சிவராத்திரி. நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் சிவராத்திரி விழா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படும். அன்றைய விழாவுக்கு பல ஊர்களில் இருந்தும்

துறவிகளும், பக்தர்களும் வருவார்கள். காலை கோயிலில் சமைத்து விரதம் பிடிக்கும் அடியார்க்கும், ஏனைய பக்தர்களுக்கும் வழங்குவார்கள். அன்று காலை சுவாமிகள் வேலாயுதபிள்ளையையும், தனபாலசிங்கத்தையும், வேற்றூர்களில் இருந்துவந்த பக்தர்களையும், சன்னியாசிகளையும் அழைத்தார்.

அவர்கள் எல்லோரும் வந்தவுடன் சுவாமிகள் நடக்க ஆரம்பித்தார். வீமன் அவருக்கு முன்னே சென்றது. சுவாமியார் யாரோ ஒரு பக்தரின் வீட்டுக்குச் செல்கிறார் என்பதை தணிகாசலம் உணர்ந்துகொண்டார். சுவாமியாருக்கு முன்பு வேகமாகச் சென்ற வீமன் இரகுநாதன் வீட்டுப்படலையடியில் நின்று திரும்பிப்பார்த்தது. சுவாமிகள் வருவதைக் கண்ட வீமன் இரகுநாதனின் வீட்டுக்குள் சென்றது. ‘‘சுவாமிகளின் நாய்’’ என்றவாறு எழுந்த இரகுநாதன் சுவாமிகளோடு பக்தர் பலரும் வருவதைக் கண்டு மகிழ்ந்தார்.

அன்று முழுவதும் சுவாமிகளும், பக்தர்களும் இரகுநாதன் வீட்டிலேயே தங்கியிருந்தனர். அவர்களுக்கு இரகுநாதன் சுவையான உணவுகளை வழங்கினார்.

41. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்

நல்லாற்றின் நின்ற துணை.

இல்வாழ்வான் எனப்படுபவன் அறத்தின் இயல்பை உடைய பிரமச்சாரி, வானப்பிரத்தன், சந்நியாசி ஆகிய மூவரும் நல்வழியில் நிலைபெறத் துணையாவான்.

துணைவன்

இராமநாதனின் மகன் வைகுந்தன். இராமநாதன் வைகுந்தனை மிகவும் செல்லமாக வளர்த்தார். அவர் திருமணஞ் செய்து பலகாலம் பிள்ளைகள் இல்லாதிருந்தார். பல கோயில்களுக்கு வேண்டுதல் செய்ததன் பலனாக வைகுந்தன் பிறந்தான். தவமிருந்து பெற்றமையால் அவர் அவனை மிகவும் செல்லமாக வளர்த்தார். அதனால் வைகுந்தன் பொறுப்புக்களின்றி வளர்ந்தான். பாடசாலைக்கு அவன் சென்றபோதும் ஒழுங்காகக் கல்வியைக் கற்கவில்லை. நண்பர்களோடு சேர்ந்து ஊர் சுற்றினான். வேளாவேளைக்கு அவனுக்கு அறுசுவையுடன் உணவு

கிடைத்தது. இராமநாதன் அவனைக் கண்டிக்கும் வேளைகளில் அவனது மனைவி இராமநாதனை ஏசுவாள்.

“அவன் சின்னப்பிள்ளை. வயது வந்ததும் தனது பொறுப்புக்களை உணர்வான். இப்பொழுது ஏன் அவனைக் கண்டிக்கிறீர்கள். ஒரே ஒருபிள்ளை. நீங்களே கொடுமைப்படுத்தினால் எப்படி” என்பாள்.

தாயின் அரவணைப்பு மிகுந்ததால் நிலைமை மேலும் மோசமாக்கியது. வீட்டுக்குத் தெரியாமல் மதுபான வகைகளைக் குடிக்கத் தொடங்கினான்.

இராமநாதன் சிறியதொரு கடை வைத்திருந்தார். அதிலிருந்து வரும் வருமானம் குடும்பத் தேவைக்கு அதிகமாக இருந்தது. குடும்பத்தேவைக்கு போக மிகுதிப் பணத்தை வங்கியில் சேமித்தார். அப்பணம் பெருந்தொகையாக வைப்பில் இருந்தது.

வைகுந்தன் வளர்ந்து இளைஞனானதும் தனது சகோதரியின் மகளான கோசலையை அவனுக்குத் திருமணஞ் செய்து வைத்தார். அவனுக்கு ஆறு பிள்ளைகள் பிறந்தன.

இராமநாதனுக்கு வயது சென்றுவிட்டது. அவரால் முன்புபோல் வேலை செய்ய முடியவில்லை. அதனால் தான் நிர்வகித்து வந்த கடையை வைகுந்தனிடம் ஒப்படைத்தார்.

வைகுந்தன் பொறுப்பில்லாமல் வாழ்ந்தமையால் அவனால் கடையின் நிர்வாகத்தைக் கவனிக்க முடியவில்லை. அத்துடன் ஊரில் உள்ள கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து குடித்துக்கொண்டு திரிந்தமையால் கடையை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது.

வைகுந்தனுக்கு எந்தத் தொழிலும் செய்யத் தெரியாமையால் வீட்டிலேயே இருந்தான். உணவிற்காகவும், குடிப்பதற்காகவும் மனைவியின் நகைகளை விற்றான். நாளடைவில் உணவுக்கே கஷ்டமாக இருந்தது.

இராமநாதன் கவலைப்பட்டார். ஒரு காலத்தில் சகல வசதிகளோடும் வாழ்ந்த அவரால் பசிக்கொடுமையைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதனால் யாருக்கும் சொல்லாது வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

அயலூரில் அவரின் நண்பன் கந்தவனம் இருந்தான். அவர் வியாபாரம் செய்யும் போது கந்தவனம் ஏழையாக இருந்தான். அவனுக்கு தனது ஊரில் கடை ஒன்று வைப்பதற்கான உதவிகளை இராமநாதன் செய்து கொடுத்தார். மிகவும் நல்ல முறையில் அவன் அக்கடையை நிர்வகித்தமையால் அவன் இன்று பெரிய பணக்காரனாக இருந்தான்.

மிகவும் களைத்துப்போய் வந்த இராமநாதனை கந்தவனம் அன்போடு வரவேற்று உபசரித்தான். அவரின் துயரறிந்து அவரை தன்னுடன் இருக்கும்படி கேட்டுக் கொண்டான்.

தனக்கு இராமநாதன் செய்த உதவிக்காக வைகுந்தனின் ஒரு மகனை தனது கடையில் வேலைக்கு அமர்த்தினான். அத்துடன் அவர்களுக்கு தன்னாலான உதவிகளையும் செய்தான்.

கந்தவனம் கடை நடத்துவதோடு விவசாயமும் செய்து வந்தான். அவ்வூர் ஏழை மக்களைக் கொண்ட விவசாயக் கிராமமாகும். தனது கடையில் விவசாயத்திற்குத் தேவையான பொருட்களை மொத்தமாக கொள்வனவு செய்து வைத்திருப்பான். ஏழை விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் அவன் பொருட்களைக் கொடுப்பான். விவசாயிகள் அறுவடை முடிந்ததும் அப்பொருட்களுக்கான பணத்தைக் கொடுப்பார்கள். ஆனால் அதற்கு அவன் வட்டி பெறமாட்டான்.

42. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்

இல்வாழ்வான் என்பான் துணை.

அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், இரப்போர்க்கும் துணையாக இருப்பவன் இல்வாழ்வானே.

தலையாய கடன்

சுப்பிரமணியம் நாவலடியில் வாழ்ந்து வந்தார். அவ்வூரில் உள்ள பணக்கார வீடுகளுக்குச் சென்று கூலிவேலை செய்வதுதான் அவரது தொழில். மிகவும் நேர்மையானவர். தனக்கிடப்பட்ட தொழிலை மிகுந்த கவனத்துடன் செய்வார். கூலிக்காக வேலை செய்யமாட்டார். தனது கடமை அதுவென நினைத்துச் செய்வார். குறித்த நேரத்திற்கு வேலைக்குச் செல்வார். வேலை முடியும் நேரம் நெருங்கினாலும் வேலை குறையாக இருந்தால் செய்து முடித்து விட்டுத்தான் வீட்டுக்குச் செல்வார். கூலியை அதிகம் எதிர்பார்க்கமாட்டார். தனது வேலைக்கு அதிகமாக யாராவது கூலி கொடுத்தால் அதை வாங்கமாட்டார். ஒழுக்கம் நிறைந்தவர். மிகுந்த பக்திமான். காலையிலும் மாலையிலும் அருகில் உள்ள நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்திற்குச் சென்று வணங்குவார். கணபதி ஆலய உண்டியலில் தினமும் தன்னாலியன்றளவு பணம் இடுவார்.

ஆலயத்தில் இருக்கும் பிச்சைக்காரனான செல்லப்பாவுக்கு தினமும் ஒரு ரூபா கொடுப்பார்.

ஒவ்வொரு விநாயக சதுர்த்தி தினத்திலன்றும் செல்லப்பாவுக்கு மதிய உணவு கொடுப்பார். இறந்த தனது தாய் தந்தையர்க்கும், மாமன் மாமிக்கும் திவசம் கொடுப்பார். புரட்டாதி மாதத்தில் வரும் மாளய பட்சத்தில் பிதிர்களுக்கு பிராமணரை வீட்டுக்கு அழைத்து வந்து பூசைகள் செய்து உணவு படைப்பார். தன்னை நாடி வரும் விருந்தினரை உபசரித்து உணவு கொடுத்து அனுப்புவார்.

தனது விடயத்தில் மிகவும் கட்டுப்பாடானவர். சனிக்கிழமைகளில் வேலைக்குச் செல்லமாட்டார். பிள்ளைகளுக்கு எண்ணெய் தேய்த்து நீராட்டுவார். அன்று விசேடமான சமையலை அவரது மனைவி செய்வாள். நன்றாக உண்டுவிட்டு படுத்து ஓய்வெடுப்பார். உணவு விசயத்திலும் அவர் மிகுந்த கவனமுடையவர். சத்துள்ள ஆகாரங்களை விதிமுறைப்படி உண்பார். வேலை முடிந்ததும் குளித்து சுத்தமான ஆடைகளை அணிவார்.

அவரை வேலைக்கு அமர்த்துவதற்கு மக்கள் போட்டி போடுவார்கள். வேலை செய்ய வேண்டுமானால் இரண்டு வாரங்களுக்கு முன்பே அவருக்குச் சொல்லுதல் வேண்டும்.

அன்று பாலகுமாரனின் வீட்டைச் சுத்தம் செய்து ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார். பாலகுமாரன் வைத்தியசாலைக்குச் சென்றுவிட்டார். மனைவி கோயிலுக்குச் சென்றுவிட்டாள். பாலகுமாரனின் தாயார் வீட்டில் இருந்தாள். அவளுக்கு அறுபத்தைந்து வயதிருக்கும்.

சுப்பிரமணியத்தை வேலைக்கு அமர்த்துவோர் அவரைக் கண்காணிப்பது கிடையாது. எதையும் அவரின் பொறுப்பிலேயே விட்டுவிடுவார்கள். அன்று அவர் வீடு கழுவிக்கொண்டிருந்தார். பெரியதொரு பெட்டகம் ஓர் அறையின் மூலையில் இருந்தது. அதை அவர் சிரமப்பட்டு நகர்த்திவிட்டு நீரை ஊற்றி விளக்குமாற்றால் கழுவினார். மூலையில் இருந்து ஏதோ ஒரு பொருள் விளக்குமாற்றுடன் வந்தது. அதை எடுத்துப் பார்த்தார். அது ஒரு தங்கச் சங்கிலி. ஆறு அல்லது ஏழு பவுண் வரும். வாளிக்குள் இருந்த நீரில் அதைக் கழுவிவிட்டுப் பார்த்தார். கண்ணைப் பறிக்கும்படி பளபளத்தது. பார்த்துவிட்டு தனது வேட்டியை அவிழ்த்து அதன் தலைப்பில் அதை முடிந்தார்.

கோயிலுக்குச் சென்ற பாலகுமாரனின் மனைவி பகல் ஒரு மணிபோல் வீட்டுக்கு வந்தாள். அதன் பின் பாலகுமாரன் வந்தார்.

“ஐயா” மணியம் அழைத்தார்.

“என்னிடம் ஒரு சங்கிலி இருக்கு. அதை அடைமானமாக வைத்துக்கொண்டு ஐயாயிரம் ரூபா பணம் தரமுடியுமா?“ எனக் கேட்டுக்கொண்டு சங்கிலியைக் கொடுத்தார்.

பாலகுமாரன் சங்கிலியை வாங்கவில்லை. “பங்கஜம் மணியத்துக்கு ஐயாயிரம் ரூபா குடும்” என்றார்.

“சங்கிலியைப் பிடியுங்கோ..” என்றார் மணியம்.

“மணியம் உன்னை எனக்கு முப்பது வரிசமாய்த் தெரியும். எனக்கு பணத்தைத் திருப்பித் தரத் தேவையில்லை. கொண்டுபோ. எத்தனையோ தரம் உனக்கு பணம் தந்தும் நீ வாங்கேல்லை. எப்பிடிக் குடுக்கலாமெண்டு நினைச்சன். நீ கேட்டுட்டாய்....”

பங்கஜம் பணத்தை நீட்டினாள்.

“அம்மா முதலிலை சங்கிலியை வாங்குங்கோ....”

பாலகுமாரனுக்குக் கோபம் வந்தவிட்டது. “உனக்குக் காசில்லை. நீ வேலை செய்வதை விட்டிட்டுப் போ...” என்றார்.

மணியம் சிரித்தார். பின் “இது உங்கடை சங்கிலிதான். பெட்டகத்திற்குக் கீழே இருந்தது. இப்படியா பொருட்களைக் கவனமில்லாமல் வைப்பது” என்றார்.

பங்கஜம் சங்கிலியை வாங்கிப் பார்த்துவிட்டு “அம்மான்ரை சங்கிலி. அஞ்சு வரிசத்துக்கு முந்திக் காணாமல் போனது...”

பாலகுமாரன் கஷ்டப்படுத்தி மணியம் கேட்ட பணத்தைக் கொடுத்தார். மணியம் மறுத்தும் அவர் கேட்கவில்லை. வேறு வழியின்றி அவன் அப்பணத்தை வாங்கினான்.

சில வருடங்களின் பின் சுப்பிரமணியத்தின் மகளுக்கு திருமணம் நடைபெற்றது. அன்று சுப்பிரமணியத்தின் வீட்டில் ஊரே திரண்டிருந்தது. தமக்கு சுப்பிரமணியம் செய்த வேலைகட்கு மக்கள் அனைவரும் பரிசுப் பொருட்கள் கொடுத்தனர். அப்பொருட்கள் பல இலட்சம் ரூபா பெறுமதியானவை.

43. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்கு

ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

தென்புலத்தார் தெய்வம் விருந்தினர், சுற்றத்தவர் என்பவர்களுடன் தன்னையும் போற்றுதல் இல்வாழ்வானது தலையாய கடனாகும்.

பழிக்கு அஞ்சு

சுப்பிரமணியத்திற்கு ஐம்பது வயது. ஒரு நாள் வேலை செய்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்த போது எதிரே வந்த வாகனமொன்று அவரின் மீது மோதிவிட்டது. படுங்காயங்களுக்குட்பட்ட சுப்பிரமணியத்தை வைத்தியசாலையில் சேர்த்தனர். மூன்று மாதங்கள் அவர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றார்.

உடல்நிலை ஓரளவு சீரடைந்த பின் வீடு திரும்பிய அவரால் முன்புபோல் வேலை செய்ய முடியவில்லை. நேர்மையாகவும், நீதியுடனும், பற்றுடனும் வேலை செய்த அவருக்கு சம்பளத்திற்காக வேலை செய்ய முடியவில்லை. விறகு வெட்டுவது, பாரந் தூக்குவது போன்ற வேலைகளைச் செய்து பழக்கப்பட்ட சுப்பிரமணியத்திற்கு அவ்வேலைகளை இப்பொழுது செய்ய முடியவில்லை.

அவரது மகன் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தான். அவனது கல்விக்கு ஏராளமான பணம் தேவைப்பட்டது. அத்துடன் குடும்பச் செலவுக்கும் பணம் தேவைப்பட்டது.

தனக்கு பிற்காலத் தேவைக்காக சேமித்து வைத்திருந்த சிறுதொகைப் பணத்தை வங்கியில் இருந்து எடுத்து சிறிதாக ஒரு கடை ஒன்றை அமைத்தார்.

ஊரில் பல கடைகள் இருந்தன. இருந்த போதும் அக்கடைகளில் பெரும்பான்மையான மக்கள் பொருட்களை வாங்குவது குறைவு. அக்கடையில் விற்கப்படும் பொருட்கள் யாவும் கலப்படப் பொருட்கள். அவையும் கூடிய விலைக்கே விற்கப்பட்டன. அதனால் அவ்வூர் மக்கள் மூன்று மைல்களுக்கு அப்பாலுள்ள பட்டணத்திற்குச் சென்று தமக்குத் தேவையான பொருட்களை வாங்கி வந்தனர்.

சுப்பிரமணியம் தான் சிறிதாக ஆரம்பித்த கடையில் எல்லாப் பொருட்களையும் சிறிதளவு வாங்கிவந்து விற்றார். பட்டண விலையிலும் பார்க்க சிறிதளவு கூடுதலாகவே விற்றார்.

சுப்பிரமணியம் நேர்மையானவர். கடவுள் பக்தி நிறைந்தவர். தவறான காரியங்களில் ஈடுபடமாட்டார் என்ற நம்பிக்கை ஊர்மக்கள் அனைவரிடமும் இருந்தது. அதனால் ஊர்மக்கள் அனைவரும் அவரது

கடையிலேயே பொருட்களை வாங்கினர். அதனால் சுப்பிரமணியம் கொள்வனவு செய்யும் பொருட்கள் ஒருநாள் வியாபாரத்திற்குக் கூடப் போதாமல் இருந்தது.

சங்கரப்பிள்ளை நகரில் பிரபலமான மொத்த வியாபாரம் செய்யும் வர்த்தகர். அவர் வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்து கடைகளுக்கு சில்லறையாக விநியோகிப்பவர். அவரின் வீட்டில் பலகாலம் சுப்பிரமணியம் தொடர்ந்து வேலை செய்தார். அவர் சுப்பிரமணியத்தின் நேர்மைக்கு பரிசாக பலமுறை சன்மானங்கள் கொடுத்த போதும் அவர் வாங்க மறுத்துவிட்டார். எனவே ஊரில் நல்லதொரு விற்பனை நிலையத்தை உருவாக்குவதற்காக சுப்பிரமணியத்திற்கு மொத்த விலையில் சகல பொருட்களையும் கொடுத்தார்.

சுப்பிரமணியம் மொத்த விலையில் சங்கரப்பிள்ளையிடம் பொருட்களைக் கடனாகக் கொள்வனவு செய்தார். பட்டணத்தில் விற்கும் விலைக்கே தனது கடையிலும் பொருட்களை விற்றார்.

ஒருபோதும் தரமற்ற பொருட்களைக் கொள்வனவு செய்யமாட்டார். கலப்படம் செய்யமாட்டார். நிறை குறைத்தும் கொடுக்கமாட்டார். தற்செயலாக மக்கள் வாங்கும் தேங்காய், பால்மா வகைகள், எண்ணெய் வகைகள் பழுதடைந்திருந்தால் அதற்கு மாற்றீடாக வேறு பொருட்களைக் கொடுப்பார்.

இப்பொழுது சுப்பிரமணியத்தின் கடையில் பத்துச் சிப்பந்திகள் வேலை செய்கிறார்கள். கடையில் நடைபெறும் வியாபாரம் நேர்மையாகவும், நீதியாகவும் நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிப்பதே சுப்பிரமணியத்தின் பணியாகும்.

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் நிரந்தரமானதொரு அன்னசத்திரம் கட்டி தினமும் அங்கு அன்னதானம் நடைபெற ஒழுங்குகள் செய்துள்ளார் சுப்பிரமணியம்.

அவரது மகன் பல்கலைக்கழகப் படிப்பை முடித்ததும் அவ்வூர் மருத்துவரின் மகளை மணம் புரிந்தான். சுப்பிரமணியத்தின் ஏனைய பிள்ளைகளும் நன்றாகப் படித்து நல்ல தொழில்களில் அமர்ந்தனர்.

பத்து வருடங்கள் கழிந்தன. சுப்பிரமணியத்தை இப்பொழுது யாரும் பெயர் சொல்லி அழைப்பதில்லை. ‘‘செட்டியார்’’ என்றே அழைத்தனர். அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பீட்டப் பிள்ளைகள் எல்லோரும் சீரும் சிறப்புமாக இருக்கிறார்கள். சுப்பிரமணியம் கடைப் பொறுப்புக்களையெல்லாம் பிள்ளைகளிடம் ஒப்படைத்துவிட்டு நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய அன்ன சத்திர வாசலில் அமர்ந்திருக்கிறார்.

44. பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

பழிக்கு அஞ்சி அறவழியில் பொருள்சேர்த்து அதனைப் பகிர்ந்துண்டு வாழும் இல்வாழ்வானது பரம்பரை என்றும் அழியாது நிலைத்து நிற்கும்.

பண்பும் பயனும்

பசுபதிப்பிள்ளை உயிர்களிடத்து அன்புள்ளவர். அவரிடத்தில் பத்து மாடுகள் நின்றன. ஒவ்வொரு மாட்டையும் அவர் தனது பிள்ளையைப் போல நேசிப்பார். அவற்றிற்கெல்லாம் சத்தான உணவுகளைக் கொடுப்பார். சுத்தமான நீர் வைப்பார். காலையில் பால் கறந்து, அதை அயலில் உள்ள வீடுகளுக்குக் கொண்டுசென்று கொடுப்பார். பின் தான் உணவு அருந்திவிட்டு மாடுகளை அவிழ்த்துக்கொண்டு சென்று புல்நிலங்களில் மேயவிடுவார்.

எந்நேரமும் அவரிடம் ஒரு வாளியும், கடகமும் இருக்கும். மதிய வேளையில் தோட்டக் கிணறுகளில் நீரை எடுத்து மாடுகளுக்கு குடிக்க வைப்பார். மாடுகள் போடும் சாணியை கடகத்தில் சேகரித்து வீட்டுக்குக் கொண்டு வருவார்.

மாட்டுச் சாணத்தை தனது தோட்டத் தேவைக்குப் பாவிப்பார். எஞ்சினால் விற்பார்.

பாலில் கலப்படம் செய்யமாட்டார். அதனால் கிராமத்தில் அவரின் பாலுக்கு மதிப்பு அதிகம். மக்கள் போட்டி போட்டு அவரிடம் பாலை வாங்குவார்கள். ஒருமுறை அவரது கிழட்டுப் பசு ஒன்றிற்கு நோய் வந்துவிட்டது. தனக்குத் தெரிந்த பச்சிலை வைத்தியங்களை ஆரம்பத்தில் செய்தார். பின் ஊரில் இருக்கும் மிருக வைத்தியரிடம் மாட்டைக் கொண்டுசென்று வைத்தியம் செய்தார். மாட்டிற்கு சுகமாகவில்லை. பட்டணத்தில் ஒரு மிருக வைத்தியர் இருந்தார். அவரிடம் மாட்டைக் கொண்டு செல்ல வேண்டும் அல்லது அவரை வாகனத்தில் ஏற்றி வீட்டுக்கு அழைத்து வரல் வேண்டும்.

பசுபதிப்பிள்ளை பட்டணத்தில் உள்ள வைத்தியரிடம் வாகனத்தில் சென்றார். சிகிச்சை நிலையத்தில் ஏராளமான மாடுகள் நின்றமையால் வைத்தியர் மாட்டை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வரும்படி கூறினார்.

வீட்டுக்கு வந்த பசுபதிப்பிள்ளை உழவு இயந்திரப் பெட்டி ஒன்றில் மாட்டை ஏற்றினார். அங்கு அப்போ வந்த ஊர் வைத்தியர் சொன்னார் "பசுபதி வீணாக பட்டணத்திற்கு கொண்டு செல்லாதை. ஏற்கனவே வாகனத்திற்கு ஐந்தாறு ரூபா செலவு செய்துவிட்டாய். மாட்டைப் பட்டணத்துக்குக் கொண்டு செல்ல ஆயிரம் ரூபா வேண்டும். மருந்துச் செலவுக்குப் பணம் வேண்டும். கிழட்டுப் பசு பிரயோசனமில்லை. இறைச்சி வியாபாரிகளுக்கு விற்றுவிடு."

"ஐயா உங்களுடைய பிள்ளைக்கு இல்லை மனைவிக்கு அல்லது தாய்க்கு நோய் வந்தால் இப்படிக் கூறுவீர்களா....? தாயைப் போலை இந்தப் பசு எனக்கு பால் தந்தது. தகப்பனைப் போலை உழைத்து உணவு தந்தது. என்னுடைய பிள்ளைகளுக்கு சீதனம் தந்தது. இப்போது பிரயோசனம் இல்லை என்றதற்காக கவனிக்காமல் விட முடியுமா. அதைவிட இறைச்சி வியாபாரிக்கு விற்கச்சொல்கிறீர்களே, உங்களுக்கு மனச்சாட்சி இருக்கா...?"

"ஊரிலை எல்லாரும் அப்படித்தானே செய்கிறார்கள்.."

"ஊரில் எல்லோரும் செய்கிறார்கள் என்பதற்காக நாமும் செய்ய வேண்டுமா? பசுவைக் கொல்வதே பாவம். அதைவிட நோயுள்ள பசுவை இறைச்சி வியாபாரிக்கு விற்பது மகாபாவம். உயிர்களிடத்தில் அன்பு வைத்தல் வேண்டும். அறநெறிப்படி அவற்றைப் பராமரிக்கவும் வேண்டும்."

ஊர் வைத்தியர் பலமாகச் சிரித்தார். பின்பு "விசர் முற்றின உனக்கு புத்திமதி சொல்வது இயலாத காரியம்.. போய் பணத்தைச் செலவு செய் போ..." என்றார் ஏளனமாக.

பசுபதிப்பிள்ளை பட்டண வைத்தியரிடம் மாட்டைக் கொண்டு சென்று மருந்து வகைகளைப் பெற்று வந்தார். மூன்றாம் நாள் மாடு இறந்து விட்டது.

பட்டணத்தில் உள்ள ஓர் இறைச்சி வியாபாரி மாலை அவரின் வீட்டுக்கு வந்து இறந்த பசுவை விலைக்குக் கேட்டான். பசுபதிப்பிள்ளை அவனை ஏசினார்.

"எந்த மாட்டையும் நான் இறைச்சி வியாபாரிக்கு விற்க மாட்டேன். எனது மாடுகள் என்னுடன் இருந்து இறக்கட்டும் அத்துடன் இறந்தது மாடல்ல எனது தாய். அதைப் புதைப்பேனே தவிர

உனக்குத் தரமாட்டேன். பல நாட்களாக நோய்வாய்ப்பட்டு இறந்த பசுவை விற்பனைக்காகக் கேட்கிறாயே. உனக்கு மனச்சாட்சி இருக்கா..? இந்த மாமிசத்தை உண்ணும் மனிதர்களின் நிலையைப் பற்றி சிறிதளவாவது எண்ணிப் பார்த்தாயா..? மிருகங்கள் கூட உண்ணத் தகுதியில்லாத இந்த இறைச்சியை விற்க நினைக்கும் உன்னைக் கொன்றுவிடுவேன் ஓடிவிடு'' என்றார் கோபமாக.

45. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாக இருப்பது அன்பும் அறச்செயல்களுமே.

பயனில்லாத் துறவு

ரவீந்திரனும் திவாகரனும் நண்பர்கள். பாடசாலையில் தரம் ஒன்றில் இருந்து கல்விப் பொதுத் தர சாதாரண வகுப்பு வரை ஒன்றாகக் கற்றவர்கள். பலமுறை கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சை எழுதியும் இருவரும் சித்தியடையவில்லை. அதனால் இருவரும் விவசாயம் செய்தனர்.

அவர்கள் இருவரது வீடுகளும் அருகிலேயே இருந்தன. ரவீந்திரனுக்கு காயத்திரி என்ற தங்கை இருந்தாள். இருவரது குடும்பமும் விவசாயக் குடும்பங்கள். அதனால் ரவீந்திரனது தோட்ட வேலைகளை திவாகரனின் குடும்பத்தினரும், திவாகரனது தோட்ட வேலைகளை ரவீந்திரனது குடும்பமும் பகிர்ந்து செய்து வந்தனர். இரு குடும்பங்களிலும் ஏதாவது விசேடங்கள் நடந்தால் நாலைந்து தினங்களுள் அங்கேயே தங்கியிருந்து சாப்பிடுவார்கள்.

மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்த அந்த இரு குடும்பங்களையும் பார்த்து ஊர்மக்கள் பொறாமைப்பட்டனர். சில தீயவர்கள் பொய்யான தகவல்களைக் கூறி இரு குடும்பங்களையும் பிரிக்கப் பார்த்தனர். ஆனால் முடியவில்லை.

மாலை நேரங்களில் திவாகரனும் ரவீந்திரனும் ஒரு சைக்கிளில் தான் செல்வார்கள். புதுவருடம், தீபாவளி பண்டிகைகளுக்கு ரவீந்திரன் திவாகரனுக்கு உடுப்புகள் வாங்கிக் கொடுப்பான். அதே போல்

திவாகரன் ரவீந்திரனுக்கு உடுப்புக்கள் வாங்கிக் கொடுப்பான். ஆரம்பத்தில் குடும்பத்தினர் வாங்கிக் கொடுத்து வந்தனர். ரவீந்திரனும், திவாகரனும் உழைக்கத் தொடங்கிய பின் தாமே உடுப்புக்களை வாங்கிப் பரிமாறிக் கொண்டனர். வழக்கமாக ரவீந்திரனுக்கு வேட்டியும், சேட்டும் வாங்கிக் கொடுக்கும் திவாகரன் இம்முறை காயத்திரிக்கு சேலையும், சட்டையும் வாங்கி வந்திருந்தான். அதைக் காயத்திரி மகிழ்வுடன் பெற்றுக்கொண்டாள்.

காயத்திரி வழமையாக புதுவருட தினத்தன்று ரவீந்திரன் வாங்கிக் கொடுக்கும் உடைகளையே அணிவாள். ஆனால் இம்முறை அவள் திவாகரன் வாங்கிக் கொடுத்த சேலையை உடுத்திக் கொண்டே கோயிலுக்குச் சென்றாள். அதை ரவீந்திரன் கண்டபோதும் எதுகும் கேட்கவில்லை.

திவாகரன் சிறுவயதில் இருந்தே கடவுள் மீது அதீத நம்பிக்கை உடையவன். அவனது ஊரில் உள்ள நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய உற்சவம் தொடங்கினால் பூசையைத் தவிர மற்றெல்லாக் கருமங்களையும் அவனே செய்வான்.

ஒரு நாள் திவாகரன் ரவீந்திரனுக்கு தான் காயத்திரியைத் திருமணஞ் செய்துகொள்ள விரும்புவதாகச் சொன்னான். ரவீந்திரன் தனது பெற்றோருடன் ஆலோசித்து இரு வீட்டாரினது சம்மதத்துடன் காயத்திரியை திவாகரனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தான்.

இரண்டு வருடங்களின் பின் தனது மாமன் மகளான நாராயணியை ரவீந்திரன் திருமணஞ் செய்தான்.

காலம் உருண்டோடியது. இருபது வருடங்கள் கழிந்துவிட்டன.

திவாகரனுக்கு மூன்று ஆண் பிள்ளைகளும், இரண்டு பெண் பிள்ளைகளும் பிறந்தன. ரவீந்திரனுக்கு நான்கு பெண் பிள்ளைகள் பிறந்தன.

ரவீந்திரன் கடுமையான உழைப்பாளி. தோட்டத்தில் அவனும் மனைவியும், பிள்ளைகளும் கடுமையாக வேலை செய்தனர். அதனால் பெரும் இலாபம் கிடைத்தது. விவசாயத்தின் மூலம் கிடைத்த இலாபப் பணம் மூலம் ரவீந்திரன் பல தோட்டக்காணிகளையும், வயல் நிலங்களையும் வாங்கினான். மீண்டும் கடுமையாக உழைத்து உழவு இயந்திரம் ஒன்றும் வாங்கினான். அவனது நான்கு பிள்ளைகளும் பட்டணத்தில் உள்ள பிரபல பெண்கள் பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வந்தனர்.

இல்வாழ்வுக்குரிய கடமைகளை அவன் ஒழுங்காகப் பின்பற்றினான். தன்னை நாடி வருவோர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்தான். நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய கட்டடங்கள்

கட்டவும், திருத்த வேலைகள் செய்யவும் நிதியுதவிகள் செய்தான். ஏழைகளுக்கு நாவலர் வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் உணவளித்தான்.

ரவீந்திரனுக்கு எதிர்மாறாகவே திவாகரன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு குடும்பம் ஒன்று தனக்கு இருப்பதாகத் தெரிவதில்லை. எந்நேரமும் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்திலேயே இருப்பான். கோயிலைக் கூட்டுவது, துப்பரவு செய்வது, கழுவுவது போன்ற வேலைகளைத் தினமும் செய்வான். காலையிலும் மாலையிலும் பஞ்சபுராணங்களை ஓதுவான். மதிய வேளைகளில் தனது தோட்டத்திற்குச் சென்று வேலை செய்வான். அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் ஒருபகுதியை நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்திற்கு கொடுத்து விடுவான்.

வருமானம் போதாமையால் காயத்திரியும், பிள்ளைகளும் கஷ்டப்பட்டனர். காயத்திரி தனது குடும்ப வறுமையைப் போக்க தானே விவசாயம் செய்ய ஆரம்பித்தாள். பிள்ளைகளும் தாய்க்கு உதவியாக தோட்டத்திற்குச் சென்றனர். அதனால் பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை. இதை அறிந்த ரவீந்திரன் துடித்துப் போனான். துயரத்துடன் திவாகரனிடம் சென்றான்.

“திவா காயத்திரி எம்மோடு இருக்கும் போது வசதியாக வாழ்ந்தவள். இப்போது கஷ்டப்படுகிறாள். பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதில்லை என அறிகிறேன். தயவு செய்து முன்புபோல் உற்சாகமாக தொழிலைச் செய். நீ சோம்பியிருந்தால் உனது பரம்பரையே பாழாகிவிடும். நானும் கடவுளைக் கும்பிடுகிறேன். தொழிலும் செய்கிறேன். “செய்யும் தொழில் தான் தெய்வம்” என்று எம் மூத்தோர் கூறியுள்ளனர். எமது புராண வரலாறுகள் உனக்குத் தெரியும். இருபத்து நான்கு மணிநேரமும் கடவுளைத் தொழுதவனை விட ஓரிரு நிமிடங்கள் கடவுளைத் தொழுதவன் கூடுதலான பலனைப் பெற்றுள்ளான். எனவே தயவு செய்து உற்சாகமாக வேலை செய்துகொண்டு உனது துறவறத்தை மேற்கொள்” என்றான்.

திவாகரன் அவனது சொல்லைக் கேட்கவில்லை. நாளடைவில் அவன் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்திலேயே தங்கி விட்டான். அவனது பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பையும் ரவீந்திரன் ஏற்றுக் கொண்டான். இப்பொழுது திவாகரனின் பிள்ளைகள் பட்டணத்தில் உள்ள பிரபலமான பெண்கள் பாடசாலையில் கற்கிறார்கள். ரவீந்திரன் தனது கடமைகளை நிறைவேற்ற முன்பைவிட அதிகமாக உழைக்கிறான்.

46. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்

போழ்ப் பெறுவது எவன்?

ஒருவன் அறநெறிகளுக்குட்பட்டு இல்வாழ்வு வாழ்வதே சிறப்பானதாகும். அதை விடுத்து துறவு வாழ்வினை மேற்கொள்வதால் எந்தப் பயனையும் அவன் அடையமாட்டான்.

தலைவன்

கெங்காதரன் அப்பெரிய நிறுவனத்தின் உரிமையாளன். அந்த நிறுவனம் உள்ளூரில் தயாரிக்கப்படும் பொருட்களை கொள்வனவு செய்து வெளி நாடுகளுக்கு அனுப்புவதும், வெளி நாடுகளில் உற்பத்தியாகும் பொருட்களை இறக்குமதி செய்து உள்ளூரில் விற்பனை செய்வதுமாக இருந்தது. உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் ஏராளமான கிளைகள் அந்நிறுவனத்திற்கு உண்டு. ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் அந்நிறுவனத்தில் வேலை செய்கின்றனர்.

அந்நிறுவனத்தில் வேலை செய்வது மிகுந்த மதிப்புக்குரியது என்று ஊரில் பேசிக் கொள்வார்கள்.

கெங்காதரனுக்கு ஐந்து பிள்ளைகள். ஐவரும் லண்டனில் உள்ள பிரபல பாடசாலையொன்றில் கல்வி கற்று வருகிறார்கள். கெங்காதரனின் மனைவி ரதிதேவி உண்மையிலேயே ரதியைப் போன்ற அழகி.

கெங்காதரன் வருடத்தில் முந்நூற்றி அறுபது தினங்களும் வெளிநாடுகளிலேயே தங்கியிருப்பார். சிலவேளைகளில் காலை உணவு லண்டனில் உண்பார். மதிய உணவை ஆகாயவிமானத்தில் உண்பார். இரவுணவை பிரான்சில் உண்பார். அவருக்கு மனைவி, பிள்ளை குட்டிகள் இருப்பதே தெரியாது. உழைப்புத்தான்.

வீட்டுக்கு கெங்காதரன் வந்தாலும் தனது வியாபாரக் கதைகளையே கதைப்பார். தனது நிர்வாகத் திறமையை பிரமுகர்கள் எப்படி நினைக்கிறார்கள் என்பதைப் பற்றிக் கதைப்பார். அடுத்து என்னென்ன செய்யப் போவதாகக் கதைப்பார்.

இவற்றையெல்லாம் ரதிதேவி பொறுமையாகக் கேட்கமாட்டாள். பிள்ளைகளைப் பற்றிக் கேட்பாள். குடும்ப விஷயங்களைக் கதைப்பாள். தனது உறவினர்களின் புதினங்களைக் கதைப்பாள்.

இவற்றை கெங்காதரன் கேட்கமாட்டார். ரதிதேவியுடன் பிரச்சினைப்படுவார். அதனால் அவர் வீட்டில் நிற்கும் நேரங்களில் கணவனுக்கும் மனைவிக்குமிடையே சண்டையே நடக்கும்.

கெங்காதரனின் வீட்டு வேலைக்காரன் கதிரேசு. அவனது குடும்பம் மிகவும் பெரியது. அவனுக்கு ஐந்து பிள்ளைகள். அவனுடைய தாய், தகப்பன் இருவரும் மாமன், மாமியர் இருவரும் அவனுடனே தங்கியிருந்தனர். அவனது வருமானத்தைக் கொண்டுதான் அக்குடும்பம் வாழ்ந்து வந்தது.

கதிரேசு யசோதாவைக் காதலித்துத் திருமணம் செய்தவன். அதனால் அவளைப் பூப்போல் பாதுகாத்து வந்தான். வருமானம் போதாமையால் தானும் வேலைக்குச் செல்ல வேண்டும் என்று யசோதா வற்புறுத்துவாள். ஆனால் கதிரேசு விடமாட்டான். தனது தாய், தந்தையர்களையும் மாமன், மாமியரையும் மிகவும் அன்பாகவும், கண்ணியத்துடனும் நடத்தினான். அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்தான்.

ரதிதேவிக்கு கதிரேசு தனது குடும்பத்தின் மீது கொண்ட அன்பைப் பார்க்க பொறாமையாக இருக்கும்.

இரவில் எந்த வேலை இருந்தாலும், எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் அவன் தங்கமாட்டான். ‘‘அம்மா இரவு ஒருவேளை தான் நான் குடும்பத்துடன் ஒன்றாக இருந்து சாப்பிடுவது, கதைத்துச் சிரிப்பது. இதைவிட எனக்குப் பணம் பெரிதில்லை அம்மா. அத்துடன் எனது மனைவி என்னுடன் சேர்ந்து சாப்பிட விரும்புவாள். நான் சாப்பிடாவிட்டால் அம்மாவும் அப்பாவும் சாப்பிடமாட்டார்கள். இதனால் குடும்பமே சாப்பிடாமல் எனக்காகக் காத்திருக்கும்...’’

அவனது வார்த்தைகள் ரதிதேவியின் நெஞ்சைச் சுடும். ‘‘நான் கோடீஸ்வரி. வருடத்திற்கு ஒருமுறையானாலும் குடும்பத்துடன் சேர்ந்து சாப்பிடக் கிடைத்திருக்கா’’ என எண்ணுவாள்.

புதிய படங்கள் திரைக்கு வந்துவிட்டால் விடுமுறை கேட்பான் கதிரேசு.

‘‘ஏன் விடுமுறை’’ ரதிதேவி கேட்பாள்.

‘‘இன்றைக்கு மனைவியையும் பிள்ளைகளையும் படத்துக்கு அழைத்துக் கொண்டு போகவேண்டும் அம்மா. குடும்பத்தடன் இருந்து படம் பார்த்தவிட்டு குளிர்களிக் கடைக்குச் சென்று குளிர்களி குடித்தால் எப்படி இருக்கும். அந்த நேரம் பிள்ளைகள் படும் மகிழ்ச்சியை கோடி கொடுத்தாலும் பெற முடியாதம்மா....’’

ரதிதேவி தனது கணவனை ஒருநாள் கோயிலுக்கு தன்னுடன் வருமாறு அழைத்தாள்.

“ரதி எனக்கு தலைக்கு மேல் வேலை இருக்கு. கார்ச்சாரதியோடை போட்டு வா” என்றார் கெங்காதரன். இப்படிச் சின்னச்சின்ன விஷயங்களாக அவள் கேட்கின்ற போது அவருக்கு ஏராளமான வேலைகள் இருக்கும்.

பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டு பிள்ளைகளை ஊருக்கு வரும்படி கேட்பாள்.

“உந்தப் பட்டிக்காட்டுக்கு யார் வாறது. எங்களைப் பார்க்க விரும்பினால் லண்டனுக்கு வாங்கோ. இஞ்சை வருடம் பூராகவும் இருக்கலாம்” என்பார்கள் பிள்ளைகள்.

பிள்ளைகளைப் பார்ப்பதற்காக ஒருமுறை லண்டனுக்குப் போனாள் ரதிதேவி. அவள் அங்கு ஆறு மாதங்கள் தங்கியிருந்தாள். அந்த வேளையில் மூன்று தரம் தான் தனது கணவனைச் சந்தித்தாள் ரதிதேவி.

பிள்ளைகள் காலையில் சாப்பிடாமல் சென்று விடுவார்கள். ரதிதேவி பிள்ளைகளுக்கென சமைப்பாள். ஆனால் அவர்கள் இரவு பத்து மணிக்குப் பிறகுதான் வருவார்கள். ரதிதேவி சமைத்த உணவை உண்ணமாட்டார்கள். “இது ஒரு சாப்பாடா?” என்று கேலி செய்வார்கள்.

மக்களோடு இருந்தால் சந்தோஷம் என்று இங்கு வந்தால் அவர்களைச் சந்திக்கவே முடியவில்லை. அதனால் துன்பமடைந்த ரதிதேவி ஊருக்குத் திரும்பினாள்.

தம்மிடம் சேவகம் செய்யும் கதிரேசுக்குள்ள இன்பமும், நிம்மதியும் கோடீஸ்வரியான தனக்கில்லையே எனக் கவலைப்பட்டாள் ரதிதேவி. தனிமையும், துயரமும் அவளைப் பைத்தியக்காரியாக்கியது.

47. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்

முயல்வாருள் எல்லாம் தலை.

அறநெறி வழிநின்று இல்வாழ்வை மேற்கொள்பவன் பிற முயற்சிகளில் ஈடுபட்டோர் யாவரிலும் சிறந்தவன்.

வலிமையானது

கதிர்காமநாதனும் மயில்வாகனனும் சகோதரர்கள். அண்ணனான கதிர்காமநாதன் குடும்பஸ்தன். அவன் உழைத்தால் தான் ஆறு உயிர்களின் வயிறு நிரம்பும். விடியற்காலையில் மாடுகளுடன் தோட்டத்துக்குப் புறப்பட்டானென்றால் இரவு பத்து மணிக்குத் தான் வீடு திரும்புவான். மதிய உணவை அவனது அன்பு மனைவி சகுந்தலா தோட்டத்திற்குக் கொண்டு சென்று கொடுப்பாள். பின் தோட்டத்தில் வேலை செய்துவிட்டு வீட்டில் கட்டி வளர்க்கும் ஆடுகளுக்கு புல் செதுக்குவாள். மாலையானதும் மாடுகளையும் கொண்டு வீட்டுக்குச் செல்வாள்.

கதிர்காமநாதனுக்கு தினமும் ஊர் வேலைகள் நிறைய இருக்கும். கதிர்காமநாதன் அதிகம் படிக்காவிட்டாலும் தொழிற்புலமை உள்ளவன். இலக்கிய நூல்களையும், புராண, இதிகாசக் கதைகளையும் நன்கு கற்றுத் தேர்ந்தவன். புராண, இதிகாசங்களில் யாருக்காவது சந்தேகங்கள் ஏற்படின் அக்கிராமத்தில் உள்ள ஆசிரியர்களிடம் அவர்கள் செல்லமாட்டார்கள். கதிர்காமநாதனிடம் தான் செல்வார்கள். அவன் அவர்கள் எழுப்பும் சந்தேகங்களுக்கு விடையளிப்பான், அல்லது அப்பகுதியை எங்கென்றாலும் சென்று தேடி எடுத்து வாசித்துப் பதில் சொல்வான்.

அக்கிராமத்திலுள்ள குடும்பப் பிரச்சினைகள், காணிப் பிரச்சினைகள், வாசிகசாலைப் பிரச்சினைகள், விவசாயப் பிரச்சினைகள் யாவும் தீர்த்து வைப்பது அவன்தான்.

காலையிலும் மாலையிலும் எந்த வேலை இருந்தாலும் அவற்றைத் ஒதுக்கி வைத்துவிட்டு நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்திற்குச் சென்று வழிபடுவான். அக்கோயிலின் வழிபடுவோர் சபையின் தலைவனும் அவன்தான்.

கோயிலுக்கு கட்டடங்கள் கட்டுவது, திருத்துவது புனரமைப்பது போன்ற வேலைகளுக்கு நிதி சேகரிப்பது, கட்டட வேலைகளுக்கு ஆலோசனை கூறுவதெல்லாம் அவன்தான்.

குடும்பப் பிரச்சினைகள், கணவன், மனைவியருக்கிடையே எழும் அந்தரங்க விசயங்களைக் கூட அவனுக்கு மக்கள் சொல்லித் தீர்த்துவிடுமாறு கோருவார்கள். அவன் அப்பிரச்சினைகளை சாதுரியமாகத் தீர்த்துவைப்பான்.

ஒருநாள் அவ்வூரில் வசிக்கும் நற்குணராஜன் என்பவன் கதிர்காமநாதனிடம் வந்தான். ‘‘தம்பி அம்மாவுக்கு கடுமையான

சுகவீனம். மருந்தெடுக்க டாக்டரிடம் வருகிறார் இல்லை. எனது அண்ணா மாத்தளை நகரில் டாக்டராகப் பணிபுரிகிறார். அவர்தானாம் தனக்கு வைத்தியம் செய்தல் வேண்டும் என்கிறார். இப்பொழுது எமது நாடு உள்ள நிலமையில் ஆறுமாதம் சென்றாலும் அவர் வரமாட்டார். என்ன செய்வது?'' என்று கேட்டான்.

கதிர்காமநாதன் சிறிதுநேரம் யோசித்தான். பின்பு நற்குணராஜனின் வீட்டுக்குச் சென்றான். அவனைக் கண்டதும் நற்குணராஜனின் தாயார் ''தம்பி உம்மட்டைத் தான் வரவேணுமென்று நினைத்தனான், நீரே வந்துவிட்டீர். எனது மகன் கார்த்திகேயன் மாத்தளைக்குப் போய் ஐந்து வருடமாகுது. எனக்குப் பார்க்க ஆசையாக உள்ளது. தயவு செய்து கூட்டிவாரும் தம்பி''

''இப்ப நாட்டுநிலை உங்களுக்குத் தெரியும்தானே. தொலைபேசி இல்லை. கடிதம் எழுதினாலும் கிடைக்க பல மாதங்கள் செல்லும். இப்ப மருந்தை வாங்குவம், பிறகு.....''

''இல்லை... நான் மாட்டன். நான் மருந்து குடிக்காமல் சாகப்போறன்...'' மூதாட்டி விம்மிவிம்மி அழுதாள்.

கதிர்காமநாதன் எவ்வளவோ கதைத்தும் அவள் கேட்கவில்லை. அதனால் யோசனையுடன் வெளியே சென்றான்.

ஒருமணிநேரம் கழித்து நற்குணராஜனின் வீட்டுப்படலையில் ஒரு மோட்டார்ச் வாகனம் வந்து நின்றது. ''இதுதானா கார்த்திகேயனின் வீடு...?''

கார்த்திகேயன் என்ற பெயரைக் கேட்டதும் தாயார் படுக்கையால் துள்ளி எழுந்தார். அவருக்கு வருத்தம் பறந்துவிட்டது. படலையடிக்கு வந்தார். ''ஓம் தம்பி.... நீங்கள் ஆர்...?''

''நான் மாத்தளையில் கார்த்திகேயனுடன் வேலை செய்யும் மருத்துவர். உங்களைப் பார்த்துவிட்டு வரச்சொன்னார். காசும், கொஞ்ச சாமானும் தந்தவர்.''

''உள்ளுக்கு வாங்கோ... உள்ளுக்கு வாங்கோ'' எனப் பரபரத்தாள் அம்மூதாட்டி.

உள்ளே வந்த மருத்துவர் ''என்ன சோர்வாய் இருக்கிறியள், சுகமில்லையே?'' என்று கேட்டார்.

மூதாட்டி மகிழ்வுடன் தனது கதையைச் சொன்னார். பின் மருத்துவர் கார்த்திகேயனது குடும்பநிலை, பிள்ளைகளின் விபரம்

ஆகியவற்றைச் சொன்னார். அதனால் மகிழ்ந்த மூதாட்டி அவரிடம் மருந்தை வாங்கினார்.

கதிர்காமநாதன் அயற்கிராமத்தில் உள்ள மருத்துவருக்கு நிலமையை எடுத்துக்கூறி திட்டமிட்டு அனுப்பியிருந்தான். அதனால் பிடிவாதமாக இருந்த மூதாட்டியின் மனம் மகிழ்ந்தது.

மயில்வாகனன் பிரமச்சாரி. நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் எந்நேரமும் மௌனியாக இருந்து தவம் செய்பவன். வித்தியா கணபதி அவனுடன் கதைப்பதாக மக்கள் பேசிக்கொள்வார்கள்.

கதிர்காமநாதனின் தகப்பனுக்கு திடீரென சுகவீனம் வந்துவிட்டது. ஊரவர் அவரை மருத்துவமனையில் அனுமதித்துவிட்டு விபரத்தை கதிர்காமநாதனிடம் கூறினர்.

கதிர்காமநாதன் தனது உந்துருளியை எடுத்துக்கொண்டு வித்தியா கணபதி ஆலயத்திற்கு வந்து மயில்வாகனனையும் ஏற்றிக்கொண்டு மருத்துவமனைக்குச் சென்றான். வழியில் வேகமாக வந்த வாகனமொன்று கதிர்காமநாதனின் உந்துருளி மீது மோதியது. இருவரும் மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அன்று மாலை நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் அக்கிராம மக்கள் எல்லோரும் ஒன்றுதிரண்டிருந்து கதிர்காமநாதனுக்கு சுகம்வரப் பிரார்த்தித்தனர்.

கைலாயத்தில் பார்வதிதேவியின் மடியில் அமர்ந்திருந்த விநாயகர் அவசரமாக எழுந்தார். அவரின் அவசரத்தைக் கண்ட பார்வதி அதிசயப்பட்டாள்.

“விநாயகா பல நாட்களுக்குப் பிறகு என் மடியில் அமர்ந்திருக்கிறாய்... இரு...”

“எனது பக்தர்கள் அனைவரும் அழைக்கும்போது நான் எப்படியம்மா அமர்ந்திருப்பது. எனது பக்தர் இருவர் உயிருக்காகப் போராடுகிறார்கள்.”

பார்வதி கண்களை மூடித் தியானித்தாள். யாவும் புரிந்தது.

“உனது செயல் சரியானதல்ல. உன்மீது அதிக பக்தியுள்ளவன் மயில்வாகனன் தான். ஆனால் நீ கதிர்காமநாதனுக்குத்தான் அருள்புரிகிறாய். சர்வேஸ்வரனின் மைந்தனான உன்செயல் நீதியற்றது.”

“அம்மா, மனிதப்பிறவி மகத்தானது. மற்றவர்களுக்குச் சேவை செய்வதற்கென்றே படைக்கப்பட்டது. எந்த வேலையும் செய்யாமல் சதா என்னை நினைப்பதால் என்ன பலன்? தனக்குத் தான் அவன் பயன் தேடுகிறான். மீண்டும் பிறவா இன்பத்தைப் பெற நினைக்கிறான். பிறப்பதன் நோக்கமே சேவை செய்தல்தான். என்னைச் சில நிமிடங்களாவது நினைத்துக்கொண்டு அறம் மிகுந்த இல்வாழ்க்கை வாழ்வதோடு, மற்றவர்களையும் நெறிப்படுத்தி அறவாழ்வு வாழவைக்கும் கதிர்காமநாதன் தான் சிறந்தவன். மயில்வாகனன் தனியே முத்தியடைகிறான். கதிர்காமநாதன் பலரை முத்தியடைய வைப்பதோடு தானும் முத்தியடைய நினைக்கிறான்....”

“உனது திருவிளையாடல் எனக்குப் புரியாதது அல்ல” என்று மகனை அணைத்து முத்தமிட்டார் பார்வதிதேவியார்.

48. ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா; இல்வாழ்க்கை

நோற்பாரின் நோன்மை உடைத்து.

பிறரையும் அறவழியில் வாழச்செய்து தானும் அறவழியில் இருந்து விலகாது வாழ்பவனது இல்வாழ்க்கை தவம் செய்வாரைவிட மிக்க வலிமை உடைய வாழ்க்கையாகும்.

உண்மையான அறம்

சின்னத்துரை மிகுந்த கடவுள் நம்பிக்கை உடையவர். அவருக்கேற்ற மனைவி சகுந்தலா அவர் நினைப்பதைச் செய்து முடிப்பவள். இருவரும் மிகவும் அன்பாக இருந்தனர். அவர்களுக்கு மூன்று ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும் இருந்தனர். உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், அநாதைகள் மீது அவர்கள் அன்பும், இரக்கமும் காட்டுவார்கள்.

அன்று வெள்ளிக்கிழமை இரவு பதினொருமணி இருக்கும். வாசலில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டு எழுந்தார் சின்னத்துரை. வாசலில் ஒரு வயோதிபர் நின்றார்.

“உங்களுக்கு என்ன வேண்டும்” சின்னத்துரை கேட்டார்.

“ஐயா, நான் வெளியூரவர். இங்கு ஒருவரைச் சந்திக்க வந்தேன். நேரமாகிவிட்டது. பசிதாங்க முடியவில்லை. உண்பதற்கு ஏதாவது உணவு இருந்தால் தாருங்கள்.”

“உள்ளுக்கு வாருங்கோ” என அழைத்து வந்த சின்னத்துரை மனைவியை எழுப்பினார்.

“சகுந்தலா பசியோடு வெளியூரவன் ஒருவர் வந்திருக்கிறார். உணவு ஏதாவது இருக்கா?”

“இல்லை. இருக்கச் சொல்லுங்கள், சமைத்துக் கொடுப்போம்” என்ற சகுந்தலா விரைவாகச் சமைத்து அவருக்கு உணவு படைத்தாள்.

பசி தீர்ந்த வயோதிபர் வாழ்த்திவிட்டுப் புறப்பட்டார்.

சின்னத்துரையின் பிள்ளைகள் எல்லோரும் கல்வியில் வல்லவர்கள். வகுப்பில் முதலாம் பிள்ளையாக வருவார்கள். ஆசிரியர்களை மதித்து கீழ்ப்படிவுடன் அவர்கள் இட்ட வேலைகளைச் செய்வார்கள். அதனால் ஆசிரியர்கள் சின்னத்துரையைக் காணும் வேளைகளிலெல்லாம் அவரின் பிள்ளைகளைப் பற்றி புகழ்ந்து கூறுவார்கள். அதனால் அவர் மிகவும் மகிழ்வார்.

கிராமத்தில் உள்ள எல்லோரையும் சின்னத்துரையின் பிள்ளைகள் மதித்து நடப்பார்கள். அவர்கள் சொல்லும் வேலைகளைச் செய்து கொடுப்பார்கள். அதனால் ஊரிலும் சின்னத்துரைக்கும், பிள்ளைகளுக்கும் மதிப்பு அதிகம் இருந்தது. ஊரில் உள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகள், குழப்படிகள் செய்தால் “சின்னத்துரையின் பிள்ளைகளைப் பாருங்கள், எவ்வளவு நல்லவர்கள். அவர்களைப் போல் நீங்களும் நடந்தாலென்ன.?” என்று கேட்பார்கள்.

பாடசாலையில், ஊரில் எந்தப் போட்டிகள் நடைபெற்றாலும் சின்னத்துரையின் பிள்ளைகள் தான் முதலாவதாக வருவார்கள்.

சின்னத்துரையிடம் யாராவது கடன் கேட்டு வந்தால் உடனே கொடுத்து விடுவார். அவ்வூரில் பூபாலன் என்றொருவன் வாழ்ந்து வந்தான். அவன் குடும்பத்தைக் கவனிப்பதே இல்லை. எந்த வேளையிலும் குடித்துவிட்டு ஊராருடன் சண்டை சச்சரவுகளுக்குப் போவான்.

சின்னத்துரை அவனுக்கு பலமுறை புத்திமதிகள் கூறியும் அவன் கேட்பதில்லை. வாரத்தில் இரண்டு, மூன்று தரம் சின்னத்துரையிடம் வந்து கடன் கேட்பான்.

“நீ குடிப்பதற்குத் தானே காசு கேட்கிறாய்... நான் தரமாட்டன். நான் உனக்குக் காசு தந்தால் நீ குடித்துவிட்டு மற்றவர்களுடன் சண்டைக்குப் போவாய்... மனைவி பிள்ளைகளை அடிப்பாய்... நீ இனிமேல் எனது வீட்டுப்பக்கம் வரக்கூடாது” என்று ஏசுவார்.

பூபாலன் அவர் எப்படி ஏசினாலும் காதில் வாங்கிக்கொள்ள மாட்டான். வீட்டிலேயே பழி இருப்பான். அதனால் கொஞ்சப்பணம் கொடுப்பார் சின்னத்துரை.

பூபாலனின் மனைவி சின்னத்துரையின் வீட்டிலும், தோட்டத்திலும் வேலை செய்வாள். அதற்கான கூலியை விட அவனது பிள்ளைகளின் கல்விச் செலவுக்காகவும் பணம் கொடுப்பார் சின்னத்துரை.

வருடங்கள் பல கழிந்தன. சின்னத்துரையின் பிள்ளைகள் நன்றாகக் கற்று நல்ல நல்ல உத்தியோகங்களில் அமர்ந்தனர். அவர்கள் எல்லோருக்கும் திருமணஞ் செய்து வைத்தார். பேரப்பிள்ளைகள் பிறந்தன. அவர்களுடன் கொஞ்சி விளையாடினார் சின்னத்துரை.

பூபாலனது பிள்ளைகளும் நல்ல நிலைக்கு வந்து விட்டனர். அவனது பிள்ளைகள் சின்னத்துரையின் வீட்டுக்கு வருவார்கள். பெற்ற தகப்பனைப் போல் அவரை மதித்து பணிவிடை செய்வார்கள்.

இல்வாழ்வின் சகல இன்பங்களையும் அனுபவித்த சின்னத்துரைக்கு துறவு பூண்டு நாட்டில் உள்ள கோயில்களை எல்லாம் தரிசிக்கும் விருப்பம் ஏற்பட்டது மனைவியையும் அழைத்துக்கொண்டு கால்நடையாக தல யாத்திரைக்குப் புறப்பட்டார் சின்னத்துரை.

பிள்ளைகளும் ஊரவர்களும் அவரை வாகனமொன்றில் செல்லுமாறு வற்புறுத்தினர். அவர் மறுத்துவிட்டு மனைவியுடன் கால் நடையாகப் புறப்பட்டார்.

அவரது பெருந்தன்மையையும், எளிமையான நடத்தையையும் ஊர்மக்கள் பாராட்டினார்கள்.

49. அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்

பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்லறமே ஆகும். அதுகும் மற்றவன் பழிக்கும் குற்றம் இல்லாமல் இருந்தால் மேலும் சிறப்புடையதாகும்.

தெய்வம் போன்றவன்

சிவபாலன் சேனையூர் கிராம சேவகன். சேனையூர் விவசாயிகள் வாழும் கிராமம். அங்குள்ள விவசாயிகளில் பெரும்பான்மையானோர் மிகவும் வறியவர்கள். கல்வியறிவில்லாதவர்கள். காலையில் வயல்களுக்குச் சென்றால் மாலையில் தான் வீடு திரும்புவார்கள். மழை நீரை நம்பி விவசாயம் செய்பவர்கள். ஒவ்வொருவரும் தமது வயல்களில் வேலை செய்வார்கள். அருவி வெட்டு, சூடு மிதித்தல் போன்ற பெரும் வேலை நாட்களில் தமது நண்பர்கள், உறவினர்களை அழைத்து அவ்வேலையைச் செய்விப்பார்கள். பின்பு அதற்காக தாம் சென்று அவர்களின் வயல்களில் வேலை செய்வார்கள். அருவி வெட்டு, சூடு மிதித்தல் போன்ற வேலைகள் முடிந்ததும் வயலை உழுது எள்ளு, பயறு, உழுந்து முதலிய தானிய வகைகளை விதைப்பார்கள். கிணறு உள்ள வயற் சொந்தக்காரர்கள் பூசிணிச்செடி, தக்காளி போன்றவற்றை நடுவார்கள். இதனால் அவர்களுக்கு வேலைகள் குறைவு. அதனால் மதுபான வகைகளைக் குடிப்பார்கள். கடனுக்கு மதுபான வகைகளை விற்கும் பல வியாபாரிகள் அங்கு இருக்கிறார்கள். அவர்கள் விவசாயிகளுக்கு கடனுக்கு மதுபான வகைகளைக் கொடுத்துவிட்டு அருவி வெட்டிய பின் அவர்களிடம் கடனை வசூலிப்பார்கள். சிலர் விவசாயிகளிடத்து தானிய வகைகளை மிகவும் குறைந்த விலையில் கொள்வனவு செய்து பட்டணத்தில் கொண்டு சென்று கூடிய விலைக்கு விற்பார்கள்.

வயலில் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்த குடும்பப் பெண்கள் பலர் அறுவடையின் பின் தமது கணவன்மார் குடித்த கடனைச் செலுத்திவிட்டு வெறும் கையோடு வீடு வரும்போது படும் துன்பத்தைக் கண்டு மனம் வருந்துவார் சிவநாதன்.

இனிமேல் தனது எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் மதுபான வகைகள் விற்கக்கூடாது என்றும், மீறி விற்போர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குற்றவாளியாகக் காணப்பட்டால் நிவாரண முத்திரை பறிமுதல் செய்யப்படுமெனவும் அறிவித்தார். அத்துடன் கண்காணிப்பதற்காக பத்து பேர் கொண்ட குழுவொன்றையும் நியமித்தார்.

சட்ட விரோதமாக காய்ச்சப்படும் சாராயம் இரவு நேரங்களில் தான் பிற இடங்களுக்குக் கடத்தப்படும். இரவு முழுவதும் சிவநாதனும் கண்காணிப்புக் குழுவினரும் விழித்திருந்து அவர்களைப் பிடித்தனர்.

கசிப்புக் கடத்துவோர், விற்போர் மக்கள் முன் நிறுத்தப்பட்டனர். இருவருக்கு நிவாரண முத்திரை வெட்டப்பட்டது. அதனால் மதுபான வியாபாரம் முற்றாக நின்றது.

சேனையூரில் சிறுசிறு களவுகளும் அடிக்கடி நடைபெற்றன. அங்கு வாழும் விவசாயிகள் தங்கள் கால் நடைகளை வயல்களிலும், தோட்டங்களிலும் இரவில் பட்டி அமைத்து கட்டுவது வழக்கம். மாடுகளின் சாணமும், சலமும் மண்ணில் சேர்வதால் அதிக விளைச்சல் ஏற்படும். பசளைக்காக பட்டியடைப்போர் இரவு வீடு திரும்பி விடுவர். அதைப் பயன்படுத்தி திருடர்கள் கால் நடைகளைத் திருடி அயல் ஊரில் உள்ள இறைச்சிக் கடைகளுக்கு விற்பனை செய்தனர். இதைத் தடுப்பதற்காக சிவநாதன் முழு மூச்சுடன் களமிறங்கினார்.

அன்று அவ்வூரில் வாழும் ஆறுமுகத்தின் கன்றுத்தாச்சி மாடு ஒன்று திருட்டுப் போய்விட்டது. சிவநாதன் மதுபான ஒழிப்புக் குழுவுடன் சேர்ந்து அயலூருக்குச் சென்று அவ்வூர் கிராம சேவகரின் உதவியோடு திருடர்களைப் பிடித்தார். நிறைமாதக் கர்ப்பமான அம்மாடு இறைச்சியாக தலைகீழாகத் தொங்கிய தோற்றத்தை சிவநாதனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. திருடர்களையும், இறைச்சி வியாபாரிகளையும் பிடித்து பொலிசாரிடம் கொடுத்தார்.

அவ்வூர் தோட்டங்களிலும் களவுகள் நடைபெறுவது வழக்கம். வாழைக்குலை வெட்டுதல், பூசிணிக்காய் பிடுங்கல், தக்காளிப்பழம் பறித்தல் போன்ற திருட்டுக்கள் நடைபெறும் போது அவர் அயலூர்ச் சந்தைக்குச் சென்றுவிடுவார். செல்லும் போது வெட்டப்பட்ட வாழைக்குலையின் அடிப்பாகத்தைக் கொண்டு செல்வார். அதனால் திருடர்களை சுலபமாகப் பிடித்து விடுவார்.

சிவநாதனின் முயற்சியால் சேனையூரில் திருட்டுக்கள் முற்றாக நின்றுவிட்டன.

கவனிப்பாரற்று வயல்வெளியில் இருந்த பிள்ளையார் ஆலயத்தை புனருத்தாரணம் செய்து மக்களின் வழிபாட்டுக்காக திறந்து வைத்தார் சிவநாதன். முன்பு பூசை இல்லாமல் இருந்த ஆலயத்திற்கு குருக்கள் நியமிக்கப்பட்டார். மூன்று வேளை பூசை நடைபெற்றது. ஆலயத்திற்கென ஒரு சபை நிறுவப்பட்டது. அச்சபை தேவாரம், திருவாசகம், சகலகலாவல்லி மாலை, திருக்குறள் போன்றவற்றில் போட்டிகள் வைத்து பரிசுகள் கொடுத்தது. அதனால் சிறுவர்கள் உற்சாகத்துடன் போட்டிகளில் பங்குபற்றினர்.

திருவிழாக் காலங்களிலும், விசேட தினங்களிலும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. நீதிக்கதைகளையும், தத்துவக் கதைகளையும் பிரசங்கம் செய்வோர் எடுத்துக் கூறினர். மக்கள்

புதிய விடயங்களை அறிய ஆர்வங் காட்டினர். மாணவர்கள் ஒழுங்காகப் பாடசாலைக்குச் சென்றனர்.

நிவாரணம், அரசின் கொடுப்பனவுகள், நன்கொடைகள் யாவற்றையும் நீதியான முறையில் உரியவர்களுக்கு ஒதுக்கீடு செய்தார் சிவநாதன்.

ஊர்ச் சண்டைகள், குடும்பப் பிரச்சினைகள் என அவரிடம் முறையிடுவோருக்கு நியாயமான, இருபகுதியினரும் ஒத்துக்கொள்ளக்கூடிய தீர்ப்பை வழங்கினார். அதனால் அவ்வூர் மக்கள் அவரைத் தெய்வமாக மதித்தனர்.

அவருக்கு முன்னால் செருப்பு, தலைப்பாகை அணியமாட்டார்கள். அவரைக் கண்டால்தலையைத் தாழ்த்தி வணக்கம் கூறுவார்கள். எழுந்து நின்று வரவேற்பார்கள். கோயில் திருவிழாக்களுக்குச் சென்றால் காளாஞ்சி கொடுத்துக் கௌரவிப்பார்கள். பொது வைபவங்களுக்குச் சென்றால் மாலை அணிவித்துக் கௌரவிப்பார்கள். சிவநாதன் என்ற பெயர் அக்கிராமத்தில் மந்திர வாக்காகப் பயன்படுகிறது.

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்.

அறநெறிக்குட்பட்டு இவ்வுலகில் வாழும் இல்வாழ்வான் வானுலகில் வாழும் தெய்வங்களைப் போல் போற்றப்படுவான்.

அளவறிந்து

நளாயினி புருசோத்தமனின் அன்பு மனைவி. அவர்களுக்கு ஐந்து பிள்ளைகள். தனது சொந்தக் கிராமமான நல்லூரில் புருசோத்தமன் விவசாயம் செய்து வாழ்க்கையை நடாத்தி வந்தான். அவனது தம்பி மாறன் வர்த்தகன். வசதியாக மனைவி,பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தான். தங்கை சகுந்தலா ஆசிரியை, அவளது கணவன் நகுலனும் ஆசிரியர். வசதியான குடும்பம். நளாயினிக்கு ஐந்து ஆண் சகோதரர்கள். எல்லோரும் மிகவும் வசதியாக வாழ்கின்றனர்.

புருசோத்தமன் காலையில் தோட்டத்திற்குச் சென்றால் இரவு எட்டு மணிக்குப் பின்பு தான் வீட்டுக்குத் திரும்புவான். காலையில் நளாயினி சமைத்து பிள்ளைகளுக்கு உணவு கொடுத்து பாடசாலைக்கு அனுப்பிவிட்டு கணவனுக்கு உணவு கொண்டு தோட்டத்திற்குச் செல்வாள். அங்கு கணவனுடன் வேலை செய்துவிட்டு பிற்பகல் இரண்டு மணிக்கு வீட்டுக்கு வருவாள். அவள் வந்தபின் பிள்ளைகள் பாடசாலையால் வருவார்கள். அவர்களுக்கு உணவு கொடுத்துவிட்டு கணவனுக்கும் தனக்கும் உணவு எடுத்துக்கொண்டு தோட்டத்திற்குச் செல்வாள்.

கணவனுடன் கிணற்றடியில் நிற்கும் பூவரச மரத்தின் கீழ் இருந்து சாப்பிடுவாள். அவர்கள் எல்லா காய்கறிகளையும் செய்கை பண்ணுவதால் நாலைந்து கறிகளுடன் கணவனுக்கு உணவு பரிமாறுவாள். அநேகமாக எந்தநாளும் நல்ல சுவையான தயிர் இருக்கும். உண்ட பின் வாழைப்பழம் கொடுப்பாள்.

உண்ட பின் புருசோத்தமன் பூவரசமர நிழலில் சற்று படுத்திருந்து ஓய்வெடுப்பான். அவ்வேளைகளில் நளாயினி ஊர்ப் புதினங்களைக் கூறுவாள். புருசோத்தமன் அன்றைய சந்தை நிலைபரத்தைக் கூறி தான் கொண்டுசென்று விற்ற மரக்கறிகளுக்கான பணத்தைக் கொடுப்பான். அவன் உழைப்பது மட்டும்தான். வீட்டு நிர்வாகம், வரவு செலவுகள் யாவும் அவள்தான் கவனித்துக் கொள்வாள்.

நளாயினி மிகவும் கண்டிப்பானவள். கட்டாயம் செலவு செய்ய வேண்டுமென்று தோன்றினால் தான் செலவு செய்வாள். கணவனின் வருமானத்தில் ஒரு பகுதியை சேமித்து பக்கத்து வீட்டு சரஸ்வதியிடம் சீட்டுக்கட்டி ஐம்பதினாயிரம் ரூபா எடுத்து வங்கியில் சேமித்து வைத்திருக்கிறாள். அத்துடன் பிள்ளைகளுக்குத் தேவையான நகைகளையும் வாங்கி வைத்திருக்கிறாள்.

மாறன் பெரிய வர்த்தகன். அவனது வியாபாரப் பிரச்சினைகள் எதுகும் அவனது மனைவி யசோதாவுக்குத் தெரியாது. அவள் ஆடம்பரப் பிரியை. நேரத்திற்கு ஓர் ஆடையுடனும் வெவ்வேறு விதமான நகைகளுடனும் உலாவுவாள். ஊரில் ஒரு வைபவத்திற்குக் கட்டிய சேலையை அடுத்த வைபவத்திற்குக் கட்டமாட்டாள். தேவையில்லாத பொருட்கள் பலவற்றை வாங்குவாள். நாலைந்து தினங்களின் பின் அவை தேடுவாரற்று முற்றத்தில் கிடக்கும்.

சகுந்தலா யசோதாவுக்கு போட்டியாக வாழ வேண்டும் என்று நினைப்பாள். அதனால் யசோதா வாங்கும் பொருட்களிலும் பார்க்க விலை கூடிய பொருட்களைத் தான் வாங்குவாள். யார் அழகான சேலை கட்டுவது, யார் கூடுதலான நகை போடுவது என்ற போட்டி அவர்களுக்கிடையில் எந்நாளும் நடக்கும்.

அன்று அவ்வூர்ப் பிரமுகர் ஒருவரின் மகனின் திருமணம். புருசோத்தமன் மனைவிக்குச் சொல்லாமல் அன்று விற்பனை செய்த காய்கறிகளின் பணத்திற்கு ஒரு பட்டுச்சேலை வாங்கி வந்திருந்தான். அதன் விலை மூவாயிரம் ரூபா.

அந்த விலைக்கு வாங்கியதற்காக அவள் ஏசுவாள் எனப் பயந்து சேலையைக் கொடுத்தான்.

நளாயினி மிகவும் மகிழ்ச்சியோடு அதைப் பெற்றுக் கொண்டமை அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

''நல்லாயிருக்கு. என்ன விலை?''

''ஆயிரம் ரூபா.''

நளாயினி சிரித்தாள். பின்பு ''விலை உயர்ந்த சேலைகளை நான் உடுத்தாவிட்டாலும் எனக்கு அவற்றின் விலை தெரியும். இது மூவாயிரம் ரூபாவுக்கு மேலை பெறும். உள்ளதைச் சொல்லுங்கோ. நான் ஏசமாட்டன்.''

''நீர் நெடுக ஒரு சேலையைத் தான் கட்டுகிறீர். ஒவ்வொரு வைபவத்திற்கும் பெண்கள் ஒவ்வொரு சேலை கட்டுகிறார்கள். உம்மைப் பார்க்க எனக்குச் சகிக்கவில்லை. அதனால் தான் எடுத்தனான். மூவாயிரம் ரூபா.''

''பிரச்சினை இல்லை. முன்புதான் நாங்கள் ஏழைகள். இப்போது ஓரளவு வசதியுள்ளவர்களாக இருக்கிறம். வரவுக்கேற்ற செலவு செய்யத்தான் வேணும். நீங்களும் ஒரு நல்ல பட்டு வேட்டி, சால்வை எடுங்கோ.''

அன்றைய வைபவத்தில் தன் மனைவியை அடிக்கடி பார்த்து இரசித்தான் புருசோத்தமன். எந்த வைபவங்களானாலும் நளாயினியை விட்டு விலகியிருக்கும் தம்பியாரின் மனைவியும், தங்கையும் அவளுக்கு அருகில் இருந்து கதைத்தது புருசோத்தமனுக்கு வியப்பாக இருந்தது.

நளாயினி வீட்டுக்கு வந்ததும் வியப்புடன் கேட்டான், ''என்ன ஒரு நாளும் இல்லாதவாறு அக்காவும், மச்சாளும் உம்மோடை கூடியிருந்து கதைச்சினை...''

எல்லாம் காரியத்தோடைதான். ''மாறன் வியாபாரத்திலை நட்டப்பட்டுப் போனானாம். கடன்காரரின் தொல்லை தாங்க முடியேல்லையாம். எங்களிட்டை காசிருந்தால் இரண்டு லட்சம் ரூபா தரட்டாம். தாங்கள் ஆடம்பரமாய் வாழ்ந்ததாலை கஷ்டப்பட்டுப்

போட்டினையாம். சகுந்தலாவின் புரிசன் ஒழுங்காய் வேலைக்குப் போகாததாலை வேலையாலை தற்காலிகமாய் நிறுத்தியிருக்கினையாம். சம்பளமில்லாததாலை கஷ்டமாயிருக்கென்று சொன்னாள்....''

பெருமூச்சு விட்டான் புருசோத்தமன். ''என்ரை உழைப்பை நீர் அளவறிந்து செலவு செய்ததால் நான் பணக்காரனாயிட்டன்'' என்றான் புருசோத்தமன். நளாயினிக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

51. மனைத்தக்க மாண்புஉடையள் ஆகித்தற் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்புகளை உடையவளாகித் தன் கணவனின் பொருளாதார வளத்திற்கேற்ப வாழ்க்கை நடத்துகின்றவளே வாழ்க்கைத்துணை ஆவாள்.

மனை மாட்சி

குலேந்திரன் செல்லப்பாவின் மூன்றாவது புத்திரன். அவன் ஆசிரியத் தொழில் செய்து வந்தான். செல்லப்பாவின் இரண்டாவது புத்திரன் நிர்மலன். வட்டிக்கடை நடாத்தி வந்தான். மூத்த மகள் இலட்சுமி நாகராசா என்ற வர்த்தகரை திருமணம் புரிந்து பெரும் பணக்கார வாழ்வு வாழ்ந்து வருகிறாள்.

குலேந்திரனின் மனைவி சந்திரா நல்ல குணவதி. உற்றார், உறவினர் நண்பர்கள் அயலவரை மதித்து நடப்பவள். எல்லோரிடத்தும் அன்பு பூண்டவள். நிர்மலனின் மனைவி காயத்திரி சுயநலம் மிக்கவள். கணவன் வட்டிக்காசில் சிறிதளவைக் குறைத்தாலும் விடமாட்டாள். அத்துடன் கள்ளக் கணக்குப் போடுவதிலும் வல்லவள். உற்றார், உறவினர், இனத்தவர், அயலவரை மதிக்கமாட்டாள். அவர்கள் தம்மிடம் கடனாக ஏதாவது கேட்டு வந்து விடுவார்கள் என்றும், உதவி கோருவார்கள் என்றும் கூறி கணவனை அவர்களுடன் சேர விடமாட்டாள்.

லட்சுமியின் கணவன் பெரும் செல்வந்தன். அவன் வியாபாரத்தில் பெருமளவு கலப்படம் செய்பவன். கள்ள வியாபாரிகளோடு கூட்டுச் சேர்ந்து வியாபாரம் செய்பவன்.

செல்லப்பா குலேந்திரன் மீதுதான் அதீத அன்பு வைத்திருந்தார். செல்லப்பா நிர்மலனுக்கும் இலட்சுமிக்கும் அடிக்கடி புத்திமதிகள் கூறுவார். எனினும் அவர்கள் திருந்தியதில்லை.

''பணம் என்பது இன்று வரும் நாளை போகும். குணம் தான் நிரந்தரமானது. நீதியான செயல்கள் மூலம் குலப் பெருமையைக் காத்தல் வேண்டும். நிர்மலா நீ அம்மன் கோயிலுக்கு இரண்டு இலட்சம் ரூபா கொடுத்தாய். அதை இங்குள்ள மக்கள் எப்படிப் பேசிக்கொண்டார்கள் தெரியமா? அதிக வட்டியும், கள்ளக் கணக்கும் போட்டால் இரண்டு லட்சமென்ன ஐந்து லட்சம் கூடக் கொடுக்கலாம் என்றார்கள். இலட்சுமி கொடுத்த பணத்திற்கு கள்ளக் கடத்தல் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொடுத்து பாவத்தில் இருந்து விலகப் பார்க்கிறார்கள் என்று சொல்கிறார்கள். எனவே நல்ல வழியில் பணத்தைத் தேடுங்கள்'' என்றார்.

''சனத்துக்கென்ன. பிழைக்கத் தெரியாமல் இருந்துகொண்டு யார் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் எதை வேண்டுமானாலும் கதைக்கட்டும்'' என்றாள் இலட்சுமி.

அதன்பின் செல்லப்பா அவர்களுக்கு புத்திமதிகள் கூறுவதை விட்டுவிட்டார். செல்லப்பா குலேந்திரனுடன் தான் வாழ்ந்து வந்தார். இலட்சுமியும் நிர்மலனும் பலமுறை வருந்திக் கேட்டும் அவர் அவர்களுடன் வாழச் செல்லவில்லை. இலட்சுமியும், நிர்மலனும் அடிக்கடி வீட்டுக்கு வரும்போது விலை உயர்ந்த பால்மா வகைகளையும், தின் பண்டங்களையும் கொண்டு வருவார்கள். ஆனால் அவற்றைச் செல்லப்பா வாங்கமாட்டார். ''வருந்தி, கஷ்டப்பட்டு உழைத்த பணத்தில் ஒரு துண்டு பாண் வாங்கித் தாருங்கள் நான் உண்கிறேன்'' என்பார். அதனால் பிரச்சினைகள் வரும். இதனால் அவர்கள் இருவரும் அங்கு வருவதை நிறுத்திக் கொண்டனர்.

செல்லம்மாள் இலட்சுமியின் வீட்டில் வேலை செய்பவள். வறுமை காரணமாக அடிக்கடி பணம் வாங்குவாள். அவளது குழந்தைகளுக்கு திடீரென்று காய்ச்சல் நோய் வந்துவிட்டது. மருந்திற்காக இலட்சுமியிடம் பணம் கேட்டாள்.

''உனக்கு சம்பளத்தை விட இரண்டாயிரம் ரூபா கூடத் தந்துவிட்டேன். இனி பொறுப்புத் தந்தால் தான் காசு தருவேன்'' என மறுத்துவிட்டாள். செல்லம்மா நிர்மலனிடம் சென்றாள். அவனும் மறுத்துவிட்டான். சந்திரா அதைக் கேள்விப்பட்டு செல்லம்மாளிடம் வந்தாள். குழந்தை நோயினால் படும் அவஸ்தையைக் கண்டு மனமிரங்கி ஆயிரம் ரூபா கொடுத்தாள்.

“சந்திரா நான் உங்களுக்கு மூவாயிரம் ரூபா தரவேண்டும்...” என்றாள் செல்லம்மா.

“பரவாயில்லை. காசு வாறநேரம் தா. இப்ப இதைப்பிடி. பிள்ளையை ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்” என்றாள் சந்திரா.

ஒரு நாள் இரவு கள்வர் கூட்டம் ஆயதங்களுடன் நிர்மலனது வீட்டுக்குச் சென்று அவர்களைக் கட்டி வைத்துவிட்டு நகைகளையும் பணத்தையும் கொள்ளை அடித்துச் சென்று விட்டனது.

மறுநாள் நிர்மலனிடம் நகைகளை அடைவு வைத்தோர் பணத்துடன் வந்து நின்று நகையைக் கேட்டு மிரட்டினர். நிர்மலனும் மனைவியும் எவ்வளவோ எடுத்துக்கூறியும் அவர்கள் கேட்கவில்லை. கடைசியாக சந்திரா வந்து நிலமையை விளக்கிச் சொன்ன பின்புதான் அவர்கள் சென்றனர்.

“நிர்மலா உனக்காக விடவில்லை, சந்திரா அக்காவுக்காகத்தான் விர்றம். சந்திரா அக்கா பிரச்சினையைத் தீர்ப்பா என்று நம்புறம்...” என்று ஓர் இளைஞன் சொன்னான்.

பாவனைக்குதவாத பொருட்களை நாகராசா விற்பதாக பலமுறை உரியவர்களுக்கு மக்கள் அறிவித்தும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. நாகராசா அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்கி அவர்களைத் திருப்பி அனுப்பிவிடுவான். அதனால் கோபம் கொண்ட கிராம மக்கள் கொதித்தெழுந்து நாகராசாவின் கடையை முற்றுகையிட்டனர். பொருட்களைத் தூக்கி வெளியே வீசினர். நாகராசாவும் மனைவியும் அவர்களை மன்றாடிக் கேட்டும் அவர்கள் விடவில்லை. நாகராசா சந்திராவிடம் வந்து நிலமையைச் சொல்லி அவளை தனது வர்த்தக நிலையத்திற்கு அழைத்துச் சென்றான்.

சந்திராவைக் கண்ட மக்கள் தமது செய்கைக்கு நியாயம் கூறினர். அவள் அதை ஒப்புக்கொண்டாள். சந்திராவின் வேண்டுதலை மதித்து மக்கள் கலைந்து சென்றனர்.

நாகராசாவும் மனைவியும், நிர்மலனும் மனைவியும் சந்திராவின் பெருமையை உணர்ந்தனர்.

52. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை

எனைமாட்சித்து ஆயினும் இல்.

இல்வாழ்க்கைக்குத் தக்க நற்பண்புகள் இல்லாளிடம் இல்லாவிட்டால், ஒருவனுடைய வாழ்க்கையில் பல்வேறு விதமான வசதிகள் இருந்தாலும் அதனால் பயன் ஏதும் ஏற்படமாட்டாது.

மாட்சிமை

மணிமாறனின் மனைவி நித்தியலட்சுமி. கணவனில் மிகவும் அன்புடையவள். கணவனின் தாய், தந்தையரை தனது தாய், தந்தையரைப் போல் மதிப்பவள். அவனது சகோதரர்களையும் தனது சகோதரர்களாக மதிப்பவள். அயலவர், நண்பர்கள், உறவினர்கள் மீது மதிப்பும், மரியாதையும் கொண்டவள். அதனால் எல்லோரும் அவளுடன் அன்பாகப் பழகினர்.

ஊரில் எந்த வைபவம் நடைபெற்றாலும் அதில் கலந்து கொள்வாள். அவர்கள் கேட்கும் சரீர உதவிகளைச் செய்து கொடுப்பாள். ஊரில் ஒரு வீட்டில் திருமண வைபவமானால் ஐந்தாறு தினங்களுக்கு முன்பே அங்கு வந்து நின்று வீட்டைச் சுத்தப்படுத்தல், பலகார வகைகளைச் செய்தல் போன்ற வேலைகளை அவர்களுக்குச் செய்து கொடுப்பாள். திருமண நாளன்று சமையல் வேலைகளுக்கு உதவி செய்வாள். மறுநாள் சமையல் பாத்திரங்களைக் கழுவி உதவி செய்வாள். இவையெல்லாம் தனது வேலையை முடித்த பின் செய்வதால் இவற்றிற்கெல்லாம் அவள் கூலி வாங்கமாட்டாள். அவ்வீட்டாரின் வற்புறுத்தலின் பேரில் தானும் அங்கு சாப்பிட்டுவிட்டு தனது குடும்பத்தினர்க்கும் உணவு கொண்டு வருவாள்.

மணிமாறன் கமம் செய்பவன். உற்சாகமாகச் செய்யமாட்டான். நித்தியலட்சுமியின் வற்புறுத்தலுக்காக தோட்டத்திற்குச் செல்வான். தோட்டப் பொறுப்புகள் முழுவதையும் நித்தியலட்சுமியே ஏற்றுச் செய்வாள். அவள் மிகவும் கஷ்டப்பட்டுச் செய்வதால் வருடாவருடம் நல்ல விளைச்சலும் ஏற்பட்டது.

தமது குடும்பச் செலவு போக மிஞ்சும் பணத்தை வங்கியில் சேமித்து வந்தாள். அவ்வூர் மக்கள் அவள் மீது அன்பும், நம்பிக்கையும் வைத்திருந்தனர். அதனால் அவளுக்கு எந்த விதமான குறைகளையும் அவர்கள் விட்டு வைப்பதில்லை.

உழுதல், விதைத்தல், நீர்ப்பாய்ச்சல், களை எடுத்தல், அருவி வெட்டல், சூடு மிதித்தல் போன்ற வேலைகளின் போது அவ்வூரில் தொழிலாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும். ஆனால் நித்தியலட்சுமிக்கு ஏற்படாது. நித்தியலட்சுமிக்கு வேலை செய்து முடித்துவிட்டுத்தான் தொழிலாளர்கள் மற்றவர்களுக்கு வேலைக்குச் செல்வார்கள்.

அவ்வூரில் வரகுணன் என்றொரு விவசாயி வாழ்ந்து வந்தான். அவனது மனைவி பூரணி. பெரும் பணக்காரனான வரகுணனின் மனைவியான பூரணி கஞ்சத்தனம் மிக்கவள். தொழிலாளர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் கொடுக்கமாட்டாள். அங்கு வாழும் ஏழை மக்கள் பெரும் பணக்காரியான அவளது வீடுகளுக்குச் சென்று வேலைகள் செய்வார்கள். அவர்களது கமத்தில் வேலை செய்வார்கள். ஆனால் அவள் ஒழுங்காகச் சம்பளம் கொடுக்கமாட்டாள். ஏழை மக்களுக்கு உதவி செய்வதாகக் கூறி கொஞ்சம் கொஞ்சமாகப் பணத்தைக் கொடுப்பாள். ஓரளவு தொகை சேர்ந்ததும் அவர்களது நகையை வாங்கி வைத்துவிடுவாள். கூடிய தொகையானால் காணி உறுதியில் கையெழுத்து வாங்கிவிடுவாள். அவர்களால் குறித்த காலத்தில் மீட்கப்படாது போனால் அவற்றைத் தனது உடைமையாக்கிக் கொள்வாள்.

வரகுணனுக்கு மனைவியின் செயல்களில் விருப்பம் இருப்பதில்லை. அவள் கொடூரமான குணங்களை உடையவளாக இருந்தமையால் அவளுடைய செயல்களை தடுத்து நிறுத்த அவனால் முடியவில்லை. அதனால் அவன் யாருக்கும் சொல்லாது வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றுவிட்டான்.

அந்த வருடம் மாசிமாதம் திடீரென்று மழை வந்துவிட்டது. மாரி மழையை விட அகோரமாக பதினைந்து நாட்கள் மழை பெய்தமையால் குளங்கள் யாவும் நிரம்பி உடைப்பெடுத்தன. அதனால் வயல்வெளி கடலைப் போல் இருந்தது. பல்லாயிரக் கணக்கில் பணஞ் செலவு செய்து விதைத்தவர்கள் எல்லோரும் கவலைப்பட்டனர். பின்பு எல்லோருமாக ஒன்று சேர்ந்து ஊரில் உள்ளவர்களின் பலகைக் கட்டில்களையும், வாங்குகளையும் எடுத்துச் சென்று வயல்களில் வைத்து அதன்மீது ஏறிநின்று அறுவடை செய்தனர்.

அக்கிராமத்தில் முதலாவதாக அறுவடை நடைபெற்ற வயல் நித்தியலட்சுமியினுடையது.

பூரணி பலமுறை ஊரவர்களைக் கெஞ்சிக் கேட்டும் யாரும் அவளுக்கு வேலை செய்யச் செல்லவில்லை. கூலியாக கூடுதலான பணம் தருவதாக அவள் கூறியும் யாரும் வேலைக்குச் செல்லவில்லை. இறுதியாக பூரணி நித்தியலட்சுமியைக் கேட்டாள். எல்லோருடைய அறுவடையும் முடிந்த பின் வருவதாக நித்திலட்சுமி சொன்னாள்.

எல்லோருடைய அறுவடையையும் முடித்துக்கொண்டு தொழிலாளர்கள் பூரணியின் வயலை அடைந்தபோது அது முற்றாக அழிந்திருந்தது. நெற்கதிர்கள் நன்றாக முற்றியமையால் வெள்ளத்தில் சரிந்து கிடந்தன. அதனால் அவை முளைத்துப் பயிராகியிருந்தன. அதனால் பூரணிக்கு பல இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டது.

53. இல்லதென் இல்லவள் மாண்பானால்; உள்ளதென்

இல்லவள் மாணாக் கடை?

நற்குணங்களையுடைய இல்லாள் வாழும் வீட்டில் இல்லாதவையென எதுகும் இருக்கமாட்டாது. நற்குணங்கள் அவளிடம் இல்லையாயின் அவ்வீட்டில் எதுகும் இராது.

உறுதி

சிவராஜனின் அன்பு மனைவி யாழினி. மிகவும் அழகானவள். பிரமன் தனது கைவண்ணம் முழுவதையும் காட்ட வேண்டுமென்று நினைத்துப் படைத்ததைப் போன்ற உருவ அமைப்பு. அழகான வட்ட முகம். துடித்துக் கொண்டிருக்கின்ற கருமையான கருணை மிகுந்த வட்ட விழிகள். எடுப்பான நெற்றி. ஒழுங்கு செய்யப்படாவிட்டாலும் வில்போல் அமைந்த புருவம். பளபளக்கின்ற கன்னங்கள். தசைப் பிடிப்புள்ள பளீச்சிடும் கழுத்து. அவளது உருவ அமைப்பு அவ்வூர் இளைஞர்களை மட்டுமன்றி திருமணமானவர்களையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தது. அவளைத் திருமணம் செய்ய அவ்வூரவர் மட்டுமன்றி அயலூரவர்களும் போட்டி போட்டனர். பெரும் பெரும் பணக்காரர் எல்லோரும் போட்டி போடுகையில் அவளது மனம் சிவபாலனை நாடியது.

சிவபாலன் அவளது மாமன் மகன். அவள் பிறந்தன்றே இருவீட்டுப் பெற்றோர்களும் கூடி அவளை சிவபாலனுக்கு திருமணம் செய்து கொடுப்பதென்று முடிவு செய்தனர். உரிய பருவம் வந்ததும் இரு குடும்பத்தினரும் சேர்ந்து இருவருக்கும் திருமணஞ் செய்து வைத்தனர்.

சிவபாலனின் குடும்பம் சாதாரணமான ஒரு குடும்பம். சிவபாலன் அரச அலுவலகமொன்றில் எழுதுவினைஞனாகப் பணியாற்றி வந்தான். அவனது வருமானம் குடும்பம் நடத்தப் போதுமானதாக இல்லாதிருந்த போதும் யாழினி தனது திறமையால் மிகவும் சிறப்பாகக் குடும்பம் நடாத்தி வந்தாள். வீட்டில் கோழி, ஆடு, மாடுகளை வளர்த்தாள். வீட்டுக்குப் பின்புறமாக வெற்றிடமாக இருந்த காணியைத் துப்புரவு செய்து காய்கறிப் பயிர்களை நட்டாள். சிவபாலன் வேலைக்குச் செல்லு முன்பும், வேலையால் வந்த பின்பும் அவளுக்கு உதவியாக தோட்டத்தில் வேலை செய்வான்.

யாழினியினது வீட்டு வருமானம் அவர்களது வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்தமையால் சிவபாலனின் சம்பளத்தின் பெரும் பகுதி மிச்சமானது. தோட்டத்தில் விளையும் காய்கறி வகைகளில் ஒரு பகுதியை யாழினி தனது பெற்றோர்க்கும் சிவபாலனது பெற்றோருக்கும் கொடுப்பாள்.

சிவபாலனின் நண்பன் குணநாதன். இருவரும் சிறுவயது முதல் ஒன்றாகக் கல்வி கற்றவர்கள். அன்பான நண்பர்கள். எங்கும் ஒன்றாகவே செல்வார்கள். அவர்களுக்கிடையில் எந்த இரகசியமும் இருந்ததில்லை. படித்து முடிந்ததும் சிவபாலன் எழுதுவினைஞன் பரீட்சையில் சித்தியடைந்து அரச நிறுவனம் ஒன்றில் பதவிக்குச் சேர்ந்தான். குணநாதன் வேலை கிடைக்காததால் வியாபாரம் செய்தான். அதனால் முன்னேறி பெரும் பணக்காரனானான். நகரில் மிகப்பெரிய தங்கமாளிகை அவனுடையது.

யாழினியின் அழகு குணநாதனின் மனதைக் கொள்ளை கொண்டபோதும் அவள் இன்னொருவனுடைய மனைவி என்பதை நினைத்து அமைதியாக இருந்தான். எனினும் மனம் அவனின் கட்டுப்பாட்டை மீறி அவளின் மீது மோகம் கொண்டது. நண்பனுக்கு துரோகமிழைக்கக்கூடாது என அவனது மனம் அடிக்கடி நினைத்த போதும் உள்ளுணர்வுகள் நியாயத்தையோ, அறத்தையோ ஏற்றுக்கொள்ள மறுத்தன.

குணநாதன் சிவபாலனின் நண்பன் என்ற வகையில் யாழினி அவனுடன் பழகி வந்தாள். அவள் மறுத்த போதும் சிவபாலன் அவளை வற்புறுத்தி குணநாதனுடன் பழகச் சொல்வான்.

சிவபாலனின் திருமணத்தன்று மிகவும் அழகான பெறுமதிமிக்க தங்கமாலை ஒன்றை குணநாதன் யாழினிக்கு பரிசளித்தான். கணவனின் மனம் கோணப்படாது என்பதற்காக அதைப் பெற்றுக்கொண்ட யாழினி அதை தனது கழுத்தில் அணியவில்லை. தனது கணவனின் சம்பாத்தியத்தில் வாங்கிய பொருட்களைத்தான் தான் பாவித்தல் வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாள்.

சிவபாலன் இல்லாத வேளையிலும் குணநாதன் சிவபாலனின் வீட்டுக்கு வருவான். அவ்வேளைகளில் அவனின் முகத்தில் தோன்றும் உணர்வுகள் வேறுபட்டிருப்பதை யாழினி உணர்வாள். அவனின் கண்களில் மிரட்சியும், பேச்சில் தோன்றும் படபடப்பும் அவளை அச்சுறுத்தும். அதனால் பேச்சை நீளவிடாது அவனை அனுப்புவதிலேயே கண்ணாக இருப்பாள்.

அன்று அவளது பிறந்ததினம். சிவபாலன் அலுவலகத்திற்கு விடுமுறை போட்டுவிட்டு நின்று அவளின் பிறந்ததினத்தை சிறப்பாகக் கொண்டாடினான். அன்று குணநாதன் வரவில்லை. ஏதோ அவசிய

விடயமாக வெளியூருக்குச் செல்வதாகக் கூறிச் சென்றுவிட்டான். அன்று அவனுக்கு வெளியூரில் எந்த விஷயமும் இருக்கவில்லை.

மறுநாள் சிவபாலன் அலுவலகத்திற்குச் சென்றதும் பெறுமதிமிக்க தங்க ஆபரணம் ஒன்றுடன் சிவபாலனின் வீட்டுக்குச் சென்றான். அவனைக் கண்டதும் அவன் ஏதோ ஒரு திட்டத்துடன் தான் வருகிறான் என யாழினி நினைத்தாள். அவன் உள்ளே வந்ததும் ‘‘அவர் வேலைக்குப் போய்விட்டார். நான்கு மணிக்கு வாருங்கள்’’ என்றாள்.

‘‘உங்கள் பிறந்த தினத்திற்கு வர முடியாமற் போய்விட்டது. இந்தாருங்கள் எனது பரிசு’’ என்று நகைப்பெட்டி ஒன்றை நீட்டினான் குணநாதன்.

‘‘ஒரு பெண் அந்நிய ஆடவர்களிடம் எதையும் பெறக்கூடாது’’

‘‘நான் அந்நியனா.....?’’

‘‘ஒரு பெண்ணிற்கு கணவனும், பெற்றோரும், உறவினர்களும்தான் பரிசு கொடுத்தல் வேண்டும். நீங்கள் கணவனின் நண்பர். அவரிடமே கொடுங்கள்...’’

முன்பொருமுறை அவள் அவனுக்கு தேநீர் கொடுத்தபோது தேநீர் எடுக்கும் சாட்டாக தேவையின்றி அவளது விரலையும் சேர்த்துப் பிடித்தான் குணநாதன்.

‘‘யாழினி உன்னில் எனக்கு அன்பிருந்தமையால் தான் திருமணத்தன்றும் பெறுமதியான தங்கநகை தந்தேன். இப்பொழுதும் பெறுமதியான தங்கநகை கொண்டுவந்திருக்கிறேன். இன்னும் தருவேன்...’’

‘‘தயவுசெய்து வெளியே போங்கள். எனது கணவனின் நண்பர் என்பதால் தான் அன்பாகக் கதைத்தேன். தயவுசெய்து எனது கணவர் இல்லாத வேளைகளில் இங்கே வராதீர்கள்’’ என்றாள்.

குணநாதன் தலையைக் குனிந்தபடி நடந்துசென்றான்.

54. பெண்ணின் பெருத்தக்க யாவுள கற்பென்னும்

திண்மைஉண் டாகப் பெறின்?

கற்பு என்னும் உறுதி இல்லாளிடத்து இருக்குமேயானால், அவளைவிடப் பெருஞ்செல்வம் கணவனுக்கு வேறு இல்லை.

மழையாவாள்

சிவலிங்கம் பலத்த யோசனையுடன் அமர்ந்திருந்தார். அவருக்கு அவசரமாகப் பத்தாயிரம் ரூபா தேவையாக இருந்தது. அவரது தகப்பனார் கந்தவனம் அவரை அழைத்து மகளின் கமச்செய்கைச் செலவுக்கு பத்தாயிரம் ரூபா கொடுக்குமாறு கூறியிருந்தார். சிவலிங்கம் தந்தைமீது மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். அவர் சொல்வதை வேதவாக்காகக் கருதி வாழ்பவர்.

தங்கை காயத்திரியின் கணவன் திருமாறன் சரியான குடிகாரன். குடித்துவிட்டு காயத்திரியை அடிப்பான். கேட்கப்போகும் உறவினர்களையும், சிவலிங்கத்தையும் ஏசிக் கலைப்பான். அவன் மாமனாரான கந்தவனத்தையும் மதிப்பதில்லை.

ஒவ்வொரு வருடமும் தோட்டச்செய்கையின் போது அவனுக்கு கந்தவனம் பணம் கொடுப்பார். கொடுக்காவிட்டால் குடித்துவிட்டு வந்து கண்டபடி ஏசுவான்.

கந்தவனம் அவனுக்கு ஏராளமான சீதனம் கொடுத்துத்தான் காயத்திரியைத் திருமணம் செய்துகொடுத்தார். அவன் அவற்றையெல்லாம் விற்றுவிட்டான். அவனால் காயத்திரியும், பிள்ளைகளும் படும் கஷ்டத்தைக் தாங்கமுடியாததால் தான் கந்தவனம் வருடாவருடம் தோட்டச்செய்கைக்காகப் பணம் கொடுத்துவருகிறார். இதைவிட சிவலிங்கம் தனது தங்கை படும் கஷ்டங்களைத் தாங்கமுடியாது அவ்வப்போது உதவிகள் வெய்துவருவார்.

தேநீருடன் சிவலிங்கத்தின் அருகே வந்த அவனது மனைவி மங்கையற்கரசி தன் கணவன் வாட்டமுடன் அமர்ந்திருப்பதைக் கண்டு கலங்கினாள்.

“ஏதாவது சுகமில்லையா...?”

“இல்லை.”

“ஒருமாதிரி இருக்கிறீர்கள்”

“அப்பா திருமாறனுக்கு பத்தாயிரம் ரூபா கொடுக்கச் சொல்கிறார்.”

“மாமா சொன்னால் அதில் அர்த்தமிருக்கும். இதற்கேன் யோசிக்கிறீர்கள்?”

“அவ்வளவு காசு என்னிடம் இல்லை”

“எனது சங்கிலியைத் தாறன் அடைவு வையுங்கோ...”

“வாறகிழமை உமது தங்கைக்கு திருமணம். உள்ள ஒரு சங்கிலியையும் அடைவு வைத்துவிட்டு வெறும் கழுத்துடனா செல்லப்போறீர்”

“நான் உங்கடை மனைவி என்று ஊர் முழுவதுக்கும் தெரியும். அதோடு நாங்கள் வசதி குறைந்தவர்கள், எங்களிடம் ஒரு சங்கிலி மட்டும்தான் இருக்கெண்டும் தெரியும். நான் இரவல் வாங்கிச் சங்கிலி போட்டாலும், நான் போட்டுக்கொண்டு போற சங்கிலி யாருடையதென்றும் ஊர்ச்சனம் முழுத்துக்கும் தெரியும்... ஊருக்கை உள்ள எல்லோருக்கும் எல்லாரைப்பற்றியும் தெரியும். அதனால் எங்களை யாரும் குறைச்சு மதிக்கமாட்டினை. நீங்கள் கொண்டுபோய் அடைவு வையுங்கோ” என்றாள் மங்கையற்கரசி.

அன்று கந்தவனம் திடீரென்று நோய்வாய்ப்பட்டுவிட்டார். அவரது இளையமகன் மாதவன் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றுவிட்டான். அன்று கந்தவனம் செய்கைபண்ணும் வெங்காயத் தறைக்கு இறைத்தல் வேண்டும். பல ஆயிரம் ரூபா பெறுமதியான வெங்காயத்திற்கு இறைக்காவிட்டால் நஷ்டமேற்படும். சிவலிங்கம் தனது தோட்டத்திற்கு நீர்பாய்ச்சிவிட்டு வந்து களைத்துப்போய்ப் படுத்திருந்தார். அவ்வேளை தான் சிவலிங்கத்தின் தாய் வந்து விஷயத்தைச் சொல்லி வெங்காயத்தறைக்கு இறைக்கும்படி கூறினாள்.

சிவலிங்கத்தால் முடியவில்லை. எனினும் அவரால் மறுக்க முடியவில்லை. இதை உணர்ந்த மங்கையற்கரசி “நீங்கள் வந்து நீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்கிவிடுங்கள், நான் நீர் பாய்ச்சுகிறேன்” என்றாள்.

சிவலிங்கம் தகப்பனாரின் தோட்டத்திற்குச் சென்று நீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்கிவிட்டார். மங்கையற்கரசி தொடர்ந்து நான்குமணிநேரம் வெங்காயத்தறைக்கு நீர் பாய்ச்சினாள்.

கந்தவனம் இரண்டு வாரங்கள் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றார். ஆஸ்பத்திரியால் வந்தபின்பும் அவரால் தோட்டவேலைகளைச் செய்ய முடியவில்லை. அதனால் அவர் சுகப்படும்வரை தோட்டவேலைகள் அனைத்தையும் மங்கையற்கரசியே செய்துவந்தாள்.

அவ்வூர்ப் பிள்ளையார் கோயில் கட்டிட நிதிக்காக ஆலயத்தின் பிரதம குரு வேதநாராயணக் குருக்கள் அவர்களது வீட்டுக்கு வந்திருந்தார். அந்த வேளை சிவலிங்கத்திடம் பணம் இருக்கவில்லை. வீடு தேடிவந்த குருக்களை வெறுங்கையுடன் அனுப்ப மனமில்லாது தடுமாறிக்கொண்டிருந்தார் சிவலிங்கம். அவரின் நிலையை உணர்ந்த மங்கையற்கரசி தனது காப்பு ஒன்றைக் கழற்றி கணவனிடம் கொடுத்தாள். சிவலிங்கம் ஏதும் பேசாமல் அவள் கொடுத்த காப்பைப் பெற்றுக் குருக்களிடம் கொடுத்தார். குருக்கள் அதை மகிழ்வுடன் வாங்கிக்கொண்டு புறப்பட்டார். குருக்கள் சென்றதும் நீர் நிரம்பிய விழிகளால் மங்கையற்கரசியைப் பார்த்தார் சிவலிங்கம்.

''கோயிலுக்குக் குடுக்கிறத்திற்கும் அழுறதே...'' என்றவாறு தனது சேலைத்தலைப்பால் சிவலிங்கத்தின் கன்னங்களால் வழிந்த கண்நீரைத் துடைத்தாள் மங்கையற்கரசி.

''கோயிலுக்குக் கொடுப்பதற்காக நான் கண்கலங்கவில்லை. இருந்த சங்கிலியும், காப்பும் போய்விட்டது, இனி என்ன இருக்கு...''

''கடவுள் கைவிடமாட்டார், நீங்கள் கவலைப்படாதைங்கோ...''

அம்முறை சிவலிங்கத்திற்கும் கந்தவனத்திற்கும் வெங்காயம் அமோகமாக விளைந்தது. சிவலிங்கத்திற்கு வெண்காயச் செய்கையால் ஐம்பதினாயிரம் ரூபா இலாபமாகக் கிடைத்தது. அதன் ஒருபகுதியை எடுத்து மங்கையற்கரசிக்கு காப்பும், சங்கிலியும் செய்து கொடுத்தார் சிவலிங்கம். மங்கையற்கரசி காயத்திரியின் மகள் யசோதினி பருவமடைந்ததும் வெறும் கழுத்தோடு அவள் வைபவங்களுக்குச் செல்வதால் ஒரு சங்கிலி செய்துகொடுத்தாள்.

அன்று மங்கையற்கரசியின் தங்கைக்கு திருமணம் நடைபெற இருந்தது. மாப்பிளை பெரும் பணக்காரன். பட்டணத்திற்கு படிக்கச்சென்ற அவளின் அழகில் மயங்கிய அவன் அவளைத் திருமணஞ் செய்ய விரும்பினான். அவளது பெற்றோரையோ, உறவினர்களையோ அவன் மதிக்கவில்லை. அவர்கள் தமது திருமணத்திற்கு வந்தால் அவமானமெனக் கருதினான். அதனால் ஊரவர், அயலவர், உறவினர் எவருக்கும் அவன் திருமணத்திற்குச் சொல்லவில்லை. சிவலிங்கம் அவளை தனது பிள்ளையைப் போல நேசித்தவர்.

அவளைப் பட்டணத்திற்கு அனுப்பிப் படிப்பித்தார். பண்டிகைகளுக்கு விலையுயர்ந்த உடைகள் வாங்கிக்கொடுப்பவர். அதனால் அவளது திருமணத்திற்குச் செல்ல விரும்பினார். அவரின் விருப்பத்தை மங்கையற்கரசி ஏற்று திருமணத்திற்குச் சென்றாள்.

திருமண மண்டபம் இந்திரலோகம் போல் இருந்தது. அங்கு வந்திருந்தவர்களெல்லாம் விலை உயர்ந்த பட்டுப் புடைவைகளைக் கட்டியிருந்தனர். ஏராளமான ஆபரணங்களை அணிந்திருந்தனர். சிவலிங்கத்தையும், மங்கையற்கரசியையும் யாரும் கவனிக்கவில்லை. ஒரு மூலையில் இருந்து தாலி கட்டுவதைப் பார்த்துவிட்டு இருவரும் திரும்பினர்.

அவர்கள் வீட்டுக்கு வந்தபோது காயத்திரியின் கணவன் குடிபோதையில் விபத்துக்குள்ளாகி இறந்துவிட்ட செய்தி இருவருக்கும் கிடைத்தது.

இரண்டு தினங்கள் கழிந்தன. சிவலிங்கம் சோகத்துடன் அமர்ந்திருந்தார். மங்கையற்கரசி அருகில் இருந்தாள்.

“வீணாகக் கவலைப்பட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதைங்கோ. காயத்திரியையும் மூன்று பிள்ளைகளையும் எங்களுடைய வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வாருங்கோ. நாங்கள் சாப்பிற்ற சாப்பாட்டிலை அதுகளுக்கும் குடுப்பம். கடவுள் வழிவிடுவார். கவலைப்படாதைங்கோ...” என்றாள் மங்கையற்கரசி.

“உம்மை மாதிரி ஒரு மனைவி இருந்தால் யாருக்குக் கவலைவரும். உம்மைப் பார்த்தாலே கவலைகளெல்லாம் பறந்திடும்” என்று சிரித்தார் சிவலிங்கம்.

55. தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்எனப் பெய்யும் மழை.

தெய்வத்தைப் போல தனது கணவனை மதித்து நடக்கும் பெண் பெய் என்று சொல்லும்போது பெய்யும் மழைக்கு ஒப்பானவள் ஆவாள்.

சோர்விலாள்

வேலாயுதபிள்ளை ஓர் ஆசிரியர். கல்வி கற்கும் காலத்தில் அவர் மிகுந்த திறமைசாலி. வகுப்பில் எப்பொழுதும் அவர்தான் முதலாம்பிள்ளை. மிகவும் திறமையாகக் கல்வி பயின்ற வேலாயுதபிள்ளை பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார். அங்கு கற்கும் காலத்தில் அவரை வாதநோய் பிடித்துக்கொண்டது. அதனால்

இடதுகையும், காலும் சற்றுச் செயலிழந்தன. நடப்பதற்கு சிரமப்படுவார். எனினும் கல்வியில் மிகவும் அக்கறைகாட்டி வந்தமையால் பல்கலைக்கழகப் பரீட்சையில் மிகவும் திறமையாகச் சித்தியடைந்தார்.

அவரது முறைப்பெண் ருக்குமணி. அவள் வேலாயுதபிள்ளையின் குடும்பத்தின் மீது பக்தி கொண்டவள். அவளின் தகப்பனார் அவளுக்கு பத்து வயது நடக்கையில் காலமாகிவிட்டார். தாய் கண்மணி தோட்டங்களில் வேலை செய்து அவளையும் அவளது இளைய சகோதரர்களையும் காப்பாற்றி வந்தாள்.

வேலாயுதபிள்ளையின் தகப்பனார் பாலசுப்பிரமணியம் தனது சகோதரியான கண்மணிக்கு அவ்வப்போது உதவிகள் செய்துவருவார். பாலசுப்பிரமணியத்தினது குடும்பமும் கஷ்டப்பட்ட குடும்பம். அதனால் ருக்குமணி தமது அத்தியாவசியச் செலவுகளுக்கு மட்டும்தான் அவர்களை நாடுவாள்.

ருக்குமணி கல்வி கற்றவள். அதனால் தனது அயலில் வாழும் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பாள். அதனால் அவளுக்கு கொஞ்சப்பணம் கிடைக்கும். அத்துடன் தகப்பனார் செய்த தோட்டத்தை தனது சகோதரங்களின் உதவியுடன் செய்கைபண்ணி வந்தாள். வீட்டில் கோழி, ஆடு, மாடு முதலியவற்றை வளர்த்தாள். அதனால் குடும்பத்தை நல்ல முறையில் பராமரிக்க முடிந்தது.

அவளது தம்பிமார் இருவரும் மிகவும் திறமைசாலிகள். பட்டணத்தில் உள்ள பிரபல கல்லூரி ஒன்றில் கல்வி கற்றுக்கொண்டிருந்தனர். அதற்கு ஏராளமான பணம் தேவைப்பட்டது. அதனால் ருக்குமணி சோர்வில்லாமல் உழைத்தாள்.

வேலாயுதபிள்ளைக்கு ஊரில் உள்ள ஒரு பாடசாலைக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. வேலை கிடைத்ததும் தனது சகோதரியின் மகளை வேலாயுதபிள்ளைக்கு திருமணம் செய்து வைக்கவேண்டும் என்று நினைத்திருந்த பாலசுப்பிரமணியத்திற்கு தனது மகனின் நோய் கவலையைக் கொடுத்தது. நோயாளியைக் கட்டிக்கொடுத்துவிட நினைக்கிறாரென அவரது சகோதரியும், ஊரவர்களும் நினைப்பார்களென அஞ்சினார்.

வேலாயுதபிள்ளைக்கு வேலை கிடைத்ததும் தனது சகோதரன் திருமணம் பேசி வருவாரென எதிர்பார்த்த கண்மணி, அவர் வராததால் தானே நேரில் சென்றாள். அவளுடன் ருக்குமணியும் சென்றாள்.

“அண்ணை வேலாயுதத்திற்கு வேலை கிடைத்ததும் ருக்குமணிக்கு திருமணம் செய்யவேண்டும் என்றீர்கள். அவனுக்கு வேலை கிடைத்து ஒருவருடம் ஆகிறது. இன்னும் அந்தப் பேச்சை நீங்கள் எடுக்கவில்லை...”

பாலசுப்பிரமணியம் விரக்தியாகச் சிரித்தார். “நோயாளியான அவனை ருக்குமணிக்குச் செய்ய எனக்கு விருப்பமில்லை. அவள் என்ன நினைக்கிறாளோ தெரியவில்லை...”

“எனக்கு விருப்பம் மாமா. எமது திருமணம் நான் பிறந்தன்றே தீர்மானிக்கப்பட்டது. எல்லாம் விதி. பூர்வபலன். நாம் செய்யும் அறன் வழிவருவது. நான் திருமணம் செய்தபின் இந்த நோய் வந்திருந்தால் என்ன செய்யமுடியும். அவர் குணமாவார் என்று எனக்கு பூரண நம்பிக்கை இருக்கு. எனவே தயவுசெய்து திருமணத்திற்கான ஒழுங்குகளைச் செய்யுங்கள்” என்றாள் ருக்குமணி.

வேலாயுதபிள்ளை, ருக்குமணியின் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. திருமணம் நடைபெற்ற பின்பு ருக்குமணி தனது கணவனின் பெற்றோரையும் தன்னுடன் அழைத்துவந்தாள்.

நோயாளியான தனது கணவனின் வேலைகள் அனைத்தையும் செய்துகொடுத்தாள். வேலாயுதபிள்ளை செய்யச்சொல்லும் பாடசாலை வேலைகளையும் செய்துகொடுத்தாள். நோயாளியான வேலாயுதபிள்ளை எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் கோணாதபடி நடந்துகொண்டாள். அவர் பலவீனமடையும் வேளைகளில் தைரியமூட்டினாள்.

தனது தாயாரை கூலிவேலை செய்வதில் இருந்து நிறுத்தி, வீட்டில் தனக்கு உதவியாக வைத்திருந்தாள். தம்பியர் இருவரையும் நன்றாகப் படிக்கவைத்தாள். திருமணமான மறுவருடம் அவளுக்கு அழகான ஓர் ஆண்குழந்தை பிறந்தது.

அயலவர்கள், நண்பர்கள், இனத்தவர்களின் பிள்ளைகளுக்கு இலவசமாகக் கற்பித்தாள். இதனால் அவர்கள் அவளை தெய்வம் போல மதித்தனர். அவள் கற்பிக்கும் பிள்ளைகள் ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாக வளர்ந்தனர்.

வருடங்கள் சில உருண்டோடின. ருக்குமணியின் தம்பிமார் இருவரும் பல்கலைக்கழகப் படிப்பை முடித்து உயர்ந்த உத்தியோகங்களில் அமர்ந்து கொண்டனர். ருக்மணியின் குடும்பம் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்துகொண்டிருந்தது.

56. தற்காத்து தற்கொண்டான் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

தன்னையும் காத்து தனது கணவனின் நலன்களையும் பேணிக்காத்து அன்பாகப் பேசி வாழ்கின்றவளே பெண்.

நிறை

வேதாசலம் நல்லூரில் வாழ்ந்து வருகின்ற பெரிய பணக்காரர். அவரிடம் பெரியதொரு மொத்த வர்த்தக நிலையம் இருந்தது. பொருட்களைக் கொண்டுசென்று விற்பனை செய்ய ஏராளமான வாகனங்கள் நின்றன. ஏக்கர் கணக்கில் வயல்கள் இருந்தன. பல வீடுகள் இருந்தன. நல்லூரின் முக்கால்வாசி நிலம் வேதாசலத்தினது. வேதாசலத்தின் ஒரே ஒரு செல்லமகள் காயத்திரி. வேதாசலத்திற்கு திருமணமாகி பத்து வருடங்கள் கழிந்தும் பிள்ளைகள் பிறக்கவில்லை. அதனால் மனம் வருந்திய வேதாசலம் தனது ஊரில் உள்ள பிள்ளையார் கோயிலை புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்தார். அதனால் அடுத்த வருடம் வேதாசலத்தின் மனைவி பெண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். பல காலம் பிள்ளையில்லாதிருந்து பெற்றமையால் காயத்திரியைச் செல்லமாகவே வளர்த்தனர். அதனால் அவள் திமிராகவே வளர்ந்து வந்தாள்.

அயலவர்கள், இனத்தவர்கள், பெரியவர்கள் எவரையுமே அவள் மதிப்பதில்லை. அத்துடன் தனது அங்கங்கள் தெரிய உடை அணிவாள். வேதாசலம் மிகவும் நல்லவர். கடவுள் பக்தி மிக்கவர். ஏழை எளியவர்களுக்கு உதவி உதவி செய்பவர். அதனால் காயத்திரி திமிராக நடந்தபோதும் ஊர்மக்கள் தமக்குள் பேசிக்கொள்வார்களே தவிர வேதாசலத்திற்குக் கூறுவதில்லை.

வேதாசலத்தின் தூரத்து உறவுக்காரன் தில்லையம்பலம். மிகவும் வறியவன். வேதாசலத்தின் வர்த்தக நிலையத்தில் நேர்மையாகக் கடமையாற்றுபவன். அதனால் வேதாசலத்திற்கு அவனைப் பிடிக்கும். அதனால் தில்லையம்பலத்திற்கு அவன் கேளாமலே பல உதவிகள் செய்வார். தில்லையம்பலத்தின் மகன் மாதவன். டாக்டராகப் பணி புரிகிறான். மாதவனை தனது மகள் காயத்திரிக்கு திருமணம் செய்துவைக்க வேதாசலம் விரும்பினார். அதற்குத் தில்லையம்பலம் ஒத்துக்கொண்டான்.

திருமணம் மிகவும் ஆடம்பரமாக நடைபெற்றது. இதற்கு முன்பு அப்படி ஒரு பெருநிகழ்வை அவ்வூரவர்கள் பார்த்ததில்லை. ஒருமாதம் வரை அத்திருமண நிகழ்வைப் பற்றியே மக்கள் பேசிக்கொண்டனர்.

மாதவன் மிகவும் அமைதியானவன். கடவுளின் மீது பக்தி உள்ளவன். நண்பர்கள், இனத்தவர்கள், உறவினரை மதித்து நடப்பவன். அவனுக்கு எதிர்மாறாகவே காயத்திரி நடந்துகொள்வாள்.

மாதவனின் பெற்றோரை அவள் மதிப்பதே இல்லை. மாதவன் வற்புறுத்தி அழைத்த போதும் அவள் அவனின் வீட்டிற்கோ அல்லது அவனது உறவினர்களின் வீடுகளுக்கோ செல்வதில்லை. அவர்கள் எல்லோரும் பட்டிக்காடுகள் எனக்கூறுவாள்.

தனது இனத்தவர்களை அன்பாக நேசித்த மாதவனுக்கு காயத்திரியின் போக்கு இடியாக இருந்தது. தகப்பனார் கஷ்டப்பட்டு தன்னைக் கற்பித்த காலத்தை நினைத்துப் பார்த்தான். அவனுக்கு கவலையாக இருந்தது. காயத்திரியின் திமிரான நடத்தைபற்றி அவன் கேள்விப்பட்ட போதும், தன்னைக் கஷ்டப்பட்டு வளர்த்த தந்தையின் மனம் நோகக்கூடாது என்பதற்காகவே அவன் காயத்திரியைத் திருமணம் செய்யச் சம்மதித்தான்.

தில்லையம்பலத்திற்கும் காயத்திரியின் போக்குத் தெரியும். எனினும் காலப்போக்கில் அவள் திருந்திவிடுவாள் என்று நினைத்தான். ஆனால் திருமணமான பின் அவளின் போக்கில் பெரும்மாறுதல் ஏற்பட்டிருந்தது. தம்மை அவள் ஓர் அற்ப புழுவாக மதிப்பதை அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால் வேதாசலத்தின் வீட்டுக்குச் செல்வதைக் குறைத்துக்கொண்டார்.

மாதவன் அடிக்கடி தகப்பனாரின் வீட்டுக்குச் செல்வான். சிலசமயம் அவன் அங்கேயே தங்கியும் விடுவான்.

தீபாவளிப் பண்டிகை வந்தது. மாதவன் தனது குடும்பத்தினருக்கு புத்தாடை வாங்கிக்கொண்டுவந்து காயத்திரியை தகப்பனாரின் வீட்டுக்கு வருமாறு அழைத்தான். அவள் மறுத்துவிட்டாள். அதனால் வெகுண்டெழுந்த மாதவன் காயத்திரிக்கு அடித்துவிட்டான்.

காயத்திரி பொங்கியெழுந்தாள். மாதவனைத் தாக்கினாள். “இனிமேல் எனக்கும் உனக்கும் உறவு இல்லை. நீ வீட்டை விட்டுப் போ. எமக்கிருக்கும் சொத்துக்கு என்னைத் திருமணம் செய்துகொள்ள பலர் முன்வருவார்கள்” என்று கத்தினாள்.

மாதவன் வீட்டைவிட்டு வெளியேறினான். நாட்கள் மாதங்களாகி வருடம் ஒன்று கழிந்தது. தில்லையம்பலத்திற்கு மகனின் நிலை கவலையளித்தது. அவர் வேதாசலத்துடன் பலமுறை கதைத்தார். வேதாசலத்தால் மகளின் போக்கை மாற்ற முடியவில்லை. மகளின் போக்கும், ஊராரின் ஏச்சும் பேச்சும் வேதாசலத்தைக் கவலைக்குள்ளாக்கி நோயாளியாக்கியது. காலப்போக்கில் அவர் இறந்துவிட்டார். தில்லையம்பலம் வேதாசலம் இறக்கு முன்பே வர்த்தக நிலைய வேலையில் இருந்து நின்றுவிட்டார்.

வேதாசலம் இறந்ததும் வர்த்தக நிலையத்தை சரிவரக் கண்காணிக்காததால் மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. கவலையும், பிரச்சினைகளும் காயத்திரியை உருக்குலைத்தன. எந்த நேரமும்

அழுதுகொண்டிருந்தாள். அவளின் நிலமையை உணர்ந்த அவளது வீட்டில் சமையல் வேலை செய்யும் இலட்சுமி என்றபெண் சொன்னாள் "அம்மா பணம், பொருள், நிலபுலன்கள் அல்ல வாழ்க்கை. அன்பு, அந்நியோன்னியம், புரிந்துணர்வு, மதித்து நடத்தல் தான் இன்பமான வாழ்க்கை. எனது கணவன் கூலித்தொழிலாளி. நான்கு பிள்ளைகள். அவரின் பெற்றோரும் எம்முடன் தான் இருக்கின்றனர். இருவரும் உழைத்தாலும் அரை வயிறுதான் நிரம்பும். நல்ல உடுபுடவைகள் இல்லை. ஒழுங்கான வீடு இல்லை. ஆனால் நிறைந்த மனம் இருப்பதால் எல்லாமே இன்பமாக இருக்கின்றன. ஒரு குடும்பப் பெண்ணுக்கு நிறைந்த மனமிருக்குமானால் குடும்பம், இனத்தவர், அயலவர், உறவினர் எல்லோரும் இன்பமாக இருப்பர். இல்லாவிட்டால் சிறைக்கூடத்தில் வாழும் வாழ்க்கை தானம்மா..."

காயத்திரி இலட்சுமியை வியப்புடன் பார்த்தாள். படிக்காத அவளுக்கு உள்ள குடும்பம் பற்றிய உணர்வு தனக்கு வராததையிட்டு வெட்கப்பட்டாள். உடனே மாதவனின் வீட்டுக்குச் சென்று எல்லோரிடமும் மன்னிப்புக் கேட்டாள். மாதவனைப் புரிந்து அதன்படி நடக்கத் தொடங்கினாள். இல்லறம் சிறந்தது. குதூகலம் பெருகியது. தனது பழைய வாழ்வை எண்ணி கவலைப்பட்டாள் காயத்திரி.

57. சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும்? மகளிர்

நிறைகாக்குங் காப்பே தலை.

மகளீரை அடக்கி சிறைக் கைதிகளைப் போல் நடத்துவதால் எந்தப் பயனும் ஏற்படமாட்டாது. அவர்கள் தமது நிலையைத் தாமே உணர்ந்து தம் குடும்பப் பெருமையைக் காத்துக்கொள்ளல் வேண்டும்.

சொர்க்கம்

விநாயகமூர்த்தி சபாபதி நாவலர் மகா வித்தியாலய அதிபர். அப்பாடசாலையில் ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவர் அதிபராக அப்பாடசாலையின் பொறுப்பை ஏற்றபொழுது இருநூற்றுக்கும் குறைவான மாணவர்களே அங்கு கல்வி கற்றனர். அவர் பொறுப்பேற்று ஐந்து வருடங்களில் பாடசாலை பெரும் முன்னேற்றமடைந்தது.

பொதுவாக அக்கிராமத்தில் உள்ள மாணவர்கள் அயற்கிராமங்களில் உள்ள பாடசாலைகளிலும், பட்டணங்களிலுள்ள பாடசாலைகளிலுமே சென்று கல்விகற்று வந்தனர். தாழ்த்தப்பட்ட மக்களின் பிள்ளைகளும், வறிய மக்களின் பிள்ளைகளுமே அங்கு கல்விகற்று வந்தனர். முன்னர் அதிபராகக் கடமையாற்றிய சந்திரலிங்கம் பாடசாலைக்கு வருவது குறைவு. அதிபர் காலையில் பிந்தி வந்து பாடசாலை விடுவதற்கு முன் சென்றுவிடுவதால் ஆசிரியர்களும் அதன்படி நடந்தனர். பத்து ஆசிரியர்கள் கடமையாற்றும் அப்பாடசாலையில் மூன்று பேருக்கு மேல் ஒரே நேரத்தில் காண முடியாது.

அதிபர் மிகுந்த செல்வாக்குடையவர். மேலதிகாரிகளின் அன்புக்குப் பாத்திரமானவர். அதனால் அவரை மேலதிகாரிகள் தட்டிக் கேட்பதில்லை. அக்கிராமத்தில் உள்ள பாடசாலைகளில் நடைபெறும் குறைநிறைகளை சந்திரலிங்கம் மிகைப்படுத்திக் கூறுவார். அதை மேலதிகாரிகள் அப்படியே நம்பிவிடுவார்கள். பின் சந்திரலிங்கம் கூறியதற்கேற்ப நடவடிக்கை எடுப்பார்கள். இது ஆசிரியர்கள் மட்டத்தில் அதிருப்தியை ஏற்படுத்திய போதும் மேலதிகாரிகள் அதை பெரிதாக எடுப்பதில்லை.

சந்திரலிங்கம் ஓய்வு பெற்றதும் அவ்வூர் மக்கள் ஒன்றுகூடி விநாயகமூர்த்தியைச் சந்தித்து அப்பாடசாலைக்கு அதிபராக வரும்படி கேட்டனர். அவர் அதற்குப் பல நிபந்தனைகளை விதித்தார். ‘‘நான் பட்டணத்தில் பிரபலமானதொரு பாடசாலையில் அதிபராக இருக்கிறேன். நானும் இக்கிராமத்தவன் என்ற முறையில் இப்பாடசாலையின் முன்னேற்றத்தில் அக்கறையுடையவனாக இருக்கிறேன். என்னுடைய பிள்ளைகளை நான் இப்பாடசாலைக்கு மாறிவந்தால் இங்கேயே கற்பிப்பேன். உங்களது பிள்ளைகளையும் இப்பாடசாலையில் கற்பித்தல் வேண்டும். நான் இப்போது இருக்கும் பாடசாலை முதலில் பின்தங்கிய நிலையில்தான் இருந்தது. ஊரவர்களினதும், மேலதிகாரிகளினதும் முயற்சியாற்றான் முன்னேறியது. உங்கள் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு நான் அயராது உழைப்பேன். நீங்கள் என்னோடு ஒத்துழைப்பீர்களானால் வருகிறேன்’’ என்றார்.

ஊரவர்கள் அவரில் நம்பிக்கை வைத்து ஒப்புக்கொண்டனர். விநாயகமூர்த்தி அப்பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்ற சில மாதங்களுள் பாடசாலை புதுப்பொலிவு பெற்றது.

விநாயகமூர்த்தியின் மனைவி தெய்வநாயகி கணவனிடத்தில் பேரன்பு பூண்டவள். திருமணம் செய்த காலத்தில் அவர் மதுபானம் அருந்துவார். ஊரவருடனும், குடும்பத்தவர்களுடனும் குடித்துவிட்டு சண்டைக்குப் போவார். தெய்வநாயகிக்கும் அடிப்பார்.

தெய்வநாயகி அவரின் அட்டகாசங்களைப் பொறுமையுடன் சகித்துக்கொள்வாள். அன்புடன் தவறுகளைச் சுட்டிக்காட்டுவாள். அடித்தாலும் கோவிக்காது அன்புடன் நடந்துகொள்வாள். இதனால் காலப்போக்கில் விநாயகமூர்த்தி அவளின் அன்புக்கு அடிமையாகிவிட்டார். குடிப்பதைக் குறைத்துக்கொண்டார். ஊரவருடன், அயலவர்களுடன், நண்பர்களுடன் முரண்படுவதைத் தவிர்த்துக்கொண்டார். கற்பித்தலில் அதிக அக்கறை காட்டினார். பாடசாலையில் மேலதிக வகுப்புக்களை வைத்தார். இணைபாடவிதானப் பொறுப்புக்களை ஏற்று திறம்படச் செய்தார். அதனால் கல்வித் திணைக்கள வட்டாரங்களில் பிரசித்தமானார்.

எந்தவொரு வேலையைத் தொடங்குவதானாலும் மனைவியிடம் ஆலோசனை கேட்பார். பாடசாலைகளில் போட்டிகள் நடைபெறும் வேளைகளிலும், பரீட்சைக் காலங்களிலும் தெய்வநாயகி கணவனின் வேலைகளில் பெரும்பகுதியைச் செய்துகொடுப்பாள். பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு சுவையான உணவு வகைகளைத் தயாரித்துக் கொடுப்பாள்.

சபாபதி நாவலர் மகா வித்தியாலயத்திற்கு விநாயகமூர்த்தியை இடம்மாறி வரும்படி தெய்வநாயகிதான் கூறினாள்.

சபாபதி நாவலர் மகா வித்தியாலயம் சகல துறைகளிலும் முன்னணியில் இருந்தது. விநாயகமூர்த்தி சகல பாட ஆசிரியர்களையும் சந்தித்து மாலைநேர வகுப்புக்களை வைக்கும்படி கேட்டார். அவர்கள் அதற்குச் சம்மதம் தெரிவித்தனர். மாலைநேர வகுப்புக்கள் நடாத்தும் ஆசிரியர்களுக்கு தெய்வநாயகி சிற்றுண்டியும் தேநீரும் தயாரித்துக் கொடுத்தாள். சபாபதி நாவலர் மகா வித்தியாலயத்தின் வளர்ச்சியால் ஊரில் உள்ள மற்றைய பாடசாலைகள் பாதிக்கப்பட்டன.

மற்றைய பாடசாலைகளில் கற்கும் பிள்ளைகள் சபாபதி நாவலர் மகா வித்தியாலயத்தில் சேர முண்டியடித்தனர். ஆனால் விநாயகமூர்த்தி அவர்களைச் சேர்க்க மறுத்தார். பெற்றோர் தெய்வநாயகியிடம் சென்றனர். தெய்வநாயகி கணவனிடம் பக்குவமாகச் சொல்வாள். “முன்பு நாமும் ஊரில் உள்ள பாடசாலைகளில் கற்பித்தல் நடைபெறவில்லை என்பதால் எமது பிள்ளைகளை நல்ல பாடசாலைகளில் சேர்ந்தோம். அப்படித் தானே எல்லாப் பெற்றோரும் விரும்புவார்கள். எனவே அவர்களைச் சேருங்கள்” என்றாள்.

விநாயகமூர்த்தி சிரிப்பார். பின் அவர்கள் எல்லோரையும் தனது பாடசாலையில் சேர்ப்பார்.

ஊரவர்களுக்கு வட்டியில்லாமல் கடன்கொடுப்பது, ஏழைகளுக்கு கற்க உதவுவது, இனத்தவர், நண்பர்கள், ஊரவரது பிரச்சினைகளைத் தீர்ப்பது போன்ற விடயங்களை விநாயகமூர்த்தியுடன் சேர்ந்து தெய்வநாயகியும் செய்து வந்தாள். அதனால் ஊர் முழுவதும் அவர்களைப் போற்றிப் புகழ்ந்தது. விநாயகமூர்த்தியின் புதல்வர்கள் இருவரும் நன்றாகக் கற்று பொறியியலாளர்களாக கடமையாற்றுகின்றனர். மகள் காயத்திரி வைத்தியர் ஒருவரை மணம் புரிந்து இன்பமாக வாழ்கிறாள். தெய்வநாயகி பேரக்குழந்தைகளுடன் விளையாடி மகிழ்கிறார்.

58. பெற்றால் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்

புத்தேளிர் வாழும் உலகு.

கணவனின் மன இயல்புகளை அறிந்து அவனது மனம் கோணாமல் இல்லறம் நடாத்தும் பெண்ணானவள் சிறப்புகள் பல உடைய மேலுலக வாழ்வைப் பெறுவாள்.

பீடுநடை

நவநீதன் பெரும் பணக்காரர். ஏக்கர்க் கணக்கான வயல்களுக்கும் தோட்டங்களுக்கும் சொந்தக்காரர். அவருக்குச் சொந்தமான வயல்களிலும், தோட்டங்களிலும் நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் வேலைசெய்து வந்தனர். நவநீதனின் மனைவி சுந்தராம்பாள் இரக்க குணம் இல்லாதவள். கஞ்சத்தனமானவள். நவநீதனை தனது அதிகாரத்தின் கீழ் வைத்திருப்பவள். நவநீதன் இரக்க சுபாவமுள்ளவர். அயலவர்கள், இனத்தவர்கள், நண்பர்களை அன்புடன் நேசிப்பவர். அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று விரும்புபவர். ஆனால் சுந்தராம்பாள் அவரை தன் இஷ்டத்திற்குச் செயற்பட விடமாட்டாள். தன் இஷ்டப்படி அவர் நடக்கவேண்டும் என்று நினைப்பாள். தொழிலாளர்களுக்கு நவநீதன் உதவிகள் செய்வார். அதை சுந்தராம்பாள் நியமித்த கண்காணிக்கும் தொழிலாளர் உடனேயே வந்து சுந்தராம்பாளுக்குச் சொல்லிவிடுவார்கள். அதனால் நவநீதனுக்கும் சுந்தராம்பாளுக்கும் இடையில் பெரும் கலகம் மூழும். அது தணிந்து சமாதானத்திற்கு வர வாரம் ஒன்று செல்லும்.

அமைதியான போக்குடைய நவநீதன் தனது மனைவியை அன்பான வழியில் திருத்தலாமென எண்ணி பல வழிவகைகளைக்

கையாண்டார். புத்திமதிகள் கூறினார். நீதிக் கதைகளை எடுத்துக் கூறினார். அவை எதையும் சுந்தராம்பாள் கேட்கவில்லை. சிலவேளைகளில் அவளது நடவடிக்கைகள் அத்துமீறிவிடும். பொறுமையாக இருக்கும் நவநீதன் சிலநேரங்களில் பொறுமை இழந்து ருத்திரமூர்த்தியாக மாறி அவளுக்கு அடித்தும்விடுவார். அதனால் பல நாட்களுக்கு நவநீதன் நிம்மதியின்றித் தவிப்பார்.

நவநீதனின் தங்கை சௌமியா ஒருமுறை கணவன் வியாபாரத்தில் நட்டமடைந்தமையால் சகோதரனைத் தேடிவந்து உதவி கேட்டாள். நவநீதனுக்கு தங்கையின் மீது பாசம் அதிகம். அத்துடன் தங்கையின் கணவனான கார்த்திகேயன் நற்பண்புகள் உள்ளவன். மது அருந்தாதவன். மிகவும் நாணயமானவன். அவனது வியாபார நிலையம் மின்ஒழுக்கு காரணமாக தீப்பற்றி முழுமையாக எரிந்துவிட்டது.

சௌமியா, நவநீதனிடம் கடனாகத்தான் பணம் கேட்டாள். அவருக்குக் கொடுக்க விருப்பம். ஆனால் பணத்தை வங்கியில் இருந்து எடுப்பதானால் சுந்தராம்பாளிடம் அனுமதி பெறவேண்டும். அவள் கடைசிவரையும் சம்மதிக்கமாட்டாள் என்பது அவருக்குத்தெரியும். அதனால் வேதனைப்பட்டார். பின் ஒருவாறு தேறி மனைவியிடம் விஷயத்தைச் சொன்னார். அவள் நவநீதனை ஏசினாள்.

“வியாபார நிலையம் முற்றாக எரிந்துவிட்டது. எம்மிடம் பணம் வாங்கினால் எப்படித் திருப்பித்தருவார்கள். கொடுத்துவிட்டுப் பிரச்சினைப்படுவதை விட கொடாமல் விடுவதே நல்லது. உங்களுக்குக் கஷ்டமாக இருந்தால் நான் அவளுடன் கதைக்கிறேன்.”

“வேண்டாம்... வேண்டாம்... நான் பக்குவமாக எடுத்துச் சொல்கிறேன். நீ கதைத்தால் நொந்து போயிருக்கின்ற அவர்களின் இதயத்தை வேல்கொண்டு தாக்குவதைப் போல் இருக்கும். கொடுக்காவிட்டாலும் அன்பாகப் பேசினாலே போதும்...”

நவநீதனுக்கு தங்கைக்கு நேர்ந்த துயரத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எனவே தனது நண்பனான சுப்பிரமணியத்திடம் சென்று நிலமையை விளக்கிக்கூறி கார்த்திகேயனுக்கு உதவி செய்யுமாறு கூறினார். நவநீதனது பரிதாப நிலையை உணர்த்த சுப்பிரமணியம் கார்த்திகேயனுக்குத் தேவையான பணத்தை தனது பொறுப்பிலேயே கொடுத்தார். அது நவநீதனுக்குப் பிடிக்கவில்லை. எனினும் அவரால் எதையும் செய்யமுடியவில்லை. அத்துடன் சுப்பிரமணியம் கூறியதை நினைக்க வெட்கமாகவும், அருவருப்பாகவும் இருந்தது.

“கார்த்திகேயன் மிகவும் நல்லவன். நேர்மையானவன். கண்ணியவான். அவன் கேளாமலே அவனுக்கு நான் பணம் கொண்டு சென்று கொடுத்துவிட்டேன். பொறுப்பில்லாமல் வாங்க மறுத்துவிட்டான். நான் வற்புறுத்தியதால் நான் கொண்டுசென்ற பணத்தில்

அரைவாசியைத்தான் வாங்கினான். முறைக்கு நீ கொண்டுபோய்க் கொடுத்திருக்க வேண்டும்.''

வியாபார நிலையம் எரிந்து ஒரு வருடத்துள் கார்த்திகேயன் சுப்பிரமணியத்தின் பனத்தை வட்டியுடன் திருப்பிக்கொடுத்தான். ஆனால் சுப்பிரமணியம் வட்டிப்பணத்தை வாங்கவில்லை.

நவநீதனின் வீட்டுக்கு அருகில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிள்ளையார் கோயில் ஒன்று உள்ளது. அதன் நிர்வாக சபையினர் கோயில் திருப்பணிகள் மட்டுமன்றி பொதுப் பணிகளிலும் ஈடுபட்டு வந்தனர். அன்று அவ்வூரில் விவசாயம் செய்துவரும் சிவஞானத்தின் மகன் பிரதீபனுக்கு இருதய சத்திரசிகிச்சை செய்வதற்கு நிதி உதவி செய்வதற்கான கூட்டம் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. பிரதீபன் மருத்துவக் கல்லூரிக்கு தெரிவாகியிருந்தான். அவனுக்கு இருதய சத்திரசிகிச்சைக்கு பணஉதவி செய்வதற்காக அவ்வூர் மக்கள் அனைவரும் கூடி இருந்தனர்.

கூட்டம் ஆரம்பமானதும் ஒவ்வொருவரும் போட்டி போட்டு பணத்தை அன்பளிப்புச் செய்தனர். நவநீதன் எதுகும் பேசாது ஒரு மூலையில் அமர்ந்திருந்தார். ஏழை மக்கள் கூட தம்மால் இயன்றளவு பண உதவி செய்த போதும் பெரும் பணக்காரனான தன்னால் ஒரு முடிவு எடுக்க முடியவில்லையே என வருந்தினார்.

சுப்பிரமணியம் மெதுவாகக் கேட்டார். ''நீங்கள் உதவி செய்யவில்லையா...?''

நவநீதனுக்கு அவமானமாக இருந்தது. கூனிக்குறுகிப் போனார். பின் ஒருவாறு சமாளித்துக்கொண்டு; ''சிவஞானம் வீட்டை வாறவன் தானே கொடுப்பம். இப்ப நான் காசு கொண்டுவரவில்லை'' என்றார்.

59. புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்

ஏறுபோல் பீடு நடை.

கணவனது புகழைக் காக்க விரும்பும் மனைவி இல்லாதவர்களுக்கு, இகழ்ந்து பேசும் பகைவர் முன் காளை போல் நடக்கும் கம்பீரநடை இல்லை.

மங்கலம்

சேனையூரில் உலகநாத முதலியார் வாழ்ந்து வந்தார். அவரது மனைவி சாரதாதேவி. அவருக்கு நான்கு பிள்ளைகள். மூத்தவன் ஜனகன், இரண்டாவது மகன் நகுலன், மூன்றாவது மகன் பிரதீபன், நான்காவது மகள் கௌரி.

உலகநாத முதலியார் பிள்ளைகள் நால்வரையும் அன்பாக வளர்த்து வந்தார். அவர் அடிக்கடி தன் பிள்ளைகளை அழைத்துச் சொல்வார்; ‘‘பிள்ளைகளே நீங்கள் எப்பொழுதும் நேர்மையான வழியிலேயே நடத்தல் வேண்டும். மற்றவர்களை மதித்தல் வேண்டும். பொய் சொல்லக்கூடாது. எம்மால் இயன்ற உதவிகளை மற்றவர்களுக்கு நீங்கள் செய்தல் வேண்டும். இதை எனது தகப்பனார் இளமையில் எனக்குச் சொன்னார். அவர் சொன்னவற்றை நான் இன்றுவரை கைக்கொண்டு வருகிறேன். நான் உயிரோடு இருக்கும் வரை கைக்கொள்வேன். அதன்படி நீங்களும் நடந்துகொள்ளல் வேண்டும்.’’

பிள்ளைகள் நால்வரும் தந்தை சொற்படி நடந்து வந்தனர். பாடசாலையில் ஆசிரியர்கள் சொல்லும் வேலைகள் அனைத்தையும் செய்து வந்தனர். உலகநாத முதலியாரது மூத்த இரண்டு பிள்ளைகளும் பட்டணத்தில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றில் உயர் வகுப்பில் கல்வி கற்றனர். மூன்றாவது மகன் பிரதீபனும் மகள் கௌரியும் சேனையூரில் உள்ள இடைநிலைப் பாடசாலை ஒன்றில் கல்விகற்று வந்தனர். அப்பாடசாலையில் உள்ள பெரும்பான்மையான வேலைகளைப் பிரதீபனே செய்வான். பாடசாலை வளவைக் கூட்டுதல், வகுப்பறை, அதிபரின் அலுவலகம், ஆசிரியர்கள் தங்கும் அறைகளைக் கூட்டித் துப்புரவு செய்தல் பிரதீபனின் பணியாக இருந்தது.

ஜனகன் தேசிய பாடசாலையில் உள்ள கோயிலைப் பராமரிப்பது, உயர்தர மாணவர்களின் நலனைப் பேணுதல், விளையாட்டுக் குழுக்களுக்கு வேண்டிய உதவிகள் செய்தல், விழாக்களுக்கான உதவிகள் செய்வது ஜனகனின் பணியாகும். ஆசிரியர்கள் கூறாமலே இப்பணிகளைத் தானே முன்வந்து செய்வான்.

ஜனகனோடு கல்வி கற்பவன் வாகீசன். ஜனகனை விடக் கல்வியில் கெட்டிக்காரன். ஆனால் ஏழை. தந்தையை இழந்தவன். தாய்தான் கஷ்டப்பட்டு அவனது கல்விக்கு உதவி வந்தாள். ஒருநாள் வாகீசன் வாட்டமுடன் இருந்தான்.

‘‘என்ன வாகீசா கவலையுடன் இருக்கிறாய்’’ என்று கேட்டான் ஜனகன்.

வாகீசன் எதுகும் பேசவில்லை. அவனது கண்கள் கலங்கின.

“வாகீசா உனக்கு என்ன துன்பம் நடந்ததென்று சொல்லு. அதைப் போக்க நான் என்னாலான முயற்சியை மேற்கொள்வேன்.”

“உன்னிடம் நான் நிறையக் கடமைப்பட்டுள்ளேன். அம்மாவுக்கு சுகமில்லை. அவாவால் உழைக்க முடியாது. எனவே நான் ஏதாவது முயற்சி செய்யலாமா என யோசிக்கிறேன்...”

“மிகவும் திறமைசாலியான நீ கற்றலை விடக்கூடாது. நான் அப்பாவுக்குச் சொல்லி நீ கற்பதற்கான ஒழுங்குகளைச் செய்கிறேன்” என்றான் ஜனகன்.

அன்றே ஜனகன் தனது தந்தையிடம் வாகீசனது குடும்ப நிலமைபற்றி எடுத்துக்கூறினான். அவனுக்கு உதவி செய்வதற்கு உலகநாத முதலியார் ஒத்துக்கொண்டார்.

பிரதீபன் கல்வி கற்கும் பாடசாலையில் மாணவர்கள் குடிப்பதற்கு நீரை கிணற்றில் இருந்து மொண்டு எடுத்தல் வேண்டும். சிறிய பிள்ளைகள் தண்ணீர் குடிப்பதற்கு மிகவும் சிரமப்படுவார்கள். அதைக் கண்ட பிரதீபன் தகப்பனிடம் சொல்லி தமது வீட்டில் வேலை செய்யும் சுப்பிரமணியத்தைக் கொண்டு நீரை அள்ளி பாத்திரங்களில் சேமித்து வைத்தான். பிள்ளைகள் பாத்திரங்களில் உள்ள நீரை அள்ளிக் குடித்தனர்.

வருடங்கள் சில கடந்தன. ஜனகன் மருத்துவக்கல்வி கற்று அவ்வூர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டான். அவன் நோயாளர்கள் மீது அன்பு செலுத்தினான். அக்கறையுடன் கவனித்தான். அதனால் அவ்வூர் மக்கள் அவனை தெய்வமாக மதித்தனர்.

வாகீசன் பொறியியலாளனானான். தனக்கு உலகநாத முதலியார் செய்த நன்றிக் கடனுக்காக கௌரியைத் திருமணம் செய்தான்.

நகுலன் நன்கு கற்றுத் தேர்ந்து நகரில் பெரியதொரு வர்த்தக நிலையத்தை நிறுவினான். அந்நகர் முழுவதற்கும் கலப்படமில்லாத நல்ல பொருட்களை மலிவு விலையில் கொடுத்தான். அதனால் அனைவரினதும் நன்மதிப்பைப் பெற்றான்.

பிரதீபன் அவ்வூர்க் கிராம சேவகராக நியமனம் பெற்றான். தனது ஊரில் உள்ள வறிய மக்களுக்கு தன்னாலான சேவைகளைச் செய்தான். எல்லோரையும் சமமாக மதித்தான். உயர்வு தாழ்வு பாராது எல்லோருக்கும் உதவிகள் செய்தான். அக்கிராமத்தில் சட்ட விரோதமாக விற்பனை செய்யப்பட்ட கள்ளச் சாராய விற்பனையையும், சூதாடுதலையும் முற்றாக ஒழித்தான். அதனால் குடும்பங்கள் சந்தோசமாக வாழ்ந்தன. அவனைப் போற்றிப் புகழ்ந்தன.

பாடசாலைகள், கோயில்களுக்கு நிதி சேகரித்துக் கொடுத்து அவற்றை முன்னேற்றினான். ஊர்மக்கள் நன்மக்களை சமூகத்திற்கு அளித்ததற்காக உலகநாத முதலியாரை வாழ்த்தினர்.

அவ்வூரில் நடைபெறும் விழாக்கள், வைபவங்களுக்கு உலகநாத முதலியாரே தலைமை தாங்கினார். அவர் சொல்வதை மக்கள் அனைவரும் வேத வாக்காக ஏற்றுக் கொண்டனர்.

பொது நிறுவனங்கள், அரச சார்பான, சார்பற்ற நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புக்களை உலகநாத முதலியாரின் பிள்ளைகளே ஏற்று ஊழலின்றி நடத்தினர்.

60. மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றுஅதன்

நன்கலம் நன்மக்கட் பேறு.

மனைவியின் நற்பண்புகளே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்றும் அதன் பேறாக நல்ல மக்களைப் பெறுதலே நல்லணிகலம் என்றும் பெரியோர் கூறுவர்.

பெரும் பேறு

ஆறுமுகநாதன் சேனையூர்க் கிராமத்தில் பெரும் வர்த்தகன். நகரில் பெரியதொரு தங்க நகைகள் அடைவு வைக்கும் கடை வைத்து நடத்தி வந்தார். பல கிராமங்களில் இருந்து வரும் வறிய மக்கள் அவரிடம் தமது தங்க நகைகளைக் கொடுத்து பணம்வாங்கிச் செல்வார்கள். ஊரவர்கள் அவரது வீட்டுக்கு வந்து நகைகளைக் கொடுத்துவிட்டு பணத்தை வாங்கிச் செல்வார்கள்.

ஏழைமக்கள் பலர் நகைகளைக் கொடுத்துவிட்டு பணம்பெற்றுச் சென்றபோதும் அவற்றை மீட்க முடியாது விட்டு விடுவார்கள். ஆறுமுகநாதன் நகைகளை உரிய தவணையில் மீட்காதவர்களுக்கு விரைவாக நகைகளை மீட்கும்படியும் இல்லாவிட்டால் விற்பனை செய்யப்படுமெனவும் இரண்டுமுறை கடிதம் எழுதுவார்.

அவர்கள் கடிதம் கிடைத்ததும் ஆறுமுகநாதனிடம் வந்து தம்மால் நகைகளை மீட்க முடியவில்லை என்றும், முதலையும் வட்டியையும் கழித்துக்கொண்டு ஏதாவது பணம் மிஞ்சி இருந்தால் தரும்படியும் இரப்பார்கள்.

ஆறுமுகநாதன் நகையை நிறுத்துப் பார்ப்பார். பின்பு முதலையும், வட்டியையும் கணக்குப் பார்ப்பார். பெரும்பாலானவர்களுடைய கணக்கு முதலையும், வட்டியையும் விடக் கூடுதலாகவே இருக்கும். எனவே மிகுதிக் காசைக் கொண்டுவந்து தரும்படி கூறுவார்.

ஒருமுறை நாட்டில் வன்செயல்கள் நடந்தன. மக்கள் சேனையூரை விட்டுவிட்டு உயிர் தப்பினால் போதுமென்று தமது பிள்ளைகளுடன் கிராமத்தை விட்டுவிட்டுச் சென்றனர். ஆறுமுகநாதன் தனது பெறுமதி இல்லாத பொருட்களை விட்டுவிட்டு அடைவு வைத்த நகைகளையும் பெறுமதியான பொருட்களையும் கொண்டுசென்றுவிட்டார். வன்செயல் முடிந்து மக்கள் ஊருக்குத் திரும்பிவந்து தமது நகையைக் கேட்டபோது; தான் பயத்தில் எப்பொருட்களையும் எடுத்துச் செல்லவில்லை என்று கூறினார். மக்களில் சிலர் அவருடன் சண்டைக்குப் போனார்கள். சிலர் திட்டினார்கள். அத்துடன் அந்த விடயம் முற்றுப் பெற்றுவிட்டது.

ஆறுமுகநாதன் திருமணஞ் செய்து பத்து வருடங்கள் கழிந்தும் அவருக்குப் பிள்ளைகள் பிறக்கவில்லை. அதனால் அவர் மிகுந்த கவலையடைந்தார். கோயில்களுக்கெல்லாம் சென்றார். தானதருமங்கள் செய்தார். விரதமிருந்தார். பூசைகள் செய்தார். எனினும் பலன் இல்லை.

ஒருமுறை அயல் ஊர் ஒன்றில் இருந்து வந்த சாமியார் ஒருவர் பெரியதொரு யாகம் செய்தால் பிள்ளை பிறக்கும் என்று கூறினார். அதை நம்பிய ஆறுமுகநாதன் அவர் கூறிய பொருட்கள் யாவற்றையும் வாங்கிக் கொடுத்தார். அவருக்கும் ஏராளமான பணத்தைக் கொடுத்து யாகம் செய்தார். இருந்தும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை.

இப்படியாக இருக்கும் நாளில் ஆறுமுகநாதனின் மனைவி சாவித்திரி கருவுற்றாள். ஆறுமுகநாதன் மிகவும் மகிழ்ந்தார். கோயில்களில் பூசைகள் செய்தார். ஏழைகளுக்கு அன்னதானம் செய்தார்.

காலப்போக்கில் ஆறுமுகநாதனுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு ஆரூரன் என்று பெயரிட்டு அன்போடும், பாசத்தோடும் வளர்த்து வந்தார். ஆரூரனுக்கு ஐந்து வயதாகியும் அவன் எழுந்து நடக்கவில்லை. படுத்த பாயிலேயே கிடந்தான். அவர் செய்யாத வைத்தியம் இல்லை. எனினும் ஆரூரன் நடக்கவில்லை.

ஆரூரன் எட்டாவது வயதிலே எழுந்து நடந்தான். எனினும் பூரண வளர்ச்சியுடையவனாக அவன் இருக்கவில்லை. திக்கித் திணறிப் பேசுவான். அவனது பேச்சில் எந்தவிதமான கருத்துக்களும் இருக்கமாட்டாது.

பெரும் பணக்காரரான ஆறுமுகநாதனுக்கு தனது சொத்தை அனுபவிக்க ஆளில்லையே என்ற கவலை தலைதூக்கியது.

அவரின் வீட்டுக்கு அருகில் வாழ்பவன் கார்த்திகேயன். அவனுக்கு ஆறு பிள்ளைகள். விவசாயம் செய்து வந்தான். அவனது விவசாய வருமானம் அவனது குடும்பப் பராமரிப்புக்குக் காணாமையால் அவனது மனைவி காயத்திரி ஆறுமுகநாதனின் வீட்டில் வேலைசெய்து வந்தாள்.

கார்த்திகேயனின் பிள்ளைகள் படிப்பில் கெட்டிக்காரர்கள். கார்த்திகேயன் கஷ்டப்பட்டு அவர்களைப் படிப்பித்தான். காயத்திரி அடிக்கடி தனது பிள்ளைகளின் கல்விச் செலவுக்காக ஆறுமுகநாதனிடம் தனது சம்பளத்தில் கழித்துக் கொள்ளும்படி முற்பணம் கேட்பாள். சில மாதங்களில் அவள் வாங்கிய பணம் அவளது சம்பளப் பணத்திலும் கூடுதலானதாக இருக்கும். அப்படியான காலங்களில் ஆறுமுகநாதன் காயத்திரிக்குச் சொல்வார். ‘‘காயத்திரி உனக்கு ஆறுபிள்ளைகள். ஆனால் அவர்களைக் கவனிக்க முடியாதளவு வறுமை. ஆனால் என்னால் அறுபது பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்க முடியும். ஆனால் இருக்கிறதோ ஒன்றே ஒன்று. அதுகும் நோய்வாய்ப்பட்ட பிள்ளை. கடவுள் இப்படி ஏன் நீதியில்லாமல் நடக்கிறார். நான் கடவுளை வணங்கவில்லையா...? பூசை செய்யவில்லையா...? தானதர்மங்கள் செய்யவில்லையா...?’’

‘‘எனக்கு இதற்கு மறுமொழி சொல்லத் தெரியாது ஐயா. நாலாம் வகுப்பு படிச்ச என்னைப் பிடிச்சு இதைக் கேட்கிறீர்களே’’ என்பாள்.

‘‘சரி... சரி... உன்னுடைய பிள்ளைகளில் ஒன்றை எனக்குத் தாறியா...?’’

‘‘ஐயையோ... படைச்சவன் படி அளப்பான் ஐயா. வறுமையால் துன்பப்பட்டாலும் நான் என்னுடைய பிள்ளைகளைத் தரமாட்டன். என்னுடைய எல்லாப் பிள்ளைகளும் ஒரே மாதிரியாக வாழட்டும். ஒன்று கூட ஒன்று குறைந்திருந்தால் பிற்காலத்தில் அவை வேற்றுமைப்பட்டுவிடும்.’’

வருடங்கள் கழிந்தன. ஆறுமுகநாதனின் மகன் நோயுள்ளவனாகவே வாழ்ந்து வந்தான். வட்டிக்கடையை நிர்வகிக்க ஆளில்லாமையால் ஆறுமுகநாதன் தனது வட்டிக்கடையை மூடிவிட்டார்.

கார்த்திகேயனின் பிள்ளைகள் பல்கலைக்கழகங்களில் கற்று அறிஞர்களானார்கள். ஊர் மக்கள் அவரைப் போற்றிப் புகழ்ந்தனர். கார்த்திகேயன் ஓய்வாக இருந்து தனது பேரக்குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருக்கிறார்.

61. பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த

மக்கட்பேறு அல்ல பிற.

அறிவுடைய மக்களைப் பெறுவதை விடப் பெரும்பேறு எவையும் இருப்பதை நாம் அறிந்ததில்லை.

தீயவை தீண்டா

ஆறுமுகநாதனின் தந்தை இராமலிங்கம். இராமலிங்கம் தனது சகோதரியின் மகளை ஆறுமுகநாதனுக்குத் திருமணம் செய்து வைப்பதாக சகோதரிக்கு வாக்குக் கொடுத்திருந்தார். அதனால் அவரின் சகோதரி யோகாம்பிகை தனது மகளான அம்பிகாவுக்கு ஆறுமுகநாதனின் பெருமைகளை எடுத்துச்சொல்லி அவளை ஆறுமுகநாதனைத் திருமணம் செய்துகொள்ளும்படி அடிக்கடி சொல்வாள். ஆரம்பத்தில் தாயின் வார்த்தைகளை அலட்சியம் செய்த அம்பிகா காலப்போக்கில் ஆறுமுகநாதனை விரும்பினாள். இரு வீட்டாரும் சேர்ந்து நிச்சயித்தமையால் ஊரவர் எல்லோரும் அத்திருமணம் நடைபெறும் என்று நினைத்திருந்தனர்.

ஆறுமுகநாதன் அடிக்கடி அம்பிகாவின் வீட்டுக்கு வருவான். அவன் வரும்போது அவளுக்கு தின் பண்டங்களும் உடு பிடைவைகளும் வாங்கி வருவான். தங்கநகைகளையும் பரிசளிப்பான். யோகாம்பிகை மருமகனுக்கு சுவையாக சமைத்து உணவளிப்பாள்.

இராமலிங்கத்தின் நண்பன் சிவராமன். வெளியூரில் வியாபாரம் செய்து வந்தான். அவளது மகள் தர்சினி பல்கலைக்கழகத்தில் கற்கும் காலத்தில் தன்னுடன் கற்கும் மாணவனை விரும்பினாள். அதற்கு சிவராமன் ஒத்துக்கொள்ளவில்லை. அதனால் இராமலிங்கத்திடம் வந்து ஆறுமுகநாதனுக்கு தனது மகளைத் திருமணம் செய்து தரும்படி கேட்டான். முதலில் மறுத்த இராமலிங்கம் பின்பு பண ஆசையால் ஒப்புக்கொண்டார். பின் ஆறுமுகநாதனை சிவராமன் வாழ்ந்த ஊருக்கு அழைத்துச் சென்று தந்திரமாகப் பேசி தர்சினிக்கு திருமணம் செய்து வைத்தார். அதன் பின் ஆறுமுகநாதன் சிவராமனின் வியாபாரத்தைக் கவனித்துக்கொண்டு அவ்வூரிலேயே தங்கிவிட்டான்.

காலப்போக்கில் அதை அறிந்த அம்பிகா துயரத்தைத் தாங்க முடியாது தற்கொலை செய்துகொண்டாள். துக்கம் விசாரிக்க வந்த இராமலிங்கம் சகோதரிக்குச் சொன்னார்; “ஆறுமுகநாதன் இப்படிச் செய்வான் என்று நான் கனவுகூடக் காணவில்லை. நம்பி இருந்த ஒரு பெண்ணுக்கு துரோகமிழைப்பது மகா பாவம். எனக்குத் தெரியாமல் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. அவன் திருமணம் செய்த பின்பு நான் அவனுடன் உறவு வைக்க விரும்பவில்லை. அதனால் அவனை

எனது வீட்டுக்கு வரவேண்டாம் என்று கூறிவிட்டேன். எனது சொத்தில் ஒரு சதம் கூட அவனுக்குக் கொடுக்கமாட்டேன். நான்தான் வலிய வந்து உன்னைக் கேட்டு அப்பாவிப் பெண்ணின் ஆசையை வளர்த்துவிட்டேன். அதனால் எனது சொத்தை அவளுக்குக் கொடுக்கலாமென்று நினைத்தேன். நான் எதிர்பாராதபடி அவள் இறந்து விட்டாள். இனி எனது சொத்தை நான் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதிக்கு எழுதப்போகிறேன்'' என்று அழுதார்.

யோகாம்பிகையும், ஊரவர்களும் அவரது பாசாங்கை நம்பிவிட்டனர்.

''அண்ணை நீங்கள் எனக்குத் துரோகம் செய்யமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். எல்லாம் விதி. தலையிலை எழுதியிருந்தால் தான் எல்லாம் நடக்கும். அவள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். நீங்கள் அழாதைங்கோ'' என்றாள் யோகாம்பிகை உருக்கமாக.

இராமலிங்கத்திற்கு யோகாம்பிகை அப்படிச் சொன்னது உள்ளூர மகிழ்ச்சியைக் கொடுத்தது. அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் தோளில் இருந்த சால்வையை எடுத்து முகத்தை துடைத்தபடி குழுங்கிக் குழுங்கி அழுதார். அவரது நடிப்பை ஊரவர்களும் நம்பிவிட்டனர்.

இருபது வயதாகியும் நடக்க முடியாது தடுமாறி விழும் தனது மகனைப் பார்த்துக் கலங்கினார் ஆறுமுகநாதன். மகன் அழுவதைக் கண்ட இராமலிங்கத்திற்கு கவலையாக இருந்தது.

''நான் செய்த பாவம் தான் என்னைச் சூழ்ந்துள்ளது. உங்கள் பேச்சை நம்பி பண ஆசையால் நான் அம்பிகாவுக்குச் செய்த துரோகத்தை இப்போது அனுபவிக்கிறேன். நான் துன்பப்படுவதால் நீங்களும் தினமும் கவலைப்படுகிறீர்கள். எதிர்காலத்தில் நான் இல்லாவிட்டால் ஆரூரன் என்னென்ன பாடுபடப் போறானோ...? எனக்கு முன்னம் அவன் போயிடவேணும்'' குழுங்கிக் குழுங்கி அழுதார் ஆறுமுகநாதன்.

பெரும் செல்வந்தனான தனது மகன் துக்க மேலீட்டால் அழுவதை இராமலிங்கத்தால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ''உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியது நான்தான். தவறு செய்யும் மக்களைத் திருத்தவேண்டிய தந்தையாகிய நான் உன்னைத் தவறு செய்யும்படி தூண்டிவிட்டேன். பழியில்லாத நல்ல மக்களைப் பெற்ற தந்தைக்கு ஏழேழு பிறவியிலும் துன்பம் வராது என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது எவ்வளவு உண்மையானது என்று கார்த்திகேயனின் குடும்பத்தைப் பார்த்து அறிந்துகொள்ளலாம். கார்த்திகேயனின் தந்தையாரான செந்தில்நாதனையும் அவரது தந்தையான செந்தில்குமரனையும் எனக்கு நன்கு தெரியும்.

செந்தில்குமரனும், செந்தில்நாதனும் கூலிவேலைதான் செய்தவை. இருந்தும் பண்பான பிள்ளைகளைப் பெற்றதால் இன்று அவர்களது பிள்ளைகள் பெருமையாக வாழ்கிறார்கள். செந்தில்நாதனுக்கும் கார்த்திகேயனுக்கும் இன்று என்ன குறை இருக்கு. பிள்ளைகள் பண்புடையவர்களாக இருப்பதால் அவர்கள் மகிழ்வாக வாழ்கிறார்கள். கார்த்திகேயனின் பிள்ளைகளும் நன்றாக இருக்கின்றனர். செந்தில்குமாரனுடைய வம்சம் ஏழேழு பிறவியிலும் நல்லாய்த்தான் இருக்கும். அதைப் பார்க்கத் தெரியுது'' என்று கண்கலங்கினார் இராமலிங்கம்.

62. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்

பண்புடை மக்கள் பெறின்.

பழியில்லாத நல்ல பண்புடைய மக்களைப் பெற்றோரை ஏழு பிறவிகளிலும் தீவினைகள் எவையும் சென்று சேராது.

தம்பொருள்

கார்த்திகேயனின் ஆறு பிள்ளைகளும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்று பெரும் மேதைகளாகத் திகழ்ந்தனர். மூத்த மகனான ஞானசம்பந்தன் பல்கலைக்கழகத்தில் விவசாயபீடத்தில் பேராசிரியராக இருந்தான். உணவுப்பயிர்களை நோயினின்றும் காக்கும் புதிய முறைகளையும், விளைச்சலை அதிகரிப்பதற்கான முறைகளையும் கண்டறிய ஆராய்ச்சிகள் பல செய்துகொண்டிருந்தான். அவன் அவ்வூரின் பெரும் பணக்காரரான நல்லைநாதனின் ஒரே மகளைத் திருமணம் செய்தான். நல்லைநாதன் பல இலட்ச ரூபா பெறுமதியான சொத்துக்களை அவனுக்கு சீதனமாகக் கொடுத்திருந்தார்.

இரண்டாவது மகன் கஜேந்திரன் கண் சத்திர சிகிச்சை நிபுணன். தனது தந்தையான கார்த்திகேயனின் பெயரில் ஒரு கண் வைத்தியசாலையைக் கட்டி இலவசமாக ஏழைகளுக்கு சிகிச்சை அளித்து வந்தான். கண் சிகிச்சையில் அவன் நிபுணத்துவம் பெற்றிருந்தால் அயல் ஊர்களில் உள்ளவர்களும் அவனது வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சைபெற்றுச் சென்றனர்.

மூன்றாவது மகன் பாலகுமாரன் பொறியியலாளராகக் கடமையாற்றினான். பின் வெளிநாடு சென்று அங்கே

பொறியியலாளராகக் கடமை புரிந்தான். தனது தந்தைக்கு தேவையான பணத்தை அனுப்பிக்கொண்டிருக்கிறான்.

நான்காவது மகள் ரோகினி வைத்தியராகப் பணிபுரிந்தாள். அவளது கணவன் மாதவன். அவனும் வைத்தியராகப் பணிபுரிகிறான். இருவரும் நோயாளிகள் மீது அன்பும், பரிவும் வைத்திருந்தனர். நோயாளிகள் வந்தால் அவர்களை யாரென்று விசாரிக்காது அன்புடன் நடந்துகொள்வார்கள். அக்கறையுடன் கவனித்து தேவையான மருந்துகளைக் கொடுப்பார்கள். வைத்தியசாலையில் இல்லாத மருந்துகளை ஒரு கடதாசித் துண்டில் எழுதிக் கொடுப்பார்கள். அம் மருந்தை வாங்கப் பணமில்லாத ஏழை மக்களுக்கு தாமே அம் மருந்தை வாங்கிக் கொடுப்பார்கள். இதனால் ஊரில் அவர்களுக்கு நல்ல மதிப்பிருந்தது. நடமாடும் தெய்வங்களாக அவர்களை மக்கள் மதித்தனர்.

ஐந்தாவது மகள் ஆரணியும், ஆறாவது மகன் ஸ்ரீதரனும் ஆசிரியர்கள். இருவருக்கும் திருமணமாகவில்லை. பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்ற இருவரும் ஊரில் உள்ள தேசிய பாடசாலையொன்றில் உயர்தர வகுப்புகளுக்கு இரசாயனவியலும், பௌதீகவியலும் கற்பித்தனர். அவர்கள் இருவரும் மிகவும் திறமையாகப் பாடங்களைக் கற்பிப்பதனால் ஏனைய பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் அவர்கள் கற்பிக்கும் பாடசாலையில் சேர்ந்தனர். இதனால் அயலில் உள்ள பாடசாலைகளில் உள்ள விஞ்ஞான, கணிதப் பிரிவுகளை மூடவேண்டிய நிலை ஏற்பட்டது.

பல ஊர்களில் இருந்து நூற்றுக் கணக்கான மாணவர்கள் அவர்களின் வீட்டுக்கு வந்து தமக்கு விளங்காதவற்றைக் கேட்டுச் சென்றனர். இதனால் அவர்கள் இருவரும் இரவு பத்து மணிவரை கற்பித்தனர்.

அவர்கள் இருவரையும் மருமக்களாக ஏற்க பல ஊர்களில் உள்ள பிரமுகர்கள் போட்டிபோட்டனர்.

தம்மைக் கஸ்டப்பட்டு கூலி வேலை செய்து ஆளாக்கிய கார்த்திகேயன் மீது ஆறு பிள்ளைகளும் உயிரையே வைத்திருந்தனர். தாம் தேடிய பொருட்கள் எல்லாவற்றையும் தந்தையிடம் கொடுத்தனர். அவர் அதை ஏற்க மறுத்தார். ‘‘எனக்குத் தேவையான அத்தனையையும் நீங்கள் எனக்குத் தருகிறீர்கள். அத்துடன் நான் தானதர்மங்கள் செய்ய விரும்பினாலும் தருகிறீர்கள். எனது பெயரில் பல நிறுவனங்களை உருவாக்கி ஏழை எளியவர்களுக்கு உதவி செய்கிறீர்கள். பிறகேன் எனக்குப் பணம். ஒவ்வொருவரும் சம்பாதிப்பதை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். தேவையான போது நான் பெற்றுக்கொள்கிறேன். உங்களுடைய சொத்தெல்லாவற்றையும்

எனது சொத்தாக நீங்கள் கருதுகிறீர்கள். அது ஒன்றே எனக்குப் போதும்'' என்றார்.

''அப்பா நீங்கள் சாதாரணமானவர் அல்ல. எமக்காக எத்தனையோ தியாகங்களைச் செய்த தியாகி. மற்றையோரைப் போல் நீங்களும் உழைக்கச் சோம்பற் பட்டிருந்தால் நாமும் ஊரில் உள்ள பலரைப் போல் கூலிக்காரர்களாகத்தான் வாழ்ந்திருப்போம். நீங்களும் அம்மாவும் எம்மை வளர்க்கப் பட்டகஸ்டம் எமக்குப் புரியும். அதனால் தான் உங்கள் பெயரிலும், அம்மாவுடைய பெயரிலும் ஒரு நிதியத்தை ஆரம்பிக்கவுள்ளோம். எம்மைப் போல் திறமையான ஏழை மாணவர்கள் கற்க அந்நிதியம் உதவும்'' என்றான் ஞானசம்மந்தன்.

''நான் பெரிதாக எதையும் செய்யவில்லை. ஒரு தந்தைக்குரிய கடமைகளைத் தான் செய்தேன். பிள்ளைகளைப் பெறுவது மட்டும் ஒரு தந்தையின் கடமை ஆகாது. அவனது பிள்ளைகளைக் கூட அதாவது பேரப்பிள்ளையைக் கூட வளர்த்தெடுத்தல் வேண்டும். அதேபோல் பிள்ளைகளுக்கும் பெற்றோரைக் காக்கின்ற பெருங்கடமை உள்ளது'' என்றார் கார்த்திகேயன்.

ஊரவர்கள், அயலவர்கள், ஏழைகள், உதவி தேவைப்படும் நிறுவனங்கள் பணத்தேவை ஏற்படும் போது கார்த்திகேயனிடம் தான் வருவார்கள். கார்த்திகேயன் பெருந்தொகையான பணத்தை அவர்களுக்கு வாரி வழங்குவார்.

63. தம்பொருள் என்பதம் மக்கள்; அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.

தன்னுடைய பிள்ளைகள் தன்னுடைய பொருள்கள் என்று அறிஞர் கூறுவர். மக்களாகிய அவர் தம் பொருட்கள் அவரவர் நல்வினை தீவினைப் பயனால் வந்து சேரும்.

அமிழ்தினும் இனிது

கார்த்திகேயனின் இரண்டாவது மகன் கஜேந்திரன். கண் சத்திரசிகிச்சை நிபுணன். பட்டணத்தில் உள்ள பெரிய வைத்தியசாலையில் தலைமைக் கண் வைத்திய அதிகாரியாகக் கடமைபுரிந்து வந்தான். ஊரில் தனது தந்தையின் பெயரில் கண்

மருத்துவமனை ஒன்றையும் நடாத்தி வந்தான். அவன் தனது தாய்மாமன் மகளான நகுலினியைத் தனது தந்தையாரின் விருப்பத்திற்கிணங்கத் திருமணம் செய்திருந்தான். நகுலினியைத் திருமணம் செய்ய கஜேந்திரன் விரும்பவில்லை. அவன் தன்னுடன் வைத்தியராகக் கடமையாற்றும் கிருசாந்தினியையே திருமணம் செய்ய விரும்பினான்.

கிருசாந்தினி நல்ல அழகி. அத்துடன் தன்னிடம் வைத்தியம் பார்க்க வரும் மக்களை அன்புடன் கவனிப்பாள். அக்கறையுடன் விசாரிப்பாள். தனது ஊரில் இருந்து வந்தவர்களானால் அவ்வூரில் உள்ள பெரியவர்கள், இனத்தவர்கள், நண்பர்களின் குடும்பங்களைப்பற்றி விசாரிப்பாள். அதை அவர்கள் சென்று சம்மந்தப்பட்டவர்களுக்குக் கூறும்போது அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். அத்துடன் மருத்துவமனைக்கு வந்து அவளுடன் அளவளாவிச் செல்வார்கள். கிருசாந்தியின் இத்தகைய பண்புகள் கஜேந்திரனை மிகவும் கவர்ந்தது. அதனால் அவளை அவன் விரும்பினான்.

கிருசாந்தினி கஜேந்திரனுடன் அன்பாகவும், பண்பாகவும் பழகி வந்தாள். அதோடு அங்கு வேலை செய்யும் மருத்துவர்கள் அனைவருடனும், ஊழியர்களுடனும் அன்பாகவும், கலகலப்பாகவும் பழகிவந்தாள். அதனால் கஜேந்திரனுக்கு தனது விருப்பத்தைப்பற்றி அவளுக்குக் கூற சற்றுப் பயமாக இருந்தது. அதனால் காலம் வரும்வரை பொறுத்திருந்தான்.

அவன் எதிர்பாராதவாறு ஒருநாள் கார்த்திகேயன் அவனிடம் வந்து சொன்னர்; ‘‘தம்பி உனக்கு நான் பெண்பார்த்துவிட்டேன். அம்மாவுடைய அண்ணன் விக்னேஸ்வரனின் மகள் நகுலினியைத்தான் நீ திருமணம் செய்தல் வேண்டும். நான் கஷ்டப்பட்ட காலத்தில் அவர்கள் எமக்கு எவ்வளவோ உதவிகள் செய்தார்கள். உனது மாமியின் நகைகளை வாங்கி அடைவு வைத்துத்தான் உங்கள் கல்விக்கு ஏற்படும் பெரும் செலவுகளை நான் சமாளித்தேன். தான் வைத்திருந்த இரண்டொரு நகைகளையும் மனங்கோணாமல் தந்துதவும் மகராசி உன்னுடைய மாமி. அவாமட்டும் அடிக்கடி நகைகளைத் தந்துதவாவிட்டால் உங்கள் படிப்புக்குத் தடைகள் ஏற்பட்டிருக்கும். நகைகளைத் தந்துவிட்டு வெறும் கழுத்துடன் ஊரில் நடைபெறும் விஷேசங்களுக்கு வெட்கமில்லாமல் அவள் செல்வதைப் பார்த்து நானே பல தடவைகள் கண்கலங்கியுள்ளேன். அவர்களிடம் சீதனமாக எதுகுமில்லாவிட்டாலும் பிறர்க்குதவி செய்யும் பெருங்குணம் உள்ளது. அந்தக்குணம் அவர்களைக் கோடீஸ்வரராக்கும்’’ கண்கலங்கினார் கார்த்திகேயன்.

கண்களால் கண்ணீர் கசிய உணர்ச்சிப் பிழம்பாக எதிரே நிற்கும் தந்தையின் வார்த்தைகளை மீறும் சக்தி கஜேந்திரனுக்கு இருக்கவில்லை. அதனால் சம்மதித்தான். அத்துடன் அன்றே

கிருசாந்தினியையும் மறந்துவிட்டான். நகுலினிக்கும், கஜேந்திரனுக்கும் திருமணம் நடைபெற்று ஐந்து வருடங்கள் கழிந்தும் பிள்ளைப்பாக்கியம் கிடைக்கவில்லை. அதனால் கஜேந்திரன் மிகவும் வருந்தினான். நகுலினியும், கார்த்திகேயனும் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் பழி கிடந்தனர்.

ஆறாவது வருடம் நகுலினி கர்ப்பமுற்றாள். பத்தாவது மாதம் நகுலினி ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். கஜேந்திரனின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வேலை நேரம் தவிர்ந்த நேரங்களில் அவன் தனது மகன் கணேசராஜாவுடன் இருந்தான். கணேசராஜாவுக்கு விதம்விதமான நகைகளை அணிந்து அவனின் அழகை ரசித்தான். பல வகையான விளையாட்டுப் பொருட்களை வாங்கிக்கொடுத்தான். கணேசராஜா மீது அவன் உயிரையே வைத்திருந்தான். ஒரு வயதானதும் கணேசராஜா அடியெடுத்து வைத்தான். அவனுக்கு மூன்று வேளையும் உணவூட்டுவது கஜேந்திரன்தான். கணேசராஜா தனது பிஞ்சுக்கைகளால் சோற்றைப் பிசைந்து கஜேந்திரனுக்கும், நகுலினிக்கும் உணவை ஊட்டுவான். அவ்வுணவு இருவருக்கும் அமிழ்தாக இனிக்கும். தினமும் ஒரு பிடியாவது கணேசராஜாவின் கையால் உணவு பெற்று உண்ணாவிட்டால் கஜேந்திரனுக்கு விடியாதது போல் இருக்கும்.

அன்று நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதிக்கு வைத்த நேர்த்தி காரணமாக நகுலினியும், கார்த்திகேயனும் பொங்கினர். படைத்து முடிந்ததும் பிரசாதத்தைக் கொண்டு வீட்டுக்கு வந்தனர். கஜேந்திரன் மதிய உணவுக்காக வீட்டுக்கு வந்து காத்திருந்தான். தந்தையைக் கண்டதும் கணேசராஜா பொங்கற் பானைக்குள் கையை வைத்து பிரசாதத்தை எடுத்து தகப்பனின் வாய்க்குள் வைத்தான்.

‘‘கோயிலடியில் மண் விளையாடினவன் கையைக் கழுவியபின் சாப்பிடுங்கோ’’ என்றாள் நகுலினி. கஜேந்திரனுக்கு அது கேட்கவில்லை. அவன் வாயைத் திறந்தான். கணேசராஜா தனது கையில் இருந்த பிரசாதத்தை தந்தையின் வாய்க்குள் வைத்தான். ‘‘கணேசின் கையால் மண்ணை உண்டாலும் அமுதாக இனிக்கும’’ என்றான் கஜேந்திரன்.

64. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்

சிறுகை அளாவிய கூழ்

தம்முடைய மக்களின் சிறுகையால் ஊட்டப்பட்ட உணவு, பெற்றோர்க்கு அமிழ்தை விட மிகுந்த சுவையுடையதாக இருக்கும்.

இன்பம்

கணேசராஜா தத்தித் தத்தி மெல்ல எழுந்து நடந்தான். இரண்டு அடி எடுத்து வைத்ததும் தடுமாறிக் கீழே விழுவான். நடக்கும்போது தடுமாறும் கணேசராஜா விழுமுன் கஜேந்திரன் பிடித்துவிடுவான். அவன் நடந்தால் விழுந்து விடுவானென நினைத்து கஜேந்திரன் வீட்டில் நிற்கும் வேளைகளில் அவனைத் தூக்கி மடியில் வைத்திருப்பான். அவனைத் தொட்டுத் தூக்குவதில் விபரிக்க முடியாத பேரின்பம் அவனுக்கு ஏற்படும்.

கார்த்திகேயன் திடீரெனச் சுகவீனமடைந்தார். அவரது பிள்ளைகள் ஆறுபேரும் துடிதுடித்துப் போனார்கள். வெளிநாட்டில் வேலைசெய்யும் பாலகுமாரன் உடனே தனது குடும்பத்தவர்களுடன் நாடு திரும்பினார். ஆறு பிள்ளைகளும் கார்த்திகேயனின் வீட்டில் வந்து தங்கினர். நோயாளர்களைப் பார்வையிடும் நேரத்தில் எல்லோரும் அவரைச் சென்று பார்த்தனர். மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் அவருடன் இரவு பகலாகத் தங்கியிருந்தனர்.

கஜேந்திரன் தன்னால் தந்தைக்கு ஏற்பட்ட அனுபவங்களை நினைத்துப் பார்த்தான். அவன் க.பொ.த உயர்தர வகுப்பில் படிக்கும்போது அவனுக்கு காய்ச்சல் வந்துவிட்டது. காய்ச்சல் அதிகரித்ததனால் வலியும் வந்துவிட்டது. கார்த்திகேயன் துடிதுடித்துப்போனார். அவரிடம் மருந்து வாங்கக் காசு இருக்கவில்லை. பலரிடம் ஓடிச்சென்று நிலமையைக் கூறிப்பார்த்தார். எவரும் உதவி செய்ய முன்வரவில்லை. யோசித்துப் பார்த்தார். மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் ஒருவரைப் பராமரிக்க ஆள் தேவைப்பட்டது. பத்து நாட்கள் இரவு பகலாக அவரைப் பராமரிப்பதற்கு ஒப்புக்கொண்டார். அந்தப் பணத்தில் தான் கஜேந்திரனுக்கு மருந்து வாங்கினார்.

அவரது மகள் ரோகினி ஒருமுறை நோய்வாய்ப்பட்டாள். அந்த நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்காகத் தனது இரத்தத்தை இன்னொரு நோயாளிக்குக் கொடுத்தார். அவர்கள் மனமிரங்கிக் கொடுத்த பணத்தில் ரோகினிக்கு மருந்து வாங்கிக்கொண்டு வந்தார்.

சிறிதரனுக்கு பல்கலைக்கழகப் பரீட்சைக் கட்டணம் கட்டுவதற்கு ஆயிரம் ரூபா தேவைப்பட்டது. கஷ்டமான வேளைகளிலும் விற்காது பாதுகாத்து வைத்திருந்த தனது தந்தையாரின் மோதிரத்தை விற்று அப்பணத்தைக் கட்டினார். அதை விற்கும் போது தாயாருக்கு அவர் சொன்ன வார்த்தைகள் அவனது காதுகளில் இப்போதும்

ஒலித்துக்கொண்டிருக்கின்றன. ‘‘இதை எனது தகப்பனாரின் நினைவாக வைத்திருக்கலாமென நினைத்தேன். எவ்வளவோ கஷ்டங்கள் வந்தபோதும் நான் இதைத் தொடவில்லை. எனது தந்தையார் என்மீது உயிரையே வைத்திருந்தார். அவரது நினைவாக இது என்றென்றும் நிலைத்திருக்குமென்று நினைத்தேன், முடியவில்லை. கஜேந்திரன் எனது தந்தையாரைப் போலவே இருக்கிறான். அவனது நடத்தைகளும் அவரையே ஒத்துள்ளன. அவனைப் பார்த்து எனது ஆசையை நிறைவேற்றிக் கொள்கிறேன்’’ என்று கூறிவிட்டு மோதிரத்தை விற்று சிறிதரனின் பரீட்சைப் பணத்தைக் கட்டினார்.

அன்று இரவு கஜேந்திரன் தந்தைக்கு உதவியாக மருத்துவமனையில் தங்கியிருந்தான். இரவு வெகுநேரம் வரை அவன் நித்திரை கொள்ளாது அவரது நெஞ்சுப்பகுதியை மெதுவாக வருடியபடி இருந்தான்.

கார்த்திகேயன் அவனைப் பார்த்துச் சிரித்தார்; ‘‘நான் உங்களைக் கஷ்டப்பட்டு அன்போடு வளர்த்த கஷ்டங்களையெல்லாம் இன்று மறந்துவிட்டேன். அதற்குக் காரணம் உங்கள் அன்பான பராமரிப்புத்தான். உங்கள் கைகள் என்மீது படும்போது நான் அடையும் இன்பத்தை வார்த்தைகளால் கூறமுடியாது. நெஞ்சில் ஏற்பட்ட வலி நீ தடவும்போது பஞ்சாகப் பறந்துவிட்டது. ஒரு தந்தைக்கு இன்பம் என்னவென்றால் தான் பெற்ற பிள்ளைகள் அருகில் இருந்து அன்பாக உபசரித்தலும், இனிமையாகப் பேசுவதும் தான். வளர்ந்து நீ ஒரு பிள்ளைக்குத் தந்தையானாலும் எனக்கு நீ குழந்தைதான். உனது அன்பான வார்த்தைகள் எனது செவிக்கு இன்பமளிக்கிறது. அதனால் எனக்கு வருத்தம் சுகமாகிவிட்டது’’ என்றார்.

கஜேந்திரன் பூரிப்புடன் சிரித்தான். கணேசராசா தன்னைத் தொட்டுவிளையாடும் வேளைகளில் உடலில் தோன்றும் இன்பமும், அவனது வார்த்தைகளால் மனதில் தோன்றும் குதூகலத்தையும் நினைத்துப் பார்த்தான். ‘‘எத்தனை வயது சென்றாலும் ஒரு தந்தைக்குப் பிள்ளைகள் குழந்தைகள் தான்’’ என்று தந்தையார் சொன்னதை நினைத்துப் பார்த்தான்.

மறுநாள் கார்த்திகேயன் மருத்துவமனையில் இருந்து சுகமாகி வீட்டுக்குச் சென்றார்.

65. மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்; மற்றுஅவர்
சொல்கேட்டல் இன்பம் செவிக்கு.

மக்களின் உடம்பைத் தொடுதல் உடலுக்கு இன்பம் தரும். அம்மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டல் செவிக்கு இன்பம் தரும்.

இனியது

கஜேந்திரன் தம்மை தந்தை வளர்த்த முறையை நினைத்துப் பார்த்தான். அவர் தனது இளமைக் காலத்தில் இன்பங்கள் எதனையும் அனுபவிக்கவில்லை. மூன்றுவேளை உணவைக்கூட அவர் ஒழுங்காக உண்ணவில்லை. அதனால் வேலை செய்யும் காலங்களில் பல தடவைகள் மயங்கி விழுந்திருக்கிறார். கோயில்களில் திருவிழாக் காலங்களில் இரவு வேளையில் உள்ளூர்களில் இருந்தும் வெளியூர்களில் இருந்தும் பிரபலமான மேளகாரர்களும், இசைக்குழுவினரும் வந்து கச்சேரி வைப்பார்கள். அவரது மனைவிக்கு இசைக்குழு பாடுவதைக் கேட்க மிகவும் பிடிக்கும். திருவிழாக் காலங்களில் அவள் நேரத்துடன் கோயிலுக்குச் சென்றுவிடுவாள். பிள்ளைகளும் அவளுடன் செல்லப் புறப்படும். பிள்ளைகளையும் அழைத்துச் செல்வதானால் தின் பண்டங்களுக்கு நூறு ரூபாவுக்கு மேல் தேவைப்படும். கார்த்திகேயன் எவ்வளவுதான் கஷ்டப்பட்டு உழைத்தாலும் அவரிடம் காசு தங்காது. அதனால் கோயிலுக்குச் செல்லும் பிள்ளைகளுக்குக் கொடுக்கப் பணம் அவரிடம் இருக்கமாட்டாது. அதனால் அவர் கையில் பணம் இருக்கும் வேளைகளில் கடலை வாங்கி வந்து வைத்திருப்பார். திருவிழாக் காலங்களில் அதை வறுத்து சுருளாகச் சுற்றி ஒவ்வொருவரது கைகளிலும் கொடுத்துவிடுவார். நடுச்சாம வேளையில் தேநீர் வைத்துக்கொண்டுபோய்க் கொடுப்பார்.

வீட்டில் இருந்து உற்சாகமாகப் புறப்படும் பிள்ளைகள் இரவு பத்து மணிக்கு நித்திரையாகி விடுவார்கள். கார்த்திகேயன் இரவு பத்து மணிபோல் கோயிலுக்குச் சென்று ஒவ்வொரு பிள்ளைகளையும் தூக்கிவருவார். அவருக்கு மேளக்கச்சேரி, இசைக்குழுவின் பாடலைக் கேட்க விருப்பம் இருந்தபோதும் மறுநாள் வேலைக்குச் செல்ல முடியாதே என்ற கவலையால் கோயிலுக்குச் செல்லாது விட்டுவிடுவார்.

ஒருமுறை இந்தியாவில் இருந்து பிரபலமான ஓர் இசைக்குழு வந்திருந்தது. பட்டணத்தில் பெரியளவில் இசைக்கச்சேரி நடைபெறுமென ஒலிபெருக்கியில் அடிக்கடி கூறிச் சென்றனர். ஒருவரின் நுழைவுக்கட்டணம் இருபது ரூபா. அவரது மனைவி அவரிடம் தான்சென்று அக்கச்சேரியைப் பார்க்கப்போவதாகக் கேட்டாள். அவள் அவரிடம் எதுகுமே கேட்பதில்லை. அவள் ஆசையாக ஏதாவது கேட்டால் அதற்கு பணம்தேட அவர் மிகுந்த கஷ்டப்படுவார் என்று தெரிந்ததால் அவள் கேட்பதில்லை.

ஊரில் உள்ள பல பெண்கள் அந்த இசை நிகழ்ச்சிக்குச் செல்வதால் தானும் செல்ல ஆசைப்பட்டுக் கேட்டாள். உடனே கார்த்திகேயன் சம்மதித்துவிட்டார்.

''வீட்டில் பிள்ளைகளுக்குத் துணையாக எனது அம்மாவும், அப்பாவும் இருக்கிறார்கள். நீங்களும் இசை நிகழ்ச்சிக்கு வாருங்கோவன். திருமணமான புதிதில் கோயில்களுக்கும், உறவினர் வீடுகளுக்கும் இரண்டு பேரும் சேர்ந்து சென்றனாங்கள். பத்துப் பதினைந்து வருடமாய் இருவரும் சேர்ந்து ஒரு இடமும் செல்லவில்லை'' என்றாள் ஆசையாக.

''ஏன் ஒவ்வொரு நாளும் தோட்டத்திற்குச் சேர்ந்துதானே செல்கிறோம். எனது பிள்ளைகள் நான்படும் கஷ்டத்தைப் படக்கூடாது என்பதுதான் எனது இலட்சியம். என்னுடைய பிள்ளைகள் வளர்ந்து நல்லாய் வந்த பிறகு இப்பொழுது அனுபவிக்காத எல்லாவற்றையும் நாம் அனுபவிப்போம். அந்த இசைக்குழு பாடுவதைவிட எனது ஆறு பிள்ளைகளும் அழுதால் அது எனக்கு இனிமையாக இருக்கும். நான் எல்லா இன்பத்தையும் எனது பிள்ளைகளூடாக இப்போது அனுபவிக்கிறேன். பாடசாலையில் ஆசிரியர்கள் அவர்களின் திறமைகளைப் பற்றிக் கூறுவதைக் கேட்டு என்றுமில்லா இன்பம் அடைகிறேன். ஊரவர் எனது பிள்ளைகளின் கெட்டித்தனங்களைக் கூறும்போது அதைவிட இன்பம் அடைகிறேன். பிள்ளைகள் வீட்டில் ஆடிப்பாடுவதைப் பார்த்துப் பேரின்பம் அடைகிறேன். அந்த இசைக்குழுவுக்குக் கொடுக்கும் காசிற்கு பிள்ளைகளுக்கு இனிப்பு வாங்கிக் கொடுக்கலாம். பிள்ளைகளின் அருமை பெருமை தெரியாதவர்கள் தான் யாழ் இனிது குழல் இனிது என்பார்கள்.''

''எனக்கும் பிள்ளைகளின் அருமை தெரியாது என்று சொல்கிறீர்களா...?''

''அப்படிச் சொல்லவில்லை. நீர் போயிற்று வாரும். என்னைத் திருமணம் செய்ததில் இப்படியானதோர் இன்பமாவது உமக்கு கிடைக்கட்டும்'' என்று சிரித்தார் கார்த்திகேயன்.

அதை நினைக்க கஜேந்திரனுக்கு உடல் புல்லரித்தது.

66. குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்

மழலைச்சொல் கேளா தவர்.

தம்மக்களின் இனிமையான மழலைச் சொல்லைக் கேட்டுச் சுவைக்காதவரே குழலின் இசை இனிது யாழின் இசை இனிது என்று கூறுவர்.

நன்றி

கோவை நகரில் ஆறுமுகம் என்றொரு பெரியார் வாழ்ந்து வந்தார். ஆசிரியரான அவர் மிகுந்த சமய நம்பிக்கை உடையவர். தான தர்மங்கள் செய்பவர். அவரின் தந்தையாரான கந்தையா தனது மகன் சைவப்பாடசாலையில் கற்க வேண்டுமென்பதற்காக அருகில் உள்ள பிரசித்தி பெற்ற கிறிஸ்தவ பாடசாலையைக் கடந்து ஆறுமுகநாவலர் கட்டிய பாடசாலையில் சேர்த்தார். க.பொ.த சாதாரண தரம் வரை நாவலர் பாடசாலையில் கற்ற ஆறுமுகம் பின் ஆசிரிய கலாசாலையில் இருவருடங்கள் பயிற்சிபெற்று ஆசிரியராகக் கடமை ஏற்றார். அவரது மனைவியும் ஆசிரியராக இருந்தார். அவர்களுக்கு திருமுருகன் என்றொரு மகன் பிறந்தான். திருமுருகன் இளமைக் காலத்திலேயே கல்வியில் மிகுந்த அக்கறை காட்டினான். வகுப்பில் முதல் மாணாக்கனாகத் திகழ்ந்தான். ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் கூறும் வேலைகளை மகிழ்வுடன் செய்வான்.

குருபூசை தினங்களில் நாயன்மார்களைப் பற்றிப் பேசுவான். அவனது நாவில் கலைமகள் குடியிருப்பதால் போலும் வார்த்தைகள் தங்கு தடையின்றி வெளியே வரும். நல்ல குரல்வளமிருந்ததால் சங்கீத கதா பிரசங்கத்தைக் கேட்டதுபோல் அமைதியாக இருந்து மாணவர்களும் ஆசிரியர்களும் கேட்பார்கள். திருமுருகனின் பேச்சில் கவர்ச்சி மட்டுமல்லாது ஆழ்ந்த கருத்துக்களும் இருக்கும். கடினமான தத்துவக் கருத்துக்களை மிகவும் எளிமையாக்கி பாமரர்கள் கூட விரும்பிக் கேட்குமளவிற்கு பேசுவதில் திருமுருகன் தேர்ச்சிபெற்றான்.

பல்கலைக்கழகக் கல்வியை முடித்துக்கொண்டு ஆசிரியப் பணியில் ஈடுபட்ட திருமுருகன் சமயப்பணிகள் பல செய்யத் தொடங்கினான். சிறுவயது முதல் சைவசமயத்தில் மிகுந்த பற்றுடைய திருமுருகன் ஆசிரியப் பணியில் ஈடுபட்ட பின் தீவிரமாக சமயப் பணியாற்றத் தொடங்கினார்.

அவரது நெற்றியில் திரிபுண்டரமாக எந்நேரமும் நீறு இருக்கும். சந்தணப் பொட்டின் மீது குங்குமம் வைத்து பிரசங்கம் செய்ய வரும் திருமுருகனைக் காண்போர் கைதூக்கித் தொழுவர்.

குழந்தையுள்ளம் கொண்ட திருமுருகன் குழந்தைகளோடு மிகவும் அன்பாகப் பழகுவார். அனாதைப் பிள்ளைகள் மீது உயிரையே வைத்திருந்தார். தனது சம்பளம் முழுவதையும் அனாதைப்

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகவே செலவிடுவார். அனாதை ஆச்சிரமங்களுக்கும், கோயில்களுக்கும் தன்னாலான உதவிகளைச் செய்வார்.

திருமுருகனது இனிமையான பிரசங்கத்தைக் கேட்ட சைவமக்கள் தத்தமது ஊர்களில் உள்ள கோயில்களில் திருமுருகனை அழைத்து சமயப் பிரசங்கங்கள் செய்வித்தனர். திருமுருகன் பிரசங்கம் செய்யும் கோயில்களில் மக்கள் வெள்ளம் கரைபுரண்டது.

சான்றோர்கள் ஊரில் நடைபெறும் விழாக்களில் திருமுருகனை அழைத்து பிரசங்கங்கள் செய்வித்தனர். ஆலயங்களும், பெரிய நிறுவனங்களும் திருமுருகனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தன.

பாடசாலை, தனது கிராமம் என இருந்த திருமுருகனது புகழ் யாழ்ப்பாண மாவட்டத்தையும் கடந்து இலங்கை பூராகவும் பரவியது. இலங்கை முழுவதிலுமுள்ள பிரசித்தி பெற்ற தலங்கள், பழமை வாய்ந்த கோயில்கள், புகழ்பூத்த சமய நிறுவனங்கள் யாவும் போட்டிபோட்டு திருமுருகனின் பிரசங்கத்தை ஒழுங்கு செய்தன. பிரசங்கம் முடிந்ததும் அவரைக் கௌரவித்தன.

திருமுருகனின் புகழ் தாய்நாட்டை விட்டு கடல்கடந்த நாடுகளிலும் பரவியது. கனடா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் வாழும் சைவ அபிமானிகள் திருமுருகனின் பேச்சை ஏற்பாடு செய்து கேட்டு மகிழ்ந்தனர். அவரின் பேச்சைக் கேட்டு மகிழ்ந்த மக்கள் அன்பளிப்புச் செய்த பணத்தையும், பொருட்களையும் ஆலயங்களின் புனரமைப்பிற்கும், அனாதைச் சிறுவர்களின் பராமரிப்புக்கும், வைத்தியசாலைகளுக்கும் கொடுத்து வருகிறார். அண்மையில் பட்டணத்தில் உள்ள போதனா வைத்தியசாலைக்கு உலகில் உள்ள சான்றோரின் உதவி பெற்று பல இலட்ச ரூபா பெறுமதியான இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரத்தை அன்பளிப்புச் செய்துள்ளார்.

உலகில் சைவமும் தமிழும் கற்றறிந்த அறிஞர் யார்? என்று கேட்டால் திருமுருகன் என்று சொல்லுமளவிற்கு அவரின் புகழ் ஓங்கியுள்ளது.

67. தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து

முந்தி யிருப்பச் செயல்.

தந்தை மகனுக்குச் செய்யும் நல்லுதவி, கற்றவர் மத்தியில் தன் மகன் முந்தியிருக்கும்படியாக அவனை கல்வியில் மேன்மை அடையச் செய்தலாகும்.

தம்மிலும் இனியது

நாராயணமூர்த்தியின் ஏகபுத்திரன் சுமித்திரன். நாராயணமூர்த்தி சுமித்திரனின் கல்வியில் அதிக அக்கறை காட்டினார். சுமித்திரனுக்கு ஐந்து வயது நடைபெறும்பொழுது அவனது தாய் சிவகாமிப்பிள்ளை புற்றுநோய் காரணமாக இறந்துவிட்டார். அவள் இறப்பதற்கு சில தினங்களுக்கு முன்பு தனது கணவனை அழைத்துச் சொன்னாள்; ‘‘என்மீது அளவில்லாத பாசத்தைக் கொண்டுள்ள நீங்கள் நான் இறந்ததும் மறுமணம் செய்துகொள்ளல் வேண்டும். திருமணமாகி இரண்டு வருடங்கள் நாம் இன்பமாக வாழ்ந்தோம். அதன்பின் என்னால் உங்களுக்கு துன்பங்களும், துயரங்களும், பணச் செலவுகளும்தான் வந்தது. எந்த விதமான இன்பத்தையும் நீங்கள் என்னால் பெறவில்லை. ஒருபெண் தனது கணவனுக்கு பணிவிடை செய்வது தான் பாக்கியம். பேரின்பம். அதன் மூலம் அவளுக்கு சுவர்க்கம் கிடைக்கும். இங்கு நீங்கள் தான் எனக்கு பணிவிடை செய்கிறீர்கள். இதனால் என் மனம் துன்பமடைகிறது. அதற்காக எனக்கு நரக வாழ்வுதான் கிடைக்கும்’’ அழுதாள் சிவகாமி.

நாராயணமூர்த்தி அவளைத் தேற்றினான். ‘‘ஓர் அன்பான இல்வாழ்வான் தன் மனைவியை தனது தாயைப் போல பாதுகாத்தல் வேண்டும். கணவனுக்கு வரும் துன்பமானது குடும்பத்தைப் பாதிப்பது போல் மனைவிக்கு வரும் துன்பங்களும் குடும்பத்தைப் பாதிக்கத்தான் செய்யும். நீர் அதற்காக கவலை கொள்ளாது இரும். துன்பங்களில் பெரும்பான்மையானவை எம் விதிவசத்தால் வந்து சேர்கின்றன.’’

‘‘உண்மைதான் நான் பெரும் பாவங்கள் செய்துவிட்டேன்’’ அழுதாள்.

‘‘அழாதையும்...’’ கலங்கினான் நாராயணமூர்த்தி.

‘‘இனிமேல் நீங்கள் துன்பப்படக்கூடாது. நான் இறந்ததும் நல்லதொரு பெண்ணைப் பார்த்து திருமணம் செய்யுங்கள்.’’

சிவகாமி தனக்கு புற்றுநோய் என்று தெரிந்த பின்பு தினமும் பலமுறை இதையே கூறிக்கொண்டிருந்தாள். ஆனால் நாராயணமூர்த்தி எதுகும் பேசுவதில்லை.

சிவகாமி இறந்த பின் நாராயணமூர்த்தி சுமித்திரனை மிகவும் அன்போடு வளர்த்தார். அவன் கல்வியில் கெட்டிக்காரனாக இருந்தான். உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவானான்.

ஐந்து வருடங்களின் பின் மருத்துவக் கல்வியை முடித்து வெளியேறிய சுமித்திரனின் நண்பர்கள் அனைவரும் வசதியான இடங்களைத் தேர்ந்தெடுக்க, சுமித்திரன் மட்டும் வசதிகள் குறைந்த தனது சொந்தக்கிராமத்தைத் தேர்ந்தெடுத்தான்.

அவனது கிராமத்தில் சிறியதொரு மருத்துவமனை இருந்தது. ஆனால் மருந்து வகைகளோ மருத்துவரோ அங்கு இல்லை. அந்தக் கிராமத்தில் வைத்தியசாலை இல்லாமையால் பாம்பினால் கடியுண்ட தனது மகனைக் காப்பாற்ற முடியாமல் போனதற்காக நாராயணமூர்த்தியின் பேரனார் சிவானந்தமூர்த்தி அம் மருத்துவமனையை தனது மகனின் நினைவாகக் கட்டிக்கொடுத்தார். அம் மருத்துவமனையைக் கட்டிய காலத்தில் அயலூரில் இருந்த மருத்துவர் ஒருவர், சிவானந்தமூர்த்தி பலமுறை கேட்டதன் பேரில் வேற்றூரில் இருந்து அவர் இடமாற்றம் பெற்று அங்குவந்து கடமையாற்றினார். அவர் ஓய்வு பெற்ற பின் பல வருட காலம் மருத்துவர் இல்லாது மூடப்பட்டிருந்த அம் மருத்துவமனை நாராயணமூர்த்தியின் பெருமுயற்சியால் திறக்கப்பட்டது. வைத்தியர் ஒருவரும் நியமிக்கப்பட்டார்.

வசதிகள் குறைந்த அக்கிராமத்து மருத்துவமனையில் அவர் கடமையாற்ற விரும்பாததனால் அவரும் மூன்று வருடங்களுக்கு முன்பு இடமாற்றம் பெற்றுச் செல்ல மீண்டும் அம் மருத்துவமனை மூடப்பட்டது. சுமித்திரன் படிக்கும் போது நாராயணமூர்த்தி ‘‘உனது பேரனார் கட்டிய மருத்துவமனையில் தான் நீ கடமையாற்ற வேண்டும். வெகு தூரத்திலுள்ள அயற் கிராமத்தில் மருத்துவமனை இருந்தும் மருந்தும் மருத்துவர்களும் இல்லாததால் தனது மகன் இறந்தமைக்காக எனது பேரனார் மருத்துவமனையை எமது கிராமத்தில் கட்டினார். எமது வம்சத்தால் கட்டப்பட்ட அம் மருத்துவமனை இனி மூடப்படக் கூடாது. நீ மருத்துவன். உனது படிப்பு எனக்கு உதவுவதை விட ஊருக்கு உதவுவதையே நான் விரும்புகிறேன். ஒருவன் தான் கற்ற கல்வியால் பணத்தையும், பொருளையும் தேடுவதை விட மக்களின் மதிப்பைத் தேடுவதுதான் மேலானது’’ என்று சொல்வார். அதன்படி சுமித்திரன் அம் மருத்துவமனைக்கு மருத்துவராக நியமிக்கப்பட்டான்.

போதிய வசதிகளும் மருந்துகளும் இல்லாதிருந்த அம் மருத்துவமனையை முன்னேற்றுவதற்கு நாராயணமூர்த்தியும் அவ்வூர் மக்களும் பெரும் உதவிகள் செய்தனர். சிறிது காலத்தில் அம் மருத்துவமனை புதுப்பொலிவு பெற்றது.

சுமித்திரன் நோயாளர்களுடன் அன்போடு உரையாடினான். ஊரவர்களைத் தனது உறவினர்கள் போல் மதித்தான். அதனால் ஊர்மக்கள் அவனைத் தெய்வமாக மதித்தனர். அவனது புகழ் அயற்கிராமங்களுக்கும் பரவியது. அயற்கிராம மக்களும் அம் மருத்துவமனையை நாடி வந்தனர். நாட் செல்லச் செல்ல வேறும் பல இடங்களில் இருந்து நோயாளர்கள் வரத் தொடங்கினர். தூர இடங்களில் வசிப்போர் அம் மருத்துவமனைக்கு அருகில் உள்ள நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் முதல் நாளே வந்து தங்கியிருந்து சிகிச்சை பெற்றனர். உறவினர், நண்பர்கள் இல்லாதோர் கோயில்களிலும், மடங்களிலும் தங்கியிருந்து சிகிச்சை பெற்றனர். சுமித்திரனின் கை பட்டாலே நோய்கள் யாவும் மாறிவிடும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்ததால் நாளுக்கு நாள் நோயாளிகளின் தொகை அதிகரித்துக்கொண்டு வந்தது. பெரும் பெரும் பிரமுகர்கள் அங்கு சிகிச்சை பெற வந்தனர். அதை உணர்ந்த சுமித்திரன் அவ்வூரில் உள்ள பெரியவர்களினதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உதவியைப் பெற்று மருத்துவமனைக் கட்டடங்களை விஸ்தரித்தான். அரசாங்கம் மருத்துவர்களையும், ஊழியர்களையும், மருந்து வகைகளையும் கொடுத்துதவியது. மக்கள் மிகவும் மகிழ்வுடன் வாழ்ந்தனர்.

68. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து

மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.

தம் மக்களின் அறிவுடைமை, தமது குடும்பத்தினருக்கு இன்பம் பயப்பதைவிட உலகத்து உயிர்களுக்கெல்லாம் இன்பம் பயப்பதே சிறப்பானது.

பெருமகிழ்வு

சரஸ்வதியின் ஆறாவது புத்திரன் ஞானசம்பந்தன். அவளது கணவன் ஆறுமுகவரதன் விவசாயம் செய்து வந்தான். பெரும் சோம்பேறியான அவனை இயக்குவது சரஸ்வதிதான். வேலைகளுக்கு ஒழுங்காகச் செல்லமாட்டான். கஷ்டப்படுத்தி தோட்டத்திற்கு அனுப்பினாலும் அங்கு சரியாக வேலை செய்யமாட்டான். சிறிது நேரம் தோட்ட வேலைகளைச் செய்வான். பலமணி நேரம் தோட்டக் கிணற்றடியில் இருந்து இளைப்பாறுவான். இளைப்பாறும் வேளைகளில் பெரும்பாலும் நித்திரையாகிவிடுவான். சரஸ்வதி அவன் வேலை

செய்கிறான் என நினைத்து உணவு கொண்டு வரும்போது அவன் நித்திரையாக இருப்பான். அது அவளுக்குக் கவலையைக் கொடுக்கும். அவள் நித்திரையாக இருக்கும் கணவனைத் தட்டி எழுப்பிச் சாப்பாடு கொடுப்பாள். அவன் சாப்பிட்ட பின்பு சொல்வாள் ‘‘இன்று வீட்டில் அரிசி கொஞ்சம் கூட இருக்கவில்லை. பக்கத்து வீட்டில் கடன் வாங்கிச் சமைத்தேன். அவர்களும் மனமிரங்கித் தருவதில்லை. மற்றவர்களைப் போல் நீங்களும் கடுமையாக உழையுங்கள்’’ என்பாள்.

இவை ஒன்றும் அவனுக்கு ஏறாது. சாப்பிட்டுவிட்டு மீண்டும் படுத்துவிடுவான். இதனால் சரஸ்வதியே கஸ்டப்பட்டு தோட்டத்தில் வேலை செய்வாள். தோட்டத்தில் பயிரான காய்கறிகளைப் பறித்து விற்று அவன் குடித்துவிடுவான். அதனால் சரஸ்வதிக்கு பெரும் கஷ்டமாக இருக்கும். ஐந்து பெண்பிள்ளைகளுக்கும் உணவு, உடுபிடைவை, கல்விச்செலவுகளைச் சமாளிக்க முடியாது கஷ்டப்படுவாள்.

இந்நிலையில் மீண்டும் சரஸ்வதி கர்ப்பமுற்றாள். அது அவளுக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தது. இருந்தும் கடவுள் காப்பாற்றுவார் என்றிருந்தாள்.

ஐந்து பெண் பிள்ளைகளைப் பெற்ற சரஸ்வதிக்கு ஆறாவதும் பெண்பி பிள்ளையாகப் பிறந்துவிடுமோ என்ற கவலை வாட்டிக்கொண்டிருந்தது.

பங்குனி மாதத்தில் திருவோண நட்சத்திரத்தில் ஞானசம்பந்தன் பிறந்தபோது சரஸ்வதியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஞானசம்பந்தன் சிறுவயது முதல் கல்வியில் சிறந்து விளங்கினான். பாடசாலையில் சிறந்த ஒழுக்கமுள்ளவன் என்று பெயரெடுத்தான். வயதில் மூத்தவர்களையும், ஆசிரியர்களையும் கண்டால் எழுந்து மரியாதை செய்வான். பெரியவர்களின் முன் ஆசனத்தில் அமரமாட்டான். எதைப் பெற்றுக் கொண்டாலும் நன்றி சொல்வான். பொய் பேசமாட்டான். இதனால் அவனுடன் படிக்கும் மாணவர்களுக்கும் இவனுக்கும் இடையில் பிரச்சினைகள் வரும்.

ஒருநாள் ஆரூரன் என்ற மாணவன் விளையாட்டுப் போட்டிக்காகக் கொண்டுவந்த பணத்தை யாரோ திருடிவிட்டார்கள். அன்று ஆசிரியரும், அதிபரும் அப்பணத்தை எடுத்தவர் யார் எனக் கேட்டபோதும் யாரும் தாம் எடுத்ததாக ஒப்புக்கொள்ளவில்லை. ஏதோ ஒரு வகையில் ஞானசம்பந்தனுக்கு நக்கீரன் மீது சந்தேகமிருந்தது. அதை அவன் அதிபருக்குச் சொன்னான்.

அதிபர் நக்கீரனை சற்றுக் கடுமையாக விசாரித்த போது நக்கீரன் தான் அப்பணத்தை எடுத்ததாக ஒப்புக்கொண்டான். அதனால் அதிபர் ஞானசம்பந்தனைப் பாராட்டினார். சிறுவயதில் இருந்தே

ஞானசம்பந்தனுக்கு பலவற்றையும் அவதானிக்கும் தன்மையும், மற்றையோரை சமாதானம் செய்து வைக்கும் தன்மையும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் தன்மையும் இருந்தது.

வீட்டின் வறுமை நிலை காரணமாக அவனால் உயர் கல்வியைத் தொடர முடியவில்லை. அதனால் சிறியதொரு கடையைத் தனது ஊரில் நடாத்தி வந்தான்.

ஞானசம்பந்தனின் நேர்மையான குணத்தைத் தெரிந்துகொண்ட மக்கள் அவனிடமே தமது பொருட்களைக் கொள்வனவு செய்தனர்.

சிறிது காலத்தில் ஞானசம்பந்தனின் கடை மொத்த விற்பனை நிலையமாக மாறியது. மாவட்டம் முழுவதற்கும் தேவையான பொருட்களை இறக்குமதி செய்து விநியோகம் செய்யுமளவிற்கு வளர்ந்துவிட்டது.

ஞானசம்பந்தன் தனது ஐந்து சகோதரிகளுக்கும் நல்ல இடங்களில் திருமணம் செய்துகொடுத்தான். தானும் தன் மாமன் மகளை மணந்துகொண்டான்.

ஊரில் உள்ள கோயில்கள், சனசமூக நிலையங்கள், தரும சபைகள், சமாதான சபை போன்றவற்றிற்கு தலைவன் ஞானசம்பந்தன் தான். பிரச்சினைகளில் ஈடுபடும் இரு தரப்பினரும் ஏற்றக்கொள்ளும் வகையில் தீர்ப்புகள் வழங்குவான். அவனது தீர்ப்பை விமர்சிப்பதற்கு யாரும் இருக்கமாட்டார்கள்.

அன்று அவ்வூரில் வசிக்கும் சுதாகரனுக்கும் அவனது மனைவி பூரணிக்கும் இடையில் பெரும் பிரச்சினை வந்து தீர்ப்புக்காக ஞானசம்பந்தனிடம் வந்தனர். சுதாகரன் திருமணமாகி பத்து வருடங்கள் கழிந்தும் அவர்களுக்குப் பிள்ளை பிறக்கவில்லை. அதனால் பூரணியை விவாகரத்துச் செய்துவிட்டு இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்ய விரும்பினான். பெரும் தனவந்தனான அவன் பூரணிக்கு பல இலட்ச ரூபா நட்ட ஈடாக கொடுக்க முன்வந்தான். பூரணி அதை ஏற்கவில்லை.

ஞானசம்பந்தன் யோசித்துப் பார்த்தார். பின்பு சுதாகரனுக்குச் சொன்னார்; “நாம் இந்துக்கள். கடவுள் நம்பிக்கை உடையவர்கள். எல்லாம் விதிப்படி நடப்பதாக நம்புபவர்கள். அதைவிட எமக்குக் கிடைப்பவை எல்லாம் எமது முற்பிறப்பில் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்பவே கிடைக்கின்றன என நம்புகிறவர்கள். இதைவிட மருத்துவ ரீதியாகப் பார்த்தால் கணவன், மனைவி இருவரும் குறைகள் இன்றி இருந்தால் தான் குழந்தை பிறக்கும். நீ இன்னொரு திருமணம் செய்து அவளுக்கும் பிள்ளை பிறக்காவிட்டால் என்ன செய்வாய்? மீண்டும் இன்னொரு திருமணம் செய்வாயா…? இதைவிட நீ பணக்காரன். பரிசோதனைக் குழாய் மூலம் ஒரு

குழந்தையைப் பெற்றெடுக்கலாம். இல்லாவிட்டால் ஒரு குழந்தையைத் தத்தெடுக்கலாம். உனது சகோதரி ஒருத்திக்கு இந்நிலை வந்தால் என்ன செய்வாய்? எனவே ஒரு மருத்துவரிடம் ஆலோசனை பெறு'' என்றார்.

சுதாகரன் எதுகும் பேசவில்லை. ஞானசம்பந்தனிடம் விடைபெற்றுச் சென்றான். நான்காவது நாள் அவன் மட்டும் ஞானசம்பந்தனைக் காணவந்தான். ''ஐயா நீங்கள் பெரிய தருமவான். சான்றோன் என்பதை நிரூபித்துவிட்டீர்கள். நானும் மனைவியும் மருத்துவரிடம் சென்று சோதித்துப் பார்த்தோம் என்னில் தானாம் பெருங்குறை உள்ளது. இது தெரியாமல் பெரும் பழி செய்ய இருந்த என்னைக் காப்பாற்றிவிட்டீர்கள்'' என்றான்.

ஞானசம்பந்தனது சேவையை மெச்சி ஊர்மக்கள் பெருவிழா எடுத்தனர். அதில் ஊர்ப்பிரமுகர்கள், பெரியவர்கள் எல்லோரும் அவனது சான்றோன்மையைப் பற்றியே பேசினர். சரஸ்வதியின் உள்ளம் பெரு மகிழ்வு கொண்டது.

69. ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

தன்மகனை சான்றோன் எனப்பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனைப் பெற்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியை விடப் பெரிதும் மகிழ்வாள்.

உதவி

நக்கீரன் பெரியதொரு தொழில் அதிபர். அவரின் தொழிற்சாலையில் நூற்றுக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலைசெய்து வந்தனர். நக்கீரனின் மனைவி கோசலை. இரக்கமில்லாதவள். தொழிலாளர்களிடமிருந்து எவ்வளவு வேலை வாங்க முடியமோ அவ்வளவு வேலைகளையும் வாங்குவாள். நக்கீரன் நல்லவன். இரக்க சுபாவம் மிக்கவன். ஆனால் மனைவிக்குப் பயந்தவன். மனைவியின் சொல்லை மந்திரமாக ஏற்பவன்.

தொழிற்சாலையில் நக்கீரனைக் கண்காணிப்பதற்காக கோசலை சிலரை நியமித்திருந்தாள். நக்கீரன் இரக்க சுபாபமுடையவன். தனது

தொழிற்சாலையில் வேலை செய்யும் கதிரமலை என்ற தொழிலாளியின் மகனுக்கு கடுமையான சுகவீனம் வந்துவிட்டது. அதனால் கதிரமலை பல நாட்களாக வேலைக்கு வரவில்லை. அவனுக்கு சம்பளம் வழங்கவேண்டாமென்று கோசலை உத்தரவிட்டிருந்தாள். கதிரமலை நக்கீரனிடம் வந்து விஷயத்தைச் சொல்லி அழுதான். இரக்கப்பட்ட நக்கீரன் தான் வைத்திருந்த பணத்தில் ஒரு தொகையை கதிரமலைக்குக் கொடுத்தான். அவ்விஷயம் எப்படியோ கோசலைக்குத் தெரிந்துவிட்டது. அதனால் இருவருக்குமிடையில் பெரிய பிரச்சினை ஏற்பட்டது.

இதை அறிந்த நக்கீரனின் தகப்பனார் பாலசுப்பிரமணியம் நக்கீரனை அழைத்துச் சொன்னார்; ‘‘மகனே நாம் சம்பாதிப்பது அனுபவிப்பதற்காக. சேமித்து வைப்பதற்கல்ல. மனிதருள் பெரும்பான்மையானோர் சேமித்து வைத்து எதிர்காலத்தை சிறப்பாக வாழவேண்டுமென்று நினைக்கிறார்கள். சேமித்து தமது பிள்ளைகளை நல்லபடி வாழவைக்க வேண்டுமென்றும் நினைக்கிறார்கள். மனிதர்களைத் தவிர மற்றைய உயிர்கள் பெரும்பாலும் சேமிப்பதில்லை. அதற்காக அவை வாழாமல் இருப்பதும் இல்லை. மனிதன் அறிவுடையவன். பொன் பொருளைச் சேமிப்பதை விட புண்ணியத்தைச் சேமித்தல் வேண்டும். நான் சேர்த்த சொத்துக்களின் பெரும் பகுதியை உன்னிடம் ஒப்படைத்ததன் நோக்கமே நீயும் புண்ணியம் செய்யவேண்டும் என்பதற்காக. பொருள் முயற்சி செய்தால் எக்காலத்திலும் வந்துசேரும். ஆனால் புண்ணியத்தை நாம் அந்தந்த வேளைகளில் தான் செய்தல் வேண்டும். அன்று நீ கதிரமலைக்கு உதவி செய்யாதிருந்தால் அவனது மகன் இறந்தும் இருக்கலாம். அந்த உயிரை பின் உன்னால் காப்பாற்ற முடியுமா...?’’

‘‘என்னால் எதுகும் செய்ய முடியாமல் இருக்கிறது அப்பா. கோசலை எதையும் செய்யவிடுகிறாள் இல்லை. நான் ஏதாவது செய்தால் சண்டைக்கு வருகிறாள். பிரச்சினையாக இருக்கிறது. நிம்மதி குலைகிறது’’ என்று அழுதான்.

‘‘மனைவியை நாம் மதித்து நடக்கவேண்டுமே தவிர கீழ்ப்படிந்து நடத்தல் கூடாது. தொழிற்சாலை நான் உனக்குத் தந்த சொத்து. அதை நிர்வகிக்க வேண்டியவன் நீ. சிவநாயகத்தின் மகன் கேசவனைப் பார். அவனும் உன்னைப் போல் ஒரு தொழில் அதிபர். எவ்வளவு தானதர்மம் செய்கிறான். தொழிலாளர்களை அன்பாக நேசிக்கிறான். அவர்களுக்கு கடன் கொடுக்கிறான். தொழிலாளர்களின் பிள்ளைகள் நன்றாகப் படித்தால் ஊக்குவிக்கிறான். பரிசுகள் கொடுக்கிறான். தொழிலாளர்கள் நோயுற்ற வேளை அவர்களைச் சென்று பார்க்கிறான். அவர்களுக்கு உதவிகள் செய்கிறான். சென்ற வாரம் உனது மனைவியின் தொல்லைகளால் வேலையை விட்டுச் சென்ற சிவபாலன் கேசவனின் தொழிற்சாலையில் வேலைக்குச்

சேர்ந்துள்ளானாம். நேற்று என்னைச் சந்தித்தான். கேசவனைப்பற்றி மிகவும் உயர்வாகச் சொல்கிறான். ‘‘சிவநாயகம் பெரும் தவமிருந்து தான் கேசவனைப் பெற்றிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவு நற்குணங்கள் இராது’’ என்று அவன் சொல்வதைக் கேட்க எனக்கு மிகவும் துக்கமாக உள்ளது. நான் தொழிற்சாலையை நடத்தும் போது தொழிலாளர்கள் இன்பமாக வாழ்ந்தனர். அதனால் எனது தந்தையார் மகிழ்ந்தார். எனது தந்தையை தொழிலாளர்கள் போற்றிப் புகழ்ந்தனர். இப்பொழுது என்னை இகழ்கின்றனர். இது எனக்கு வேதனையைத் தருகிறது. எனவே தொழிற்சாலையின் பொறுப்பை நீ ஏற்று நடத்து’’ என்றார்.

நக்கீரன் எதுகும் பேசவில்லை. தந்தையிடம் விடைபெற்றுச் சென்றான். அவர் கூறியது மந்திரமாக அவனின் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது. வீட்டுக்கு வந்த நக்கீரன் கோசலையை அழைத்துச் சொன்னான்; ‘‘நீ இனிமேல் தொழிற்சாலைக்குச் செல்ல வேண்டாம். தொழிற்சாலையின் பொறுப்புக்கள் யாவற்றையும் நான் ஏற்றுக் கொள்கின்றேன்.’’

கோசலை ஆவேசத்துடன் ஏதோ சொல்ல முயன்றாள்.

‘‘நீ எனக்கு எதுகும் சொல்லத் தேவையில்லை. இது எனது தந்தையின் தொழிற்சாலை. அவர் விரும்பியபடிதான் நடத்துதல் வேண்டும். இதில் தலையிட உனக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை. மீறித் தலையிட்டால் நீ பிறந்த வீட்டுக்குத்தான் செல்லவேண்டிய நிலை ஏற்படும்...’’ கோபமாக வெளியேறிய வார்த்தைகளினால் நிலைகுலைந்து போனாள் கோசலை.

நக்கீரன் தகப்பனின் ஆலோசனைப்படி தொழிற்சாலையை நிர்வகிக்கத் தொடங்கினான். அதனால் தொழிலாளர் மகிழ்ந்தனர். வருமானம் அதிகரித்தது. அதிகரித்த வருமானம் முழுவதையும் தொழிலாளர்களின் நன்மைக்காக செலவு செய்தான். தொழிலாளர் அவனையும், அவனது தந்தையையும் புகழ்ந்தனர்.

70. மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்.

மகன் தன் தந்தைக்குச் செய்யும் கைம்மாறு, இவனுடைய தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தாரோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும்.

தாழ்

நாராயணசாமிக்கு நான்கு ஆண்பிள்ளைகள். நால்வரும் நன்கு கற்று நல்ல தொழிலில் இருந்தனர். நாராயணசாமி மிகவும் நேர்மையானவர். அடுத்தவர்களின் பொருளுக்கு ஆசைப்படாதவர். தனது பொருட்களை கேட்பவர்களுக்கெல்லாம் கொடுப்பவர். கடுமையாகப் பேசத் தெரியாதவர். கோபம் என்பது அவருக்கு வராது. அவர் தனது சொந்த ஊரான பருத்திமலையில் விவசாயம் செய்துவந்தார். விவசாயம் மூலம் வரும் வருமானம் குடும்பத்தை நல்ல முறையில் நடத்தப் போதுமானதாக இருந்தது. அவரிடம் ஏராளமான மாடுகள் நின்றன. அவற்றை அவர் தோட்டத்திலே கட்டுவார். அவற்றின் மூலம் கிடைக்கும் எரு அவரின் தோட்டத்திற்கு போதுமானதாக இருந்தது.

அவரது தோட்டத்திற்கு அருகில் மணியம் என்பவன் விவசாயம் செய்து வந்தான். அவன் பகலில் கூலி வேலைக்குச் செல்வான். இரவில் தான் தோட்டவேலைகள் செய்வான். இரவில் களவெடுப்பது அவனது தொழிலாகும். நாராயணசாமி இரவில் மாடுகளை பட்டியில் கட்டிவிட்டு சென்றபின் பட்டியில் உள்ள எருவை கடகங்களில் அள்ளி வந்து தனது தோட்டத்துள் போடுவான். அத்துடன் நாராயணசாமி நடும் பயிர்களையே தானும் நடுவான். பயிர்கள் காய்த்து முற்றும் வேளைகளில் இரவில் சென்று அவற்றைப் பறித்து தனது பயிர்களுக்குள் வைத்துவிடுவான். வியாபாரிகள் கொள்முதல் செய்யவரும் வேளைகளில் நாராயணசாமியிலும் பார்க்க கூடுதலான விலைக்கு மணியம் விற்பான். அவன் தனது விளைபொருட்களைக் களவாடி விற்கிறான் என்று நாராயணசாமிக்குத் தெரிந்தபோதும் அவர் ஒருபோதும் அவனைக் கேட்டதில்லை.

மணியம் நாராயணசாமியின் இனத்தவன் அல்ல. தனக்கு அருகில் தோட்டம் செய்வதால் அவன் கேட்கும் உதவிகளைச் செய்வார். எனினும் அவர் அவனின் வீட்டுக்குச் செல்வதில்லை. அதேபோல் தனது வீட்டிற்கும் அவனை அழைப்பதில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்பு மணியத்தின் தாயார் காலமான போது அவர் அங்கு சென்றார். பின் மணியம் தாயாரின் ஆத்மசாந்திக் கிரிகைக்குச் சொன்னபோது அவர் அதற்குச் செல்லவில்லை.

ஊர்மக்கள் நாராயணசாமியை மதித்து நடந்தனர். பொது விசயங்களில் அவர் ஏதாவது சொன்னால் யாரும் தட்டுவது கிடையாது. அவர் தமது வீட்டுக்கு வருவதை அவ்வூர் மக்கள் பெரும் பாக்கியமாகக் கருதி வந்தனர். அவர் யாருடனும் கோபிப்பவரல்ல. தனக்கு விருப்பமானவர்களின் வீட்டு விசேஷங்களுக்கு

சொல்லாவிட்டாலும் செல்வார். தனக்குப் பிடிக்காதவர்கள் தமது வீடுகளில் நடைபெறும் சடங்குகளுக்கு சொன்னாலும் செல்லமாட்டார்.

மணியம் தனது மூத்த மகளின் திருமணத்தை மிகவும் விமரிசையாகச் செய்தான். ஊரில் உள்ள அனைவருக்கும் அவன் திருமண அழைப்பிதழைக் கொடுத்திருந்தான். நாராயணசாமிக்கும், தனது சகோதரர்களுக்கும் மட்டும் தானே நேரில் சென்று அழைப்பிதழைக் கொடுத்தான். எனினும் நாராயணசாமி திருமணத்திற்குச் செல்லவில்லை.

அவரின் மனைவி விசாலாட்சி ஒப்புக்காவது சென்று வருமாறு வற்புறுத்திக் கூறியும் அவர் செல்லவில்லை. இது மணியத்திற்குப் பிடிக்காதபோதும், அதைக் காட்டிக்கொள்ளாது பழகிவந்தான்.

இந்நிலையில் நாராயணசாமியின் நான்காவது மகன் நக்கீரன் மணியத்தின் இரண்டாவது மகளான காயத்திரியை விரும்பினான். காயத்திரி நல்ல அழகி. பார்ப்பவர்களை மீண்டும் ஒருமுறை பார்க்கச்சொல்லும் ஒரு வசீகரம் அவளின் முகத்தில் குடிகொண்டிருந்தது. இருவரினதும் காதல் உறவை அறிந்த நாராயணசாமி தனது மகனை அழைத்துச் சொன்னார்; ‘‘மகனே நான் காதலுக்கு எதிரானவன் அல்ல. காதலிப்பது குற்றம் என்றும் நான் கருதவில்லை. பொன், பொருள், காணி, பூமியல்ல வாழ்க்கை. அன்புதான் வாழ்க்கை. குடும்பத்தில் பரஸ்பரம், அன்பு நிலவினால் உலகத்தில் உள்ள எல்லாப் பொருட்களும் எமது காலடியில் கிடக்கும். திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர். எமது பிற் சந்ததியினர் நல்ல முறையில் உருவாக வேண்டுமானால் நல்ல குடும்பத்தில் பெண் எடுத்தல் வேண்டும். நீ விரும்பும் பெண்ணின் தகப்பன் இரவிரவாக களவெடுக்கிறான். பகலில் கோயில்களில் பொங்கிப் படைக்கிறான். ஊரில் அவனை யாரும் மதிப்பதில்லை. ஒருவனுக்கு ஏற்பட்ட வடு பரம்பரை பரம்பரையாகத் தொடரும்’’ என்றார்.

நக்கீரன் தகப்பனின் சொல்லைக் கேளாது மணியத்தின் மகள் காயத்திரியைத் திருமணம் செய்தான். இதை நாராயணசாமி எதிர்பார்க்கவில்லை. பெரும் துயரமடைந்தார். அன்றுடன் நக்கீரனை குடும்பத்தில் இருந்து விலக்கி வைத்தார். நாராயணசாமியின் குடும்பத்தினர் எவரும் நக்கீரனோடு உறவு வைப்பதில்லை. இந்நிலையில் பத்து வருடங்கள் கழிந்துவிட்டன.

நக்கீரனின் தாய் விசாலாட்சி காலமானாள். தாயைப் பார்ப்பதற்காக வந்த நக்கீரனை நாராயணசாமி தடுக்கவில்லை. மரணவீடு முடிந்ததும் நக்கீரனை வீட்டைவிட்டு வெளியேறுமாறு அவனது சகோதரர்கள் வற்புறுத்தினர்.

நக்கீரன் தாயாரின் ஆத்மசாந்தி கிரிகைகள் நடைபெறும் நாள்வரையும் வீட்டில் தங்குவதற்கு சகோதரர்களிடம் அனுமதி கேட்டான். அவர்கள் அதற்கு மறுத்துவிட்டனர்.

“அப்பா நீங்கள் விரும்பாததைச் செய்ததற்கான தண்டனையை நான் கடந்த பத்து வருடங்களாக அனுபவித்துவிட்டேன். குடும்பத்தில் ஒழுக்கம் முக்கியமானது. உயிரிலும் மேலானது என்று எனக்குத் தெரியும். ஆனால் மனம் விரும்பிப் பழகிய ஒருத்திக்கு துரோகம் செய்ய என்னால் முடியவில்லை. நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. காயத்திரியின் பெற்றோர்களுடனும் பெரிதாக உறவு வைத்துக்கொள்ளவில்லை. எனினும் ஊரவர்கள் என்னை மதிப்பதில்லை. இதனால் நான் செய்த தவறை உணர்ந்துவிட்டேன். என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளுங்கள்” என்று அழுதான்.

நாராயணசாமியின் பாறையாக இறுகிய இதயம் சற்று இளகியமையால் கண்கள் நனைந்தன. அதை மற்றவர்கள் பார்க்காதவாறு மறுபக்கம் திரும்பினார். எனினும் உணர்வுகளை அவரால் மறைக்க முடியவில்லை.

71. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்

புன்கண்நீர் பூசல் தரும்.

அன்பை அடைத்து வைக்கக்கூடிய தாழும் உண்டோ...? அன்புடையவரின் கண்களில் ஊறும் நீர் அன்பை யாவரும் அறிய வெளிப்படுத்தும்.

அன்புடையர்

ஞானசம்பந்தன் சிறந்த ஓர் ஆசிரியர். தனது சொந்தக் கிராமமான பாறையூரில் உள்ள ஒரு பாடசாலையில் ஆங்கில மொழி கற்பித்து வந்தார். சிறு வயதிலிருந்தே ஆங்கில மொழியில் அவருக்கு அலாதியான ஒரு பிரியம். அதனால் ஆங்கில மொழியை விரும்பிக்கற்று தேர்ச்சியடைந்தார். ஆசிரிய நியமனம் கிடைத்த பின்பும் அவர் பல ஆங்கில நூல்களைத் தேடிக் கற்றுவந்தார். பல்கலைக்கழகம் நடாத்திய ஆங்கிலத்தையே போதனா மொழியாகக் கொண்ட பட்டப் படிப்பைப் படித்து பட்டதாரியானார். அத்துடன்

நின்றுவிடாது ஆங்கிலமொழியில் முதுதத்துவமாணிப் பட்டமும் பெற்றார்.

தன்னைத் தேடிவரும் மாணவர்களுக்கு எந்த வேளையிலும் சிரமத்தைப் பாராது பாடம் சொல்லிக் கொடுப்பார். ஓய்வான வேளைகளில் வேளாண்மை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவ்வூரில் வாழும் விவசாயிகள் மிகவும் வறியவர்கள். படிப்பறிவு இல்லாதவர்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்காகத்தான் ஞானசம்பந்தன் வேளாண்மை செய்து வந்தார். ஏழை விவசாயிகள் விதைதானியங்களைச் சேமிப்பது குறைவு. அப்படிச் சேமித்தாலும் விதிமுறைப்படி சேமிக்க மாட்டார்கள். ஞானசம்பந்தன் விதிமுறைக்கமைய விதைதானியங்களைச் சேமித்து வைப்பார். பின் தனக்குத் தேவயானவற்றை எடுத்துக்கொண்டு மிகுதியானவற்றை தேவையான மக்களுக்குக் கொடுப்பார்.

அந்த வருடம் மழை மிகவும் குறைவாகப் பெய்தமையால் பயிர்கள் பெரும்பாலும் அழிந்துவிட்டன. ஞானசம்பந்தன் நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் நீர் பாய்ச்சி நல்ல விளைச்சலைப் பெற்றார். நீர் இறைக்கும் இயந்திரத்திற்குப் பாவிக்கப்படும் மண் எண்ணெய்க்கு அப்போது தட்டுப்பாடு நிலவியதால் விவசாயிகள் கூடிய விலைக்கு எண்ணெய் வாங்க முடியாமல் பயிர்ச் செய்கையை இடையிலேயே கைவிட்டுவிட்டனர்.

அடுத்த வருட பயிர்ச்செய்கைக்காக ஊரில் உள்ள அனைவரும் விதைதானியத்திற்காக ஞானசம்பந்தனை நாடி வந்தனர். தன்னை நாடிவந்த அனைவர்க்கும் ஞானசம்பந்தன் விதை தானியங்களைக் கொடுத்தார்.

ஞானசம்பந்தனது தோட்டநிலங்கள் அவ்வருடம் உழப்படவில்லை. அதனால் ஊரில் உள்ள சிலர் அவரை நாடிவந்து காரணம் கேட்டனர்.

“என்னிடம் விதைப்பதற்கு விதைதானியம் இல்லை. அதனால் உழவில்லை. நான் அரசாங்கத்திடம் இருந்து சம்பளம் பெறுகிறேன். நீங்கள் அப்படியல்ல. நீங்கள் சீவிக்க வேண்டுமானால் பயிர்செய்தல் வேண்டும்” என்றார்.

கலைமகள் ஞானசம்பந்தனின் ஏகபுதல்வி. அழகானவள். பெண்மைக்குரிய பண்புகள் நிறைந்தவள். அவளை அவ்வூரில் வாழும் பெரும் பணக்காரரான அருணாசலத்தின் மகன் ஆரூரன் திருமணஞ் செய்ய விரும்பினான். ஆரூரன் பட்டணத்தில் உள்ள அரச மருத்துவமனையொன்றில் வைத்தியராகப் பணிபுரிந்து வந்தான். ஆரூரன் மிகவும் ஒழுக்கமானவன். அதனால் அவனைத் திருமணஞ் செய்ய பலர் போட்டி போட்டனர்.

சிவநாதன் அருணாசலத்தின் தங்கையின் கணவன். ஞானசம்பந்தன் கற்பிக்கும் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிபவன். அத்துடன் ஞானசம்பந்தனின் நண்பன். அருணாசலம் தனது மகனுக்கு கலைமகளைத் திருமணஞ்செய்ய விரும்பினார். அதனால் ஞானசம்பந்தனுடன் ஒன்றாகக் கற்பிக்கும் சிவநாதனிடம் அதைப்பற்றிக் கதைத்தார். தனது மகளை ஆரூரனுக்குத் திருமணம் செய்ய நினைத்திருந்த சிவநாதனுக்கு அருணாசலத்தின் கதை பேரிடியாக இருந்தது. எனவே ஞானசம்பந்தனிடம் சென்றார்.

''ஞானசம்பந்தா ஆரூரனின் தாய்மாமன் நான். எனது மகளை ஆரூரன் திருமணஞ் செய்வானென நம்பியிருந்தேன். ஆனால் அவன் உனது மகளைத் திருமணஞ் செய்ய விரும்புகிறான். நான் அவ்வளவு வசதியானவன் அல்லவென்று உனக்குத் தெரியும். நீ பெண் கொடுக்க மறுத்தால் அவன் கட்டாயம் எனது மகளைத் தான் திருமணம் செய்வான். அருணாசலம் முன்பு எனது மகளைத்தான் தனது மகனுக்கு செய்வதாகச் சொன்னவர்...'' என்றார்.

''நீங்கள் பயப்படத் தேவையில்லை. நான் கடைசி வரையும் ஆரூரனை மாப்பிளையாக எடுக்கமாட்டேன். நீங்கள் நம்பலாம்'' என்றார் ஞானசம்பந்தன்.

மறுநாள் அருணாசலம் மனைவியுடன் ஞானசம்பந்தனின் வீட்டுக்கு வந்தார். ஞானசம்பந்தன் அவர்களை அன்போடு வரவேற்றார்.

''ஐயா உங்கள் மகளை எனது மகனுக்கு பெண்கேட்டு வந்திருக்கிறேன்'' என்றார் அருணாசலம்.

''ஐயையோ... எனது மகளுக்கு இன்னொருவரை நிச்சயித்துவிட்டேன்'' என்றார் ஞானசம்பந்தன்.

அதை அருணாசலம் எதிர்பார்க்கவில்லை. அதனால் சற்றுத் தடுமாறிப் போனார். அச்செய்தி அருணாசலத்தின் மனைவிக்கு சந்தோஷத்தை அளித்ததை ஞானசம்பந்தன் கண்டுகொண்டார்.

மிகச்சிறந்த அறிவாளியும், குணவானுமான ஞானசம்பந்தனின் குடும்பத்தோடு உறவு வைக்க முடியவில்லையே என்ற கவலையோடு விடைபெற்றார் அருணாசலம்.

72. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு.

அன்பில்லாதவர்கள் எல்லாப் பொருட்களையும், தம்பொருள் என உரிமை கொண்டாடுவர். அன்புள்ளவர்கள் தமது உடலால் பிறருக்கு சேவை செய்து வாழ்வர். (உடலுறுப்புக்களையும் தானமாக வழங்குவர்.)

தொடர்பு

வலியத் தேடிச்சென்று அருணாசலம் ஞர்னசம்பந்தனை பெண் கேட்டபோது அவர் மறுத்த விடயம் சிவநாதனுக்குத் தெரிந்த போது அவன் உருகிப்போனான். இவ்வளவு பெரிய குணம் உள்ளவர் ஞர்னசம்பந்தன் என அவன் நம்பவில்லை. தனது மகனுக்கு அருணாசலத்தின் மகளைச் செய்யவேண்டும் என்ற கோரிக்கையை அவர் ஞானசம்பந்தனுக்குச் சொல்லிப் பார்ப்போம் என்று நினைத்துச் சொன்னாரே தவிர நம்பிக்கையுடன் சொல்லவில்லை. எவ்வளவுதான் அன்புடனும், பண்புடனும் பழகினாலும் தமது சொந்த விடயத்தில் ஞானசம்பந்தன் விட்டுக்கொடுக்க மாட்டாரென்று நினைத்தார். அவரது நினைப்புக்கு மாறாக ஞானசம்பந்தன் நடந்துகொண்டமை அவருக்குப் பெருமகிழ்வைக் கொடுத்தது. அதனால் அவரது வீட்டுக்கு மனைவியுடன் வந்தார்.

வீட்டுக்கு வந்த சிவநாதனையும் மனைவியையும் அன்புடன் வரவேற்றார் ஞானசம்பந்தன். “ஐயா, சொந்தச் சகோதரர்கள் கூட செய்யமுடியாத பெரியதொரு உதவியை நீங்கள் செய்துவிட்டீர்கள். அருணாசலம் எனக்கு மகள் பிறந்தன்றே தனது மகனுக்குத்தான் அவளைச் செய்வதென்று சொன்னார். பின்பு ஏனோ மனம் மாறிவிட்டார். எனது மனைவியின் சகோதரனான அவரே மனம்மாறிய போது நீங்கள் எம் மாத்திரம் என்று நினைத்தேன். ஆனால் நீங்கள் மனம் மாறாது எனக்குச் சொன்னபடி நடந்ததை நினைக்க மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது” என்றார் சிவநாதன். அவரின் கண்கள் கலங்கின.

“சிவநாதன், நான் உங்களோடு பல வருடங்களாக ஒன்றாகக் கற்பிக்கின்றேன். அத்துடன் இருவரும் மிகவும் அன்பாகவும், பண்பாகவும் பழகி வருகிறோம். உலகில் யாவற்றையும் பெற்றுக்கொள்ளலாம். பணம், பொருள், பொன், மண் யாவும் ஒரு மனிதனுக்கு இன்பத்தைத் தரமாட்டாது. அன்புதான் இன்பத்தைத் தரும். அதை நன்கு உணர்ந்தவன் நான். அதனால் தான் உங்கள் மீது கொண்ட அன்பை நான் இழக்க விரும்பவில்லை. அதனால் தான் மறுத்தேன். இல்லறம் என்பது பலரது ஆசியோடும், வாழ்த்தோடும் நடத்துவது. நான் எனது மகளை அருணாசலத்தின் மகனுக்குத்

திருமணம் செய்து கொடுத்தால் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் என்மீது வெறுப்படைவீர்கள். மணமக்களை வாழ்த்துவதற்குப் பதிலாகத் திட்டுவீர்கள். இதனால் எனது மகளின் வாழ்வு நாசமாகிவிடும். அதனால் தான் மறுத்தேன்'' என்றார் ஞானசம்பந்தன்.

''நீங்கள் செய்த உபகாரத்தை நான் கடைசி வரையும் மறக்கமாட்டேன். நல்லவர்கள் மீது நாம் கொள்ளும் அன்பு ஏழேழு பிறப்புக்கும் தொடர்ந்து வரும் என்று நம் பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. உங்கள் மகளுக்கும் விரைவில் நல்ல இடத்தில் திருமணம் நடக்கும்'' என்றார் சிவநாதன்.

ஞானசம்பந்தன் மகிழ்வுடன் சிரித்தார். ''நாம் நல்ல முறையில் அனைவரிடமும் அன்பு பூண்டு வாழ்ந்தோமேயானால் எம்மீதும் சகலரும் அன்பு வைப்பர். அதனால் எமது வாழ்வு சிறக்கும் என்று நினைப்பவன் நான். அத்துடன் இறைவன் அன்பே மயமானவன். அதனால் தான் 'அன்பே சிவம்' என்று கூறுகிறார்கள். அன்பே வடிவான எம் கடவுள் அன்பே உருவான எனது மகளுக்கு சிறந்ததொரு வாழ்வை அளிப்பார் என்ற நம்பிக்கை இருந்ததனால் தான் நான் மறுத்தேன்.''

''நான் சென்று வருகிறேன்'' என்ற சிவநாதன் ஞானசம்பந்தனின் கைகளைப் பிடித்து தனது கண்களில் ஒத்தினார்.

வாரம் ஒன்று கழிந்தது. சிவநாதன் ஞானசம்பந்தனின் வீட்டுக்கு வந்தார். ''ஞானசம்பந்தன் நல்லதொரு மாப்பிளை எனது இனத்தவர் ஒருவரிடம் இருக்கிறார். மாப்பிளை மருத்துவராகத் தொழில் செய்கிறார். நான் உங்கள் அருமை பெருமைகளைக் கூறியபோது உடன் ஒப்புக்கொண்டுவிட்டார். அதைச் சொல்லத்தான் நான் வந்தேன். நீங்கள் விரும்பினால் உடன் திருமணத்தை முடிக்கலாம்'' என்றார்.

''அரும்பொருளான உயிர்களுக்கு உடலோடு இணைந்த தொடர்பானது, அது அன்புடன் இணைந்து வாழ்ந்த வாழ்வின் பேறு என்று அறநூல்கள் கூறுகின்றன. அது மெய்யானதென்று எமது வாழ்வு புரிய வைத்துள்ளது. மிகவும் நன்றி சிவநாதன்'' என்றுகூறி சிவநாதனை அணைத்தார் ஞானசம்பந்தன்.

73. அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு

என்போடு இயைந்த தொடர்பு.

அருமையான உயிருக்கு உடலோடு இணைந்து இருக்கின்ற உறவு, அன்போடு இணைந்து வாழ்ந்த வாழ்வின் பயன் என்று கூறுவர் பெரியோர்.

பெரும் சிறப்பு

சுந்தரமூர்த்தி அவ்வூரில் வாழும் பிரபல சித்த மருத்துவர். முற்காலத்து சித்த மருத்துவர்கள் மூலிகைகளை மட்டும் கொண்டே வைத்தியம் செய்பவர்கள். அத்துடன் சோதிடத்திலும் வல்லுனர்களாகத் திகழ்ந்தனர். சுந்தரமூர்த்தி தன்னிடம் வைத்தியம் பார்க்க வருவோர் நடந்துவரும் நடையில் இருந்தே அவர்களைப் பற்றிப் பீடித்திருக்கும் நோயின் தன்மையைக் கண்டறிந்துவிடுவார். அத்துடன் அவ்வூரில் வாழும் மக்கள் அனைவரினதும் சாதகக் குறிப்பை அவரே எழுதியுள்ளார். அத்துடன் காலத்திற்குக் காலம் கிரகநிலை பற்றி அறியவரும் மக்களுக்கு அவர்களது சாதகக் குறிப்பைப் பார்த்துக் கணித்து எதிர்காலப் பலன்களைப் பற்றி விரிவாகச் சொல்வார். பரிகாரம், தோச நிவர்த்தி செய்ய வேண்டுமானால் அதைப்பற்றியும் விரிவாகச் சொல்வார். அதன்படி மக்கள் செய்து குணமடைவர்.

அவ்வூர் மக்கள் மட்டுமல்லாது அயல் ஊர்களில் வாழும் மக்களும் அவரிடம் வந்து மருத்துவ சிகிச்சை பெற்றும், சோதிடம் பார்த்தும் செல்வதுண்டு. சோதிடம் பார்ப்பதற்கோ அல்லது மருத்துவ சிகிச்சைக்கோ அவர் ஒருபொழுதும் கைநீட்டிப் பணம் பெற்றதில்லை.

தில்லையம்பலம் அவரது மருத்துவ உதவியாளன். கசாயம் காய்ச்சுவது, எண்ணெய் காய்ச்சுவது, மூலிகைகளை அரைப்பதுடன் நோயாளர்களுக்கு சுந்தரமூர்த்தி எழுதும் மருந்து வகைகளை சரை கட்டியும், போத்தல்களில் ஊற்றியும் கொடுப்பான். அவற்றைக் கொடுக்கும் போது எப்படி அவற்றை குடிக்க வேண்டுமென்று விளக்கமாகக் கூறுவான்.

நாகலிங்கம் சுந்தரமூர்த்தியினது சோதிட உதவியாளன். பஞ்சாங்கத்தைப் பார்த்து கிரகநிலை, நவாம்சநிலைகளைக் குறித்துக் கொடுப்பது, சாதகத்தில் கிரகங்கள் நிற்கும் இடங்களைக் கணித்துக் குறிப்பெடுத்து சுந்தரமூர்த்திக்குக் கொடுப்பது அவனது தொழில். ஓய்வான நேரங்களில் சுந்தரமூாத்தி வளர்க்கும் ஆடுமாடுகளுக்கு தீனி வைப்பான். அத்துடன் மருந்து வாங்குபவர்களும் சோதிடம் பார்ப்பவர்களும் விரும்பினால் நாகலிங்கத்திடம் பணம் கொடுப்பார்கள். இதைவிட கமம் செய்வோர் தம் தோட்டங்களில் பயிராகும் காய்கறி வகைகளையே மருத்துவக் கூலியாகக் கொடுப்பார்கள். அவ்வூரில் பெரும்பான்மையானோர் விவசாயிகள். அதனால் தேவைக்கு

அதிகமாகக் கிடைக்கும் பொருட்களை நாகலிங்கம் சந்தையில் கொண்டுசென்று விற்பான்.

அருளினி சுந்தரமூர்த்தியின் ஒரே மகள். தகப்பனிடம் முறையாக மருத்துவமும் சோதிடமும் பயின்றவள். நல்ல அழகி. தர்மராஜன் சுந்தரமூர்த்தியின் தாய்மாமனின் மகன். இளமைக் காலத்தில் இருவரும் ஆத்ம நண்பர்களாக இருந்தவர்கள். தர்மராஜன் தனது தங்கையை சுந்தரமூர்த்திக்கு திருமணஞ் செய்துவைக்க விரும்பினான். ஆனால் சுந்தரமூர்த்தி தனது வீட்டுக்கு அருகில் வசித்து வந்த தெய்வானையைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டான். அதனால் இருவருக்கிடையிலும் பெரும் பகை மூண்டது. சுந்தரமூர்த்தி திருமணம் செய்தபின் தர்மராஜன் தனது குடும்ப உறவை அறுத்துக்கொண்டான். அத்துடன் சுந்தரமூர்த்தியைக் காணும் இடங்களில் சண்டைக்கும் சென்றான்.

தர்மராஜன் மீது சுந்தரமூர்த்தி கோபம் கொள்ளவில்லை. அவன் அடித்தாலும் திருப்பி அடிக்காமல் சென்றார். அது தர்மராஜனுக்கு வாய்ப்பாகப் போய்விட்டது. கோயில் திருவிழாக்கள், ஊரார், இனத்தவர்களின் மங்கல, அமங்கல வைபவங்களில் சுந்தரமூர்த்தி கலந்துகொண்டால் அவருடன் வலியச் சண்டைக்குச் சென்று அவரைத் தாக்குவான். இது பொதுவாக ஒருவருக்கும் பிடிப்பதில்லை. எனினும் அவனைக் கண்டிக்கத் தைரியமின்றிப் பேசாதிருந்தனர். இதனால் தர்மராஜனின் அடாவடித்தனம் படிப்படியாகக் கூடியது.

அன்று அவ்வூரில் வாழும் வேலாயுதபிள்ளையின் மகளின் திருமண நாள். மாப்பிளை அயலூரில் உள்ள கிராமசேவையாளன். திருமணம் மிகவும் கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. மணமக்கள் அம்மி மிதித்துவிட்டு வேள்வித்தீயை வலம் வந்துகொண்டிருந்தனர். அப்பொழுது சுந்தரமூர்த்தி அங்கே வந்தார். தர்மராஜன் எழுந்து பலமாக ஏசியபடி அவரை அடிப்பதற்காகச் சென்றான்.

“டேய் தர்மராஜா, எனது வீட்டில் கலாட்டாச் செய்ய உனக்கு என்ன உரிமை இருக்கிறது. சுந்தரமூர்த்தி இந்த ஊருக்கு மட்டுமல்ல, அயலில் இருக்கும் பல ஊர் மக்களுக்கும் தெய்வம் போன்றவர். அவரைத் தொட்டியென்றால் உன்னைக் கொலை செய்வன்” வேலாயுதபிள்ளையின் மாப்பிளை கர்ச்சித்தான்.

தர்மராஜனின் கோபம் வேலாயுதபிள்ளையின் மாப்பிளையின் பக்கம் திரும்பியது. “என்னடா சொன்னனீ... ஊரில் உள்ளவன் கதைத்தாலும் பரவாயில்லை. வந்தான் வரத்தானுக்கு இந்தளவு திமிர்...”

“தர்மராஜா இனிமேல் ஊரில் நடக்கும் எந்த வைபவத்திற்கும் உனக்குச் சொல்லமாட்டம். நாங்கள் சீரும் சிறப்புமாய் செய்யும் சுபநிகழ்வுகளிலை வந்து குழப்புறாய். மரியாதையாய் வெளீலை போ... இல்லையென்றால் கொலை விழும்...”

தர்மராஜா திரும்பிப் பார்த்தார். திருமணப் பந்தலில் இருந்த நூற்றுக் கணக்கானோர் கத்தி பொல்லுகளுடன் அவரைச் சூழ்ந்து நின்றனர்.

“எமக்கு சுந்தரமூர்த்தி தான் தேவை. நீ பொழுது சாயுமுன்பு உன்னுடைய குடும்பபத்துடன் ஊரைவிட்டு வெளியேறி விடவேண்டும். இல்லாவிட்டால் உன்னுடைய குடும்பத்தை வீட்டுள் பூட்டிக் கொழுத்துவோம்...”

“அவனை எனக்காக மன்னித்து விடுங்கோ... நான் உங்கள் எல்லோர் மீதும் அன்பு வைத்துள்ளேன். அந்த அன்புக்காக விடுங்கள்” சுந்தரமூர்த்தி கரங்குவித்தார்.

ஒருவரும் எதுகும் பேசவில்லை. தர்மராஜன் நிலை குலைந்துபோய் நின்றான்.

“சுந்தரமூர்த்தி ஐயாவுடைய நட்பான வேண்டுகோளுக்காக உன்னை விர்றம். இனிமேல் அவருடன் சண்டைக்குப் போனால் உன்னைக் கொலை செய்வன்...” கோபத்துடன் கத்தினான் வேலாயுதபிள்ளையின் மாப்பிளை.

தர்மராஜா தலையைக் குனிந்தபடி திருமண மண்டபத்தை விட்டு வெளியேறினான். அதன் பின் அவன் ஊரவர்களின் எந்த நிகழ்வுகளிலும் கலந்து கொள்வதில்லை.

74. அன்புஈனும் ஆர்வம் உடைமை; அதுஈனும்

நண்புஎனும் நாடாச் சிறப்பு.

அன்பு எல்லோரிடமும் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும். அந்த அன்பு, நட்பு என்ற அளவற்ற சிறப்பினையும் தரும்.

வாழ்வின் பயன்

தர்மராஜன் தனது மனைவியுடன் சுந்தரமூர்த்தியின் வீட்டுக்கு வந்திருந்தான். அவனைச் சற்றும் எதிர்பாராத சுந்தரமூர்த்தி சற்றுத் தடுமாறிப் போனார். எனினும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அவர்களை அன்புடன் வரவேற்று ஆசனத்தில் அமர்த்திவிட்டு நாகலிங்கத்தை அழைத்துச் சொன்னார்; "பஞ்சாங்கத்தை எடுத்து சுபநேரத்தைப் பார்... இருபத்தைந்து வருடங்களுக்குப் பிறகு எனது மைத்துனனும், மனைவியும் வீட்டுக்கு வந்திருக்கிறார்கள். நல்ல வேளையில் தான் அவர்களுக்கு குடிப்பதற்கு ஏதாவது கொடுத்தல் வேண்டும்..."

"இதென்ன மச்சான் கதை. என்னுடைய தாய்மாமன் வீட்டை வந்திருக்கிறன். இதுக்கெல்லாம் நாள்கோள் பார்க்கத் தேவையில்லை."

"அப்படிச் சொல்லக்கூடாது. தினமும் வருகை தரும் உற்றாரும் உறவினர்களும், நண்பர்களும் கூட வருடம் பிறந்து முதல்முறை வருகை தருவதானால் நாள், நேரம் பார்த்துத்தான் வருதல் வேண்டும். இது எமது சமூக மரபு. நீ இருபது வருடங்களுக்குப் பிறகு வருகை தந்திருக்கிறாய்..." என்றார் சிவசுந்தரமூர்த்தி.

"அன்று முழுவதும் அட்டமி. இவன் ஏன் வந்திருக்கிறான். தெரிந்து வந்தானோ தெரியாமல் வந்தானோ ஐயாவுக்கு இன்ற முழுவதும் அட்டமி என்று தெரியும். பிறகேன் என்னை அழைத்து சுபநேரம் பார்க்கும்படி கூறினார்..." நாகலிங்கம் குழம்பினான்.

"இன்று முழுவதும் அட்டமி" மெதுவாக சுந்தரமூர்த்தியிடம் கூறிவிட்டு நாகலிங்கம் தலையைக் குனிந்துகொண்டான். அவன் தலை குனிந்தால் அவ்விஷயம் சரிப்பட்டு வராது என்று அர்த்தம். அது சுந்தரமூர்த்திக்குத் தெரியும்.

சுந்தரமூர்த்தி தடுமாறுவதைக் கண்ட தர்மராஜன் சொன்னான்; "மச்சான் என்றாலும் சோதிடன் வீட்டை வரேக்கை நாள் பார்த்துத்தான் வரவேணும். ஆனால் எனக்கு உந்தச் சோதிடங்களிலை நம்பிக்கை இல்லை. அதாலை வந்திட்டன். ஏன் நாள் சரியில்லையே...?"

"இன்று முழுவதும் அட்டமி நிக்குது. அட்டமியிலை தொட்ட விஷயம் நாசமெண்டு சொல்லப்பட்டிருக்கு."

"சரி... சரி... அப்ப தண்ணிவென்னியொண்டும் வேண்டாம். உங்கடை நம்பிக்கையை ஏன் கெடுப்பான். நான் ஒரு நல்ல விஷயமாய் வந்தனான். சந்திரன் தான் கட்டினால் அருளினியைத்தான்

கட்டுவன் என்று நிக்கிறான்... இதெல்லாத்தையும் பிறகு கதைப்பம்... நான் வாறன்...'' என்று எழுந்தான் தர்மராஜன்.

சுந்தரமூர்த்தி நிலைகுலைந்து போனார். தனது திருமணத்தால் முறிந்த உறவு, தன் மகளின் திருமணத்தால் மோசமாகப் பாதிக்கப்படப் போகிறது என்பதை நினைக்க அவருக்கு தலை சுற்றியது. தர்மராஜன் வீட்டுக்கு வராவிட்டாலும் அவனுக்கு பிள்ளைகள் பிறக்கும்போது நேரத்தைக் குறித்து வைத்து சாதகத்தைக் கணிப்பிட்டுப் பார்த்தார் சுந்தரமூர்த்தி. அதன்படி அவனது ஆயுள் இருபத்தெட்டு வயதுடன் முடிவடைகிறது. தற்பொழுது அவனுக்கு இருபத்தேழு வயது நடைபெறுகிறது.

''இருபத்தெட்டு வயதோடை ஆரூரனின் ஆயுள் முடியுது. இவன் அதை அறிந்து தான் வந்திருப்பன். அற்ப ஆயுள் திருமணத்தின் மூலம் உங்களைப் பழிவாங்கவும் நினைப்பான்...'' என்றான் நாகலிங்கம்.

எனக்கு குழப்பமாக இருக்கு. விருப்பமில்லை என்று சொல்லிவிடலாம். இதாலை வீண் சண்டைகள் வரும். எனது திருமணத்தாலை இருபது இருபத்தைந்து வருடங்களாகப் பிரச்சினை இருந்து வந்தது. இப்ப ஒருமாதிரி தணிந்திட்டுது. மகளின் திருமணத்தையும் மறுத்தால் இன்னும் இருபது வருடத்திற்குப் பிரச்சினையாய் இருக்கும்...''

''அதுக்காக பிள்ளையின்ரை வாழ்க்கையைக் கெடுக்க முடியுமே...'' என்றார் நாகலிங்கம். சுந்தரமூர்த்தியால் எதுகும் பேச முடியவில்லை. அதனால் நாகலிங்கம் தொடர்ந்து சொன்னார்; ''உள்ளதை உள்ளபடி சொல்லி விடுங்கோ. நாளைக்கு நான் தூக்கி வளர்த்த பிள்ளை கண் கலங்கிறத்தை என்னாலை பார்க்கேலாது. உங்களாலை சொல்ல முடியாட்டில் சொல்லுங்கோ நான் சொல்லுறன்...''

''எல்லாம் விதிப்படிதான் நடக்கும். அருளினிக்கும் இருபத்தொரு வயதிலை ஒரு கண்டமிருக்கு. ஆனால் பெரும் பாதிப்பில்லை. அது இதுபோலை தான் கிடக்கு.''

அன்று திங்கட்கிழமை. தர்மராஜனும், மனைவியும், ஆரூரனும் சுந்தரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தனர். அன்று அருளினிக்கும், ஆரூரனுக்கும் திருமண நிச்சயார்த்தம் நடைபெற்றது. அதன்பின் ஆரூரன் தினமும் சுந்தரமூர்த்தியின் வீட்டுக்கு வந்து செல்வான். ஒருநாள் இரவு அவன் வெகுநேரமாகியும் வீட்டுக்குச் செல்லவில்லை. அதனால் சுந்தரமூர்த்தி அவனிடம் வந்து சொன்னார் ''தம்பீ,

நேரமாகிவிட்டது. வீட்டுக்குப்போ. திருமணம் முடிய முன்பு முறை மாப்பிளையானாலும் பெண்ணின் வீட்டில் தங்குவது அழகல்ல...''

ஆரூரன் எதுகும் பேசாது சென்றுவிட்டான். அதன்பின் அவன் அங்கு வரவே இல்லை. தான் சொன்னது பிடிக்காததால் தான் ஆரூரன் வரவில்லை என நினைத்த சுந்தரமூர்த்தி திருமண நாளைக் குறிப்பதற்காக தர்மராஜனின் வீட்டுக்குச் சென்றார்.

தர்மராஜன் சுந்தரமூர்த்தியை வேண்டாவெறுப்பாக வரவேற்றான். ''உங்கள் மகள் எனது மகனை மதிப்பதில்லை. அவன் தினமும் வந்தபோதும் ஏறெடுத்துக் கூடப் பார்ப்பதில்லை. அதனால் ஆரூரனுக்கு இந்தச் சம்மந்தத்தில் விருப்பமில்லாமல் இருக்கு. அதோடு சீதனத்தைப் பற்றி எதுகும் பேசவில்லை... எவ்வளவு தருவியள்...''

''என்னட்டை என்ன மச்சான் இருக்கு. உள்ளதெல்லாம் அவளுக்குத் தானே...''

''இரண்டு இலட்சம் ரூபா காசாய் தரவேணும். நகை, வீடுவளவு...''

''காசாய்த் தர என்னட்டை ஒரு சதமும் இல்லை... நீ முன்னுக்கே சீதனம் கேட்டிருந்தால் நான் மறுத்திருப்பன். கலியாணம் முற்றானாப் பிறகு மாப்பிளை வீட்டை வந்து போனவர். இப்ப சீதனம் கேட்டால்''

''நீ என்ன ஊரவரைக் கொண்டு எனக்கு அடிப்பிச்சனி. அதுக்குப் பழிவாங்கத்தான் இப்படிச் செய்தனான். உன்ரை மோளை இனிப் பார்த்துக்கொண்டிரு...''

சுந்தரமூர்த்தி எழுந்தார். ''என்னை கடவுள் ஒருபோதும் கைவிடமாட்டார் என்பதற்கு உதாரணம் இந்தக் கலியாணம். உனது மகனுக்கு இருபத்தெட்டு வயதிலை கண்டமிருக்கு. அவன் இன்னும் ஆறுமாதம் தான் உயிர் வாழ்வான். திருமணத்தை தட்டிக்கழிக்க முடியாமல் அவதிப்பட்டனான். கடவுள் என்னைக் காப்பாற்றிவிட்டார். அதாலை தான் இருவரையும் நான் கதைக்க விடேல்லை. இந்த விஷயமெல்லாம் சங்கரப்பிள்ளைக்குத் தெரியும். அவருடைய மகனை அருளினிக்குச் செய்யிறதாய் எப்பவோ தீர்மானிச்சிட்டன். உன்ரை மகன்ரை ஆயுள் நீடிக்க பிராயச்சித்தம் செய்யவேணும். தொண்ணூறு நாளைக்கு சிவனுக்கு விரதமிருந்து அர்ச்சனை செய். சுகம் வரும்'' என்று கூறிவிட்டுச் சென்றார் சிவசுந்தரமூர்த்தி. தர்மராஜன் சிலையாக அமர்ந்திருந்தான்.

75. அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து

இன்புற்றார் எய்தும் சிறப்பு.

உலகில் இன்பமாக வாழ்கின்றவர்கள் அடையும் சிறப்பு, எல்லோரிடத்தும் அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று அறிஞர் கூறுவர்.

அன்பே துணை

நவபுரம் அடர்ந்த காட்டின் எல்லைப் புறத்தில் உள்ள விவசாயக் கிராமம். அங்கு மழையை நம்பியே மக்கள் விவசாயம் செய்துவந்தனர். புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் அக்கிராமத்தில் நல்ல மழை பெய்யும். மழை நீரைக் குளங்களில் தேக்கி வைத்திருந்து கோடை காலங்களில் சிறுபயிர்களை அக்கிராம மக்கள் பயிரிடுவார்கள். பெரும்பான்மையான விவசாயிகள் தமக்குத் தேவையான காய்கறி வகைகளையும், தானிய வகைகளையுமே பயிரிடுவர். குரக்கன், சாமை, எள்ளு, கடலை, உழுந்து போன்ற தானியங்களைப் பயிரிட்டு தமது தேவைக்காக சேமித்து வைப்பர். இது தவிர காட்டுள் சென்று தேனைச் சேகரிப்பார்கள். காட்டில் உள்ள பழவகைகளையும் சேகரிப்பர்.

இதனால் அங்கு ஒருபொழுதும் உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதில்லை. கிராமத்தில் உள்ள அனைவரும் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர். அக்கிராமத்தில் எந்த நிகழ்வு நடைபெறுவதாக இருந்தாலும் அவ்விடத்தில் அனைவரும் ஒன்றுகூடி நிற்பர். விவசாயம் செய்யும் காலங்களில் தமது உறவினர்கள் அல்லது நண்பர்களுடன் கூட்டுச்சேர்ந்து வேலைகளைச் செய்வார்கள். அங்கு கூலியாகப் பணம் கொடுக்கப்படுவது இல்லை. பிறரைக் கொண்டு தாம் செய்வித்த வேலைக்காக அவர்களுக்கு வேலை செய்து கொடுப்பார்கள். அல்லது அதற்குப் பெறுமதியான தானியங்களைக் கொடுப்பார்கள்.

கோடை காலத்தில் பெரும்பாலான விவசாய நிலங்கள் தரிசு நிலங்களாகவே இருக்கும். இந்நிலங்களில் அவ்வூர் மக்களின் கால்நடைகள் கூட்டம் கூட்டமாக மேயும். அங்கு கள்வர் பயம் இல்லாததால் கால்நடைகள் இரவிலும் சுதந்திரமாக நடமாடும். காட்டோரக் கிராமமாகையால் சிலவேளைகளில் வழிதவறிச் செல்லும். கால்நடைக் கூட்டத்தைக் காட்டு மிருகங்கள் கொன்று தின்றுவிடும்.

அந்த வருடம் காட்டோரம் செல்லும் கால்நடைகளைக் கொன்று தின்று ருசிகண்ட புலியொன்று அடிக்கடி கிராமத்துள் நுழையத் தொடங்கியது. அது முதலில் பட்டிகளில் நுழைந்து ஆடு, மாடுகளைக் கொன்று குவித்தது. அதனால் மக்கள் விழித்திருந்து காவல் காத்தனர். ஒருநாள் காவலுக்கு இருந்த ஒருவனை காட்டுக்குள் தூக்கிச் சென்றுவிட்டது. மறுநாள் அவனது அரைவாசி உடல் காட்டோரமாக கண்டெடுக்கப்பட்டது. அதனால் மக்கள் கலக்கமடைந்தனர்.

அன்று அவ்வூரில் வாழும் வருணனின் தலைமையில் கூட்டம் கூடியது. அதில் வருணன் கூறினான்; ‘‘அன்பார்ந்த மக்களே, வரட்சி நிலவும் காலங்களில் தான் கிராமங்களுள் காட்டு மிருகங்கள் நுழைவது வழக்கம். ஆனால் இப்பொழுது அப்படியல்ல. தமது உணவுத் தேவைக்காக ருசிகண்ட புலியொன்று தினமும் கிராமத்துள் புகுந்து ஆடு, மாடுகளைக் கொன்று தின்கிறது. இப்பொழுது அது மனிதர்களைக் கொன்று தின்ன ஆரம்பித்துவிட்டது. இந்த நிலைமை நீடித்தால் நாம் கிராமத்தை விட்டு வெளியேறவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். அதனால் நாம் அப்புலியைக் கொல்ல வேண்டும்...’’

கிராமத்தவர்கள் எதுகும் பேசவில்லை. சிறிது நேரத்தின் பின் வேலாயுதம் என்ற முதியவர் சொன்னார்; ‘‘காட்டுப் புலியைக் கொல்வது மிகவும் கஷ்டம். இருபது வருடங்களுக்கு முன்பு இப்படித்தான் ஒரு சம்பவம் நடந்தது. ஊருக்குள் வந்த காட்டு மிருகங்களைத் துரத்த முடியாததால் நாங்கள் எல்லோரும் ஒரு வருடம் இடம்பெயர்ந்து அயல் ஊரில் வாழ்ந்தோம். பின் காட்டு இலாகாவினர் வந்து அவற்றைச் சுட்டுக்கொல்ல ஒரு வருடம் சென்றது. அதிலும் மூன்று காட்டு இலாகா அதிகாரிகள் பலியாகிவிட்டனர். எனவே நாம் காட்டு இலாகா அதிகாரிகளுக்கு அறிவிப்போம்...’’

‘‘காட்டு இலாகா அதிகாரிகளுக்கு அறிவித்து அவர்கள் நடவடிக்கை எடுக்குமுன் பலரைப் புலி கொன்றுவிடும். அதற்கு முன்பு நாம் நடவடிக்கை எடுப்போம். என்னுடன் கொஞ்சப் பேர் கூட வந்தால் புலியை வேட்டையாடலாம்’’ என்றான் வருணன்.

யாரும் எதுகும் கதைக்கவில்லை. சிலர் மெதுவாக எழுந்து செல்ல ஆரம்பித்தனர்.

‘‘இது எமது சொந்த ஊர். நாம் பிறந்த மண். இந்த மண்ணை விட்டு வெளியேறி அடிமைகளாக வாழ எனக்கு விருப்பமில்லை. நான் இந்த மண்ணை நேசிக்கிறேன். இங்கு வாழும் மக்களை என் உடன்பிறப்புக்களாய் கருதுகிறேன். உங்களுக்கு நேர்ந்த துன்பங்களை எனக்கு நேர்ந்தவையாகக் கருதுகிறேன். இதற்காக எனது உயிர் போனாலும் பரவாயில்லை. நாம் வெளியேறி பிற ஊர்களில் கொட்டில்

அமைத்து தொழிலின்றிக் கஷ்டப்பட்டு சீவனம் நடத்துவதை விட புலியடித்து சாவது நல்லது. என்னைப் போல் இம்மண் மீது பற்றுள்ள ஐந்து பேர் வாருங்கள் போதும்'' என்றான்.

கூட்டத்தில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. ஐந்தாறு இளைஞர்கள் எழுந்து வந்தனர்.

''நல்லது வாருங்கள்'' என்று அவர்களை வரவேற்ற வருணன் உணர்ச்சி வசப்பட்டுக் கூறினான்; ''அன்பான மக்களே, இன்னும் ஒரு வாரத்தில் உங்களைக் கலக்கும் அந்தக் காட்டு விலங்கை நாம் கொல்வோம்.''

ஒருவாரம் கழிந்தது. அன்று காலை மக்கள் எல்லோரும் அவ்வூர் சனசமூக நிலைய முன்றலில் கூடிநின்று வருணனும் அவனது நண்பர்களும் கொன்ற புலியை வேடிக்கை பார்த்தனர். உயிரிழந்து அசைவற்றுக் கிடந்த அக்காட்டு மிருகத்தைப் பார்க்க அஞ்சிய பலர் தூர நின்று பார்த்தனர்.

76. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்;

மறத்திற்கும் அ∴தே துணை.

அறியாதவர்கள் அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவர். ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்கும் அன்பே துணையாக இருப்பது தெரியும்.

அன்பில்லா உயிர்

கனகரட்னம் மூதூரில் வாழும் பெரும் பணக்காரன். அவனிடம் நகரில் பெரியதொரு பிடைவைக் கடை இருந்தது. அதில் பதினைந்து பேர் வேலை செய்து வந்தனர். கனகரட்ணம் மிகவும் கண்டிப்பானவன். கடன்கொடுக்கவே மாட்டான். கடையில் வேலைசெய்யும் சிப்பந்திகளின் உறவினர்கள், நண்பர்கள் யாராவது வந்து சிப்பந்திகளை கடன் கேட்பார்கள். இல்லாவிட்டால் வாங்கிய பொருட்களுக்கு பணம் போதாதிருந்தால் மிகுதியைப் பின்பு தருவதாகக் கேட்பார்கள். இதற்கெல்லாம் கனகரட்ணம் ஒத்துக்கொள்ளமாட்டான். அக்கடனையோ அல்லது மீதிப் பணத்தையோ குறிப்பிட்ட சிப்பந்தி பொறுப்பேற்றல் வேண்டும். அப்பணம் குறித்த தவணையில் கொடுக்கப்படாவிட்டால்

அச்சிப்பந்தியின் சம்பளப் பணத்தில் கழித்துவிடுவான். குறைந்த சம்பளத்தில் வேலை செய்யும் சிப்பந்திகள் மாதாமாதம் சிறுசிறு தொகையாக அப்பணத்தைக் கழிக்கும்படி கெஞ்சினாலும் கேட்கமாட்டான்.

பண்டிகைக் காலங்களில் சிப்பந்திகளுக்கு வேலை கடுமையாக இருக்கும். அத்துடன் இரவு பத்துமணி வரை வியாபாரம் நடைபெறும். ஒரு மாதம் வரை இந்நிலை நீடிக்கும். பலமத மக்கள் வாழும் அப்பட்டணத்தில் வருடத்தில் பலமுறை பண்டிகைகள் வரும். இதற்கெல்லாம் கனகரட்ணம் மேலதிக ஊதியம் எதுகும் வழங்கமாட்டான். யாராவது ஊதியம் கேட்டால்; ‘‘பண்டிகைக் காலங்களில் தானே வியாபாரம் நடைபெறுகிறது. மற்றைய நாட்களிளெல்லாம் எந்த விதமான வருமானமுமில்லாமல் சம்பளம் பெறுகிறீர்கள். அப்படியான நாட்களில் நானென்ன சம்பளத்தைக் குறைத்தா தருகிறேன்’’ என்பான்.

கிராமங்களில் வேலைகள் இல்லாததாலும் சிப்பந்திகளாக வேலை செய்வோர் அதிகம் படிக்காததாலும் அவனின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள். பெரும் பணக்காரரான கனகரட்ணம் கறுப்புச் சந்தையில் தரமான துணி வகைகளைக் கொள்வனவு செய்வார். அத்துடன் மலிவான தரங்குறைந்த துணிவகைகளையும் கொள்வனவு செய்வார். பின் அவற்றைக் கூடிய விலையில் விற்பனை செய்வார். எல்லா விதமான பிடைவை வகைகளையும் எவ்வேளையிலும் அங்கு கொள்வனவு செய்யக்கூடிய வசதி இருந்தமையால் மக்கள் தமது தேவைகளுக்கு அவரது கடையையே நாடுவார்கள்.

ஊரவர் , அயலவர் இனத்தவர்களுடனும் அவன் அவ்வளவாகப் பழகுவது கிடையாது. நட்புறவுடன் பழகினால் தம்மிடம் கடனோ, உதவியோ கேட்டு வந்து விடுவார்கள் என்ற பயம் அவனின் மனதில் இருந்தது. ஊரில் உள்ள பிரமுகர்களைக் கண்டால் சிரித்துவிட்டு விலகிவிடுவான். அவர்களுடன் கலகலப்பாகக் கதைத்தால் பொதுத் தேவைகளுக்கு உதவிக்கு வந்துவிடுவார்கள் என நினைப்பான்.

அவனது மனைவி பூமணி மிகவும் நல்லவள். உறவினரிடத்தும், அயலவர்களிடத்தும் அன்புள்ளவள். அதனால் உறவினர்களும், அயலவர்களும் அவளுடன் கதைப்பதற்கென வருவார்கள். ஆனால் அது கனகரட்ணத்திற்குப் பிடிப்பதில்லை. இதனால் இருவருக்கிடையிலும் அடிக்கடி சண்டைவரும்.

‘‘நாம் உறவினர்களுடனும், அயலவர்களுடனும் அன்பாகப் பழகுதல் வேண்டும். அவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும். அப்பொழுது தான் இன்பமாக வாழலாம்’’ என்பாள் பூமணி.

அதற்கு கனகரட்ணம் சொல்வான்; “சனம் உன்னில் உள்ள அன்பு காரணமாக வரவில்லை. ஏதாவது உதவி பெறலாம் அல்லது கடன் வாங்கலாமென்று வருகிறது. அதோடு பணம் உள்ளவனுக்கு உதவி செய்ய பலபேர் முன்வருவார்கள். அதைவிட காசைக் கொடுத்தால் எல்லா உதவிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.”

நாட்கள் நகர்ந்தன. அடுத்த மாதம் தீபாவளிப் பண்டிகை வர இருந்தது. அதனால் கனகரட்ணம் பலகோடி ரூபாவுக்கு பிடைவைகளை வாங்கியிருந்தான். பல பிடைவைத் தொழிற்சாலைகள் கடனுக்கு பிடைவைகளைக் கொடுத்திருந்தன. அன்று திடீரென்று ஏற்பட்ட மின் ஒழுக்குக் காரணமாக கனகரட்ணத்தின் கடை முற்றாக எரிந்து சாம்பராகிவிட்டது.

கனகரட்ணம் அதிர்ந்து போனான். பெரும் கோடீஸ்வரரான அவன் ஓரிரு மணித்தியாலங்களில் ஒட்டாண்டியாகிவிட்டான். கடன்காரர் நெருக்கத் தொடங்கினார்கள். அவரது கடையில் வேலை செய்த சிப்பந்திகள் வேறு வேலைகளைத் தேடிக்கொண்டு சென்றுவிட்டார்கள்.

கடன் தொல்லையும் பணமின்மையும் கனகரட்ணத்தை நோயாளியாக்கியது. அவ்வூரில் உள்ள அரசினர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றான். முன்பென்றால் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் அவனுக்கு அவ்வைத்தியசாலையில் ஏழைகளோடு ஒன்றாக இருந்து சிகிச்சை பெற வெட்கமாக இருந்தது. அவனால் எழுந்து நடமாட முடியவில்லை. அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெறுவோருக்கு உணவு வேளா வேளைக்கு வந்தது. ஆவர்களை உறவினர்களும் அயலவர்களும் அடிக்கடி வந்து பார்த்துச் சென்றனர். ஆனால் கனகரட்ணத்தைப் பார்க்க மனைவியைத் தவிர வேறு எவரும் வருவதில்லை. பிள்ளைகள் சிறுவர்களாக இருந்தமையால் தாயுடன் வந்து சென்றனர். நோயுற்றிருந்த வேளை ஆறுதல் சொல்ல யாருமின்றி அவதிப்பட்டான் கனகரட்ணம்.

77. என்பு இலதனை வெயில்போலக் காயுமே

அன்பு இலதனை அறம்.

எலும்பில்லாத உடலோடு வாழும் உயிர்களை வெயில் காய்ந்து வருத்துவது போல அன்பில்லாத உயிர்களை அறம் வருத்தும்.

வற்றல் மரம்

சிவஞானமூர்த்தி சேனையூர் மருத்துவமனையில் மருத்துவராகக் கடமையாற்றினார். மிகவும் திறமையானவர். நோயாளியைப் பார்த்ததும் அவருக்கு என்ன நோய் உள்ளது என்பதை அறிந்து கொள்பவர். மிகவும் கண்டிப்பானவர். தனக்கு வேலைக்கென குறிக்கப்பட்ட நேரத்தில் மருத்துவமனைக்கு வருவார். வேலைநேரம் முடிந்ததும் ஒருநிமிடம் கூட தாமதிக்கமாட்டார். பார்வையிடுவதற்காக நோயாளிகள் பலர் காத்திருந்தாலும் குறிக்கப்பட்ட நேரத்தில் தனது இருக்கையால் எழுந்துவிடுவார். வீட்டிலும் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்வார். அவரது மனைவியும், பிள்ளைகளும் அவரைக் கண்டால் நடுங்குவார்கள். வீட்டுக் கருமங்கள் யாவும் குறிக்கப்பட்ட நேரப்படி நடைபெறுதல் வேண்டும். காலை உணவு எட்டு மணிக்கு சாப்பாட்டு மேசையில் இல்லாவிட்டால் சாப்பிடாமல் சென்று விடுவார். மனைவிக்கு என்ன நடைபெற்றது, ஏதாவது சுகவீனமா என்றுகூட விசாரியாது வேலைக்குச் சென்றுவிடுவார். இதனால் அவரது மனைவி கடும் சுகவீனமுற்ற காலத்திலும் கூட அவரது கடமைகள் முழுவதையும் முடித்து வைப்பாள்.

வீட்டிலுள்ள யாருக்காவது வருத்தம் வந்தால் அவருக்குச் சொன்னால்தான் மருந்துகள் கொடுப்பார். உறவினர்கள், அயலவர்களுடன் கலகலப்பாகப் பழகமாட்டார். அவர்கள் ஏதாவது கேட்டால் மட்டும் ஓரிரு சொற்களில் மறுமொழி சொல்வார். வீட்டில் வளர்க்கப்படும் நாய்கூட அவரைக் கண்டுவிட்டால் அடங்கிக் கொள்ளும்.

மருத்துவமனையில் வேலை செய்யும் ஊழியர்களுடனும் நெருங்கிப் பழகமாட்டார். தானுண்டு தனது கடமை உண்டு என்று இருந்து விடுவார். மருத்துவமனையில் வேலை செய்யும் ஊழியர்களின் வீட்டில் மங்கல நிகழ்வுகள் நடைபெற்றால் அவர்களது வீட்டுக்குச் செல்லமாட்டார். அவ் ஊழியர்களை மருத்துவமனையில் சந்தித்து பரிசும் கொடுத்து வாழ்த்துவார். அமங்கல நிகழ்வுகள் நடைபெற்றால் அந் நிகழ்வுகளுக்குச் சென்று துக்கம் விசாரிப்பார்.

ஊழியர்கள் யாரையாவது வழியில் சந்திக்க நேர்ந்தால் சிறிதாகப் புன்னகைப்பார். அத்துடன் சரி. தம்மிடம் மருந்து பெற்றவர்களை அவர் மறந்துவிடுவார். எங்காவது சந்தித்து அவர்கள் தம் வருத்தம் மாறிவிட்டது. நீங்கள் பெரும் கைராசியான மருத்துவர் என்று புகழ்ந்தால், சிரித்துவிட்டுச் சென்றுவிடுவார். அவரது பிள்ளைகள் இருவரோடும் அவர் கலகலப்பாகப் பேசியது கிடையாது. குறித்த நேரப்படி தமது வேலைகளை அவர்கள் செய்து முடித்தல் வேண்டும். இல்லாவிட்டால் கண்டிப்பார். அவரது பிள்ளைகள் இருவரும் மிகவும் கெட்டிக்காரர்கள். எல்லாப் பாடங்களிலும் அவர்களே கூடுதலான

புள்ளிகளைப் பெறுபவர்கள். அப்படி இருந்தும் அவர் தம்பிள்ளைகளைப் பாராட்டமாட்டார். இன்னும் கூடப் புள்ளிகள் எடுத்திருக்கலாம். நீங்கள் அக்கறையுடன் படிக்கவில்லை என்பார். பிள்ளைகள் தாம் விரும்பும் பொருட்களை வாங்குவதற்கு தாயாரான தாரணியுடன் தான் கதைப்பார்கள்.

தாரணி சிவஞானமூர்த்தி சந்தோஷமாக இருக்கும் நேரங்களில் அவற்றைச் சொல்வாள். அவ்வேளைகளில் அவர் தாரணி கூறும் அத்தனை விஷயங்களுக்கும் ஒப்புதல் கொடுத்து பணமும் கொடுப்பார்.

மருத்துவமனையில் வேலைசெய்யும் ஆறுமுகம் சிவஞானமூர்த்தியுடன் நெருங்கிப் பழகுபவன். அவர் தனது வீட்டில் நடைபெறும் முக்கியமான நிகழ்வுகளைக் கூட அவனுக்குச் சொல்வார். சிரித்துக் கதைப்பார். அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார். ஆனால் அவனது வீட்டுக்குச் செல்லமாட்டார்.

சிவஞானமூர்த்திக்கு திடீரென்று இருதயநோய் உண்டானது. நகரில் உள்ள பிரபலமான தனியார் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டார். பதினைந்து நாட்கள் அவர் அப்பிரிவில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற பின்பே குணமடைந்தார். அதன் பின் அவர் மருத்துவமனையில் நோயாளர் தங்கியிருந்து சிகிட்சை பெறும் வசதியான ஓர் அறையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றார்.

அவர் மருத்துவமனையில் தங்கியிருந்த காலத்தில் அவர் வேலை செய்த மருத்துவமனை ஊழியர்கள் அவரை வந்து பார்த்துச் சென்றனர். அயலவர்களும், ஊரவர்களும், இனத்தவர்களும் வந்து பார்த்துச் சென்றனர்.

அவர் மருத்துவமனையால் வீட்டுக்கு வந்து முப்பது நாட்கள் ஓய்வெடுத்தார். அக்காலப் பகுதியில் அவரைப் பார்த்து நலம் விசாரிக்க யாரும் வரவில்லை. வந்த அயலவர்கள், இனத்தவர்கள் அவரை ஒப்புக்கு பார்த்துவிட்டு அவரது மனைவியுடன் கதைத்துவிட்டுச் சென்றனர்.

தனிமை சிவஞானமூர்த்தியை வாட்டியது. பொழுது போகாமையால் யாருடனாவது கதைக்க விரும்பினார். அவர் கதைக்க விரும்பிய போதும் அவரைப் பார்க்க வருவோர் அவருடன் அதிகம் கதைக்க விரும்பவில்லை. ஆறுமுகத்தை அடிக்கடி தனது வீட்டுக்கு வருமாறு தனது மகனிடம் சொல்லி அனுப்பினார். ஆனால் அவனும் வருவது குறைவு. நோய் மாறியதும் சிவஞானமூர்த்தி வேலைக்குத் திரும்பினார். ஊழியர்கள் எல்லோரும் வந்து நலன் விசாரித்துச் சென்றனர். அவர்களின் பேச்சில் அக்கறையோ, அன்போ இருக்கவில்லை என்பதை சிவஞானமூர்த்தி உணர்ந்துகொண்டார்.

78. அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று.

அன்பில்லாத குடும்ப வாழ்க்கையானது வளமற்ற பாலை நிலத்தில் பட்டமரம் தளிர்த்தலைப் போன்றது.

புறத்து உறுப்பு

கலைமகள் நாகநாதனின் ஏகபுத்திரி. நாகநாதன் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். பாடசாலையில் அவர் கற்பிப்பது குறைவு. தனியார் கல்வி நிறுவனங்கள் பலவற்றில் ஆங்கில பாடத்தை மிகவும் சிறப்பாகக் கற்பிப்பார். அதனால் வேறு கிராமங்களில் இருந்தும் ஏராளமான மாணவர்கள் வீடு தேடி வந்து கல்வி கற்பார்கள். தன்னிடம் கல்விகற்க வரும் மாணவர்களிடம் இரண்டு மாதத்திற்கான கட்டணத்தை முற்கூட்டியே வாங்கிவிடுவார். பின் மாதாமாதம் கட்டணம் செலுத்துதல் வேண்டும். வருட இறுதியில் வரும் இரண்டு மாதங்களுக்கும் கட்டணம் வாங்காமலே கற்பிப்பார். அதிகமான மாணவர்கள் படித்து முடித்துவிட்டு கட்டணம் செலுத்தாமல் சென்றதால் இந்நடைமுறையை அவர் தற்பொழுது பின்பற்றி வருகிறார்.

பாடசாலை அதிபர் அவரது நண்பர். தனக்கு வரும் வருமானத்தில் சிறுதொகையை அதிபருக்கு பொருட்களாக அன்பளிப்புச் செய்வார். அத்துடன் பாடசாலையில் அவ்வப்போது வரும் நிகழ்வுகளுக்கு சிறுசிறு தொகையாகப் பணம் கொடுப்பார். அதனால் அதிபர் அவரது விடயத்தில் பாராமுகமாக இருந்து வந்தார்.

கலைமகள் நல்ல அழகி. பல்லவர் காலத்து சிற்பத்தைப் போன்ற உடலமைப்பு. அழகான வட்ட முகம். கவர்ச்சியான சிவந்த உதடுகள். அளவான நெற்றி. காண்பவர்களை மின்னல் போல் தாக்கும் வசீகரமான கண்கள். எடுப்பாக செப்பனிடப்பட்ட புருவங்கள். வசீகரமான மூக்கு. அதில் மினுமினுக்கும் வைரக்கல் மூக்குத்தி இளவட்டங்களைக் கனவுலகிற்கு இழுத்துச் செல்லும். பளபளப்பான கன்னங்கள். இளைஞர்களின் கண்கள் மட்டுமல்ல, திருமணமானவர்களின் கண்கள் கூட அவளது கன்னங்களை அடிக்கடி ஸ்பரிசிக்கும். மினுமினுக்கும் அழகான கழுத்து. அளவான இடை. மிருதுவான மெல்லிய மஞ்சள் விரல்கள். அழகாக வெட்டி வர்ணம் பூசப்பட்ட நகங்கள். மொத்தத்தில் கலைமகளின் அழகு

இளைஞர்களைப் பித்துப் பிடிக்க வைத்துக்கொண்டிருந்தது. பல இளைஞர்கள் அவள்மீது காதல் கொண்டு அவளின் பின்னால் பேயாய் அலைந்தனர். சிலர் அவளுடன் கதைத்து அவமானப்பட்டனர். சிலர் அவளுக்கு காதல் கடிதம் எழுதிக் கொடுத்து செருப்பால் அடிவாங்கினர்.

ஆதவன் நாகநாதனோடு கற்பிக்கும் சிதப்பரப்பிள்ளையின் மகன். பட்டதாரி ஆசிரியன். சிதம்பரப்பிள்ளையும் நாகநாதனும் தரம் ஒன்றில் இருந்து ஒன்றாகப் படித்தவர்கள். நண்பர்கள் இருவரினது வீட்டாரும் உறவினர்களைப் போல் மிகவும் அந்நியோன்னியமாகப் பழகுவார்கள். நாகநாதன் சிதம்பரப்பிள்ளையோடு நெருங்கிப் பழகிய போதும் சிதம்பரப்பிள்ளை அவருடன் அன்னியோன்னியமாகப் பழகுவது குறைவு. பாடசாலையில் ஒழுங்காக நாகநாதன் கற்பிக்காததால் அவரின் மேலதிக வகுப்புக்குச் செல்ல முடியாத ஏழை மாணவர்கள் ஆங்கில மொழியில் மிகவும் பின்தங்கியிருந்தனர். அத்துடன் நாகநாதன் பணத்தின் மீது குறிக்கோளாக இருந்ததால் வசதியீனங்களால் ஒழுங்காக கட்டணம் கட்டாத மாணவர்களை வகுப்பில் இருந்து நீக்கி விடுவார். நாகநாதனின் இவ்விரு செயல்களும் சிதம்பரப்பிள்ளைக்குப் பிடிப்பதில்லை. பலமுறை இதைப்பற்றி சிதம்பரப்பிள்ளை எடுத்துக்கூறியும் நாகநாதன் கேட்பதாக இல்லை. அதனால் தனது சினேகிதத்தைக் குறைத்துக் கொண்டார்.

கலைமகள் திமிர் பிடித்தவள். அவள் கற்கும் காலத்தில் ஆசிரியர் உட்பட எவரையும் மதிப்பதில்லை. தன்னுடன் படிக்கும் மாணவிகளில் ஏழை மாணவிகளோடு அவள் கதைப்பதில்லை. அவர்களைக் கேலி செய்வாள். வழியில் யாராவது ஏழை மாணவர்கள், அவளுக்குப் பிடிக்காத மாணவர்கள் தற்செயலாக அவளைப் பார்த்தால் அவர்களுடன் சண்டைக்குப் போவாள். வீண்வம்பு ஏன் என்று விலத்திச் சென்றாலும் வலியச் சண்டைக்குப் போவாள்.

ஆதவன் மிகவும் அமைதியானவன். கலைமகளுடன் கூடப் படித்தவன். குலைமகள் ஆதவன் மீது அளவு கடந்த காதல் கொண்டாள். அதை அவள் பலமுறை சைகைகள் மூலம் வெளிப்படுத்தினாள். ஆதவனுக்கு அவளின் நோக்கம் தெரிந்த போதும் அவன் தெரியாதது போல் நடந்து கொண்டான். கலைமகளின் தோழி காயத்திரி. ஒருநாள் கலைமகள் தனது விருப்பத்தை கடிதத்தில் எழுதி காயத்திரியிடம் கொடுத்து அதை ஆதவனிடம் கொடுக்கும்படி கூறினாள்.

காயத்திரியிடமிருந்து கடிதத்தைப் பெற்ற ஆதவன், தான் கலைமகளுடன் இதைப்பற்றிக் கதைப்பதாகக் கூறினான். அன்று அவன் கலைமகளைப் பிள்ளையார் கோயிலில் கண்டான். கலைமகள் அவனைக் கண்டவுடன் ஆவலுடன் அவனருகே வந்து தலையைக் குனிந்து கொண்டு நின்றாள்.

“எனக்கு உன்னில் விருப்பமில்லை. உனது பேரழகைக் கண்டு பலரும் மயங்கலாம். ஆனால் நான் மயங்கமாட்டேன். குடும்பப் பெண்ணுக்கு அழகைவிட அன்புதான் முக்கியம். திமிரைவிட பொறுமைதான் முக்கியம். விட்டுக்கொடுத்து மற்றவர்களை மதித்து பண்போடு பழகும் பெண்தான் குடும்பத்திற்கு ஏற்றவள். அழகு இன்றிருக்கும், நாளை உருக்குலைந்துவிடும். குணம் அப்படியானதல்ல. இறந்த பின்பும் பேசப்படும். எனவே நீ யாரையாவது திருமணஞ் செய்” என்று கூறிவிட்டுச் சென்றான்.

“மடையன்” கர்வத்தோடு முணுமுணுத்தது அவளது உதடுகள்.

79. புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை

அகத்துறுப்பு அன்பி லவர்க்கு?

புறத்து உறுப்புக்கள் யாவும் அழகானவையாகவும் பலமானவையாகவும் இருந்தாலும் அக உறுப்பாகிய அன்பில்லாவிட்டால் அவற்றால் பயன் ஏதும் இல்லை.

உயிர்நிலை

ஞானசம்பந்தனின் வீட்டுக்கு அருணாசலம் வந்தார். அவரை ஞானசம்பந்தன் வரவேற்று ஆசனத்தில் இருத்தினார்.

“ஐயா, நான் சொன்ன சொல்லைக் காப்பாற்றாது சிவநாதனின் மேலுள்ள வெறுப்பாலும், தங்களின் உயரிய குணங்களை அறிந்த மதிப்பாலும் தங்களின் வீடு தேடிவந்து எனது மகனுக்குப் பெண்கேட்டேன். நீங்கள் உயர்ந்தவர். மற்றவர்களிடத்தில் அன்பு பூண்டவர் என்பதை நிரூபித்துவிட்டீர்கள். வேறு ஒருவராய் இருந்தால் தன்னைத் தேடிவரும் சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வார். ஆனால் நீங்கள் பண்பால் உயர்ந்தமையால் இன்று பேசப்படும் பெரும் மனிதராகி விட்டீர்கள்” என்றார் அருணாசலம்.

ஞானசம்பந்தன் சிரித்தார். “சிவநாதனுக்கு மகள் பிறந்தன்றே உமது மகனுக்கு நிச்சயத்தீர்கள். பின்பு உங்களுக்கிடையே ஏற்பட்ட சிறு பிரச்சினை காரணமாக நீங்கள் மனம்மாறி எனது வீட்டிற்குச் சம்பந்தம் பேச வந்ததை நான் அறிந்துகொண்டேன். எப்படியும் வாழலாம் என்று நாம் ஒருபோதும் நினைக்கக்கூடாது. இப்படித்தான்

வாழவேண்டும் என்று நினைத்தல் வேண்டும். பகுத்தறிவு இல்லாததென நாம் நினைக்கும் விலங்குகள் கூட தம் இனத்தோடு எவ்வளவு அன்பாக வாழ்கின்றன என்று நீங்கள் அறியவில்லையா? மிருகங்கள், பறவைகளுக்கிடையே சண்டை ஏற்படும் போது அதே இனத்தைச் சேர்ந்த மிருகங்களும் பறவைகளும் அவற்றின் சண்டையைத் தீர்த்து வைக்கின்றன. அவற்றைவிட நான் கேவலமானவனாகிவிட முடியாது என்பதற்காகத்தான் அப்படி நடந்து கொண்டேன்'' என்றார் ஞானசம்பந்தன்.

''உங்களின் செயலால் எனக்கும் எனது மனைவிக்கும் இடையே வரவிருந்த பெரும் பிரச்சினை தீர்ந்துவிட்டது. சிவநாதன் நல்லவன். எமது குடும்பத்தின் மீது அளவிடமுடியாத அன்பு வைத்துள்ளவன். சகோதரியை உயிராக நினைப்பவன். அதேபோல் தான் எனது மகனும், சிவநாதனின் மகள்மீது அளவில்லாத அன்பை வைத்திருந்தான். எனக்கு சிவநாதனோடு ஏற்பட்ட சிறுபிரச்சினை காரணமாக நான் எனது மகனைக் கேளாமல் உங்களின் வீட்டுக்கு வந்து பெண்கேட்டுவிட்டேன். அதனால் என்மீது அளவுக்கதிகமான அன்பை வைத்திருந்த எனது மகன் நாலைந்து நாட்களாக வீட்டுக்கு வராது மருத்துவமனையில் தங்கிவிட்டான்'' விம்மினார் அருணாசலம்.

''சரி... சரி... எல்லாம் நல்ல முறையில் முடிந்துவிட்டது. இனிக் கவலைப்படாதீர்கள்'' என்றார் ஞானசம்பந்தன்.

''கவலைப்படாமல் இருப்பது எப்படி ஐயா. தற்செயலாக நீங்கள் விஷயம் அறியாது ஒத்துக்கொண்டிருந்தால் எவ்வளவு பிரச்சினைகள் நடந்திருக்கும்... எனது மகன் வீட்டைவிட்டுச் சென்றிருப்பான். தாய் மகனைக் காணாமல் ஒரு நிமிடமும் இருக்கமாட்டாள். நான் திருமணம் செய்து முப்பது வருடங்கள் முடிந்துவிட்டன. முப்பது வருடமாக எனது மனைவி என்மீது செலுத்திய அன்பை அளவிட்டுக் கூறமுடியாது. அதேபோல் தனது சகோதரன் மீதும் எனது மனைவி அளவில்லாத அன்பை வைத்திருந்தாள். அதை நான் தெரியாத்தனமாகக் கெடுக்க நினைத்தேன். எனது வீட்டில் தினமும் சமைக்கும் உணவின் ஒரு பகுதியை சிவநாதனின் வீட்டுக்கு எனது மனைவி அனுப்பிவிடுவாள். அதேபோல் தனது வீட்டில் சமைக்கும் உணவுடன் தினமும் சிவநாதன் எனது வீட்டுக்கு வருவான். பொங்கல், தீபாவளி, வருடப்பிறப்பென்றால் எல்லோருக்கும் பிடைவைகள் வாங்கிக்கொண்டு சிவநாதன் வருவான். நான் திருமணம் செய்த முப்பது வருட காலத்தில் ஒரு முறையாவது சிவநாதன் உடுபிடைவைகள் வாங்கித்தராமல் விட்டதில்லை.''

''அன்புதான் வாழ்க்கை. அன்பில்லாதவர்கள் பெரும் பணக்காரராக இருந்தாலும் அவர்களின் வாழ்க்கையில் இன்பம் இருக்காது. அதேபோல் அன்பில்லாதவர்கள் எத்தகைய உயர்பதவி வகித்தாலும் அதனால் மற்றையோர் எத்தகைய பயனையும் அடைய

மாட்டார்கள். அன்பின் வழியில் இயங்கும் உடல்தான் உயிருள்ள உடலாகும். அந்த உடலில் இருக்கும் அத்தனை உறுப்புக்களும் மற்றைய உயிர்கள் மீது அன்பு செலுத்தும். அன்பு இல்லாதவர்களுக்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்த வெற்றுடம்பாகும். உங்கள் மனைவியும் சகோதரனும் அன்பானவர்கள். பயனுள்ள உறுப்புக்களையும், உயிர் நிற்கும் உடம்பையும் பெற்றவர்கள்'' என்றார் ஞானசம்பந்தன்.

80. அன்பின் வழியது உயிர்நிலை அ.ஃதுஇலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

அன்பு வழியில் இயங்கும் உடம்பே உயிர் உள்ள உடம்பாகும். அன்பு இல்லாத உடம்பு எலும்புகளைத் தோல் போர்த்த வெற்றுடம்பு ஆகும்.

இல்வாழ்வது

குமரகுருபரன் விநாயகரை வழிபடும் பெரும் பக்தன். அவர் நகரில் ஒருகடை வைத்து நடாத்திவந்தார். நீதிநெறி தவறாதவர். கடமை உணர்வு மிக்கவர். தனது கடையில் வேலை செய்யும் சிப்பந்திகள் ஒழுங்காக நடக்க வேண்டும் என்பதில் கடுமையாக இருப்பவர். தராசு, படிகள் சரியாக இருக்கின்றனவா என்று தினமும் கவனிப்பார். நிறை குறைத்து மக்களுக்கு பொருட்களைக் கொடுக்கக் கூடாதென்று அடிக்கடி தனது சிப்பந்திகளுக்குக் கூறுவார். அநீதியான செயல்களில் ஒருபோதும் ஈடுபடமாட்டார்.

தனது வீட்டுக்கு முன்பாக பெரியதொரு மண்டபம் கட்டி அதை ஓலையால் வேய்ந்து வைத்திருந்தார். அந்த மண்டபத்தில் அவ்வழியால் செல்வோர் தங்கியிருந்து களைப்பாறிச் செல்வர். வேற்றூரவர் பட்டணத்திற்கு ஏதாவது வேலையாக வந்து, இரவு தம் ஊருக்குச் செல்ல முடியாவிட்டால் அம்மண்டபத்தில் தங்குவர். அவர்களுக்கான இரவு உணவை குமரகுருபரன் இலவசமாகக் கொடுப்பார். பட்டணத்தில் வேலை இருப்போர் முதல் நாளே அங்கு வந்து தங்கிச் செல்வர். இவர்களை விட அடியார்கள், வயோதிபர்கள், இனசனமில்லாதோர், பிள்ளைகளால் கவனிக்கப்படாத பெற்றோர் என தினமும் பத்துப் பதினைந்து பேருக்கு அங்கு உணவு கொடுக்கப்படும்.

குமரகுருபரனுக்கு அருகே கடை வைத்து வியாபாரம் செய்பவன் பழனிவேல். குமரகுருபரனுடைய வீட்டுக்கு அருகிலேயே அவன் குடியிருந்தான். குமரகுருபரனை விட பெரிய வர்த்தகன். தனது பணத்துடன் பலரிடம் கடனாகப் பணம் பெற்று பெரியளவில் தொழில்செய்து வந்தான். ஊரில் உள்ள விவசாயிகள் தமது விளைபொருட்களை விற்றுவிட்டு பணத்தை பழனிவேலிடம் கொண்டுசென்று கொடுப்பார்கள். பழனிவேல் அவர்களுக்கு மாதாமாதம் வட்டி கொடுப்பான். தமது பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பிய பெற்றோர் தமது பிள்ளைகள் அனுப்பும் பணத்தில் தமது செலவுக்கென ஒருதொகைப் பணத்தை எடுத்துக்கொண்டு மிகுதிப் பணத்தை பழனிவேலிடம் கொடுப்பார்கள். அதைவிட ஊர்ப் பிரமுகர்கள் பலர் தம்மிடமுள்ள பணத்தை பழனிவேலிடம் கொடுத்துவிட்டு மாதாமாதம் வட்டி பெறுவார்கள்.

பழனிவேல் கள்ளத்தனம் புரிவதில் கெட்டிக்காரன். சிலரிடம் வாங்கிய பணத்தைக் குறைத்துச் சொல்வான். சிலருக்கு வட்டியைக் குறைத்துக் கொடுப்பான். இவற்றால் பிரச்சினைகள் வரும்போது ஊரில் உள்ள பிள்ளையாரை சாட்சியாக வைத்து சத்தியம் செய்வான்.

‘‘எனக்கு பணம் தேவையில்லை. இப்ப வங்கியில் வட்டியைக் குறைத்துவிட்டார்கள். அதனால் வங்கியில் கடனெடுக்கலாம். உங்களது காசைக் கொண்டு போங்கோ’’ என்று அவன் எல்லோரிடமும் கூறுவான். அதனால் மக்கள் அவன் கொடுக்கும் வட்டிப் பணத்தை பெற்றுச் செல்வர். சிலர் ‘‘நீங்கள் வங்கியில் எடுங்கோ, எனது பணத்தைத் தாருங்கோ’’ என்று கேட்டால் பலமுறை அலைக்கழித்துத்தான் அவர்களுக்குப் பணத்தைக் கொடுப்பான்.

குமரகுருபரன் அளவாக வியாபாரம் செய்து வந்தார். தன்னிடம் இருந்த பணத்துடன் தனக்கு வேண்டிய நண்பர்கள் சிலரிடம் கடனாகப் பணம் பெற்று தனது தொழிலைச் செய்துவந்தார். கடையில் இருந்து வரும் இலாபப் பணத்தில் பெரும் பகுதியை தானதர்மங்கள் செய்து வந்தார். பிற்காலத் தேவைக்கென அவர் எதுவும் சேர்த்து வைக்கவில்லை.

திடீரென்று பட்டணத்தில் ஏற்பட்ட மின் தீவிபத்துக் காரணமாக இருபத்தைந்திற்கும் மேற்பட்ட கடைகள் எரிந்து சாம்பலாகிவிட்டன. அவற்றுள் குமரகுருபரருடைய கடையும், பழனிவேலுவுடைய கடையும் அடங்கியிருந்தன.

அன்று மாலை இரண்டு வீட்டிலும் ஏராளமானவர்கள் குழுமியிருந்து துக்கம் விசாரித்தனர். குமரகுருபரனின் பல இலட்சம் ரூபா பெறுமதியான கடை எரிந்தபோதும் மண்டபத்தில் இருந்தவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. உணவுண்ண வந்த பெரியவர் ஒருவர் ‘‘எனக்கு உணவு வேண்டாம். பல வருடமாக நான்

இங்கு உணவு உண்டு வருகிறேன். பெரும் துக்கத்தில் உள்ள உங்களிடம் இன்று உணவு பெற்று உண்ண என்னால் முடியவில்லை'' என்றார்.

குமரகுருபரன் சிரித்தார். பின் வாழை இலையை எடுத்து உணவைப் படைத்துவிட்டு முதியவரிடம் கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் சொன்னார்; ''இழந்த சொத்து முழுவதையும் நானே தேடிச் சம்பாதித்தேன். அதே அளவு சொத்தை சம்பாதிக்க என்னால் முடியும். அதற்காக எனது மண்டபத்தில் உணவிடுவதை நிறுத்தமாட்டேன். நீங்கள் தினமும் வந்து உண்ணலாம்'' என்றார்.

நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் அங்கு வந்து அவருக்கு ஆறுதல் கூறியதோடு பெரும் தொகையாகப்பணத்தைக் கொடுத்து வியாபாரத்தை ஆரம்பிக்குப்படி சொன்னார்கள்.

பழனிவேலின் வீட்டைக் கடன்காரர் முற்றுகையிட்டு தமது பணத்தைத் தரும்படி வற்புறுத்தினர். ''இப்போது நான் பணத்திற்கு எங்கே செல்வேன்?. நீங்கள் உங்களிடம் உள்ள பணத்தைத் தாருங்கள், வியாபாரம் செய்து அதனால் வரும் வருமானத்தில் தருகிறேன்'' என்றான் பழனிவேல்.

''தந்த காசையே வாங்க முடியாமல் இருக்கிறது. வட்டிக்காசும் தருவதில்லை. அப்படியிருக்க எம்மிடம் உள்ள பணத்தையும் தர நாங்கள் என்ன மடையர்களா?'' என்று பலர் அவனைக் கேட்டனர்.

மாதங்கள சில சென்றன. காப்புறுதி நிறுவனம் எரிந்த கடைகளுக்கு நட்டஈடு வழங்கியது. குமரகுருபரன் தனது கடையின் பெறுமதியின் அளவை ஒழுங்காகக் குறிப்பிட்டிருந்தார். வரிப் பணமும் ஒருங்காகக் கட்டியிருந்தார். ஆனால் பழனிவேலு வரிப்பணம் அதிகம் கட்ட வேண்டும் என்பதற்காக தனது கடையின் பெறுமதியை மிகவும் குறைவாகக் குறிப்பிட்டிருந்தான். அதனால் குமரகுருபரனுக்கு பெறுமதி முழவதும் கிடைத்தது. பழனிவேலுக்கு அவரது பெறுமதியில் நூறில் ஒரு பகுதி கூடக் கிடைக்கவில்லை. அதனால் பழனிவேல் மிகவும் கஸ்டப்பட்டான். குமரகுருபரன் தனது வியாபாரத்தைக் கவனிப்பதோடு விருந்தினரையும் வரவேற்று உபசரித்தார்.

81. இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு.

பொருள்களைத் தேடிக்காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் பேணி உதவி செய்யும் பொருட்டே ஆகும்.

பகிர்ந்துண்

கடன்காரரின் தொல்லைகளைத் தாங்கமுடியாத பழனிவேலு பைத்தியம் பிடித்தவன் போல் நடிக்கத் தொடங்கினான். முன்பு கடன்காரர் வந்து அவனைக் கண்டபடி ஏசினர். சிலர் அவனுக்கு அடிக்கச் சென்றனர். அதனால் அவன் பைத்தியக்காரன் போல் நடித்தான். அவனது நடிப்பு அவனுக்கு கைகொடுத்தது. அதனால் அவன் நிரந்தரமாகவே நடிக்கத் தொடங்கினான். கந்தல் உடையும், சவரம் செய்யப்படாத முகமும், துலக்காத பற்களும் கடன்காரரை அவனை நெருங்க விடாமல் செய்தன. மனைவியும் பிள்ளைகளும் அவனது தொல்லைகளைத் தாங்கமுடியாது அவதிப்பட்டனர். பழனிவேலுக்கு பைத்தியம் பிடித்ததால் கடன்காரர் சிலர் பழனிவேலுவின் மனைவியைத் தொந்தரவு செய்தனர். அதனால் அவள் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு தனது தந்தையின் வீட்டுக்குச் சென்றுவிட்டாள். அதனால் பழனிவேலு தனிமையில் விடப்பட்டான். தனது வேசம் கலைந்துவிடும் என்பதற்காக அவன் வேலைகள் ஏதும் செய்யாது கோயில்களிலும், வீடுகளிலும் சென்று இரந்து உண்டுவந்தான்.

சிலகாலம் செல்ல அவன் குமரகுருபரனின் வீட்டுக்கு முன்பக்கத்தில் போடப்பட்டிருந்த கொட்டகையில் நிரந்தரமாகத் தங்கிவிட்டான். அவனுக்கு மூன்றுவேளை உணவையும் குமரகுருபரனே கொடுத்துவந்தார். ஒருகாலத்தில் வளமுடன் வாழ்ந்த பழனிவேலு பைத்தியக்காரனாகி கந்தல் உடையுடன் வாழ்வதை நினைக்க குமரகுருபரனுக்கு மனவருத்தமாக இருந்தது. அவர் பழனிவேலை அழைத்துச் சொன்னார்; ‘‘நீ ஒரு காலத்தில் சகல வசதிகளுடனும் வாழ்ந்ததை நான் அறிவேன். தற்பொழுது நோய் வந்துள்ளதால் மிகவும் கஷ்டப்படுகிறாய். உன்னை நினைக்க எனக்கு மிகவும் மனவருத்தமாக உள்ளது. ஆதனால் மூன்றுவேளை உணவையும் நான் உனக்குத் தந்துதவுகிறேன். நீ குளித்து பல நாட்களாகிவிட்டன. வா உன்னைக் குளிப்பாட்டிவிடுகிறேன். நல்ல உடைகளும் தருகிறேன். சுத்தமாக இரு’’ என்றார்.

குமரகுருபரனின் பேச்சு பழனிவேலுக்கு மனவருத்தத்தைக் கொடுத்தது. தான் நல்ல முறையில் வாழ்ந்திருந்தால் இப்படியான

துர்ப்பாக்கிய நிலையை அடைந்திருக்கமாட்டேன் என நினைத்தான். தான் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்துப் பார்த்தான்.

ஒருநாள் அயல் ஊரில் உள்ள அம்மன் கோயில் பரிபாலன சபைத்தலைவர் அவனிடம் நிதிகேட்டு வந்திருந்தார் ‘‘மனிதருக்கே இருக்க வீடு இல்லை. கடவுளுக்குக் கட்டடம் தேவையா..? நூல்களில் கடவுள் நாற்சந்திகளிலும், குளக்கரைகளிலும், ஆற்றோரங்களிலும், மரங்களின் கீழேயும் இருப்பதாகத்தான் நான் படித்தேன். அப்படி இருக்கவிடலாம் தானே. நீங்கள் உங்களின் வயிற்றுப் பிழைப்புக்காக கடவுள்களுக்கு பெரிய பெரிய மண்டபங்களைக் கட்டுகிறீர்கள். அதனால் உங்களுக்குத்தான் இலாபம’’ என்றான்.

தலைவர் மிகவும் அமைதியாகச் சொன்னார்; ‘‘ஐயா கொடுக்க மனமில்லாவிட்டால் இல்லை என்று சொல்லுங்கள். ஏன் வீணாகப் பாவத்தைத் தேடுகிறீர்கள். நாங்கள் நேர்மையானவர்கள் என்பதால்தான் பட்டணத்தில் உள்ள பிரமுகர்கள் பெருந்தொகையாகப் பணம் தந்திருக்கிறார்கள். குமரகுருபரன் ஐயாவுடைய கடைக்குச் சென்றோம். அப்பொழுது அவர் தமது மதிய உணவு உண்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார். எம்மைக் கண்டதும் தனக்கெனக் கொண்டுவந்த உணவை எமக்குத் தந்துவிட்டுத் தான் அருகில் இருந்த சாப்பாட்டுக் கடையில் உணவுவாங்கி உண்டார்’’ என்றது அவனுக்கு நினைவுக்கு வந்தது.

அன்று குருபரனது பேரப்பிள்ளையின் பிறந்ததினம். ஆதனால் மண்டபத்தில் தங்கியிருந்த அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. அவரது பேரப்பிள்ளையினது வீடு சிறிது தூரத்தில் இருந்தமையால் அவர் அங்கு செல்லச் சற்றுத் தாமதமாகிவிட்டது. அதனால் அவரது மகன் வெள்ளிப்பேழையில் உணவு கொண்டுவந்து குமரகுருபரனுக்குக் கொடுத்தான். பழனிவேலுக்கு அது விசேஷ உணவுபோல் தோன்றியது. தமக்கு சாதாரண உணவைத் தந்துவிட்டு தகப்பனார்க்கு நல்ல உணவு கொடுக்கிறானா என பரிசோதிக்க நினைத்த பழனிவேலு கையை நீட்டினான். உடனே குமரகுருபரன் அதைப் பழனிவேலுவிடம் கொடுத்துவிட்டு மகனைப் பார்த்து ‘‘இன்று உங்கள் வீட்டில் வந்து சாப்பிட வேண்டும் என்று கடவுள் நினைத்திருக்கிறார். பேரனையும் தூக்கி முத்தமிட்டு வாழ்த்தி பரிசளிக்க வேண்டும்’’ என்று கூறியவாறு சென்றார் குமரகுருபரன்.

பழனிவேலு உணவுப் பெட்டியைத் திறந்து அதிலிருந்த உணவை எடுத்து உண்டான். அது அவனுக்குக் கொடுக்கப்பட்ட உணவுபோலவே இருந்தது. ‘‘உனக்கு குமரகுருபரன் ஐயாவைப் பற்றித் தெரியாது. எல்லோரையும் சமமாக நினைப்பவர். எமக்குத் தரும் உணவையே தானும் உண்பவர். சாவைத் தவிர்க்கும் அமிர்தமாக இருந்தாலும்

தமக்கருகில் இருப்போர்க்குக் கொடுத்துத்தான் உண்பார்.'' அன்று ஒருநாள் யாரோ உண்ணும்போது கூறியது அவனது காதில் ஒலித்தது.

''முதல் நாள் சமைத்த உணவைக் கூட கொடுக்க விரும்பாத நானெங்கே, தனது உணவையே கொடுக்கும் குமரகுருபரன் எங்கே?'' என்று நினைத்தான் பழனிவேலு.

82. விருந்து புறந்ததாத் தான்உண்டல் சாவா

மருந்துஎனினும் வேண்டற்பாற் றன்று.

விருந்தினர் வந்து வீட்டின் புறத்தே இருக்க தான் மட்டும் உண்பது சாவைத் தவிர்க்கின்ற அமிர்தமாக இருந்தாலும் அது விரும்பத்தக்கது அல்ல.

பாழ்படா வாழ்வு

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய பிரதமகுரு இராஜசங்கரக் குருக்கள் தான் பூசை செய்யும் மஹா கணபதியின் மீது அளவில்லாத அன்புடையவர். காலையும், மாலையும் கோயிலைச் சுத்தமாகக் கழுவிய பின்பே சுவாமிக்கு அபிஷேகம் செய்வார். அதன்பின் மஹா கணபதியை பலவர்ண மாலைகளாலும், பூக்களாலும் அலங்காரம் செய்வார். தினமும் வெவ்வேறு விதமாக அலங்காரம் செய்யப்பட்டிருக்கும் மஹா கணபதியைப் பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டும். தினமும் ஒவ்வொரு கோலத்தில் காட்சியளிக்கும் மஹா கணபதியை அவ்வூர் மக்கள் கண்டு இன்புறுவர். பிள்ளையாருக்குக் குருக்கள் எந்த ஒரு விடயத்திலும் குறை வைக்கமாட்டார். எவ்வேளையிலும் பிள்ளையார் பிரகாசமாக கடும் கறுப்பாக இருப்பார். நெற்றியில் பெரிய சந்தனப் பொட்டும், அதன் உள்ளே அளவான குங்குமப் பொட்டுமிட்டு மாலைகளுடன் மாப்பிளை போல் வீற்றிருக்கும் மஹா கணபதியை அடிக்கடி பார்த்து இரசித்து பரவசப்படுவார் குருக்கள்.

பூசை முடிவடைந்ததும் குருக்கள் பிணியுள்ள மக்களுக்கு நீறுகொண்டு மந்திரங்கள் உச்சரித்துப் பார்வை பார்ப்பார். பின் மந்திரித்த நூலை அவர்களின் கையில் கட்டுவார். அவர் நீறு போட்டால் நோய்கள் யாவும் பறந்துவிடும் என்று மக்கள் நம்பினார்கள். அத்துடன் சோதிடம் பார்ப்பார். அவரின் நாவில் மஹா கணபதி

வீற்றிருப்பதாக மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். அதனால் அவர் கூறுவது யாவும் நிகழ்ந்து கொண்டு வந்தது. அவர் மக்களுக்கு பிரசாதங்களை வழங்கும் போது மந்திரம் சொல்லியே வழங்குவார்.

அவரது உதவியாளன் ஆறுமுகசாமி. அவ்வூரவன். திருமணமாகாதவன். தினமும் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதிக்குத் தொண்டு செய்வதை வழக்கமாகக் கொண்டவன். அவன் ஆரம்பத்தில் உணவுக்காக வீட்டுக்குச் சென்று வந்தான். பின் என்ன நினைத்தானோ தெரியாது கோயிலிலேயே தங்கிவிட்டான். பொங்குவோர், பூசை செய்வோர் மஹா கணபதிக்கு படைத்த பிரசாதத்தை அவனுக்குக் கொடுப்பார்கள். உணவு இல்லாத நாட்களில் கோயில் மண்டபத்தில் படுத்திருப்பான். அவனுக்குக் கோயில் குருக்கள் உணவு கொண்டு வந்து கொடுப்பார். காலப்போக்கில் அவன் குருக்களோடு தங்கிவிட்டான். மடப்பள்ளி வேலைகள் தொடக்கம் சகல வேலைகளையும் அவன் செய்து வந்தான்.

இராஜசங்கரக் குருக்கள் இரக்க சுபாவம் மிக்கவர். பசித்திருப்போரைக் கண்டால் பொறுக்க மாட்டார். அதனால் கோயிலின் வடக்கு வீதியில் மடம் அமைத்து பசியோடு வருவோர்க்கு உணவு கொடுத்து வந்தார். அங்கு சென்ற எவரும் உணவு உண்ணாது வெளியேறியது இல்லை. மாரி காலத்தில் கூட அங்கு அடுப்புகள் புகைத்துக்கொண்டிருக்கும். குருக்களிடம் பார்வை பார்ப்போர், சாஸ்திரம் கேட்போர், கிரக நிவர்த்தி செய்வோர் எல்லோரும் பணத்தையும், பொருட்களையும் கொடுப்பார்கள். மாளையம், திவசம் செய்வோர் குருக்களுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தையும் கொடுப்பார்கள். அவ்வூரில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்றோர் மாதாமாதம் பெருந்தொகையான பணத்தை அனுப்புவார்கள். அதனால் குருக்கள் விதம் விதமாக பிரசாதங்களை சுவையுடன் செய்து மஹா கணபதிக்கும், மக்களுக்கும் வழங்குவார். திருவிழாக் காலங்களில் அவ்வூர் மக்களின் பெரும்பகுதியினர் குருக்களின் மடத்தில் நடக்கும் அன்னதான உணவையே உண்பர்.

குருக்களின் மூத்தமகன் தேவநாராயணன். தேவநாராயணன் முறைப்படி வேதநூல்களையும், சமஸ்கிருதத்தையும் பயின்றிருந்தான். அந்த வருடம் வெளிநாடு ஒன்றில் இருந்து வந்த அக்கிராமவாசி ஒருவன் தேவநாராயணனின் சிறப்பான பூசையைக் கண்டு மகிழ்ந்து அவனை தன்னோடு கூட்டிச் சென்றுவிட்டான்.

குருக்களின் ஏகபுதல்வி அபிராமி. அவளை அயலூரில் வாழும் சுந்தரேஸ்வரக் குருக்களின் மகன் பரிபூரணசர்மா விரும்பினான். அவன் பட்டணத்தில் வைத்தியராகக் கடமை புரிந்து வந்தான். அவர்களது திருமண நாளன்று இரு கிராமத்து மக்களும் திரண்டு வந்து கொடுத்த பரிசுப் பொருட்கள் மலைபோலக் குவிந்து கிடந்தன.

இப்பொழுது ஆறுமுகசாமி அன்னதான மடத்திற்கு மேலும் மூவரை தொழிலுக்காக சேர்த்திருந்தான். அன்னதானம் முன்பைவிடச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

83. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை

பருவந்து பாழ்படுதல் இன்று.

தினமும் தன்னை நாடிவரும் விருந்தினரை வரவேற்று உபசரிக்கின்றவனுடைய வாழ்க்கை வறுமையால் வருந்திக் கெட்டுப் போவதில்லை.

நல்விருந்து

குமரகுருபரன் பழனிவேலுவுடன் நல்லமுறையில் கதைக்கும் போது அவன் பேசாமல் இருப்பான். அவரது அன்பான வார்த்தைகள் நொந்த அவனது மனதிற்கு இதமாக இருந்தன. ஆசையாலும், அவாவாலும், பொறாமையாலும் தான் கெட்டழிந்துபோனதை நினைத்து மனதுக்குள் வருந்தினான் பழனிவேலு. தனது உண்மையான நிலையை வெளிப்படுத்தினால் கடன்காரர் வந்து தொல்லை தருவார்கள் என்று நினைத்தான்.

“பழனி உன்னால் பழையபடி வேலை செய்ய முடியுமானால் சொல்லு. நான் பணம் தருகிறேன். வியாபாரத்தில் லாபமும் வரும், நட்டமும் வரும். வியாபாரத்தில் இலாபம் வரவேண்டுமானால் நாணயமானவனாக இருத்தல் வேண்டும். பொய், களவு கலப்பட வியாபாரம் யாவும் சிறிது நாட்களுக்குத்தான் கைகொடுக்கும். அதிக இலாபம் வராவிட்டாலும் நேர்மையாக உழைப்பவன் ஒருகாலத்தில் முன்னேறுவான்” என்பார்.

தினமும் பழனிவேலு மன ஆறுதலுக்காக குமரகுருபரனுக்கு அருகில் வந்து இருப்பான். ஆனால் கதைக்கமாட்டான். இப்போது அவன் ஒழுங்காகக் குளித்தான். சுத்தமான உடைகளை அணிந்தான். ஆரம்பத்தில் குமரகுருபரனே அவனைக் குளிப்பாட்டினார். அதனால் கடன்காரர் இப்பொழுதும் குமரகுருபரன் தான் அவனைக் குளிப்பாட்டுகிறார் என்று பேசிக்கொண்டனர்.

அன்று இரவு பன்னிரெண்டு மணி இருக்கும். குமரகுருபரனைத் தேடி அயலூரில் இருந்து அவரது நண்பர் ஒருவர் வந்தார். அவருக்கு

அவசரமாகப் பத்தாயிரம் ரூபா தேவைப்பட்டது. அவர் வந்ததும் பழனிவேலு அவரை அழைத்துக்கொண்டு குமரகுருபரனின் வீட்டுக்குச் சென்றான். வீட்டின் முன்பக்கத்தில் மின்விளக்கு ஒன்று ஒளிர்ந்துகொண்டிருந்தது. வாசலில் காவலுக்கு நின்ற அமுதன் ஓடிவந்து என்னவென்று கேட்டான்.

வந்தவர் குமரகுருபரனின் நண்பர் வேந்தன் என்றும் அவசரமாக அவரைக் காணவேண்டும் என்றும் கூறினார். அமுதன் உள்ளே சென்ற சில நிமிடங்களில் குமரகுருபரன் எழுந்துவந்தார். வேந்தனைக் கண்டதும் பதறிப்போனார். ‘‘என்ன விஷேசம். நடுச்சாமத்தில் வந்திருப்பதைப் பார்த்தால் ஏதோ பெரும் காரியம் போல் தெரிகிறது. வெகுதூரத்தில் இருந்து வந்திருக்கிறீர்கள். இரவு உணவு உண்ணாமல் தான் வந்திருப்பீர்கள். கிணற்றடிக்குச் சென்று கைகால் முகம் கழுவிவிட்டு வந்து சாப்பிடுங்கள். அதன் பின் பேசலாம்...’’ என்றார்.

அமுதன் உள்ளே சென்று பார்த்தான். மத்தியானம் செய்யப்பட்ட உணவு உண்ணமுடியாதளவு கெட்டுப்போய் இருந்தது. உடனே அவன் சமைப்பதற்காக அடுப்பை முட்டினான்.

வேந்தன் கை, கால், முகம் கழுவிவிட்டு வந்தார். குமரகுருபரன் சொன்னார்; ‘‘நண்பா நெடுந்தூரத்தில் இருந்து வந்தமையால் களைத்துப் போயிருப்பாய். அகால நேரமாதலால் உணவு பழுதடைந்துவிட்டது. சமைக்கச் சொல்லியுள்ளேன். சற்றுப் பொறுத்துக்கொள். இப்பொழுது நீ வந்த காரியத்தைச் சொல்லு’’ என்றார்.

‘‘அவசரமாகப் பத்தாயிரம் ரூபா எனக்குத் தேவைப்படுகிறது. விடிவதற்குள் கொடுக்காவிட்டால் எனது மானம் போய்விடும்’’ கலங்கினார் வேந்தன்.

‘‘இதற்கெல்லாம் ஏன் கவலைப்படுகிறாய்..? நான் உனக்குப் பணம் தருகிறேன். சாப்பிட்டு களைப்பாறிவிட்டுச் செல்’’ என்றார்.

பழனிவேலு யோசித்துப் பார்த்தான். தானும் குமரகுரபரனைப் போல நல்லபடி வாழ்ந்திருந்தால் இப்படியான துன்பங்கள் வந்திருக்க மாட்டாது என நினைத்து தான் நடந்து கொண்ட முறைகளைப்பற்றிச் சொன்னான். குமரகுருபரன் சிரித்தார் ‘‘நான் முன்பே நீ நடிக்கிறாய் என்பதைக் கண்டுகொண்டேன். இப்படிச் செய்தல் பாவம். நீ உழைத்துப் பட்டகடனைக் கொடு. நான் நீ வியாபாரம் செய்ய முதல் தருகிறேன். அத்துடன் உன்னை நெருக்க வேண்டாமென்று கடன்காரர்களுக்குக் கூறுகிறேன்: முகமலர்வுடன் விருந்தினருக்கு உணவளிப்போரது வீட்டில் பணத்திற்கும், செல்வாக்கிற்கும் குறையிராது. அவனது வீட்டில் இலக்குமி மகிழ்வுடன் வாழ்வதால்

அவனுக்கு எதிலும் குறையிராது. நீயும் விருந்தினர்க்கும், ஏழைஎளியவர்களுக்கும் உன்னாலான உதவிகளைச் செய்து வருவாயேயானால் பெரும் செல்வந்தனாவாய்'' என்றார். பழனிவேலு அவரது வார்த்தைகளை தெய்வ வாக்காக ஏற்றுக்கொண்டான்.

84. அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து

நல்விருந்து ஓம்புவான் இல்.

முகமலர்வோடு விருந்தினரை வரவேற்று உபசரிக்கின்றவனது வீட்டில் மனமகிழ்வோடு திருமகள் வாழ்வாள்.

வித்தில்லா விளைநிலம்

கணபதிப்பிள்ளை அவ்வூரில் வாழும் விவசாயி. அவரிடம் பெருந்தொகையான விளைநிலங்கள் இருந்தன. அதைவிட மாந்தோப்புகளும், தென்னந்தோப்புகளும் இருந்தன. அவரது நிலங்கள் யாவும் வளமானவை. அதனால் அவருக்கு நல்ல விளைச்சல் வருடாவருடம் கிடைத்தது. தேங்காய், மாம்பழம், காய்கறிகள் முதலியவற்றை விற்கும் வருமானம் அவரது குடும்பச் செலவுக்குப் போதுமானதாக இருந்தது.

அவர் தானியங்களை ஒருபோதும் விற்பதில்லை. விதை தானியமாக தனக்குத் தேவையானதை விட நான்கு மடங்கு சேமித்து வைப்பார். மிகுதியானவற்றை தானதர்மம் செய்வார். அவரது சேனைகளில் பலர் வேலை செய்தனர்.

அக்கிராமம் விவசாயக் கிராமமாகையால் மக்களில் அநேகர் வறியவர்களாகவே இருந்தனர். பல குடும்பங்கள் வருமானமின்மையால் பசியோடும் பட்டினியோடும் வாழ்ந்து வந்தன.

ஒவ்வொரு குடும்பத்திலும் அதிக பிள்ளைகள் இருந்தனர். அவ்வூரில் நல்லதொரு பாடசாலை இருந்தும் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வது மிகக் குறைவு. கணபதிப்பிள்ளை அவ்வூர்ப்பிள்ளைகள் ஒழுங்காகப் பாடசாலைக்குச் சென்று கல்விகற்க வேண்டும் என்பதற்காக மதிய உணவாக இலைக்கஞ்சி வழங்கினார். தோட்டங்களில் உள்ள கீரைவகைகளைப் பிடுங்கி வந்து அரிசியுடனும், தேங்காய்ப் பாலுடனும் கலந்து பிள்ளைகளுக்கு வழங்கி வந்தார். அத்துடன் பாடசாலைக்கு பிள்ளைகளைச்

செல்லுமாறு ஊரில் பிரசாரம் செய்தார். பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளைக் கண்டால் அவ்விடத்தில் வைத்தே தண்டனை வழங்கினார். இதனால் பிள்ளைகள் யாராவது பாடசாலைக்குச் செல்லாவிட்டால் வீட்டைவிட்டு வெளியே வரமாட்டார்கள்.

இரண்டு வருடங்கள் அக்கிராமத்தில் மழை பெய்யவில்லை. அதனால் குளங்கள் யாவும் வற்றிவிட்டன. கால்நடைகள் உணவுக்காகவும், நீருக்காகவும் மிகவும் கஸ்டப்பட்டன. மக்களின் வாழ்வு சீர் குலைந்தது. கிணறுகள் வற்றியமையால் மக்கள் விவசாயம் செய்ய முடியாது திண்டாடினர்.

கணபதிப்பிள்ளை அந்த வருடம் விளைந்த நெல் முழுவதையும் சேமித்து வைத்திருந்தார். தனது குடும்பத் தேவைக்கும் விதைப்பதற்குமாக நெல்லை எடுத்து வைத்துவிட்டு தன்னை நாடி வரும் விருந்தினருக்கு உணவிட்டு வந்தார். இரண்டு, மூன்று மாதங்களில் அவர் தானதர்மங்களுக்காக ஒதுக்கி வைத்திருந்த தானியங்கள் முடிந்துவிட்டன.

அவரது தோட்டங்களில் உள்ள கிணறுகளை ஆழமாக்கி மற்றையவர்களின் துணையுடன் பயிர் செய்தார். விவசாயிகளின் கிணறுகளை கூட்டுச் சேர்ந்து ஆழமாக்கும்படி ஆலோசனை கூறினார். அதன்படி மக்கள் தத்தமது கிணறுகளை ஆழமாக்கினர். திடீரென்று யாரும் எதிர்பாராத வகையில் மழை பெய்தது. அதனால் குளங்களும் கிணறுகளும் ஓரளவு நிறைந்தன. மக்கள் சிறு தானியங்களையும், காய்கறி வகைளையும் செய்கை பண்ணத் தொடங்கினர்.

தானதர்மங்களுக்கென ஒதுக்கப்பட்ட நெல் முடிந்ததும் மிகவும் கவலைப்பட்டார் கணபதிப்பிள்ளை. அவரிடம் இருக்கும் வயல் முழுவதற்கும் விதைப்பதற்கு நூற்றி இருபத்தைந்து புசல் நெல் தேவை. ஆனால் அவரிடம் இருப்பது நூறு புசல் நெல் மட்டுமே. சென்ற முறை நூற்றி இருபத்தைந்து புசல் நெல் விதைத்து விளைந்த நெல் முழுவதையும் சேமித்து வைத்ததால் தான் அந்தக் கிராமத்தின் பஞ்ச நிலையை ஓரளவாவது போக்க முடிந்தது. விதைப்பதற்கு இன்னும் இரண்டு மாதங்கள் இருந்தன. அதற்குள் அவசர தேவைக்கென யாராவது கேட்டால் கொடுக்க வேண்டும். என்ன செய்வது என்று யோசித்தார் கணபதிப்பிள்ளை.

அன்று மாலை நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயக் குருக்கள் கணபதிப் பிள்ளையின் வீடுதேடி வந்தார். கணபதிப்பிள்ளை அவரை அன்புடன் வரவேற்றார் ‘‘பிள்ளைவாள் இரண்டு வருடமாக மழை பெய்யாததால் பிள்ளையாருக்கு பெரும் பொங்கல் ஒன்று பொங்குவதாக நேர்த்திக்கடன் வைத்தேன். அதற்குக் குறைந்தது ஐம்பது புசல் அரிசியாவது வேண்டும். நீங்கள் தான் பொங்கலை ஆரம்பித்தும் வைத்தல் வேண்டும்.’’

கணபதிப்பிள்ளை எதுவும் பேசவில்லை. வித்தியா மஹா கணபதி அவரது குலதெய்வம். தன்னிடம் இல்லாவிட்டாலும் பிறரிடமாவது வாங்கிக் கொடுக்கலாம். ஆனால் ஊரில் யாரிடமும் ஓரிருமணி நெல்கூட இல்லை.

''நீங்கள் எவ்வளவு எதிர்பார்க்கிறியள்.''

குருக்கள் அக்கேள்வியை எதிர்பார்க்கவில்லை. சற்றுத் தடுமாறியபடி சொன்னார், ''உங்களைத் தான் நம்பி வந்திருக்கிறன். ஊரில் யாரிடமும் நெல்லைப் பெறமுடியாது...''

''விதை நெல்லிலும் எடுத்திட்டன்'' என்று யோசித்தவர், பின்பு சொன்னார் ''நூற்றி இருபது இருபத்தைந்து புசல் நெல் விதைக்கத் தேவை. ஆனால் அவ்வளவு நெல் என்னிடம் இப்ப இல்லை. ஐம்பது புசல் தாறன். ஒரு மாதிரிச் சமாளியுங்கோ....''

''காணாது பிள்ளை''

''சரி.... சரி.... இன்னும் பத்துப் புசல் கூடத் தாறன்'' என்றார். கணபதிப்பிள்ளை குருக்கள் எழுந்து சென்றுவிட்டார்.

கணபதிப்பிள்ளை தன்னிடம் மிகுதியாக இருந்த நாற்பது புசல் நெல்லில் பதினைந்து புசல் நெல்லை பாடசாலைப் பிள்ளைகளின் இலைக்கஞ்சித் தேவைக்கு எடுத்து வைத்துவிட்டு மிகுதியை தனது வயலின் காற்பகுதிக்கு விதைக்க நினைத்தார். பின் என்ன நினைத்தாரோ தெரியாது தனது வயல் முழுவதையும் பண்படுத்தி உள்ள நெல்லை வயல் முழவதற்கும் விதைத்துவிட்டார். அந்த வருடம் நல்ல மழை பெய்தது. மிகவும் தூரத்தூர நின்ற நெற்பயிர்கள் மட்டம் வெடித்து ஒன்றையொன்று முட்டின. அந்த வருடம் கணபதிப்பிள்ளைக்கு வழமையைவிட அமோக விளைச்சல் கிடைத்தது. மூன்று வருடங்கள் அவ்வயலில் விளையும் நெல் அந்த வருடம் விளைந்திருந்தது. கணபதிப்பிள்ளையின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

85. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்துஓம்பி

மிச்சில் மிகையான் புலம்.

விருந்தினரைப் போற்றி உணவளித்து எஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய நிலத்தில் வித்திடாத இடமும் விளைச்சலைக் கொடுக்கும்.

தேவரின் விருந்தினன்

பழனிவேலு புதிதாக வியாபாரத்தை ஆரம்பிப்பதற்காக குமரகுருபரன் பணம் கொடுத்தார். அத்துடன் அவனது கடன்காரர்களை அழைத்து பழனிவேலின் நிலையை எடுத்துக்கூறி அவன் வியாபாரம் செய்து கடன் அடைக்கும்வரை பொறுத்திருக்குமாறு கூறினார். கடன்காரர் எல்லோரும் குமரகுருபரன் மீது மதிப்பு வைத்திருந்தமையால் அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்டனர். பழனிவேலு நல்லதொரு நாளில் தனது மனைவி, பிள்ளைகளை அழைத்துவந்து தொழிலைத் தொடங்கினான். அதுவரை காலமும் எச்சில் கையால் காகம் கலைக்காத பழனிவேலு, விருந்தினர் பலரை வீட்டுக்கு அழைத்துவந்து நல்லமுறையில் உபசரித்தான். தன்னைத் தேடிவரும் விருந்தினரை முகமலர்வுடன் வரவேற்று உபசரித்தான். குமரகுருபரன் கூறிய வார்த்தைகள் அவனது மனதில் ஒலித்துக்கொண்டிருந்தது. ‘‘பழனிவேலு ஒருவனிடம் பணம் இருக்கலாம், செல்வாக்கு இருக்கலாம். அத்துடன் அவன் உயர்ந்த உத்தியோகத்திலும் இருக்கலாம். அவற்றால் மற்றையோர் பயனடைந்தால் தான் அது அவனுக்குப் பெருமையைத் தரும். ஊரில் உள்ளோர் வாழ்த்தினால் தான் அவன் உயர்வடைவான். உதவி செய்யாத ஒருவனை யாரும் மதிக்கமாட்டார்கள்’’.

அந்த வார்த்தைகளில் பொதிந்திருந்த அர்த்தத்தை அவன் எண்ணிப் பார்த்தான். முன்பென்றால் அவன் மனிதர்களுக்கு மட்டுமல்ல ஏனைய உயிரினங்களுக்கும் உணவு போடமாட்டான். மிஞ்சும் உணவு வகைகளை தான் வளர்க்கும் நாய்க்கும், கோழிகளுக்குமே போடுவான். அதனால் அவனது வீட்டுப்பக்கம் காகங்கள் கூட வருவதில்லை. பழனிவேலுவின் மனைவி புரட்டாதிச் சனிக்கிழமைகளில் விரதமிருப்பாள். அவ்வேளைகளில் காகத்திற்கு சோறுவைக்கக் கூப்பிட்டால் மரத்தில் இருக்கும் காகம் பறந்து சென்றுவிடும். அதனால் அவனது மனைவி புரட்டாதிச் சனிக்கிழமைகளில் இரவு பசுமாட்டிற்கு வைத்துவிட்டுச் சாப்பிடுவாள். பழனிவேலுவின் கடை எரிந்தபோது கணவனுக்கு அவள் சொன்னாள்; ‘‘புரட்டாதிச் சனிக்கிழமை நான் விரதமிருந்து காகத்திற்கு உணவு வைக்கும்போது ஒருநாளும் காகம் எமது வீட்டில் உண்டதில்லை. அதனால் தான் இத்தரித்திரம் வந்தது.’’

அவன் குமரகுருபரனோடு இருந்த காலத்தில் குமரகுருபரன் தினமும் தான் உணவு அருந்தும்போது காகங்களுக்கு உணவு

வைத்த பின்பே சாப்பிடுவார். அவரைக் கண்டதும் பத்துப் பதினைந்து காகங்கள் அவருக்குப் பின்னால் செல்லும். அவர் உணவை வைக்குமுன் அடிபட்டு உண்ணும். அதனால் தான் அவர் செல்வம், செல்வாக்குடன் இருக்கிறார் என்று நினைத்தான் பழனிவேலு.

தினமும் இரவு பத்து மணிவரை விழித்திருக்கும் பழனிவேலு தன்னிடம் வரும் விருந்தினர் யாவரையும் அன்புடன் அழைத்துவந்து உணவு கொடுப்பான். வழக்கமாக இரவில் பத்து விருந்தினர் அவனிடம் உணவு அருந்த வருவார்கள். அன்று ஏழுபேர் வந்து உணவு அருந்திவிட்டுச் சென்றுவிட்டனர். மூன்றுபேர் வரவில்லை. அவர்களுக்குப் பதிலாக வேறு மூவர் வந்தனர். அவர்களை இன்முகத்துடன் வரவேற்று அறுசுவை உணவுகளை வழங்கிய பழனிவேலு தனது மனைவியை அழைத்து பரமசாமியும், வடிவேலுவும், சுந்தரமும் இன்னும் வந்து சாப்பிடவில்லை. அவர்களுக்கென சமைத்த உணவை வேறு மூவருக்குக் கொடுத்துவிட்டேன். எனவே அவர்களுக்குச் சமை'' என்றான். அவனது மனைவி மகிழ்வுடன் சமைக்கச் சென்றாள். பழனிவேலு தனது உதவியாளனை அழைத்து வராத மூவரையும் சென்று பார்த்து வரும்படி கூறினான்.

உதவியாளன் அவர்கள் மூவரையும் எங்கும் தேடிப்பார்த்துவிட்டு அவர்களைக் காணவில்லை என்று கூறினான்.

''வந்த விருந்தினரை உபசரித்து, வரும் விருந்தினருக்காகக் காத்து இருக்கும் இல்வாழ்வானை தேவர்கள் வாழ்த்தி விருந்தளிப்பர்'' என்று குமரகுருபரன் கூறியதை அடிக்கடி நினைத்துப்பார்த்து அதன்படி நடப்பதென தீர்மானித்த பழனிவேலு வரவிருக்கும் அந்த மூன்று விருந்தினரையும் எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

86. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்துஇருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு.

தன்னிடம் வந்த விருந்தினரைப் போற்றி உபசரித்து, இனிவரும் விருந்தினரைப் போற்றி உபசரிக்கக் காத்திருப்பவன் வானுலகத்தில் உள்ள தேவர்களுக்கு நல்ல விருந்தினனாவான்.

வரையறை இல்லாப் பயன்

சின்னத்துரை மூதூரில் வாழும் ஓய்வு பெற்ற அதிபர். கற்பிக்கும் காலத்தில் அவர் கடமை தவறாதவர். கண்டிப்பானவர். அதிபராக கடமையாற்றும் காலத்தில் தனது வேலைகளையும் ஒழுங்காகச் செய்து தனக்குக் கீழ் பணிபுரியும் ஆசிரியர்களைக் கொண்டும் ஒழுங்காக வேலை செய்விப்பவர். அதனால் அக்கிராமத்து மக்கள் அவரை தெய்வம் போல மதித்தனர். அவரிடம் கல்வி கற்ற அவ்வூரவர் அவரைக் கண்டதும் வணங்கிச் செல்வர்.

அவர் திருமணஞ் செய்த காலத்தில் இருந்து தன்னால் இயன்ற தானதர்மங்களை செய்துவந்தார். அவரின் வீட்டுக்குச் செல்பவர்கள் உணவருந்தாமல் திரும்பிச் சென்றதில்லை. தாய், தகப்பன், பேரன்மாரின் திவச நாட்களிலும், சதுர்த்தி, பௌர்ணமி, அமாவாசை, சோமவாரம் போன்ற புண்ணிய தினங்களிலும் விருந்தினர்களை அழைத்து வந்து உணவு கொடுத்த பின்பே தான் உண்பார். இத்தினங்களில் பெரும்பாலும் அவர் ஏழை மக்களுக்கும், அனாதை இல்லங்களில் இருக்கும் சிறுவர்களுக்கும், முதியோர் இல்லங்களில் இருக்கும் முதியவர்களுக்கும் அறுசுவை உணவு வகைகளை வழங்குவதில் மிகவும் கவனமாக இருப்பார்.

சின்னத்துரை அதிபர் சிறுவர் இல்லத்திற்கும், முதியோர் இல்லத்திற்கும் உணவு வழங்குவதாக அறிவித்தால் அங்குள்ளோர் மிகுந்த ஆனந்தமடைவார்கள். கைதேர்ந்த சமையல்காரர்களைக் கொண்டு மிகவும் சுவையாகச் சமைத்த உணவுகளை அவர் வழங்குவதால் உண்ட பின்பும் அவர்கள் அவ் உணவின் சுவையைப் பற்றிப் பேசிக் கொள்வார்கள். இனி எப்போது தருவாரென எதிர்பார்ப்பார்கள்.

சின்னத்துரையின் மைத்துனன் நாகலிங்கம். பெரிய விவசாயி. பெரும் பணக்காரன். அவனும் தானதர்மங்கள் செய்வதில் பின் நிற்காதவன். அவனது வீட்டுக்குச் செல்பவர்களை அன்புடன் உபசரித்து உணவளிப்பான். முதியோர் இல்லங்களில் வாழ்வோருக்கும், சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் உள்ள சிறுவர்களுக்கும் அடிக்கடி உணவளிப்பான். கோயில் திருவிழாக் காலங்களில் அடியவர்களுக்கு அன்னதானம் கொடுப்பான். ஆனால் சமையலில் பெரிதாக அவன் கவனம் செலுத்துவது இல்லை. எல்லோருக்கும் உணவளிக்க வேண்டும் என்பதில் அக்கறையாக இருப்பானே தவிர தான் கொடுக்கும் உணவை சுவையுள்ளதாகக் கொடுக்க வேண்டுமென்று நினைக்கமாட்டான். அதனால் அவனது வீட்டிற்கு செல்லும் விருந்தினர் உணவருந்த விருப்பப்படுவதில்லை. முதியோர் இல்லங்களிலும் இருப்போர் நாகலிங்கம் உணவளிப்பதை பெரிதாகக் கதைக்க மாட்டார்கள். பௌர்ணமி தினத்தில் சின்னத்துரையும் உணவளிப்பான்.

விருந்தினர் சின்னத்துரையின் வீட்டுக்கே அதிகமாகச் செல்வார்கள். பின் நாகலிங்கம் மனவருத்தப்படக் கூடாதென்பதற்காக நாகலிங்கத்தின் வீட்டுக்கும் செல்வார்கள்.

நாகலிங்கம் தனது நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள், தகுதியானவர்கள், உயர்ந்தவர்கள் என வகைப்படுத்தி அவர்களுக்கென விசேடமாக தயாரிக்கப்பட்ட உணவு வகைகளைப் பரிமாறுவான். ஆனால் சின்னத்துரை அப்படியானவன் அல்ல. எல்லோருக்கும் சுவையான உணவு கொடுக்க வேண்டும் என்பதில் அக்கறையாக இருப்பார்.

87. இனைத்துணைத்து என்பதொன்று இல்லை; விருந்தின்

துணைத்துணை வேள்விப் பயன்.

விந்தோம்பல் என்னும் வேள்வியின் பயன் இவ்வளவு என்று அளவுபடுத்திக் கூறமுடியாது. விருந்தினரின் தகுதியின் அளவே அந்த வேள்வியின் அளவாகும்.

பற்றற்றோர்

மயில்வாகனன் பட்டணத்தில் வட்டிக்கடை வைத்து நடாத்துபவன். ஆரம்பத்தில் அவன் கணபதிச் செட்டியாரின் வட்டிக்கடையில் சிப்பந்தியாக வேலை செய்து வந்தான். மிகவும் திறமைசாலியான மயில்வாகனனிடம் பூரண நம்பிக்கை வைத்திருந்த கணபதிச் செட்டியார் ஊரில் உள்ள பெரும் பணக்காரர்களிடம் அவனது திறமையைப் பற்றி அளவுக்கதிகமாகப் புகழ்ந்து கூறுவார். அரிச்சந்திரன் மறுபிறவி எடுத்து தன்னிடம் சேவகம் செய்ய வந்திருப்பதாக அவர் அடிக்கடி கூறிக்கொள்வார். அதனால் ஊர்மக்களும், பிரமுகர்களும் செட்டியாரை விட மயில்வாகனன் மேல் அதிக மதிப்பு வைத்தனர். அவர்களின் மதிப்புக்கேற்ப மயில்வாகனனும் அவர்களைப் போற்றி வந்தான். அதனால் ஊரில் உள்ளவர்கள் தமது வீட்டில் நிகழும் வைபவங்களுக்கெல்லாம் அவனையும் அழைத்தனர்.

அந்த ஊரில் வாழ்ந்த சுப்பிரமணியம் என்ற பணக்காரர் ஒருவர் தனது மகளை மயில்வாகனனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். அதன் பின் மயில்வாகனனை தனியாக ஒரு வட்டிக்கடை தொடங்கும்படி வற்புறுத்தினார். ஆரம்பத்தில் மறுத்த மயில்வாகனன்,

சுப்பிரமணியத்தின் நெருக்குதலால் தனியானதொரு வட்டிக்கடையை ஆரம்பித்தான். மக்களிடையே மிகுந்த செல்வாக்கை மயில்வாகனன் பெற்றமையால் பெரும்பான்மையோர் மயில்வாகனிடத்திலேயே தமது தங்க நகைகளைக் கொடுத்து பணம் பெற்றனர். இதனால் கணபதிச் செட்டியாருக்கு வருமானம் குறைந்துவிட்டது.

மயில்வாகனன் மிகவும் நல்லவன, நேர்மையானவன். ஆனால் உதவிசெய்ய மாட்டான். கணபதிச் செட்டியாரிடம் நகைகளை அடைவு வைத்தோர் திரும்பவும் அதை எடுக்கும் போது கழிவாக ஒரு தொகை பணத்தைக் கழித்துவிடுவார். ஏழைகளானால் வட்டியைக் குறைவாக வாங்குவார். வட்டிக்காசு குறைவாகக் கொண்டு வந்தோரிடம் மிகுதியைப் பின்பு தருமாறு கூறி நகைகளைக் கொடுத்து விடுவார். சில அவசிய தேவைகளுக்காக தாலிக்கொடியைச் சிலர் அடைவு வைப்பார்கள். பின் தமது வீட்டில் அல்லது நெருங்கிய உறவினரின் வீடுகளில் ஏதாவது வைபவங்கள் நடந்தால் செட்டியாரிடம் வந்து நிலமையைக் கூறுவார்கள். செட்டியார் தாலிக்கொடியைக் கொடுப்பார். அவர்களும் வைபவம் முடிய திருப்பிக் கொண்டுவந்து கொடுத்து விடுவார்கள். அத்துடன் செட்டியார் தனது வீடு தேடி வந்தவர்களுக்கு உணவு அளிக்காமல் விடமாட்டார். யாராவது அவசர தேவை காரணமாக நடுச் சாமத்தில் வந்து எழுப்பினாலும் காசு கொடுப்பார். சிலர் முன்பு அடைவு வைத்த நகையின் கணக்கால் காசு கேட்டாலும் அந்நகை பெறுமதியாக இருந்தால் பணம் கொடுப்பார். அவ்வூரில் உள்ள நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய மடத்திற்கு தினமும் மானியமாக அரிசியும், காய்கறிப் பொருட்களையும் அனுப்பி வைப்பார். அங்குள்ள மடத்தில் தினமும் ஐந்தாற ஏழை மக்கள் உணவருந்துவார்கள்.

மயில்வாகனன் வட்டிக்கடை தொடங்கிய போது அனேகமானோர் அவனிடமே நகைகளைக் கொடுத்து பணம் பெற்றனர். பின் அவற்றை திரும்பப் பெறும்போது பல பிரச்சினைகள் எழுந்தன. மாத வட்டி அறவிடும் மயில்வாகனன், முதலாம் திகதி நகையைக் கொடுத்து பணத்தைப் பெற்றவர்கள் அடுத்த மாதம் இரண்டாம் திகதி நகைகளைத் திரும்பப் பெறச் சென்றால் இரண்டு மாதத்திற்கும் வட்டி செலுத்துதல் வேண்டும்.

ஏழை எளியவர்களுக்கு ஒருவேளை உணவுகூடக் கொடுக்கமாட்டான். அவன் சாப்பிடும் போது யாராவது வந்தால் உடனே கையைக் கழுவிவிட்டு எழுந்து வந்து பதில் கூறுவான். வந்தவர் பசியோடு உணவை எதிர்பார்த்தால் தனக்கு முக்கிய வேலை இருப்பதாகக் கூறி பின்பு வந்து சந்திக்குமாறு கூறிவிட்டு பிற்பக்கமாகச் சென்றவிடுவான். வந்தவன் சென்ற பின்பு தான் சாப்பிட்டுவிட்டு வைத்த மீதி உணவை உண்பான்.

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய பிரதம குரு ஸ்ரீ இராஜசங்கரக் குருக்கள் மயில்வாகனன் கணபதிச் செட்டியாரோடு இருந்த காலத்தில் அவன் மீது மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். அவர் தனது மகளின் திருமணத்திற்காக கணபதிச் செட்டியாரிடம் கடனாகப் பொறுப்பின்றிப் பணம் கேட்டார். குருக்கள் கேட்ட தொகையை மறுவார்த்தையின்றி கணபதிச் செட்டியார் கொடுத்துவிட்டார். அதேபோல் மயில்வாகனனிடமும் கேட்டார். மயில்வாகனன் பொறுப்பாக தங்க ஆபரணங்களைக் கேட்டான். அவர் இல்லையென்று கூற அவருக்கு பணம் கொடுக்க மறுத்துவிட்டான். குருக்கள் மிகவும் மனம் வருந்தினார். அதைக் கேள்விப்பட்ட கணபதிச் செட்டியார் குருக்களுக்கு போதியளவு பணம் கொடுத்தார்.

அன்று கடும்மழை பெய்தது. மயில்வாகனனது வட்டிக்கடைக்குள் நுழைந்த கொள்ளைக்காரர் மயில்வாகனனைத் தாக்கிவிட்டு அங்கிருந்த நகைகள் அனைத்தையும் கொள்ளையிட்டுச் சென்றனர்.

மறநாள் நகை அடைவு வைத்தோர் கடைக்கு வந்து தமது நகைகளைத் திரும்பித் தருமாறு கேட்டனர். மயில்வாகனன் அழுதான். குழறினான். தனது கஸ்டத்தை எடுத்துச் சொன்னான். எனினும் எவரும் அவனுக்காகப் பரிதாபப்படவில்லை. அவனுக்கு ஆறுதல் கூற யாரும் முன்வரவில்லை. கடனைக் கேட்டு நெருக்கினார்கள். பலர் காவல் நிலையத்தில் சென்று முறையிட்டனர். அதனால் மயில்வாகனனுக்கு பெரும் கஸ்டம் ஏற்பட்டது.

88. பரிந்துஓம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி

வேள்வி தலைப்படா தார்.

விருந்தோம்பல் என்னும் வேள்வியை நிகழ்த்தாதவர் ‘‘மிகவும் சிரமப்பட்டு பொருளைத் தேடி இன்று அதனை எந்தப் பயனும் இல்லாமல் இழந்து விட்டோமே’’ என்று வருந்துவர்.

மடைமையால் வருவது

கந்தவனம் சேனையூரில் வாழ்ந்து வரும் விவசாயி. அவனது தந்தை நாகலிங்கம் ஒரு கடுமையான உழைப்பாளியாக இருந்தமையால் ஏராளமான செல்வங்களைத் தேடியிருந்தார். அச்செல்வம் முழுவதற்கும் கந்தவனமே வாரிசு. நூாகலிங்கம் தனது

ஒரே மகனைச் மிகவும் செல்லமாக வளர்த்தார். அவனுக்காக கடுமையாக உழைத்து ஏராளமான விவசாய நிலங்களை வாங்கியிருந்தார். தென்னை, பனை, வாழை, மா, கழுகு போன்ற மரங்கள் ஆயிரக் கணக்கில் தோப்பாக நின்றன. அவற்றில் இருந்து வரும் ஒரு நாள் வருமானம் கந்தவனத்தின் குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்குப் போதுமானதாக இருந்தது. அதைவிட வயல்கள், தோட்டங்களில் இருந்து வரும் வருமானத்தின் அளவைக் கணக்கிட முடியாது.

கந்தவனத்தின் தோப்புகளிலும் தோட்டங்களிலும் ஏராளமான தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனர். அவர்களுக்குக் கந்தவனம் ஒழுங்காக சம்பளம் கொடுப்பதில்லை. மதிய வேளைகளில் நல்ல உணவும் கொடுப்பதில்லை. அதுகும் அரைவயிற்றுக்கே கொடுப்பார். சந்தைக்குக் கொண்டு சென்று விற்க முடியாத காய்கறிகள், வாழைக்குலை, தேசிக்காய் முதலியவற்றை தொழிலாளர்களுக்குக் கொடுப்பார். ஏழைத் தொழிலாளர்கள் வேண்டா வெறுப்பாக அவற்றை வாங்கிச் செல்வர். சிலர் அவரிடம் வாங்கி அவர் சென்ற பின் அவ்விடத்திலே வீசிவிட்டும் செல்வர்.

அன்று அவரது மனைவியின் தூரத்து உறவினன் கந்தசாமி அவனிடம் உதவிகேட்டு வந்திருந்தான். கந்தசாமி வறியவன். ஐந்து பிள்ளைகளின் தந்தை. சேனையூரில் இருந்து முப்பது மைல்களுக்கப்பால் உள்ள அரசாங்கம் கொடுத்த குடியேற்றத் திட்டக் காணியில் சிறியதொரு வீடு அமைத்து வாழ்பவன். கோடை காலங்களில் கிணற்று நீர் வற்றி விடுவதால் கிணற்றை ஆழமாக்குவதற்கு பணஉதவி கேட்கவென வந்திருந்தான். காலையில் புறப்படும் போது அவனது மனைவி அபிராமி கூறிய வார்த்தைகள் அவனின் காதில் ஒலித்தன. “கந்தவனம் தனது மனைவி பிள்ளைகளுக்குக் கூட நல்ல உணவு கொடுப்பதில்லை. நல்ல உடைகள் வாங்கிக் கொடுப்பதில்லை. அதைவிட கோயில் குளங்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் ஏதாவது கொடுத்ததாய் நான் கேள்விப்பட்டது கூட இல்லை. கந்தவனத்தின் மனைவி தனது பெற்றோர் வீட்டுக்கு வருடப்பிறப்பு தீபாவளிப் பண்டிகைகளுக்கு வரும்போது கையில் உணவுப் பண்டமேதும் கொண்டு வருவதில்லையென்று தாய் சொல்லுறவா. அதோடை கந்தவனம் தனது மனைவியின் பெற்றோர், சகோதரர்களை அண்டுவதில்லை. அவர்கள் எல்லோரும் ஏழைகள். அண்டினால் ஏதாவது கொடுக்க வேண்டும் என்பதற்காக மனைவியையும் அவர்களின் வீடுகளுக்கு செல்ல அனுமதிப்பதில்லை. இந்த நிலமையில் உங்களுக்குத் தருவனே?”

“ என்ன கந்தசாமி... எங்கை வந்தனீ....” கேட்டார் கந்தவனம்.

“உங்களிட்டைத் தான் வந்தனான்.... கோடை காலத்தில் தோட்டத்துக் கிணறு வற்றிப் போயிடுது... கொஞ்சம் ஆழமாக்கினால் கோடை காலத்திலையும் பயிர் செய்யலாம். அதுதான் கொஞ்சக் காசு கேட்பம் என்று வந்தனான்...” தடுமாறியபடி கூறினான் கந்தசாமி.

கந்தவனம் அதை எதிர்பார்க்கவில்லை. அவருக்குக் கோபம் வந்தது. “என்னட்டைக் காசில்லை. தோட்டங்கள் கனக்க இருக்குத்தான். அதைப் பராமரிக்க எவ்வளவு பணம்தேவை தெரியுமே? கூலிக்காரர் சம்பளத்தைக் கூடக் கேக்கினமே தவிர வேலையை ஒழுங்காய்ச் செய்யிறேல்லை. அதைவிட பகலிலை வேலை செய்யேக்கை எந்தெந்தத் தென்னையிலை தேங்காய் பழுத்திருக்கு, எந்தெந்த வாழையிலை குலை முற்றியிருக்கென்று கண்காணிக்கிறாங்கள். இராவிலை வந்து களவெடுக்கிறாங்கள். நான் கஸ்டப்பட்டுத் தேடி ஊரவைக்குத்தான் குடுக்கிறன்...”

“கனக்க காசு வேண்டாம். இரண்டாயிரம் ரூபா தந்தால் போதும். சீட்டுக் கட்டுறன். இரண்டு, மூன்று மாதத்திலை எடுத்துத் தந்திடுவன்...”

“சீட்டை எடுத்து ஒண்டாய் வெட்டு. நான் ஒருக்கால் வயலுக்குப் போக வேணும்” என்று கூறிவிட்டு கந்தசாமியின் பதிலை எதிர்பாராது சென்றான் கந்தவனம்.

கந்தசாமிக்கு அவமானமாக இருந்தது. மனைவியின் சொல்லைக் கேட்டு வராமல் நின்றிருக்கலாம் என எண்ணினான். முப்பது மைல் சைக்கிள் ஓடியதால் களைப்பாக இருந்தது. அத்துடன் கடுமையாகப் பசித்தது. காசு தராவிட்டாலும் தேனீராவது தந்திருக்கலாம் என எண்ணியவாறு சுற்றிவரப் பார்த்தான். வீட்டில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

“கந்தவனம் அண்ணை..... கந்தவனம் அண்ணை....”

பலமுறை அழைத்த பின்பு வீட்டின் உள்ளிருந்து “அவரில்லை” என்றொரு பெண்குரல் ஒலித்தது.

“நான் போயிட்டு வாறன்” என்றான் கந்தசாமி.

“சரி” உள்ளிருந்தே ஒலித்தது அதே பெண்குரல்.

கந்தசாமி பசியோடும் களைப்போடு சைக்கிளைத் தள்ளியபடி வெளியே வந்தான். வீட்டுக்குச் செல்ல முப்பது மைல்கள் சைக்கிள் ஓடவேண்டும் என்பதை நினைக்க அவனுக்கு தலை சுற்றியது.

89. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா

மடமை; மடவார்கண் உண்டு.

பெரும் செல்வந்தர்களுக்கு உள்ள வறுமை என்பது, விருந்தோம்பலைப் போற்றாத அறியாமையாகும். இந்த அறியாமை அறிவிலிகளிடமே உள்ளது.

நோக்கக் குழையும்

கலைவாணனும் மதிவதனனும் சிறுவயதில் இருந்தே நண்பர்கள். இருவரும் ஒரு கிராமத்தை சேர்ந்தவர்கள். இருவரது வீடுகளும் அருகருகில் இருந்தன. இருவரது பெற்றோரும் நண்பர்கள். கலைவாணனது தந்தையார் வியாபாரத்தில் நட்டமடைந்ததால் தாம் இருந்த வீட்டை விற்று கடனைச் செலுத்திவிட்டு அவ்வூரை விட்டுச் சென்றுவிட்டனர். அதனால் கலைவாணனுக்கும் மதிவதனனுக்கும் இடையில் தொடர்பில்லாமல் போய்விட்டது. கலைவாணன் வருடத்திற்கு ஓரிரு தடவைகள் மதிவதனனுக்குக் கடிதம் எழுதுவான். எனினும் தான் எங்கிருந்து கடிதம் எழுதுகிறேன் என்பதை எழுதுவதில்லை.

‘‘நண்பா நாம் இருவரும் எவ்வளவு ஒற்றுமையாக இருந்தோம். எவ்வளவு அன்பாகப் பழகினோம். அதே போல் எமது குடும்பமும் அருகருகே இருந்து உறவினர்களைப் போல் அன்பால் திழைத்திருந்தது. பண்டிகைக் காலங்களில் உனது தந்தையார் எமது குடும்பத்திற்கு புதிய உடைகள் வாங்கித் தருவார். அதேபோல் எனது தந்தையார் உனது குடும்பத்திற்கு உடைகள் வாங்கித் தருவார். நான் உனது வீட்டில் சாப்பிடுவேன், உறங்குவேன். நீ எனது வீட்டில் சாப்பிடுவாய், உறங்குவாய். இரண்டு குடும்பங்களுக்கிடையிலும் எந்த விதமான பிரச்சினைகளும் ஏற்படுவதில்லை. தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களில் நாம் ஒரு வீட்டிலேயே சமைத்து உண்ட காலங்களை என்னால் மறக்க முடியவில்லை.

விதிவசத்தால் நாம் பிரிந்தோம். அப்பாவுக்கு பட்டணத்தில் ஒரு பெண்ணுடன் உறவு இருந்திருக்கிறது. அதனால் தான் தொழிலில் நட்டமேற்பட்டது. அதனால் தான் வீட்டை விற்று கடனைக் கொடுத்தோம். உங்கிருந்து வந்தபின் அப்பா எம்மைவிட்டுப் பிரிந்து சென்று அப்பெண்ணுடன் வாழ்கிறார். நானும் எனது மூன்று

சகோதரிகளும் அம்மாவும் அனாதைகளாகிவிட்டோம். எமக்கு ஒருநேரக் கஞ்சிக்குக் கூட வழியில்லை. வசதியாக வாழ்ந்த அம்மா கூலிவேலை செய்கிறார். என்னால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அத்துடன் பிறருக்குச் சிரமம் கொடுக்கவும் விருப்பமில்லை. அதனால் தான் நான் எனது விலாசத்தை எழுதவில்லை. அத்துடன் அடிக்கடி கடிதம் எழுதி உன்னையும், உனது குடும்பத்தவரையும் வேதனைப்படுத்தவும் விரும்பவில்லை. அதனால் நான் விரும்பும் வேளைகளில் உனக்குக் கடிதம் எழுதுகிறேன். ஆருயிர் நண்பனான உன்னை என்னால் மறக்க முடியாது. தற்காலிகமாக அன்புடன் பிரியும் கலைவாணன்.''

மதிவதனன், கலைவாணனின் நினைவு வரும்போது அவனது கடிதத்தை எடுத்து வாசிப்பான். அக்கடிதத்தை வாசித்தால் நாலைந்து நாட்களுக்குத் துக்கமாக இருக்கும். கலைவாணனது விலாசம் தெரிந்தால் சென்று பார்க்கலாம் என்று நினைத்துக் கவலைப்படுவான்.

நான்கு வருடங்களாக கலைவாணன் கடிதம் எழுதாமையால் மதிவதனனின் குடும்பம் கலைவாணனின் குடும்பத்தை மறந்துவிட்டது. அன்று கலைவாணனின் கடிதம் வந்திருந்தது. ''அன்பான மதிவதனனின் குடும்பத்தினருக்கு, பல காலம் கடிதம் போடாததையிட்டு மன்னிப்புக் கோருகிறேன். பல்வேறு விதமான துன்பங்கள், இடையூறுகள், கஸ்டங்கள் ஏற்பட்டதால் உங்களுக்குக் கடிதம் எழுத முடியவில்லை. எப்படி நீங்கள் எல்லோரும் சுகமாக இருக்கிறீர்களா....? நாம் உங்கு வாழ்ந்த காலங்களை எண்ணியபடிதான் வாழ்ந்து வருகிறேன். உங்கு நடந்த சம்பவங்கள் யாவும் நெஞ்சில் கல்லெழுத்துக்களாகப் பதிந்துள்ளன. அந்த இன்பம் எப்பொழுது வருமெனக் காத்திருக்கிறேன். இவ்வளவு காலமும் நான் கொண்ட கொள்கைக்காக எம்மைப் பற்றிய விபரமும், நாம் இருக்கும் இடமும் உனக்குக் குறிப்பிடவில்லை. இனிமேலும் நாம் சந்திக்காமல் இருக்க முடியாது. ஆயிரமாயிரம் கனவுகளைச் சுமந்துகொண்டு நாளைக் காலை உவ்விடம் வருகிறேன். எனக்காகக் காத்திருங்கள். நான் இன்னும் திருமணம் செய்யவில்லை. நீ செய்துவிட்டாயா...? அபிராமி எப்படி சுகமாக இருக்கிறாளா...? யாவும் நேரில் பேசுவோம்....'' கலைவாணன்.

கடிதத்தை வாசித்த மதிவதனனுக்கு யோசனையாக இருந்தது. தனது கலியாணத்தைப் பற்றி விசாரித்துவிட்டு அபிராமியைப் பற்றி விசாரித்துள்ளமை அவனுக்குக் கலக்கத்தைக் கொடுத்தது. முன்பு இரு வீட்டாருமாகச் சேர்ந்து அபிராமியை கலைவாணனுக்கும், மதிவதனனுக்கு கலைவாணனின் தங்கை கலையரசியையும் திருமணம் செய்து வைப்பதாகவும் முடிவு செய்திருந்தனர். அதற்காகத் தான் கலைவாணன் வருகிறானென மதிவதனன் நினைத்தான்.

மறுநாள் காலை கலைவாணனும் தாயும் மோட்டார் வாகனம் ஒன்றில் மதிவதனனின் வீட்டுக்கு வந்தனர். மதிவதனன்

வேண்டாவெறுப்பாக அவர்களை வரவேற்றான். கலைவாணனும் தாயும் கலகலப்பாக பலமுறை பேசிய போதும் மதிவதனனும் தாயும் முன்பு போலப் பேசவில்லை. மதிவதனனின் தாயின் முகம் சோர்ந்திருந்தது. கேட்ட கேள்விகளுக்கு மட்டும் அவள் பதில் சொன்னாள்.

''அபிராமி எங்கை?'' கலைவாணன் ஆவலோடு கேட்டான்.

''அபிராமிக்கு கலியாணம் முற்றாகிவிட்டது. பிடைவைக் கடைக்குப் போயிருக்கிறாள்....'' என்றாள் மதிவதனனின் தாய்.

பலமணி நேரம் கலைவாணன் மதிவதனனோடும் தாயோடும் கதைத்தான். பின் தான் கொண்டு வந்த பரிசுப் பொருட்களைக் கொடுத்துவிட்டு கலைவாணன் புறப்படும் போதுதான் ''தேனீர் குடித்துவிட்டுப் போங்கோ'' என்றாள் மதிவதனனின் தாய்.

வேண்டாவெறுப்பாகக் கொடுத்த தேனீரைக் குடித்துவிட்டு கலைவாணனும் தாயும் புறப்பட்டனர். மறுநாள் மதிவதனனுக்கு கலைவாணன் கடிதம் எழுதினான். ''நண்பா இப்பொழுது நான் கோடீஸ்வரன். அமெரிக்காவில் வாழ்கிறேன். அம்மாவையும் தங்கைமாரையும் அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்ல வந்தபோது தான் உனது வீட்டுக்கும் வந்தேன். அபிராமிக்கு கல்யாணப் பரிசாக இரண்டு இலட்சம் ரூபா அனுப்புகிறேன்.'' நன்றி கலைவாணன்.

மதிவதனன் இடிந்து போனான். அனியாயமாக திட்டமிட்டு பொய் கூறியதற்காக வருந்தினான்.

90. மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து.

அனிச்சம் பூவை மணந்தால் அது வாடிவிடும். அதுபோல் முகம் மலராமல் விருந்தினரை வரவேற்றால் அவர்களின் மனம் வாடிவிடும்.

வாய்ச்சொல்

கைலாயபிள்ளை தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களையும் வேத, இதிகாசங்களையும் உபநிடதங்களையும் வடமொழியையும் நன்கு கற்றுத் தெளிந்தவர். ஆங்கிலத்தில் புலமை வாய்ந்தவர்.

தமிழையும், வடமொழியையும் ஆய்வு செய்து எழுதுபவர். அவற்றை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து நூல்களாக வெளியிடுபவர். அதனால் பல்வேறு நாடுகளிலும் அதிகமாகப் பேசப்படுபவர்.

கைலாயபிள்ளையிடம் பல இடங்களிலிருந்தும் பலர் தேடி வந்து சந்தேகமான விடயங்களுக்கு விடையறிந்து செல்வர். பிற நாடுகளில் வாழ்வோர் தமக்கிருக்கும் சந்தேகங்களை அவருக்கு எழுதி நிவர்த்தி பெறுவர். எப்பொழுதும் அவரின் வீட்டில் சனக்கூட்டம் காணப்படும். அவர் தம்மிடம் வரும் அனைவரையும் சமமாகவே மதிப்பார். அன்போடு பேசுவார். உணவளிப்பார்.

வரகுணன் அவரிடம் கற்கும் மிகவும் சிறந்த மாணவன். குருபக்தி மிக்கவன். ஆசிரியரைத் தெய்வமாக மதிக்கும் தன்மையுடையவன். ஆனால் பாடசாலைக்கு வருகை தருவது மிகவும் குறைவு. மாதத்தில் ஆறேழு நாட்கள் தான் பாடசாலைக்கு வருவான். மிகுதி நாட்கள் வீட்டில் நின்று தனது தம்பி, தங்கைகளுக்கு உணவு சமைத்துக் கொடுப்பான். வரகுணனின் தாய் கமலாவதி திடீரென நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டாள். கமலாவதி உயிருடன் இருக்கும் வரை வரகுணன் ஒழுங்காகப் பாடசாலைக்கு வந்தான். வரகுணனின் தந்தை திருச்செல்வம் பெரும் குடிகாரன். அவன் கமலாவதியைக் காதலித்து பெற்றோரின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் திருமணம் செய்தான். திருமணம் செய்த ஓரிரு வருடங்களில் கமலாவதி நோயாளியாகிவிட்டாள். அவள் நோயாளியாகி படுத்த படுக்கையான போது திருச்செல்வத்தால் துக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் குடிக்கத் தொடங்கினான். அக்குடி படிப்படியாக அவனைப் பெருங்குடி மகனாக்கியது. கமலாவதி உயிருடன் இருக்கும் காலத்தில் அவளையும் பராமரித்து தனது ஐந்து பிள்ளைகளையும் மிகவும் சிரமப்பட்டு வளர்த்தான். நாளடைவில் பிள்ளைகளையும் பராமரித்து வேலைக்கும் செல்ல அவனால் முடியவில்லை. அதனால் பெரும்பாலான நாட்களில் வீட்டு வேலைகளைச் செய்வதற்காக வரகுணனை பாடசாலையால் மறித்தான். வரகுணன் நேரத்தோடு வீட்டு வேலைகளை முடிக்கும் நாட்களில் பாடசாலைக்குச் செல்வான். அவன் கற்கும் பாடசாலை அதிபர் மிகவும் கண்டிப்பானவர். மணியடித்த பின்பு மாணவர்களைப் பாடசாலைக்கு வர அனுமதிக்க மாட்டார்.

வரகுணனின் நிலமையை உணர்ந்த கைலாயபிள்ளை, திருச்செல்வத்தின் வீட்டுக்குச் சென்றார். அவர் சென்றபோது திருச்செல்வம் நன்றாகக் குடித்திருந்தான். அவரைக் கண்ட திருச்செல்வம் பரபரப்புடன் எழுந்து வந்து அவரது கைகளைப் பிடித்தான். “ஐயா, நீங்கள் பெரிய மனிதன். இந்தக் குடிகாரன் வீட்டை வரலாமா.? உங்கள் மதிப்பென்ன? மரியாதையென்ன? யாரிடமாவது சொல்லி அனுப்பியிருந்தால் நான் வந்திருப்பன்”

கைலாயபிள்ளை சிரித்தார். ‘‘திருச்செல்வம், உலகில் கடவுள் ஒருவன்தான் பெரியவர். அவனுக்குத் தான் நாம் மதிப்பு மரியாதை கொடுத்தல் வேண்டும். நானும் உன்னைப் போல் ஒரு மனிதன் தான். நீ என்னுடைய நிலையை அடைய வேண்டும் என்று நினைத்தால் நிச்சயமாக அடையலாம். அறிவென்பது ஒருவரது உள்ளத்துள் மறைந்து கிடக்கும் பொக்கிசம். அதை வெளிக்கொணர்வது கல்வி. நீ புத்தகங்களைத் தேடி எடுத்துப் படி. விளங்காதவற்றை விளங்கியவர்களிடம் கேட்டறி. என்னை விடக் கெட்டிக்காரனாக வருவாய்.’’

‘‘ஐயா, உங்களோடை கதைக்க முடியாது. என்னை ஏன் தேடி வந்தியள் அதைச் சொல்லுங்கோ...’’

‘‘வரகுணன் கல்வியில் மகா கெட்டிக்காரன். அவனை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்பு’’

திருச்செல்வம் விம்மிவிம்மி அழுதான். ‘‘ஐயா அவனைப் பாடசாலைக்கு அனுப்ப எனக்கு விருப்பமில்லையென்றா நினைக்கிறீர்கள். வீட்டு வேலைகளையும் செய்து வேலைக்கும் செல்ல என்னால் முடியவில்லை. எனது பெற்றோரும், கமலாவதியின் பெற்றோரும் எம்மைச் சேர்ப்பதில்லை. அதனால் எதுகும் என்னால் செய்ய முடியவில்லை...’’

‘‘நான் அவர்களுடன் கதைக்கிறேன். முதலில் நீ குடிப்பதை நிறுத்த வேண்டும்.’’

‘‘ஐயா நீங்கள் கடவுள், கண்கண்ட தெய்வம். பெரிய கல்விமான். நீங்கள் சொல்வதை நான் கேட்காமல் விடமாட்டன். இனிமேல் நான் குடிக்கமாட்டன். இனிமேல் நான் குடிக்கமாட்டன்’’ அழுதான் திருச்செல்வம்.

‘‘சரி, உன்னுடைய பெற்றார் வயது சென்றவர்கள். எத்தனை நாட்களுக்குத் தான் உன்னையும் உன்னுடைய பிள்ளைகளையும் பராமரிக்க முடியும். எனவே நீ ஒரு திருமணம் செய்...’’

‘‘ஐயா’’ பதறினான் திருச்செல்வம். அவன் சுயநினைவுக்கு வர சில கணங்கள் சென்றன. ‘‘ஐயா, நான் கலாவதியை விரும்பித் திருமணம் செய்தனான். அவளைப் பிரிந்தன்றே நானும் செத்திருப்பன். என்னுடைய ஐந்து பிள்ளைகளை நினைத்துத்தான் நடைப்பிணமாக வாழ்கிறேன். உங்களைத் தவிர வேற யாராவது இப்படிச் சொல்லியிருந்தால் கொலை செய்திருப்பன். ஆனால் உங்களை ஏச ஒரு வார்த்தை கூட வர மறுக்குது...’’

“எல்லாம் எனக்குத் தெரியும் திருச்செல்வம். உன்னுடைய மூத்த மகனுக்கு எட்டு வயது கடைசிப் பிள்ளை தவளுற குழந்தை. ஒரு குடும்பஸ்தன் தனக்காக வாழ்வதில்லை. தனது குடும்ப நலனுக்காகவும், உற்றார், உறவினர், நண்பர்களின் நலன்களைப் பேணவும் வாழ்கிறான். இல்வாழ்வு என்பது ஒரு வேள்வி. தவம் செய்வதைவிடச் சிரமம் மிக்கது. குடும்பத்திற்காக அனைத்தையும் துறந்து வாழ்பவன் தான் உண்மையான குடும்பத் தலைவன். உனது மனைவியின் மூத்த சகோதரி திருமணம் செய்து சில மாதங்களுக்குள் கணவனை இழந்து விட்டாள். அவளை ஏற்று குடும்பத்தை நடத்து. அதனால் இருவருக்கும் நல்லது...”

திருச்செல்வம் பலமாகச் சிரித்தான். பின் “ஐயா அவர்கள் எங்களில் பார்க்க சாதியில் உயர்ந்தவர்கள் என்று கூறி என்னை பத்து வருடங்களாகச் சேர்க்கவில்லை....”

“அது ஒரு காலம். நான் அங்கே சென்று உனது நிலையைப்பற்றிக் கூறி எல்லாவற்றையும் கதைத்துவிட்டேன். நீ சம்மதித்தால் உனது மாமனாரே இங்கு வந்து உனது சம்மதத்தைக் கேட்பார்...”

திருச்செல்வம் அதிர்ந்து போனான். திமிர் பிடித்த அந்தக் குடும்பம் எப்படிச் சம்மதித்தது என்று எண்ணினான்.

“என்ன யோசிக்கிறாய்...”

“என்னால் கலாவதியின் நினைவுகளை மறக்க முடியாது. அதோடு அவளுக்குத் துரோகமும் செய்ய முடியாது...” அழுதான் திருச்செல்வம்.

“தம்பீ இதில் துரோகம் என்று சொல்வதற்கு ஏதும் இல்லை. உன்னுடைய வாழ்வும், உன்னுடைய ஐந்து பிள்ளைகளின் வாழ்வும் சீரழிவது தான் துரோகம். குடும்பத்தை பராமரிக்கக் கூடிய வளர்ந்த பிள்ளை ஒன்றிருந்தால் நீ திருமணம் செய்வது துரோகம். பராயம் அடையாத பிள்ளைகளைக் கொண்டு வேலை வாங்குவதும், அவர்களது கடமைகளைச் செய்யாது விடுவதும் தான் துரோகம். உனது மனைவியின் சகோதரி தன்பிள்ளைகளைப் போல் உனது பிள்ளைகளைப் பராமரிப்பாள். கவலைப்படாதே...” என்றார் கைலாயபிள்ளை.

அடுத்த வாரம் திருச்செல்வம் கலாவதியின் மூத்த சகோதரியை தனது வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்தான். குடும்பம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

91. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்

செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

உண்மைப் பொருளை உணர்ந்தவர்களின் வாய்ச்சொற்கள், அன்பு கலந்த வஞ்சகமற்ற இன்சொற்களாகவே எப்பொழுதும் இருக்கும்.

ஈதலின் நன்று

நடராஜனுக்கு வயது அறுபத்தைந்து. கலகலப்பானவர். எந்த நேரமும் சிரித்துக் கதைத்தபடி இருப்பார். அவருக்கு எதிரி என்று சொல்லக்கூடியவர்கள் அந்தக் கிராமத்தில் எவரும் இல்லை. எல்லோருடனும் அன்பாகப் பேசுவார். அந்தக் கிராமத்தவர்கள் தமக்குக் கஸ்டம், கரைச்சல் ஏதாவது வந்தால் நடராஜனிடம் செல்வார்கள். அவர் அவர்களது மனச்சுமையை நீக்கிவிடுவார். எந்நேரமும் மகிழ்வுடன் இருப்பதால் இன்னும் அவரை முதுமை நெருங்கவில்லை. அவரது உடற்தோற்றத்தைப் பார்ப்போர் முப்பத்தைந்து நாற்பது வயது மதிப்பர். கட்டான தேகம். நரைதிரை மூப்படையாத உடல். எந்த வேளையிலும் தன்னுடைய குடும்ப நினைப்பை விட அடுத்தவரின் மீது அக்கறையான நினைவு.

பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் முதல் குடுகுடு கிழவர் வரை அவரின் நண்பர்கள். ஊரில் உள்ளவர்களுக்கு உருப்படியான ஆலோசனைகள் கூறுவதுடன் ஊர்ப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் அவரின் அன்பான பேச்சைக் கேட்டு பாடசாலைக்குச் சென்று விடுவார்கள். தொழில் இல்லாத கற்ற இளைஞர்கள் அவரின் ஆலோசனைகளை செவிமடுத்து தொழில் கிடைக்கும் வரை கைத்தொழில்களில் ஈடுபடுவார்கள்.

அன்று அவ்வூரில் வாழும் சேனாதிராஜா என்பவன் அவரின் வீட்டுக்கு மிகுந்த துக்கத்துடன் வந்தான். “அண்ணை என்னுடைய மகனுக்கு நெஞ்சுவலியென்று ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனான். அவனுக்கு இருதயத்தில் ஓட்டையாம். சத்திரசிகிச்சை செய்ய மூன்று இலட்சம் ரூபா வேண்டுமாம். இந்தத் தொகைக்கு நான் எங்கை போவன். அதோடை சத்திரசிகிச்சை செய்தாலும் ஆள் தப்பமாட்டுதெண்டு சனம் கதைக்குது. தற்செயலாய்த் தப்பினாலும் உரமான ஆம்பிளையாய் இருக்கமாட்டனாம்...”

“உதை ஆர் உனக்குச் சொன்னது....”

“சித்திரவேலு மாஸ்ரர் சொன்னவர்...”

“அவர் என்ன வைத்தியம் படிச்சவரே. எனக்குத் தெரிந்த கனபேருக்கு இருதயத்திலை ஓட்டை இருக்கு. இதெல்லாம் இப்ப பெரிய வியாதியில்லை. விஞ்ஞானத்தின்ரை வளர்ச்சி இன்றைக்கு நினைத்துப் பார்க்க முடியாதளவிற்கு வளர்ந்திட்டுது. இருதயத்தை மாற்றி சத்திரசிகிச்சை செய்யிற இந்தக் காலத்திலை இதுக்கெல்லாம் பயப்படக் கூடாது. சத்திரசிகிச்சை முடிந்தால் மற்றவர்களை மாதிரி உன்னுடைய மகன் செயற்படுவான். ஒன்றுக்கும் பயப்படாதை” என்றார் நடராஜன்.

“நீங்கள் இப்படிச் சொல்லேக்கை நான் ஏன் பயப்பிர்றன். ஆனால் காசுக்கெங்கை போறதண்ணை” பரிதாபமாகக் கேட்டான் சேனாதிராஜா.

“காசுக்கேன்ராப்பா பயப்பிடுகிறாய். மகிழ்ச்சியோடு கொடுப்பதற்கு பலபேர் இருக்கினை. உதவி வழங்கிற நிறுவனங்கள் இருக்கு. ஒண்டுக்கும் பயப்படாதை. நான் இருக்கிறன். என்ரை பிள்ளைக்கு வருத்தம் வந்தால் நான் எப்படி நடந்து கொள்ளுவனோ அப்படி நடப்பன். என்ரை அஞ்சோடை உன்ரை மகளை ஆறாய் நினைக்கிறன்...”

“அந்தத் தைரியத்திலை தான் அண்ணை வந்தனான். உங்களோடை கதைத்தாப் பிறகு என்ரை மகனுக்கு வருத்தம் மாறின மாதிரி இருக்கு. மூன்று பெம்பிளைப் பிள்ளைகளுக்கு ஒரு ஆம்பிளைப்பிள்ளை.....” கண் நெகிழ்ந்தான் சேனாதிராஜா.

“ஒண்டுக்கும் பயப்படாதை எங்கடை நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதியிட்டை பாரத்தைப் போடு. எல்லாம் சரிவரும்” என்ற நடராஜனின் அன்பான வார்த்தைகளைக் கேட்டு மனத்திடத்துடன் சென்றான் சேனாதிராஜா.

மறுநாள் நடராஜன் சேனாதிராஜாவையும் அழைத்துக்கொண்டு அவ்வூரில் வாழும் தனவந்தரான சுந்தரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றார். சுந்தரமூர்த்தி பெரும் பணக்காரன். ஏழை, எளியவர்களுக்கு மனமகிழ்வுடன் உதவி செய்பவர். அவருக்கு நடராஜா சேனாதிராஜாவின் மகனின் சத்திரசிகிச்சையைப் பற்றி விரிவாகக் கூறினார்.

“உங்களிட்டைத்தான் கைவியளமாய் வந்திருக்கிறம்....”

சுந்தரமூர்த்தி எழுந்து உள்ளே சென்றார். சில நிமிடங்களில் சுந்தரமூர்த்தியின் மனைவி இரண்டு கோப்பைகளில் தேனீர் கொண்டுவந்து நடராஜனுக்கு சேனாதிராஜாவுக்கும் கொடுத்தாள். அப்போது அங்கு வந்த சுந்தரமூர்த்தி காசோலை ஒன்றை நடராஜனிடம் கொடுத்துவிட்டுச் சொன்னார் ‘‘இப்ப எனக்குக் கொஞ்சம் கஸ்ரம். வியாபாரத்திலை முதலிட்டுட்டன். இரண்டு, மூன்று நாட்களுக்கு முந்தி வந்திருந்தால் கூடத் தந்திருப்பன். கொஞ்ச நாள் பொறுத்து வந்தியளெண்டால் இன்னும் கொஞ்சப் பணம் தருவன்’’

நடராஜன் சுந்தரமூர்த்தி கொடுத்த காசோலையைப் பார்த்தார். இரண்டு இலட்ச ரூபா எழுதப்பட்டிருந்தது. நடராஜன் கலங்கிப் போனார். ‘‘ஐயா இரண்டு இலட்ச ரூபா கொஞ்சத் தொகையா...’’ அவர் குரல் தழுதழுத்தது. எனினும் கதைத்தார். ‘‘இவ்வளவு பெரிய தொகையை நான் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் நல்லாயிருப்பியள். உங்கடை குடும்பம் எந்தக் காலத்திலும் வளமாய் இருக்கும்...’’ என்று வாழ்த்திவிட்டுப் புறப்பட்டார்.

மாதம் இரண்டு கழிந்தது. சேனாதிராஜாவின் மகனுக்கு சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிவடைந்தது. அவன் உற்சாகமாக இருப்பதைக் கண்டு மகிழ்ந்த சேனாதிராஜா அவனை நடராஜனின் வீட்டுக்கு அழைத்து வந்தார்.

‘‘அண்ணை நீங்கள் இல்லாவிட்டால் என்ரை மகனை நான் இழந்திருப்பன். நீங்கள்தான் என்ரை மகனுக்கு உயிர்ப்பிச்சை அளித்த கடவுள்’’ என வாழ்த்தினார். சேனாதிராஜாவின் மகன் நடராஜனின் பாதங்களைப் பணிந்தான்.

‘‘நான் ஒரு சிறு தொகைப்பணம் கூடத் தரேல்லை. வா போய் சுந்தரமூர்த்திக்கு நன்றி சொல்லுவம்’’ என்றார் நடராஜன். மூவரும் சுந்தரமூர்த்தியின் வீட்டைநோக்கிச் சென்றனர்.

92. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து

இன்சொலன் ஆகப் பெறின்.

மனம் மகிழ்ந்து பொருள் கொடுப்பதைவிட முகமகிழ்ச்சியோடு இனிமையாகப் பேசுவதே நன்று.

உயர்ந்த அறம்

சுந்தரலிங்கம் சேனையூரில் வாழ்ந்து வரும் பிரமச்சாரி. வயது அறுபது இருக்கும். இருந்த போதும் கட்டுக் குலையாத உடல். அதிகம் நரையில்லாத முடி. சவரம் செய்யப்பட்ட முகம எந்த வேளையும் பளபளப்பாக இருக்கும். சுத்தமான உடை. மொத்தத்தில் கவலைகள் இல்லாத மனிதனாக அவர் உலாவி வந்தார். எந்த நேரமும் கலகலப்பாக எல்லோருடனும் சிரித்துப் பேசுவார். சிறுபிள்ளைகளோடு ஓடிப் பிடித்து விளையாடுவார். இளைஞர்களுடன் கரப்பந்து விளையாடுவார். அவர்களக்கு புத்திமதிகள் கூறுவார். முதியோர்களுக்கு ஆலோசனைகளும் ஆறுதல் வார்த்தைகளும் கூறுவார். ஆலோசனைகள் பலதரப்பட்டவை. ஒவ்வொருவருக்கும் என்னென்ன ஆலோசனைகள் தேவையோ அதையதை மிகவும் பக்குவமாக விளங்கும்படி கூறுவார். அதனால் எந்த நேரமும் அவரது வீட்டில் சனக்கூட்டம் இருந்துகொண்டே இருக்கும்.

அவர் அதிகம் படித்தவரல்ல. பலமுறை க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எடுத்து சித்தியடையாதவர் என்று அவருடன் படித்தவர்கள் கூறுவார்கள். அவரது தகப்பனார் பெரும் நிலச் சுவாந்தர். தகப்பனாரின் நிலத்தில் இருந்து கிடைக்கும் வருமானம் அவரது வாழ்க்கையைக் கொண்டு நடத்தப் போதுமானதாக இருந்தது. அவர் திருமணம் செய்யாமைக்கு பல காரணங்கள் இருப்பதாக மக்கள் தமக்குள் பேசிக் கொள்வார்கள். ஆனால் ஒருவரும் அவரை நேரில் கேட்டதில்லை. அவரது ஆத்ம நண்பரான சிவநாதன் அவரைத் திருமணம் செய்யும்படி அடிக்கடி வற்புறுத்துவான். ஆனால் சுந்தரலிங்கம் வாய்திறந்து எதுகும் சொல்லமாட்டார். சிரிப்பார். அவரது செயல் சிவநாதனுக்கு கோபத்தை வரவழைத்தாலும் அவன் அதைக் காட்டிக்கொள்ளமாட்டான். திருமணம் செய்யாமைக்கான காரணத்தைக் கேட்பான். அதற்கும் அவர் சிரிப்பார். அதனால் அவன் பிற்காலத்தில் திருமணத்தைப் பற்றிப் பேச்சே எடுப்பதில்லை.

சுந்தரலிங்கம் அன்பே உருவானவர். அவரது முகத்தில் எந்நேரமும் மகிழ்ச்சி பூத்திருக்கும். கண்களில் கருணை மிகுந்திருக்கும். வார்த்தைகளில் இனிமை தாண்டவமாடும். அவரின் வாய்ச்சொற்கள் பலிக்கும் என்று அவ்வூர் மக்கள் நம்பினர். அவர் சோதிடம் கற்கவில்லை. வைத்தியமும் கற்றதில்லை. ஆனால் அவ்வூர் மக்களுக்குச் சோதிடம் பார்ப்பார். வைத்தியம் செய்வார். கிரகதோசங்களுக்கு பார்வை பார்த்து நூல் கட்டுவார். அவ்வூரவர் எவரும் இவர் எங்கே சோதிடம் கற்றார், வைத்தியம் கற்றார் என்று கேட்பதில்லை.

அன்று வீட்டில் காலைப் பூசையை முடித்துக்கொண்டு சுந்தரலிங்கம் வெளியே வந்தபோது அவ்வூரில் வாழும் கௌரவமான

குடும்பத்தைச் சேர்ந்த மாணிக்கவாசகரின் மகன் சந்திரன் வாட்டத்துடன் நின்றான். அவரைக் கண்டதும் அவனுக்கு அழுகை வந்தது.

''அழாதை சந்திரன். விசயத்தைச் சொல்லு''

''ஐயா நான் எனது மனைவி மீது உயிரையே வைத்திருக்கிறேன். திருமணமாகி ஏழு வருடங்கள் கழிந்துவிட்டன. எனக்கு நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனால் என்னுடைய மனைவிக்கு இன்னொரு ஆடவனோடு தொடர்பு இருக்கிறது....'' அழுதான் சந்திரன்.

''எப்படிச் சொல்கிறாய்...?''

''அவளின் போக்கில் எனக்கு சந்தேகமாக இருக்கிறது. இப்பொழுது என்னையும் பிள்ளைகளையும் ஒழுங்காகக் கவனிக்கிறாள் இல்லை. எந்நேரமும் ஆடம்பரமாகத் தன்னை அலங்கரிக்கிறாள். அடுத்த வீட்டுக்காரனைப் பற்றிப் புகழ்கிறாள்...''

நல்ல கௌரவமான குடும்பத்தில் பிறந்த சந்திரனின் மனைவி ஆரணியைப் பற்றி அவர் நன்கு அறிந்தவர். அதனால் சந்திரனில் தான் ஏதோ தவறு இருக்கிறதென நினைத்தார்.

''இரண்டு நாட்கள் கழித்து வா சந்திரன்'' என்று கூறினார்.

அன்று மாலை சந்திரனின் வீட்டுக்குச் சென்ற சுந்தரலிங்கத்தை ஆரணி மகிழ்வுடன் வரவேற்றாள். அவளின் முகத்தில் வீசிய பட்டொளியும், கண்களில் மலர்ந்திருந்த கனிவும் அவள் குற்றமற்றவள் என்று எடுத்தியம்பின.

''எப்படி ஆரணி சுகமாக இருக்கிறாயா....?''

''ஆம் ஐயா.''

சிரித்தார் சந்தரலிங்கம். பின் ''சந்திரன் எங்கே? கன நாட்களாகக் காணவில்லை. சுகமாக இருக்கிறானா....?'' என்று கேட்டார்.

''ஆம் ஐயா... ஆனால்....'' இழுத்தாள்.

''சொல்லு பிள்ளை''

''வேலைப்பழு கூடப்போல் தெரிகிறது. சந்தோசமில்லாமல் இருக்கிறார். என்னுடன் சண்டைக்கு வாறார்...''

சிறிது நேரம் ஆரணியுடன் கதைத்துவிட்டு திரும்பினார் சுந்தரலிங்கம். அவரின் மனம் அல்லற்பட்டது. ஆரணி நல்லவள். சந்திரன் ஏன் குறை சொல்கிறான்...? அவருக்குப் புரியவில்லை.

அன்று மாலை அவர் கேள்விப்பட்ட செய்தி அவரது சந்தேகத்தை நீக்கியது. சந்திரனின் நண்பனின் மனைவி இன்னொருவனை விரும்பி அவனுடன் சென்றுவிட்டாள்.

அன்று மாலை சந்திரன் சுந்தரலிங்கத்தைத் தேடி வந்தான். அவனது முகம் கலவரமடைந்திருந்தது. அவனை ஆசனத்தில் இருத்திய சுந்தரலிங்கம் அவனுக்குத் தேனீர் கொடுத்தார்.

''சந்திரன் உனது மனைவி உத்தமி. நீ பயப்படும் படியாக ஏதும் நடக்கவில்லை. வெள்ளையாக இருப்பவையெல்லாம் பாலல்ல. சுண்ணாம்பு நீரும் வெள்ளைதான். உனக்கு கிரகதோசமுள்ளது. சாந்தி செய்தல் வேண்டும். மனைவியையும் அழைத்துக்கொண்டு செவ்வாய்க்கிழமை இரவு வா. அதற்கு முன்னம் இந்தப் பொருட்களை வாங்கி வா...'' என்றார்.

சந்திரன் செவ்வாய்க்கிழமை மனைவியுடன் சுந்தரலிங்கத்தின் வீட்டுக்கு வந்தான். இருபத்தெட்டு கும்பங்கள் வைத்து சுந்தரலிங்கம் கிரிகைகளைச் செய்யத் தொடங்கினார். சந்திரனைத் தனது கண்களைப் பார்க்கும்படி கூறினார். சந்திரன் அவரின் கண்களைப் பார்த்தான். கருணை மிகுந்த அவரின் கண்கள் அவனுடன் பேசின. பின் ஆரணியின் முகத்தையும் கண்களையும் பார்க்கும்படி சொன்னார். சந்திரன் அவர் சொன்னபடி பார்த்தான்.

''சந்திரா ஆரணியின் கண்களைப் பார். கருணை மிக்க அழகான அந்தக் கண்களுக்கு உன்னைத் தவிர வேறு எவையும் தெரியாது. கள்ளங் கபடமில்லாத கன்னங்களைப் பார். எல்லாவற்றையும் மற.''

பல தேசிக்காய்களை வெட்டினார். நீற்றுப் பூசிணிக்காய் ஒன்றை வெட்டி குங்குமம் பூசிவிட்டு அதில் கற்பூரத்தைக் கொழுத்தினார். பின் திருநீற்றைக் கொடுத்துவிட்டு அவனது வலது கையில் நூல் ஒன்றைக் கட்டிவிட்டுச் சொன்னார் ''உன்னைப் பிடித்த கெட்ட ஆவி விலகிவிட்டது. இனிமேல் நல்ல காலம்தான்'' என்றார்.

சந்திரன் அவரின் முகத்தைப் பார்த்தான். பின் கண்களைப் பார்த்தான். அவரின் முகமும் கண்களும் வார்த்தைகளும் அவனைக் கவர்ந்தன. அதனால் அவர் கூறியவை தேவவாக்காக ஒலித்தன. சந்திரன் மகிழ்வுடன் விடைபெற்றுச் சென்றான்.

93. முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தான்ஆம்

இன்சொ லினதே அறம்.

முகத்தால் விரும்பி, கனிவுடன் நோக்கி, உள்ளம் அறிந்து இன்சொல் பேசுவதே அறமாகும்.

வறுமை இல்லாதோர்

வரதன் என்றால் மருத்திமலைக் கிராமத்தில் வாழும் ஒரு வயதுக் குழந்தைக்கும் தெரியும். அந்தளவில் அடிதடி சண்டித்தனத்தில் பிரபல்யமானவன் அவன். உணவு உண்ண மறுக்கும் பிள்ளைகள், அடம் பிடிக்கும் பிள்ளைகள், பாடசாலைக்குச் செல்ல மறுக்கும் பிள்ளைகள் மூத்தவர்களின் சொற்களைக் கேட்க மறுக்கும் பிள்ளைகளை ஒரு வழிக்குக் கொண்டுவரப் பெற்றோர் வரதனின் பெயரையே பாவிப்பர். அந்தளவில் வரதன் அக்கிராமத்துப் பிள்ளைகளை வெருட்டி பயமுறுத்தி வைத்திருந்தான்.

காலையில் எழுந்ததும் சாராயம் விற்கும் இடத்திற்குச் சென்று சாராயம் வாங்கிக் குடித்துவிட்டுத்தான் பல் துலக்குவான். கப்பம் வசூலிப்பது, கூலிக்கு சண்டை பிடிப்பது ஆட்களை வெருட்டுவது போன்றன தான் அவனது தொழில். எந்த நேரமும் அவனுடன் நாலைந்து பேர் இருப்பார்கள். அவர்கள் தான் ஊரில் நடப்பவற்றைப்பற்றி அவனுக்கு கூறுவது. அவனுக்கு தொழிலை ஒழுங்குசெய்து கொடுப்பது. அவனுக்குக் கிடைக்கும் பணத்தில் அவர்களும் வயிற்றை நிரப்பிக்கொள்வார்கள்.

மருத்திமலையில் வாழும் பெரும் நிலச்சுவாந்தர் வேலாயுதபிள்ளை. பிரச்சினைகளுக்குப் போகாதவர். யாராவது பிரச்சினைக்கு வந்தாலும் விலகிப் போய்விடுவார். அவரது நிலத்தில் குடியிருப்போர், அவரது நிலத்தில் விவசாயம் செய்வோர் அதற்கு குத்தகையாகப் பணம் கொடுத்த போதும், அவர்கள் தனது வீட்டுக்கும் வந்து வேலைகள் செய்ய வேண்டுமென்று வேலாயுதபிள்ளை விரும்புவார். அத்துடன் அவர் செயல்களைப் பற்றி அனைவரும் புகழ்ந்து கூறுதல் வேண்டும். அத்துடன் அவரைக் கண்டால் தோளில் போட்டிருக்கும் சால்வையைக் கையில் எடுத்துவிட வேண்டும். இந்த நடைமுறையை அவரோடு சம்மந்தப்பட்டவர்கள் செய்து வந்தனர்.

கணபதி அவரின் தோட்ட நிலத்தை குத்தகைக்கு எடுத்துச் செய்பவன். மிகவும் நல்லவன். எவரோடும் பகை கொள்ளாதவன்.

எல்லோருடனும் அன்பாகப் பேசுவான். பண்பாகப் பழகுவான். இதனால் எல்லோரும் அவனை நேசித்தனர்.

வரதனை நல்ல மனிதர்கள் எவரும் கண்டு கொள்வதில்லை. எல்லோரும் அவன் வழியால் வந்தால் மறுகரையால் அவனைச் சந்திக்காது சென்றுவிடுவர். வரதன் யாரையாவது கண்டால் சண்டைக்கு இழுப்பான். கண்டபடி கதைப்பான். தூசண வார்த்தைகளால் ஏசுவான். ஆனால் கணபதி அவனோடு அன்பாகக் கதைப்பார்.

அன்று வரதன் நல்ல வெறியில் வந்து கொண்டிருந்தான். கணபதி மிதிவண்டியில் வந்துகொண்டிருந்தார். ‘‘டேய் கணபதி நில்லடா...? என்னை ஏற்றிக்கொண்டு போய் வீட்டை விட்டுட்டுப் போ...’’

கணபதி மிதிவண்டியால் இறங்கினார். ‘‘வா தம்பி கொண்டு சென்று விட்டுவிட்டுப் போகிறேன்...’’

கணபதி வரதனை வீட்டில் கொண்டுசென்று விட்டார். ‘‘தம்பி வரதன்... நீ நல்லபிள்ளை. உன்னுடைய தகப்பனாரை எனக்குத் தெரியும். தங்கமான மனிசன். மிதிச்ச இடத்துப் புல்லுக் கூடச் சாகாது. அவர்தான் முந்தி எங்களுடைய வாசிகசாலைத் தலைவராய் இருந்தவர். அவரின்ரை காலத்திலை தான் மண்கொட்டிலாய்க் கிடந்த வாசிகசாலை கல்லுக் கட்டிடமாய் மாறியது. அதோடை பிள்ளையார் கோயிலுக்கு கிணறு இல்லாமல் இருந்தது. அதையும் கொப்பர் தான் வெட்டிக் கட்டினவர். அந்தக் கிணறுதான் தம்பி இந்தச் சுற்றாடலிலை நல்ல தண்ணிக் கிணறு. நூறு நூற்றைம்பது குடும்பம் அவருடைய புண்ணியத்தாலை தண்ணி அள்ளிக் குடிக்குது. இல்லாவிட்டால் நல்ல தண்ணி எடுக்க இரண்டு கட்டைக்குப் போகவேணும். புண்ணியவான் பெத்த பிள்ளை நீயும் நல்லாய் இருப்பாய்....’’

வரதன் நிலைகுலைந்து போனான். தந்தையைப் பற்றிய நினைவு அவனுள் எழுந்தது. ‘‘தம்பி வரதன் நான் போயிட்டு வாறன்’’ என்று கூறிவிட்டுச் சென்றார் கணபதி.

அவர் சென்றபின் தனது செயல்களைப் பற்றி நினைத்துப் பார்த்தான் வரதன். அவனது மனதுள் ஒரு மாற்றம் நிகழ்வதைப் போலிருந்தது.

மறுநாள் வரதன் கணபதியைத் தேடி அவனது வீட்டுக்கு வந்தான். வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த கணபதியின் பிள்ளைகள் பயத்துடன் உள்ளே ஓடிவிட்டனர். கணபதியின் மனைவி பாக்கியம் வெளியே எட்டிப் பார்த்தாள்.

‘‘கணபதியண்ணை நிக்கிறாரே...’’

“இல்லை...”

“எங்கை போட்டார்?”

“தெரியாது.”

“கணபதி அண்னை வந்தால் நான் தேடியதாகச் சொல்லுங்கோ” என்று கூறிவிட்டுச் சென்றான் வரதன்.

சிறிது நேரத்தில் கணபதி வரதனைத் தேடி வந்தார். வழக்கத்திற்கு மாறாக வரதன் தான் வீட்டில் இருந்தான்.

“என்ன வரதன் வீட்டை வந்தனியாம். என்ன விசேசம்...”

“ஒண்டுமில்லையண்னை சும்மா வந்தனான்... கதைப்பமெண்டு...”

கணபதிக்கு உள்ளூர ஓர் அச்சம் இருந்தது. வேலாயுதபிள்ளை தோட்டத்தை விடச் சொல்லி சொல்லியிருந்தார். அடுத்த வருடம் விடுவதாக கணபதி சொல்லியிருந்தார். ஆனால் வேலாயுதபிள்ளை கேட்பதாக இல்லை. ஒருவேளை வரதனிட்டைச் சொல்லியிருப்பாரோ என அஞ்சினார்.

“என்ணண்னை யோசிக்கிறியள். நான் சும்மா கதைக்கவெண்டு தான் வந்தனான்....”

“அப்பிடியே....? இப்ப உனக்கு எத்தனை வயசு...”

“முப்பத்திரண்டண்னை.....”

“உந்த வயதிலை எனக்கு மூண்டு பிள்ளைகள் இருந்தது. நீ ஏண்டாப்பா கலியாணம் செய்யாமல் இருக்கிறாய். காலாகாலத்திற்கு கலியாணம் செய்ய வேணும். குடும்பம் என்று ஒன்று வந்தால் தான் பொறுப்பு வரும்... வாழ வேணுமெண்ட ஆசைவரும்... பற்றுவரும்.... இளம் வயதிலை எல்லாம் செய்யலாம்... வயது போய் நோய் வந்திட்டால் கவனிக்கிறது ஆர். அதாலை ஒரு நல்ல பெண்ணாய்ப் பார்த்து கலியாணம் செய்யடாப்பா....” என்று கூறிவிட்டுச் சென்றார் கணபதி.

வரதன் எதுகும் கதைக்கவில்லை. கணபதி செல்லும் திசையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மறுநாள் வரதன் வழியில் கணபதியைக் கண்டபோது அவரின் முகம்வாடி இருந்தது.

“ஏனண்னை கவலையாய் இருக்கிறியள்...?”

“வேலாயுதபிள்ளையின்ரை தோட்டக் காணியைத்தான் தம்பி நான் செய்தனான். இராத்திரி நான் செய்த தோட்டத்தை வேலாயுதபிள்ளை உழுது போட்டுது. இனிப் பிழைப்புக்கென்ன செய்யிறது.”

வரதனுக்கு முதல் முறையாக நியாயத்திற்காகக் கோபம் வந்தது. “ஒரு வரிசமெண்டாலும் தவணை தராமல் எப்படி பல வருடங்கள் செய்த தோட்டத்தை மறிக்க முடியும். நான் போய் வேலாயுதபிள்ளைக்கு இரண்டு தட்டு தட்டிப்போட்டு வாறன்....”

“வேண்டாம் தம்பி. அவன்ரை தறை. அவன் செய்தது. நியாயமில்லாவிட்டாலும் நான் பலாத்காரத்தைப் பிரயோகிக்க விரும்பேல்லை. படைச்சவன் படியளப்பான் தம்பி... நீ சண்டைக்குப் போகாதை....”

“நீங்கள் என்ன செய்யப் போறியள்.”

“ஆண்டவன் வழி விடுவான்....”

“எனது தகப்பனார் செய்த தோட்டம் செய்கையின்றிக் கிடக்கு. அதைச் செய்யுங்கோ....”

மிருகம் என்று ஊரவர் கூறும் வரதனுக்கும் இருதயம் இருக்கிறதாவென ஆச்சரியப்பட்டார் கணபதி.

மறுநாள் வேலாயுதபிள்ளை கணபதியைத் தேடி வந்தார். “கணபதி நான் தெரியாத்தனமாக மற்றவர்களின் பேச்சைக் கேட்டு நீ செய்த தறையை உழுதிட்டன். அது எவ்வளவு பிழையெண்டதை வரதன் வார்த்தையாலை சொல்லிக்காட்டினான். முந்தின ஆளாய் இருந்தால் அடிச்சிருப்பன். உன்னோடை நாலைந்து நாட்கள் பழகியதாலை திருந்தீட்டானாம். அவனே திருந்தி ஞாயத்தை எடுத்துரைக்கேக்கை படிச்ச நான் திருந்தாட்டில் என்னைக் கடவுள் கட்டாயம் தண்டிப்பார். எனவே நீ அந்தத் தறையைச் செய். நான் இனி மறிக்கமாட்டன். அதோடை உழுத காசும் எனக்கு வேண்டாம்.”

கணபதி சிலையாக நின்றார்.

94. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மட்டும்

இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

எல்லோரும் இன்பம் அடையும்படியாக இன்சொல் பேசுவோருக்கு துன்பத்தை உண்டாக்கும் வறுமை இல்லாமல் போகும்.

சிறந்த அணிகலம்

பகீரதனுக்கு ஐந்து சகோதரர்கள். அவர்களில் மூவர் பெண்கள். ஐவரும் பாடசாலைக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். பகீரதன் சற்றுத் துடுக்கானவன். பாடசாலைக்குச் செல்வதாக வீட்டில் கூறிவிட்டு நண்பர்களுடன் சென்று ஊர் சுற்றுவான். பாடசாலையில் ஆசிரியர்களும் அதிபரும் அவனுக்குப் புத்திமதிகள் பல கூறிய போதும் அவன் அவற்றைக் கேட்பதில்லை. அதனால் அவன் கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் ஒரு பாடம் கூட சித்தியடையவில்லை. தன்னுடன் ஊர் சுற்றிய மாணவர்களைத் தவிர மற்றைய எல்லோரும் பரீட்சையில் சித்தியடையத் தான் மட்டும் சித்தியடையாதது அவனுக்குக் கவலையைக் கொடுத்தது.

அவனது தந்தை அருணாசலம் ஊரில் கூலிவேலை செய்பவர். அவர் பகீரதனை அழைத்துச் சொன்னார் "தம்பீ நானும் உன்னை மாதிரித்தான் படிக்கின்ற வயதில் விளையாடித் திரிந்தேன். அதனால் தான் இன்று ஊரில் உள்ள வீடுகளில் கூலி வேலை செய்கிறேன். என்னைப் போல் நீங்களும் கஸ்டப்படக் கூடாதென்பதற்காகத் தான் நான் என்னை வருத்தி உழைத்து உங்களைக் கற்பிக்கிறேன். மற்றைய ஐந்து பிள்ளைகளும் நன்றாகக் கற்கிறார்கள். மூத்தவனான நீ அவர்களுக்கு வழிகாட்டியாக இருக்காமல் தறுதலையாக இருக்கிறாய். கல்விக்குக் காலமில்லை. இன்னும் முயற்சித்தால் நீ கற்கலாம். என்னுடன் கல்விகற்ற மணிவண்ணன் திருமணமான பின்புதான் கற்று உத்தியோகமானான். உனக்காக நான் இன்றும் கஸ்டப்படத் தயாராக உள்ளேன். முடிந்தால் படி" என்றார்.

"இனி என்னால் படிக்க முடியாதப்பா. தயவு செய்து என்னை வைத்திலிங்கச் செட்டியாரின் வர்த்தக நிலையத்தில் சேர்த்து விடுங்கள். நான் அவரிடம் தொழில் கற்று முன்னேறுவேன்." என்றான்.

"சரி உனது விருப்பப்படி செய். வர்த்தகத்திற்கு மூலதனத்தை விட கல்வியறிவு தான் முக்கியம். நீ இளவயதினன். முற்கோபக்காரன். அவசர புத்திக்காரன். எனவே செட்டியாரைப் பகைத்து விடாதே. வருடத்தில் அரைவாசி நாட்கள் நான் செட்டியார் வீட்டில் தான் வேலை செய்கிறேன். செட்டியாரை எதிர்த்துப் பேசாதே. அவர் உனக்குச் சம்பளம் தருபவர். அவர் எதைச் சொன்னாலும் செய். பிழையாகச் சொன்னாலும் எதிர்வார்த்தை கூறாதே. பணிவுடன் நடந்துகொள் முன்னேறலாம்" என்றார்.

பகீரதன் வைத்திலிங்கச் செட்டியாரிடம் வேலைக்குச் சேர்ந்தான். முதல் நாள் அவன் வேலைக்குச் சென்றபோது செட்டியார் சொன்னார் ‘‘அருணாசலம் மிகவும் நல்ல மனிதன். அவனுக்கு உன்னைமாதிரி ஒரு தறுதலைப்பிள்ளை ஏன் பிறந்நது என்று தெரியவில்லை. அவனுக்காகத்தான் உன்னை வேலைக்கு எடுத்தேன். ஒழுங்காக நடக்காவிட்டால் துரத்திவிடுவேன். ஒழுங்காக நடந்தால் சம்பளமும் கூடும். நல்ல வேலையாகவும் தருவேன்...’’

பகீரதன் எதுகும் கூறவில்லை. நல்ல முறையில் நடந்து செட்டியாரின் நன்மதிப்பைப் பெறவேண்டுமென நினைத்துக்கொண்டான். செட்டியாரின் வர்த்தக நிலையத்தில் நூற்றியம்பது பேர் வேலை செய்தனர். அவர்களுக்கு தேநீர் தயாரித்துக் கொடுப்பதும், சமையலுக்கு உதவுவதும் தான் பகீரதனது வேலை. மிகவும் சந்தோசமாகவும் உற்சாகமாகவும் பகீரதன் தனது வேலையைச் செய்தான். அருணாசலத்தின் மீதுள்ள அக்கறையால் பகீரதனை நன்கு அவதானித்த செட்டியார் அவனது வேலையில் திருப்தி கண்டார். அதனால் அவனது பொறுமையைச் சோதிப்பதற்காக அவனை தேவையில்லாமல் ஏசினார். பலமுறை பகீரதனுக்கு கோபம் வந்தது. தகப்பனின் ஆலோசனைக்கமைய பல்லைக் கடித்துக்கொண்டு பேசாதிருந்தான். எல்லோருக்கும் வேலை நான்கு மணிக்கு முடிந்துவிடும். செட்டியார் பகீரதனை நான்கு மணிக்குப் பின்பும் நிற்கச் சொல்வார். அதன்பின் செட்டியாரின் மாட்டுத் தொழுவத்தை துப்பரவு செய்தல் வேண்டும். பசுக்களுக்கு தீனி போடவேண்டும். பால்கறத்தல் வேண்டும். இவையெல்லாம் செய்து முடிய இரவு ஒன்பது மணியாகிவிடும். பகீரதன் களைத்து விடுவான். சிலவேளைகளில் செட்டியார் அவ்வேலைகள் முடிய பகீரதனுக்கு இரவு உணவு கொடுத்துவிட்டு அங்கேயே தங்கச் சொல்வார். இரவில் பன்னிரண்டு மணிவரை செட்டியார் கணக்குப் பார்ப்பார். பகீரதன் அவருக்கு உதவியாக இருப்பான்.

கணக்கில் பகீரதன் அதிக அக்கறை காட்டினான். அதைக் கற்றுவிட வேண்டுமென்ற ஆவல் அவனது மனதில் இருந்தது. இரவு இரண்டு மணிக்கு படுக்கும் பகீரதன் மறுநாள் சிலசமயம் நித்திரையால் எழ நேரம் சென்றால் செட்டியார் ஏசுவார். பகீரதனுக்கு கோபம் வந்தாலும் பொறுத்துக் கொள்வான். நாட்கள் நகர்ந்து மாதங்களாகின. செட்டியார் பகீரதனிடத்தில் வேலை வாங்குவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தாரே தவிர சம்பளம் கொடுக்கவில்லை. பகீரதனுக்கு அது கவலையாக இருந்தது. எனினும் அவன் அதைப்பற்றிச் செட்டியாருடன் கதைக்கவில்லை. செட்டியார் சொல்வதைச் செய்யாது விடுவதுமில்லை. செட்டியார் அவன் சம்பளம் கேட்பான் , அல்லது தான் சொல்லும் வேளைகளைச் செய்யாது விடுவான் என எதிர்பார்த்தார். ஆனால் அவன் அதுபற்றிக் கதைக்காததால் அவன் மீதுள்ள அபிமானம் செட்டியாருக்கு

அதிகரித்தது. அதனால் அவனைத் தனது உதவியாளனாக்கிக் கொண்டார். பின் படிப்படியாக செட்டியார் பகீரதனிடம் தனது வேலைகளை ஒப்படைத்துவிட்டு மேற்பார்வை செய்துவந்தார்.

நாளடைவில் செட்டியாருக்கு தலயாத்திரை செய்யும் எண்ணம் உருவானது. அதனால் வர்த்தகத்தை பகீரதனிடம் ஒப்படைத்துவிட்டு தலயாத்திரை சென்றார். ஆறு மாதங்களின் பின் திரும்பி வந்து பார்த்தபோது வர்த்தகம் முன்னேறி இருந்தது. தொழிலாளர்களும் , வாடிக்கையாளர்களும் பகீரதனுடன் மனம்விட்டுப் பழகினர். எதையும் துணிந்து கேட்டனர். பகீரதன் அவர்கள் கேட்பவற்றிற்கு அன்போடு பதிலளித்தான். கட்டளை இடாது அன்பாகச் சொன்னான். செட்டியாரின் வருமானம் அதிகரித்து. அதனால் செட்டியார் பெருந்தொகைப் பணத்தை அவனுக்குச் சம்பளமாகக் கொடுத்தார்.

95. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு

அணி;அல்ல மற்றுப் பிற.

பணிவு உடையவனாகவும், இன்சொல் பேசுபவனாகவும் இருத்தலே ஒருவனுக்கு சிறந்த அணிகலனாகும். மற்றைய அணிகள் அணிகள் அல்ல.

நல்லதை நாடு

மாவடி கிராமமென்றால் அயல் ஊாகளில் வாழும் மக்கள் அஞ்சுவார்கள். அந்தளவில் மாவடிக்கிராம மக்கள் அடிதடிகளிலும் சண்டை சச்சரவுகளிலும் ஈடுபடுவர். மங்கள வைபவங்களானால் அவ்வைபவங்கள் நடைபெறும் தினங்களில் மட்டும் அமைதியாக இருப்பார்கள். அன்று இரவு சட்ட விரோதமாகக் காய்ச்சும் கசிப்பு என்ற சாராயத்தை போத்தல் போத்தல்களாக வாங்கிவந்து குடித்துவிட்டு சண்டை பிடிப்பார்கள். அச்சண்டைகள் சிலசமயம் வெட்டுக் கொத்துகளிலும் முடியும். மிகவும் கோலாகலமாக மகிழ்வுடன் கொண்டாடிய வைபவங்கள் பெரும் துன்பத்தில் முடிவடையும். மரண வீடுகளுக்கு அனேகமாக உறவினர்களைத் தவிர மற்றையோர் செல்வது குறைவு. மரணவீட்டுக்கு ஒப்புக்குச் சென்றாலும் சுடலைக்குப் பெரும்பான்மையானவர்கள் செல்லமாட்டார்கள். ஆரம்பத்தில் மரணவீடுகளுக்கு பறைமேளம் அடிக்கப்பட்டு வந்தது. பெரும்பாலான மரண வீடுகளில் சண்டைகள் நிகழ்வதாலும் பறைமேளம்

அடிப்பவர்களை மதுபோதையில் உள்ளோர் தாம் தாம் விரும்பியபடி , விரும்பிய இடங்களில் அடிக்கச்சொல்லி சண்டையிடுவதாலும் வீண் பிரச்சினைகள் பல ஏற்பட்டு மேளம் அடிப்பவர்கள் காயப்படுவதுண்டு. அதனால் பறை மேளமடிப்போர் மாலடிக் கிராம மரணவீடுகளுக்கு பறைமேளம் அடிக்கச்செல்வதில்லை.

அருளானந்தன் மாவடிக் கிராமத்தில் வாழும் ஆசிரியர். பெரும்பாலான மாவடிக் கிராம மக்கள் அவரிடமே கல்வி கற்றனர். அவர் அக்கிராமப் பாடசாலையில் முப்பது வருடங்கள் கற்பித்து அண்மையில் ஓய்வு பெற்றிருந்தார். பொதுவாக அவர் எல்லோருடனும் அன்பாகப் பேசுவார். பண்பாகப் பழகுவார். சாதி, சமயம் பாராது எந்த வீட்டில் என்ன வைபவம் நடந்தாலும் சென்று வருவார். பெரும்பாலான மரணவீட்டுச் சண்டைகளை சமாதானம் செய்து வைப்பது அருளானந்தன் தான். பொதுவாக அக்கிராமத்தில் உள்ள சிறியசிறிய தொழில் பார்ப்பவர்களும் வசதியானவர்களும் தமது இனத்தவர்களிலும் தகுதியானவர்கள் எனத் தாம் நினைத்தவர்களின் வீடுகளுக்குத்தான் நல்லது கெட்டதுகளுக்கு சென்று வருவார்கள். அவர்களுக்கு எல்லோருடனும் பழக விருப்பமிருந்தாலும் வீண் பிரச்சினைகளில் மாட்டுப்பட்டு விடுவோமோ என்ற பயத்தினால் பழக விரும்புவது இல்லை.

அன்று அருளானந்தனைக் பார்ப்பதற்காக அயற்கிராமத்தில் இருந்து வந்த சரவணபவன் என்ற ஆசிரியரை மாவடிக் கிராமத்தில் வாழும் மூவர் வழிமறித்துத் தாக்கிவிட்டனர். அதனால் ஆத்திரமடைந்த சரவணபவன் அருளானந்தத்திடம் கவலையோடு சொன்னார் ‘‘ஐயா நாகரீகமடைந்த இந்தக் காலத்திலும் இப்படியான மக்கள் வாழ்கிறார்கள் என்பதை நினைக்க எனக்கு வெட்கமாக இருக்கிறது. எந்தக் குற்றமும் செய்யாமல் வந்த என்னை மூவர் வழிமறித்து அடித்தது மட்டுமல்லாமல் கண்டபடி ஏசினார்கள். இதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எனது மகளும் உங்களைப் பார்ப்பதற்கு வருவதாக இருந்தாள். எனது மனைவி விடவில்லை. அந்தக் கிராமத்திற்கு ஆம்பிளைகள் போவதே பயம். குமர்ப்பிள்ளையையும் கூட்டிக்கொண்டு போகப் போறீர்களா? என்று சொன்னாள். அவள் சொன்னது சரிதான். எனக்கு அடித்தது போல் எனது பிள்ளைகளுக்கு ஏதாவது நடந்திருந்தால் நான் வாழ்வதில் என்ன பிரயோசனம். நீங்கள் ஏன் இந்தக் கிராமத்திலை இருக்கிறீர்கள். எங்களது கிராமத்திற்கு வாங்கோ. நான் வீடு எடுத்துத்தாறன்.’’

அருளானந்தம் எதுகும் பேசவில்லை. மறுநாள் அருளானந்தம் காணிபூமிகளை விற்றுவிட்டு அயலூருக்குச் செல்லப் போவதாக ஊரில் கதை உலாவியது. பலர் அவரைத் தேடி வந்தனர். அவர்களுக்கெல்லாம் முதல்நாள் நடைபெற்ற சம்பவத்தைக் கூறி தான் கிராமத்தை விட்டு செல்லப்போவது உண்மைதான் என்று சொன்னார் அருளானந்தம்.

அருளானந்தம் ஊரை விட்டுச் செல்வது உண்மைதான் என்பதை அறிந்த அவரது மாணவர்கள் பலர் அவரைச் செல்லவேண்டாமென்று கூறினர். ‘‘நான் இந்தக் கிராமத்தில் வாழ வேண்டுமானால் என்னிடம் படித்த எல்லோரும் ஒழுக்கமாக வாழ வேண்டும். உயிரிலும் மேலானது ஒழுக்கம். கால்க் காசுக்குப் போன மானம் கோடி கொடுத்தாலும் வராது என்பார்கள். இரண்டு தினங்களுக்கு முன்பு என்னிடம் வந்த ஓர் அயலூரவனை தாக்கியிருக்கிறார்கள். அவன் என்னைப்பற்றி என்ன நினைப்பான?’’

‘‘உண்மைதான் ஐயா. இனிமேல் இக்கிராம மக்களை ஒழுங்காக வாழும்படி செய்வது எமது கடமை. தயவு செய்து எமது குருவான நீங்கள் இதற்து தலைமை தாங்குங்கள்.’’ என்றான் கஜானன் என்ற மாணவன்.

‘‘நீங்கள் கேட்டதற்காக நான் தலைமை தாங்குகிறேன். முதலில் கள்ளச் சாராய விற்பனையை முற்றாக நிறுத்துங்கள். அதனால் எல்லாக் குற்றச் செயல்களும் நின்றுவிடும்’’ என்றார் அருளானந்தம்.

அன்று சனசமூக நிலையத்தில் அக்கிராம மக்களில் பெரும்பான்மையானோர் கூடி இருந்தனர். அருளானந்தன் பேசினார். ‘‘அன்பான மக்களே, தயவு செய்து கள்ளச் சாராயத்தைக் குடிக்காதீர்கள். அது உடல் நலத்திற்குக் கூடாதது மட்டுமல்ல. வீண் பிரச்சினைகளையும் உருவாக்கும். உங்கள் பிள்ளைகளின் வாழ்வைச் சீரழிக்கும். அத்துடன் மதிப்பு, மரியாதையை இழக்கச் செய்யும். எமது கிராமத்தை யாரும் மதிப்பதில்லை. இதைவிடக் கேவலமானது என்ன...? சிந்தித்துப் பாருங்கள்...’’

அதன்பின் அருளானந்தத்தின் தலைமையில் இளைஞர்கள் கள்ளச் சாராயம் காய்ச்சும் வீடுகளை முற்றுகையிட்டனர். சண்டைக்கு வந்தோரை காவல்துறையினரிடம் பிடித்துக் கொடுத்தனர். அதனால் மாவடிக் கிராமத்தில் குற்றச் செயல்கள் குறைய ஆரம்பித்தன. குடும்பச் சண்டைகள், சுபநிகழ்வுகளில் நடைபெறும் சண்டைகள், மரணவீடுகளில் நடைபெறும் சண்டைசச்சரவுகள் குறைந்தன. மக்கள் பிரேத ஊர்வலத்துடன் மயானத்திற்குச் சென்றனர்.

ஆறு மாதங்களில் மாவடிக்கிராமம் முற்றாக மாறிவிட்டது. கோயில் விழாக்களுக்குக் கூட செல்ல அஞ்சிய மக்கள் கோயில்களுக்குச் செல்லத் தொடங்கினர். விசேட தினங்களிலும், திருவிழாக் காலங்களிலும் சமய ஆராதனைகளும், சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. அருளானந்தன் ஆசிரியர் சமயத் தத்துவங்களையும், ஒழுக்கக் கருத்துக்களையும் இனிய மொழியில் எடுத்துரைத்தார்.

சரவணபவன் தனது மகளுக்கு மாலடிக் கிராமத்தில் மாப்பிளை தேடினார். அவருடன் குடித்துவிட்டுச் சண்டைக்குச் சென்ற கந்தசாமியின் மகனை தனது மருமகனாக ஏற்றார். அந்தளவில் அக்கிராம மக்கள் முழுமையாகத் திருந்தியிருந்தனர்.

96. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை

நாடி இனிய சொலின்.

பிறருக்கு நன்மையானவற்றை விரும்பி, இனிமையான சொற்களைப் பேசிவந்தால் பாவங்கள் தேய்ந்து மறைய அறம் பெருகும்.

நயன் ஈனும்

கதிர்காமநாதன் சேனையூரில் சிறிய கடையொன்று வைத்து நடாத்தி வந்தான். சொற்ப முதலைக் கொண்டு அவன் அக்கடையை ஆரம்பித்திருந்தான். முதல்நாள் நடைபெறும் வியாபாரத்தில் வரும் முதலைக் கொண்டு மறுநாட் காலையில் சந்தையில் பொருட்களைக் கொள்வனவு செய்து வந்து விற்பனை செய்வான். அவனின் கடைக்கு அருகில் பல பெரிய கடைகள் இருந்தமையால் ஆரம்பத்தில் வியாபாரம் மிகவும் மந்தமாகவே நடைபெற்றது. கதிர்காமநாதன் மிகவும் நேர்மையானவன். எல்லோருடனும் மரியாதையாகப் பழகுவான். தன்னில் பார்க்க இரண்டொரு வயது குறைந்தவர்களையும் பெயர் சொல்லியழையாது "ஐயா" என்று மரியாதையாக அழைப்பான். எவரையும் ஒருமையில் பேசமாட்டான். அத்துடன் நல்ல பொருட்களை வாங்கி வந்து சிறிதளவு ஆதாயம் வைத்து விற்பான். பக்கத்தில் உள்ள கடைக்காரர் பழுதடைந்த பொருட்களை மலிவு விலையில் கொள்வனவு செய்து வந்து கதிர்காமநாதன் விற்கும் விலைக்கோ, அல்லது குறைத்தோ விற்பார்கள். நிறையக் கடனும் கொடுப்பார்கள். வாங்காத பொருட்களுக்கும் கணக்கு எழுதுவார்கள்.

விவசாயிகளுக்கு விதைப்புக் காலங்களில் பெரும்பாலும் பணத்தட்டுப்பாடு ஏற்படும். அவ்வேளைகளில் வியாபாரிகள் கடனாக அவர்களுக்கு வேண்டிய பொருட்களை கூடிய விலைக்குக் கொடுப்பார்கள். பின் தமது கடனுக்குச் சமமான பணத்தை வாங்கமாட்டார்கள். விளைபொருட்களைக் கேட்பார்கள். ஒரு கிலோ வெங்காயம் சந்தையில் நாற்பது ரூபா விற்றால் கடைக்காரர்கள்

விவசாயிகளிடம் இருபத்தைந்து ரூபாவுக்குக் கொள்வனவு செய்வார்கள். சிலர் நிறை குறைந்த தராசுகளைப் பயன்படுத்தி கொள்ளை லாபம் பெறுவார்கள்.

கதிர்காமநாதன் சிறுமுதலைக் கொண்டு வியாபாரம் செய்தமையால் அவனால் விவசாயிகளுக்குக் கடன்கொடுக்க முடியவில்லை. கதிர்காமநாதன் மிகவும் நேர்மையானவன். நல்ல பொருட்களை விற்பவன். நல்லவன் என்பதனை அறிந்த வசதியான மக்கள் அவனது கடையில் வாடிக்கையாளர்களாக இருந்தனர். அவ்வூரில் கந்தையாப்பிள்ளை என்ற ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் கதிர்காமநாதனிடத்தில் தான் பொருட்களை வாங்குவார். தனக்குத் தேவையான பொருட்களின் பட்டியலைக் கொடுத்து அனுப்புவார். கதிர்காமநாதன் தன்னிடமில்லாத பொருட்களை பட்டணத்தில் கொள்வனவு செய்து கொடுப்பான். அத்துடன் அவருக்குத் தேவையான பொருட்களை அவரது வீட்டில் கொண்டுசென்று கொடுப்பான். இதனால் மகிழ்ந்த கந்தையாப்பிள்ளை பட்டணத்தில் உள்ள தனக்குத் தெரிந்த பெரிய வியாபாரி ஒருவருக்கு கதிர்காமநாதனை அறிமுகஞ்செய்து வைத்து, அவனுக்குத் தேவையான அத்தனை பொருட்களையும் கடனாகக் கொடுக்கும்படி கூறினார். அதற்குத்தான் பொறுப்பு நிற்பதாகவும் கூறினார்.

கதிர்காமநாதன் மொத்த வியாபாரியிடம் கடன் வாங்கினான். வாங்கிய கடனை உரிய தவணையில் திருப்பிக் கொடுப்பான். அவருடன் அன்பாகப் பழகுவான். அங்கு வேலை செய்யும் சிப்பந்திகளுடனும் மகிழ்வுடன் பேசுவான். அவர்களை மதித்து நடப்பான். அவர்களின் வீட்டில் ஏதாவது வைபவங்கள் நடந்தால் அங்கு சென்று வருவான்.

ஆறு மாதங்கள் கழிந்தன. பட்டண வியாபாரி கதிர்காமநாதனை தன் சகோதரனைப் போல் எண்ணினார். அவரிடம் கதிர்காமநாதன் ஆலோசனைகள் கேட்பான். ஒருநாள் அவர் கதிர்காமநாதனை அழைத்து அவர் சொன்னார் ‘‘தம்பி உன்னில் எனக்கு பூரண நம்பிக்கை இருக்கிறது. கந்தையாப்பிள்ளை ஐயா மிகவும் நல்லவர். ஒழுக்கம் மிக்கவர். தப்பானவர்களுடன் பழகமாட்டார். எனவே உனக்குத் தேவையான பொருட்கள் யாவற்றையும் உனக்கு மொத்த விலையில் தருகிறேன். உனது கடையைப் பெருப்பித்து வியாபாரஞ் செய்’’.

கதிர்காமநாதன் ஒப்புக்கொண்டான். அடுத்த வாரம் பட்டணத்து வியாபாரி பெருந்தொகையான பொருட்களை தனது வாகனத்தில் ஏற்றி வந்து கொடுத்தார். பட்டணத்தில் கடைக்காராகள் விற்கும் விலைக்கு கதிர்காமநாதன் பொருட்களை விற்கத் தொடங்கினான். எல்லோருடனும் மகிழ்வுடன் இன்சொல் பேசினான். எல்லோரையும் மதித்து நடந்தான். விவசாயிகளுக்கு விதைப்புக் காலங்களில் பட்டணத்து வியாபாரியிடம்

கடனாக பொருட்களைப் பெற்றுக்கொடுத்தான். பின் விவசாயிகளிடமிருந்து சந்தை விலைக்கு பொருட்களைக் கொள்வனவு செய்து பட்டணத்து வியாபாரியின் கடனைத் தீர்த்தான். ஊரில் உள்ளவர்கள் மட்டுமல்லாது அயல் கிராமங்களில் உள்ள மக்களும் கதிர்காமநாதனின் கடைக்கு வந்து பொருட்களைக் கொள்வனவு செய்தனர். கதிர்காமநாதன் பெருஞ் செல்வந்தனானான்.

97. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று

பண்பின் தலைப்பிரியாச் சொல்.

பிறருக்கு நல்ல பயனைத் தந்து நல்ல பண்பில் இருந்து நீங்காத இனிய சொற்கள், பேசுபவனுக்கும் இன்பத்தையும் நன்மையையும் கொடுக்கும்.

குறைவிலா இன்பம்

சிவலிங்கராசாவுக்கு ஐந்து பிள்ளைகள். சிவலிங்கராசாவின் தந்தை கந்தவனம். கந்தவனத்தினது ஆறாவது கடைசி மகன் சிவலிங்கராசா. கந்தவனம் ஒரு விவசாயி. விவசாயத்தின் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் தன்பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்கப் போதாதென்பதால் விவசாய வேலைகள் இல்லாத சமயங்களில் கூலிக்கு மற்றையோரின் தோட்டங்களில் வேலை செய்வார். அவர் ஒரு நல்ல தொழிலாளியென்பதால் அவ்வூரில் விவசாயம் செய்வோர் முன்கூட்டியே தமது தோட்டங்களில் வேலை செய்வதற்காக சொல்லி வைப்பார்கள்.

கந்தவனம் தினமும் தனது குடும்பத்தினருடன் இருந்துதான் இரவு உணவை உண்பார். காலையில் பிள்ளைகள் நித்திரை விட்டெழுமுன்பு வேலைக்குப் புறப்பட்டுவிடுவார். மதிய உணவை அவர் வேலை செய்யும் இடத்திற்கு அவரது மனைவி லட்சுமி கொண்டு சென்று கொடுப்பாள். வேலையை முடித்துவிட்டு தனது தோட்டத்திற்குச் சென்று தான் வளர்க்கும் கால்நடைகளுக்கு புற்களைச் சேகரித்துக்கொண்டு அவர் வீட்டுக்கு வர இரவு எட்டுமணியாகிவிடும். அதன்பின் குளித்துவிட்டு இரவுச் சாப்பாட்டுக்காக அமர ஒன்பது மணியாகிவிடும்.

சாப்பிடும் பொழுது அவர் தனது பிள்ளைகளுக்குத் தினமும் ஏதாவது ஒழுக்கம் சம்மந்தமாகச் சொல்வார். ‘‘நாம் பிறரை மதிக்க

வேண்டும். எம்மில் மேலானவர்களைப் பணிதல் வேண்டும். கீழானவர்களையும் மதித்தல் வேண்டும். யாரையும் எவ்வேளையிலும் அவமதிக்கக் கூடாது. கடினவார்த்தைகளால் ஏசுதல் கூடாது. ஒருவர் மற்றையோருக்கு தீங்கு செய்வது அறியாமையினாலேயே ஆகும். எனவே அவர்களது அறியாமையை நீக்க வேண்டுமே தவிர வன்முறைகளால் அவரது மனதைப் புண்படுத்துதல் கூடாது...'' இப்படிக் கூறி வளர்த்தமையால் கந்தவனத்தின் ஆறுபிள்ளைகளும் நன்கு படித்து நல்ல நல்ல உத்தியோகங்களில் இருக்கிறார்கள். சமூகமும் அவர்களை மதித்துப் போற்றி வருகிறது.

சிவலிங்கராசா அக்கிராமத்தில் உள்ள பிரபல்யமான ஒரு பாடசாலையின் அதிபர். அடுத்த வருடம் அறுபது வயது பூர்த்தியாகி ஓய்வுபெறவுள்ளார். அவர் அப்பாடசாலைக்கு பத்து வருடங்களுக்கு முன்பு இடமாற்றம் பெற்று வரும்போது பத்து ஆசிரியர்களும் இருநூற்றி ஐம்பது பிள்ளைகளும் இருந்தனர். தற்பொழுது அறுபது ஆசிரியர்களும் ஆயிரத்து ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட பிள்ளைகளும் இருக்கின்றனர்.

அப்பாடசாலையின் வளர்ச்சிக்குக் காரணம் அவரது நடத்தை தான். ஆசிரியர்களுடனோ, அதிகாரிகளுடனோ, பெற்றோருடனோ அவர் எப்பொழுதாவது முரண்பட்டதில்லை. அவ்வூரில் வாழும் கூலித் தொழிலாளி கூட தனக்கு இருக்கும் பிரச்சினையை நேரிற் சென்று அவரிடம் கூறலாம். அத்துடன் அவர் பாடசாலையில் பாகுபாடு பார்ப்பதில்லை. கூலிக்காரனின் பிள்ளையாக இருந்தாலும் சரி, பணக்காரனின் பிள்ளையாக இருந்தாலும் சரி ஒரே மாதிரியாகத்தான் நடத்துவார். பெற்றோருடனோ, ஆசிரியர்களுடனோ தகுதி, சாதி முதலியன பார்க்கமாட்டார். பாடசாலையின் உயர்வு ஒன்றையே நோக்காகக் கொண்டு செயற்பட்டு வந்தார்.

சிவலிங்கராசாவின் இரு சகோதரர்கள் வைத்தியர்கள். இருவர் பொறியிலாளர்கள். ஒருவர் பட்டதாரி ஆசிரியர். அவர்களுடைய பிள்ளைகளெல்லாம் நல்ல முறையில் கற்று நல்ல தொழில்களில் இருந்தனர். சிவலிங்கராசாவின் மூத்த இரு புதல்வியர்களும் வைத்தியர்கள். மூன்றாவது மகன் பொறியியலாளர். நாலாவது மகன் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புப் படிக்கிறான். ஐந்தாவது மகன் ஊரில் உள்ள பாடசாலையில் க.பொ.த உயர்தர வகுப்பில் படிக்கிறான்.

அன்று வருடப்பிறப்பு. கந்தவனம் சிவலிங்கராசாவுடன் தான் இருக்கிறார். வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற பண்டிகை நாட்களில் கந்தவனத்தின் எல்லாப் பிள்ளைகளும் தமது பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு வருவார்கள்.

இருபத்தைந்துக்கும் மேற்பட்ட விலையுயர்ந்த மோட்டார் வண்டிகள் அன்று கந்தவனத்தின் வீட்டுக்கு வந்து சேரும். மதிய உணவை எல்லோருமாகச் சேர்ந்து சமைத்து ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவார்கள். தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் எல்லோருடனும் அமர்ந்திருந்து சாப்பிடும் கந்தவனத்திற்கு உண்டாகும் மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. தனது பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும், பூட்டப்பிள்ளைகளும் சந்தோசமாகக் கதைத்து சிரிப்பதைப் பார்க்க அவருக்கு ஆனந்தமாக இருக்கும். தள்ளாத வயதிலும் தளர்வில்லாது வாழும் அவர் சாப்பிடும் போது சொன்னார்; "எனது தந்தையார் எனக்குக் கூறியதை உங்கள் தந்தைமாருக்கு நான் கூறியுள்ளேன். நான் கூறியதை எனது பிள்ளைகள் உங்களுக்குக் கூறியிருப்பார்கள். அதே போல் நீங்களும் உங்கள் பிள்ளைகளுக்குக் கூறுதல் வேண்டும். ஒரு கூலித் தொழிலாளியான எனது பிள்ளைகள் இன்று ஓகோ என்று வாழக் காரணம் பணிவும், பண்பும் தான். நான்கு பரம்பரையினர் இன்று இங்கு ஒற்றுமையாக இருக்கிறோம். அதற்குக் காரணம் யாரையும் மனம் புண்பட வைக்காது நாம் வாழ்ந்தது தான். எனது தந்தையைப் போலவும், என்னைப் போலவும், உங்கள் தந்தைமாரைப் போலவும் பண்பாகவும், அன்பாகவும் எந்நாளும் எனது பேரப்பிள்ளைகளும், பூட்டப்பிள்ளைகளும் வாழவேண்டும் என்பது தான் எனது ஆசை."

அன்று மாலை கந்தவனத்தையும் அவரது பிள்ளைகளையும் பார்ப்பதற்காக உறவினர்களும், அயலவர்களும் நண்பர்களும் வந்து சென்றனர். மறுநாள் கந்தவனத்தின் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும், பூட்டப்பிள்ளைகளும் அக்கிராமத்திலுள்ள வீடுகள் அனைத்திற்கும் பரிசுப் பொருட்களுடன் சென்றனர். எல்லோரும் அவர்களை அன்புடன் வரவேற்று மகிழ்ந்தனர்.

98. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்

இம்மையும் இன்பம் தரும்.

பிறருக்குத் துன்பத்தைக் கொடுக்கும் சிறுமையில் இருந்து நீங்கிய இனியசொற்கள், இம்மையிலும் மறுமையிலும் பேசுவோருக்கு இன்பம் தரும்.

ஏணோ...?

பரமேஸ்வரன் ஆசிரியர் கருணை மிக்கவர். தன்னிடம் கல்வி பயிலும் மாணவர்களை கண்ணும், கருத்துமாகக் கவனிப்பவர். அவர்களின் நலனில் அக்கறை மிக்கவர். மிகவும் அன்பாக மாணவர்களுக்குக் கற்பிப்பார். மாணவர்கள் குற்றங்களைச் செய்தால் அன்பாகக் கண்டிப்பார். அதனால் மாணவர்களும், பெற்றோர்களும் , அவருடன் கற்பிக்கும் ஆசிரியர்களும், அதிபரும், மேலதிகாரிகளும் அவர் மீது மதிப்பு வைத்திருந்தனர். அப்பகுதிக்கான கல்வி அதிகாரி நல்லைநாதன் அகம்பாவம் மிக்கவர். ஆதனால் அதிபர்களும், ஆசிரியர்களும் யாபேரும் தனக்கு அடங்கி நடக்க வேண்டுமென்று நினைப்பவர். அதனால் அதிபர்களும், ஆசிரியர்களும் அவருக்குப் பயந்து நடுங்குவார்கள். அத்துடன் யாராவது கோள் சொன்னால் அப்படியே நம்பிவிடும் சுபாபமுடையவர் நல்லைநாதன்.

பரமேஸ்வரனுடன் ஒன்றாக ஒரே பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் பரிபூரணன். ஒருநாளாவது பாடசாலைக்கு நேரத்திற்கு வரமாட்டார். பாடசாலைக்கு வந்ததும் வகுப்புக்குச் செல்லமாட்டார். இவரோடு கற்பிக்கும் ஆசிரியர்கள் சிலர் இவரைப் போன்றவர்கள். அவர்களுடன் சேர்ந்து பாடசாலையைப் பற்றியும், ஒன்றாகக் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பற்றியும், அதிபரைப் பற்றியும் மிகவும் தரக்குறைவாகக் கதைப்பார்கள். சிலவேலைகளில் சண்டைகூட வரும். பரமேஸ்வரனுடன் பரிபூரணன் அடிக்கடி முரண்படுவார். ஆனால் பரமேஸ்வரன் அவரது பேச்சை பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை.

ஒரு முறை ஆரூரன் என்ற மாணவன் பல நாட்களாக வீட்டில் பாடசாலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு அவ்வூர்க் கோயிலில் மறைந்திருந்தான். ஆரூரனின் வகுப்பு ஆசிரியர் பரிபூரணன். அவர் வகுப்பிற்கு வருவது மிகவும் குறைவு. அப்படி வந்தாலும் பெரிதாக வகுப்பைக் கவனிப்பதில்லை. ஆரூரன் மறைந்திருப்பதைத் கண்ட கோயிற் குருக்கள் ஆரூரனின் தந்தையிடம் அதைப்பற்றிக் கூறினார். ஆரூரனின் தந்தை விக்னேஸ்வரன், ஆரூரனை அழைத்துக்கொண்டு பாடசாலைக்குச் வந்து அதிபரிடம் முறையிட்டார். அதிபர் ஆரூரனின் வகுப்பு தினவரவு இடாப்பை எடுத்துப் பார்த்தபோது பரிபூரணன் ஆரூரனுக்கு தினமும் வரவு வைத்திருந்தார். அதைப்பற்றி அதிபர் மிகவும் காரசாரமாக பரியூரணனை ஏசினார்.

அதிபரிடம் புகாரிடும் பெற்றோரில் பெரும்பான்மையானோர் பரமேஸ்வரனுக்கும் அச்சம்பவங்களைப் பற்றிச் சொல்வார்கள். விக்னேஸ்வரன் பரமேஸ்வரனுக்கு தனது குடும்ப நிலையைக் கூறி அவனைக் கவனித்துக் கொள்ளும்படி கூறி அழுதுவிட்டுச் சென்றார். விக்னேஸ்வரன் மிகுந்த ஏழை. ஆரூரன் அவரின் ஏகபுதல்வன். அதனால் அவனை அக்கறையுடன் கவனிக்கத் தொடங்கினார் பரமேஸ்வரன். பரமேஸ்வரனின் அன்பான அரவணைப்பில் அகமகிழ்ந்த ஆரூரன் அதன்பின் ஒழுங்காகப் பாடசாலைக்கு வரத் தொடங்கினான். வகுப்பிலும் முதலாம் பிள்ளையாக வந்தான். ஒருநாள் மதுபான

விற்பனை நிலையத்திற்கு வந்த விக்னேஸ்வரன் பரிபூரணனைக் கண்டார். ஏற்கனவே பரிபூரணனில் கோபம் கொண்டிருந்த விக்னேஸ்வரன் குடித்துவிட்டு பரிபூரணனைன ஏசினான்; ‘‘நீங்களெல்லாம் ஒரு ஆசிரியரே..... சீ... சொல்லவே வெட்கமாக இருக்கு. கைநிறைய கொழுத்த சம்பளத்தை வாங்கிக்கொண்டு ஒழுங்காகப் படிப்பிக்காமல் குடிச்சுக்கொண்டு திரியுறியள். பரமேஸ்வரன் வாத்தியாரைப் பாருங்கோ... தெய்வம். காலிலை விழுந்து கும்பிடலாம். இந்த ஊர்ச்சனம் முழுக்க அவரை தெய்வமாய் மதிக்குது....’’

விக்னேஸ்வரன் கதைத்துக்கொண்டிருக்கும் போது நடேசன் குறுக்கிட்டான். ‘‘அந்த மனிசன்ரை கதையை இஞ்சை கதையாதை... கள்ளுக் குடிக்கிற இடத்திலை கடவுளின்ரை கதையைக் கதைக்கக் கூடாது. நல்ல வெறியிலை இருந்தாலும் அந்த மனிசன்ரை பெயரைச் சொன்னால் வெறி முறிஞ்சிடும். ஊரிலை எத்தனை பேரைத் திருத்தியிருக்கிறார்... அவரிட்டைப் படிச்ச ஆர் உங்கை குறையாயிருக்கினை. நானும் அவரிட்டைப் படிச்சிருந்தால் தோட்டமே கொத்துவன்?’’

‘‘சும்மாய் அலட்டாதை... இனிக் கதைச்சியெண்டால் பல்லுடைப்பன்...’’ என்றார் பரிபூரணன்.

‘‘உடை பார்ப்பம்...’’ வேலியில் இருந்த கதிகால் ஒன்றைக் கழற்றிக்கொண்டு வந்தான் விக்னேஸ்வரன். தோட்டத்தால் கொண்டுவந்த மண்வெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்தான் நடேசு.

‘‘அடியடா உவனை அடிச்சுச் சாக்கொல்லடா’’ என்று கர்ச்சித்தான் ஆறுமுகம்.

‘‘வாத்தி என்றும் பாராதை, இரண்டு போடு’’ என்றான் குமாரசாமி.

‘‘வாத்தியார் உங்களுக்குப் படிச்சும் அறிவில்லையே... இந்த ஊரிலை பரமேஸ்வரன் வாத்தியாரை குறைசொல்ல ஆரும் விடான். குடிக்கவென்று வந்தால் குடிச்சிட்டு மரியாதையாய்ப் போங்கோ. நீங்கள் வெறியிலை அடிபட விக்கிற நான்தான் காவல்த் துறைக்குப் போகவேண்டி வரும்.’’ என்றான் மதுபானம் விற்பனை செய்யும் மாதவன்.

பரிபூரணனுக்கு அவமானமாக இருந்தது. ஆத்திரத்துடன் எழுந்து வெளியே சென்றான். பரமேஸ்வரனைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் பரிபூரணனின் மனதில் விஸ்வரூபம் எடுத்தது. நேராக கல்வி அதிகாரி நல்லைநாதனின் வீட்டுக்குச் சென்றான். நல்லைநாதன் அவரை அன்புடன் வரவேற்றார்.

“ஐயா இவன் பரமேஸ்வரன்ரை பல பிரச்சினைகளை நான் உங்களுக்குச் சொன்னனான். இண்டைக்கு நாலைந்து பேர் குடிச்சிட்டு பரமேஸ்வரனுக்காக எனக்கு அடிக்க வந்திட்டாங்கள். உங்களைப் பற்றியும் தாறுமாறாகப் பேசினாங்கள்...”

“என்னைப்பற்றிப் பேச என்ன இருக்கு...”

“நீ நல்லைநாதனோடு சேர்ந்து பரமேஸ்வரனுக்கு அள்ளி வைக்கப் பார்க்கிறாய். அவர் உன்னோடை சேர்ந்து குடிக்கிறார். காசு வாங்கிறார். அவராலை என்ன செய்ய முடியும்?” என்று கேட்டாங்கள்.

நல்லைநாதனுக்குப் பரமேஸ்வரன் தன்னை மதிப்பதில்லை என்ற ஒரு எண்ணம் இருந்ததால் அவரைப் பழிவாங்க வேண்டும் என்று நினைத்திருந்தார். “நீ போ. நாளைக்கு நான் பள்ளிக்கூடத்திற்கு வாறன். ஆளை எட்டத்திலை மாத்தி விடுவம்” என்றார்.

பரிபூரணன் மகிழ்வுடன் சென்றார். இதற்கு முன்பும் நல்லநாதன் இல்லாதது பொல்லாததுகளை பலர் சொல்லக் கேட்டு பல ஆசிரியர்களை இடம்மாற்றம் செய்துள்ளார்.

பரிபூரணன் சென்றதும் நல்லைநாதனின் இளைய மகன் பகீரதன் அவரின் அருகில் வந்தான். “அப்பா...”

“என்ன....?”

“ஏனப்பா அந்த நல்ல மனிசனோடை பிரச்சினைக்குப் போறியள். அவர் இல்லாட்டில் அந்தப் பள்ளிக்கூடம் விழுந்திடும். அதைவிட அவரை மாற்ற முடியாது. ஊரே திரண்டு மந்திரீட்டைப் போயிடும். நான் கூட அவற்றை பக்கம் தான் கதைப்பன். உன்னாவிரதமிருப்பன்...” பகீரதனின் கண்கள் கலங்கின. குரல் பிசிறியது.

“நீ போடா உள்ளுக்கு. படிக்கிற வயதிலை படி போ.... விடியட்டும் எல்லாம் காட்டித்தாறன்...” என்று கறுவினார் நல்லைநாதன்.

99. இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ

வன்சொல் வழங்கு வது?

இனிய சொற்கள் இன்பம் தருவதை உணர்ந்தவன், அவற்றிற்கு மாறான துன்பம் தரும் வன்சொற்களைப் பேசுவது என்ன பயன் கருதி?

காய் கவர்வோன்

வரதன் நன்றாகக் குடித்துவிட்டு தள்ளாடியபடி நடந்துவந்தான். வீதியில் விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகள் அவனைக் கண்டதும் ‘‘டேய் வரதன் வாறான்ரா’’ என்று கூறியபடி ஓடிச்சென்றனர். ஓட முடியாத சேந்தன் என்ற ஐந்து வயதுப் பாலகன் மூச்சடைக்க அழுதான். அவன் அணிந்திருந்த ஆடை நனைந்திருந்தது. வீரிட்டு அழும் அவனுக்குக் கிட்ட வரதன் செல்ல அவன் வீரிட்டு பலமாக அழுதான். சேந்தனின் உடல் பயத்தால் நடுங்கியது. அவனைப் பார்க்கப் பயந்து கண்களை மூடினான்.

அப்போது அவ்விடத்திற்கு வந்த கணபதி சேந்தனைத் தூக்கினார். ‘‘வரதன் நீ போ, உன்னைக் கண்டிட்டு சேந்தன் மூச்செடுக்க முடியாமல் அவதிப்படுகிறான். தயவுசெய்து நீ இவ்விடத்தில் நிற்காமல் போ...’’ வரதன் கணபதியைப் பரிதாபமாகப் பார்த்தபடி மெதுவாக நடந்தான். கணபதி சேந்தனின் பயத்தை ஒருவாறு நீக்கி அருகில் இருந்த அவனது வீட்டில் கொண்டுசென்று விட்டார்.

‘‘வரதனாலை பெரிய கரைச்சலாய்க் கிடக்கண்ணை. பிள்ளைகளை பொருட்கள் வாங்குவதற்காக கடைக்குவிட முடியாமல் இருக்கு. பாடசாலைக்கு தனியப் போகப் பயப்படுதுகள். பாடசாலைக்குக் கூட்டிக்கொண்டுபோய் விட்டுவிட்டு பாடசாலைவிட போய்க் கூட்டிவரவேண்டியிருக்கு. அவனுக்கு பிள்ளைகளை வெருட்டுவது பொழுதுபோக்காய்ப் போச்சு’’ சேந்தனின் தாய் சொன்னாள்.

வரதன் மெதுவாகத் தள்ளாடியபடி நடந்துசென்று சந்தியில் உள்ள அரசமரத்தின் கீழ் அமர்ந்துகொண்டான். அவனுக்கு சேந்தன் அழுதது கவலையைக் கொடுத்தது. தன்னைப் பிள்ளைகள் பேய் பிசாசைக் கண்டதைப் போல் பயப்படுவதை தாங்கிக்கொள்ள முடியவில்லை. அரசமரத்தின் கீழ் அமர்ந்திருந்த சண்முகமும், சிவராசாவும் வரதனைக் கண்டதும் எழுந்து சென்றனர்.

சந்தியில் கடை வைத்திருக்கும் நாகரட்ணம் வரதனைக் கண்டதும் கவலைப்பட்டான். ‘‘சுருட்டுக்கு வரப்போறான். வந்தால் போகமாட்டான். இவன் இருந்தால் கடைக்கு வாற சனங்களோடு சண்டைக்குப் போவான். இனிக் கடையை மூடவேண்டியது தான்...’’

கிராமப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் மயில்வாகனம் வீதியால் வந்தார். வரதனைக் கண்டதும் விரைவாக நடந்தார். ஒருநாள்

அவர் வரும்போது வரதனைக் கண்ட பிள்ளை ஒன்று வீரிட்டு அலறியபடி மயில்வாகனத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டது. வரதன் அப்பிள்ளையை ‘‘டேய் நான் உன்னைப் பிடித்து விழுங்கப்போறன்...’’ என்றான் கண்களை உருட்டியவாறு.

‘‘பிள்ளைகளை வெருட்டாதை. நீ வெருட்டுறதால் பிள்ளைகளின் எதிர்காலம் நாசமாய்ப் போம். மலரை மாதிரி மென்மையான மனத்தை உடைய பிள்ளைகளின் மனம் உனது செயல்களால் பெரும்பாதிப்புக்குள்ளாகிவிடும்’’ என்றார் மயில்வாகனம்.

‘‘போடா பேவாத்தி... பிள்ளைகளுக்குப் படிப்பி போ... வாத்தி என்றபடியால் விர்றன்.’’ இல்லாவிட்டால் கையை ஓங்கினான். அருகில் நின்றோர் எழுந்து சென்றனர்.

மயில்வாகனம் அதன்பின் அவன் இருக்கும் இடத்தைப் பார்ப்பதே இல்லை. விரைவாக நடக்கும் மயில்வாகனத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான் வரதன்.

‘‘வரதன்’’ என அன்புடன் அழைத்தபடி ஒரு கரம் வரதனின் தோளைப் பற்றியது. திரும்பிப் பார்த்தான். கணபதி புன்முறுவலுடன் நின்றார். ‘‘வரதா உன்னைக் கண்டுவிட்டு அந்தப் பிள்ளை பட்ட வேதனையை நீ பார்த்தாய் தானே... ஒரு சின்னஞ்சிறிய பிள்ளை. உலகை அறியாத பிள்ளையின் துன்பத்திற்கு நீ காரணமாக இருக்கலாமா...? சிந்தித்துப் பார். இனிமையாகப் பேசுவதன் மூலம் எல்லோரினதும் அன்பை நாம் பெற்றுக்கொள்ளலாம். உலகில் எவ்வளவு இனிமையான வார்த்தைகள் இருக்கு. அவற்றையெல்லாம் விட்டுவிட்டு கடுமையான விலக்கி வைக்கப்பட்ட வார்த்தைகளை நீ ஏன் பேசுகிறாய். உனது செயல் இனிமையான கனிகள் இருக்கும் போது புளிப்பான காய்களை உண்பதைப் போன்றதாகும். தயவுசெய்து நல்ல வார்த்தைகளைப் பேசு. அதன் பின் அதன் பயனை நீ உணர்வாய்’’ என்றார்.

வரதன் அதன்பின் எல்லோருடனும் இனிமையாகப் பேசினான். பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள் அவனது கையைப் பிடித்துக்கொண்டு சென்றன. எதிரே வருவோர் ‘‘வரதன் சுகமாக இருக்கிறாயா..?’’ என விசாரித்துச் சென்றனர். மயில்வாகனம் ஆசிரியர் அவனுடன் கலகலப்பாகக் கதைத்தார். சேந்தன் ‘‘வரதன் மாமா’’ என்று அன்பொழுக அழைத்தான். அறியாமையால் முன்பு வாழ்ந்த வாழ்க்கையை எண்ணிக் கவலைப்பட்டான் வரதன். இனிமையான வார்த்தைகளின் பயனை உணர்ந்துகொண்டான் வரதன்.

100. இனிய உளவாக இன்னாத கூறல்

கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

இனிய சொற்கள் இருக்கும் போது அவற்றைப் பேசாது கடுமையான சொற்களைப் பேசுதல் நல்ல கனிகள் இருக்கும்போது புளிப்பான காய்களைப் பறித்து உண்பதைப் போன்றது.

வையமும் வானும்

ஸ்ரீவாசவன் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் தொண்டு துரவு செய்பவன். அவனுக்கு வயது பதின்மூன்று. அவனது தாயும், தகப்பனும் சிறுவயதிலே காலமாகியதால் பாடசாலைக்குச் செல்லாது ஊரில் உள்ள வீடுகளில் கூலி வேலை செய்து வந்தான். காலையிலும் மாலையிலும் ஸ்ரீ வித்தியா மஹா கணபதியின் ஆலயத்திற்கு வந்து வணங்குவான். ஆலயக் குரு இராஜசங்கரசர்மாவுடன் நட்பான ஸ்ரீவாசன் குருக்களின் வீட்டிலேயே தங்கியிருந்தான். கோயிலைக் கூட்டித் துப்பரவாக்குவது, கழுவுவது, புற்களைச் செருக்குவது, விழாக்காலங்களில் குருக்களுக்கு உதவியாக மடப்பள்ளி வேலைகளைச் செய்வது அவனது தொழில். குருக்களிடம் பதினைந்து மாடுகள் நின்றன. அதைப் பராமரிப்பது ஸ்ரீவாசன்தான். கோயிலின் அருகில் கால் ஏக்கர் காணி இருந்தது. அதில் கோயிலுக்காகப் பூந்தோட்டமொன்றையும் உருவாக்கினான். எஞ்சிய நிலத்தில் வாழை மரங்களையும், மரக்கறிப் பயிர்களையும் நட்டான். அதிலிருந்து வரும் வருமானத்தைக் குருக்கள் அவனை எடுக்கச் சொன்னார். அத்துடன் ஊரில் கூலி வேலைகளும் செய்வதால் ஸ்ரீவாசனிடம் ஓரளவு பணம் புரளத் தொடங்கியது.

காலையிலும் மாலையிலும் பூசை முடிந்த பின்பு ஸ்ரீவாசன் தேவாரம் பாடுவான். தாளலயம் பிசகாது மிகவும் அருமையாகப் பாடும் அவனது தேவாரங்களைக் கேட்பதற்கென்று பலர் கோயிலுக்கு வருவார்கள்.

திருவிழாக் காலங்களில் ஒலிவாங்கியின் முன் அவன் நின்று தேவாரம் பாடினால் ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்ட சங்கீத வித்துவானின் பாடலென அறியாதவர்கள் நினைப்பார்கள். நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய திருவிழா ஆனிமாதம் நடைபெறும். அவ்வூர் வாசியான அம்பலவாணர் இருபது வருடங்களுக்கு முன்பு வெளிநாடு ஒன்றிற்குச் சென்றவர். அந்த வருடம் மஹா கணபதியின் திருவிழாவுக்காக வந்திருந்தார்.

பெரும் பணக்காரரான அவர் கோயில் திருப்பணிவேலைகள் பலவற்றைச் செய்தார். தினமும் பூசை முடிய ஸ்ரீவாசன் ஓதும் பஞ்சபுராணங்களின் இனிமையில் மெய்மறந்து போவார். அவன் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக அவனைப்பற்றி விசாரித்தார்.

''தம்பீ உனக்கு நல்ல குரல்வளமிருக்கிறது. பாடசாலைக்குச் சென்றுபடி. அங்கு சங்கீதத்தை ஒரு பாடமாக்கல்...'' என்றார்.

''ஐயா நான் இரண்டு வருடகாலம் பாடசாலைக்குச் செல்லவில்லை. அத்துடன் பாடசாலைக்குச் சென்றால் எனக்குச் சாப்பாட்டிற்கு வழியிருக்காது. பாடசாலைச் செலவுகளுக்குப் பணமில்லை.''

''அதைப்பற்றி நீ கவலைப்படாதே. நல்லதொரு பாடசாலையில் தங்கிப் படிப்பதற்கு ஏற்ற வசதிகளை நான் செய்கிறேன். நீ படிக்கச் சம்மதமா?'' என்று கேட்டார்.

ஸ்ரீவாசன் சம்மதித்தான். அவர் நகரில் உள்ள பிரபலமான பாடசாலை ஒன்றில் அவனைச் சேர்த்துவிட்டார். மாதா மாதம் அவனுக்குத் தேவையான பணத்தை அனுப்பிக் கொண்டிருந்தார்.

வருடங்கள் பல கழிந்தன. ஸ்ரீவாசன் பல்கலைக்கழகத்தில் சங்கீத பாடத்தில் பட்டம் பெற்று ஆசிரியரானான். அப்பொழுது அம்பலவாணர் மீண்டும் ஊருக்கு வந்திருந்தார். ஸ்ரீவாசன் அவரின் கால்களில் வீழ்ந்து வணங்கினான். ''ஐயா, நீங்கள் உதவி செய்யாவிட்டால் நான் ஒரு கூலியாகத் தான் வாழ்ந்திருப்பேன். எனது உறவினர் பலர் இருந்தும் உதவிகள் செய்யவில்லை. உங்களை எனக்குத் தெரியாது. தானாக வந்து எனக்கு உதவி செய்தமையால் இன்று நான் ஒரு பட்டதாரியாக இருக்கிறேன். எனது பாடலை பலரும் கேட்டு மகிழ்ந்து போற்றுகிறார்கள். இதற்குக் காரணமான நீங்கள் கூறும் எதையும் நான் செய்வேன்'' என்றான் ஸ்ரீவாசன்.

''முன்பு போல் தினமும் ஸ்ரீ வித்தியா மஹா கணபதியின் ஆலயத்தில் பஞ்சபுராணத்தை ஓது. நீ விரும்பினால் எனது நண்பனின் மகளைத் திருமணம் செய்... இந்த ஊரில் வாழும் சிவபாலனும் நானும் ஒன்றாகப் படித்தவர்கள். அவனது மகள் கலைவாணி நல்ல அழகி. வசதிகள் குறைவுதான். நான் வற்புறுத்தவில்லை. அவர்களின் வீட்டில் தான் நான் தங்கியுள்ளேன். திருமணம் என்பது மனம் விரும்பிய இருவர் ஒன்றுசேர்ந்து வாழ்வது. கலைவாணி நல்ல பெண். என்னால் ஒருவருடன் சில மணிநேரம் பழகினால் அவர்களைப்பற்றி புரிந்துகொள்ள முடியும். நான் வற்புறுத்தவில்லை. நீ அவளை மணம் புரியாவிட்டாலும் நான் குறைநினைக்கப் போவதும் இல்லை. விரும்பினால் செய்'' என்றார்.

ஸ்ரீவாசன் எதுகும் பேசவில்லை. அம்பலவாணரும் முடிவைக் கேட்கவில்லை. அன்றுமாலை அம்பலவாணரைச் சந்திப்பதற்காக ஸ்ரீவாசன் சிவபாலனின் வீட்டுக்குச் சென்றான். அம்பலவாணரும் சிவபாலனும் அவனை அன்புடன் வரவேற்று உபசரித்தனர். பலமணிநேரம் மூவரும் உரையாடினர். ஸ்ரீவாசன் கலைவாணி வருவாளா என்று ஆவலுடன் எதிர்பார்த்தான். அவள் வரவில்லை. அம்பலவாணர் தனது திருமணத்தைப் பற்றிக் கதைப்பார் என்று எதிர்பார்த்தான். அவர் அதைப்பற்றி எதுகும் கதைக்கவில்லை. அதனால் ஸ்ரீவாசன் தயங்கித் தயங்கி கூறினான். ‘‘எனக்கு கலைவாணியைத் திருமணம் செய்ய விருப்பம்...’’

‘‘அப்படியா?’’ என்ற அம்பலவாணர் சிவநாதனின் பக்கம் திரும்பி ‘‘நான் மறந்திட்டன். உனக்குச் சொல்ல நீ விரும்பினால் உனது மகள் கலைவாணியை ஸ்ரீவாசனுக்கு திருமணம் செய்து வை. எனக்காக சம்மதிக்க வேண்டாம்...’’

தாய், தகப்பனில்லாத அனாதைக்கு தனது மகளைச் செய்யச் சொன்னதும் சிவநாதன் சற்று அதிர்ந்து போனான். எனினும் உயிர் நண்பனின் வேண்டுகொளை நிராகரிக்க முடியாமல் சம்மதித்தான். நல்ல நாளில் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது.

101. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்

வானகமும் ஆற்றல் அரிது.

தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறன் முன் வந்து தனக்குச் செய்யும் உதவிக்கு கைம்மாறாக மண்ணுலகையும் விண்ணுலகையும் கொடுத்தாலும் அது அவ்வுதவிக்கு ஈடாகாது.

பெரிது

சோமசுந்தரத்தின் மகன் தனபாலன். சோமசுந்தரம் நல்லதொரு உழைப்பாளி. இளமையான காலத்தில் நன்றாக உழைத்து சேமித்து வைத்திருந்தான். வயது சென்றதும் அவரால் உழைக்க முடியவில்லை. இருந்தும் வீட்டில் மகனுக்குப் பாரமாக இராது. தான் முன்பு வேலை செய்த கடைகளில் தன்னால் இயன்ற வேலைகளைச் செய்துகொடுத்து குறைந்தளவு சம்பளம் பெற்றுவந்தார். முன்பு அவர்தான் பட்டணத்தில் உள்ள கடைகள் யாவற்றிற்கும் கணக்கு எழுதுவது. தற்பொழுது

வயது போனதால் கண்பார்வை குறைவடைந்து விட்டது. அத்துடன் எழுதமுடியாதவாறு கைநடுக்கம் அவருக்கு ஏற்பட்டது. அதனால் கடைகளுக்குச் சென்று தன்னால் இயன்ற வேலைகளைச் செய்து கொடுப்பார். சோமசுந்தரம் மிகவும் நல்ல மனிதன். வேலை செய்யும்போது மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்யாவிட்டாலும் கடைக்காரர் கூலியாக ஒரு தொகைப் பணத்தை தினமும் கொடுத்து வந்தனர்.

நகுலேஸ்வரன், சோமசுந்தரத்தின் மீது அதீத அன்பு செலுத்துபவன். அவனது தந்தையார் நகுலேஸ்வரன் சிறுவயதாக இருக்கும் போதே இறந்து போனார். பெரியதொரு வியாபாரத் தலத்தை வைத்துக்கொண்டு அதை நடத்தத் தெரியாது நகுலேஸ்வரனும், அவனது தாயாரும் தடுமாறிய வேளை அவர்களுக்கு உதவியாக இருந்தவர் சோமசுந்தரம். கடையில் கணக்கு எழுதுவதோடு சிலகாலம் அக்கடையின் பொறுப்பையும் ஏற்று ஒழுங்காக நடாத்தினார். அதனால் தான் நகுலேஸ்வரனின் தந்தையார் பட்ட கடன்களை அடைக்க முடிந்தது. அத்துடன் சிறுவனான நகுலேஸ்வரனுக்கு வியாபார நுணக்கங்களையெல்லாம் சொல்லிக் கொடுத்தார். அதனால் அவன் கணக்குப் பாராது சோமசுந்தரம் கடைக்கு வரும்போது பணமும் பொருட்களும் கொடுப்பான்.

தனபாலன் பிறக்கும் போதே திடகாத்திரமில்லாமல் பிறந்தமையால் நோயாளியாகவே வாழ்ந்து வந்தான். தாயின் வற்புறுத்தலுக்காக மாமனின் மகளைத் திருமணம் செய்து இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையானான். தகப்பனின் முதிச நிலத்தில் தனபாலன் விவசாயம் செய்து வந்தான். அவனால் வேலை செய்ய முடியவில்லை. அதனால் சோமசுந்தரம் கூலிக்கு ஆள் வைத்தே விவசாயம் செய்வித்து வந்தார். சோமசுந்தரம் வேலை செய்யும் போது நல்ல வருமானம் கிடைத்ததால் குடும்பம் கஷ்டமின்றி காலங் கழித்தது. சோமசுந்தரம் இயலாமல் வீட்டோடு தங்கியதும் குடும்பத்தில் கஸ்ரம் ஏற்படத் தொடங்கியது.

தனது குடும்பத்தையே பராமரிக்க முடியாத மகனுக்கு பாரமாக இருக்க சோமசுந்தரம் விரும்பவில்லை. அதனால் அடிக்கடி தன்னை முதியோர் இல்லத்தில் கொண்டு சென்று விடும்படி கூறுவார். வசதியாக வாழ்ந்த மகனும், மருமகளும், பேரப்பிள்ளைகளும் கஸ்டப்படுவதைப் பார்க்க அவரால் சகிக்க முடியவில்லை.

“தம்பி... உனக்குப் பாரமாக இருக்க நான் விரும்பவில்லை. அத்துடன் நான் இறந்தால் ஏராளமான பணம் உனக்குத் தேவைப்படும். அதற்கு நீ எங்கே செல்வாய். ஆதலால் என்னைக் கொண்டு சென்று முதியோர் விடுதியில் விடு. நான் இறந்தால் என்னை அங்கேயே அடக்கம் செய்யட்டும்.”

தனபாலன் அழுவான். “அப்பா கவலையோடு இருக்கும் என்னை ஏன் சித்திரவதைப் படுத்துகிறீர்கள். கடைசிவரையும் உங்களை முதியோர் இல்லத்தில் நான் சேர்க்க மாட்டேன். அதோடு ஒரு தந்தைக்குச் செய்யும் கடமைகள் யாவற்றையும் நான் செய்யாவிட்டால் எனக்குப் பாவம் கிடைக்கும். தயவு செய்து பேசாமல் இருங்கள். என்னால் முடிந்தளவில் உங்களைக் காப்பாற்றுவேன்” என்றான்.

இரண்டு, மூன்று தினங்களுக்கு சோமசுந்தரம் பேசாமல் இருப்பார். அதன் பின்பு பழையபடி தனது புராணத்தை ஆரம்பித்து விடுவார். அவரால் தனது மகனும், குடும்பத்தினரும் படும் கஸ்டத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

தனபாலனின் மூத்தமகன் பரதன். படிப்பில் கெட்டிக்காரன். அவன் உயர்தர வகுப்பில் சித்தியடைந்ததும் தனியார் வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு வேலைக்கு மனு அனுப்பினான். நேர்முகப் பரீட்சையில் அவனது சான்றிதழ்களைப் பார்த்த வர்த்தக நிறுவனத்தினர் அவனுக்கு அவ்வேலையைக் கொடுக்கச் சம்மதித்தனர். நல்ல சம்பளம். ஆனால் பிணைப்பணமாக பத்தாயிரம் ரூபா கட்டச் சொன்னார்கள். தனபாலனிடம் அவ்வளவு பணம் இருக்கவில்லை. அதனால் அவன் மகனை வேறு வேலை தேடும்படி கூறினான்.

பரதனுக்கு அந்த வேலை மிகவும் பிடித்திருந்தது. அவ்வேலையில் சேர்ந்தால் பிற்காலத்தில் முன்னேறலாமென நினைத்து பாட்டனாரான சோமசுந்தரத்தை அணுகினான். முன்பென்றால் பத்து இலட்ச ரூபாவைக் கூட பத்து நிமிடத்தில் புரட்டும் சோமசுந்தரம் வகையறியாது கலங்கினார். மகனை அழைத்து யாரிடமாவது கடனாகக் கேட்கும்படி கூறினார்.

எவரும் தனபாலனுக்குப் பணம்கொடுக்க முன்வரவில்லை. அதனால் தனபாலன் மிகவும் மனம் வருந்தினான். சோமசுந்தரத்தால் துயரத்தைத் தாங்க முடியவில்லை.

அன்று மாலை சோமசுந்தரத்தின் வீட்டுவாசலில் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து நகுலேஸ்வரன் இறங்கி வந்தான். அவன் நேராக சோமசுந்தரம் படுத்திருக்கும் இடத்திற்கு வந்து அவரது கையைப் பிடித்தான். “ஐயா, என்னை மறந்திட்டியளே. நான் கேவலம் ஒரு பத்தாயிரம் ரூபா தரமாட்டனெண்டு நினைச்சிட்டியளே. எத்தனையோ பேரிட்டை உங்கடை மகன் கடன்கேட்டவன். என்னை மறந்திட்டியளே. யாரோ சொல்லித்தான் எனக்குத் தெரியும். இந்தாருங்கோ இதிலை பதினையாயிரம் ரூபா இருக்கு. பத்தாயிரத்தைப் பிணைப் பணமாய்க் கட்டுங்கோ. மிகுதியைப் பரதன்ரை கைச்செலவுக்கு வைத்திருக்கச் சொல்லுங்கோ...”

சோமசுந்தரம் நீர் நிரம்பிய கண்களடன் நகுலேஸ்வரனின் கையைப் பிடித்தார். “இந்த உதவியை நான் மறக்க மாட்டன். என்ரை குடும்பம் தழைத்திட்டுது....”

பரதனின் பூசை அறையுள் கடவுள்களின் படங்களுடன் நகுலேஸ்வரனின் படமும் இருக்கிறது.

102. காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்

ஞாலத்தின் மானப் பெரிது.

உதவி தேவைப்படுமிடத்து ஒருவன் செய்த உதவி சிறிதாக இருந்தாலும், அதன் பயனை ஆராய்ந்தால் அது உலகத்தை விட மிகப் பெரியதாகும்.

கடலிலும் பெரிது

சின்னத்தம்பி தான் உழைக்கும் பணத்தைவிட அதிகமாகக் குடிப்பவன். அவனது மனைவி சிவகாமி தோட்டங்களில் கூலி வேலைசெய்து தனது இரண்டு பிள்ளைகளையும் காப்பாற்றி வந்தாள். ஒருநாள் முழுவதும் தோட்டத்தில் வேலை செய்தால் இருபத்தைந்து ரூபா சம்பளம் கொடுப்பாகள். தோட்டத்தில் புல்புடுங்கல், வெங்காயம், குரக்கன், பீற்றூட், கரட் போன்றவற்றை நடுதல், மிளகாய்ப்பழம் பறித்தல் போன்ற கடுமையான வேலைகளைச் செய்தல் வேண்டும். காலை பத்து மணிக்கு ஒரு தேநீர் கொடுப்பார்கள். பகல் ஒரு மணிக்கு அரை இறாத்தல் பாணும், இரண்டு வாழைப்பழங்களும் கொடுப்பார்கள் அல்லது பாணோடு தேங்காய்ச் சம்பல் கொஞ்சம் கொடுப்பார்கள். அது போதாவிட்டால் தோட்டத்தில் விழைந்த வெண்காயம் அல்லது பச்சைமிளகாயைப் பறித்து உண்ண வேண்டியதுதான். மாலை மூன்று மணிக்கு ஒரு தேநீர் கொடுப்பார்கள். மாலை ஐந்து மணி வரையும் வேலை செய்தல் வேண்டும். அப்படி வேலை செய்து சம்பாதிக்கும் பணத்தையும் சின்னத்தம்பி களவாடிச்சென்று குடித்துவிடுவான். அதனால் பெரும்பான்மையான நாட்கள் அவளும் பிள்ளைகளும், பட்டினி கிடக்கவேண்டிய பரிதாப நிலை ஏற்படும்.

சின்னத்தம்பியின் பிள்ளைகள் இருவரும் மிகவும் கெட்டிக்காரர்கள். மூத்தவன் ரவீந்திரன் க.பொ.த உயர்தர வகுப்பில்

விஞ்ஞானப் பிரிவில் இரண்டாம் வருட மாணவன். கடந்த வருடம் பரீட்சையை எழுதிவிட்டு பெறுபேறுக்காகக் காத்திருக்கிறான். மகள் மாதவி க.பொ.த உயர்தர வகுப்பில் விஞ்ஞானப் பிரிவில் முதல் வருட மாணவி. சின்னத்தம்பிக்கு சிவகாமி எவ்வளவோ புத்திமதிகள் கூறியும் அவன் கேட்பதாக இல்லை. அதனால் தான் உழைக்கும் பணத்தை அவன் வீட்டுக்குக் கொண்டு வராமல் தான் அதிகமான நாட்கள் வேலைசெய்யும் சந்திரசேகரம் பிள்ளையிடம் கொடுத்து வைத்துவிட்டு தேவைக்கு வாங்குவார். அவரும் சம்பளம் என்று கொடுக்காது தேவைக்கேற்றபடி கொடுப்பார்.

க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு வந்தது. ரவீந்திரன் மருத்துவத்துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தான். ஆனால் அவனைக் கற்பிக்கக் கூடிய வசதி சின்னத்தம்பியிடம் இருக்கவில்லை. சின்னத்தம்பியோடு சேர்ந்து குடிப்பவன் கணேசராசா. அவன் சின்னத்தம்பிக்குச் சொன்னான் ‘‘உன்னைப் போல ஒரு மடையன் உலகத்திலை யாரும் இருக்கமாட்டான். அருமையான மனைவி. தவம் செய்து பெற்ற பிள்ளைகள். என்ரை மனைவி எனது குடும்பத்தையோ அல்லது ஏனையோரையோ மதிப்பதில்லை. பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாது குடித்துவிட்டு சண்டைசச்சரவுகளில் ஈடுபட்டு பொலிஸ் நிலையத்தில் தான் காலங் கழிக்குதுகள். அந்தக் கவலையிலை நான் குடிக்கிறன். நீ ஏன் குடிக்கிறாய். என்னுடைய பிள்ளை மருத்துவத்துறைக்கு எடுபட்டிருக்கென்றால் நான் இரவு பகலாய் கஸ்ரப்பட்டுப் படிப்பிப்பன். உன்னை மாதிரிக் குடிச்சழிய மாட்டன். நீ இனியெண்டாலும் திருந்து. நீ இனியும் திருந்தாவிட்டால் மனிசனே இல்லை....’’

கணேசராசாவின் சொற்கள் சின்னத்தம்பியை சவுக்கால் அடிப்பதைப் போல் தாக்கின. யோசித்துப் பார்த்தான். அவன் சொல்வது சரியெனப்பட்டது. எவ்வளவு காசை குடித்து அழித்துவிட்டேன் என்பதை நினைக்க அவனுக்குக் கவலையாக இருந்தது. அதனால் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று கற்பூரம் கொழுத்தி இனிமேல் தான் குடிப்பதில்லை என்று சத்தியம் செய்தான்.

வீட்டுக்கு சின்னத்தம்பி வந்தபோது சிவகாமியும் ரவீந்திரனும் கதைத்துக்கொண்டிருந்தனர்.

‘‘நான் படிக்கிறதெண்டால் ஏராளமான பணம் வேண்டும். குறைந்தது பத்தாயிரம் ரூபா இருந்தால் தான் மருத்துவக் கல்லூரிக்குப் போகலாம். அதைவிட மாதம் மாதம் மூவாயிரம் ரூபாவாவது வேண்டும். எனவே நான் நல்லதொரு தொழிலாகப் பார்ப்போம் என்றிருக்கிறன்.....’’

சிவகாமி விம்மி விம்மி அழுதாள். ‘‘எவ்வளவு கஸ்ரப்பட்டுப் படிப்பிச்சனான். படிப்பை முடிக்காமல் இடையில் விர்றதை நினைக்க கவலையாக உள்ளது....’’

‘‘கவலைப்படாதை சிவகாமி. நான் திருந்தீட்டன். இனிமேல் குடிக்க மாட்டன். ரவி படிக்கட்டும். இப்ப தேவையான பணத்தை சந்திரசேகரம்பிள்ளையிட்டை கடனாகக் கேள். நான் உழைச்சுக் கட்டுறன்’’ என்றான் சின்னத்தம்பி. சிவகாமியும், ரவீந்திரனும் சின்னத்தம்பியின் பேச்சைக் கேட்டு அதிர்ந்து போனார்கள்.

சிவகாமி சந்திரசேகரம்பிள்ளையிடம் கடன் கேட்டுப் போனாள். ‘‘சிவகாமி பத்தாயிரம் ரூபா கொஞ்சக் காசில்லை, ஏதாவது பொறுப்புத் தரல் வேண்டும்.’’

‘‘என்னட்டை பொறுப்புத் தர என்ன ஐயா இருக்கு....’’ அழுதாள்.

‘‘உனது வீட்டுக்காணி உறுதியைப் பொறுப்புத் தா. சின்னத்தம்பியும் கையெழுத்து வைக்க வேண்டும்.’’

அன்று மாலை சின்னத்தம்பியும் சிவகாமியும் வந்து உறதியை சந்திரசேகரம்பிள்ளையின் பெயருக்கு எழுதிக் கொடுத்துவிட்டு பணம் பெற்றுச் சென்றனர்.

‘‘உங்களின் மகனுக்கு படிப்புக்கு பணம் தேவைப்படும் போதெல்லாம் வா பணம் தாறன்’’ என்றார் சந்திரசேகரம்பிள்ளை.

வழியில் வரும்போது சின்னத்தம்பி சொன்னான் ‘‘ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான காணி உறுதியை வாங்கிக்கொண்டு பத்தாயிரம் ரூபா தந்திருக்கிறான். கொஞ்சம் கொஞ்சமாய் காசைத் தந்திட்டு காணியை எடுக்கலாமென்ற எண்ணம்...’’

சிவகாமி எதுகும் பேசவில்லை. மறுநாள் அவள் சந்திரசேகரம்பிள்ளையின் வீட்டுக்குச் சென்றபோது அவர் காணி உறுதியை சிவகாமியிடம் கொடுத்துவிட்டுச் சொன்னார், ‘‘நான் உறுதி கேட்டது சின்னத்தம்பியைத் திருத்துவதற்காகத்தான். நீ கடன் வாங்கும் காசையும் பறித்துக் குடிக்கக் கூடிய ஆள் அவன். எனவே அவனுக்கு எதுகும் சொல்லாதை. உன்னுடைய மகனின் படிப்புக்குத் தேவையான பணத்தை நான் தருகிறேன். எனக்கு நீ நான் தரும் பணத்தை திருப்பித் தரத் தேவையில்லை. வீட்டு வேலை செய்து கழிக்கவும் தேவையில்லை...’’ என்றார்.

சிவகாமி திகைத்துப் போனாள். அவளால் எதுகும் பேச முடியவில்லை.

ஐந்து வருடங்கள் கழிந்தன. ரவீந்திரன் மருத்துவப் படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறினான்.

சிவகாமி சந்திரசேகரம்பிள்ளையின் வீட்டுக்கு வந்தாள். "ஐயா நான் உங்களிடம் எவ்வளவோ கடன்பட்டுட்டன். அதற்குப் பிராயச்சித்தமாக எனது மகனை உங்களது மகளுக்குத் திருமணம் செய்தல் வேண்டும்..."

சந்திரசேகரம்பிள்ளை பலமாகச் சிரித்தார். பின்பு "எனக்கிருப்பது ஒரேயொரு மகள். அவளுக்கு திருமணம் நிச்சயமாகிவிட்டது. பரவாயில்லை. உன்னுடைய நன்றியை நான் பாராட்டுகிறேன்" என்றார்.

103. பயன்தூக்கார் செய்த நன்றி நயன்தூக்கின்

நன்மை கடலிற் பெரிது.

ஒருவன் பயன் கிடைக்கும் என்று நினைக்காமல் செய்த உதவியின் அளவு கடலை விடப் பெரியது.

பயன் தெரிவார்

கணபதீஸ்வரன் ஓய்வுபெற்ற ஆசிரியர். கடமையில் கண்ணானவர். கற்பிக்கும் காலத்தில் தனது வேலையை ஒழுங்காகச் செய்தவர். ஓய்வு பெற்ற பின்பு தனது அயலிலுள்ள பிள்ளைகள் பலருக்கு இலவசமாகக் கற்பித்து வந்தார். அவரது வீட்டுக்கு அயலில் சிறியதொரு மண்டபம் உண்டு. அதை ஓலையால் வேய்ந்துள்ளார். மண்ணால் அரைச்சுவர் கட்டி சாணகத்தால் மெழுகியுள்ளார். உள்ளே பிள்ளையாரின் படம் ஒன்று இருக்கிறது. அதற்கு தினமும் காலையில் பூப்பறித்து மாலைகட்டிப் போடுவார். சாம்பிராணிக் குச்சியின் நறுமணம் மாலை வரை வீசிக்கொண்டிருக்கும். அந்த ஓலைக் கொட்டிலில் ஒரு சாய்வு நாற்காலி போட்டு அதில் ஓய்வான நேரங்களில் படுத்திருப்பார். அவரைக் காண வருவோர் அங்குதான் சென்று சந்தித்தல் வேண்டும்.

காலை வேளையிலும் மாலை வேளையிலும் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் வந்து அவரிடம் கணிதமும், ஆங்கிலமும் கற்பார்கள். பகல் வேளையில் பாடசாலையை விட்டவர்களும் பரீட்சையில் சித்தியடையாதவர்களும் வந்து கணிதமும், ஆங்கிலமும் கற்பார்கள். அவருக்கு ஐந்து பிள்ளைகள். ஐந்து பேரும் நன்று கற்று

நல்ல நல்ல தொழில் பார்க்கிறார்கள். ஓய்வூதியமாகவும் பெருந்தொகைப் பணம் அவருக்கு வருகிறது. அதனால் உதவிகள் தேவைப்படுவோருக்கு தன்னாலான உதவிகளைச் செய்வார்.

அன்று கிராமத்தில் இருந்து பத்து மைல்களுக்கப்பால் இருக்கின்ற பட்டணத்திற்கு சில பொருட்களைக் கொள்வனவு செய்யவென்று சென்றார். பேரூந்து வண்டியால் இறங்கிய அவருக்கு மிகவும் களைப்பாக இருந்தது. சன நெரிசலும், வாகனங்களின் புகை மணமும் அவருக்கு ஒத்துவரவில்லை. லேசாகத் தலை சுற்றியது. மெதுவாக நடந்து அருகில் இருந்த சைவச் சாப்பாட்டுக் கடையொன்றுக்குச் சென்றார்.

''முந்தினமாதிரி வயதுபோன நேரத்திலை உங்களாலை பிரயாணம் செய்ய முடியாது. வாங்கிற பொருட்களை ஊரில் உள்ள கடையிலை வாங்குங்கோ, இல்லாவிட்டால் பிள்ளை ஒன்றிடம் கொடுத்து வாங்குங்கோ...'' என்று அவரது மனைவி பாக்கியம் சொன்னது நினைவுக்கு வந்தது. மனைவியின் புத்திக்கூர்மையை மனதுள் பாராட்டினார்.

சைவக்கடையில் உணவு வகைகளைப் பரிமாறும் சிப்பந்தி தட்டொன்றில் வடையைக் கொண்டுவந்து வைத்துவிட்டு ''தேநீர் போடவா'' என்று கேட்டான்.

''சீனி குறைத்துத் தா தம்பி'' என்றார் கணபதீஸ்வரன்.

வடை ஒன்றை எடுத்துச் சாப்பிட்டார். மிகவும் சுவையாக இருந்தது. மேலும் ஒரு வடையை எடுத்து சாப்பிட்டுவிட்டு தேநீரைக் குடித்தார். சற்று உற்சாகம் பிறந்தது.

''வாத்தியார் என்ன இந்தப் பக்கம்...''

சத்தம் வந்த திசையை நோக்கித் திரும்பினார். எதிரே சிவபாலன் நின்றான். அவர் பார்த்ததும் தோளில் இருந்த சால்வையை எடுத்தான். சிவபாலன் சரியான குடிகாரன். ஊரில் குடித்துவிட்டு சனங்களுடன் வலியச் சண்டைக்குப் போவான். சிறுசிறு களவுகள் எடுப்பான். அவனது பிள்ளைகள் அவரிடம் காலையில் நடைபெறும் ஆங்கில வகுப்பிற்கு வருவார்கள்.

''கொஞ்சச் சாமான் வாங்க வந்தனான். தேத்தண்ணி குடியன்.''

''வேண்டாம் வாத்தியார். நான் இப்பத்தான் குடித்தனான்...'' என்றான். அவனில் இருந்து வீசிய சாராய வாடை கணபதீஸ்வரனுக்கு வயிற்றைக் குமட்டியது.

காசாளர் இருக்கும் இடத்திற்கு வந்த கணபதீஸ்வரன் ‘‘எவ்வளவு?’’ என்று கேட்டபடி மடிக்குள் கையை விட்டார். அதற்குள் இருந்த பணத்தைக் காணவில்லை.

‘‘பதினெட்டு ரூபா’’ என்றான் காசாளர்.

கணபதீஸ்வரன் திகைத்துப் போவார். வாழ்நாளில் முதன்முறையாக செய்வதறியாது திகிலடைந்து நின்றார். ‘‘தம்பீ... மடிக்குள் வைத்த பணத்தைக் காணவில்லை....’’ அவர் முடிக்கு முன்பு காசாளர் சொன்னான். ‘‘இப்பிடிப் பலபேர் சொல்லுறவை. சாப்பிட வரமுன்னம் வைத்த காசு இருக்கோ என்று பார்த்திட்டுத்தான் கடைக்கு வரவேணும்.’’

கூனிக்குறுகிப் போனார் கணபதீஸ்வரன். அவர் வீட்டுக்குச் செல்லக்கூடக் காசில்லை.

‘‘எல்லாரும் அப்பிடி இருக்கலாம். எங்கடை வாத்தியார் அப்பிடியில்லை. அவர் அரிச்சந்திரனடா.. சேரியிலை பிறந்த உனக்கு நல்ல மனிசனைப் பற்றி என்ன தெரியும்?’’ சண்டைக்குப் போனான் சிவபாலன்.

கணபதீஸ்வரன் அவனைத் தடுத்தார். சிவநாதன் மடிக்குள் செருகி வைத்திருந்த பணத்தை எடுத்து அதிலிருந்து ஐம்பது ரூபாவை எடுத்து கணபதீஸ்வரனுக்குக் கொடுத்துவிட்டுச் சொன்னான். ‘‘உங்களுக்கு ஏதாவது கொடுக்க எத்தனை பேர் காத்திருந்தும் நீங்கள் வாங்குவதில்லை. எனக்குத்தான் அந்த அதிஸ்டம் வாய்த்திருக்கு.’’ அவரின் காலைத்தொட்டு வணங்கினான் சிவபாலன்.

‘‘நான் இந்த உதவியை மறக்கமாட்டன்’’ கண்களால் நீர் சொரியச் சொன்னார் கணபதீஸ்வரன்.

மறுநாள் சிவபாலனின் வீட்டுக்கு பணத்துடன் சென்றார் கணபதீஸ்வரன். அவன் பணத்தை வாங்க மறுத்துவிட்டான். மனநெகிழ்வுடன் வீட்டுக்கு வந்த கணபதீஸ்வரன் ஐந்நூறு ரூபா பெறுமதியான புத்தகங்களை வாங்கி சிவபாலனின் பிள்ளைகளுக்குக் கொடுத்தார்.

வாரம் ஒன்று கழிந்தது. சிவபாலன் களவு எடுத்ததற்காக பொலிசில் பிடிபட்டான். பலமுறை பல களவுகளுக்காக தேடிய பொலிசாரிடம் அன்று அவன் வகையாக மாட்டிக்கொண்டான். சரீரப் பிணையில் அவனைவிட பொலிசார் மறுத்தனர். நீதிமன்றில் பத்தாயிரம் ரூபா பிணைப்பணமாகக் கட்டினால் தான் அவனை பிணையில் விடுவதாக நீதிபதி அறிவித்தார். ஊரில் உள்ள எவரும் அவனைச்

சரீரப்பிணையில் எடுக்கத் முன்வரவில்லை. பத்தாயிரம் ரூபா பணங்கட்டி யார் அவனைப் பிணையில் எடுக்கப் போகிறார்கள் என்று ஊரில் கதைத்தனர்.

கணபதீஸ்வரனை மனைவியும் பிள்ளைகளும் தடுத்த போதும் அவர் கேட்காது நீதிமன்றத்திற்குச் சென்று பத்தாயிரம் ரூபா பணம் கட்டி அவனைப் பிணையில் எடுத்தார்.

சிவபாலன் அவரின் காலில் விழுந்து கும்பிட்டான். ‘‘ஐயா நான் இனிமேல் குடிக்கமாட்டன். குடிப்பதற்காகத்தான் நான் திருடுவது. பெரிய மனிசனான நீங்கள் எனக்காக நீதிமன்றத்துக்கு வந்துள்ளீர்கள். உங்களுக்கு நீதிமன்ற வாசலே தெரியாது....’’ பேசமுடியாமல் தத்தளித்தான் சிவபாலன்.

‘‘அழாதை சிவபாலா... நீ திருந்தினால் அதுவே போதும். எழும்பு’’ என்றார்.

கண்களால் நீர் ஒழுக சிவபாலன் எழுந்தான். அதன்பின் அவன் குடிப்பதில்லை. களவும் எடுப்பதில்லை. அதனால் கணபதீஸ்வரனின் மனைவியும், பின்ளைகளும் அவரைப் பாராட்டினர்.

104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்

கொள்வர் பயன்தெரி வார்.

ஒருவன் திணையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயனை அறிந்தவர் அதனைப் பனையளவாகக் கொள்வர்.

பண்பளவு

சுவாமிநாதன் நல்லூரில் வாழும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனது தந்தையாருக்கு அவன் தான் ஒரே பிள்ளை. ஆனால் அவனுக்கு ஏழுபிள்ளைகள். மூத்தவன் சுவேந்திரன். அடுத்தவன் கஜமுகன். அதற்குப் பின் பிறந்த ஐவரும் பெண்கள். தகப்பனார் முதிசமாகக் கொடுத்த வயல் நிலத்தில் நெல் விதைத்தும், தோட்ட நிலத்தில் காய்கறிப் பயிர்களைப் பயிரிட்டும் மிகவும் கஸ்டத்துடன் வாழ்ந்து வந்தான் சுவாமிநாதன். கஜேந்திரன் படிப்பில் கெட்டிக்காரன். அவன் படித்து முடித்தால் தனது பஞ்சம் தீருமென்று எதிர்பார்த்தான் சுவாமிநாதன். கஜேந்திரன் படித்து முடித்து இரண்டு

வருடங்கள் சென்றும் அவனுக்கு வேலையொன்றும் கிடைக்காததால் அவனும் தகப்பனுடன் தோட்டவேலை செய்து வந்தான்.

சுவாமிநாதனின் ஐந்து பெண்பிள்ளைகளுள் மூவர் வயது வந்தவர்கள். மூத்த மகள் ஆனந்திக்கு இருபத்திமூன்று வயது. அவளுக்கு திருமணம் பேசிச் செய்ய வேண்டுமென்று அவனது மனைவி பாக்கியலட்சுமி அவனக்கு தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தான்.

அக்கிராமத்தில் உள்ள வசதி படைத்த இளைஞர்கள் இலட்சக் கணக்கில் செலவு செய்து வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருந்தனர். சுவாமிநாதனுக்கு கஜேந்திரனை வெளிநாட்டுக்கு அனுப்ப விருப்பம், ஆனால் அவனிடம் பணம் இருக்கவில்லை. அதனால் தனது இனத்தவர்களிடம் சென்று விஷயத்தைச் சொல்லி கடனாகப் பணம் கேட்டான். ஆனால் யாரும் அவனுக்கு பணம் கொடுக்கவில்லை.

சுவாமிநாதனுடன் ஒன்றாகப் படித்தவன் பாலசுந்தரம். சிறுவயது முதல் இருவரும் ஒன்றாகப் படித்ததாலும் பழகியதாலும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட நண்பர்கள். விதைப்புக் காலங்களில் சுவாமிநாதனுக்கு பணத்தட்டுப்பாடு வரும். அப்போது பாலசுந்தரம் தான் பணம் கொடுப்பான். பின் அறுவடை முடிந்த பின் நெல்லை விற்றுவிட்டு பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் போது வட்டி வாங்கமாட்டான். அதனால் அவனிடம் சென்று பணம் கேட்டான் சுவாமிநாதன்.

“சுவாமி என்னிடம் ஒரு இலட்ச ரூபா பணம் இருக்கிறது. பொறுப்பு ஏதும் வேண்டாம். என்னிடமும் இரண்டு குமர்ப்பிள்ளைகள் இருக்கிறார்கள்.” என்று கூறிவிட்டு பணத்தைக் கொடுத்தான் பாலசுந்தரம்.

மறுவாரம் கஜேந்திரன் ஐரோப்பிய நாடு ஒன்றிற்குச் சென்றுவிட்டான். இரண்டு வருடங்கள் கழிந்தன. கஜேந்திரன் நன்றாக உழைத்தான். தான் உழைத்த பணத்தில் தனது தம்பியான கஜமுகனையும் தன்னுடன் அழைத்துக் கொண்டான்.

வருடங்கள் இரண்டு கழித்தன. பாலசுந்தரத்தின் மகளுக்குத் திருமணம் பேசிப் பலர் வந்தனர். பாலசுந்தரத்திடம் பணம் இல்லாததால் பேசிவந்த திருமணங்கள் பல குழம்பின. சுவாமிநாதன் கொடுக்க வேண்டிய பணத்தைக் கேட்கும்படி பாலசுந்தரத்தின் மனைவி அடிக்கடி பாலசுந்தரத்தை நச்சரித்து வந்தாள். எனினும் பாலசுந்தரம் சுவாமிநாதனைக் காணும் வேளைகளில் பணத்தைப் பற்றிக் கதைப்பதில்லை.

அன்று சுவாமிநாதனும் பாக்கியலட்சுமியும் பாலசுந்தரத்தின் வீட்டுக்குப் பல பரிசுப் பொருட்களுடன் வந்திறங்கினர். பாலசுந்தரம் அவர்களை இன்முகத்துடன் வரவேற்றான்.

“பாலா இரண்டு வருடங்களுக்கு முன்பு நான் பரம ஏழை. என்னை யாரும் மதிப்பதில்லை. மகனை வெளிநாட்டுக்கு அனுப்ப எத்தனையோ பேரிடம சென்று காசு கேட்டேன். ஒருத்தரும் தரவில்லை. நீதான் என்னை நம்பித் தந்தாய். அதை நான் என் வாழ்நாளில் மறக்கமாட்டன். இதிலை அஞ்சு லட்சம் ரூபா இருக்கு. பெற்றுக்கொள்.”

பாலசுந்தரம் திகைத்துப் போனான். “ஐந்து இலட்சமா ஐயையோ. எனக்கு வேண்டாம். நான் தந்த ஒரு இலட்சத்தையும் நீ தந்தால் போதும்...”

“போடா மடையா. இரண்டு வருடங்களுக்கு முன்னம் என்ரை பெறுமதி என்ன...? என்னை மதிச்சவை யார்...? இண்டைக்கு பத்து, பதினைந்து இலட்சம் மகன் உழைச்சிட்டான். கஜமுகனும் போட்டான். இன்னும் இரண்டு மூன்று மாதத்துக்குள்ளை என்ரை மூத்த மகளும் போகப்போறாள். இதுக்கெல்லாம் காரணகர்த்தா நீதான். நான் தாற முழுக்காசையும் வாங்காட்டில் இனிமேல் உன்ரை முற்றம் மிதிக்கமாட்டன்...” மிகுந்த கோபத்துடன் சொன்னான் சுவாமிநாதன்.

பாலசுந்தரம் எதுகும் பேசவில்லை. அவரால் பேச முடியவில்லை.

“கஜேந்திரன் உனது மூத்த மகளைத் திருமணம் செய்ய விரும்புகிறான். நீ எனக்கு ஒரு சதம் கூட சீதனம் தரத் தேவையில்லை. வாறமாதம் நாலாந் திகதி ஒரு நல்ல நாள் இருக்கு. அன்றைக்கு திருமண நிட்சயாத்தம் செய்வம். இரண்டு மூன்று மாதத்திலை அவளை அனுப்பிவிடலாம்.” பாலசுந்தரத்துக்கு தன் செவிகளை நம்ப முடியவில்லை.

தான் காண்பது கனவா என்று நினைத்தார். அன்று மாலை வரை சுவாமிநாதனும் பாக்கியலட்சுமியும் பாலசுந்தரத்தின் வீட்டில் இருந்தனர்.

இரண்டு மாதங்கள் கழிந்தன. பாலசுந்தரத்தின் மகள் கஜேந்திரன் வாழும் நாட்டுக்குச் சென்றாள். அங்கு அவர்கள் இருவருக்கும் மிகவும் கோலாகலமாகத் திருமணம் நடைபெற்றது.

அந்தக் கிராமத்தில் மருத்துவனாகத் தொழில் புரிந்தான் ஆதவன். அவனுக்கு பாலசுந்தரத்தின் இரண்டாவது மகள் அபிராமியைத் திருமணம் செய்ய விருப்பம். அவனுக்கு மூன்று தங்கைகள் இருந்தமையால் அவனது தாய் பத்து இலட்சம் ரூபா

சீதனமாகக் கேட்டாள். பாலசுந்தரத்திடம் அவ்வளவு பணம் இல்லாததால் அவர் மறுத்துவிட்டார். இதை அறிந்த சுவாமிநாதன் ஆதவனின் வீட்டுக்குச் சென்று அவர்கள் கேட்ட பணத்தைக் கொடுத்து திருமணத்தை வெகு விமர்சையாக நடத்தி வைத்தார்.

சுவாமிநாதனின் செயல்களால் மிகவும் சங்கடப்பட்டார் பாலசுந்தரம். முன்பு பாலசுந்தரம் கொடுத்த ஐந்து இலட்ச ரூபாயைக் கொண்டு சென்று சுவாமிநாதனிடம் கொடுத்தார். ஆனால் சுவாமிநாதன் அதை வாங்க மறுத்துவிட்டார். ‘‘இன்றைக்கு என்னிடமுள்ள பணம் யாவும் நீ போட்ட பிச்சை. இன்னும் எவ்வளவோ தருவன். நீ மறுக்கக் கூடாது.’’ என்றான். பாலசுந்தரத்தால் எதுகும் பேச முடியவில்லை.

105. உதவி வரைத்தன்று உதவி; உதவி

செயப்பட்டார் சால்பின் வரைத்து.

முன்பு செய்யப்பட்ட உதவிக்கு கைம்மாறாகச் செய்யப்படும் உதவி, முன்பு செய்யப்பட்ட உதவியின் அளவை உடையதல்ல. அது உதவி செய்யப்பட்டவரின் பண்புக்கு ஏற்ற அளவை உடையது.

கேண்மை

சுப்பிரமணியத்தின் ஒரே மகன் நகுலன். அவன் க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருந்தான். மாணவர்கள் எல்லோரும் கிராமத்தில் இருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள தனியார் கல்வி நிலையத்திற்கு மாலை வேளைகளிலும், பாடசாலை இல்லாத நாட்களிலும் சென்று கல்வி பயின்று வந்தனர். அவர்களுடன் நகுலனும் சென்று கல்விகற்று வந்தான். அன்று பாடம் முடிந்து வர இரவு எட்டு மணியாகிவிட்டது. நகுலன் விரைவாக வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அப்போது எதிரே வந்த மோட்டார் வண்டியொன்று அவனை மோதிவிட்டு நிற்காமல் விரைவாக ஓடி மறைந்துவிட்டது. வீதியில் பலத்த காயங்களுடன் துடிதுடித்துக் கொண்டிருந்த நகுலனை வெகுநேரம் கழித்தே மக்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர்.

அவனுடன் வகுப்புக்குச் சென்ற மாணவர்கள் வந்து சுப்பிரமணியத்திற்கு நடந்தவற்றைக் கூறினார்கள். சுப்பிரமணியம் பலமாக குழறி அழுதார். அவர் அழுத சத்தம் கேட்ட அயலவர்கள்

சுப்பிரமணியத்தின் வீட்டுக்கு ஓடி வந்தனர். சுப்பிரமணியத்தின் அயல் வீட்டுக்காரன் கதிர்காமநாதன்.

மற்றையோரின் துன்பத்தைக் கண்டு வருத்தமடைவான். உடனே அவர்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்பவன். அந்தக் கிராமத்தில் உள்ள எல்லோரும் உதவிக்கு கதிர்காமநாதனைத்தான் அழைப்பார்கள். கதிர்காமநாதன் செய்தி அறிந்ததும் துடிதுடித்துப் போனான். உடனே மோட்டார் வண்டியை வாடகைக்கு விடும் இரத்தினத்திடம் ஓடோடிச் சென்று, அவனது மோட்டார் வண்டியை கொண்டுவந்தான்.

சுப்பிரமணியமும், மனைவியும், கதிர்காமநாதனும், துரைராசாவும் ஆஸ்பத்திரிக்கு வந்துசேரும் போது இரவு பன்னிரண்டு மணி. துரைராசா அவ்வூரில் வாழும் நல்ல மனிதன். எந்த வீட்டிற்கும் குற்றம் குறை பாராது தேவைப்படும் சமயங்களில் சென்று உதவி புரிபவர். அத்துடன் ஆலோசனைகளும் வழங்குவார். அவ்வூரில் வாழ்வோர் அனைவரும் அவரை மதித்து நடந்தனர்.

நகுலன் சுயநினைவின்றி அவசர சிகிச்சைப் பிரிவில் படுத்திருந்தான். மூக்கினூடாகவும், வாயினூடாகவும் பல குழாய்கள் பொருத்தப்பட்டிருந்தன. அதைப் பார்க்க சுப்பிரமணியத்திற்கு தலையைச் சுற்றியது. மயக்கம் வந்தது. விடியும் வரை அவனுக்கு மயக்கம் தீரவில்லை. வைத்தியர்கள் மிகவும் அவதானமாகவும், அக்கறையுடனும் பணியாற்றிக் கொண்டிருந்தனர்.

இரண்டு தினங்கள் கழித்துத்தான் நகுலன் கண்விழித்தான். அவன் சுப்பிரமணியத்தை இனம் கண்டு "அப்பா" என்று அழைத்தபோது சுப்பிரமணியத்தின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அந்த இரண்டு தினங்களும் கதிர்காமநாதன் ஆஸ்பத்திரியிலேயே இருந்தான். இரண்டு தினங்களும் அவளது மனைவிதான் சுப்பிரமணியத்திற்கும், மனைவிக்கும் உணவு சமைத்துக் கொடுத்தாள். மருத்துவர்கள் நகுலனுக்கு ஐந்து போத்தல் இரத்தம் உடனடியாக ஏற்ற வேண்டுமென்று கூறினார்கள். கதிர்காமநாதன் இரத்தம் பெறுவதற்கு தன்னாலான முயற்சிகளை எடுத்தான். ஆஸ்பத்திரியில் இரத்தம் இருக்கவில்லை. அத்துடன் அவசர தேவைகளுக்கென இரத்த வங்கியில் சேமித்து வைத்திருக்கும் இரத்தத்தை நோயாளிக்கு ஏற்றினால், நோயாளியின் உறவினர் பின்பு ஏற்றிய இரத்தத்தைக் கொடுத்தல் வேண்டும். நகுலனுக்கு அவசரமாக இரத்தம் தேவைப்பட்டதால் இரத்த வங்கியில் இருந்த இரத்தத்தை ஏற்றினார்கள். பின் விரைவாக இரத்தத்தைத் தரும்படி சுப்பிரமணியத்திடம் கூறினார்கள்.

இரத்தம் வெளியே பெறுவதானால் பத்தாயிரம் ரூபா தேவை. சுப்பிரமணியத்திடம் அவ்வளவு பணம் இருக்கவில்லை. கதிர்காமநாதன் பத்தாயிரம் ரூபா கொடுத்து இரத்தத்தைப் பெற்று ஆஸ்பத்திரிக்குக் கொடுத்தான். அத்துடன் மருந்து, போக்குவரத்துச் செலவென இருபத்தையாயிரம் ரூபா முடிந்துவிட்டது. அதில் பெரும் பகுதியையும் கதிர்காமநாதனே கொடுத்தான்.

சுகமாகி வீட்டுக்கு வந்த நகுலன் கதிர்காமநாதனின் வீட்டுக்குச் சென்று நன்றி கூறினான். பின் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்று விவசாயத்துறையில் நிபுணத்தவம் பெற்றான்.

இரத்தினம் வயோதிபனானதால் கார் ஓட்டும் தொழிலை கைவிட்டான். அவனுக்குப் பிள்ளைகள் இல்லை. மனைவியும் இறந்துவிட்டாள். அனாதரவாகத் திரிந்த இரத்தினத்தை அழைத்து வந்து தன்னுடன் கதிர்காமநாதன் வைத்துக்கொண்டான். துரைராசாவையும் அடிக்கடி சென்று சுகம் விசாரிப்பான்.

கதிர்காமநாதனது மகளின் திருமணத்தின் போது நகுலன் இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான தங்கத்திலான அட்டியல் ஒன்றைப் பரிசளித்தான். அத்துடன் ஓய்வான நேரங்களில் அவரது வீட்டுக்குச் சென்று வந்தான். கதிர்காமநாதன் அக்கிராமத்தில் விவசாயம் செய்து வந்தான். தான் கற்ற விவசாயக் கல்வி மூலம் நவீன செய்கைமுறைகளைக் காட்டிக்கொடுத்தான் நகுலன். புதியரக அமோக விளைச்சலைக் கொடுக்கும் விதைகளை அவருக்கும், அக்கிராம மக்களுக்கும் கொடுத்தான். அதனால் வருடாவருடம் கதிர்காமநாதனும் அக்கிராம மக்களும் பெரும் பயனை அடைந்தனர்.

106. மறவற்க மாசற்றார் கேண்மை; துறவற்க

துன்பத்துள் துப்பாயார் நட்பு.

குற்றமற்றவர்களின் உறவை ஒருபோதும் மறக்கக்கூடாது. அதேபோல் துன்பம் வந்த காலத்தில் உதவியவரின் நட்பை ஒருபோதும் விடலாகாது.

எழுபிறப்பும்

இராசலிங்கம் மண்வேலிக் கிராமத்தில் உள்ள நாவலர் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர். அப்பாடசாலையை அவர் சிறந்த

முறையில் இயக்கியமையால் அக்கிராமத்தில் மட்டுமல்லாது மாவட்டத்திலேயே மிகுந்த புகழ் பெற்றார். அந்த மாவட்டத்தில் உள்ள எவரிடமாவது இம்மாவட்டத்தில் சிறந்த பாடசாலை எது என்று கேட்டால் மணல்வேலி நாவலர் பாடசாலையென்று யோசிக்காமல் கூறுவர். அந்தளவில் கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பெரும் பெரும் சாதனைகளை அப்பாடசாலை நிலைநாட்டிக் கொண்டிருந்தது. அக்கிராம மக்கள் மட்டுமன்றி பல மைல்களுக்கப்பால் வாழும் மக்கள் கூட தமது பிள்ளைகளை அப்பாடசாலையில் சேர்க்கப் போட்டி போட்டனர்.

இராசலிங்கம் மிகவும் நல்ல மனிதர். சட்டத்திற்குப் புறம்பான எக்காரியங்களையும் செய்யமாட்டார். அப்பாடசாலையில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களையும் தன் பிள்ளைகளைப் போல எண்ணுவார். இராசலிங்கத்தின் தகப்பனார் வைத்திலிங்கம். அவரும் ஊரில் நல்ல முறையில் வாழ்ந்தவர். ஊர் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். நீதி தவறாதவர். வைத்திலிங்கத்தின் தந்தையார் கந்தர். அவரும் மணல்வேலிக் கிராமத்தில் மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்தவர். வாட்டசாட்டமான உருவம். பெண்களைப் போல் நீண்ட தலைமுடி. அவிழ்த்து விட்டால் இடுப்புவரை நிற்கும். மாட்டுச் சவாரிப் பிரியர். அவரது காளைகள் ஓடுவதென்றால் மக்கள் எல்லோரும் சவாரி நடக்குமிடத்திற்குச் சென்று விடுவார்கள். அத்துடன் அவர் நன்றாகப் பாடுவார். அவரின் வீட்டுக்கு அயலில் உள்ள முத்துமாரி அம்மன் கோயிலில் சித்திரைப் பறுவத் தினத்திற்கு முதல் நான் இரவு காத்தவராஜனின் சரித்திரம் அவராலும் அவரது நண்பர்களாலும் பாடப்படும்.

கந்தரின் தகப்பன் சுப்பர். அவர் ஏராளமான தோட்ட நிலங்களை வாங்கித் தன் பரம்பரை தழைக்கக் காரணமானார். அவரிடம் ஆயிரத்து எண்நூற்று எழுபத்திரண்டாம் ஆண்டு நூறு பவுண் இருந்தது. அவர் அதை சிங்கப்பூரில் வேலை செய்து சம்பாதித்திருந்தார். அவரின் வீட்டுக்கு அருகில் இருந்த கனகசபை என்பவன் தனது தோட்டக்காணி இருநூறு பரப்பை விற்க விரும்பினான். இருநூறு பரப்பையும் வாங்குவதற்கு சுப்பர் விரும்பி நூறு பவுணை முற்பணமாகக் கொடுத்து பத்திரம் எழுதினார். அதில் ஒரு வருட காலத்தில் மிகுதிப் பணமான ஐம்பது பவுணையும் கொடுக்காவிட்டால் முற்பணமாகக் கொடுத்த நூறுபவுணையும் திரும்பப்பெற முடியாதென கனகசபை எழுதினான். சுப்பர் கடன் பணத்தைக் கட்டுவதற்காக இரவு பகலாக ஓய்வின்றி உழைத்தார்.

திடீரென எதிர்பாராத விதமாக சுப்பர் நோய்வாய்ப்பட்டார். பதினொரு மாதங்கள் முடிந்துவிட்டன. சுப்பர் கனகசபையிடம் சென்று இன்னும் இரண்டு மாதங்கள் தவணை தரும்படி கேட்டார். கனகசபை மறுத்துவிட்டான். கனகசபை ஓர் ஏமாற்றுக்காரன். கோயிற்

காணிகளுக்கும், அரச காணிகளுக்கும் கள்ள உறுதி முடிப்பது, கோயில் சொத்தைத் திருடுவது போன்றன அவனது தொழில்.

கனகசபையோடு கதைத்துப் பிரியோசனமில்லையென உணர்ந்த சுப்பர் கவலையோடு இருந்தார். தான் வாங்கும் நாவலர் ஸ்ரீ வித்தியா கணபதி கைவிடமாட்டார் என நினைத்து அவரைத் துதித்து வந்தார். சுப்பரின் தூரத்து உறவினனான மூத்ததம்பி சிங்கப்பூரில் வேலை செய்துவிட்டு அப்போது தான் நாடு திரும்பியிருந்தான். அவன் அதைக் கேள்விப்பட்டு சுப்பரிடம் வந்தான்.

“சுப்பர் அண்ணை என்னிடம் ஐம்பது பவுண் காசு இருக்கு. உனக்கு எவ்வளவு வேண்டும்...”

தான் வணங்கும் நாவலர் ஸ்ரீ வித்தியா கணபதி தான் தனக்குதவ நேரில் வந்துள்ளாரென நினைத்து மகிழ்ந்தார் சுப்பர்.

“இருபது பவுண் தந்தால் போதும், பொறுப்பாக நான் காணி உறுதியைத் தருகிறேன்....” என்றார்.

“சீச் சீச்சீ... காணி உறுதி ஒன்றும் வேண்டாம். உன்ரை பரம்பரையை எனக்குத் தெரியும். உன்னுடைய பேரனாற்றை சோற்றை உண்டுதான் தாங்கள் வளர்த்ததாய் என்ரை அப்பு அடிக்கடி சொல்லுவார். உன்ரை பரம்பரையே ஏமாத்தாதது, இந்தாபிடி” என்று இருபது பவுணைக் கொடுத்தார் மூத்ததம்பி.

“இந்த உதவியை நான் மறக்கமாட்டன் மூத்ததம்பி. என்ரை பரம்பரை முழுவதற்கும் இதைச் சொல்லி உனக்கும் உன்ரை குடும்பத்தினருக்கும் நன்றி உடையவர்களாக இருக்கச் சொல்லுவன்...”

மூத்ததம்பி தனக்கு பணம் கொடுத்த விடயத்தை சுப்பர் தனது மகனுக்குச் சொல்லி அதை அவரின் பிள்ளைகளுக்குச் சொல்லச் சொன்னார். அதன்படி கந்தர் வைத்திலிங்கத்திற்குச் சொல்ல, வைத்திலிங்கம் இராசலிங்கத்திற்குச் சொல்லியிருந்தார். இராசலிங்கம் தனது ஐந்து மக்களுக்கும் அவர்களின் பேரப்பிள்ளைகளுக்கும் அதைச் சொல்லியிருந்தார். சுப்பர் அன்று இருநூறு பவுணுக்கு வாங்கிய அக்காணியின் இன்றைய பெறுமதி இருபது கோடி ரூபா.

இராசலிங்கத்தின் மூத்த சகோதரியின் பேர்த்தி பூரணி. அவளுக்கு பத்தொன்பது வயது. அவள் படிக்கும் போது கஜமுகன் என்ற இளைஞனை விரும்பினாள். கஜமுகன் படிப்பில் அவ்வளவு கெட்டிக்காரன் அல்ல. சிறியதொரு கடை வைத்து வியாபாரம் செய்துகொண்டிருந்தான். பூரணியினுடைய தந்தை பொறியியலாளர். தாய் ஆசிரியை. பெரும் பணக்காரர்.

பூரணியின் காதல் விசயத்தை அறிந்த அவளது தந்தை அவளுக்கு நல்லதொரு இடத்தில் திருமணம் பேசினார். பூரணியின் காதல் விசயத்தை அறிந்த இராசலிங்கம் அவளது காதலன் யாரென விசாரித்துப் பார்த்தார். கஜமுகன் மூத்ததம்பியின் கொப்பாட்டனின் மகன் என அறிந்தார். எனவே அக்குடும்பத்துடன் உறவு வைக்க விரும்பி பூரணியின் தகப்பனுடன் கதைத்தார். அவன் இராசலிங்கத்தின் வேண்டுகோளை அரைமனத்துடன் ஏற்றுக்கொண்டான். ஆண்டுகள் சில கழிந்தன. கஜமுகன் பெரும் வணிகனானான்.

பூரணிக்கும் கஜமுகனுக்கும் திருமணம் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

107. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்

விழுமம் துடைத்தவர் நட்பு.

தான் துன்பமடைந்த வேளையில் அதைப்போக்கி உதவியவரின் நட்பைப், பெரியோர் ஏழேழு பிறவிகளிலும் மறவாமல் போற்றுவர்.

அன்றே மற

சரவணபவனுக்கு ஐந்து பெண்குழந்தைகள் பிறந்தபின் ஆறாவதாகப் பிறந்தவன் பிரசாந்தன். அதனால் அவனை சரவணபவன் மிகவும் செல்லமாக வளர்த்து வந்தான். பிரசாந்தன் படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். கருந்தோட்டக் கிராமத்தில் உள்ள சிறிய பாடசாலையொன்றில் தரம் ஐந்தில் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் பிரசாந்தன் சித்தியடைந்தான். அநேகமாக கிராமங்களில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் பட்டணத்தில் உள்ள பிரபல பாடசாலைகளில் தரம் ஆறில் சேர்வதற்கு விண்ணப்பிப்பார்கள். பிரபல பாடசாலைகளில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களை அனுமதித்த போதும் அவர்களிடம் பணத்தை எதிர்பார்ப்பார்கள். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களின் பெற்றோர் பலர் பிரபலமான பாடசாலையில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்காக தமது செல்வாக்கு முழுவதையும் பிரயோகிப்பார்கள்.

பெரிய பெரிய உத்தியோகத்தர்கள் தமது உத்தியோகத்தின் செல்வாக்கைப் பயன்படுத்துவார்கள். பெரும் பெரும் பணக்காரர்கள் தமது காரியத்தை செயற்படுத்துவர். ஏழை எளிய மாணவர்கள்

சித்தியடைந்தாலும் பணம் இல்லாவிட்டால் கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் தான் கற்க வேண்டும்.

பிரபல பாடசாலைகள் என்று மக்கள் நினைக்கும் பாடசாலைகளில் பெரிதாக கற்றல் செயற்பாடுகள் நடைபெறுவதில்லை. என்றாலும் தங்கள் தங்கள் தரத்தைப் பேணுவதற்காக சமூகத்தில் பணம் படைத்தோர் அப்பாடசாலைகளில் தம்பிள்ளைகளைச் சேர்க்க முயற்சிப்பார்கள்.

சரவணபவன் தவமிருந்து பெற்ற தன்மகனைப் பிரபலமான பாடசாலையொன்றில் சேர்க்க விண்ணப்பம் அனுப்பினான். ஆனால் அப்பாடசாலையில் இடமில்லை என்று கடிதம் வந்தது. அதனால் மிகவும் மனம் வருந்திய சரவணபவன் என்ன கஸ்ரப்பட்டாவது தனது மகனை அப்பாடசாலையில் சேர்க்க வேண்டும் என்று நினைத்தான்.

அவனின் அயல் வீட்டில் இருப்பவன் குருமூர்த்தி. நல்ல வசதியானவன். அவனது மூன்று ஆண் பிள்ளைகள் பட்டணத்தில் உள்ள அப்பிரபலமான பாடசாலையிலேயே கல்விகற்று வந்தனர். அதனால் சரவணபவன் குருமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றான்.

‘‘எனது மகன் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளான். அஞ்சு பெம்பிளைப் பிள்ளைகளுக்கு அவன் ஒருவன் தான் ஆம்பிளைப் பிள்ளை. நன்றாகப் படிக்கக்கூடியவன். படிப்பிக்க வேணும். உங்கள் பிள்ளைகள் படிக்கிற பாடசாலையில் அவனையும் சேர்த்துவிட வேண்டும். நான் விண்ணப்பித்தேன்; இடமில்லை என்று அறிவித்திருக்கிறார்கள்.’’

‘‘அவர்கள் கூடக்காசு வாங்குவதற்கு கையாளும் தந்திரம் தான் உது. செல்வாக்குப் பிரயோகிக்க வேணும். காசைப் பார்த்துப் பாராமல் செலவழிக்க வேணும்...’’ என்றான் குருமூர்த்தி.

‘‘காசைப்பற்றி பரவாயில்லை அண்ணை. என்ரை பிள்ளையைச் சேர்த்துவிட்டால் சரி...’’

‘‘நாளைக்கு வாருங்கோ. நான் கேட்டுச் சொல்லுறன்’’ என்றான் குருமூர்த்தி.

‘‘உங்களை நம்பிப் போறன். என்ரை ஒரேயொரு ஆம்பிளைப் பிள்ளை...’’ மேலே கதைக்க முடியாமல் தடுமாறினான் சரவணபவன். கண்களில் நீர் நிறைந்தது.

மறுநாள் சரவணபவன் குருமூர்த்தியின் வீட்டுக்கு வந்தபோது குருமூர்த்தி அவனை புன்னகையோடு வரவேற்றான். ‘‘கஸ்ரப்பட்டுத்தான் சேர்த்தனான். இந்தக் கடிதத்தை நாளைக்குக் கொண்டுபோய்

பள்ளிக்கூடத்திலை குடுத்துச் சேர். பதினையாயிரம் ரூபா கொடுக்கவேணும். ஐயாயிரம் ரூபாவுக்கு பற்றுச்சீட்டு தருவினை. மிச்சம் தெரியும் தானே...''

''ஐயையோ... பிரச்சினையொன்றுமில்லை. வேணுமெண்டால் இன்னும் ஐயாயிரம் தாறன்...'' மகிழ்ச்சியின் எல்லையில் நின்று சொன்னான் சரவணபவன்.

''சிச்சீ... நானென்ன தரகுகாசு வாங்கிறனானே?'' சற்றுக் கோபமாகச் சொன்னான் குருமூர்த்தி.

''குறைநினைக்காதையுங்கோ அண்ணை. சந்தோசத்தாலை அப்பிடிச் சொல்லீட்டன். நீங்கள் செய்த உதவியை எத்தினை பிறவி எடுத்தாலும் நான் மறக்கமாட்டன்...''

வீட்டுக்கு வந்த சரவணபவன் பதினையாயிரம் ரூபா பணம் கொடுத்த விடயத்தை தகப்பனிடம் சொன்னான். அதற்கு அவர் சொன்னார்; ''அவன் வியாபாரி. பத்தாயிரம் ரூபாவைத் தான் எடுத்திருப்பான்.

''அப்படிச் சொல்லாதைங்கோ அப்பா. ஒருவன் செய்த உதவியை மதிக்க வேணும். என்னட்டை காசு இருந்தது. ஆனால் அனுமதி எடுக்க முடியேல்லை. காசு எல்லாரிடமும் இருக்கு. ஆனால் காரியம் பார்க்க சிலரால்த்தான் முடியும். என்ரை ஒரே ஒரு ஆம்பிளைப்பிள்ளை. இன்னும் பதினையாயிரம் ரூபா வேணுமெண்டாலும் குடுத்துச் சேர்ப்பன்...''

வருடம் ஒன்று கழிந்தது. பிரசாந்தன் வகுப்பில் முதல் மாணாக்கனாக வந்தான். சரவணபவனின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவன் குருமூர்த்தியின் வீட்டுக்கு சென்று நன்றி சொன்னான்.

சரவணபவனின் மூத்த மகளுக்கு திருமணம் முற்றாக இருந்தது. திருமண நாளும் குறிக்கப்பட்டது. மூாப்பிள்ளை கச்சேரியில் நிர்வாக அதிகாரியாக இருந்தான். இதை அறிந்த குருமூர்த்தி மாப்பிளையின் வீட்டுக்குச் சென்று மாப்பிளையின் தந்தையோடு கதைத்தார். அவரது மகனைத் தனது மகளுக்கு திருமணம் செய்யும்படி கேட்டான். முதலில் மாப்பிளையின் தந்தையான ஆறுமுகம் மறுத்தபோதும் பின் சீதனமாக கூடுதலான பணம் தருவதாக குருமூர்த்தி கூறியதும் ஒப்புக்கொண்டான்.

சரவணபவனின் தந்தையார் ஆறுமுகத்தோடு சண்டைக்குப் போனார். ஆனால் சரவணபவன் கோவிக்கவில்லை. தனது மகனின் பாடசாலை அனுமதி விசயத்தை நினைத்து அதை உடனேயே மறந்தான். அந்தத் திருமண வீட்டுக்குச் சென்று மணமக்களை வாழ்த்தி பரிசும் அளித்தான். அவன் தனது மகளின் திருமணம்

குழம்பியதையிட்டுக் கவலைப்படவில்லை. கடவுள் அவளுக்கு இன்னொருவனை கணவனாகத் தீர்மானித்திருக்கிறார் என்று நினைத்தான் சரவணபவன்.

108. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது

அன்றே மறப்பது நன்று.

ஒருவர் செய்த நன்றியை மறப்பது நன்றன்று. அவர் செய்த தீமையை அப்பொழுதே மறப்பது நன்று.

இன்னா செயினும்

ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றைந்தாம் ஆண்டு ஐப்பசி மாதம் யாழ்ப்பாணத்து மக்கள் அனைவரும் வெளியேறிய காலம். யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த ஐந்து இலட்சம் மக்கள் போக இடமின்றி தென்மராட்சிப் பிரதேசத்தில் வீதிகளிலும், மரநிழல்களிலும், கோயில்களிலும், பாடசாலைகளிலும் தங்கியிருந்த காலம்.

முகுந்தன் தனது வயோதிபத் தாய், தந்தையருடனும் மனைவி, பிள்ளைகளுடனும் சாவகச்சேரி நகரிலுள்ள மந்துவில் என்ற கிராமத்தில் ஒரு பெரிய அரச மரத்தின் கீழ்த் தங்கியிருந்தான். அவனுடன் இன்னும் பத்துக் குடும்பங்கள் இருந்தன. அரச மரத்தின் கீழ் வைரவர் சூலம் ஒன்று இருந்தது. அதற்கு அருகில் ஒரு சிறிய கல். அதில் தான் வைரவருக்கு கற்பூரம் கொழுத்துவார்கள். அருகில் மும்மூன்றாக மூன்று இடங்களில் தென்னங்குற்றிகள் புதைக்கப்பட்டிருந்தன. அவற்றின் ஒருபகுதி எரிந்து இருந்ததில் இருந்து அதில் தான் பொங்குகிறார்கள் என்று நினைத்தான் முகுந்தன். பகலிலும் நல்ல நிழல். மரத்தின் கீழ் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு மரநிழலில் பத்துக் குடும்பங்களும் பல நாட்களாக தங்கியிருந்தன. மழையில்லாவிட்டால் பிரச்சினை இல்லை. தற்பொழுது மழைகாலம் ஆரம்பித்ததால் முகுந்தனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கவலையுடன் சாவகச்சேரிச் சந்தைக்குச் சென்றான். அங்கே திரும்ப முடியாதளவு சனம். பொருட்கள் எதையும் வாங்க முடியவில்லை. கவலையோடு இருந்த அவனை ‘‘முகுந்தன்’’ என்று யாரோ கூப்பிட்டார்கள். திரும்பிப் பார்த்தான். எதிரே சிவராமன் நின்றான்.

“எப்பிடி சிவா எங்கை இருக்கிறாய்...”

சிவா பெருமூச்சு விட்டான்.

“யாரோ முன்பின் தெரியாத புண்ணியவான்ரை காணீக்கை கொட்டில் போட்டிருக்கிறன். நீ எங்கை இருக்கிறாய்...?”

“நான் மந்துவில் வைரவர் கோயில் மரநிழலிலை இருக்கிறன். எங்கையாவது காணி கிடைச்சால் கொட்டில் போடலாம்...”

“நான் இருக்கிற காணீக்கை இடமிருக்கு நல்ல மனிசன். இடம் தருவர் வா...” என்றான் சிவராமன்.

சிவராமனின் சிபார்சினால் முகுந்தனுக்கு காணி கிடைத்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டை படையினர் கைப்பற்றி குடாநாடு திரும்பும் வரை முகுந்தன் சிவராமனுடன் தான் இருந்தான். சிவராமன் குடிப்பவன். குடும்பப் பொறுப்பு இல்லாதவன். அதனால் அவனுக்கு அடிக்கடி உதவி செய்து கொண்டிருந்தான் முகுந்தன்.

ஊருக்கு வந்த பின்பு முன்னைய நட்புக் காரணமாக சிவராமன் முகுந்தனிடம் வருவான். அவனிடம் கல்லுக் கலட்டியாக பத்துப் பரப்புக் காணி இருந்தது. சிவராமனிடம் ஏராளமான தோட்ட நிலம் இருந்ததால் முகுந்தன் சிவராமனிடம் கல்லுக்கலட்டியாக இருந்த அக்காணியை வாங்கி திருத்தி வாழைமரம் நட்டான். அத்தரவையைத் திருத்த முகுந்தனுக்கு பல ஆயிரம் ரூபா செலவானது.

தரவையாக இருந்த நிலத்திற்கு நல்ல பசளையிட்டு நீர்ப்பாய்ச்சியமையால் வாழையில் இருந்து முகுந்தனுக்கு நல்ல வருமானம் கிடைத்தது. அதனால் பொறாமைப்பட்ட சிவராமன் தோட்டத்தை விடும்படி கரைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தான். முகுந்தன் ஏராளமான பணத்தை செலவு செய்தமையால் தனக்கு தோட்டத்தை விட இரண்டு வருடத் தவணை தரும்படி அல்லது நட்ட ஈடாக ஒரு தொகை பணம் தரும்படியும் கேட்டான். அதற்கு சிவராமன் மறுத்தான். ஊரில் உள்ள பெரிய மனிதர்கள் முகுந்தன் கேட்பது நியாயம் என்று கூறினர். இதனால் கோபம் கொண்ட சிவராமன் குடித்துவிட்டு வந்து முகுந்தனைக் கண்டபடி ஏசினான். “உடனடியாகத் தோட்டத்தை விடாவிட்டால் பாரிய நட்டத்தைச் சந்திப்பாய்” என எச்சரித்து விட்டுச் சென்றான்.

அன்றிரவு சிவராமனுடன் அவனது குடிகார நண்பர்களுமாகச் சேர்ந்து முகுந்தனின் வாழை முழுவதையும் வெட்டி வீழ்த்தினர். மறுநாட் காலை செய்தி அறிந்து தோட்டத்திற்குச் சென்ற முகுந்தன் குலைகளோடு வாழைகள் வெட்டப்பட்டு நிலத்தில் வீழ்ந்து கிடக்கும் காட்சியைக் கண்டான். அகதி முகாம் ஒன்றில் பெண்கள், பிள்ளைகள்,

வயோதிபர், கர்ப்பிணிப் பெண்களாகியோர் தாக்கப்பட்டு இறந்து கிடப்பதைப் போல் அத்தோட்டம் காட்சியளித்தது. முகுந்தனுக்கு துயரத்தைத் தாங்க முடியவில்லை. விம்மி விம்மி அழுதான். அருமையாக பாசத்துடன் வளர்த்த அம்மரங்களை வெட்டிக்கொலை செய்வதிலும் பார்க்க தன்னைக் கொலை செய்திருக்கலாம் என்று நினைத்தான்.

ஊர்ப் பிரமுகர்கள் அவனைத் தேடிவந்து ஆறுதல் கூறினர். அவர்கள் விதானையாரிடமும், காவல்துறையினரிடமும் புகாரிடுமாறு வற்புறுத்திக் கூறினர். ஆனால் முகுந்தன் மறுத்துவிட்டான்.

“ஐயா, நான் இருக்க இடமில்லாமல் தவித்த போது இருக்க இடம் தந்தான் அவன். அத்துடன் அது அவனது நிலம். நான் கேட்டு வாங்கி திருத்தி தோட்டம் செய்தேன். அதுக்காக உரிமை கொண்டாட முடியுமா...? அவன் ஈவிரக்கமில்லாமல் மரங்களை வெட்டிச் சாய்ப்பன் என்று தெரிந்திருந்தால் நான் தோட்டத்தை நட்டஈடு வாங்காமல் உடனே விட்டிருப்பன்... எல்லாம் கடவுள் செயல்” என்றான். வந்தவர்கள் அனுதாபம் தெரிவித்துவிட்டு திரும்பினர்.

109. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த

ஒன்று ன்று உள்ளக் கெடும்.

கொலை செய்வதற்கு சமமான தீமையை ஒருவர் எமக்குச் செய்தாலும், அவர் முன்பு செய்த ஒரு நன்மையை நினைத்துப் பார்த்தால் அத்தீமை பற்றிய துன்பம் மறைந்துவிடும்.

உய்வு இல்லை

வாழைகளை வெட்டிய பின் முகுந்தன் தோட்டத்திற்குச் செல்லவில்லை. ஊர்ப் பெரியவரான நடராசாவிடம் சென்று சொன்னான்; “ஐயா நீங்கள் தான் இவ்வூரில் மக்கள் மதிக்கின்ற மனிதர். அதனால் தான் நான் உங்களைத் தேடி வந்தேன். இனிமேல் நான் சிவராமனின் தோட்டப்பக்கம் செல்லமாட்டன். அவன் வெட்டிச் சரித்த வாழைக் குலைகளையும் எடுக்கமாட்டேன். தறையுள் கிடந்து அவை அனியாயமாக பழுதடைந்துவிடும். அதை சந்தைக்குக் கொண்டு சென்று விற்றால் மூவாயிரம் ரூபாவாவது தேறும். அதை கொண்டு போய் விற்கச் சொல்லுங்கோ. இன்று தொடக்கம் அவனை

தோட்டத்தை பொறுப்பேற்கும்படி சொல்லுங்கோ. நானும் போகாமல் அவனும் போகாமல் விட்டால் கட்டாக்காலி மாடுகள் அருமந்த தோட்டத்தை அழித்துவிடும்...''

''அவன் புத்தியோடு தான் செயலில் இறங்கியுள்ளான். முற்றிய வாழைக் குலைகளை உடைய வாழை மரங்களாகப் பார்த்துத் தான் வெட்டியள்ளான். குலை போடத்தக்க வாழைகளை வெட்டவில்லை. நோயுள்ள வாழைகளையும் கூடுதலாக நின்ற வாழைகளையும் தான் பெரும்பான்மையாக வெட்டியுள்ளான். அதோடு எமக்கு விளங்காமல் இருக்கட்டும் என்பதற்காக நல்ல வாழைகள் சிலவற்றையும் வெட்டியுள்ளான். அவனுக்கு எனது குணம் தெரியும். இப்படி ஏதாவது செய்தால் நான் தோட்டத்தை விட்டு விடுவேன். பின் தான் செய்யலாம் என்று நினைத்துத் தான் இதைச் செய்துள்ளான்...'' என்றான் முகுந்தன்.

அப்பொழுது தான் சிவராமனின் புத்திசாலித்தனம் நடராசாவுக்கு விளங்கியது. ''நீ விதானையாரிட்டைப் போய் முறையீடு செய்தியெண்டால் நட்ட ஈடாவது வாங்கித் தருவர்....''

''எல்லாம் என்ரை உடல் உழைப்பு ஐயா. ஒரு தொழிலை பெரிதாகச் செய்ய வேண்டுமென்றில்லை. அக்கறையோடு செய்தால் சிறிதாகச் செய்தாலும் பெரும்பலன் வரும். நான் அந்தத் தோட்டத்தில் கடுமையாக உழைத்தனான். அதனால் தான் பயன் கிடைத்தது. இல்லாவிட்டால் பயன் கிடைத்திராது. சிவராமனுக்கு ஏராளமான தோட்டக்காணியிருக்கு. ஆனால் இப்பவும் அவரின் மனைவி சமையல் பொருட்களுக்குக் கூட தினமும் வீட்டுக்கு வீடு அலைகிறாள். அவனில் பார்க்க பத்தில் ஒரு பங்கு நிலம் இல்லாத நான் நல்ல வசதியாக இருக்கிறேன். இந்தத் தோட்டத்தை மறிச்சது அவனில்லை. என்னில் பொறாமை உள்ளவர்கள் அவனுக்கு செய்த உபதேசம் காரணமாகத் தான் அவன் அப்படி நடந்தான்'' என்றான் முகுந்தன்.

நடராசா சிவராமனிடம் சென்று முகுந்தன் கூறியவற்றைக் கூறினான். சிவராமனுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி.

''நீ அளவுக்கு அதிகமாக சந்தோஷமடையாதை சிவராமா. நீ செய்தது படுபாதகமான செயல். முகுந்தன் என்றபடியால் பொறுத்துக் கொண்டான். வேறு யாருமென்றால் காவல் துறையிடம் முறையிட்டிருப்பான். இந்தக் காலத்தில் பயன் தரும் மரங்களை வெட்டுவது பாரிய குற்றம். உன்னைக் கைதுசெய்து அடைத்திருப்பார்கள். பிணையிலும் விடமாட்டார்கள். முகுந்தன் பாவம். நீ வெட்டிய வாழைக்குலைகளைக் கூட எடுக்கச் சொல்கிறான். எனவே அவனுக்கு நட்ட ஈடாக பத்தாயிரம் ரூபாவாவது கொடு...''

“மூன்று வருடங்களாக அத்தோட்டத்தைச் செய்கிறான். எவ்வளவு பணம் சம்பாதித்திருப்பான் என்று நினைத்துப் பாருங்கோ. மூன்று வருடத்துக்கை எல்லாச் செலவும் போக ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேலை உழைச்சிருப்பான். அது போதாதே...”

அதற்கு மேல் கதைப்பதில் பிரயோசனமில்லை எனத் தெரிந்து கொண்ட நடராசா சொன்னார்; “உனக்கு அவன் எவ்வளவோ உதவிகள் செய்தவன். இடம்பெயர்ந்து மந்துவில் வைரவர் கோயில் மரநிழலில் அவன் இருக்கேக்கை நீ கூட்டிக்கொண்டு போய் காணிக்காரனோடை கதைத்து காணி வாங்கிக் கொடுத்தமைக்காக உன்னோடை பிரச்சினைப்படாமல் தோட்டத்தை விர்றான். வழக்கு கணக்கென்று போக அவனால் முடியும். ஆனால் அவன் அதை விரும்பேல்லையே தவிர உன்ரை சண்டித்தனத்திற்கு அவன் பயப்பிடேல்லை என்பதை மட்டும் நீ நினைத்துக் கொள்” என்று கூறிவிட்டுச் சென்றார் நடராசா.

வாரம் ஒன்று கழிந்தது. சிவராமன் குடிகாரன் என்பதால் குடிகார நண்பர்கள் பலர் அவனோடு நட்பாக இருந்தனர். அவர்களில் சண்டித்தனம் செய்யும் மூவரோடு சேர்ந்துதான் முகுந்தனின் வாழையை சிவராமன் வெட்டினான். வாழைகளை வெட்டியவுடன் முகுந்தன் சண்டைக்கு வந்தால் அவனை அடிக்கும்படி சிவராமன் அவர்களுக்குக் கூறியிருந்தான். ஆனால் முகுந்தன் பிரச்சினைகளுக்கு வராதது தமக்குப் பயந்துதான் என்று சிவராமனின் நண்பர்கள் கருதினார்கள். அதனால் தினமும் குடிப்பதற்கும், தமது செலவுக்கும் அவர்கள் சிவராமனிடம் பணம் கேட்டனர்.

வாழைக்குலைகள் விற்ற பணத்தின் ஒரு பகுதியை சிவராமன் அவர்களுக்குக் கொடுத்து வந்தான். தினமும் அவர்கள் பணம் கேட்டு கரைச்சல் கொடுத்ததால் சிவராமன் அவர்களை ஏச, அது சண்டையாக மாறியது.

சிவராமனின் நண்பர்கள் மூவரும் அன்று குடித்துவிட்டு சிவராமனை பொல்லுகளாலும், இரும்புக் கம்பிகளாலும் தாக்கினர். பெரும் காயங்களுக்குள்ளான சிவராமன் குற்றுயிராக மயங்கிக் கிடந்தான். அவ்வழியாக வந்தோர் அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அவனது இரண்டு கைகளும், வலது காலும் முறிந்துவிட்டன. மூன்று நாட்கள் சுயநினைவில்லாதிருந்த சிவராமன் நான்காம் நாள் கண் விழித்தான்.

110. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

எந்தப் பழி, பாவங்களைச் செய்தவர்களும் தப்பிப் பிழைக்க வழியண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவனுக்கு தப்பிப் பிழைக்க வழி இல்லை.

தகுதி

கணபதி மத்திய மகா வித்தியாலயம் அந்தப் பகுதியில் மிகவும் பெரிய பாடசாலையாகும். மூவாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்விபயிலும் அப்பாடசாலையில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கல்வி கற்பித்துக் கொண்டிருந்தனர். அதிபர் விக்னேஸ்வரமூர்த்தி மிகவும் திறமையான நிர்வாகி. அவரது கற்பித்தல் திட்டங்களை எளிதில் யாரும் அறிந்துகொள்ள முடியாது. வகுப்பிற்கு மேற்பார்வைக்கென அவர் செல்லாத நேரங்களில் மேற்பார்வைக்கான பல அணுகுமுறைகளைக் கையாள்வார்.

அது அப்பட்டணத்தில் பிரசித்தி பெற்ற பாடசாலையாக இருப்பதால் எல்லோருடைய கண்ணும் கருத்தும் அப்பாடசாலை மீது இருந்தது. விளையாட்டுப் போட்டியின் போது பெரும் பிரச்சினைகள் பல வரும். அவற்றையெல்லாம் விக்னேஸ்வரமூர்த்தி யாரும் எதிர்பாராதவாறு மிகச் சுலபமாகத் தீர்த்து வைப்பார். அப்பாடசாலையில் ஊரிலுள்ள பெரும் பெரும் பிரமுகர்களின் பிள்ளைகள் கல்வி கற்பதால் தினமும் பல பிரச்சினைகள் உருவாகிக் கொண்டிருக்கும். இவற்றையெல்லாம் விக்னேஸ்வரமூர்த்தி இலகுவாகத் தீர்த்துக்கொண்டாலும் பிரமுகர்கள் மத்தியில் சில அதிருப்திகள் இருந்து கொண்டே வந்தன.

அப்பட்டணத்தில் எவருக்கும் இல்லாத மதிப்பும், மரியாதையும் விக்னேஸ்வரமூர்த்திக்கு இருந்தது. அப்பாடசாலையில் தமது பிள்ளைகள் கற்பதாலும், அப்பாடசாலையில் தமது பிள்ளைகளுக்கு அனுமதி வேண்டி நிற்பதாலும் பலர் அவருடன் பிரச்சினைகளுக்குச் செல்வதில்லை.

உயர்பதவியில் உள்ளோர் தம்மை விக்னேஸ்வரமூர்த்தி மதிப்பதில்லை என்று வெளிப்படையாகவே கூறுவதுண்டு. அதற்கு அவர் கூறும் பதில் ‘‘நான் இப்பாடசாலையின் அதிபர். இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் எல்லோரும் எனது பிள்ளைகள். அது கூலிக்காரனின் பிள்ளையாகவும் இருக்கலாம். குபேரனின் பிள்ளையாகவும் இருக்கலாம். எனக்கு அவர்கள் இருவரும் பிள்ளைகள்’’ என்பார். இக்கூற்று பெரும்பாலான உயர் உத்தியோகத்தர்களுக்குப் பிடிப்பதில்லை. அவ்வூரில் பிரசித்தி பெற்ற

அம்மன் கோயில் ஒன்றுள்ளது. அதன் பிரதமகுரு சர்வேஸ்வரக் குருக்கள். அவரது மகன் சிவராஜசர்மா. அம்மன் கோயிலுக்கு ஏராளமான மக்கள் செல்வதுண்டு. அத்துடன் குருக்கள் சாதகம் பார்ப்பதிலும், கிரகதோசம் செய்வதிலும் வல்லவர். அதனால் உயர் அதிகாரிகள் அவரை வீட்டுக்கு அழைத்து கிரகதோசத்திற்கான சாந்தி செய்வதுண்டு. விக்னேஸ்வரமூர்த்தி ஓர் அந்தணருக்ரிய மதிப்பு, மரியாதையை குருக்களுக்குக் கொடுத்தாரே தவிர வேறு விடயங்களில் அவரை மதிப்பதில்லை. அவர் பலமுறை தனக்குத் தேவையான மாணவர்களை அனுமதிக்கும்படி கடிதம் கொடுத்தனுப்பினார். விக்னேஸ்வரமூர்த்தி அக்கடிதத்தை வாங்கிக் கூடப் பார்ப்பதில்லை. இது குருக்களுக்குப் பிடிப்பதில்லை.

அதேபோல் பிரமுகர்கள், கல்வி அதிகாரிகளின் சிபார்சுக் கடிதங்களுக்கு அவர் மதிப்பளிப்பதில்லை. இது அவர்களுக்கு ஆத்திரத்தைக் கொடுத்த போதும் அவர்களால் விக்னேஸ்வரமூர்த்திக்கு எதிராகச் செயற்பட முடியவில்லை. இது விடயமாக பிரச்சினைகள் பல எழுந்த போதும் விக்னேஸ்வரமூர்த்தியை அவர்களால் எதுகும் செய்ய முடியவில்லை.

அந்த வருடம் கல்லூரியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படவிருந்தது. அதற்காக பாடசாலை மட்டத்தில் பல போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. அதில் முக்கியமானது கட்டுரைப் போட்டியும் கவிதைப் போட்டியுமாகும். கட்டுரைக்கும், கவிதைக்குமான தலைப்புக்களின் சாராம்சத்தை ஆசிரியர்களோடு ஆராய்ந்து மாணவர்களுக்கு அறிவித்தார் விக்னேஸ்வரமூர்த்தி. அப்பாடசாலையின் ஆரம்பம் முதல் இன்றுவரையான செயற்பாடுகள் வளர்ச்சி - நோக்கம் - பயன்பாடு. பாடசாலைக்கு உதவியோர் - அப்பாடசாலையை ஆரம்பித்த நோக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக கவிதையும், கட்டுரையும் இருக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டது.

மாணவர்களைவிட பெற்றோரே கட்டுரைக்கும், கவிதைக்குமான விடயங்களைத் தேடினர். அன்று போட்டிக்கான நாள். ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் அப்போட்டிகளில் பங்குபற்றினர். போட்டிக்கான தலைப்பை இரகசியமாக வைத்திருந்த விக்னேஸ்வரமூர்த்தி போட்டிக்காக மாணவர்கள் தமது ஆசனத்தில் வந்து அமர்ந்தவுடன் அறிவித்தார். “கணபதி மத்திய மகா வித்தியாலயம் இந்த நகரில் கட்டப்படாதிருந்தால்...” போட்டியின் தலைப்பை எதிர்பாராத மாணவர்கள் சற்றுத் தடுமாறினர்.

போட்டி முடிவடைந்ததும் ஆசிரியர்கள் எல்லோரையும் அழைத்து கட்டுரைகளையும் கவிதைகளையும் கொடுத்து இருபத்தைந்து நல்ல கட்டுரைகளையும் இருப்தைந்து நல்ல கவிதைகளையும் தேர்ந்தெடுத்துத் தருமாறு கூறினார். ஆசிரியர்கள் அப்படியே செய்தனர்.

பின் அவர் அக்கட்டுரைகளையும், கவிதைகளையும் கணினியில் அச்சடித்து பல பிரதிகளை எடுத்தார்.

அப்பட்டணத்திலுள்ள பெரும் அறிஞர்களை ஒரு நாள் பாடசாலைக்கு அழைத்து மண்டபமொன்றில் அமர்த்தி கணினியில் எடுத்த பிரதிகளை அவர்களிடம் கொடுத்து முதல் ஐந்து இடங்களைப் பெற்ற கவிதைகளையும் கட்டுரைகளையும் எடுத்துத் தரும்படி கூறினார் விக்னேஸ்வரமூர்த்தி.

கணினிப் பிரதியைக் கண்ணுற்ற அவர்கள் திகைத்துப் போனார்கள். நடுவர்களாக வந்த பலரின் பிள்ளைகள் அப்போட்டியில் பங்குபற்றிய போதும் கணினியில் பிரதியெடுத்தமையால் அவர்களால் அவற்றை இனம்காண முடியாமல் போயிற்று.

கட்டுரைப் போட்டியில் கூலிவேலை செய்யும் தம்பிப்பிள்ளையின் மகன் திவாகரன் முதலாம் இடத்தையும், விவசாயம் செய்யும் பசுபதியின் மகள் வதனி இரண்டாம் இடத்தையும், சைக்கிள் கடை வைத்து நடத்தும் சுகுமாரின் மகள் நந்தினி மூன்றாவது இடத்தையும் பெற்றனர். கவிதைப் போட்டியில் தச்சுவேலை செய்யும் கதிர்காமுவின் மகள் ஸ்ரீவாணி முதலாம் இடத்தையும் அப்பாடசாலையின் தொழிலாளியாக வேலை செய்யும் ராகுலனின் மகன் கலைவாணன் இரண்டாம் இடத்தையும், அவ்வூர் கல்வி அதிகாரி சிற்சபேசனின் மகள் சரண்ஜா மூன்றாவது இடத்தையும் பெற்றனர்.

இம்முடிவு பலருக்கு அதிர்ச்சியை அளித்தபோதும் விக்னேஸ்வரமூர்த்தியின் நேர்மையைச் சிலர் பாராட்டினர்.

111. தகுதி எனஒன்று நன்றே பகுதியால்

பாற்பட்டு ஒழுகப் பெறின்.

தன்னோடு தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவரோடு முறையோடு பொருந்தி நடந்தால் நடுவு நிலைமை என்று கூறப்படும். அது நன்மை பயக்கும்.

சிதைவில்லா ஆக்கம்

விக்னேஸ்வரமூர்த்தியின் தகப்பனின் தந்தை மாணிக்கவாசகர். விவசாயம் செய்ததோடு ஊரில் கூலி வேலை செய்பவர். மிகவும் நல்ல மனிதர். கஸ்ரப்படுபவர்களுக்கு தன்னாலான உதவிகள் புரிபவர். நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் காலையும் மாலையும் சரியைத் தொண்டு புரிவார். பூமாதேவி அவரின் மேல் பேரன்பு பூண்டவள். அதனால் ஒவ்வொரு வருடமும் வயல்கள் பெருவிளைச்சலைக் கொடுத்தன. ஒவ்வொரு வருடமும் மாணிக்கவாசகரது வயலைப் பார்க்கும் மக்கள் 'சாவெள்ளாமை' என்று தம்முள் பேசிக் கொள்வர். காய்கறி வகைகளும் அவரது தோட்டத்தில் வருடம் பூராகவும் இருக்கும். அத்துடன் வாழைத் தோட்டத்திலும் நல்ல வருமானம் கிடைக்கும். அதனால் அவரது குடும்பம் நாவலடிக் கிராமத்தில் வசதியாக வாழ்ந்து வந்தது.

தனது தோட்டத்தில் வேலை இல்லாத சமயங்களில் உறவினர்கள் நண்பர்களது தோட்டங்களில் அவர் வேலை செய்வார். அதற்காக அவர்கள் கூலி கொடுப்பார்கள். இல்லாவிட்டால் அவர்கள் வந்து மாணிக்கவாசகரின் வயல்களில் அல்லது தோட்டத்தில் வேலை செய்து கொடுப்பார்கள்.

பாலசுந்தரம் நாவலடியில் வாழும் வர்த்தகன். பட்டணத்தில் பெரியதொரு பிடைவைக் கடை வைத்து நடாத்தி வந்தான். அவன் மாணிக்கவாசகரின் தூரத்து உறவினன். மங்கள அமங்கள நிகழ்வுகள் நடைபெற்றால் மட்டும் மாணிக்கவாசகரின் வீட்டுக்கு பாலசுந்தரம் வருவான். அதேபோல் மாணிக்கவாசகரும் பாலசுந்தரத்தின் வீட்டுக்குச் செல்வார்.

வருடங்கள் பல கழிந்த போதும் பாலசுந்தரம் வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்கவில்லை. மாணிக்கவாசகர் பலமுறை கேட்டுப் பார்த்தார். பாலசுந்தரம் ஒவ்வொரு முறையும் தவணை சொல்லிக் கொண்டே இருந்தான். அதனால் அவர் பாலசுந்தரத்திடம் பணத்தை திருப்பிக் கேட்பதில்லை. அவர் பாலசுந்தரத்திற்கு பணம் கொடுத்ததை மறந்துவிட்டார்.

''பாலசுந்தரத்தைப் பற்றித் தெரிந்திருந்தும் ஏன் பணத்தைக் கொடுத்தீர்கள்?'' என்று யாராவது கேட்டால், ''அவனைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அவன் வந்து கேட்டபோது அவனது கோலத்தைப் பார்க்கப் பாவமாக இருந்தது. கொடுத்துவிட்டேன். வசதியான நேரம் தருவான்'' என்பார்.

மாணிக்கவாசகரின் இளைய மகள் உமாதேவி. முப்பது வயதாகியும் திருமணமாகாது கன்னியாக வாழ்பவள். அவளுக்கு பல திருமணங்கள் பேசி வந்தபோதும் சீதனப் பிரச்சினையால் அத்திருமணங்கள் குழம்பின. கடைசியாக நாவலடியில் வாழும் பத்மநாதன் என்ற ஆசிரியருக்கு உமாதேவியை பெண் பார்த்தனர்.

சாதகம் நன்றாகப் பொருந்தியதால் மாப்பிளை வீட்டார் அவளைச் செய்ய விரும்பினர். காசாக இரண்டு இலட்சம் ரூபா கேட்டனர். மாணிக்கவாசகரிடம் அவ்வளவு பணம் இல்லை. அதனால் தவணை முறையில் தரும்படி கேட்டனர். அதற்கு மாணிக்கவாசகர் மறுத்துவிட்டார். ‘‘என்னால் இனிமேல் உழைக்க முடியாது. வயது போய்விட்டது. அதனால் உங்களுக்கு இரண்டு இலட்ச ரூபா பணத்தை தருவேன் என்று எப்படிக் கூறுவது. கலியாணம் நடைபெறாவிட்டாலும் பரவாயில்லை. பொறுப்புச் சொல்ல என்னால் முடியாது’’ என்றார்.

ஆறு மாதங்கள் கடந்தன. அன்ற பாலசுந்தரமும் பத்மநாதன் ஆசிரியரின் தகப்பன் குமரகுருவும் மாணிக்கவாசகரின் வீட்டுக்கு வந்தனர்.

‘‘அண்ணை என்னுடைய கடை எரிந்து நான் கஸ்ரப்பட்ட நேரம் நீங்கள் இருபத்தையாயிரம் ரூபா காசு தந்தமையால் தான் நான் இன்று கோடீஸ்வரனாக இருக்கிறேன். இவ்வளவு காலமும் நான் வாங்கிய பணத்தை திருப்பித்தர முடியாமல் போய்விட்டது. இப்ப கொண்டு வந்திருக்கிறேன் பிடியுங்கோ...’’ என்றான்.

மாணிக்கவாசகர் பணத்தை வாங்கிப் பார்த்தார். இருபத்தையாயிரம் ரூபாவைவிட அதிகமான பணம் இருந்தது.

இருபது வருடங்களுக்கு முன்னம் இருபத்தையாயிரம் ரூபா வாங்கினான். இண்டைக்கு அதன் பெறுமதி இரண்டரை இலட்சம் ரூபா...

‘‘சீச்சீ... நான் தந்த காசைத் தந்தால் போதும்...’’

‘‘இருபது வருடத்திற்கு முன்னம் ஒரு தங்கப்பவுண் ஆயிரம் ரூபா. இண்டைக்கு பத்தாயிரம் ரூபா. கணக்கைப் பாருங்கோ....’’ என்றான் பாலசுந்தரம்.

‘‘இருபது வருடத்திற்கு முந்தின கணக்கைப் பாராதைங்கோ. அந்தக் காசின் இன்றைய பெறுமதியைப் பாருங்கோ.... அன்றைக்கு ஆயிரம் ரூபாவுக்கு வாங்கின பவுணையும் பரப்பு ஆயிரம் இரண்டாயிரத்திற்கு வாங்கிய காணியும் ஆரன் அந்த விலைக்கே இண்டைக்கும் விற்பினையே. பேசாமல் காசை வாங்குங்கோ’’ என்றார் குமரகுரு.

சிந்தித்துப் பார்த்தார் மாணிக்கவாசகர். எனினும் அவரது மனச்சாட்சி ஒத்துக்கொள்ள மறுத்தது. ‘‘நீங்கள் எதைச் சொன்னாலும் நான் ஏற்கமாட்டன்’’ என்று கூறி இருபத்தையாயிரம் ரூபாவை மட்டும் ஏற்றுக்கொண்டார்.

மாணிக்கவாசகரின் அச்செயல் குமரகுருவை சிந்திக்க வைத்தது. மனம்மாறிய குமரகுரு மகனின் திருமணத்திற்குச் சம்மதித்தார். திருமண நாளன்று பாலசுந்தரம் இரண்டு இலட்ச ரூபா பணத்தை உமாதேவிக்கு கல்யாணப் பரிசாகக் கொடுத்தான்.

112. செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவுஇன்றி

எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.

நடுவு நிலைமை உடையவனது செல்வம் அழியாமல் அவனுடைய பரம்பரையினரைச் சென்றடையும்.

அன்றே ஒழி

விக்னேஸ்வரமூர்த்தி கணபதி மத்திய மகா வித்தியாலய அதிபராக பதவியேற்ற பின்பு அப்பாடசாலை பலவழிகளாலும் முன்னேறி அம்மாவட்டத்தின் தலை சிறந்த பாடசாலையாக விளங்கியது. குற்றம் குறைகள் கூறுபவர்களும் விக்னேஸ்வரமூர்த்தியின் செயற்பாடுகளை மனதுள் பாராட்டியவண்ணம் இருப்பர். கல்வித் திணைக்கள அதிகாரிகளும் அமைச்சின் அதிகாரிகளும் விக்னேஸ்வரமூர்த்தியின் சேவையை அடிக்கடி பாராட்டுவார்கள். சமூகத்தில் நடைபெறும் பொது விடயங்கள் அனைத்திற்கும் விக்னேஸ்வரமூர்த்தியைப் பிரதம விருந்தினராக அழைப்பார்கள். அவ்வூரில் விக்னேஸ்வரமூர்த்தி இல்லாத பொது வைபவங்கள் நடைபெறுவது குறைவு. தனது இனத்தவர்கள், நண்பர்களின் வீட்டில் நடைபெறும் சுபநிகழ்வுகளைத் தவிர வேறு வீடுகளில் நடைபெறும் சுபநிகழ்வுகளுக்கு விக்னேஸ்வரமூர்த்தி செல்லமாட்டார். யாராவது வற்புறுத்திக் கேட்டாலும் செல்லமாட்டார். தான் செல்வதானால் தனது பாடசாலையில் பயிலும் அத்தனை பிள்ளைகளின் வீடுகளில் நடைபெறும் சுபநிகழ்வுகளுக்கும் செல்ல வேண்டும் என்பார்.

கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆண்டுத் தொடக்கத்தில் அனுமதியில் பல பிரச்சினைகள் வரும். ஒவ்வொரு வகுப்பிற்கும் ஏராளமான மாணவர்கள் விண்ணப்பிப்பார்கள். தரம் ஒன்று, தரம் ஆறு, க.பொ.த உயர்தர வகுப்புக்களில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அனுமதி கோரி விண்ணப்பிப்பார்கள்.

இவ்வகுப்பில் அனுமதிக்கும் வேளைகளில் விக்னேஸ்வரமூர்த்திக்கு விசரே பிடித்துவிடும்.

அந்த வருடம் தரம் ஆறில் சேர்வதற்கு அதிகமான மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர். அந்த ஊரிலும் அயல் ஊர்களிலும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களை மட்டுமே கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் அனுமதிப்பது வழக்கம். அம்முறை பல மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையால் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுள் மிகவும் கூடுதலான புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவர்களையே பாடசாலையில் சேர்ப்பதாக விக்னேஸ்வரமூர்த்தி திட்டமிட்டிருந்தார். அவ்வூரில் பெரும் பிரமுகரான சிவசுந்தரமூர்த்தியின் மகன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த போதும் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் அனுமதிப்பதற்கான புள்ளிகளிலும் பார்க்க மிகக் குறைவாகப் பெற்றிருந்தமையால் அவனுக்கு அனுமதி கிடைக்கவில்லை. அதனால் சிவசுந்தரமூர்த்தி விக்னேஸ்வரமூர்த்தியைச் சந்திக்க அவரது வீட்டிற்குச் சென்றார்.

சிவசுந்தரமூர்த்தி தனது மகனின் அனுமதி பற்றி விக்னேஸ்வரமூர்த்தியோடு கதைக்க ஆரம்பித்ததும் விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார்; ‘‘ஐயா பாடசாலை சம்பந்தமான பிரச்சினைகள் பற்றி எனது வீட்டில் நான் கதைப்பது இல்லை. வீட்டில் கதைத்தால் பலரும் தப்பாக எண்ணுவார்கள். எனவே நீங்கள் தயவுசெய்து பாடசாலைக்கு வாருங்கள்’’ என்றார்.

சிவசுந்தரமூர்த்தி ஊரில் பெரும் பிரமுகர். நிர்வாக சேவை அதிகாரியாகப் பணி புரிபவர். விக்னேஸ்வரமூர்த்தி வீட்டில் பாடசாலையைப் பற்றிய விபரங்கள் கதைப்பதில்லை என்று தெரிந்தும் தான் ஊரில் பெரும் பிரமுகராக இருப்பதாலும் உயர்தொழில் வகிப்பதாலும் தன்னை மதித்துக் கதைப்பார் என்று நினைத்து வந்தார். அவருக்கு விக்னேஸ்வரமூர்த்தியின் வார்த்தைகள் சற்றுக் கோபத்தை ஏற்படுத்தினாலும் வேறு வழியின்றி எழுந்து சென்றார்.

மறுநாள் பாடசாலைக்கு வந்த சிவசுந்தரமூர்த்தியிடம் தாம் பாடசாலைக்கு மாணவர்களை அனுமதித்த விதம்பற்றிக் கூறி அனுமதி பெற்ற மாணவர்களின் விபரத்தையும் பெற்ற புள்ளிகளையும் காட்டினார்.

‘‘இதெல்லாம் எனக்குத் தெரியும். என்னுடைய மகன் வேறு பாடசாலையில் படித்தால் என்னை மற்றையோர் மதிக்கமாட்டார்கள். எனது அலுவலகத்தில் பணிபுரியும் பதினைந்து ஊழியர்களின் பிள்ளைகளுக்கு ஆறாம் தரத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது. எனது

மகனுக்குக் கிடைக்காவிட்டால் அது எனக்கு அவமானம்'' சிவசுந்தரமூர்த்தியின் குரல் சோகமாக ஒலித்தது.

''நான் அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. உங்கள் மகனை அனுமதித்தால் நாற்பது மாணவர்களை அனுமதித்தல் வேண்டும்...''

''நான் ஒரு இலட்சம் ரூபா அன்பளிப்பாகத் தருகிறேன். அதை நீங்கள் எடுத்தாலென்ன பாடசாலைக்கெடுத்தாலென்ன.....''

''நான் பாடசாலைக் காசில் ஒரு சதம் கூட எடுப்பதில்லை. பாடசாலையில் மாணவர்களுக்கு போதிய கட்டிட வசதி இல்லை, தளபாட வசதிகள் இல்லை விரும்பினால் அதற்கு உதவி செய்யுங்கள். ஆனால் அனுமதி தரமாட்டேன்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

சிவசுந்தரமூர்த்தியால் எதுகும் பேச முடியவில்லை. வெகு நேரமாக ஆசனத்தால் எழும்பாது விக்னேஸ்வரமூர்த்தியைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவரால் துயரத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. விக்னேஸ்வரமூர்த்தி எழுந்து சென்று தனது வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினார்.

113. நன்றே தரினும் நடுவுஇகந்துஆம் ஆக்கத்தை

அன்றே ஒழிய விடல்.

தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவுநிலைமையில் இருந்து தவறி பெறப்படும் செல்வத்தை அப்போதே கைவிடுதல் வேண்டும்.

எச்சத்தால்

விக்னேஸ்வரமூத்தி பாடசாலை விடயமாக பட்டணத்திற்கு சென்றபோது வேகமாக வந்த ஒரு வாகனம் அவரை மோதிவிட்டு ஓடி மறைந்துவிட்டது. பட்டணத்தில் தெருவில் சென்றோர் விக்னேஸ்வரமூர்த்தியை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சேர்த்தனர். மயக்கமான நிலையில் இருந்த விக்னேஸ்வரமூர்த்தியை அவசர சத்திரசிகிச்சைப் பிரிவில் அனுமதித்தனர். அவசர சத்திரசிகிச்சைப் பிரிவின் தலைமை மருத்துவர் சுந்தரேசன்

விக்னேஸ்வரமூர்த்தியின் மாணவன். மயங்கிய நிலையில் இருந்த விக்னேஸ்வரமூர்த்தியைக் கண்டதும் திகைத்துவிட்டார். உடனடியாக சிகிச்சையை ஆரம்பித்தார்.

ஓரிரு நிமிடங்களில் மருத்துவமனையெங்கும் விக்னேஸ்வரமூர்த்தி விபத்துக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி பரவியது. மருத்துவமனையில் வேலை செய்வோரெல்லாம் சத்திரசிகிச்சை அறை அருகே கூடிவிட்டனர். மருத்துவமனையின் எல்லாப் பிரிவுகளும் செயலிழந்துவிட்டன. மருத்துவமனையில் வேலை செய்யும் முக்கால் வாசிப்பேர் விக்னேஸ்வரமூர்த்தியின் மாணவர்கள். மிகுதிப்பேர் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் கற்கும் மாணவர்களின் பெற்றோர்.

விடயம் விக்னேஸ்வரமூர்த்தியின் ஊருக்குத் தெரிந்தபோது மக்கள் பதறிப் போனார்கள். உடனே கிராமங்களில் உள்ள கடைகள், பாடசாலைகள் யாவும் மூடப்பட்டன. மக்கள் கூட்டம் கூட்டமாக மருத்துவமனையை நோக்கி வந்தனர்.

மூன்று தினங்கள் விக்னேஸ்வரமூர்த்தி மயக்கமாக இருந்தார். மக்கள் துடிதுடித்துப் போனார்கள். ஊரில் உள்ள கோயில்கள் எல்லாவற்றிலும் பூசைகளும், ஆராதனைகளும் நடைபெற்றன. விக்னேஸ்வரமூர்த்திக்கு உடனடியாக ஏற்ற இரத்தம் தேவைப்பட்டது. ஊரில் உள்ள அனைவரும் தத்தமது இரத்தத்தை எடுக்கும்படி மருத்துவமனையில் குவிந்தனர். மருத்துவமனையில் வேலை செய்யும் மருத்துவர்கள், ஊழியர்கள் போட்டிபோட்டு இரத்தம் கொடுத்தனர்.

நகரில் உள்ள பிரபல மருத்துவர்களெல்லாம் விக்னேஸ்வரமூர்த்தி அனுமதித்திருக்கும் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தனர். வெளிநாட்டில் இருந்து மருந்துகள் வரவழைக்கப்பட்டன. வெளிநாட்டில் வேலை செய்யும் விக்னேஸ்வரமூர்த்தியின் மாணவர்கள் உடனடியாக நாடு திரும்பினர்.

அந்த ஊர்மக்கள் மூன்று நாட்களாக அவ்வூர் ஆலயத்தில் ஒன்றுகூடி இருந்தனர். அவர்கள் மூன்று நாட்களாக அங்கு கூடி இருந்து விக்னேஸ்வரமூர்த்தியின் உடல் நலம் தேறப் பிராத்தித்தனர். அவர் கண் விழித்த பின்புதான் தாம் ஆகாரமருந்துவதாக மக்கள் எல்லோரும் சபதமெடுத்திருந்தனர்.

பத்திரிகையில் விக்னேஸ்வரமூர்த்தியின் விபத்துப்பற்றி வெளிவந்த செய்தியை வாசித்த சின்னராசன் பதைபதைத்துப் போனான். குடிபோதையில் விபத்துக்குள்ளான விக்னேஸ்வரமூர்த்தியை காப்பாற்றாமல் விட்டுவிட்டு வந்ததை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவன் அவரிடம் தான் கல்வி கற்றான். அவனது பிள்ளைகளும் அவரிடம் தான் கல்வி கற்கிறார்கள். அவன் பலமாக

குழறியழுதபடி மருத்துவமனைக்குச் சென்று விக்னேஸ்வரமூர்த்தியின் கால்களில் வீழ்ந்து வணங்கிக் கதறினான்.

நான்காவது நாள் விக்னேஸ்வரமூர்த்தி கண்விழித்தார். எனினும் அவரால் பேசமுடியவில்லை. அவரைப் பார்ப்பதற்கு மக்களும், மாணவர்களும் துடியாய்த் துடித்தனர். மருத்துவமனை நிர்வாகம் மக்களின் உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாது திணறியது.

பதினைந்து தினங்கள் விக்னேஸ்வரமூர்த்தி மருத்துவமனையில் தங்கியிருந்தார். அப்பதினைந்து தினங்களும் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்த விக்னேஸ்வரமூர்த்தியைப் பராமரிக்க பலர் போட்டி போட்டனர்.

விக்னேஸ்வரமூர்த்தியின் தேகநலன் வேண்டி எல்லா ஆலயங்களிலும் பிரார்த்தனைகளும், அன்னதானங்களும் நடைபெற்றன. விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்த சின்னராசன் அவரின் காலைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதான். ‘‘ஐயா அளவுக்கதிகமாகக் குடித்துவிட்டு நான் வாகனமோட்டியதால் தான் உங்களுக்கு இந்த விபரீதம் ஏற்பட்டது. தெய்வம் போன்ற உங்களுக்கு என்னால் ஏற்பட்ட துன்பத்தை என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இனிமேல் நான் குடிக்கமாட்டன்’’ என்று அழுதான்.

மூன்று மாதகாலம் விக்னேஸ்வரமூர்த்தி வீட்டில் தங்கியிருந்து ஓய்வெடுத்தார். விபத்துக்குப் பின்பு விக்னேஸ்வரமூர்த்தியால் வேலை செய்ய முடியவில்லை. அதனால் ஓய்வு பெற விரும்பினார். பெற்றோர்களும் அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் அவரை ஓய்வெடுக்க வேண்டாமென்றும், அப்பாடசாலைக்கு வந்து அவரது ஆசனத்தில் அமர்ந்திருந்தாலே பாடசாலை நல்லமுறையில் நடைபெறும் என்றும் கூறினர். அதை ஏற்க விக்னேஸ்வரமூர்த்தி மறுத்தார். வேலை செய்யாமல் சம்பளம் பெற அவருக்கு விருப்பமில்லை.

ஆதவன் அமெரிக்காவில் மருத்துவராகப் பணிபுரியும் விக்னேஸ்வரமூர்த்தியின் மாணவன். அவன் அமெரிக்காவில் இருந்து வந்து அவரின் உடலைப் பரிசீலித்தான்.

‘‘ஐயா நீங்கள் அமெரிக்காவுக்கு வந்தால் எல்லாம் சுகமாகும். வாருங்கள்’’ என்று அழைத்துச் சென்றான்.

அமெரிக்காவுக்குச் சென்ற விக்னேஸ்வரமூர்த்தி மூன்று மாதம் அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெற்றார். அவரது உடல்நிலை தேறியது. மூன்று மாதங்களின் பின் சுகதேகியாக ஊர் திரும்பிய

விக்னேஸ்வரமூர்த்தி பாடசாலையின் பொறுப்பை ஏற்றக்கொண்டார். மக்கள் எல்லோரும் மகிழ்ந்தனர்.

114. தக்கார் தகவிலர் எனபது அவரவர்

எச்சத்தால் காணப் படும்.

நடுவு நிலைமை உடையவரையும் நடுவு நிலைமை இல்லாதவரையும் அவரின் வழிவந்தோரைக் கொண்டு கண்டுகொள்ளலாம்.

அணிகலம்

விக்னேஸ்வரமூர்த்தியின் நெருங்கிய உறவினன் வாதவூரன். வாதவூரனுக்கு ஏழு பிள்ளைகள். ஆறு பிள்ளைகள் வெளிநாடுகளில் வசிக்கிறார்கள். ஏழாவது மகன் வினோதன். ஆறுபிள்ளைகளும் வெளிநாட்டுக்குச் சென்றதால் ஏராளமான பணத்தை தமது தந்தையான வாதவூரனுக்கு அனுப்பிக்கொண்டிருந்தனர். வாதவூரனுக்கு எண்பது வயது. நடப்பதற்கே சிரமப்பட்டார். அதனால் வெளிநாட்டில் இருக்கும் தனது பிள்ளைகள் அனுப்பும் பணத்தை விக்னேஸ்வரமூர்த்தியின் பொறுப்பில் விட்டிருந்தார். ஏராளமான பணம் புழங்கியதால் விநோதனுக்கு பல கெட்ட நண்பர்களின் தொடர்பு ஏற்பட்டது. அதனால் அவன் மதுபானம் குடிக்கத் தொடங்கினான். ஆரம்பத்தில் வினோதனது தீய செயல்கள் வீட்டுக்கு தெரிய வரவில்லை. காலப்போக்கில் அவனது அட்டகாசங்கள் ஊரில் அதிகரித்தன. அதனால் கிராமத்தவர்கள் வாதவூரனிடம் முறையிட்டனர். வாதவூரன் அவனை அழைத்து அன்போடு சொன்னார், “விநோதா உனது செயல்களைப் பற்றி ஊரவர்கள் அடிக்கடி என்னிடம் வந்து சொல்கின்றனர். நான் கண்டித்துச் சொல்லக்கூடிய வயதில் நீ இல்லை. வளர்ந்துவிட்டாய். உலகைப் புரிந்து வாழக் கற்றுக்கொள். நாம் ஊரில் மதிப்போடு வாழ்ந்தவர்கள். ஒரு குடும்பத்தில் ஒருவன் கெட்டவனாக இருந்தால் அந்தக் குடும்பத்திற்கு நீங்காத அவமானம் ஏற்படும். குடிப்பதே பாவமான செயல். குடித்துவிட்டு அட்டூழியங்கள் புரிந்தால் பழியோடு அவமானமும் சேரும். அதனால் கெட்ட நண்பர்களின் சகவாசத்தை விட்டுவிடு” என்றார்.

விநோதன் தந்தையின் புத்திமதிகளைக் கேட்கவில்லை. வயது சென்றமையாலும் நோயின் தாக்கத்தாலும் வாதவூரன்

மனவருத்தத்துடன் வாழ்ந்து வந்தார். விக்னேஸ்வரமூர்த்தியிடம் விநோதன் படித்தவன். அவரை மதிப்பவன். சிவசுந்தரமூர்த்திக்கு எப்போதும் விக்னேஸ்வரமூர்த்தி மீது ஆத்திரம். அவர் நினைத்திருந்தால் தனது மகனை யாருக்கும் தெரியாது சேர்த்திருக்கலாம் என்று நினைத்தார். விக்னேஸ்வரமூர்த்தியின் பாடசாலைச் செயற்பாடுகளைப் பற்றி யாரும் கேள்வி கேட்பதில்லை. அவர் எதைச் செய்தாலும் நியாயத்துடன் நடுவுநிலமை தவறாது தான் செய்வார் என்ற நம்பிக்கை ஊர்மக்கள் முழுப்பேரிற்கும் இருந்தது. அதனால் ஓரிரு தப்பான செயல்களைச் செய்தாலும் அவை வெளியே வரமாட்டாது என்று சிவசுந்தரமூர்த்தி நினைத்தார்.

விக்னேஸ்வரமூர்த்தி தனது மகனை பாடசாலையில் சேர்க்காததால் பட்டணத்தில் உள்ள பிரபல்யம் இல்லாத ஒரு பாடசாலையிலேயே சேர்க்க முடிந்தது. அக்கோபம் ஆத்திரமாக மாறியது. அவரை வஞ்சம் தீர்க்க தகுந்த தருணம் வரும்வரை காத்திருந்தார். முன்பு அப்பாடசாலையில் இருந்த அதிபர்கள் பாடசாலை தொடங்கி ஆறுமாதங்கள் சென்ற பின்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களைக் கூடச் சேர்த்தனர். ‘‘இவர் தான் புதிதாக சட்டத்தைத் தூக்கி பிடிக்கிறார்’’ என பலருக்கு அவர் கூறுவதுண்டு.

விக்னேஸ்வரமூர்த்தியைப் பழிவாங்கும் நோக்குடன் வினோதனுடனும் அவனது குடிகார நண்பர்களுடனும் நட்புப் பூண்டார் சிவசுந்தரமூர்த்தி. வேண்டுமென்றே கூடுதலாக மதுபானத்தைக் கொடுத்தார். பின் ‘‘விநோதா நீ என்ன சின்னப்பிள்ளையே... கணக்குவழக்குப் பார்க்க உனக்குத் தெரியாதே... ஏன் கொண்ணைமார் வெளிநாடுகளில் இருந்து பணத்தை விக்னேஸ்வரமூாத்தியின் பெயருக்கு அனுப்ப வேண்டும். உன்ரை பேருக்கு அனுப்பலாம் தானே. அனுப்புற காசு எவ்வளவு என்று தெரியாது. அவர் கொடுக்கிறத்தைத் தானே கொப்பர் வாங்கிறார். ஆருக்குத் தான் காசாசை இல்லை. உவற்ரை சம்பளத்திலை உப்பிடி ஆடம்பரமாய் வாழ முடியுமே... தான் ஒழுக்கமானவனெண்டு சனங்களுக்குக் காட்டிக்கொண்டு நல்லாய்க் காசடிக்கிறார். வெளிநாடுகளிலை இருந்து பள்ளிக்கூடத்திற்கு எவ்வளவு காசு வரூது... இதெல்லாம் ஆர் கணக்குப் பார்க்கினை. தனக்குச் சாதகமான ஆட்களைத் தான் சங்கங்களிலை வைச்சிருக்கிறார். அவையும் சலுகைகளுக்காக அவரை எதிர்த்துக் கதைக்க மாட்டினை....’’

விநோதனுக்கு இவ்வளவு நாட்களாகவும் தோன்றாத எண்ணம் அப்பொழுது தோன்றியது. தனது சகோதரர்கள் தனது பெயருக்கு பணத்தை அனுப்பினால் நல்லதென்று நினைத்தான். ‘‘இப்பவே நான் போய் அப்பாவோடை கதைக்கிறன். அதோடை அண்ணைமாருக்கும்

கடிதம் எழுதுறன்...'' என்று கூறிவிட்டு எழுந்து நடந்தான். சிவசுந்தரமூர்த்திக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

மதுமயக்கத்துடன் தள்ளாடியபடி வந்த விநோதன் தகப்பனிடம் சொன்னான் ''அப்பா ஏன் வாத்தியார்ரை பேரிலை அண்ணைமார் காசு அனுப்பீனை. என்ரை பேரிலை அனுப்பினால் என்ன...? அவங்கள் எவ்வளவு அனுப்புறாங்கள் என்று யாருக்குத் தெரியும்... வாத்தியார் தாறத்தை நீங்கள் வாங்கிறது தானே... கணக்குக் கேக்கிறனீங்களே... இப்ப நான் போய்க் கணக்குக் கேக்கிறன்...'' என்று கூறியபடி நடந்தான். வாதவூரன் திகைத்துப் போனார். ''வினோதா போகாதை.... போகாதை...'' என்று பலமாகக் கூறினார். விநோதன் கேட்கவில்லை. அவருக்கு தலையைச் சுற்றியது, நெஞ்சு வலித்தது. ''ஐயோ கடவுளே'' என்று கூறியபடி நிலத்தில் வீழ்ந்தார்.

விக்னேஸ்வரமூர்த்தி பாடசாலையில் வேலையாக இருந்தார். விநோதன் தள்ளாடியபடி வந்து அலுவலகத்திற்கு முற்புறமாக இருந்த நாற்காலியில் அமர்ந்தான். ''வாத்தியார்... வாத்தியார்...''

''என்ன விநோதன்... குடிச்சிட்டு இஞ்சை ஏன் வந்தனீ...'' அதட்டினார்.

''காசுக் கணக்குப் பார்க்க வேணும்...''

''பிறகு வீட்டை வா...''

''சரி... நான் பிறகு வீட்டை வாறன். குடுக்கல் வாங்கல் விசயங்களை வீட்டிலை தான் கதைக்க வேணும்... அப்பதான் ஆதாரங்களுடன் கதைக்கலாம். இல்லாட்டில் நீங்கள் சொல்லுறத்தைத் தானே நான் கேட்க வேண்டும்'' என்றவாறு சென்றான்.

விக்னேஸ்வரமூர்த்திக்கு அவமானமாக இருந்தது. அவர் எதுகும் பேசவில்லை.

மயங்கி விழுந்த வாதவூரனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். வழியிலேயே அவர் இறந்துவிட்டார். மரணவீட்டுக்கான செலவுகளை விக்னேஸ்வரமூர்த்தியே செலவு செய்தார். அன்று இரவு விக்னேஸ்வரமூர்த்தி கணக்கைத் தீர்த்தார். விக்னேஸ்வரமூர்த்தியிடம் ஒவ்வொரு முறையும் பணம் வாங்கும் பொழுது வாதவூரன் விநோதனுக்கும் மனைவிக்கும் எவ்வளவு பணம் வாங்குவதென்று கூறுவதுண்டு. இரண்டு வாரங்களுக்கு முன்பு ஐம்பதினாயிரம் ரூபா அவர் வாங்கியிருந்தார். அதைப்பற்றி அவர் விநோதனுக்கும் மனைவிக்கும் கூறவில்லை. அதனால் அந்த ஐம்பதினாயிரம் ரூபாவை விக்னேஸ்வரமூர்த்தி கொடுக்கவில்லை என்று விநோதன் கூறினான்.

அவனது மனைவியும் விக்னேஸ்வரமூர்த்தி கொடுத்திருந்தால் மாமனார் தனக்குச் சொல்லியிருப்பார் என்றார். எல்லோரும் விநோதனின் மனைவி சொல்வதையே நம்பினர்.

விக்னேஸ்வரமூர்த்திக்கு அவமானமாக இருந்தது. காசைக் கொடுத்துவிட்டு கள்ளப்பெயர் பெற்றுவிட்டேனே என்று வருந்தினார். ஊரில் உள்ள பெரிய மனிதர்கள் விக்னேஸ்வரமூர்த்தி ஐம்பதினாயிரம் ரூபா கொடுக்கத்தான் வேண்டும் என்றனர். அதன்படி விக்னேஸ்வரமூர்த்தி ஐம்பதினாயிரம் ரூபா கொடுத்தார். அவரால் பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை. மாணவர்களும் ஆசிரியர்களும் ஊரவர்களும் தன்னைப் பார்த்து பரிகசிப்பது போன்ற உணர்வு அவரின் மனதில் காட்சியாகத் தெரிந்தது. பைத்தியம் பிடித்தவரைப் போல் வீட்டில் அடைந்து கிடந்தார். பலர் வந்து வற்புறுத்திக் கேட்டும் அவர் பாடசாலைக்குச் செல்லவில்லை.

பதினைந்து தினங்கள் கழிந்தன. வாதவூரனின் ஆறு பிள்ளைகளும் வெளிநாட்டில் இருந்து வந்தனர். அவர்கள் அனைவரும் தமது வீட்டுக்குச் செல்லாது நேரே விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றனர்.

சிவசுந்தரமூர்த்தியும் ஊரவரும் அவர்கள் கணக்குக் கேட்பதற்காகத்தான் அங்கே செல்கிறார்களென நினைத்தனர் ‘‘வளமாக அகப்பட்டு விட்டார். தகப்பனின் உடலைப் பதப்படுத்தி வைச்சிருக்கினை. தகப்பன்ரை உடலைப் பாராமல் அங்கை போனது கணக்குக் கேட்கத் தான். எவ்வளவு காசை மடக்கினானோ ஆருக்குத் தெரியும். இப்ப எல்லாக் குட்டும் வெளிக்கிடப் போகுது’’ என்றார் சிவசுந்தரமூர்த்தி.

விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்ற வாதவூரனின் புதல்வர்கள் விக்னேஸ்வரமூர்த்தியுடன் கதைத்துக்கொண்டு வந்தார்கள். விக்னேஸ்வரமூர்த்தியின் முகத்தில் என்றுமில்லாத பிரகாசம்.

வாதவூரனின் வீட்டில் ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர். அவரின் மூத்த மகன் மதிவதனன் கடிதம் ஒன்றை எடுத்து வாசித்தான். ‘‘சண்முகம் சிவசுந்தரமூர்த்தி ஆகிய நான் வேலாயுதபிள்ளை வாதவூரனிடம் கடனாக பொறுப்புக்கள் ஏதுமின்றி ஐம்பதினாயிரம் ரூபாவைப் பெற்றுக்கொண்டேன். இப்பணத்தை வட்டியின்றி ஒருவருட காலத்துக்குள் ஒப்படைப்பேன் என இத்தால் கையொப்பமிடுகிறேன்.’’

‘‘காசை வாங்கிவிட்டு ஏனையா ஏமாற்று வேலை செய்தீர். அவர் கடவுள். எமது ஆசான். அவர் தவறு செய்யமாட்டார் என்று நான் நம்புறன். அதோடு இந்த ஊரில் உள்ள பலரும் நம்பீனை. உன்னால் நேர்மையாக வாழமுடியாவிட்டால் பரவாயில்லை. நேர்மையாக வாழ்பவனை குற்றம் சொல்வது பாவம். அந்தப்பழி உன்னுடைய

பிறப்புக்கள் தோறும் தொடர்ந்து வரும்'' என்று நிறுத்திய மதிவதனன் மூச்சை விட்டுவிட்டுச் சொன்னான் ''அப்பா எழுதிய கடிதத்தை வாசித்துக் காட்டுகிறேன். கேளுங்கோ, அன்பான மகன், மருமகன், பேரக்குஞ்சுகள் அனைவர்க்கும் நான் நலம். சிவசுந்தரமூர்த்தி என்னிடம் ஐம்பதினாயிரம் ரூபா காசு கேட்டார். அதை ஒருவருக்கும் தெரியாமல் தரட்டாம். தான் ஊரில் மதிப்புடன் வாழ்வதால் கடன் வாங்கினால் யாரும் மதிக்கமாட்டார்கள் என்கிறான். அவன் ஊரில் மதிப்பாக வாழ்பவன். மறுக்க முடியவில்லை. அதனால் ஊரில் யாருக்கும் சொல்லாமல் பணத்தை வாத்தியாரிடம் வாங்கிக் கொடுக்கிறேன். பொறுப்பாக கடிதம் தந்துள்ளான். என்னால் இங்கு வைத்து அதைப் பாதுகாக்க முடியாது. அவன் பணத்தைத் திருப்பித் தரும்போது கொடுத்தால் சரி. அந்த நேரம் நான் இருப்பனோ தெரியாது. கடிதத்தை கவனமாக வைத்திருக்கவும். இந்தக் காலத்தில் யாரையும் நம்ப முடியாது. எம்மால் வாத்தியாருக்கு கெட்ட பெயர் ஏற்படக்கூடாது. வாத்தியாரோடு எப்பொழுதும் முரண்படும் சிவசுந்தரமூர்த்தி ஏதாவது திட்டத்துடன் தான் பணத்தை வாங்கினானோ தெரியவில்லை....'' எப்படி அப்பாவின்ரை கருத்து.

பலரின் முன் அவமானப்பட்டு தலைகுனிந்தான் சிவசுந்தரமூர்த்தி. வாதவூரனின் பாதங்களைத் தொட்டு வணங்கினார் விக்னேஸ்வரமூர்த்தி. அவமானத்தால் குறுகியிருந்த அவரது உடல் நீண்டு பொலிந்தது.

115. கேடும் பெருக்கமும் இல்லல்ல; நெஞ்சத்துக்

கோடாமை சான்றோர்க்கு அணி.

கேடும் ஆக்கமும் ஒருவரின் வாழ்வில் இல்லாதவை அல்ல. கேடும் ஆக்கமும் வந்த வேளையிலும் நடுவு நிலைமை தவறாமல் இருத்தலே சான்றோர்க்கு அழகு.

கெடுவது உறுதி

ஆயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் மதிவதனன் வாசித்த அக்கடிதத்தை அவ்வூர்ப் பெரியவரான தணிகாசலத்திடம் கொடுத்தான் மதிவதனன். தணிகாசலம் விநோதனை அழைத்து அக்கடிதத்தைக் கொத்துவிட்டுச் சொன்னார்; ''இக்கடிதம் உனது அப்பாதான் எழுதினாரா என்று பார். பின் உனது சகோதரர்கள் சென்றபின்

அவர்கள் தான் விக்னேஸ்வரமூர்த்தியின் மேல் கொண்ட அன்பின் காரணமாக எழுதி வாசித்திருப்பார்கள் என்றும் சொல்வாய்...''

விநோதன் விம்மி விம்மி அழுதான். ''நான் குடிகாரன் தான். கூடாதவன் தான். என்றாலும் வாத்தியாரில் அளவுக்கதிகமான அன்பும் பாசமும் மரியாதையும் வைத்திருந்தேன்....''

அவனைப் பேச விடாது ஆத்திரத்துடன் குறுக்கிட்டான் மதிவதனன் ''அதைத்தான் செயலிலை காட்டியிருக்கிறாய்... நாங்கள் வெளிநாடுகளிலை எவ்வளவு கஸ்ரப்படுகிறமென்று உங்களுக்குத் தெரியுமா...? இந்த ஊரிலை வாழ முடியாதென்றதாலை தான் நாங்கள் வெளிக்கிட்டனாங்கள். அங்கை இரவும் பகலும் இரத்தத்தைப் பிழிஞ்சு தான் பணம் சம்பாதித்து இஞ்சை அனுப்புறம். நீங்கள் என்னடாவென்றால் நாங்கள் அங்கை சும்மாயிருக்க மரம்தான் பணத்தைக் காய்க்குதென்று நினைத்து செலவு செய்யிறியள். நாங்கள் இஞ்சை மாதம் இருபத்தையாயிரம் ரூபா அனுப்புறதாக இருந்தால் ஒருநேரச் சாப்பாட்டை விட்டால் தான் அனுப்பலாம். நீங்கள் என்னடாவென்றால் நாங்கள் கஸ்ரப்பட்டு அனுப்புற பணத்தை குடிச்சழிக்கிறியள். அதைத்தான் மன்னிக்கலாம். எங்கடை ஆசிரியரை குறை சொல்லுறத்தை மன்னிக்கேலாது. அவர் கடவுளடா... கடவுள் நேரிலை வந்து பக்தர்களுக்கு உதவி செய்யமாட்டார். மானிட உருவில் வந்து தான் உதவி செய்வாரென்று நான் படித்திருக்கிறன். எங்கடை ஊரில் கோயில் கொண்டிருக்கிற நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி தானடா விக்னேஸ்வரமூர்த்தி என்ற பெயரிலை இஞ்சை வந்து பிறந்திருக்கிறார்...'' பெருங்குரலெடுத்து அழுதான் மதிவதனன்.

''நான் குடிச்சாலும் வாத்தியாரைப் பற்றிக் கதைக்கிறேல்லை. சிவசுந்தரமூர்த்தி தான் என்னைக் கெடுத்தவன். நான் ஆர் சொன்னாலும் கேட்கமாட்டன். அண்டைக்கி அவன் திட்டமிட்டுத்தான் எனக்குக் கூடுதலாக சாராயம் தந்துள்ளான். நான் ஆராயாமல் வெறி மயக்கத்திலை தவறாய் நடந்திட்டன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ வாத்தியார்...'' விக்னேஸ்வரமூர்த்தியின் காலைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதான் விநோதன்.

''உனக்கு மன்னிப்பே இல்லை. நீ இப்ப குடிக்கமாட்டனெண்டு அழுவாய். பின்நேரம் குடிப்பாய்... உன்னைப்பற்றி எங்களுக்குத் தெரியாதே... உப்பிடி எத்தனை தரம் சத்தியம் பண்ணினனீ... நீ செய்த வேலைக்குத் தண்டனை தரவேணும். இனிமேல் நாங்கள் உனக்கு பணம் அனுப்பமாட்டம். நீ உழைச்சு சீவிச்சுக்கொள். உழைச்சால் தான் உழைப்பின்ரை மகிமை தெரியும். சும்மாயிருந்து சாப்பிட்டால் தேவையில்லாத கற்பனைகள் மனதில் உருவாகும். நீதான் அப்பாவைச் சாக்கொண்டது. அண்டைக்கி நீ அப்பிடி நடக்காட்டில் அப்பா இன்னும் பத்து வருடம் வாழ்ந்திருப்பர்....''

அப்பிடி மதிவதனன் சொன்னதும் விநோதனுக்கு அடக்கமுடியாத சினம் உண்டானது. ‘‘உன்னைக் கொல்லாமல் விடமாட்டன்...’’ என்று பலமாகக் கத்தியபடி வீட்டின் உள்ளே ஓடிச்சென்று பெரியதொரு வெட்டுக்கத்தியை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். மதிவதனன் தான் அப்பிடிச் சொன்னதற்காகத் தான் தன்னை வெட்ட வருகிறாரென நினைத்து ‘‘வெட்டடா... அப்பாவோடை சேர்ந்து நானும் போறன்...’’ என்று கத்தியபடி ஓடிவந்தான்.

விநோதன் சிவசுந்தரமூர்த்தி இருக்கும் இடத்தை நோக்கி ஓடினான். பலர் ஓடிச்சென்று விநோதனை கட்டிப்பிடித்தனர். ‘‘டேய் சிவசுந்தரமூர்த்தி... நான் தெய்வமாய் நினைச்ச மனுசனை உன்ரை சுயநல நோக்குக்காக பயன்படுத்தி இவ்வளவு கொடுமையை உண்டாக்கிப் போட்டாய். உன்னை உயிரோடை விடமாட்டன். இண்டைக்கில்லாட்டிலும் எண்டைக்கோ ஒரு நாளைக்கி உன்னை வெட்டிச் சரிக்காமல் விடமாட்டன்.’’

‘‘சிவசுந்தரமூர்த்தி நீ இஞ்சை நிக்கிறது சரியில்லை’’ என்று சொன்ன தணிகாசலம் அவரை வெளியே அழைத்துக்கொண்டு வந்தார்.

‘‘விக்னேஸ்வரமூர்த்தி நேர்மையான மனிசன். செய்யும் தொழில் தான் தெய்வமென நினைத்து கண்ணியமாகத் தொழில் செய்பவர். அவரில் தனிப்பட்ட முறையில் கோபம் இருந்தாலும் இப்படிச் செயற்பட உனக்கு எப்படி மனம் வந்தது. தற்செயலாக அகப்பட்டால் என்னாகுமென்று நினைத்தியா...?’’ தணிகாசலம் கேட்டார்.

‘‘அகப்பட்டால் மானம் மரியாதை எல்லாவற்றையும் இழப்பன் என்று தெரியும். நான் கொடுத்த கடிதத்தை விநோதனைக் கொண்டு எல்லா இடமும் தேடிப் பார்த்தனான், இல்லை என்று சொன்னான். கொடுக்கல் வாங்கல்களைப் பற்றி ஏதாவது சொன்னவரோ என்று கேட்டுப்பார்த்தன். எல்லாருடைய கொடுக்கல் வாங்கல்களையும் பற்றிச் சொல்லியிருந்தார். என்னுடையதைப் பற்றிச் சொல்லேல்லை...’’ பெருமூச்சு விட்டுவிட்டு தொடர்ந்து சொன்னார். ‘‘எனக்கு பணத்தேவை இருக்கேல்லை. என்னுடைய மகனை பாடசாலையில் சேர்க்காதத்தாலை தான் திட்டமிட்டு எல்லாவற்றையும் செய்தனான். எல்லாம் சரிவந்திட்டுது என்று நினைச்சன். கிழவன் இப்பிடிச் செய்யுமென்று நான் நினைக்கேல்லை...’’

‘‘எமக்கு மேலை ஒருவன் இருக்கிறான். அவன் நினைக்கிறது தான் நடக்கும். வரலாற்று ரீதியாக நீ எடுத்துப்பார். ஒழுக்கமாய் கண்ணியமாய் நேர்மையாக வாழ்றவைக்கு சோதனைகள் கஸ்டங்கள் வரும். ஆனால் அவையெல்லாம் நல்லபடி நீங்கிவிடும். அதமங்கள்

அட்டூழியங்கள் செய்யிறவை அவ்வப்போது நல்ல முறையிலை வாழ்ந்தாலும் பிற்காலத்திலை பெருங் கஸ்டங்களுக்குள்ளாவினை.''

சிவசுந்தரமூர்த்தி மனவருத்தத்துடன் நடந்துகொண்டிருந்தார்.

116. கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின்.

நடுவு நிலைமையில் இருந்து நீங்கி நின்று தவறு செய்வோன் ''நான் இச்செயலால் கெடப் போகிறேன்'' என்று அறிதல் வேண்டும்.

வறுமை

கணபதி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கச் செயலாளர் தணிகாசலம். ஊரில் மிகவும் நல்ல மனிதர் எனப் போற்றப்படுபவர். அப்பாடசாலையின் அதிபரும் பழைய மாணவர் சங்க தலைவருமான விக்னேஸ்வரமூர்த்திக்கு உறுதுணையாக இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்காக முன்னின்று உழைப்பவர். அவர் பெரிதாகப் படிக்கவில்லை. அவரது குடும்பத்தில் நிலவிய வறுமை காரணமாக பட்டணத்தில் உள்ள ஒரு வியாபாரத் ஸ்தாபனத்தில் சிறுவயதிலேயே வேலைக்குச் சேர்ந்தவர். கணபதி மத்திய மகாவித்தியாலயம் ஐம்பது வருடங்களுக்கு முன்பு நூற்றி இருபது பிள்ளைகளுடன் கணபதி வித்தியாலயம் என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருந்த போது விக்னேஸ்வரமூர்த்தியுடன் ஐந்தாம் வகுப்புப் படித்தவர். அவர் ஐந்தாம் வகுப்புப் படிக்கும் போது அவரது தந்தையார் பாம்பு தீண்டி மரணமானார். அதன் பின்புதான் அவருக்கு ஒரு தம்பி பிறந்தான். ஐவரோடு இருந்த குடும்பம் ஆறாவது உறுப்பினரைப் பெற்றபோது உருக்குலைந்துவிட்டது. ஏழ்மைநிலை காரணமாக ஐந்தாம் வகுப்புடன் பாடசாலையை விட்ட தணிகாசலம் பொறுப்புடன் நடந்து தனது சகோதரர்களை நல்ல முறையில் கற்பித்து நல்ல நல்ல தொழில்களில் அமர்த்தினார். அதன்பின் அவர் திருமணம் செய்யும் போது நாற்பது வயது. இப்பொழுது இரண்டு பிள்ளைகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தந்தையை இழந்ததுடன் வந்த கஸ்டம் இன்றும் தீர்ந்தபாடில்லை. பட்டணத்திற்கு சென்று வருவது கஸ்டம் என்பதால் கடைத்தொழிலை விட்டுவிட்டார். கடையில் வேலை செய்யும் போது

கழிக்கப்பட்ட சேமலாப நிதியை முதலாகக் கொண்டு மாடு வளர்ப்பிலும் கோழிவளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளார். அடுத்தவர்களிடம் இரக்கப் போகாதளவிற்கு ஓரளவு வருமானம் வந்தபோதும் பிள்ளைகளின் பாடசாலைத் தேவைகளின் போது அல்லாடிப் போவார். அச்சமயங்களில் அவரது நல்ல உறவினர்களிடமும் நண்பர்களிடமும் கடன்படுவார். கடன்பட்ட பணத்தை குறித்த தவணைக்குள் எப்படியாவது செலுத்திவிடுவார். குறிக்கப்பட்ட தவணைக்குள் பணத்தைக் கொடுக்க முடியாவிட்டால் கடன்வாங்கியவரிடம் சென்று தனது நிலமையை விளக்கிக்கூறி தவணை கேட்பார். அவரது நல்ல பண்புகளால் ஊரில் உள்ள எவரும் அவருக்கு மதிப்பளிப்பார்கள்.

அவர் படிக்காவிட்டாலும் அறிவு நிறைந்தவர். நீதி நூல்களையும் இதிகாச புராணங்களையும் காப்பியங்கள் பலவற்றையும் கற்றமையால் எல்லா விடயங்களிலும் அறிவு நிரம்பியவராகக் காணப்பட்டார்.

பத்து வருடங்களுக்கு முன் மழைக்குக் கூட ஒதுங்காத அவ்வூர்ப் பிரமுகர்கள் பலர் விக்னேஸ்வரமூர்த்தி அப்பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டு அப்பாடசாலை பாரிய வளர்ச்சி கண்ட பின்பு அப்பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் போன்றவற்றில் உறுப்பினர்களாகுவதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்தனர். அப்பாடசாலைச் சங்கங்களில் நிர்வாகசபை உறப்பினர்கள் ஆவதற்கு ஊரில் உள்ள பிரபல்யமானவர்கள் பலர் போட்டியிட்டனர். அப்பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கத்தில் செயலாளர் பதவிக்கு பலத்த போட்டி நடைபெறும்.

தணிகாசலம் மிகவும் நீதியானவர். விக்னேஸ்வரமூர்த்தி அவரின் மீது நம்பிக்கை வைத்திருந்தார். அதன் காரணமாக பாடசாலையின் முக்கியமான நிர்வாக விடயங்கள் பலவற்றை அவருக்கும் கூறுவார். அத்துடன் அவரிடம் ஆலோசனையும் கேட்பார். அதனால் பாடசாலையில் நடைபெறும் பல விடயங்கள் தணிகாசலம் மூலமாக ஊர் முழுவதற்கும் தெரியவரும். பாடசாலை அனுமதி, நன்கொடைகள், நிதி ஒதுக்கீடுகள் போன்றவற்றை விக்னேஸ்வரமூர்த்தி ஒளிவுமறைவு இன்றி தணிகாசலத்திற்கு கூறுவார்.

அந்த வருடம் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டத்திற்கான நாள் குறிக்கப்பட்டவுடன் செயலாளர் பதவிக்கு பலர் போட்டியிட முன்வந்தனர். அவ்வூர் பிரதேசச் செயலரான பூபாலசிங்கம், கணபதி மத்திய மகா வித்தியாலய ஆசிரியரான இராமநாதன். அவ்வூரின் சமாதான நீதிவானும் இளைப்பாறிய அதிபருமான பஞ்சாட்சரம்; அப்பகுதி கிராமசேவகரான குமாரசாமி போன்ற பலர் அப்பதவிக்காக நியமனப் பத்திரம் தாக்கல் செய்திருந்தனர்.

பூபாலசிங்கம் அப்பாடசாலைக்கென பல கட்டிடங்களை தனது செல்வாக்கு மூலம் ஒதுக்கீடு செய்து கட்டுவித்தார். அத்துடன்

அவ்வப்போது ஆயிரக் கணக்கில் பணம் கொடுப்பவர். இராமநாதன் மிகச் சிறந்த ஆசிரியர். உயர்தர வகுப்பிற்கு இரசாயனவியல் கற்பிப்பவர். அத்துடன் தனியார் கல்வி நிறுவனங்களிலும் கற்பித்து பெரும் தொகைப் பணத்தை உழைப்பவர். பஞ்சாட்சரம் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் கற்பித்து பின் வேறொரு பாடசாலைக்கு அதிபராக நியமனம் பெற்றுச் சென்றார். அவரது பிள்ளைகள் நான்கு பேர் வெளிநாட்டில் இருப்பதால் பாடசாலையில் இருந்து நிதி வசூலிக்க வரும்போது பார்த்துப் பாராமல் கொடுப்பார். குமாரசாமி கிராமசேவகராக இருப்பதால் மக்கள் எல்லோரும் சேர்ந்து தன்னைத் தான் தெரிவார்கள் என நம்பியிருந்தார். பெரும் பணக்காரர்களும் பாடசாலைக்கு ஆயிரக் கணக்கில் அள்ளிக் கொடுப்பவர்களும் செயலாளர் பதவிக்குப் போட்டியிடுவதால் தணிகாசலம் போட்டியில் இருந்து ஒதுங்கி இருந்தார். அவர் பாடசாலைக்காக சேவை செய்தாரே தவிர ஒரு சதமேதும் நன்கொடையாகக் கொடுத்ததில்லை. பிள்ளைகளுடைய வசதிக்கட்டணத்தைக் கூட ஒழுங்காகக் கட்டியதில்லை. அதனால் செயலாளர் பதவிக்கு போட்டியிடாது ஒதுங்கியிருந்தார்.

தணிகாசலம் போட்டியிடாததை அறிந்த ஊரவர் பலர் நேரில் வந்து வற்புறுத்தி அவரைப் போட்டியிட வைத்தனர். தணிகாசலத்தைத் தவிர போட்டியிட்ட அனைவரும் தம்மைச் செயலாளராகத் தெரிவுசெய்யும்படி வீடு வீடாகச் சென்று மக்களிடம் மன்றாடிக் கேட்டனர். தணிகாசலம் வீட்டை விட்டு வெளிக்கிடவே இல்லை.

பொதுத்தேர்தல் அன்று அவர் பாடசாலைக்குச் சென்று தனது வாக்கை அளித்துவிட்டு வந்தார். அன்று மாலை தேர்தல் முடிவு வெளியிடப்பட்டது. நூற்றுக்கும் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் தணிகாசலம் வெற்றி பெற்றார்.

117. கெடுவாக வையாது உலகம் நடுவாக

நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

நடுவு நிலையாக நிலைத்து நின்று அறநெறியில் வாழ்கின்றவனின் வறுமையை உலகினர் வறுமையாகக் கருதார்.

சான்றோர்க்கு அணி

கணபதி மத்திய மகா வித்தியாலயத்திற்கு சிறிது தூரத்தில் கோயில் கொண்டிருப்பவர் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி. அக்கோயிலின் ஸ்தாபகர் வைத்திலிங்கம். வைத்திலிங்கம் திருமணமாகி பல வருடங்கள் பிள்ளைப்பாக்கியம் இல்லாததால் மிகவும் வருந்தினார். ஒருநாள் பிள்ளையார் கனவில் தோன்றி அவ்வூரில் பிள்ளையார் கோவில் இல்லையென்றும் பிள்ளையார் கோயில் ஒன்றைக்கட்டி வணங்கினால் உனக்கு புத்திர சந்தானம் தோன்றும் என்றும் கூறினார். அதனால் மகிழ்வுற்ற வைத்திலிங்கம் தனது தந்தையாரான ஸ்ரீகணபதியின் பெயரில் பிள்ளையார் கோயில் ஒன்றைக்கட்டி கும்பாபிஷேகம் செய்தார். நாவலடிக் கிராமத்தில் கோயில் கட்டப்பட்டதால் அதற்கு நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயம் எனப் பெயரிட்டார். அதன்பின் அவருக்கு ஓர் ஆண் பிள்ளையும் ஐந்து பெண் பிள்ளைகளும் பிறந்தனர்.

தனது பிள்ளைகள் கற்பதற்காக நெடுந்தூரம் நடந்து செல்லவேண்டி இருந்ததால் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்திற்கு அருகே கணபதி வித்தியாலயம் என்ற பாடசாலையையும் நிறுவினார் வைத்திலிங்கம்.

வைத்திலிங்கத்தின் ஐந்தாவது மகள் காயத்திரிதேவி. அவளது பீட்டப்பிள்ளை கணேசமூர்த்தி. வைத்திலிங்கத்தின் பரம்பரையில் தற்பொழுது நாவலடிக் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவன் கணேசமூர்த்தி. வைத்திலிங்கம் அக்கோயிலைக் கட்டுவித்ததால் அவரது பரம்பரையினரே அக்கோயிலின் தேர்த் திருவிழாவை வருடாவருடம் செய்து வந்தனர்.

ஐந்து வருடங்களுக்கு முன்பு ஊரில் ஏற்பட்ட ஒரு கலவரத்திற்கு காரணகர்த்தா கணேசமூர்த்தியென்று உறுதிப்படுத்தப்பட்டமையால் கணேசமூர்த்தி ஐந்துவருடம் சிறைத் தண்டனை பெற்றான். வைத்திலிங்கத்தின் பரம்பரையினர் எல்லோரும் வெளிநாடுகளில் இருந்ததால் அவர்களுடன் கோயில் நிர்வாகத்தால் தொடர்புகொள்ள முடியவில்லை. கணேசமூர்த்தியின் மனைவியும் பிள்ளைகளும் அவமானத்தால் அவ்வூரை விட்டு வெளியேறி தமது சொந்த ஊருக்குச் சென்றுவிட்டனர். அதனால் அந்த வருட தேர்த் திருவிழா செய்வதற்காக கோயில் நிர்வாகம் சிவசுந்தரமூர்த்தியைத் தெரிவு செய்தது.

வைத்திலிங்கம் குடும்பத்தினரின் விபரத்தைப் பெற்று கோயில் நிர்வாகம் அவர்களுக்குக் கடிதம் எழுதிய போதும் அவர்கள் பதில் போடாமையால் சிவசுந்தரமூர்த்தியே தேர்த் திருவிழாவைச் செய்து வந்தார்.

ஐந்து வருடங்கள் கழிய சிறையில் இருந்து விடுதலை பெற்று வந்த கணேசமூர்த்தி அந்த வருடம் தேர்த் திருவிழாவைச் செய்ய

விரும்பினான். ஆனால் சிவசுந்தரமூர்த்தி விட்டுக்கொடுக்க மறுத்துவிட்டான்.

கோயில் கொடி ஏறுவதற்கு இன்னும் பத்து நாட்களே இருந்தன. கோயிலின் தலைவரான விக்னேஸ்வரமூர்த்தியும் செயலாளரான தணிகாசலமும் பொருளாளரான மயில்வாகனமும் நிர்வாக சபை உறுப்பினர்கள் பதின்நான்கு பேரும் அன்று இரவு கோயில் மண்டபத்தில் கூடினர்.

மயில்வாகனத்திற்கும் நிர்வாகசபை உறுப்பினர்களில் பத்துப் பேருக்கும் கணேசமூர்த்தியுடன் பகை இருந்ததால் ஒன்று சேர்ந்து தேர்த் திருவிழாவை சிவசுந்தரமூர்த்தியே செய்தல் வேண்டும் என்று கூறினர். ஆறு பேர் தேர்த்திருவிழாவை வழக்கமாகச் செய்துவரும் கணேசமூர்த்தியே செய்ய வேண்டுமென்றனர். அதனால் நிர்வாக சபைக்கூட்டத்தில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

‘‘வாத்தியார் நான் உங்களை மதிக்கிறன். பள்ளிக்கூட விசயம் எதுவானாலும் நீங்கள் சொல்லுறபடி நாங்கள் கேட்பம். தயவுசெய்து கோயில் தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்யுங்கோ. செய்யாட்டில் மானம் போயிடும். கணேசமூர்த்தி ஊருக்கு உதவாதவன். உங்களுக்கு எத்தனை தீமை செய்தவன். உங்கடை அப்பா கட்டின மடத்திற்கு தீ வைத்தவன். உங்கடை தம்பியாரோடு பிரச்சினைப்பட்டுக்கொண்டு உங்கடை வீட்டுக்கு கல்லெறிந்தவன். நீங்கள் வேலை முடிந்து வீட்டை வரேக்கை வழிமறிச்சு உங்களுக்கு அடிச்சவன். அப்படியானவனுக்கு நீங்கள் உதவி செய்யலாமா...?’’ பெரிதாகக் கத்தினான் மயில்வாகனம்.

‘‘எனக்கு யார் என்ன தீங்கு செய்தாலும் பரவாயில்லை. நான் மற்றவர்களுக்குத் தீங்கு செய்யமாட்டன். பரம்பரை பரம்பரையாக வைத்திலிங்கம் குடும்பம் தான் தேர்த் திருவிழாவைச் செய்து வருகிறது. கணேசமூர்த்தி சிறை சென்றமையால் தான் நாங்கள் சிவசுந்தரமூர்த்தியைச் செய்யச் சொன்னோம். இப்ப கணேசமூர்த்தி வந்தமையால் அவன் தான் தேர்த் திருவிழாவைச் செய்தல் வேண்டும்.’’

‘‘பரம்பரையை ஏற்றுக்கொள்ள முடியாது. எல்லோருக்கும் சந்தர்ப்பம் கொடுத்தல் வேண்டும். ஐந்து வருடங்களாக வைத்திலிங்கம் பரம்பரையினருக்குக் கடிதம் போட்டும் பதில் வரவில்லை. அத்துடன் கணேசமூர்த்தி கொடியவன். ஊருக்குதவாதவன். அவன் செய்யும் தேர்த் திருவிழாவுக்கு நாங்கள் வந்தாலே பாவம்...’’

வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நூற்றுக் கணக்கானோர் கணேசமூர்த்திக்குத் திருவிழா கொடுக்க வேண்டாமெனக் கூச்சலிட்டனர்.

தணிகாசலம் சொன்னார்; ‘‘நீங்கள் யாரும் வெளிநாட்டில் வாழும் வைத்திலிங்கத்தின் பரம்பரையினருக்குக் கடிதம் போடவில்லை. கோயில் நிர்வாகத்திற்கும் தவறான விலாசங்களையே தந்தீர்கள். அதிபர் விக்னேஸ்வரமூர்த்தி சரியான விலாசத்தை எடுத்து கடிதம் எழுதினார். அதற்கு அவர்கள் பதிற் கடிதம் போட்டார்கள். நீங்கள் தபால் சேவகனுக்கு இலஞ்சம் கொடுத்து அக்கடிதங்களைப் பெற்றுவிட்டீர்கள்’’

‘‘முழுப்பொய்’’ கோபமாகக் கத்தினான் சிவசுந்தரமூர்த்தி.

‘‘இல்லை. வைத்திலிங்கத்தின் மகளின் பேரன் திருமுருகன் எனக்கு பாடசாலை விலாசத்திற்கு கடிதமும் எழுதி பணமும் அனுப்பியுள்ளான். இக்கோயில் வைத்திலிங்கத்தால் உருவாக்கப்பட்டது. அத்துடன் அவர்களின் பரம்பரையினராலேயே தேர்த் திருவிழா செய்யப்பட்டது. தற்காலிகமாக அத்திருவிழா சிவசுந்தரமூர்த்தியிடம் செய்வதற்காக ஒப்படைக்கப்பட்டது. கணேசமூர்த்தி வந்தமையால் இம்முறையில் இருந்து தேர்த் திருவிழாவை செய்யும்படி கணேசமூர்த்திக்கு நிர்வாகம் கட்டளை இடுகிறது...’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘கொடி ஏற்றவிடமாட்டோம்’’ கூடியிருந்தோர் கூச்சலிட்டனர்.

‘‘குருக்கள் ஐயா பத்து உபயகாரர்களுக்கும் வழக்கம் போல் வீபூதி பிரசாதம் குடுங்கோ. தேர்த் திருவிழாக்கான வீபூதி பிரசாதத்தை கணேசமூர்த்தியிடம் கொடுங்கோ... யாராவது பிரச்சினைப்பட்டால் காவல்துறையிடம் அறிவிக்கப்படும்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘வாத்தியார், கணேசமூர்த்திக்குத் தர்ப்பை போடுவது எனக்குப் பிடிக்கவில்லையென்று மஹா கணபதி என்ரை கனவிலை தோன்றிச் சொன்னவர்...’’ குருக்கள் தயங்கித் தயங்கிச் சொன்னார்.

கணேசமூர்த்தி குருக்களுடனும் அடிக்கடி பிரச்சினைப்படுவன். அதனால் தான் குருக்கள் அப்படிச் சொல்கிறார் என்று விக்னேஸ்வரமூர்த்தி நினைத்தார்.

‘‘பரவாயில்லை தீர்மானம் இதுதான்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

கணேசமூர்த்தி விக்னேஸ்வரமூர்த்தியின் கால்களைக் கட்டிப்பிடித்து அழுதான். ‘‘மானத்தோடு வாழ்ந்த எனது பரம்பரையினரது மானத்தை நான் கெடுத்துப்போட்டன். அதுக்கான தண்டனையையும் அனுபவிச்சிட்டன். இனிமேல் நான் தவறு செய்யமாட்டன்’’ என்று அழுதான் கணேசமூர்த்தி.

118. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

பக்கம் சாராது செயற்படும் தராசைப் போல், பக்கம் சாராது நடுவு நிலைமையைப் போற்றுவது சான்றோர்க்கு அணியாகும்.

வளைவு இல்லாச் சொல்

கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்ற போதும் விளையாட்டு மைதானம் இல்லாதது பெருங்குறையாக இருந்தது. கணபதி மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் பாடசாலைக்கு வெகுதூரத்தில் உள்ள தரவைக் காணியொன்றிலேயே விளையாட்டுப் போட்டியை வைத்தனர். அதனால் பெரும்சிரமங்கள் ஏற்படும். விளையாட்டுப் போட்டிக்கு முன்பு பயிற்சிக்காக தினமும் காலை வேளைகளில் மாணவர்களை அழைத்துச் சென்றுவர இரண்டு மணித்தியாலங்கள் தேவைப்பட்டது. அதனால் ஒழுங்காகப் பயிற்சியும் பெறமுடியவில்லை. கற்பிக்கவும் முடியவில்லை.

விளையாட்டுப் போட்டிக்குத் தேவையான உபகரணங்கள் முழுவதையும் பாடசாலையில் இருந்தே கொண்டு செல்லல் வேண்டும். விளையாட்டுப் போட்டிக்கு முதல் நாள் கொண்டு செல்லப்படும் கதிரை மேசைகள் விளையாட்டுப் போட்டி முடிந்த மறுநாள்த் தான் திரும்பிக் கொண்டுவர முடியும். அதனால் மூன்று தினங்கள் மாணவர்களுக்கு கற்பித்தல் நடைபெறமாட்டாது. அத்துடன் கொண்டுசெல்லும் மேசைகள் கதிரைகளில் பல முறிந்துவிடும். பின் திருத்துவதற்கு பெருந்தொகையான பணம் தேவைப்படும். அதைவிட உபகரணங்களை ஏற்றிச்செல்லவும் அதிக செலவு உண்டாகும். அதனால் விக்னேஸ்வரமூர்த்தி பாடசாலையின் எல்லையோடு இருக்கும் கணேசமூர்த்தியின் ஐம்பது பரப்புக் காணியை கொள்முதல் செய்ய விரும்பினார். கணேசமூர்த்தி சிறையில் இருந்தமையால் அவனுடன் அதுபற்றிப் பேச முடியவில்லை. அவன் சிறையால் வந்த பின்பு பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தைக் கூட்டி அக்காணியைக் கொள்வனவு செய்வது சம்மந்தமாகக் கதைத்தார். அத்துடன் விளையாட்டு மைதானம் இல்லாததால் ஆசிரியர்களும் மாணவர்களும் படும் கஸ்டங்களை எடுத்துரைத்தார். செலவு விபரத்தைச் சொன்னார். மக்கள் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

சிவசுந்தரமூர்த்தி எழுந்து சொன்னான் ‘‘பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் தேவைதான். எல்லாப் பாடசாலைகளுக்கும் அரசாங்கம் தான் அனைத்துச் செலவுகளையும் செய்கிறது. எனவே கல்வித் திணைக்களத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர மக்களிடம் பணங் கேட்கக் கூடாது...’’

‘‘அரசாங்கம் விளையாட்டு மைதானம் வாங்கித் தரும் என எதிர்பார்க்க முடியாது. இப்பாடசாலையை ஆரம்பித்த நாளில் இருந்தே விளையாட்டு மைதானம் வாங்கித் தரும்படி கோரிக்கை விடுத்தும் பயன் எதுகும் ஏற்படவில்லை. ஆகையால் மக்கள் எல்லோருமாகச் சேர்ந்து வாங்க முயற்சிக்க வேண்டும்...’’ தணிகாசலம் பேசிக்கொண்டிருக்கும் போது சிவசுந்தரமூர்த்தி குறுக்கிட்டான். ‘‘மக்கள் என்று நீங்கள் யாரைச் சொல்கிறீர்கள். நிதி சேகரிக்கும் போது சிலர்தான் தொடர்ந்தும் பணம் கொடுக்கிறார்கள். பலர் பணம் இருந்தும் கொடுப்பதில்லை. பழைய மாணவர் சங்கச் செயலாளரான தணிகாசலம் எப்போதாவது பணம் கொடுத்துள்ளாரா...?’’

தணிகாசலத்தால் எதுகும் பேச முடியவில்லை. எனினும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு சொன்னார்; ‘‘நான் இந்தப் பதவியில் ஆசைப்படுவதில்லை. மக்கள் தான் என்னை வற்புறுத்தித் தெரிகிறார்கள். நான் ஏழை. வசதியிருந்தால் கொடுப்பன்...’’

‘‘தரம் ஒன்றுக்கும் தரம் ஆறிற்கும் விண்ணப்பிக்கின்ற எல்லாப் பிள்ளைகளையும் பாடசாலையில் சேர்த்தால் விளையாட்டு மைதானம் மிகவும் இலகுவாக வாங்கலாம். ஆனால் அதிபர் எல்லோரையும் சேர்ப்பதில்லை. என்னுடைய மகனைச் சேர்த்தால் நான் ஒரு இலட்சம் ரூபா தருவன்...’’ என்றார் சிவசுந்தரமூர்த்தி.

‘‘பாடசாலைக்கென்று சில சட்டதிட்டங்கள் இருக்கின்றன. கல்வித் திணைக்களம் சொல்லுறபடி தான் மாணவர்களை அனுமதிக்க முடியும்...’’ என்று விக்னேஸ்வரமூர்த்தி சொல்லும்போது சிவசுந்தரமூர்த்தி கோபத்துடன் குறுக்கிட்டார். ‘‘சட்டத்தை வைக்கும் கல்வித் திணைக்களத்தைக் கேட்டு காணி வாங்கிறது தானே. பிறகேன் எங்களைக் கேட்பான்...’’

‘‘உங்களின் இரு பிள்ளைகள் இங்கே படிக்கிறார்கள்... அவர்களுக்காகவும் இங்கு கற்கும் ஏழைப் பிள்ளைகளுக்காகவும் நீங்கள் உதவி செய்யலாம் தானே...’’ என்றான் கதிரவேலு.

‘‘சிவசுந்தரமூர்த்தி சொல்வதுதான் சரி. என்னுடைய இரண்டு பிள்ளைகள் இங்கே கல்வி கற்கிறார்கள். ஒரு பிள்ளை வேறு

பாடசாலையில் கல்வி கற்கிறது. அதனால் அந்தப் பிள்ளையின் மனம் உடைந்துள்ளது'' என்றான் சுப்பிரமணியம்.

''இப்பொழுது நான் பாடசாலை அனுமதி தொடர்பாக கூட்டம் வைக்கவில்லை. விளையாட்டு மைதானம் கொள்வனவு செய்வது பற்றித்தான் கூட்டம் வைக்கிறேன். எனவே தயவுசெய்து அதைப்பற்றிக் கதையுங்கள்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''இப்பொழுது இந்தக் கிராமத்தில் ஒரு பரப்பு நிலம் ஒரு இலட்சம் ரூபா விலை போகிறது. ஐம்பது பரப்பையும் வாங்க ஐம்பது இலட்ச ரூபா சேர்க்க முடியுமா...?'' என்று கேட்டான் சதானந்தன்.

''இப்ப நாம் தீர்மானிக்க வேண்டியது காணி வாங்குவதா இல்லையா என்பது மட்டுமே. அதிபர் விக்னேஸ்வரமூர்த்தி மகா கெட்டிக்காரன். அவர் வாங்குவதற்கு ஏதாவது திட்டம் வைத்திருப்பார். அதற்கு நாமும் உதவிசெய்தல் வேண்டும். எனவே தயவுசெய்து அதைப்பற்றிக் கதையுங்கள்'' என்றான் தனபாலசிங்கம்.

''விக்னேஸ்வரமூர்த்தியிடம் ஒரு திட்டமும் இல்லை. அவர் மக்களை மண்டபத்துள் இருத்தி வைத்துக் காசு வாங்குபவர். வீட்டுக்கு வீடுவந்து காசு சேர்க்கட்டும். நான் கொடுப்பன்...'' என்றான் சிவரூபன். அவன் சிவசுந்தரமூர்த்தியின் கையாள்.

''விக்னேஸ்வரமூர்த்தி ஐயா, தயவுசெய்து இந்தக் கூட்டத்தைக் கலையுங்கோ. நல்லவர்களுக்குத் தான் நல்ல சிந்தனை வரும். நற்சிந்தனையாளன் தான் நல்ல வார்த்தைகளைப் பேசுவான். நல்ல வார்த்தைகளைப் பேசுபவன் தான் நல்ல செயல்களைச் செய்வான். நீங்கள் யாரும் பணம் கொடுக்கத் தேவையில்லை. என்னுடைய பாட்டனாரின் தந்தை தான் இந்தப் பாடசாலையை ஸ்தாபித்தவர். அவருடைய காணிதான் பாடசாலைக்கு அருகில் உள்ள காணி. அது பரம்பரை பரம்பரையாக எனக்கு உரித்தானதே தவிர நான் காசு கொடுத்து வாங்கவில்லை. அவர் இன்றைக்கு உயிரோடு இருந்தால் அந்தக் காணியை நன்கொடையாகக் கொடுத்திருப்பர். நான் கெட்டவன், குடிகாரன் என்று பெயரெடுத்தாலும் நல்ல குடியில் பிறந்தவன். தவறுதலாக குற்றங்களைச் செய்திட்டன். அதற்காக என்னை மன்னியுங்கோ. இனிமேல் நான் அப்படியான தவறுகளைச் செய்யமாட்டன். எனது காணி முழுவதையும் நன்கொடையாக நான் பாடசாலைக்குக் கொடுக்கிறன்'' என்றான் கணேசமூர்த்தி.

கூட்டம் ஒருகணம் அமைதியாக இருந்தது.

119. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உள்கோட்டம் இன்மை பெறின்.

உள்ளத்தில் பக்கச்சார்பு இல்லாத தன்மை உறுதியாக இருந்தால், சொல்லிலும் பக்கச்சார்பு இராது.

வணிகர்க்கு அழகு

மணிவண்ணன் மொத்த வியாபாரி. வெளிநாடுகளில் இருந்து பல்வேறு விதமான பொருட்களை இறக்குமதி செய்து அந்த மாவட்டத்தில் உள்ள சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்பவன். பொருட்கள் கப்பலால் இறக்கப்பட்டதும் அதன் தரத்தைப் பரிசீலிப்பதற்கென நியமிக்கப்பட்ட தொழிலாளர்கள் பொருட்களைப் பரிசீலிப்பார்கள். அழுகிய, கெட்டுப்போன பொருட்களை அகற்றிவிட்டு நல்ல பொருட்களைப் பொதிகளாக்கி தனது வாடிக்கையாளரான சில்லறை வியாபாரிகளுக்குக் கொடுப்பான். அவனிடம் விலை சற்று அதிகமாக இருந்த போதும் விற்கும் பொருள் அனைத்தும் தரமுள்ளனவாகவே இருக்கும்.

மணிவண்ணனைப் போல் அம்மாவட்டத்தில் வெளிநாடுகளில் இருந்து பொருட்களை மொத்தமாக இறக்குமதி செய்து சில்லறை வியாபாரிக்கு விற்பனை செய்பவன் கருணாகரன். அவனும் கப்பலில் இருந்து பொருட்களை இறக்கியதும் அதன் தரத்தைப் பரிசீலனை செய்வான். அழுகிய கெட்டுப்போன பொருட்களைத் தவிர்த்து அதைக் குறைந்த விலைக்கு விற்பான். தரமான பொருட்களுக்கு கலப்படம் செய்வான். மணிவண்ணனிலும் பார்க்க விலை குறைத்து விற்பான்.

ஆரம்பத்தில் சில்லறை வியாபாரிகள் பலர் கருணாகரனிடத்திலேயே பொருட்களைக் கொள்வனவு செய்தனர். நாவலடிக் கிராமத்தில் கைலாயநாதன் என்றொரு சில்லறை வியாபாரி இருந்தான். அவன் பொருட்களை மணிவண்ணனிடமே கொள்வனவு செய்து விற்பனை செய்து வந்தான். கைலாயநாதனின் விற்பனை நிலையத்துக்கருகில் பேரம்பலம் என்றொரு வணிகன் சில்லறை வியாபாரம் செய்துகொண்டிருந்தான். பேரம்பலம் கருணாகரனிடத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்து கைலாயநாதனிலும் பார்க்க விலை குறைவாக விற்றுக் கொண்டிருந்தான். அதனால் நாவலடிக் கிராம மக்களில் பெரும்பான்மையானோர் பேரம்பலத்திடமே தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்தனர்.

கைலாயநாதனிடம் கற்றவர்களும் பெரியவர்களும் நாவலடிக் கிராமத்தில் உள்ள பணக்காரர்களும் தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதைப் பார்த்த மக்கள் தாமும் கைலாயநாதனிடம் பொருட்களைக் கொள்வனவு செய்யத் தொடங்கினர்.

தணிகாசலம் பேரம்பலத்திடமும் விக்னேஸ்வரமூர்த்தி கைலாயநாதனிடமும் பொருட்களைக் கொள்வனவு செய்வது வழக்கம். அன்று தணிகாசலம் கைலாயநாதனிடம் ஒரு கிலோ அரிசி கொள்வனவு செய்தார். தரத்தில் அவ் அரிசி மிகவும் உயர்ந்ததாக இருந்ததால் சுவையாகவும் இருந்தது. அத்துடன் கல், மண், உமி என்பன இல்லாமலும் இருந்து அன்று பாடசாலைக்குச் சென்ற தணிகாசலம் விக்னேஸ்வரமூர்த்திக்குச் சொன்னார். ‘‘நான் கனகாலமாய் ஏமாந்திட்டன். இவ்வளவு நாளும் பேரம்பலத்திட்டைத் தான் அரிசி வாங்கிறனான். கல்லும் மண்ணும் உமியும் கால் கிலோ இருக்கும். அதோடை அரிசியும் சரியில்லை. கைலாய நாதனிட்டை இண்டைக்கி வாங்கினனான். நல்ல அரிசி கல்லு மண் உமி ஒண்டுமில்லை. விலை குறைவாக இருக்கென்று வாங்கினால் கழிவுகள் கூட. அதில் பார்க்க கைலாயநாதனிட்டை மலிவு...’’

‘‘அது எனக்கு எப்பவோ தெரியும். கழிவுபொருட்களை விலைகுறைத்துக் கொடுத்தவுடனை சனம் மலிவு என்று வாங்குது. உது கன நாளைக்கு நிலையாது. எங்கடை ஊரிலை விளையுற பொருட்களையெல்லாம் கைலாயநாதனூடாக மணிவண்ணன் தான் வாங்கி பிற மாவட்டங்களுக்கு அனுப்புறான். தன்னுடைய பொருட்களை எப்படி பாதுகாப்பானோ அப்பிடி மற்றவையின்ரை பொருட்களையும் பாதுகாக்கிறான். போன மாசம் ஐயாயிரம் புசல் நெல்லு வாங்கினவன். மூடையாக கட்டி சனம் வயலுக்கை வைச்சிருந்தது. திடீரென்று மழை வந்திட்டுது. மணிவண்ணன் வரேல்லை. பட்டணத்திலை இருந்தவன். கைலாயநாதன் போய் மழை வருமென்று சொன்ன உடனை நூறு பார ஊர்திகளை பட்டணத்திலை வாடகைக்கு அமர்த்தி ஐம்பது தொழிலாளிகளையும் சேர்த்து அனுப்பினான். சனமும் சேர்ந்து பார ஊர்திகளில் நெல்லை ஏத்தினத்தாலை நெல்லு நனையாமல் தப்பீட்டுது. வழமையாய் இரண்டு மூன்று நாட்களுக்கு மணிவண்ணனிட்டை உள்ள பார ஊர்திகள் தான் வந்து நெல்லை ஏத்துறது வழக்கம். ஆனால் வாடகைக்கு அமர்த்தியது அவனுக்கு சரியான நட்டம். தனக்கு நட்டமென்றும் பாராமல் நெல்லை ஏற்றினதாலை விவசாயிகள் தப்பீட்டினை. பேரம்பலத்தோடை சேர்ந்து மக்களிட்டை நெல்லை வாங்கிற கருணாகரன் வாங்கின நெல்லை விவசாயிகள் சாக்கிலை கட்டி வைச்சவை. மழையாலை மூன்று நாளாய் அதை ஏற்ற முடியேல்லை. நாலாம் நாள் வந்து பார்த்த கருணாகரன் நனைஞ்ச நெல்லு முளைச்சிடும் எனக்கு வேண்டாம் என்று சொல்லீட்டான். விவசாயியள்

மூடையை அவிழ்த்து நெல்லைக் காயப் போட்டவை... ஏழெட்டு நாளைக்குப் பிறகு கருணாகரன் வந்து அரை விலைக்கு கொள்வனவு செய்தவன். அந்த நெல்லரிசி எப்பிடி ருசியாய் இருக்கும்...''

''கைலாயநாதன் மிகவும் நல்ல மனிசன். நாங்கள் பாடசாலைக்கும், கோயிலுக்கும் நன்கொடைக்குப் போனால் அள்ளித்தாறவன். பேரம்பலம் பேசிப் பேசித்தான் அஞ்சைப் பத்தைத் தாறவன். அப்பநாங்கள் கதைக்கிறனாங்கள் விலையைக் கூட்டி வித்துப்போட்டு அள்ளித் தாறான். அந்தப் புண்ணியங்களெல்லாம் சாமான் வாங்கிற சனத்துக்குத் தான் போகுமெண்டு. இப்பத்தான் தவறு தெரியுது. ஆராயாமல் கதைத்த எனக்கும் பாவம் தான் கிடைக்கும்'' என்றார் தணிகாசலம்.

''எங்கடை ஊர்ச்சனம் முழுக்க இனிமேல் மணிவண்ணனுக்குத் தான் நெல்லுக் குடுக்கிறதெண்டு தீர்மானிச்சிட்டுது. வியாபாரி லாபம் பெறவேண்டுமென்றால் தன்னைப் போல தனக்கு பொருள் தருபவனும் முன்னேற வேண்டுமென்று நினைக்க வேண்டும்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

120. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்

பிறவும் தமபோல் செயின்.

வாணிகம் செய்வோன் வாணிகம் சிறப்படைய(இலாபம் அடைய) வேண்டுமானால், அவன் பிறர் பொருளை தன் பொருளாகக் கருதுதல் வேண்டும்.

அமரன்

ரவீந்திரன் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியன். முப்பது வயதுடையவன். சிறந்த விஞ்ஞான ஆசிரியர். கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் பௌதீகவியல் கற்பிப்பவன். நகரில் உள்ள பல பிரபல பாடசாலைகளில் பௌதீகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களை விட மிகவும் திறமையாகக் கற்பிப்பான். மாணவர்களில் நிறைந்த அன்புள்ளவன். ஒரு மாணவன் தனக்கு விளங்காதவற்றை எத்தனை முறை கேட்டாலும் சலிக்காமல் சொல்லிக் கொடுப்பான். பின் மறுநாள் அம்மாணவனை அழைத்து தான் கற்பித்த பகுதி விளங்கியுள்ளதாவென அறிய பல கேள்விகள் கேட்பான். விளக்கம்

கேட்ட மாணவனின் பதிலில் இருந்து அவன் பூரணமாக அப்பகுதியை விளங்கிக் கொண்டானென்று ரவீந்திரன் திருப்திப்படாவிட்டால் திரும்பவும் விளங்கப்படுத்துவான். அப்பாடசாலைக்கு அவன் முதல் முறையாக வந்தபோது பௌதீகவியலை வயதுசென்ற ஆசிரியர் ஒருவர் கற்பித்துக்கொண்டிருந்தார். அவருக்கு வயது சென்றிருக்கிறதே தவிர போதிய கற்பித்தல் அனுபவமில்லை என்பதை ரவீந்திரன் உணர்ந்துகொண்டான். அவன் அவ்ஆசிரியரிடம் சென்று; ‘‘ஐயா உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் மாலை வேளைகளில் நான் பௌதீகவியலைக் கற்பிக்கிறேன். எனக்கு பௌதீகவியல் பாடத்தில் நல்ல விருப்பம். ஆனால் இங்கு நீங்கள் பௌதீகவியலைக் கற்பிப்பதால் கீழ் வகுப்புக்களுக்கு விஞ்ஞான பாடத்தை கற்பிக்கும்படி அதிபர் பணித்துள்ளார். அவரின் சொல்லை நான் மதித்தல் வேண்டும். எனக்கோ பௌதீகவியல் கற்பிக்க வேண்டும் என்று ஆசை. அதனால் உங்கள் மனம் கோணாதபடி நடந்துகொள்வேன். என்னில் ஏதாவது தவறிருப்பின் நீங்கள் திருத்தலாம். உங்களை நான் எனது தந்தையாகவே நினைக்கிறேன். என்னை ஆசீர்வதியுங்கள்’’ என்று அவரின் பாதங்களைப் பணிந்தான்.

பௌதீகவியல் ஆசிரியர் அதிர்ந்து போனார். ‘‘இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு மனிதன் வாழ்கிறானா...?’’ என்று நினைத்தபடி; ‘‘நான் முப்பது வருடங்களாக பௌதீகவியலைக் கற்பித்துக் கொண்டிருக்கிறேன். நீர் பௌதீகவியலைக் கற்பியும். நான் உமக்கு அதிபர் தந்த பாடங்களை கற்பிக்கிறேன். அதற்கு அதிபரின் அனுமதி பெறல் வேண்டும். நீர் போய் அதிபருடன் கதையும், நானும் கதைக்கிறேன்’’ என்றார்.

‘‘நீங்கள் செய்த இந்த உதவியை நான் என் வாழ்நாளில் மறக்கமாட்டன் ஐயா...’’ என்றான் ரவீந்திரன்.

மறுவாரம் ரவீந்திரனுக்கு பாடம் மாற்றிக் கொடுக்கப்பட்டது. ரவீந்திரன் பாடசாலை நேரத்தில் விருப்புடன் கற்பிப்பான். பாடசாலை விட்டபின்பு மாலை வேளைகளில் கற்பிப்பான். அதிபருக்கு உதவியாக இருந்து பாடசாலை வேலைகளைச் செய்வான். தான் ஓய்வாக இருக்கும் வேளைகளில் பாடசாலையில் ஏதாவது வேலைகள் இருக்கிறதா என்று கேட்டுச் செய்வான். இதனால் அதிபரின் நன்மதிப்பைப் பெற்றான். இது உருத்திரமூர்த்தி என்ற ஆசிரியருக்கு பிடிப்பதில்லை. அதனால் ரவீந்திரனைக் கேலி செய்வார்.

உயர்தர வகுப்பு பெறுபேறுகள் வந்தபோது அவன் கற்பித்த முப்பது மாணவர்களில் இருபத்தொரு மாணவர்கள் சிறப்புச் சித்தியும் ஒன்பது மாணவர்கள் திறமைச் சித்தியும் பெற்றனர். அப்பாடசாலையின் பெறுபேறே மாவட்டத்தில் சிறந்த பெறுபேறாகும். அதனால் தனியார் கல்வி நிறுவனங்கள் பலவும் ரவீந்திரனை தமது கல்வி நிலையத்தில்

பிரத்தியேக வகுப்பு எடுக்கும்படியும், அவ்வகுப்புகளுக்கு பெருந்தொகையான பணம் தருவதாகவும் கோரிக்கை விடுத்தன. அதற்கு ரவீந்திரன் மறுத்துவிட்டான்.

பட்டணத்திலுள்ள பிரபல பாடசாலை ஒன்று ரவீந்திரனை தமது பாடசாலைக்கு இடம்மாற்றம் செய்யும்படி கல்விப் பணிப்பாளரைக் கோரியது. அப்பாடசாலையில் அம்மாவட்டத்தில் உள்ள பெரிய பெரிய அதிகாரிகளினது பிள்ளைகள் கல்வி கற்று வந்தனர். கல்விப் பணிப்பாளரது பிள்ளைகளும் அப்பாடசாலையிலேயே கல்வி கற்றனர். அதனால் கல்விப் பணிப்பாளர் ரவீந்திரனை அழைத்துக் கேட்டார்; ‘‘ரவி நீர்தானாம் மாவட்டத்திலேயே சிறந்த பௌதீகவியல் ஆசிரியர். அதனால் பல பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைகளுக்கு உம்மை இடம்மாற்றம் செய்யும்படி கோரிக்கை விடுத்தவண்ணம் இருக்கின்றனர். இம்மாவட்டத்திலேயே சிறந்த பாடசாலை வைத்திலிங்கம் தேசிய கல்லூரி. அங்கு நீர் சென்றால் என்ன...?’’

‘‘ஐயா, நான் கணபதி மத்திய மகா வித்தியாலயத்திற்குச் சென்றதும் என்னை அரவணைத்து நம்பிக்கையுடன் பௌதீகவியல் பாடத்தை என்னிடம் ஒப்படைத்த ஆசிரியரையும், கேட்டவுடன் பாடத்தைத் தந்த அதிபரையும் ஒரு வருடத்தில் விட்டுப்பிரிய மனம் இல்லை. அது நான் அவர்களுக்கும் பாடசாலைக்கும் செய்யும் துரோகமாகும். அதனால் என்னால் புதிய பாடசாலையில் கற்பிக்க முடியாது போய்விடும். நீங்கள் பெரியவர். கல்வியறிவுள்ளவர். பண்பானவர். தயவு செய்து யோசித்துப் பாருங்கள்’’ என்றான் ரவீந்திரன்.

கல்விப் பணிப்பாளர் உருகிப் போனார். அவனது அடக்கமான வார்த்தைகளுக்கு அவரால் பதில்கூற முடியவில்லை.

‘‘சரி நீர் போய் யோசித்துச் சொல்லும். நான் வற்புறுத்தவில்லை’’ என்றார்.

வருடம் ஒன்று கழிந்தது. தனியார் கல்வி நிறுவனங்கள் ரவீந்திரனை பிரத்தியேக வகுப்பிற்கு வரும்படி கேட்டு களைத்துவிட்டன. அதனால் உருத்திரமூர்த்தி அவனிடம் வந்தார். ‘‘ரவி நீ நல்ல கெட்டிக்காரன். ஏன் உழைப்பதற்கு பின் நிக்கிறாய். விநாயகர் கல்வி நிலையத்தில் நான் கணிதம் கற்பிக்கிறேன். மாதம் பத்தாயிரம் ரூபா தருகிறார்கள். வாழ்க்கை வசதியாகச் செல்கிறது. நீயும் வா. பௌதீகவியல் கற்பிப்பதற்கு நல்ல ஆசிரியர்கள் இல்லை. மாதம் ஐம்பதினாயிரம் ரூபா வாங்கித் தருகிறேன்...’’

“நான் வரவிரும்பவில்லை. தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடசாலைகளில் கற்பிப்பதில்லை என்ற புகார்....”

ரவீந்திரன் சொல்லிக்கொண்டிருந்த போது உருத்திரமூர்த்தி குறுக்கிட்டான். “உனக்கு ஆர் சொன்னது. அதிபர் தான் நெடுக எனக்குச் சொல்லுறவர். அவருக்கென்ன பாடசாலைக் காசை அடிக்கிறார். நாங்கள் எங்கை அடிக்கிறது... உழைக்கத்தானே வேணும்... அவரோடை சேர்ந்து நாலைந்து பேர் பள்ளிக்கூடத்தைக் கெடுக்கிறாங்கள். சந்தர்ப்பம் வருமெண்டு பார்த்துக்கொண்டிருக்கிறன். வழமாய் அம்பிட்டாரென்றால் அடிக்காமல் விடமாட்டன்..” என்று கோபமாகக் கதைத்துக் கொண்டிருக்கும் போது “எனக்கு வகுப்பிருக்கு, நான் போறன்...” என்று கூறிவிட்டு அவரது பதிலை எதிர்பாராது நடந்தான் ரவீந்திரன்.

ரவீந்திரனது செயல் உருத்திரமூர்த்திக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது “நீயும் அவன் கள்ளனோடை சேர்ந்திட்டாய். அவனை மாத்தினால் தான் எல்லாற்றை திமிரும் அடங்கும்” என்றார் பலமாக.

ரவீந்திரனுக்கு அவர் சொன்னது கேட்ட போதும் அவன் கேளாதது போல் சென்றான்.

அடுத்தவருட உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு முதல் வருடத்திலும் பார்க்க கூடுதலாக இருந்தது. அதனால் பட்டணத்தில் உள்ள தேசிய பாடசாலை மாணவர்களும் அயற்பாடசாலை மாணவர்களும் விடுகைப் பத்திரங்களை எடுத்து வந்து கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்ந்தனர். அதனால் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் விஞ்ஞானப் பிரிவின் வகுப்புக்களின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்தது.

ரவீந்திரனது புகழ் மாவட்டமெங்கும் பரவியது. மக்கள் அவனைத் தெய்வமாகக் கருதினர். ரவீந்திரனுடனும் விக்னேஸ்வரமூர்த்தியுடனும் அடிக்கடி முரண்பட்ட உருத்திரமூர்த்தியை இடம்மாற்றம் செய்யுமாறு கோரி பெற்றோர் ஆர்ப்பாட்டம் செய்தனர். நிலமையை ஆராய்ந்த கல்விப் பணிப்பாளர் உருத்திரமூர்த்தியை பதினைந்து மைல்களுக்கு அப்பாலுள்ள வேறொரு பாடசாலைக்கு இடமாற்றம் செய்தார்.

121. அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை

ஆரிருள் உய்த்து விடும்.

அடக்கம் ஒருவனை உயர்த்தி தேவர்கள் வாழும் சொர்க்க வாழ்வைத் தரும். அடக்கமின்மை பொல்லாத இருளடைந்த நரக வாழ்வைத் தரும்.

பொருள்

உருத்திரமூர்த்திக்கு வீட்டில் இருந்து பதினைந்து மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு சிறிய பாடசாலைக்கு இடமாற்றம் கிடைத்தது. மிகப்பெரிய, மதிப்புள்ள பாடசாலையில் கற்பித்துவிட்டு மதிப்பில்லாத சிறிய பாடசாலையொன்றுக்கு இடமாற்றம் கிடைத்ததையிட்டு மிகவும் கோபமடைந்தார் உருத்திரமூர்த்தி. அத்துடன் கணபதி மத்திய மகா வித்தியாலயப் பெற்றாரை ஆர்ப்பாட்டம் செய்யும்படி தூண்டிவிட்டது உருத்திரமூர்த்தியும் ரவீந்திரனும் தானென்று நினைத்தார். அதனால் விக்னேஸ்வரமூர்த்தியோடு பகையானவர்களை தம்பக்கம் சேர்த்துக்கொண்டார். சிவசுந்தரமூர்த்தியை தலைவராகக் கொண்ட ஒரு குழுவொன்று கல்விப் பணிப்பாளரை சந்திக்கச் சென்றது.

கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம் நேர்மையானவர். நிர்வாகத்திறமை மிக்கவர். ஒவ்வொரு ஆசிரியர்களின் கஸ்டங்களையும் உணர்ந்தார். பக்திமான். எந்த ஒரு விடயத்தையும் நன்கு ஆராயாமல் முடிவெடுக்காதவர். அம்மாவட்டத்தில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள். அறுநூறுக்கு மேற்பட்ட பாடசாலைகள் உள்ளன. எந்த ஓர் ஆசிரியரும் தனக்கு ஏற்பட்ட பிரச்சினையை நேரடியாகச் சென்று அவரிடம் முறையிடலாம். பொறுமையாக ஆசிரியர்கள் கூறுவதைக் கேட்டு நடவடிக்கை எடுப்பார். அப்பொழுது நடவடிக்கை எடுக்க முடியாவிட்டால் ஆறுமாதம் ஒருவருடம் தவணை கேட்பார். அந்தத் தவணைக்குள் ஆசிரியர் அவரை வந்து சந்திக்கு முன் நடவடிக்கை எடுத்துவிடுவார்.

சிவசுந்தரமூர்த்தியும் சுந்தரலிங்கமும் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்தவர்கள். சிவசுந்தரமூர்த்தி கச்சேரியில் நல்ல உத்தியோகத்தில் இருப்பதால் நிர்வாக விடயமாகப் பலமுறை இருவரும் சந்தித்துக் கொள்பவர்கள். அதனால் தான் சொல்பவற்றை சுந்தரலிங்கம் கேட்பார் என்று சிவசுந்தரமூர்த்தி நினைத்தார். ‘‘சுந்தா, நாங்கள் ஒன்றாகப் படித்தனாங்கள். என்னைப்பற்றி உனக்குத் தெரியும். விக்னேஸ்வரமூர்த்தியின் அட்டகாசம் வரவரக் கூடிக்கொண்டு வருகிறது. அதன் பிரதிபலிப்புத்தான் உருத்திரமூர்த்தியின் இடமாற்றம்...’’ சிவசுந்தரமூர்த்தி கதைத்துக்கொண்டிருக்கும் போது சுந்தரலிங்கம் குறுக்கிட்டார். ‘‘விக்னேஸ்வரமூர்த்தியைப் பற்றி எனக்குப் பூரணமாகத் தெரியும். அவர் எனது நண்பர் மட்டுமல்ல, நான் மதிக்கின்ற ஒரு சிறந்த அதிபர். ரவீந்திரனைப் போல் ஒரு சிறந்த

ஆசிரியர் இம்மாவட்டத்திலே இல்லை. தற்பொழுது பட்டணத்தில் கொடிகட்டிப் பறந்த பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்கிறார்களென்றால் அதற்குக் காரணம் விக்னேஸ்வரமூர்த்திதான். ஓர் அதிபர் பெற்றோருடனும், ஆசிரியர்களுடனும் பண்போடு நடந்தால் அப்பாடசாலை வளரும். விக்னேஸ்வரமூர்த்தி மிகவும் சிறந்த பண்பாளன். யாரும் கல்வியைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் சிறந்த பண்புகளைப் பெற்றுக்கொள்ள முடியாது. பண்புகளில் சிறந்த பண்பு அடக்கமுடமையாகும். ரவீந்திரன் பௌதீகவியல் பாடம் கற்பிப்பதில் நிபுணன். எனது பிள்ளைகள் இருவரும் ரவீந்திரனிடம் பௌதீகவியல் கற்கிறார்கள். அவர்கள் வீட்டுக்கு வந்தால் ரவீந்திரனைப் பற்றித்தான் கதைப்பார்கள். ஒரு மாதத்திற்கு முன்பு ரவீந்திரன் விபத்துக்குள்ளாகி காலில் பலத்த காயமேற்பட்டு ஆஸ்பத்திரியில் பத்து நாட்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றார். பத்து நாட்களும் என்னுடைய பிள்ளைகள் வீட்டுக்கு வரவில்லை. எனது வேலையை விட்டுவிட்டு நான் அவர்களுக்கு சாப்பாடு கொண்டு போனனான். ஆஸ்பத்திரீலை இந்த மாவட்டத்திலை உள்ள பெரிய பெரிய அதிகாரிகள் பலர் தம்முடைய பிள்ளைகளுக்கு சாப்பாடு கொண்டந்து வைத்திருந்ததை நான் கண்ணாரக் கண்டனான்'' சுந்தரலிங்கத்தால் பேச முடியவில்லை. கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்தார்.

''மாணவர்கள் ஒருவருக்கும் உருத்திரமூர்த்தியில் விருப்பமில்லை. நான் பல மாணவர்களுடன் கதைத்தனான். பெற்றோருடன் கதைத்தனான். பழைய மாணவர்களுடன் கதைத்தனான். ஒருத்தரென்றாலும் உருத்திரமூர்த்தியைப் பற்றி நல்லதாகச் சொல்லவில்லை. அதிகாரியாக இருக்கிறவனை கீழை வேலை செய்யும் ஊழியர்கள் மதித்து நடக்க வேண்டும். அடக்கமாக நடத்தல் என்பது அடிமையாக இருத்தல் என்று நினைக்கக்கூடாது. ஒருவனிடம் அடக்கமிருந்தால் அத்தனையும் தேடிவரும். ரவீந்திரன் ஒரு சிறந்த ஆசிரியர். நல்ல பண்பாளன். அவனுக்கு நல்ல எதிர்காலமிருக்கிறது. அவரை நான் முதன்மை ஆசிரியராக தேர்ந்தெடுத்திருக்கிறேன். பாடசாலை இல்லாத நாட்களில் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சியளிக்கும் விரிவுரையாளனாக நியமிக்கவுள்ளேன். அதோடு உருத்திரமூர்த்திக்கு நன்கு ஆலோசித்துத் தான் இடமாற்றம் வழங்கினேன். எக்காரணம் கொண்டும், யாருக்காகவும் அவரது இடமாற்றம் இரத்துச் செய்யப்படமாட்டாது'' என்றார் சுந்தரலிங்கம்.

சிவசுந்தரமூர்த்திக்கு அவமானமாக இருந்தது. எனினும் எதுகும் பேசாமல் எழுந்து சென்றார். ஒருமாத காலம் பாடசாலைக்குச் செல்லாது நின்ற உருத்திரமூர்த்தி பாடசாலைக்குச் சென்றார். காலையிலும் மாலையிலும் பிரயாணத்திற்கு இரண்டு மணித்தியாலங்கள் தேவைப்பட்டன. அதனால் தனியார்கல்வி

நிலையத்திற்குச் செல்ல முடியவில்லை. அந்தப் பாடசாலையில் கற்கின்ற மாணவர்கள் நூற்றுக்கும் குறைவானவர்களாகவே இருந்தனர். அவர்களுக்கு கல்வியில் அவ்வளவு அக்கறை இருக்கவில்லை. அதனால் கற்பிக்க மிகவும் சிரமப்பட்டார் உருத்திரமூர்த்தி.

122. காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்

அதனின்ஊஉங்கு இல்லை உயிர்க்கு.

அடக்கத்தை உயர்ந்த பொருளாகக் கருதி போற்றிக் காக்க வேண்டும். அந்த அடக்கத்தை விட மேம்பட்ட ஆக்கம் உயிர்களுக்கு இல்லை.

அறிவு

சிவசுந்தரமூர்த்தியின் மூத்தமகன் ராகுலன். கல்விப் பொதுத் தராதர உயர்வகுப்பில் பட்டணத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான். முன்பு கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் ஆறில் அனுமதி கிடைக்காததால் அவன் பட்டணத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் படித்துக்கொண்டிருந்தான். கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் ராகுலன் சித்தியடைந்தான். கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண பரீட்சையில் திறமையாக சித்தியடைந்த ஏனைய பாடசாலை மாணவர்களைச் சேர்ப்பது வழக்கம். ராகுலன் க.பொ.த சாதாரண தரத்தில் திறமையாகச் சித்தியடைந்த போதும் சிவசுந்தரமூர்த்தி அவனை கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்க்க விரும்பவில்லை. ஆனால் ராகுலன் தன்னை கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்க்கும்படி கரைச்சல் கொடுத்தவண்ணம் இருந்தான்.

ராகுலன் பௌதீகவியல் பாடத்தை விரும்பிக் கற்பவன். அதனால் ரவீந்திரனிடம் பௌதீகவியல் பாடத்தைக் கற்க விரும்பினனான். ராகுலனோடு பட்டணத்துப் பாடசாலையில் படித்த அவனது நண்பர்கள் பலர் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்ந்தனர். அவர்கள் ராகுலனைக் காணும் போதெல்லாம் ரவீந்திரனது கற்பித்தலைப் பற்றி மிகவும் புகழ்ந்து கூறுவார்கள். அதனால் தானும் ரவீந்திரனிடம் பௌதீகவியல் பாடத்தைப் படிக்க வேண்டும் என்று ராகுலன் விரும்பினான். அதனால் தந்தையை தன்னை கணபதி மத்திய மகா

வித்தியாலயத்தில் சேர்த்து விடும்படி நச்சரித்துக் கொண்டிருந்தான். அன்று ராகுலனது தொல்லை தாங்கமுடியாத சிவசுந்தரமூர்த்தி கோபமாக ஏசினார். ‘‘பசித்தவனுக்கு ருசி தேவையில்லை. நித்திரை கொள்பவனுக்கு பாய் தேவையில்லை. அதே போலை படிக்கிறவனுக்கு இன்ன ஆசிரியர் தான் தேவை என்றில்லை. நீ கெட்டிக்காரன், நன்றாகப்படி, சித்தியடைவாய்...’’

‘‘அப்பா பசியும் உறக்கமும் போன்றதல்ல கல்வி. ஒரு நல்லாசிரியரிடம் கல்வியை மட்டும் ஒரு மாணவன் பெற்றுக்கொள்வதில்லை. நல்ல பண்புகளையும், வாழ்க்கை நெறிகள் பலவற்றையும் பெற்றுக் கொள்கிறான். பட்டணத்தில் உள்ள பாடசாலைகளில் சில மாணவர்களை மதிப்பதில்லை. ஒழுக்கத்தைப் பேணுவதில்லை. உயர் வகுப்பு ஆசிரியர்களும், மாணவர்களும் ஒன்றாக அமர்ந்திருந்து மது அருந்துகிறார்கள். என்னுடன் கற்ற மாணவன் ஒருவனுக்கு எமது பாடசாலை ஆசிரியர் ஒருவர் வீட்டுக்குச் சென்று கல்வி கற்பிக்கிறார். அந்த மாணவனோடு அவர் சேர்ந்து குடிப்பார். அதோடு கும்பலாகச் சேர்ந்து குடித்த பல மாணவர்கள் நகரில் உள்ள பலரின் வீடுகளுக்கு கல்லெறிந்து தாக்கியதை நீங்கள் அறியவில்லையா...? அப்படியான மாணவர்கள் சிலர் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்ந்தார்கள். இப்போது அவர்கள் மச்சம் கூடச் சாப்பிடுவதில்லை. திருநீறு அணிந்து சந்தனப் பொட்டு வைத்துக்கொண்டு திரிகிறார்கள். அதிபரை தெய்வமாக வணங்குகிறார்கள். எனவே நானும் அங்கேதான் படிக்கப் போறேன். நீங்கள் அனுமதி எடுத்துத் தராவிட்டால் நான் இனிமேல் பாடசாலைக்குச் செல்லமாட்டேன்...’’

சிவசுந்தரமூர்த்தி கலங்கிப் போனார். விக்னேஸ்வரமூர்த்தியைக் கண்டு கதைக்க அவருக்கு வெட்கமாக இருந்தது. அதனால் ரவீந்திரனது வீட்டிற்குச் சென்றார். சிவசுந்தரமூர்த்தியைக் கண்ட ரவீந்திரன் எழுந்து மரியாதையுடன் வரவேற்றான்.

‘‘தம்பி நான் உம்மிடம் ஓர் உதவியை எதிர்பார்த்து வந்திருக்கிறன்.’’

‘‘சொல்லுங்கோ. என்னால் முடிந்தால் கட்டாயமாகச் செய்வன்...’’

‘‘இருந்து கதையும். ஏன் நிற்கிறீர்...’’ என்று நின்றபடி கதைத்த ரவீந்திரனைக் கேட்டார் சிவசுந்தரமூர்த்தி.

‘‘நீங்கள் பெரியவர். வயதில் மூத்தவர். உங்களுக்குச் சமமாக நான் இருக்கக் கூடாது’’ என்றான் ரவீந்திரன்.

சிவசுந்தரமூர்த்தி அவனை நிமிர்ந்து பார்த்தார். அவனது முகம் பொங்கிப் பூரித்திருந்தது. அழகாக வாரி விடப்பட்ட தலை. திருநூற்றுக் குறிகளுக்கு நடுவே சந்தனத்தால் பொட்டிட்ட நெற்றி. அழகான சிவந்த உதடுகள். ஒரு பெண்ணைப் பார்ப்பதைப் போல் பார்த்தார். எவ்வளவு பண்பு. இவனைப் போய் நான் குற்றம் கண்டேனே என்ற உணர்வு.

''அம்மா சிவசுந்தரமூர்த்தி ஐயா வந்திருக்கிறார். குடிப்பதற்கு ஏதாவது கொண்டு வாருங்கோ.''

''என்னுடைய மகன் க.பொ.த உயர்தரப் பிரிவில் படிக்கிறான். உங்களிடம் படிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறான். உமக்கு நேரமுள்ள வேளையில் இங்கு அனுப்பலாமென்று நினைக்கிறன்.''

''நான் பிரத்தியேகமாக மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதில்லை. பாடசாலையில் தான் வகுப்பு வைப்பேன். முன்பும் பலர் என்னை வீட்டில் வகுப்பு வைக்கும்படி கேட்டனர். அது தர்மத்திற்குப் புறம்பான செயலென நினைத்து நான் ஒத்துக்கொள்ளவில்லை. நான் உங்களில் மதிப்பு வைத்திருக்கிறேன். ஆகவே தயவுசெய்து என்னை வற்புறுத்தாதைங்கோ... உங்கள் மகனை அதிபரைக் கேட்டு எமது பாடசாலையில் சேருங்கோ. வீட்டில் சிறிதுநேரம் தான் வகுப்பு வைப்பதானாலும் வைக்கலாம். பாடசாலையில் என்றால் பலமணி நேரம் கற்கலாம்.''

சிலகணங்கள் சிவசுந்தரமூர்த்தி யோசித்தார். ''என்னுடைய மகனைச் சேர்க்கும்படி நீர் ஒருமுறை விக்னேஸ்வரமூர்த்தியைக் கேளும்...''

''நான் கேட்பது சரி இல்லை ஐயா. அது நிர்வாக ஒழுங்குக்கு முரணானது. எனவே தயவுசெய்து நீங்கள் வந்து கேளுங்கள்'' என்றான் ரவீந்திரன்.

சிவசுந்தரமூர்த்தி எழுந்து சென்றார். அவரின் மனதுள் ரவீந்திரனது உருவம் நிழலாடியது. செவிக்குள் அவன் சொன்ன வார்த்தைகள் திரும்பத் திரும்ப ஒலித்தன. ''நல்லவர்களை அனியாயமாகப் பகைத்து விட்டோமோ...?'' என்று எண்ணினார்.

மறுநாள் காலை சிவசுந்தரமூர்த்தி பாடசாலைக்குச் சென்று விக்னேஸ்வரமூர்த்தியைச் சந்தித்து ராகுலனது அனுமதியைப் பற்றிக் கதைத்தார். அதற்கு முன் ரவீந்திரன் இரவு சிவசுந்தரமூர்த்தி வந்ததைப் பற்றிச் சொல்லியிருந்தான்.

ராகுலனுக்கு உயர் வகுப்பில் அனுமதி வழங்கினார் விக்னேஸ்வரமூர்த்தி. விக்னேஸ்வரமூர்த்தியையும் ரவீந்திரனையும் பற்றி கல்விப் பணிப்பாளர் கூறிய வார்த்தைகள் சிவசுந்தரமூர்த்திக்கு நினைவுக்கு வந்தன. உண்மையில் அவர்கள் சிறந்தவர்கள் தான் என்று நினைத்தார். அவரின் மனம் இலேசாகி இருந்தது. ‘‘ஊருக்குச் சேவை செய்யும் அவர்களை நானும் மதிக்க வேண்டும்’’ என்று நினைத்துக் கொண்டார்.

123. செறிவுஅறிந்து சீர்மை பயக்கும் அறிவுஅறிந்து

ஆற்றின் அடங்கப் பெறின்.

நல்லவற்றை தனது அறிவால் அறிந்து அடக்கமுடையவராய் நல்வழியில் வாழ்ந்தால் அந்த அடக்கம் பெரியவர்களால் மதிக்கப்பட்டு, மேன்மை தரும்.

பெரியது

அந்த வருடம் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தின் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை முடிவுகளிலும் க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகளிலும் பெரும் புரட்சி ஏற்பட்டிருந்தது. சாதாரண பரீட்சையில் ஐம்பது மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் திறமைச்சித்தி பெற்றிருந்தனர். உயர்தரப் பரீட்சையில் தோற்றியவர்களில் எழுபத்தைந்து வீதமான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். நல்ல பெறுபேறு வருமென்று ஆசிரியர்களும் விக்னேஸ்வரமூர்த்தியும் எதிர்பார்த்தனர். ஆனால் இவ்வளவு தூரம் சிறப்பான பெறுபேறு வருமென அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அதனால் அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவர்களை விட பழைய மாணவர்களும் பெற்றோரும் மகிழ்ந்தனர். தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்த அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் பாராட்டு விழா நடத்த விரும்பினர். முதலில் விக்னேஸ்வரமூர்த்தி மறுத்தார். கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கத்தின் மகன் ஆரூரன் உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்று மருத்துவத் துறைக்கு

தெரிவாகி இருந்தான். அதனால் பாராட்டு விழா நடத்த சுந்தரலிங்கமே முழுமூச்சாக இருந்தார். பாராட்டு விழா நடத்த பணம் கேட்டபோது விக்னேஸ்வரமூர்த்தி மறுத்தார். ‘‘எமது கடமையைத் தான் நாம் செய்தோம். அதற்கான வேதனம் நமக்குக் கிடைக்கிறது. கூலிக்காக வேலை செய்பவர்களைப் பாராட்ட முடியுமா...? அதனால் எமக்கு பாராட்டு விழாத் தேவையில்லை. அதற்குச் செலவு செய்யும் பணத்தை விளையாட்டு மைதானம் திருத்தத் தாருங்கள்’’ என்றார்.

‘‘விளையாட்டு மைதானம் வாங்க இருந்த எமக்கு கணேசமூர்த்தி நன்கொடையாக விளையாட்டு மைதானக் காணியைத் தந்துவிட்டார். திருத்துவது பெரிய வேலையா என்ன...? நீங்கள் தயவுசெய்து விழாவுக்கு ஒத்துக்கொள்ளுங்கோ’’ என்றார் தணிகாசலம்.

விக்னேஸ்வரமூர்த்தி தணிகாசலத்தின் கோரிக்கையை மறுத்தார். தணிகாசலம் வற்புறுத்தியும் அவர் கேட்கவில்லை. அதனால் விழா நடத்தும் பொறுப்பை சுந்தரலிங்கத்திடம் விட்டுவிட்டார்.

தனது மேலதிகாரியின் அன்பான வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார் விக்னேஸ்வரமூர்த்தி. அன்று நாவலடிக் கிராமம் மட்டுமல்ல நகரமே விழாக்கோலம் பூண்டது. நாவலடிக் கிராம வீதிகள் எல்லாம் கூட்டித் துப்பரவு செய்யப்பட்டு சோடிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தமது வீட்டு வாசலில் பூரணகும்பம் வைத்தனர்.

விழா நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் பூசையுடன் ஆரம்பமானது. அவ் ஆலயத்தின் பிரதம குருக்கள் இராஜசங்கரசர்மா விக்னேஸ்வரமூர்த்திக்கு மலர்மாலை அணிவித்து காளாஞ்சி கொடுத்தார். பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் ஆசிரியர்களுக்கு மலர்மாலை அணிவித்தனர். நகரில் உள்ள பிரபல நாதஸ்வர வித்துவான்களும் தவில் வித்துவான்களும் மங்கல இசை இசைக்க விக்னேஸ்வரமூர்த்தியும் ஆசிரியர்களும் ஊர்வலமாக பாடசாலையை நோக்கி வந்தனர். ஒவ்வொரு வீட்டு வாசலிலும் விக்னேஸ்வரமூர்த்திக்கும் ஆசிரியர்களுக்கும் மலர்மாலை அணியப்பட்டது. அதைப் பார்த்த வேறு அரசாங்க திணைக்களங்களில் வேலை செய்யும் அதிகாரிகள் தாமும் ஆசிரியர்களாக இருந்திருக்கலாமென எண்ணினர்.

ஊர்வலம் பாடசாலையைச் சென்றடைய வெகுநேரம் எடுத்தது. இரவு எட்டு மணிக்கு கூட்டம் ஆரம்பமானது. முதலில் பாராட்டு விழாவுக்கு தலமை வகித்து சுந்தரலிங்கம் தனது தலமை உரையில்; ‘‘சிறியதொரு பாடசாலையாக அமரர் வைத்திலிங்கத்தால் நிறுவப்பட்ட இப்பாடசாலை இன்று பெருவளர்ச்சி கண்டுள்ளது. இந்தக் கிராமமான நாவலடியில் உள்ள பாடசாலைகளை மட்டுமன்றி அயற்கிராமங்களில் உள்ள பல பாடசாலைகளையும் மூடவேண்டிய அளவிற்கு இப்பாடசாலை வளர்ச்சி கண்டுள்ளது. வழமையாக பட்டணப்

பாடசாலைகளில் தான் பிரமுகர்களின் பிள்ளைகள் படிப்பார்கள். ஆனால் இங்கு நிலமை தலைகீழாக உள்ளது. பட்டணத்தில் உள்ள பல பிரமுகர்களின் பிள்ளைகள் இப்பாடசாலையில் கற்பது ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது. இதற்கெல்லாம் காரணம் அதிபர் விக்னேஸ்வரமூர்த்தி. அவர் பத்து வருடங்களுக்கு முன்பு பொறுப்பேற்றதை விட தற்பொழுது நூறு மடங்கு பாடசாலை வளர்ச்சியடைந்துள்ளது. விக்னேஸ்வரமூர்த்தி சிறந்த பண்பாளன். கல்விமான். சகல ஆசிரியர்களையும் தன்னைப் போல மதிப்பவர். அடக்கமுடையவர். எவ்வளவோ பிரச்சினைகள் இப்பாடசாலைக்கு வந்தன. அவற்றையெல்லாம் கோபம் கொள்ளாது, பரபரப்பு அடையாது, பயப்படாது அடக்கத்துடன் இருந்து எதிர்கொண்டார். அதனால் வெற்றியும் பெற்றார். அவரைக் கோபிப்பவர்களைக் கூட அவர் நேசிப்பவராக இருந்தார். அண்மையில் அவருடன் பிரச்சினைப்பட்ட ஓர் ஆசிரியரை இடமாற்றம் செய்தேன். ஆனால் அவர் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. விழாவுக்கு நான் அவரைக் கேட்டபோது அவ்வாசிரியரின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோரிக்கை விட்டார். அதற்கு நான் ஒப்புக் கொண்டுள்ளேன். அத்துடன் இங்கு கற்பிக்கின்ற ஆசிரியர்கள் அனைவரும் அடக்கமாக வேலை செய்வதால் தான் இப்பாடசாலை உயர்வடைய முடிந்தது. அதிபரின் வலக்கரமாகத் திகழும் திரு. ரவீந்திரன் ஆசிரியரின் எதிர்காலமும் மிகவும் பிரகாசமாக உள்ளது. அவரும் எதிர்காலத்தில் விக்னேஸ்வரமூர்த்தியைப் போல் ஒரு சிறந்த அதிபராக வருவாரென நம்புகிறேன்...'' மக்கள் பலமாக கைதட்டி ஆரவாரம் செய்தனர். கரகோசம் அடங்க வெகுநேரம் எடுத்தது. தொடர்ந்து கல்விப் பணிப்பாளர் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

124. நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்

மலையினும் மாணப் பெரிது.

ஒழுக்கத்தில் இருந்து மாறுபடாது அடங்கி வாழ்வோனது உயர்வு, மலையின் உயர்வை விட உயர்ந்ததாகும்.

செல்வத்துள் செல்வம்

மணிவண்ணன் நாவலடிக் கிராம மக்களின் விவசாய விளைபொருட்களை மொத்தமாக வாங்கி பிறமாவட்டங்களுக்குக் கொண்டுசென்று விற்பவன். நாவலடி ஒரு விவசாயக் கிராமம்.

நாவலடிக் கிராமத்தின் கிழக்குப்பக்கம் வயல் நிலம். உச்சுவில் குளம் என்றொரு பெரிய குளம் கிழக்குக் கரையில் வயல்களுக்கு நடுவே இருக்கிறது. அக்குளத்தின் மூலம் வயல்களுக்கு நீர் பாய்ச்சுவதால் வருடத்தில் மூன்று முறை நெல் சாகுபடி செய்ய முடியும். அத்துடன் வயல் நிலத்தில் நிலக்கடலை, எள்ளு, உழுந்து, பயறு போன்ற தானியங்கள் நல்ல விளைச்சலைத் தரும். பல ஊர்களில் இருந்து பல வியாபாரிகள் வந்து நாவலடிக் கிராம மக்களின் விளைபொருட்களைப் பெற்றபோதும் மணிவண்ணனுக்கே அவ்வூர் மக்களில் பெரும்பான்மையானோர் தமது விளைபொருட்களைக் கொடுப்பர். நெல் வருடத்திற்கு ஐயாயிரம் மூட்டையும் உழுந்து, பயறு, நிலக்கடலை, எள்ளுப் போன்ற தானிய வகைகள் வருடத்திற்கு இரண்டாயிரம் மூட்டையும் விளையும். அதைவிட செம்மண் பிரதேசத்தில் விளைவிக்கப்படும் உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய், திராட்சை போன்றவற்றையும் மணிவண்ணனுக்கே விற்பனை செய்வார்கள்.

மணிவண்ணன் நல்லவன். பண்பானவன். சகலரையும் வேறுபாடு பாராது மதிப்பவன். அத்துடன் விதைப்புக் காலங்களில் விவசாயிகளுக்கு பண உதவி செய்வான். அறுவடையின் போது அப்பணத்தை வட்டியின்றிப் பெற்றுக்கொள்வான். மொத்தமாக செயற்கைப் பசளை வகைகளையும் கிருமிநாசினி வகைகளையும் இறக்குமதி செய்து விற்பான். அப்பொருட்களை நாவலடிக் கிராமத்தைச் சேர்ந்த கைலாயநாதனின் விற்பனை நிலையத்தில் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். பணமில்லாதோர் அதே விலையில் கடனாகப் பெறலாம். விவசாயிகளின் வீடுகளில் நடைபெறும் மங்கல வைபவங்களுக்குச் சென்று பரிசுகள் கொடுப்பான். அமங்கல வைபவங்களுக்கும் செல்வான். சிலவேளைகளில் மரண வீடுகளில் செலவு செய்யமுடியாது கஸ்டப்பட்டால் அவர்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்வான். அதை அவர்கள் திருப்பித் தருவார்களென அவன் எதிர்பார்ப்பதில்லை.

தன்னிலும் வயதில் குறைந்தவர்களை அவன் பண்புடன் தம்பி என்றும், தன்னிலும் வயது கூடியவர்களை அண்ணை என்றும் வயதில் முதியோரை ஐயா என்றும் அழைப்பான். நாவலடி மக்கள் முதலாளி என்று அவனை அழைப்பார்கள்.

கணேசமூர்த்தி கணபதி மத்திய மகா வித்தியாலயத்திற்கு நன்கொடையாக அளித்த காணியைத் திருத்தி சுற்றிவர மதில்கட்டி மேடை அமைத்து சுற்றிவர பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கக்கூடிய ஆசன வசதிகளைச் செய்வதற்கு இருபத்தைந்து இலட்ச ரூபா தேவையென பாடசாலைக் கட்டட நிர்மாணப் பொறியியலாளர் தெரிவித்தார். அடுத்த முறை என்ன கஸ்டப்பட்டாவது கணேசமூர்த்தி அன்பளிப்புச் செய்த காணியில் தான் விளையாட்டுப்போட்டிளை

வைப்பதென விக்னேஸ்வரமூர்த்தி தீர்மானித்தார். அதற்கு எப்படி நிதி சேகரிக்கலாம் என்று ஆலோசித்துக்கொண்டிருந்தார்.

அப்பொழுது தணிகாசலம் அங்கு வந்தார். ‘‘என்ன ஐயா யோசித்துக் கொண்டிருக்கிறியள்.’’

‘‘அடுத்த முறை எப்படியும் கணேசமூர்த்தி தந்த காணிக்குள் தான் விளையாட்டுப்போட்டி வைத்தல் வேண்டும். திருத்தி வேலை செய்ய இருபத்தைந்து இலட்சம் ரூபா தேவையென்று பொறியியலாளர் சொல்கிறார். அதுதான் என்ன செய்யலாமென்று யோசிக்கிறன்...’’

‘‘நாங்கள் ஒருக்கால் மணிவண்ணனைக் கேட்டுப்பார்த்தாலென்ன’’

‘‘அவ்வளவு காசு தருவரே...?’’

‘‘கேட்டுப் பார்ப்பம். தாறதைத் தரட்டும். பிறகு ஊருக்கை சேர்ப்பம்...’’

‘‘சரி எப்ப போய் சந்திப்பம்...’’

‘‘இரவைக்குப் போவம். ஆர் ஆரைக் கூட்டிக்கொண்டு போவம்’’ தணிகாசலம் கேட்டார்.

‘‘இரண்டு பேரும் போவம். தேவையெண்டால் ரவீந்திரனையும் கூட்டிக்கொண்டு போவம்.’’

அன்று இரவு எட்டு மணிக்கு விக்னேஸ்வரமூர்த்தியும் ரவீந்திரனும் தணிகாசலமும் மணிவண்ணனின் வீட்டுக்குச் செல்லப் புறப்பட்டனர். அப்பொழுது அங்கு வந்த உருத்திரமூர்த்தி தானும் வருவதாகக் கூறினார். உருத்திரமூர்த்திக்கு பழையபடி கணபதி மத்திய மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் கிடைத்துவிட்டது. அதன்பின் உருத்திரமூர்த்தி தனது தவறை உணர்ந்து விக்னேஸ்வரமூர்த்தியிடம் மன்னிப்புக் கேட்டார். தற்போது அவர் தனியார் கல்வி நிறுவனத்திற்குச் செல்வதில்லை. இரவும் பகலும் விக்னேஸ்வரமூர்த்தியோடு இருந்து பாடசாலை வேலைகளைச் செய்துகொண்டிருந்தார்.

மணிவண்ணன் வீட்டிற்கு அவர்கள் சென்ற பொழுது அவன் இரவு உணவை உண்டுகொண்டிருந்தான். அவர்களைக் கண்டவுடன் கையைக் கழுவிவிட்டு ஓடோடி வந்து வரவேற்றான். ‘‘ஐயா, நீங்கள் பெரிய மனிதன். என்னைத் தேடி வந்திருக்கிறீர்கள். சொல்லியனுப்பி இருந்தால் நான் பாடசாலைக்கு வந்திருப்பன். கைலாயநாதன் தினமும் வாறவன். அவனிடம் சொல்லியிருக்கலாம்....’’

“பரவாயில்லை. இது நாம் தேடி வந்து கதைக்க வேண்டிய விடயம்...” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“எப்படியான விஷயமென்றாலும் பெரியவர்களான உங்களை அலைக்கழிக்கக் கூடாது. சொல்லுங்கோ ஐயா...” என்றான் பணிவுடன்.

“எமது பாடசாலை விளையாட்டு மைதானத்தை திருத்த வேண்டும்...” விக்னேஸ்வரமூர்த்தி கதைத்துக்கொண்டிருக்கும் போது மணிவண்ணன் பணிவுடன் சொன்னான் “நான் என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் சொல்லுங்கோ நான் செய்யிறன்.”

“விளையாட்டு மைதானத்தை திருத்தியமைக்க இருபத்தைந்து இலட்ச ரூபா வேணும்....”

“முழுத்தையும் நான் தாறன்...”

விக்னேஸ்வரமூர்த்தி அதிர்ந்து போனார். “உங்களுக்கு நன்றி சொல்ல வார்த்தைகளே இல்லை” கண்கலங்கினார் விக்னேஸ்வரமூர்த்தி.

125. எல்லார்க்கும் நன்றாஆம் பணிதல்; அவருள்ளும்

செல்வர்க்கே செல்வம் தகைத்து.

பணிவு உடையவர்களாக வாழுதல் எல்லோருக்கும் நன்மை தரும். அவர்களுள் செல்வந்தர்களுக்கு அது மற்றொரு பெரும் செல்வமாகும்.

சிறப்பு

நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய மண்டபத்தில் இருந்தான் கணேசமூர்த்தி. அவன் இப்பொழுது முற்றாகத் திருந்திவிட்டான். முன்பென்றால் நன்றாகக் குடித்துவிட்டு ஊரவருடன் வலியச் சண்டைக்குப் போவான். பெரும் நிலச்சுவாந்தன் ஆன அவனுக்கு வருமானம் அளவுக்கு மீறி வந்தது. அதனால் கெட்ட நண்பர்களோடு சேர்ந்து குடித்துவிட்டு ஊரவர்களுடன் மட்டுமல்லாது தனது இனத்தவர்களுடனும் குடும்பத்தினருடனும் அடிக்கடி

சண்டைக்குப் போவான். அவனது மனைவி நிர்மலா மிகவும் நல்லவள். கணவனைத் தெய்வமாக மதித்து அவனுக்குப் பணிவிடைகள் செய்பவள். எதிர்த்துப் பேசாதவள். எனினும் கணேசமூர்த்தி அவளுடன் தேவையில்லாமல் சண்டைக்குப் போவான். அவள் சமைத்த உணவுகளை எடுத்துக் கொட்டுவான். சட்டி, பானைகளை உடைப்பான். அவனது தொந்தரவுகளைத் தாங்கமாட்டாது அவள் தனது பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு தனது தந்தையின் வீட்டுக்குச் சென்றுவிடுவாள். அவளுக்கு ஏழு ஆண் சகோதரர்கள். எல்லோரும் நல்ல நிலையில் இருக்கிறார்கள். நிர்மலாவின் தகப்பனான செல்லத்துரை அவளை மிகவும் பிரியமாக வளர்த்தார். வைத்திலிங்கமும் அவர்களது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் நாவலடிக் கிராமத்தில் நல்லமுறையில் வாழ்ந்தமையால் தான் அவர் கணேசமூர்த்தியை மாப்பிளையாக எடுத்தார். தனது ஒரே செல்ல மகளான நிர்மலா படும் வேதனையைப் பார்த்துத் துடிதுடித்துப் போவார். அவளது ஏழு சகோதரர்களும் அவளது நிலைகண்டு வருந்தினர். அவள் கணேசமூர்த்தியுடன் சண்டையிட்டுக் கொண்டு வீட்டுக்கு வரும்போது இனிமேல் அவளை கணேசமூர்த்தியுடன் அனுப்புவதில்லை என்று தீர்மானிப்பார்கள். ஒருவாரம் செல்ல கணேசமூர்த்தி குடித்துவிட்டு வந்து அவர்களின் வீட்டுவாசலில் நின்று கண்டபடி அவர்களை ஏசுவான். அதனால் மானத்திற்குப் பயந்த அவர்கள் நிர்மலாவை அவனுடன் அனுப்பிவிட்டு கண்ணீர் விடுவார்கள்.

கணேசமூர்த்தி ஊரில் உள்ள ஒருவனை பலமாகத் தாக்கியதால் அவன் உயிருக்குப் போராடியபடி ஒருமாதம் ஆஸ்பத்திரியில் இருந்தான். அதனால் கணேசமூர்த்தி சிறை செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் நிர்மலாவையும் பிள்ளைகளையும் அவளது தந்தை தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

சிறையால் வந்த கணேசமூர்த்தி துயரத்துடன் வீட்டில் இருந்தான். அவனுக்கு வெளியே செல்ல வெட்கமாக இருந்தது. தனது மாமனாரின் வீட்டுக்குச் செல்ல அவமானமாக இருந்தது. அதனால் வீட்டினுள்ளே அடைந்து கிடந்தான்.

நல்ல குடும்பத்தில் பிறந்த ஒருவன் கெட்டழிந்து போவதை விரும்பாத விக்னேஸ்வரமூர்த்தியும் தணிகாசலமும் அவனது வீட்டுக்குச் சென்றனர். அவன் மிகவும் சோகமாக இருந்தான். அவர்களைக் கண்டதும் பரபரப்புடன் எழுந்தான். தோளில் இருந்த சால்வையை எடுத்து இடுப்பில் கட்டிவிட்டு ‘‘இருங்கோ ஐயா...’’ என்றான். அவனது நா தழுதழுத்தது.

‘‘கணேசமூர்த்தி நீ நல்லதொரு பரம்பரையில் பிறந்தவன். அந்தப் பரம்பரையின் மானத்தை தொடர்ந்து காப்பாற்ற வேண்டியது உனது பொறுப்பு. உனது தீய செயல்களால் உனது தந்தையையும் வம்சத்தையும் குறை சொல்கிறார்கள். சமூகத்தில் நாம் எமக்காக

மட்டும் வாழ்வதில்லை. குடும்பத்திற்காகவும் சமூகத்திற்காகவும் நாட்டுக்காகவும் வாழவேண்டும். இன்னும் காலங்கடந்து விடவில்லை. இனியும் நீ திருந்தி வாழலாம். நீ திருந்துவாய் என்ற நம்பிக்கையுடன் தான் நாங்கள் இங்கு வந்தோம்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

கணேசமூர்த்தியால் பேசமுடியவில்லை. அழுதான். விம்மிவிம்மி அழுதான். ''நான் இனி திருந்தி வாழ்வேன் வாத்தியார். ஒருவருக்கும் தீங்கு செய்யமாட்டேன், இது சத்தியம்'' என்றான்.

தற்போது நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் தொண்டு செய்வது தான் அவனது வேலை. அவனது மனதில் அடிக்கடி பழைய சம்பவங்கள் தோன்றி சித்திரவதை செய்யும். அவனது நல்ல நடத்தையைக் கேள்விப்பட்ட நிர்மலாவின் தந்தையும் சகோதரங்களும் நிர்மலாவையும் பிள்ளைகளையும் அழைத்து வந்து கணேசமூர்த்தியோடு சேர்த்து வைத்தனர். அவன் மனைவியை நேசித்தான். பிள்ளைகளை நேசித்தான். கிராமத்தை நேசித்தான். அதனால் தான் பாடசாலைக்கு அருகில் இருந்த காணியை அன்பளிப்பாகப் பாடசாலைக்குக் கொடுத்தான்.

அவனைப் பேசியவர்கள் எல்லாம் மனவருத்தப்பட்டார்கள். கணேசமூர்த்தி தான் அடித்தவனிடம் சென்று மன்னிப்புக் கேட்டான். அவனுக்கு பெருந்தொகையான பணத்தைக் கொடுத்தான். அப்பொழுது அவனது தந்தையார் சொன்னார் ''கணேசு உங்கடை குடும்பத்தை எனக்குத் தெரியும். எல்லாரும் தர்மவான்கள். ஏதோ கிரகக் கோளாறாலை இப்படி நீ நடந்துவிட்டாய். அந்த நல்ல குடும்பத்தின்ரை பண்புகள் இருந்ததால் தான் இண்டைக்கு வீடு தேடி வந்து காசு தாறாய்... நீ நல்லாய் இருக்க வேணும் தம்பி. உம்முடைய வம்சத்தாலை தான் நாவலடிக் கிராமம் வாழ்ந்தது. அதே போல உம்மாலும் வாழ வேணும்...'' அவரது வார்த்தைகள் காதில் ஒலித்தன. இப்பொழுது எவ்வளவு மகிழ்வாக இருக்கிறது. முன்பு ஏன் நான் இப்படி நடந்தேன் என்று மனவருத்தப்பட்டான் கணேசமூர்த்தி.

தனது ஐம்பொறிகளையும் அடக்கி குடும்ப சன்னியாசியாக வாழ்ந்துகொண்டிருந்தான் கணேசமூர்த்தி. அவனது மனம் அடங்கி ஒடுங்கி இருந்தது. மதுபானங்கள் அருந்துபவர்களைக் கண்டால் தனது வாழ்க்கையை எடுத்துக்கூறி திருந்தும்படி சொல்வான். தனது தகப்பன், பேரன், பூட்டன், கொப்பாட்டன்மார் எல்லோரும் வாழையடி வாழையாக நல்ல பண்புகளுடன் வாழ்ந்ததால் தான் தான் நல்ல முறையில் வாழ்கிறேன் என்று நினைத்தான். தான் நல்ல முறையில் வாழ்ந்தால் தான் தனது வம்சம் நல்ல முறையில் வாழுமெனக் கருதி சகல தீய செயல்களில் இருந்தும் விலகி நடந்தான். ஓய்வான நேரங்களில் மகா கணபதி ஆலயத்தில் தியானத்தில் இருப்பான். அன்னதானம்

வழங்குவான். ஏழை மாணவர்களுக்கு கல்வி கற்க உதவி செய்வான். எதிலும் பற்றில்லாமல் கணபதியின் பாதங்களையே பற்றி வாழ்ந்தான்.

126. ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

ஒருவன் தனது ஐம்பொறிகளையும் தனது உறுப்புக்களை ஒடுக்குவது போல ஒடுக்கி வாழ்ந்தானேயானால் அ.ஃது அவனது ஏழேழு பிறப்பிலும் காப்பாகும் சிறப்புடையது.

இழுக்கு

சிவசுந்தரமூர்த்தியின் செல்லமகள் கஜேந்தினி. பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவள். நல்ல குரல்வளம் மிக்கவள். அவள் பாடசாலையில் பாடினால் எல்லோரும் மெய்மறந்து கேட்பார்கள். தரம் ஒன்றில் கல்வி கற்கும் சிறிய பையன் கூட தனது விளையாட்டுக்களை விட்டுவிட்டு அவள்பாடும் இடத்திற்கு வந்து கேட்டு ரசிப்பான். அத்தனை ராகசுத்தமாகப் பாடுவாள். அத்துடன் நடனமும் பயின்றவள். பல்கலைக்கழக மண்டபத்தில் அவளது நடன அரங்கேற்றம் நடைபெற்ற பொழுது மாணவர்களும் விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் அவளது நடனத்தைக் கண்டு மெய்சிலிர்த்தனர். அவளுக்கு நட்டுவாங்கம் செய்த நடன ஆசிரியை சுந்தரலட்சுமி அவளது அங்க அசைவுகளையும் முகபாவத்தையும் முத்திரைகளையும் கண்டு அதிசயித்தார். அவளுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறதென்பது பாராட்டினாள். ஏற்கனவே சற்றுக் கர்வமான கஜேந்தினி நாட்டிய அரங்கேற்றத்துக்குப் பின் கர்வமாக தன்னுடன் பழகுவோரிடம் நடக்கத் தொடங்கினாள்.

தனக்கு நடனம் கற்பித்த சுந்தரலட்சுமியையும் அவள் அலட்சியம் செய்தாள். சுந்தரலட்சுமி தனது மாணவர்களுக்கு நடனம் கற்பிப்பதற்கு தனக்கு உதவியாக கஜேந்தினியை அமர்த்தினாள். சுந்தரலட்சுமிக்கு நேரமில்லாத வேளைகளில் கஜேந்தினியே நடன வகுப்புக்களை நடாத்தினாள்.

கஜேந்தினி மாணவர்களுடன் கடுமையாக நடந்துகொள்வாள். தவறாக மாணவர்கள் ஆடினால் கண்டபடி ஏசுவாள். சரியாக நடனம் ஆடினாலும் தவறு என்று கூறித் திருத்துவாள். “சுந்தரலட்சுமி அம்மா

இப்படித்தான் சொல்லித் தந்தவர்'' என்று மாணவர்கள் கூறினால், ''அவாவுக்கு என்ன தெரியும். அவா பழைய முறையில் தான் கற்பிக்கிறா. நான் பல புதிய நடனம் சம்மந்தமான புத்தகங்களைப் படித்தனான். இது தான் சரி. அப்படியே செய்யுங்கள்'' என்பாள். அத்துடன் அவள் நடனம் கற்கும் போதும் சற்றுத் திமிருடன் நடந்து கொள்வாள். சிவசுந்தரமூர்த்திக்காக சுந்தரலட்சுமி பொறுத்துக்கொள்வாள்.

பல்கலைக்கழகத்தில் மாணவர்களை மதிப்பில்லாமல் ஏசுவாள். அதனால் மாணவிகளில் அநேகர் அவளுடன் சேர்வதில்லை. பல்கலைக்கழக மாணவர்கள் எப்பொழுதும் அவளைச் சீண்டுவார்கள். அவளது துவிச்சக்கரவண்டியின் காற்றைக் கழற்றிவிடுவார்கள். அவள் வெகுதூரம் துவிச்சக்கரவண்டியைத் தள்ளிச்சென்று தான் காற்றடிப்பாள். ஏனைய மாணவிகளின் துவிச்சக்கரவண்டி காற்றுப்போனால் அவளுடன் படிக்கும் யாராவது ஒரு மாணவன் அவர்களிடம் துவிச்சக்கர வண்டியைப் பெற்றுச்சென்று காற்று அடித்துக் கொண்டுவந்து கொடுப்பார்கள்.

அன்று கஜேந்தினியின் துவிச்சக்கரவண்டியின் பிற்சக்கரம் காற்றுப் போய்விட்டது. அன்று அவளது துவிச்சக்கரவண்டியின் பிற்சக்கரச் சில்லின் காற்றை யாரும் திறந்துவிடவில்லை. காற்றுப் போய் நின்ற துவிச்சக்கரவண்டியைக் கண்டதும் கஜேந்தினிக்கு கோபம் கோபமாக வந்தது. ஆத்திரத்துடன் மாணவர்கள் நிற்கும் இடத்திற்குச் சென்றாள். மாணவன் ஒருவன் ஏதோ சொல்ல மற்றைய மாணவர்கள் பலமாகச் சிரித்தனர். அவர்களின் சிரிப்பு கஜேந்தினிக்கு அளவுக்கதிகமான ஆத்திரத்தை வரவழைத்தது. ''எளிய நாயள், இஞ்சை என்ன படிக்கவே வாறியள். நல்ல குடும்பத்தில் பிறந்தால் தான் நல்ல குணம் வரும். காவாலிகள், கடப்புளிகளெல்லாம் பல்கலைக்கழகத்துக்கு வந்தால் இதுகளைத் தான் செய்யும். காற்றுத் திறந்தவனைக் கண்டால் செருப்பாலை அடிப்பன்.'' என்றவாறு காலில் இருந்த செருப்பைக் கழற்றினாள்.

மாணவர்கள் திகைத்து நின்றனர். ''வாங்கோடா போவம். பிசாசோடை வாய் கொடுத்தால் எங்கடை மதிப்புத்தான் போகும்...'' என்றான் ஒருவன். மாணவர்கள் மெதுவாக நகர்ந்தனர்.

''வாயை மூடடி... நீ பெண்பிள்ளையா... பசாசு... அதாலை தான் காற்றுப் போகுது. இஞ்சை எத்தனை பெண்கள் படிக்கிறார்கள். உன்ரை ஒரு வண்டிக்குத்தான் காற்றுப் போகுதோ...'' ஏசினான் ஒருவன்.

“டேய் மச்சான் கதையாதையடா... உதுக்கு கதைச்சாலும் விளங்காது, வா போவம்...” என்று கதைத்தவனை இழுத்தான் இன்னொருவன்.

நடராஜா இசைக் கல்லூரியில் நடன விரிவுரையாளருக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. கஜேந்தினி விண்ணப்பித்திருந்தாள். அவளை தேர்ந்தெடுப்பதற்காக தனது முழுச் செல்வாக்கையும் பயன்படுத்தியிருந்தார் சிவசுந்தரமூர்த்தி.

நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. தேர்வாளர்களில் ஒருவராக சுந்தரலட்சுமி இருந்தாள். கஜேந்தினி நேர்முகப் பரீட்சைக்காக அவர்களின் முன்வந்தாள்.

“வணக்கம்” சொன்னாள் கஜேந்தினி.

“வணக்கம் அமருங்கள்” என்றாள் சுந்தரலட்சுமி.

“நன்றி” எனக் கூறிவிட்டு ஆசனத்தில் அமர்ந்தாள் கஜேந்தினி.

தேர்வாளர்கள் மூவரும் அவளது சுயவிபரக் கோவையைப் பரீட்சித்தனர். மிகவும் நல்ல பெறுபேறுகளை அவள் பெற்றிருந்தாள்.

கஜேந்தினி சென்றதும் மூவரும் தமக்குள் கதைத்தனர்.

“நல்ல கெட்டிக்காரி. இவளை எடுக்கலாம்” தேர்வாளர் ஒருவர் சொன்னார்.

“நானும் அப்படித்தான் நினைக்கிறேன்” என்றார் மற்றைய தேர்வாளர்.

“இவளை எடுக்கக்கூடாது. கற்றவள் அடக்கமாக நடத்தல் வேண்டும். இவள் நா கூசாது எல்லோரையும் ஏசுவாள். அவள் எனது மாணவி. இவளை மாணவி என்று சொல்லவே எனக்கு விருப்பமில்லை” என்றாள் சுந்தரலட்சுமி.

நடராஜா இசைக்கல்லூரியின் விரிவுரையாளர் பதவி இன்னொருவருக்கு கொடுக்கப்பட்டது.

நாட்கள் சில சென்றன. கஜேந்தினிக்கு திருமணம் பேசப்பட்டது. அயல் ஊரில் மருத்துவராகக் கடமை புரியும் திவாகரனுக்கு கஜேந்தினியை திருமணம் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. திவாகரனின் தந்தை கந்தசாமி. விவசாயம் செய்பவர். அவருக்கு காது கேட்பது குறைவு. அவர் சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தார். சரியான வெயில். குடை பிடித்திருந்த போதும் காலுக்கு செருப்பு

அணியவில்லை. அதனால் கால் சுட்டது. களைப்புடன் வந்த அவரை துவிச்சக்கர வண்டியில் வேகமாக வந்த கஜேந்தினி மோதிவிட்டாள். இருவரும் வீதியின் நடுவே விழுந்தனர்.

கஜேந்தினிக்கு முழங்கையில் காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்தது. கோபத்துடன் எழுந்த அவள், ‘‘வயது போன கிழடுகளுக்கு வீதியிலை என்ன வேலை வேண்டிக் கிடக்கு. பேசாமல் வீட்டிலை இருக்கிறத்தை விட்டுட்டு ஊர் உலாத்த வெழுக்கிட்டிட்டியள்...’’ என்று கோபத்துடன் ஏசினாள்.

கந்தசாமி மெதுவாக எழுந்தார். வீதியால் சென்றோர் ஓடிவந்து அவரைத் தூக்கினர். ‘‘இதாரப்பா இந்தப் பெண். சரியான வாய்க்காரி போல் தெரிகிறது’’ என்றார் கந்தசாமி.

‘‘மெல்லமாய் கதையுங்கோ. அவளுக்குக் கேட்டால் சண்டைக்கு வந்திடுவள். சிவசுந்தரமூர்த்தீன்ரை மகள். சரியான வாய்க்காரி. உவளைக் கலியாணம் செய்யிறவன் அதோ கதிதான்...’’ என்று கூறிவிட்டுச் சென்றார் வழிப்போக்கர் ஒருவர்.

அவளது திருமண விடயமாகப் பேசவந்த கந்தசாமி ‘‘கடவுள் தான் காப்பாற்றினார்... பிள்ளையாரே’’ என்று கூறிக்கொண்டு திரும்பி நடந்தார்.

127. யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்

சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.

ஒருவன் காக்கவேண்டியவற்றுள் எவற்றைக் காக்காது விட்டாலும் தனது நாவைக் காக்க வேண்டும். காக்காவிட்டால் அவன் கூறும் சொற்கள் வழுவாகித் துன்பத்தைக் கொடுக்கும்.

ஒருதீது

தரகர் தம்பையா சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றார். அவர் அங்கு சென்றபோது சிவசுந்தரமூர்த்தி குளித்துக்கொண்டிருந்தார். கஜேந்தினி முன்விறாந்தையிலுள்ள ஆடம்பர நாற்காலியொன்றில் காலுக்கு மேல் கால் போட்டபடி அமர்ந்திருந்தாள். தம்பையாவைக் கண்டதும் ‘‘அப்பா குளிக்கிறார். கதிரையில் இருங்கோ...’’ என்றாள்.

தம்பையா எதுகும் பேசவில்லை. அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டார். அவளைப் பார்க்க தம்பையாவுக்கு கோபம் கோபமாக வந்தது. ஒரு பெண்பிள்ளைக்குரிய எந்தக் குணத்தையும் அவளில் காணமுடியவில்லை. கட்டைப் பாவாடை அணிந்து கால்மேல் கால் போட்டு அமர்ந்திருந்ததால் அவளின் கால்களின் செழுமையான பகுதியில் முக்கால்வாசிப் பகுதி கண்காட்சிக்கு வைக்கப்பட்ட பொருள்போல் தெளிவாகத் தெரிந்தது.

''தம்பையா... வந்து கன நேரமே...'' என்றவாறு வந்தார் சிவசுந்தரமூர்த்தி.

''இப்பத்தான் வந்தனான்.'' என்றவாறு ஆசனத்தால் எழுந்தார் தம்பையா.

''கந்தசாமி என்னவாம்...?''

''ஒரு பிழை நடந்திட்டுது பாருங்கோ. நேற்றுப் பின்னேரம் கந்தசாமியர் உங்கடை வீட்டை வந்தவர்...'' நிறுத்தினார் தம்பையா.

''நேற்றைக்கோ... இல்லையே நேற்று முழக்க நான் ஒரு இடமும் போகேல்லை...''

''அவர் இஞ்சை வரேல்லை. இஞ்சையெண்டு வந்து வழீலை திரும்பிப் போட்டார்...''

''திரும்பிப் போட்டாரோ... ஏன் ஆரன் ஏதாவது சொல்லி குழப்பிப் போட்டினையே...?'' கோபமாகக் கேட்டார் சிவசுந்தரமூர்த்தி.

''நல்ல காரியங்களைக் குழப்பிறத்திற்கென்று சிலபேர் இருக்கினைதான். ஆனால் பெரும்பாலான காரியங்களைக் குழப்பிறது சம்மந்தப்பட்டவை தான்...'' தம்பையா பேசிக்கொண்டிருக்கும் போது சிவசுந்தரமூர்த்தி குறுக்கிட்டார். ''விசர்க்கதை கதைக்கிறத்தை விட்டுட்டு விசயத்தைச் சொல்லு. நேரங்காலம் அறியாமல் தத்துவம் பேசுறாய்...''

''நான் தத்துவம் பேசேல்லை அண்ணை. அவமானப்பட்டு வாறன். கந்தசாமி எனக்கு ஒரு வழியிலை சொந்தக்காரன். உங்கடை மகளைச் சம்மந்தம் பேசியதாலை நல்லதொரு குடும்பத்தின்ரை உறவை விடவேண்டிய நிலை வருமோ எண்டு பயமாய்க் கிடக்கு. திவாகரன் நல்ல பெடியன். பண்பானவன். அவன் மிதிச்ச இடத்துப் புல்லுக் கூடச் சாகாது. அப்படிப்பட்ட பெடியனுக்கு நான் துரோகம் செய்ய நினைச்சிட்டன் என்று என்ரை மனைவியும் பிள்ளைகளும் பேசுதுகள்...''

“எனக்கு விசரைக் கிழப்பாதை. நடந்த சம்பவத்தை விளங்குற மாதிரிச் சொல்லு” சிவசுந்தரமூர்த்தி கடுமையாகச் சொன்னார்.

“ஒண்டும் தெரியாத மாதிரிக் கதையாதைங்கோ... ஊர்ச்சனம் முழுத்துக்கும் தெரிந்த விசயம் உங்களுக்குத் தெரியாதோ...? வெளீலை போய்ப் பாருங்கோ, சனம் எப்பிடிக் கதைச்சுச் சிரிக்குதெண்டு...”

“சத்தியமாய் எனக்குத் தெரியாதடாப்பா... தயவுசெய்து சொல்லு. என்ரை பொறுமையைச் சோதிக்காதை” கெஞ்சினார் சிவசுந்தரமூர்த்தி.

சில கணங்கள் சிவசுந்தரமூர்த்தியை உற்றுப் பார்த்த தம்பையா சொன்னார்; “கந்தசாமியர் நேற்று மத்தியானம் உங்கடை வீட்டை வந்தவர். மனிசன் பழங்காலத்து மனிசன். காலுக்கு செருப்பு போடுறதில்லை. அதோடை காதும் கேளாது. பின்னாலை வந்த உங்கடை மகள் அந்தாளை இடிச்சு விழுத்திப் போட்டாள். விபத்துக்கள் நடக்கிறது இயற்கைதான். கெட்ட விசயங்களையும் நல்ல விசயங்களாக்கினால் நன்மையைப் பெறலாம். விழுந்த கிழவனை தூக்கிவிட்டு ஆறுதல் சொல்லியிருந்தால் கலியாணம் நிட்சயமாகியிருக்கும். இவள் கண்டபடி ஏசிப்போட்டாள். அதாலை அந்தாள் உங்கடை மகளை தனது மகனுக்குத் திருமணம் செய்ய மறுத்திட்டுது...”

“நேற்று கஜேந்தினி சொன்னவள் தான். நான் ஆரோ என்று நினைத்தன்...”

“நல்லது செய்வதற்கு முகமன் பார்க்கக் கூடாது. ஆர் என்றாலும் அந்த நேரம் தூக்கிவிட வேணும், ஆறுதல் சொல்ல வேணும். பிழையான செயலை ஒருவன் செய்தாலும் அவனுக்கு தண்டனை வழங்குவதிலும் பார்க்க அவன் செய்தது பிழை என்று உணரச்செய்தல் வேண்டும். கோபம் வந்தால் ஏசுவது இயற்கை என்று எடுத்துக்கொண்டாலும் விழுந்த கிழவனைத் தூக்கிவிட்டு ஆறுதல் சொல்லியிருக்கலாம்... அப்படிச் செய்யாதது தான் அவருக்குக் கோபம்... தான் செய்யாத தவறுக்கு தன்னை அவமானப்படுத்திய அவள் பிற்காலத்தில் என்னைப் பார்ப்பாளா? என்று கேட்கிறார். அத்துடன் பெண்கள் இரக்க சுபாபம் உள்ளவர்கள். காயப்பட்ட எவனொருவனெண்டாலும் அவனுக்கு பரிகாரம் செய்தல் வேண்டும்... என்றார். இதுக்கு நான் எப்படி மறுமொழி சொல்வது அதைவிட அங்கு கூடிநின்றோர் உங்களைப் பற்றியும் உங்களுடைய மகளைப் பற்றியும் கண்டபடி சொல்லிவிட்டனர். அதனால் கந்தசாமி என்னுடன் பிரச்சினைக்கு வருகிறார்...”

சிவசுந்தரமூர்த்திக்கு தலையைச் சுற்றியது. கஜேந்தினிக்கு பல திருமணங்கள் பேசி வந்த போதும் ஒன்றுகூட ஒப்பேறவில்லை. இத்திருமணம் கட்டாயம் நடைபெறும் என்று நினைத்திருந்தார். அதுகும் நடைபெறாது என்று அறிந்த போது அவருக்குத் துக்கமாக இருந்தது. கோடிக் கணக்கில் சொத்திருந்தும் திருமணம் நடைபெறாததால் சிவசுந்தரமூர்த்தி துக்கப்பட்டார்.

"சரி அண்ணை. நான் போட்டு வாறன். உங்கடை மகளின்ரை திருமணத்தை முடித்து வைத்தால் அஞ்சோ பத்தோ கிடைக்குமென்று நினைச்சன். அவமானம் தான் கிடைச்சிருக்கு. இனிமேல் நான் உங்கடை மகளுக்கு கலியாணம் பேசிக்கொண்டு இந்த வீட்டுப்படி ஏறமாட்டன்..." என்றவாறு நடந்தார் தம்பையா.

128. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்

நன்றுஆகா தாகி விடும்.

ஒருவன் கூறும் சொற்களில் ஒன்றேனும் தீமை பயக்குவதாக இருந்தால், அச்சொல் அவனது ஏனைய நல்ல பண்புகளையும் கெடுத்துவிடும்.

ஆறாத வடு

அன்று சித்திரைப் பௌர்ணமி தினம். நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் பக்தர்கள் பலர் பொங்கிக் கொண்டிருந்தனர். சித்திரைப் பௌர்ணமி தினத்தன்று நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் பெரும் பூசை நடைபெறும். கோயில் கட்டிய நாள் முதல் வைத்திலிங்கம் குடும்பத்தினர் சித்திரைப் பௌர்ணமி நாளை விசேடமாக கொண்டாடி வருகின்றனர். கெட்டவனாக இருந்த காலத்திலும் கணேசமூர்த்தி சித்திரைப் பௌர்ணமி தினத்தன்று கோயிலுக்கு வந்து பூசை செய்வான். அன்னதானம் கொடுப்பான். அவன் சிறைக்குச் சென்ற காலப் பகுதியில் கோயிலில் பூசையும் அன்னதானமும் செய்யாததால் அம்முறை மிகப்பெரியதாக பூசையும் அன்னதானமும் செய்ய நினைத்திருந்தான். அதன்படி என்றுமில்லாதவாறு அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

நாவலடிக் கிராம மக்கள் அனைவரும் கூடி சமையல் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். கோயிலைச் சுற்றி ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டன. நகரில் உள்ள பிரபல நாதஸ்வர வித்துவான்களும் தவில் மேதைகளும் கோயில் மண்டபத்தில் கச்சேரி வைத்துக்கொண்டிருந்தனர். பூசையை இராஜசங்கரசர்மா மிகவும் நேர்த்தியாக நடத்திக்கொண்டிருந்தார். அக்கிராமத்தில் பூசை செய்வதில் அவர்களது குடும்பம் பிரபல்யம் வாய்ந்தது. அவரது பேரனார் பூசை செய்தால் அம்மன் நேரில் எழுந்தருளி வந்து காட்சி கொடுப்பதாக அவ்வூர் மக்கள் பேசிக் கொள்வார்கள். அதேபோல் இராஜசங்கரசர்மாவும் பூசை செய்வார்.

பூசை முடிந்து மகா கணபதி வீதி உலா வந்தார். இராஜசங்கரசர்மா மகா கணபதியை அலங்கரிப்பதில் வல்லவர். சாதாரண நாட்களிலேயே அவரின் அலங்காரம் மிகவும் சிறப்பாக இருக்கும். அன்று மிகப்பிரமாதமாக இருந்தது. மகா கணபதியின் வீதி உலா முடியும் வரை பக்தர்களின் கண்கள் அவரைவிட்டு கணநேரம் கூடப் பிரியவில்லை. மக்களின் கதைகள் யாவும் பிள்ளையாரின் அலங்காரத்தைப் பற்றி இருந்தது. ஒரு பகுதியினர் கணேசமூர்த்தியைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தனர்.

“ஒரு காலத்திலை கணேசமூர்த்தி ஆடாத ஆட்டமே. இப்ப திருந்தீட்டான்...”

“பரம்பரை இரத்தத்திலை உள்ள குணம் இருக்கத்தானே செய்யும். கொப்பாட்டனார் கட்டிய பள்ளிக்கூடத்திற்கு ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான காணியைக் குடுக்க எல்லாராலையும் முடியுமே...?”

“இன்னும் அவன்ரை பேரன் பூட்டன் தேடிய சொத்துக்கள் இருக்கு. இது அவனுக்கொரு காசே...”

“ஆரும் தேடியதை சுலபமாய்க் குடுக்கலாம். தான் தேடினால் தான் அதன் அருமை தெரியும்...”

“விசர்க்கதை கதைக்காதை. அவன்ரை பெயரிலை உள்ள காணி. இந்த ஊரிலை அஞ்சு ரூபாய் வாங்க முடியுமே... பள்ளிக்கூடத்தை அந்தாள் என்ன மாதிரி நடத்துது, ஆர் காசு குடுக்கிறாங்கள். இஞ்சை இருக்கிற எத்தினை பேர் வெளிநாட்டாலை வந்தவை. ஆர் அஞ்சு சதம் கொடுத்தவை. கொடுக்க மனம் இருக்க வேணும். அதோடை பரம்பரை பரம்பரையாய் கொடுத்திருக்க வேணும்...”

அப்பொழுது தணிகாசலம் அவ் இடத்திற்கு வந்தான். ‘‘இஞ்சை என்ன கதைக்கிறியள். உள்ளுக்கு வந்து சாப்பாட்டைக் குடுங்கோ...’’ என்றார்.

பலர் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். ஆலயத்திற்கு வெளியே உள்ள மணற்பரப்பில் சபாநாயகமும் அவனது இருபிள்ளைகளும் அமர்ந்திருந்தனர். அந்த நேரம் அங்கே வந்த தணிகாசலம் சபாநாயகத்தைப் பார்த்துக் கேட்டார் ’’உள்ளுக்கு வந்து சாப்பிடன்...’’

‘‘பொங்கினனான். இண்டைக்கு விரதம்.’’

‘‘விரதகாரருக்காகத் தான் இன்று விசேடமாகச் சமைச்சனாங்கள். வா... வா... வந்து சாப்பிடு.’’

‘‘நீ போய்ச் சாப்பிடண்ணை. என்னைக் கரைச்சல் குடுக்காதை.’’

‘‘என்னடாப்பா மகா கணபதியின்ரை சாப்பாட்டைச் சாப்பிடப் பின் நிற்கிறாய்...’’

‘‘மகா கணபதி தான் என்ரை குல தெய்வம். நான் கேட்கிறதெல்லாம் தாறவர். இண்டைக்கி மகா கணபதியே கணேசமூர்த்தியின்ரை சாப்பாட்டைச் சாப்பிடமாட்டார். செய்யிறதெல்லாம் அட்டூளியம். பிறகு அன்னதானம்...’’ ஏசினான் சபாநாயகம்.

அவர்கள் கதைத்துக்கொண்டிருக்கும் போது அவ்விடத்திற்கு கணேசமூர்த்தி வந்தான். அவனைக் கண்டதும் கோபமாகச் சொன்னான் சபாநாயகம்; ‘‘உவன்ரை நடிப்பை நம்பி ஏமார்ற ஆள் நானில்லை. இவன் மனிசனே. என்னைப் பற்றியும் எனது அம்மாவைப் பற்றியும் குடும்பத்தைப் பற்றியும் பலருக்கு முன்னாலை எவ்வளவு கேவலமாகப் பேசியவன் தெரியுமே...? குடிச்சுப் போட்டு திமிரிலை வீதியாலை போன என்னை காரணமில்லாமல் வழிமறித்து அடித்தவன். நான் ஏன் அடித்தனீ என்று கேட்க தாறுமாறாக என்னை ஏசினான். பரவாயில்லை, கோபம் வந்தால் கடுமையான வார்த்தைப் பிரயோகம் வாறது இயற்கைதான். சிலசமயம் அடிபாடும் வரும். காவல்துறைக்கும் போகவேண்டி வரும். அதையெல்லாம் மன்னிக்கலாம். இவன் என்ரை பிறப்பைப் பற்றிச் சொன்னதை என்னாலை மன்னிக்கேலாது. இவன் பணக்காரன். என்னை ஆளை வைச்சும் அடிப்பிப்பன்.’’

அன்று சபாநாயகத்தை ஏசியது கணேசமூர்த்திக்கு நினைவுக்கு வந்தது. அன்று அவன் நன்றாகக் குடித்திருந்தான். அவனது நண்பனான காசிநாதனுக்கும் சபாநாயகத்திற்கும் தோட்டப் பிரச்சினையாக நெடுங்காலம் சச்சரவு இருந்தது. அதனால் இருவரும்

சேர்ந்து குடிக்கும் போது சபாநாயகத்தைப் பற்றி கடுமையாக விமர்சிப்பார்கள். அன்று தற்செயலாக இருவரும் குடித்துவிட்டு சேர்ந்து வரும்போது சபாநாயகத்தைக் கண்டுவிட்டார்கள். உடனே கணேசமூர்த்தி அவனை மறித்து அடித்துவிட்டுச் சொன்னான்; ‘‘டேய் இனிமேல் காசிநாதனோடை பிரச்சினைக்குப் போகாதை. போனால் கொலை விழும்...’’

‘‘நீ எத்தனை கொலையள் செய்தனீ...’’ ஆத்திரமாகக் கேட்டான் சபாநாயகம்.

‘‘வடிவேலனோடை கொம்மா ஆடினவா. அவனுக்குத் தான் நீ பிறந்தனீ... தர்மரத்தினத்துக்கு பிறந்திருந்தால் ஒழுங்காய் இருந்திருப்பாய்...’’

‘‘தெரியாத பிரச்சினை. எத்தகைய அபாண்டமான செயல்.’’ வேதனைப்பட்டான் கணேசமூர்த்தி.

‘‘சபா... என்னை மன்னித்துக்கொள்ளடா.... உன்ரை காலிலை விழுந்து மன்னிப்புக் கேட்கிறன்...’’ காலில் விழுந்தான் கணேசமூர்த்தி.

‘‘உன்னை நான் மன்னிக்கமாட்டன். மன்னிக்கக்கூடிய சொற்களையா நீ சொன்னனீ...?’’ என்று சொல்லிவிட்டு நடந்தான் சபாநாயகம். கணேசமூர்த்தி சோகத்துடன் அவன் செல்வதைப் பார்த்துக்கொண்டு நின்றார்.

129. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினால் சுட்ட வடு.

தீயினால் சுட்டபுண் வெளியே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால் நாவினால் தீய சொற்களைக் கூறுவதால் உண்டாகும் வடு வெளியே தெரியாமல் உள்ளிருந்து வருத்தும்.

மேலானவன்

கணபதி மத்திய மகா வித்தியாலயத்தின் அடுத்த வருட விளையாட்டுப் போட்டியை கணேசமூர்த்தி அன்பளிப்பாகக் கொடுத்த காணியில் வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்

விக்னேஸ்வரமூர்த்தி. அன்று ஊர்மக்கள் அனைவரும் கணேசமூர்த்தி கொடுத்த காணிக்குள் துப்புரவு செய்வதற்காக மண்வெட்டி, அலவாங்கு, பிக்கான் போன்ற ஆயுதங்களுடன் நின்றனர்.

கணேசமூர்த்தி சிரமதான ஆரம்பவிழாவை ஆடம்பரமாகச் செய்ய விரும்பினார். ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான அக்காணியை இலவசமாகக் கொடுத்த கணேசமூர்த்தியை அவனது வீட்டில் இருந்து மங்கல வாத்தியங்களுடன் அழைத்து வந்தார். அவ்வூரில் பிரசித்தி பெற்ற மேளக்கலைஞனான யோகநாதனின் கோஷ்டியினர் மங்கல இசை இசைத்தனர். யோகநாதனின் பிள்ளைகள் இருவர் அப்பாடசாலையில் கற்பதால் பெருங்கலைஞனான யோகநாதன் பாடசாலையில் மேளம் அடிக்கும் வேளைகளில் பணம் வாங்குவதில்லை.

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி கணேசமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றனர். அதிபர் விக்னேஸ்வரமூர்த்தி கணேசமூர்த்திக்கு மாலை அணிவித்தார். மங்கல இசை முழங்க வீதியால் கணேசமூர்த்தி ஊர்வலமாக வீதியால் வந்தார். இடையிடையே மக்கள் பூரண கும்பம் வைத்து மாலை அணிவித்து கணேசமூர்த்தியை வரவேற்றனர். ஊர்வலமாக வந்தவர்கள் விளையாட்டு மைதானத்தை அடைந்த போது கனகசுந்தரம் அங்கே நின்றான். கனகசுந்தரம் ஒரு காலத்தில் கணபதி வித்தியாலயத்தில் அதிபராக இருந்தவன். அவனது காலத்தில் பாடசாலை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. க.பொ.த உயர்தரப் பிரிவில் மூன்று மாணவர்களே கல்வி கற்றனர். அதனால் அப்பாடசாலையின் உயர்தரப் பிரிவை மூடினார்கள். பின் க.பொ.த சாதாரண வகுப்பையும் மூடினார்கள். பாடசாலைக் காணிகளை தன்பெயருக்கு அவன் கள்ள உறுதி முடித்து வைத்திருந்தான்.

“இந்தக் காணியில் எனக்கும் பங்கிருக்கு. அதனால் உங்களை உள்ளே செல்ல விடமாட்டன்...”

“நாங்கள் தாயுறுதி பார்த்துத்தான் காணியை எழுதினோம். ஒருவருக்கும் பங்கில்லை” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி அமைதியாக.

“எனக்கு பங்கிருக்கு. இந்தா நீதிமன்றத்தின் கட்டளை. யாரும் காணிக்குள்ளே போகப்படாது...”

மக்கள் கொதித்தெழுந்தனர். ஒரு போதும் கோபப்படாத தணிகாசலத்திற்கு பயங்கரமான கோபம் வந்தது. “ஊரில் உள்ள சிதம்பர சொத்துக் காணிகளுக்கு கள்ள உறுதி முடிச்சமாதிரி கணேசமூர்த்தியின் காணிக்கும் கள்ள உறுதி முடிச்சனியே?.”

கோபத்துடன் ஏசியவாறு கனகசுந்தரத்திற்கு அடிக்க வந்தார் தணிகாசலம்.

“தணிகாசலம் இது என்ன வேலை.? இஞ்சாலை வா. அவனுக்குப் பங்கிருக்கெண்டால் அதை நிரூபிக்கிறத்திற்கு இடமளிக்க வேண்டுமே தவிர சண்டித்தனம் விடக்கூடாது. சிலவேளை கனகசுந்தரத்திற்கு பங்கிருக்கலாம்...” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“அவனுக்கு பங்கில்லை. வாத்தியார் இவன்ரை பரம்பரையே கள்ளப் பரம்பரை. அவன் பள்ளிக்கூடத்தை நடத்தேக்கை பள்ளிக்கூடத்தின்ரை சொத்தை கொள்ளை அடிச்சவன். இப்ப பள்ளிக்கூடம் வளர்ந்தது பிடிக்கேல்லை, அவ்வளவுதான். இன்னொரு நாளைக்குச் செய்வம்...” என்றான் கணேசமூர்த்தி.

மக்கள் கொந்தளித்தனர். “இந்தக் காணியிலை கனகனுக்கு பங்கில்லை” என்று பலர் ஆவேசத்துடன் கத்தினர். நிலமை மோசமாவதை உணர்ந்த விக்னேஸ்வரமூர்த்தி, “நீங்கள் எல்லோரும் வீட்டுக்குச் செல்லுங்கள். இன்னொரு நாளைக்கு சிரமதானம் செய்வோம்” என்றார். மக்கள் கலைந்து சென்றனர்.

கனகசுந்தரத்திற்கு அக்காணியில் பங்கில்லை என அறிவித்த நீதிபதி வழக்கிற்கான செலவைக் கட்டும்படி கட்டளை இட்டார். அத்துடன் பொய் வழக்குத் தாக்கல் செய்தமைக்காக ஒரு வாரகார சிறைத்தண்டனையும் விதித்தார். அதன் பின் விளையாட்டு மைதாதானம் திருத்தப்பட்டு அவ் ஊர் பாராளுமன்ற உறுப்பினரால் திறந்து வைக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் அப்பாடசாலையின் அபிவிருத்திக்காக ஐம்பது இலட்ச ரூபாவை தனது தொகுதி நிதியிலிருந்து ஒதுக்கிக் கொடுத்தார்.

விக்னேஸ்வரமூர்த்தியின் மகன் சிவராமன் அந்த வருடம் மருத்துவக் கல்லூரிக்கு தெரிவானான். மூத்தமகள் யசோதாவை அவரது மாணவனான ஐங்கரன் திருமணம் செய்தான். ஐங்கரன் இலண்டனில் கணினிப் பொறியியலாளராக தொழில் பார்த்து வந்தான். அவன் வரும்போது இருபது கணினிகளைக் கொண்டுவந்து பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தான். திருமணம் முடிந்த மறுவாரம் ஐங்கரனும் யசோதாவும் இலண்டனுக்கு பயணமானார்கள்.

130. கதம்காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி

அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

சினத்தை அடக்கி, கற்க வேண்டியவற்றைக் கற்று அடக்கம் உடையவனாக வாழும் ஒருவனை, தரும தேவதை தேடிச்சென்று குறைநிறைகளைக் கேட்டு உதவி செய்வாள்.

உயிரிலும் மேல்

வித்தியா கணபதி சனசமூக நிலைய முன்றலில் சனசமூக நிலையத்தின் இருபத்தைந்தாவது ஆண்டுவிழா மிகவும் விமர்சையாக அதன் தலைவர் திரு. வேலாயுதபிள்ளை அவர்களின் தலமையில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. நாவலர் ஸ்ரீ வித்தியா கணபதி ஆலயத்திற்கு அருகில் அந்நூல் நிலையம் இருப்பதால் அதற்கு வித்தியா கணபதி சனசமூக நிலையமென அவ்வூர் மக்கள் பெயரிட்டனர். அச்சனசமூக நிலையத்தில் பாலர் பாடசாலை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மாதர் சங்கம், நூல் நிலையம், கமநலசேவை நிலையம் என்பன இயங்குகின்றன. அத்தனைக்கும் தலைவராக விளங்குபவர் வேலாயுதபிள்ளை. மிகவும் நல்லவர், நேர்மையானவர். பிறரின் பொருட்களில் ஆசைப்படாதவர். மிகவும் நல்ல முறையில் சனசமூக நிலையத்தை நடாத்தி வந்தார். அங்குள்ள முன்பள்ளிக்கூடம் மிகவும் தரமானது. அவ் முன்பள்ளியில் கற்கும் குழந்தைகளை கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்ப்பார்கள் என்ற நம்பிக்கையில் அயல் ஊர்களில் உள்ள மக்கள் பலர் தமது குழந்தைகளை அந்த முன்பள்ளியிலேயே சேர்த்தனர்.

வேலாயுதபிள்ளை விக்னேஸ்வரமூர்த்தியுடன் ஒன்றாகக் கற்றவர். அத்துடன் பாடசாலையின் தேவைகளுக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு நிதியை வாரி வழங்குபவர். அத்துடன் விக்னேஸ்வரமூர்த்தியின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர். விக்னேஸ்வரமூர்த்தி சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவில் பேசிக்கொண்டிருந்தார். அவர் எங்காவது பேசும்போது கணபதி மத்திய மகா வித்தியாலயத்தின் தேவைகள் குறித்தும் பேசுவார். தன்னைப் பேச அழைத்ததற்கு நன்றி தெரிவித்துவிட்டு சனசமூக நிலையம் அக்கிராம மக்களுக்குச் செய்யும் சேவையைப் பற்றியும் அதன் தலைவர் வேலாயுதபிள்ளையைப் பற்றியும் பேசினார். அதன் பின் கணபதி மத்திய மகா வித்தியாலயத்திற்கு விளையாட்டு மைதானத்தை அன்பளிப்புச் செய்த கணேசமூர்த்தியைப் பற்றிப் பேசிவிட்டு கணேசமூர்த்தியைப் போல் கிராமத்தில் உள்ள பலரும் பாடசாலைக்கு உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பேச்சு முடிந்ததும் கலைநிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. விக்னேஸ்வரமூர்த்தி, வேலாயுதபிள்ளையிடம் மறுநாள் பாடசாலைக்கு கல்வி அமைச்சர் வரவிருப்பதால் தான் நேரத்துடன் செல்ல

வேண்டுமென்று கூறிவிட்டு வீட்டை நோக்கி நடந்தார். அவரின் பின்னால் சிலர் நடந்து வந்தனர்.

“ஐயா... அதிபர்... ஐயா...” விக்னேஸ்வரமூர்த்தி நின்று திரும்பிப் பார்த்தார். சபாநாயகமும் நாலைந்து பேரும் வந்தனர்.

“ஐயா நீங்கள் மிகவும் நல்லவர், ஒழுக்கமானவர். தேடுவாரற்று இருந்த எமது பாடசாலையை நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு முன்னேறியுள்ளீர்கள். நாங்கள் உங்களைத் தெய்வமாக மதிக்கிறம். நீங்கள் எமது கிராம மக்களுக்குச் செய்யும் சேவை மகத்தானது. அதற்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்... ஆனால் நீங்கள் செய்யும் ஒரு விஷயம் மட்டும் எங்களுக்குப் பிடிக்கவில்லை” என்று சொல்லி நிறுத்தினான் சபாநாயகம்.

விக்னேஸ்வரமூர்த்தி பதறிப் போனார். அறியாமல் ஏதாவது தவறு செய்து விட்டோமா? எனப் பயந்தார்; “நீங்கள் என்ன சொல்கிறீர்கள். எனக்கு விளங்கவில்லை. புரியும்படி சொல்லுங்கள்” என்றார்.

“ஐயா நான் அதிகம் படிக்கவில்லை. நான் சொல்வதில் ஏதாவது தவறிருந்தால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ... என்ரை மனதிற்குப் பட்டதைச் சொல்லுறன். கணேசமூர்த்தி மகா கெட்டவன். முன்பு தனது குடும்பத்தினரை அடித்துக் கலைத்துவிட்டு ஊரில் உள்ள பல பெண்களோடு தொடர்பு வைத்திருந்தவன். மதுவை அளவுக்கதிகமாக அருந்திவிட்டு ஊரவர்களுடன் தேவையில்லாமல் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுபவன். அதோடு ஒருவனை அடித்துக் காயப்படுத்தியமையால் பல வருடங்கள் சிறையில் இருந்தவன். காயப்பட்டவன் ஏதோ அதிட்டம் இருந்தமையால் தான் தப்பினான். அவன் இறந்திருந்தால் அவனது மனைவியும் பிள்ளைகளும் பிச்சைதான் எடுக்கவேண்டி வந்திருக்கும். அப்படிப்பட்ட ஒழுக்கம் கெட்டவனை நீங்கள் உயர்வாகப் பேசுவது எங்களுக்குப் பிடிக்கவில்லை. முன்புதான் செய்த அக்கிரமங்களையும், அடாவடித்தனங்களையும் மூடி மறைக்கத்தான் அவன் பாடசாலைக்கு காணியைத் தந்திருக்கிறான். கோயிலுக்குக் காசு கொடுக்கிறான். பல வருட காலமாக செயற்படாமல் இருந்த இந்தச் சனசமூக நிலையத்திற்கு பணத்தைக் கொடுத்து ஆண்டுவிழாக் கொண்டாடுவிக்கிறான். இதனால் முன்பு செய்த பாவம் பழி யாவும் அற்றுவிடுமா.? தயவுசெய்து அவனைப் பாராட்டாதீர்கள். நீங்கள் பாராட்டினால் ஊரவர்கள் நம்புவார்கள். அதனால் உங்களுக்கு மதிப்புக் குறையும்.” என்றான் சபாநாயகம்.

சிறிது நேரம் விக்னேஸ்வரமூர்த்தியால் எதுகும் பேசமுடியவில்லை. பின் தன்னைச் சமாளித்துக்கொண்டு சொன்னார்; “தவறு செய்தவனை நாம் மன்னிக்க வேண்டும். நாம் மன்னித்து

ஏற்காவிட்டால் வாழ்நாள் முழுவதும் அவன் தவறு செய்துகொண்டே இருப்பான். அவனுக்கு திருந்த சந்தர்ப்பம் கொடுத்தல் வேண்டும்.''

''உண்மைதான் ஐயா. கால்காசுக்குப் போன மானம் கோடி கொடுத்தாலும் வராது என்று எமது முன்னோர் கூறி இருக்கிறார்கள். தவறு செய்தவன் திருந்த வேண்டும். அவன் திருந்த இடமளிக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறோம். ஆனால் தவறு செய்தவன் பணத்தைக் கொடுத்துவிட்டானென்று நீங்கள் புகழக்கூடாது. அவன் தற்பொழுது திருந்திவிட்டதாக நடிக்கிறான். சந்தர்ப்பம் வந்தால் தவறு செய்வான். ஒழுக்கம் உயிரைப் போன்றது. உடலை விட்டு உயிர் போனால் எப்படி திரும்ப உடலுள் செல்லாதோ அதேபோல் ஒழுக்கம் தவறியவனை நல்லவனென ஏற்கமுடியாது. இது எனது தாழ்மையான கருத்து'' என்றான் சபாநாயகம்.

விக்னேஸ்வரமூர்த்தி பதில் ஏதும் கூறாது வீட்டை நோக்கி நடந்து சென்றார். இருவாரம் கழிந்த பின்பும் சபாநாயகத்தின் வார்த்தைகள் அவரின் காதில் ஒலித்தன.

131. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

ஒழுக்கம் மேன்மையைத் தருவதால், ஒழுக்கம் உயிரிலும் மேலானதாகப் போற்றப்படும்.

வருந்திக் காப்பது

ரவீந்திரனின் தந்தை தனபாலசிங்கம். தாயார் வரதலட்சுமி. ரவீந்திரனின் தங்கை தாட்சாயினி. ரவீந்திரனுக்கு இருபத்தொன்பது வயது. ரவீந்திரனின் புகழ் குடாநாடு முழுவதும் பரவியிருந்தது. ஆதனால் ரவீந்திரனுக்கு பெண் கொடுக்கப் பலர் போட்டி போட்டனர். தனபாலசிங்கம் அரசசேவையில் இருந்து ஓய்வு பெற்றவர். மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கென்றே பிறந்தவர். யார் எதைக் கேட்டாலும் உடனே செய்து கொடுத்துவிடுவார். கஸ்டமான விடயங்கள் என்றால் இரண்டொரு நாளில் செய்து கொடுப்பார். பொதுவாக அவ்வூரில் தமிழ், ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு கடிதம் எழுதிக் கொடுப்பதும், கடிதம் வாசித்து விளங்கப்படுத்துவதும் அவர்தான். அவர் அன்பளிப்பாகக் கொடுத்த காணியில் தான் நாவலர் ஸ்ரீ வித்தியா

கணபதி சனசமூக நிலையம் இயங்குகிறது. சமாதான நீதிவானாக அவர் சமூகப் பணிகள் பலவற்றை முன்நின்று செய்வார்.

ரவீந்திரனது திருமணத்தால் அவருக்கு பெரும் பிரச்சினைகள் உருவாகின. ரவீந்திரன் தான் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணிப் பட்டம் பெற்றபின்பு தான் திருமணம் செய்வேன் என தந்தையிடம் கூறிவிட்டான். ஆனால் ஊரில் உள்ள பெரும் பணக்காரர்களும் அயல் ஊர்களில் உள்ள பெரும் புள்ளிகளும் தினமும் ரவீந்திரனது வீட்டுக்கு திருமணம் பேசிவருவார்கள். ஒவ்வொருவருக்கும் காரணம் சொல்லி அவர் களைத்துப் போனார்.

ரவீந்திரனது திருமண விடயமாக விக்னேஸ்வரமூர்த்திக்கும் அவரது நண்பர்கள் கரைச்சல் கொடுத்துக்கொண்டிருந்தனர். விக்னேஸ்வரமூர்த்தியுடன் ஒன்றாகக் கற்றவர் பேரம்பலம். வைத்தியராகத் தொழில் புரிகிறார். அவரது நான்கு பிள்ளைகள் வெளிநாட்டில் வசிக்கின்றனர். அவர்கள் கோடி கோடியாக உழைத்து அனுப்புகின்றனர். அத்துடன் பேரம்பலம் கைராசி மிக்க வைத்தியர். அதனால் இரவும் பகலும் தூர இடங்களில் இருக்கும் மக்கள் வாகனங்களில் வந்து மருந்து வாங்கிச் செல்வார்கள். பேரம்பலம் பேராசை மிக்கவர். மருந்தின் விலையை அதிகமாக எடுப்பார். சிகிச்சைக்கான கூலியையும் அதிகமாக எடுப்பார். நன்றாகக் குடிப்பார். வைத்தியம் செய்யும் வேளையிலும் மது மயக்கத்தில் இருப்பார். மது மயக்கத்தில் இருந்த போதும் மிகுந்த கவனத்துடன் மருந்து வகைகளை நோயாளிக்குக் கொடுப்பார்.

கணபதி மத்திய மகாவித்தியாலயத்தில் அவரும் அவரது பிள்ளைகளும் படித்ததால் அப்பாடசாலையின் அபிவிருத்திக்கு பணம் கொடுப்பார். அத்துடன் விக்னேஸ்வரமூர்த்தியின் குடும்பம் பேரம்பலத்திடமே வைத்தியம் செய்துவந்தது. அதனால் பேரம்பலம் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தார்.

“விக்கி நான் உன்னை நம்பித்தான் வந்திருக்கிறன். நீ சொன்னால் ரவி கேட்பான். ரவியைப் பற்றி ஊர் மக்கள் நல்ல அபிப்பிராயம் வைத்திருக்கிறார்கள். மிகவும் நல்ல பெடியன். அவனை நான் என்னுடைய மகளுக்கு திருமணம் செய்து வைக்க விரும்புறன். தகப்பனை நேற்றுக் கேட்டனான். அவர் ரவீந்திரன் விரும்புறான் இல்லை என்று சொன்னார். கல்விக்கு திருமணம் தடையாக இருக்கமாட்டாதென்பது உனக்குத் தெரியும். நான் போன வருடமும் ஒரு பரீட்சை எடுத்து சித்தியடைந்தனான். அத்துடன் பல ஆசிரியர்கள் திருமணமாகிய பின்புதான் ஆசிரிய கலாசாலைக்குச் சென்று கல்வி கற்கிறார்கள். இதை ரவிக்கு எடுத்துச்சொல்லி என்னுடைய மகளைத் திருமணம் செய்யச் சொல்லு. சீதனம் கேட்கிற அளவு குடுக்கிறன். பணத்தைச் சம்பாதிக்கலாம். ஆனால் குணவான் ஆன ஒரு மாப்பிளையை எடுக்கேலாது.”

விக்னேஸ்வரமூர்த்தி சிரித்தார். ‘‘ரவி வரட்டும் கதைக்கிறன்’’ என்றார்.

‘‘நீங்கள் சொன்னால் கேட்பார். வற்புறுத்திச் சொல்லுங்கோ.’’ என்ற பேரம்பலம் அவரிடம் விடைபெற்றுச் சென்றார்.

அவர் சென்ற சிறிது நேரத்தில் ரவீந்திரன் அங்கு வந்தான்.

‘‘ரவி உமக்கு திருமணம் பேசி பேரம்பலம் வந்தார்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

ரவி ஏளனமாகச் சிரித்தான் ˙ ‘‘சமூக உணர்வே இல்லாதவர். அவர் ஒரு மருத்துவரல்ல, வியாபாரி. பிள்ளைகள் வெளிநாடுகளில் நன்றாக உழைக்கிறார்கள். இவருக்கு ஏன் காசு. கணேசமூர்த்தியைப் பாருங்கோ. அவரும் வைத்தியர் தானே. பிள்ளைகளெல்லாம் நல்லாயிருக்கு. எனக்கு பணம் தேவையில்லையென்று சொல்லி மருந்துக் காசு மட்டுந்தான் எடுக்கிறார். அவரல்லோ வைத்தியர். அதோடை குடி. கைராசியுள்ள வைத்தியரென்று சனம் போகுது. நேற்று அப்பாவோடை கதைச்சவராம். அப்பாவுக்கு துப்பரவாய் விருப்பமில்லை. காசுபணத்தைத் தேடலாம், ஒழுக்கத்தைத் தேடேலாது. நல்ல குடும்பப் பெண்ணைப் பார்த்துத்தான் திருமணம் செய் என்று சொல்லிவிட்டார். அது மாதிரித்தான் தங்கச்சிக்கும். பெரும் பெரும் பணக்காரனையோ உத்தியோககாரனையோ செய்யிறேல்லை. நல்ல ஒழுக்கமுள்ளவனாய்ப் பார்த்து செய்யவேணும் என்றார்’’

விக்னேஸ்வரமூர்த்தி லேசாகச் சிரித்தார். ‘‘அறங்கள் எல்லாவற்றையும் விட ஒழுக்கமே சிறந்தது. ஒழுக்கத்தை எந்த நிலையிலும் பேணிக்காத்தல் வேண்டும். ஒழுக்கத்தைக் காத்தால் மற்றவை எல்லாம் கிடைக்கும்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

132. பரிந்துஓம்பிக் காக்க ஒழுக்கம்; தெரிந்துஓம்பித்

தேரினும் அ∴தே துணை.

எல்லா அறங்களுக்கும் ஒழுக்கம் துணையாக இருப்பதால், ஒழுக்கத்தை வருந்தியும் போற்றியும் காத்தல் வேண்டும்.

குடிமை

பேரம்பலம் விக்னேஸ்வரமூர்த்தியைச் சந்தித்துவிட்டுச் சென்றபின் ரவீந்திரனுக்கும் தனது மகளுக்கும் திருமணம் நடைபெறும் என்று நம்பியிருந்தார். பெரும் பணக்காரரும் பிரசித்தி பெற்ற மருத்துவருமான அவர் தனது மகளை ரவீந்திரன் விரும்புவான் என்று நினைத்தார். அத்துடன் தனபாலசிங்கத்திற்கு ஒரு வழியில் அவரது மனைவி சகோதரி முறையானவள். அத்துடன் தனபாலசிங்கம் அவரிடமே வைத்தியம் பார்த்து வந்தார். அதனால் ஊரில் உள்ள பிரமுகர்கள் சிலருக்கு ரவீந்திரனை தனது மகளுக்கு திருமணம் பேசியிருப்பதாகவும், அத்திருமணம் முற்றுப்பெற்ற மாதிரி என்றும் கூறியிருந்தார். அத்துடன் விக்னேஸ்வரமூர்த்தியின் சொல்லை ரவீந்திரன் தட்டமாட்டான் என்றும் நினைத்திருந்தார். விக்னேஸ்வரமூர்த்தி அவருடன் கற்றவர். அத்துடன் நெருங்கிய உறவினர். அதனால் அத்திருமணத்தில் முழு நம்பிக்கை வைத்திருந்தார்.

பேரம்பலம் ஊருக்குள் ரவீந்திரனைத் தனது மகளுக்குத் திருமணம் செய்யப்போவதாக கூறிக்கொண்டது தனபாலசிங்கத்தின் காதுகளுக்கும் எட்டியது. சிலவேளை விக்னேஸ்வரமூர்த்தி ரவீந்திரனுக்கு பேரம்பலத்தின் மகளைத் திருமணம் செய்யச்சொல்லிச் சொல்லியிருப்பாரோ? என்று எண்ணினார். அதனால் அதுபற்றி விசாரிக்க விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தார்.

வீட்டுக்கு வந்த தனபாலசிங்கத்தை விக்னேஸ்வரமூர்த்தி இன்முகத்துடன் வரவேற்றார்; ‘‘வாருங்கோ வாருங்கோ... நான் ஒருக்கால் சந்திக்க வேணுமெண்டு நினைச்சனான். நீங்களே வந்திட்டியள். இருங்கோ’’ என்றார்.

நாற்காலியில் அமர்ந்த தனபாலசிங்கம் சொன்னார்; ‘‘பேரம்பலம் ரவியைத் தனது மகளுக்கு நிச்சயம் பண்ணிணதாய்ச் சொல்லுறாராம். எனக்கெண்டால் தெரியாது. ஒரு கிழமைக்கு முன்னம் வீட்டை வந்து கதைச்சவர். நான் தட்டிக் கழிச்சுப்போட்டன். என்னைப் பொறுத்தமட்டிலை பிறப்பு , உயர்வு தாழ்வை நிச்சயிக்கிறேல்லை. ஒழுக்கமுடையவர்களாக வாழ்வதே உயர்ந்த குடிப் பிறப்பின் தன்மையாகும். ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப்பிறப்பின் தன்மை என்பதுதான் எனது கருத்து. பேரம்பலம் பிறப்பால் உயர்ந்த குடியைச் சேர்ந்தவரென்றாலும் நடத்தை சரியில்லை. குடிப்பழக்கம் மிக்கவர். ஏழைகளிடம் கூடுதலான பணம் பெறுபவர். அடுத்தவர்களின் பொருளுக்கு ஆசைப்படுபவர். அவரது பிள்ளைகளது ஒழுக்கமும் சரியில்லையென அறிந்தேன். மூத்தமகன் போதைவஸ்து கடத்துபவனாம். அதனால் எனக்கு அவரின் குடும்பத்தில் திருமணம் செய்ய விருப்பமில்லை...’’ என்று கூறிவிட்டு நிறுத்தினார் தனபாலசிங்கம். விக்னேஸ்வரமூர்த்தி எதுகும் பேசவில்லை. சில

கணங்கள் பேசாமல் இருந்தார்; ‘‘ரவீந்திரனும் இதையே சொல்கிறான்’’ என்று நினைத்தார்.

விக்னேஸ்வரமூர்த்தி எதுகும் பேசாததால் தனபாலசிங்கம் சொன்னார்; ‘‘எனக்கு விருப்பமில்லை. ரவியையும் கேட்டனான். அவனும் விரும்பேல்லை. அப்பேன் பேரம்பலம் உப்பிடிச் சொல்லிக்கொண்டு திரியுது. நீங்கள் ஏதாவது சொன்னனீங்களே...’’

‘‘போனகிழமை என்னை வந்து சந்தித்து ரவீன்ரை திருமணத்தைப் பற்றிக் கதைத்தவர். நான் ஒன்றும் சொல்லவில்லை. ரவி நல்ல பையன். என்னுடைய சொல்லுக்கேட்பான் என்பதற்காக அவனுக்கு விருப்பமில்லாத ஒன்றைத் திணிக்க நான் விரும்பேல்லை. ரவியைக் கூப்பிட்டுக் கேட்டனான். அவனும் நீங்கள் சொன்னமாதிரித்தான் சொன்னவன். நான் ரவியை வற்புறுத்தமாட்டன். வயது ஏறிக்கொண்டு போகுது. திருமணத்தைச் செய் என்று சொன்னனான். பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணிப் பட்டப்படிப்புப் படிக்கிறன். ஒரு வருடம் பொறுத்துக்கொள்ளுங்கோ என்றான். இவ்வளவு காலமும் பொறுத்தனீங்கள், இன்னும் ஒரு வருடம் தானே...’’

‘‘பிரச்சினை இல்லை. அவன் விரும்பிய நேரம் செய்யட்டும். ஊருக்கை கதைக்கிறத்தைப் பற்றி விசாரித்துக்கொண்டு போவமெண்டு வந்தனான். தணிகாசலத்திற்கு பேரம்பலம் சொன்னவராம் சம்மந்தம் முற்று என்று. அதோடை நீங்கள் ரவிக்கு பேரம்பலத்தின் மகளைத் திருமணம் செய்யச்சொல்லிச் சொன்னதாய்ச் சொன்னாராம். அதுதான் என்னெண்டு அறியலாமென்று வந்தனான.’’

‘‘நான் அப்பிடிச் சொல்லுவனே?. விக்னேஸ்வரமூர்த்தி கதைத்துக்கொண்டிருக்கும் போது அவசரமாகக் குறுக்கிட்டுச் சொன்னார் தனபாலசிங்கம்; ‘‘நான் அப்பிடி நினைக்கேல்லை. சனம் கதைக்குது எண்டுதான் வந்தனான். குறை நினைச்சுக் கொள்ளாதைங்கோ...’’

‘‘சீச் சீச் சீ. இதிலை என்ன குறை. ரவியையும் என்ரை பிள்ளையாய்த் தான் நான் கருதிறன். அவனை ஆசிரியராகப் பெற்ற இந்தப் பாடசாலையும் நானும் அதிட்டம் செய்தனாங்கள்....’’ கண்கலங்கினார் விக்னேஸ்வரமூர்த்தி.

தனபாலசிங்கத்தின் உடல் புல்லரித்தது.

133. ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்

இழிந்த பிறப்பாய் விடும்.

குடும்பத்தின் உயர்வும் தாழ்வும் ஒழுக்கத்தில் தங்கியுள்ளது. ஒழுக்கமுடையவனாக வாழுதல் உயர்ந்த குடிமகனின் தன்மை. ஒழுக்கம் தவறி வாழ்தல் ஓர் இழிந்த குடிமகனின் தன்மை.

பிறப்பொழுக்கம்

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தின் பிரதம குருவான இராஜசங்கர குருக்களுடன் படித்தவர் நடராஜக்குருக்கள். இளம் வயதில் இருந்து இருவரும் ஒன்றாகக் கற்றமையால் இருவரும் நல்ல நண்பர்களாக இருந்தனர். இராஜசங்கரக்குருக்கள் பாடசாலைக் கல்வியோடு வடமொழியும் ஆங்கிலமும் கற்றவர். வேத, உபநிடதங்களை தனது பேரனாரான பரமசாமிக் குருக்களிடம் நன்கு கற்றவர். பரமசாமிக் குருக்கள் மிகுந்த அறிவாளி. பூசைகளின் போது அப்பூசைகளின் அர்த்தத்தையும் அதன் பலாபலன்களையும் கூறுவார். மணவறையில் மணமக்களுக்கும் கூடி இருக்கும் சபையோருக்கும் அங்கு நடைபெறும் கிரிகைகள் பற்றி விளக்கமாகக் கூறுவார். ஏராளமான சமயநூல்களையும், சமஸ்கிருத நூல்களையும் எழுதி இலவசமாக மக்களுக்குக் கொடுப்பார்.

இராஜசங்கரக் குருக்களைத் தன்னைப் போல் உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் அவரின் மனதில் இருந்தமையால் அவருக்கு வேதபாராயணத்தை நல்ல முறையில் செய்து வந்தார். இராஜசங்கரக் குருக்களும் பேரனாரின் மனமறிந்து கற்றுவந்தார்.

இராஜசங்கரக் குருக்களுக்கு எதிர்மாறானவர் நடராஜக் குருக்கள். பாடசாலைக்கல்வி மட்டும் போதும் என்று நினைப்பவர். வேத, உபநிடதங்களையும் சமஸ்கிருதத்தையும் கற்க விருப்பமில்லாதவர். பூநூலுடன் கோயிலில் நிற்க வெட்கப்படுபவர். அவர் எங்கு சென்றாலும் மேற்சட்டை அணிந்தே செல்வார். அத்துடன் இராஜசங்கரக் குருக்களையும் பூசை செய்யவேண்டாமென்று கூறுவார். ‘‘நன்றாகப் படித்து அரசாங்கத்தில் நல்ல வேலை பார்ப்பதை விட்டுவிட்டு பூசையா செய்யப் போகிறாய்?’’ என்று இராஜசங்கரக் குருக்களை கேலி செய்வார். அதனால் நடராஜக் குருக்களுடன் சேர்வதை இராஜசங்கரக் குருக்கள் தவிர்த்துக்கொண்டார்.

பேச்சில் படிக்க வேண்டுமென்று நடராஜக் குருக்கள் சொன்னபோதும் அவரால் ஒழுங்காகக் கல்வியைக் கற்க முடியவில்லை. க.பொ.த உயர்தரப் பரீட்சையை மூன்றுமுறை எடுத்தும்

அவரால் சித்தியடைய முடியவில்லை. அதனால் நண்பர்களுடன் சேர்ந்து படம் பார்க்கத் தொடங்கினார். படமாளிகையில் புகைத்தார். நண்பர்களுடன் சேர்ந்து மதுவருந்தினார். ஆரம்பத்தில் ஒளித்துமறைத்துச் செய்து வந்தவற்றை பின் பகிரங்கமாகச் செய்யத் தொடங்கினார்.

ஆசாரசீலரான நடராஜக் குருக்களின் தந்தையான சிவகணேசக் குருக்கள் மகனின் குடிப்பழக்கத்தைக் கண்டு அதிர்ந்து போனார். "நடராசா நீ சமஸ்கிருதத்தைக் கற்காவிட்டாலும் பரவாயில்லை, அதை எப்பொழுதும் கற்றுக்கொள்ளலாம். ஆனால் ஒழுக்கம் அப்படியானதல்ல. ஒரு குடும்பத்தில் ஒருவனது ஒழுக்கம் கெட்டாலும் அக்குடி நாசமாய்ப் போம். எமது குலத்திற்கென்று சில மரபுகள் இருக்கின்றன. அவற்றை நாம் விரும்பினாலென்ன, விரும்பாவிட்டாலென்ன கைக்கொண்டே ஆகவேண்டும். பார்ப்பனர் குலத்தில் பிறந்தவர்களுக்கு ஒவ்வொரு வயதிலும் ஒவ்வொரு கடமை இருக்கிறது. அத்துடன் மக்களுக்கு முன்மாதிரியாக நடக்க வேண்டிய கடமையும் இருக்கிறது. கடவுளுக்கும் மக்களுக்கும் இடையே தூதுவர்களாகப் பணிபுரியும் நாம் ஒழுக்கசீலர்களாக இருத்தல் வேண்டும்" என்றார்.

நடராஜாக் குருக்கள் தந்தையின் சொல்லைக் கேட்கவில்லை. அவர்கூறிய புத்திமதிகளை வெறும் வார்த்தைகளாக எண்ணினார். அன்று மதுபோதையில் வந்த நடராஜாக் குருக்கள் நடக்க முடியாமல் வீதியில் விழுந்து கிடந்தார். அவ்வழியால் சென்ற எவரும் அவருக்கு உதவிசெய்ய முன்வரவில்லை. தினமும் குடித்துவிட்டு வீதியில் விழுந்து புரளும் அவரைத் தூக்குவது பாவமென அவ்வூர் மக்கள் நினைத்தனர்.

நடராஜாக் குருக்களின் நடத்தையால் பார்ப்பனர் குலத்தவர்கள் சிவகணேசக் குருக்களின் உறவைத் துண்டித்தனர். வேதாகம பண்டிதரான சிவகணேசக் குருக்களை மதித்த மக்கள் அவரை விலக்கி வைத்தனர். அவரின் மகளின் திருமணமும் தடைப்பட்டது. பலரை தேடிச்சென்று சிவகணேசக் குருக்கள் தனது மகளைத் திருமணம் செய்யும்படி கேட்டும், ஒருவரும் ஒத்துக்கொள்ளவில்லை. குடும்பத்திலுள்ள ஒருவன் அக்குலத்திற்குரிய ஒழுக்கத்தில் இருந்து தவறினால் அக்குடும்பத்தை எவரும் மதிக்கமாட்டார்கள் என்று சிவகணேசக் குருக்கள் உணர்ந்தார். காலப்போக்கில் நடராஜாக் குருக்களும் உணர்ந்து திருந்தியபோதும் மக்கள் அவரை வெறி ஐயர் என்றே அழைத்தனர்.

134. மறுப்பினும் ஒத்துக் கொளலாகும்; பார்ப்பான்

பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

பார்ப்பான் தான் கற்ற மறைப்பொருளை மறந்தால் ஓதிக் கற்றுக்கொள்ள முடியும். ஆனால் அவன் தனது குடிக்குரிய ஒழுக்கத்தை மறந்தால், அக்குடி கெடும்.

நிலையாதவை

நாவலடிக் கிராமத்தில் அறுவடை செய்த நெல்லை வாங்குவதாகக் கூறியபின் மழையில் நனைந்துவிட்டதாகச் சாட்டுச்சொல்லி நெல்லைக் கொள்வனவு செய்யாதுவிட்டமையால் கருணாகரனுக்கு இனிமேல் நெல்லோ வேறு விளைபொருட்களோ கொடுப்பதில்லை என்று நாவலடி மக்கள் தீர்மானம் எடுத்தனர். அதனால் மணிவண்ணனும் கைலாயநாதனுமே நாவலடி மக்களின் விளைபொருட்களைக் கொள்வனவு செய்தனர். அத்துடன் பேரம்பலத்தின் கடையில் பொருட்களையும் வாங்காமல் விட்டனர். அதனால் நாளடைவில் பேரம்பலம் தனது கடையை மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் பொறாமை கொண்ட பேரம்பலம் கருணாகரனின் கடைக்குச் செல்பவர்களுக்குப் பல தொல்லைகளைக் கொடுத்துக்கொண்டிருந்தான். அத்துடன் வீடு வீடாகச் சென்று விவசாயச் செய்கைக்காக பணம் கொடுத்தான். ஆனால் அவ்வூர் மக்கள் அவனிடம் பணம் பெறவில்லை. ‘‘இவ்வளவு காலமும் நாங்கள் பிழைவிடவில்லை. உங்களுக்குத் தேவையானளவு பணத்தைத் தந்தோம். அன்று தற்செயலாக மழை வந்ததால் நெல் நனைந்துவிட்டது. நனைந்த நெல்லை எப்படிக் கொள்வனவு செய்வது. அதனால் தான் காயவைக்கும்படி சொன்னோம். காய்ந்த பின்பு நாம் தானே கொள்வனவு செய்தது. தற்செயலாக ஏற்பட்ட பிழைக்காக இவ்வளவு காலமும் நேர்மையான முறையில் வியாபாரம் செய்த எம்மை நீங்கள் வெறுக்கக்கூடாது. தவறு செய்பவன் மன்னிப்புக் கேட்டால் மன்னிக்க வேண்டியது பெரியவர்களது கடமை. இனிமேல் நாங்கள் பிழைவிடமாட்டோம்.’’ என்றான் கருணாகரன்.

‘‘தவறு செய்வது இயற்கைதான். அதை மன்னிப்பது மனிதாபிமானமானது. எனக்குப் பிரச்சினை இல்லை. நீங்கள் சென்று மக்களோடு கதையுங்கள். நான் இவ்வருடம் எனது விளைபொருட்களைத் தருவதாகச் சொல்லி மணிவண்ணனிடம் முற்பணம் பெற்றுவிட்டேன். ஆகையால் அடுத்த வருடம் பார்ப்போம்’’ என்றார் தணிகாசலம்.

“நீங்கள் நினைத்தால் செய்யலாம் அண்ணை. நீங்கள் சொன்னால் ஊர்ச்சனங்கள் கேட்கும். என்னோடை வாருங்கோ...” என்று கெஞ்சினான் கருணாகரன்.

“மணிவண்ணனிடம் கைநீட்டிப் பணத்தைப் பெற்ற பின்பு அவனுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவது சரியல்ல. எனவே தயவுசெய்து என்னைத் தொந்தரவு செய்யவேண்டாம்” என்றார் தணிகாசலம்.

அந்த வருடம் நாவலடிக் கிராமத்தில் ஒருவரும் கருணாகரனுக்கு தமது விளைபொருட்களைக் கொடுக்கவில்லை. அதனால் பேரம்பலம் நாவலடிக் கிராமத்தில் இருந்த கடையை மூடவேண்டிய அவலநிலை ஏற்பட்டது.

அன்று தணிகாசலம் வெண்காயப் பயிருக்கு நீர் பாய்ச்சிக்கொண்டிருந்தார். அப்போது கணபதி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் உருத்திரமூர்த்தி அங்கே வந்தார். “தணி அண்ணை, உங்களோடை ஒரு விசயம் கதைக்கலாமெண்டு வந்தனான்.” தணிகாசலம் நிமிர்ந்து அவரைப் பார்த்தார். அவர் ஏன் வந்திருப்பாரென்று புரியாவிட்டாலும் பாடசாலையின் முக்கிய விடயமாகக் கதைக்க வந்திருப்பாரென எண்ணினார்.

“நீங்கள் தானே பழைய மாணவர் சங்கச் செயாளர். எனக்குத் தரவேண்டிய உபஅதிபர் பதவியை அதிபர் கந்தசாமி ஆசிரியருக்குக் கொடுத்துவிட்டார். நான் தான் பாடசாலையில் மூத்த ஆசிரியன். எல்லாத் தகுதியும் எனக்கு இருக்கு. நான் அதிபரோடை கதைக்கேல்லை. நெடுக நான் அவருடன் முரண்படுறதாய் மக்களும் திணைக்களமும் நினைக்குது. அதாலை தயவுசெய்து நீங்கள் ஒருக்கால் கதையுங்கோ...” என்றார்.

முன்பும் அவரை வேறொரு பாடசாலைக்கு மாற்றும்படி மக்கள் கேட்டதற்கிணங்க கல்வித் திணைக்களம் அவருக்கு இடமாற்றம் கொடுத்தது. அதன் பின் அவரும் மனைவியும், தகப்பனும், தாயும் வந்து தணிகாசலத்திற்கு உருத்திரமூர்த்தி, பாடசாலைக்கும் அதிபருக்கும் உபத்திரவம் கொடுக்க மாட்டாரென்று உறுதியளித்த பின்புதான் தணிகாசலம் விக்னேஸ்வரமூர்த்தியுடன் கதைத்து இடமாற்றத்தை இரத்துச் செய்தார். சிறிது காலத்திற்கு பேசாமல் இருந்த உருத்திரமூர்த்தி சமீப காலமாக விக்னேஸ்வரமூர்த்திக்கு தொல்லைகள் கொடுத்து வந்தார்.

“பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன அதிபருக்கும் பாடசாலைக்கும் உதவி செய்ய வேண்டுமே தவிர நிர்வாக விடயங்களில் தலையிடக்கூடாது. நாங்கள் அதிபருக்கு

உதவியோடு சில ஆலோசனைகள் கூறுவமே தவிர வேறு ஒன்றும் செய்வதில்லை. அவர் செய்வதைப் பார்த்துக்கொண்டிருக்கிறம். உபஅதிபர் பதவி என்பது பொறுப்பானது. நம்பிக்கைக்குரியது. அதை அதிபர் நம்பிக்கைக்குரிய திறமைசாலிக்குத் தான் கொடுப்பார். பதவியில் உள்ள ஆசை பணி செய்வதிலும் இருத்தல் வேண்டும். விக்னேஸ்வரமூர்த்தி சுகமில்லாவிட்டாலும் பாடசாலைக்கு வராமல் விடமாட்டார். பதினைந்து வருட காலத்தில் இருபது நாள் தான் விடுப்பு எடுத்திருக்கிறார். நீங்கள் ஒரு வருடத்தில் அறுபது எழுபது நாட்கள் விடுப்பில் நிற்கிறீர்கள். இப்படி இருக்க கடமையை எப்படிச் செய்வீர்கள். அதைப்பற்றி கல்வி அதிகாரிகளே கதைக்க முடியாது. பதவியுயர்வு வரவேண்டுமானால் நல்ல ஒழுக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும். தன்னை அர்ப்பணித்து செயலாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும். இதை விட்டுவிட்டு நான் உங்களில் நம்பிக்கை வைக்கச்சொல்லி எப்படிச் சொல்வது. நம்பிக்கை என்பது அவரவர்களுக்கு ஏற்பட வேண்டுமே தவிர இன்னொருவரால் ஏற்படுத்தப்பட முடியாதது. நீங்கள் இடமாற்றப்பட்ட பின்பு கூறியபடி பல விடயங்களில் நடந்துகொள்ளவில்லை என்று விக்னேஸ்வரமூர்த்தி அடிக்கடி எனக்குக் கூறுவார். அப்படி இருக்க நான் மீண்டும் எப்படி அவருடன் கதைப்பது'' என்றார் தணிகாசலம்.

உருத்திரரமூர்த்தியால் பதில் சொல்ல முடியவில்லை. மெதுவாக அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்.

135. அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

பொறாமை உடையவனின் செயல்களால் எந்தப் பயனும் இல்லாதது போல ஒழுக்கம் இல்லாதவனுடைய வாழ்க்கையில் உயர்வு இல்லை.

இழிவை அறிந்தோர்

தனபாலசிங்கத்தின் மகள் தாட்சாயினிக்கு அயலூரான பருத்திமலையில் வாழும் சிவலிங்கத்தின் மகன் செல்வேந்திரனை திருமணம் பேசினார்கள். செல்வேந்திரன் பருத்திமலை அரசினர் வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமை புரிந்தான். தனபாலசிங்கம் சிவலிங்கத்தின் குடும்பத்தைப் பற்றியும் செல்வேந்திரனைப் பற்றியும்

விசாரித்துப் பார்த்தார். மிகவும் ஒழுக்கமுள்ள குடும்பம் என்று அவர் விசாரித்த அனைவரும் சொன்னார்கள். இருவருக்கும் திருமண நாள் குறிக்கப்பட்டது. சிவலிங்கம் தனது மகனுக்கு சீதனம் பேசவில்லை. அவர் தனபாலசிங்கத்தின் வீட்டுக்கு வந்து சொன்னார் ‘‘ஐயா, உங்களைப் பற்றியும் உங்கள் மகன் ரவீந்திரனைப் பற்றியும் எமது ஊரவரர் கதைக்கிறார்கள். நல்லதொரு குடும்பத்தில் பெண் எடுக்கவே நாம் விரும்பினோம். உங்கள் குடும்பத்தில் பெண் எடுக்க நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும். சீதனத்தைப் பற்றி நாம் எதுகும் பேசவில்லை. உங்களுடைய மகளுக்கு நீங்கள் விரும்பியதைக் கொடுங்கோ...’’

சீதனம் இவ்வளவுதான் என்று பேசினால் கொடுப்பது சுலபம். விரும்பியதைக் கொடுங்கோ என்றால் எப்படிக் கொடுப்பது என்று யோசித்தார் தனபாலசிங்கம்.

‘‘நீங்கள் ஒன்றும் யோசிக்க வேண்டாம். உள்ளதைக் கொடுங்கோ’’ என்று கூறிவிட்டு சிவலிங்கம் சென்றுவிட்டார். சிவலிங்கம் அவ்வளவு வசதியானவர் அல்ல. தோட்டம் செய்து கஸ்டப்பட்டுத்தான் செல்வேந்திரனைக் கற்பித்தார். வேறு இடங்களில் அவனுக்கு பல இலட்ச ரூபா சீதனமாகக் கொடுக்க பலர் முன்வந்தும் சிவலிங்கம் அதை விரும்பவில்லை. அதனால் கூடுதலான சீதனத்தைக் கொடுக்க தனபாலசிங்கம் விரும்பினார். ஆனால் தனபாலசிங்கத்திடம் பணம் இருக்கவில்லை. ரவீந்திரனுக்கு பெண் கொடுக்க பலர் முன்வந்தனர். அவர்கள் தனபாலசிங்கத்திற்கு நன்கொடையாக பல இலட்ச ரூபா கொடுக்க முன்வந்தனர். அதையும் தனபாலசிங்கம் விரும்பவில்லை. இன்னொருவன் கஸ்ரப்பட்டு தேடிய பணத்தை நன்கொடை என்ற பெயரில் வாங்க அவர் விரும்பவில்லை.

செல்வேந்திரன் வைத்தியசாலைக்கு துவிச்சக்கர வண்டியில் சென்று வந்தான். எனவே அவனுக்கு ஒரு மோட்டார் வண்டி வாங்கிக் கொடுக்க விரும்பினார் தனபாலசிங்கம். தனபாலசிங்கத்தின் தோட்டத்தை தணிகாசலம் செய்துவந்தார். அந்தத் தோட்டத்தை விற்று செல்வேந்திரனுக்கு மோட்டார் வண்டி வாங்க விரும்பினார். தணிகாசலம் இருபது வருட காலமாக அவரின் தோட்டத்தைச் செய்கிறான். அத்துடன் தணிகாசலத்திற்கு சொந்தத் தோட்டம் இல்லை. என்ன செய்யலாம் என்று யோசித்த தனபாலசிங்கம் தணிகாசலத்தின் வீட்டுக்குச் சென்றார். அதற்கு முன்பே தோட்டம் விற்கப்படவுள்ளது என்பதை தணிகாசலம் அறிந்திருந்தார்.

‘‘என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லைத் தணி. உனக்கும் கஸ்ரம் தான். என்ன செய்வம்?’’ என்று கேட்டார் தனபாலசிங்கம்.

“நான் இப்பவே தோட்டத்தை விர்றன். நீங்கள் வில்லுங்கோ. அது உங்கடை நிலம் . இவ்வளவு காலமும் என்னைச் செய்கைபண்ண விட்டதற்கு நான் நன்றி சொல்ல வேண்டும்...”

“நீ என்ன செய்யப் போறாய்?. உனக்கு நான் கொஞ்சக் காசுதாறன்.”

“ஐயையோ... எனக்கு ஒரு சதமும் வேண்டாம். உங்கடை தோட்டம்தான் எனக்கும் எனது குடும்பத்திற்கும் உணவளித்தது. கடவுள் வழிவிடுவார்” என்றார் தணிகாசலம்.

வெகு நேரம் தனபாலசிங்கம் தணிகாசலத்துடன் கதைத்துவிட்டுச் சென்றார். மிகவும் நல்லவனான தணிகாசலத்தின் வாழ்க்கைக்கு ஏதாவது உதவிசெய்ய வேண்டும் என்று நினைத்தார். தோட்டத்தை மறிப்பதை நினைக்க அவருக்கு வேதனையாக இருந்தது.

அன்று இரவு தணிகாசலத்தின் வீட்டுக்கு உருத்திரமூர்த்தி வந்தார். “தணிகாசலம் அண்ணை, நீங்கள் செய்த தோட்டம் நாற்பது இலட்ச ரூபாவுக்கு மணிவண்ணன் வாங்கப் போவதாகக் கதை அடிபடுது. இருபது வருடம் தோட்டம் செய்த உங்களுக்குத்தான் விக்கிறதெண்டால் விற்கவேண்டும். நீங்கள் தோட்டத்தை விலைக்கு கேளுங்கோ.”

“நாலாயிரம் ரூபா என்னட்டை இல்லை. நான் எங்கை நாற்பது இலட்சத்திற்குப் போறது.”

“நீங்கள் முப்பத்தைந்து இலட்சம் கேளுங்கோ. நாற்பது இலட்சத்திற்கு கருணாகரனுக்கு கொடுக்க நான் ஒழுங்கு செய்யிறன். ஐந்து இலட்சத்தை நாங்கள் இரண்டு பேரும் பங்கிடுவம்” என்றான் உருத்திரமூர்த்தி.

“நான் எந்த ஒரு ஒழுக்கக் கேடான நடவடிக்கையிலும் ஈடுபடமாட்டான். கருணாகரனைப் போய் தனபாலசிங்கத்திட்டைக் கேட்கச் சொல்லுங்கோவன்...”

“தனபாலசிங்கம் ஒருமாதிரியான ஆள். அவர் மணிவண்ணனுக்கு தாறதாய் ஒப்புக்கொண்டுட்டார். வேறு யாருக்கும் கொடுக்கமாட்டாராம். நீ செய்தனீ. அதாலை ஒப்புக்கொள்ளுவர்...”

“உருட்டுப் பிரட்டு வேலை செய்யிறது எனக்கு விருப்பமில்லை. அதோடை மணிவண்ணன் நல்ல மனிதன். நேர்மையானவன். தனபாலசிங்கம் அருமையானவர். அவர்களுக்குத் துரோகம் செய்ய நான் விரும்பவில்லை” என்றார் தணிகாசலம்.

“பிழைக்கத் தெரியாத மனிசன்” என்று சொல்லிவிட்டுச் சென்றார் உருத்திரமூர்த்தி. மறுவாரம் தனபாலசிங்கம் நாற்பது இலட்ச ரூபாவிற்கு தோட்டக் காணியை விற்றார். இரண்டு இலட்சரூபாவைக் கொண்டுவந்து தணிகாசலத்திடம் கொடுத்தார். ஆதை தணிகாசலம் வாங்க மறுத்தார். அதனால் தணிகாசலத்தின் வீட்டுத்திண்ணையில் காசை வைத்துவிட்டுச் சென்றார் தனபாலசிங்கம்.

136. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்

ஏதம் படுபாக்கு அறிந்து.

ஒழுக்கம் தவறுவதால் கேடு உண்டாகும் என்பதைத் தெரிந்து மனவலிமையால் சான்றோர் ஒழுக்கத்திலிலிந்து தவறாமல் தம்மைக் காத்துக்கொள்வர்.

மேன்மை

அன்று இரவு கணேசமூர்த்தி தணிகாசலத்தைத் தேடி வந்தான். அவர் இரவு உணவு உண்டுகொண்டிருந்தார். கணேசமூர்த்தி வந்ததாக அறிந்ததும் உணவு உண்பதை நிறுத்திவிட்டு வெளியே வந்து “வா சாப்பிடு” என்றார்.

“நான் இப்பத்தான் சாப்பிட்டனான்...”

“பரவாயில்லை வா...” என்றார்.

தணிகாசலத்தின் மனைவி வாழை இலைபோட்டு பிட்டும் கறியும் வைத்தாள். கணேசமூர்த்தி சாப்பிடும் போது நினைத்தார், “முன்பென்றால் முற்றத்தில் வைத்தே திருப்பி அனுப்பிவிடுவார்கள். இப்போ உள்ளே அழைத்து உணவு தருகிறார்கள். எல்லாம் என்னால் தான். எனது முன்னோரைப் போல் ஒழுக்கமாக இருந்திருக்கலாம்...”

இருவரும் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தனர். தணிகாசலம் கணேசமூர்த்தியை “ஏன் வந்திருக்கிறாய்?” எனக் கேட்கவில்லை. அவனாகவே சொல்லட்டும் எனக் காத்திருந்தார்.

“உங்கடை தோட்டத்தை தனபாலசிங்கம் விற்றுவிட்டதாய்க் கேள்விப்பட்டன். இனி என்ன செய்யப் போறியள்?.”

“கடவுள் விட்டவழி தம்பி. படைச்சவன் படியளக்காமலா விடப்போறான். இருபது வரிசமாய் நான் செய்தனான். அதற்கு முன்பு எனது தகப்பனார் செய்தவர். இன்றுவரை நாங்கள் குத்தகைக்காசு கொடுக்கவில்லை. ஆரம்பத்திலை நான் குடுத்தனான், அவர் வாங்கேல்லை. அதுக்குப் பிறகு இன்றுவரை குத்தகைக்காசு குடுக்கேல்லை. அதுக்குப் பதிலாக காய்கறிகளைக் கொடுத்தாலும் அந்தாள் காசு தந்திடும். அப்பிடியான மனிசன் கேட்கேக்கை என்ன செய்யிறது. தவணை கூட நான் கேட்க விரும்பேல்லை. அப்பிடி இருந்தும் காணியை விற்றுவிட்டு இரண்டு இலட்சம் ரூபா கொண்டுவந்து தந்தது, நான் வாங்கேல்லை. திண்ணையிலை வைச்சிட்டுப் போட்டார். கடைசி வரையும் நான் அந்தக் காசைத் தொடமாட்டன். மகளின்ரை கலியாண வீட்டன்று கொண்டுபோய் மகளின்ரை கையிலை கொடுக்கப்போறன். தனபாலசிங்கம் நல்ல மனிசனாய், ஒழுக்கசீலனாய் வாழ்ந்ததாலை தான் இண்டைக்கு மேன்மை அடைந்திருக்கிறார்.”

கணேசமூர்த்திக்கு துக்கமாக இருந்தது. தன்னுடைய பரம்பரையினர் ஒழுக்கசீலராக வாழ்ந்ததால் மேன்மையாய் வாழ்ந்தவை. அதை நான் கெடுத்திட்டன் என்று கவலைப்பட்டான்.

“மகளுக்கு மருத்துவனான செல்வேந்திரனை திருமணம் செய்கிறார். அந்தக் குடும்பத்தைப் பற்றி எனக்குத் தெரியும். நல்ல குடும்பம். நான் தனபாலசிங்கத்திற்குச் சொல்லேல்லை. நான்தான் சிவலிங்கத்திட்டை தனபாலசிங்கத்தைப் பற்றிச் சொன்னனான். அவர் பல நாட்களாக நல்ல ஒழுக்கமான குடும்பத்தைத் தான் தேடினவர். நான் சொன்னதும் மறுபேச்சின்றி சம்மதித்துவிட்டார். ரவீந்திரன் பெரிய நிபுணன், ஒழுக்கசீலன். அவனும் நல்லாய் இருப்பான். ரவி இந்தக் கிராமத்திற்குக் கிடைத்த பொக்கிசம் என்றுதான் நான் சொல்லுவன்...”

“நல்லவர்கள் நல்லாய் வாழத்தானே வேண்டும்...” என்ற கணேசமூர்த்தி சிலகணங்கள் தாமதித்துவிட்டுச் சொன்னான், “உங்களுக்குச் செய்கைக்கு தோட்டம் இல்லாதத்தாலை கஸ்டப்படுவியள் என்றுதான் வந்தனான். என்னுடைய நீமாட்டித் தோட்டத்தை நீங்கள் செய்யுங்கோ...”

சில கணங்கள் அதிர்ச்சியோடு கணேசமூர்த்தியைப் பார்த்துக்கொண்டிருந்தார் தணிகாசலம். தான் காண்பது கனவோ என்றும் நினைத்தார். கணேசமூர்த்தியின் நீமாட்டித் தோட்டம் பொன் விளையும் பூமி. அவர் செய்த தனபாலசிங்கத்தின் தோட்டத்தை விட பத்துமடங்கு விளைச்சலைக் கொடுக்கக்கூடியது. கணேசமூர்த்தியின் பரம்பரை கேட்டவர்களுக்கு இல்லை என்று சொல்லாது வாரிவழங்கிய பரம்பரை. கணேசமூர்த்தி தான் தவறிப் பிறந்துவிட்டானென ஊரவர்

சொல்வதுண்டு. இப்பொழுது கேளாமலே கொடுக்குமளவிற்கு கணேசமூர்த்தி வளர்ந்துவிட்டானா...?

“என்ன யோசிக்கிறியள். நான் முன்பு தெரியாத்தனமாக குடித்துவிட்டு பல அட்டூழியங்களைச் செய்தனான். குடித்துவிட்டு சண்டைக்குப் போனது, அடிபட்டது, பொம்பிளைகளுடன் சேட்டைவிட்டது எவ்வளவு பிழை என்று இப்பத்தான் உணருறன். முன்பு எந்நேரமும் போதையில் இருந்ததால் எனக்கு ஒன்றும் புரிவதில்லை. இப்ப மனிசனாய் வாழுறத்தாலை எல்லாம் புரியுது. ஆனால் முன்பு செய்தவற்றை நினைக்க வேதனையாகவும், அவமானமாகவும் இருக்கு”

“இனி என்ன செய்யிறது. நடந்து முடிந்ததையிட்டு கவலைப்படுவதை விட இனிமேல் ஒழுக்கம் தவறாமல் நடக்கப்பார். ஒழுக்கம் தவறியவனுடைய பரம்பரைக்கும் பழிபாவங்கள் சேரும்.”

“அதை நான் தெரிந்துகொண்டன். என்னாலை பாதிக்கப்பட்டவர்கள் என்னைக் காணுற நேரங்களிலை என்னைப் பழிக்கிறாங்கள். பரிகசிக்கிறாங்கள். கேலி செய்கிறாங்கள். இந்தநிலை மாறக் கனகாலம் செல்லும். சபாநாயகத்திற்கு நான் செய்தது பெருங்கொடுமை. அவனுக்குச் செய்த பழி என்னை விட்டுப் போகாது...” அழுதான் கணேசமூர்த்தி.

தணிகாசலத்தால் எதுகும் பேசமுடியவில்லை. சில கணங்கள் பொறுத்து கணேசமூர்த்தி சொன்னான், “நான் திருந்திய பிறகுதான் ஒழுக்கம் தவறியதால் வரும் பழி பாவங்களைப் பற்றித் தெரிந்துகொண்டேன். இனிமேல் ஒழுக்கம் தவறமாட்டன்... நீங்கள் நீமாட்டித் தோட்டத்தைச் செய்யுங்கோ...” என்று கூறிவிட்டு எழுந்து நடந்தான் கணேசமூர்த்தி. எதுகும் பேசத் தோன்றாதவராக கணேசமூர்த்தி செல்வதையே பார்த்துக்கொண்டிருந்தார் தணிகாசலம்.

137. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்

எய்துவர் எய்தாப் பழி.

ஒழுக்கம் உடைய எல்லோரும் மேன்மை அடைவர். ஒழுக்கம் தவறுவோர் பெரும்பழிக்கு ஆளாவர்.

வித்து

தனபாலசிங்கம் தணிகாசலத்தைத் தேடி மூன்றாவது முறை வீட்டுக்கு வந்தபோதும் தணிகாசலம் இருக்கவில்லை. அவரும் விக்னேஸ்வரமூர்த்தியும் கல்வித்திணைக்களத்திற்கு பாடசாலையின் கட்டிட விடயமாகச் சென்றிருந்தனர். கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் இருவரையும் கண்டால் விடமாட்டார். பாடசாலைப் புதினங்கள், ஊர்ப்புதினங்கள் யாவும் கதைத்துவிட்டுத்தான் விடுவார். தணிகாசலத்தின் பண்புகளைக் கண்ட அவர் தணிகாசலத்தை தனது நண்பனாக ஏற்றுக்கொண்டுவிட்டார். தணிகாசலத்தின் வீட்டுக்கு தனது குடும்பத்துடன் அடிக்கடி வந்து போவார்.

கல்வித் திணைக்களத்தால் பிற்பகல் இரண்டு மணிக்கு வந்த தணிகாசலத்திற்கு அவரது மனைவி மூன்றுமுறை தனபாலசிங்கம் வந்து தேடிச் சென்றதாகச் சொன்னதும் தனபாலசிங்கத்தின் வீட்டுக்குப் புறப்பட்டார் தணிகாசலம். அன்று விநாயகர் சதுர்த்தி. நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தில் இரவுத் திருவிழா முடிந்தபின்புதான் உணவு அருந்துவார். தனபாலசிங்கம், தணிகாசலம் வீட்டுக்கு வந்ததும் தாமதியாது வருவார் என்ற எண்ணத்தில் காத்திருந்தார். தணிகாசலத்தைக் கண்டதும் எழுந்துவந்தார்.

“மூன்று முறை வீட்டை வந்ததாக மனைவி சொன்னா... ஏதும் அவசரமான பிரச்சினையோ...?”

தனபாலசிங்கம் ஏதும் கூறவில்லை. அவரைக் கட்டிப்பிடித்தார். கண்களால் கண்ணீர் ஆறாக ஓடியது.

தணிகாசலம் பதறிப் போனார். “எண்ணன்னை... எண்ணன்னை... சொல்லுங்கோ...”

“தணிகாசலம் நீ மனிசனில்லை, கடவுளடா... என்ரை பிள்ளைக்கு நல்ல இடத்திலை திருமணம் நடக்கிறத்திற்கு காரணமாயிருந்தவன் நீ என்பதை அறிந்தபோது என்னாலை சந்தோசத்தைத் தாங்கமுடியேல்லை... நீ எனக்குச் சொந்தக்காரனுமில்லை, என்ரை சாதியானும் இல்லை. அப்படியிருக்க மனிதத் தன்மையைக் கருத்திற்கொண்டு பெரும் செயலாற்றியுள்ளாய். நீ செய்த உதவியை என்ரை வாழ்க்கையிலை நான் மறக்கமாட்டன்...” அழுதார் தனபாலசிங்கம்.

“இதென்னண்ணை அழுகை. என்ன நடந்ததெண்டு சொல்லுங்கோ...”

இவன் சிவசுந்தரமூர்த்தி என்ரை மனைவிக்கு நெருங்கின உறவினன். ரவியை தனது மகளுக்குச் செய்யக் கேட்டவன், நான் மறுத்திட்டன். அது உனக்குத் தெரியும். எனது மகளுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்ட பிறகு மாப்பிளையின்ரை பெரிய தகப்பனாரிட்டைப் போய் எமது குடும்பத்தைப் பற்றிக் கேவலமாகச் சொல்லியிருக்கிறான். மாப்பிளையின்ரை தகப்பனைப் போல அல்ல அவர். அவருக்கு காசும், சாராயமும் கொடுத்திருக்கிறான். அதாலை அவர் என்ரை குடும்பத்தைப் பற்றி ஊருக்கை கேவலமாய்க் கதையைக் கிளப்பிவிட்டிருக்கிறார். சனம் கைகால், மூக்கு, வாய் வைச்சு கதைத்திருக்கு...'' அழுதார் தனபாலசிங்கம்.

''யார் எது சொன்னாலும் சிவலிங்கம் நம்பமாட்டார். அவரை எனக்குத் தெரியும்...'' என்றார் தணிகாசலம்.

''உண்மைதான். கலியாணம் குழம்பியிருக்கும். நடைபெறுவதற்குக் காரணம் நீதான். காலமை மாப்பிளையின் தகப்பன் வந்து எல்லாவற்றையும் சொன்னார். என்ரை மகள் யாரோ ஒருவனைக் காதலிச்சு அவனோடை ஓடினவளாம். நாலு நாளைக்குப் பிறகு அவளைப் பிரிச்சுக் கொண்டத்திட்டமாம்.'' விம்மி விம்மி அழுதார் தனபாலசிங்கம்.

''அழாதையண்ணை. உவன் செய்யிற அட்டூளியங்கள் கொஞ்சநஞ்சமில்லை. எல்லாத்துக்கும் சேர்த்து அனுபவிப்பான்...''

மாப்பிளையின் தகப்பன் சொன்னார் ''தணிகாசலம் தங்கமான மனிதன். முப்பத்தைந்து வருடங்களாக அவனை எனக்குத் தெரியும். உத்தமன், உயர்ந்தவன், ஒழுக்கசீலன். இதைவிடப் பெரிய வார்த்தைகள் இருந்தால் சொல்லலாம்... ஆனால் இல்லையே... என்ரை அண்ணன் குடித்தால் குடித்த பக்கம் கதைப்பார். அவர்தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்பதை நான் அறிந்துகொண்டேன். தணிகாசலத்தில் உள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையின் காரணமாக நான் எதையும் நம்பவில்லை. நான் மகனுக்குப் பெண் தேடியபோது இருவரை சிபார்சு செய்தான் தணிகாசலம். ஒருவர் அதிபர் விக்னேஸ்வரமூர்த்தி. அடுத்தவர் நீங்கள். விக்னேஸ்வரமூர்த்தியின் மகளுக்குத் திருமணமானபடியால் உங்களின் மகளை எனது மருமகளாக ஏற்பதெனத் தீர்மானித்துவிட்டேன். ஆயிரம் சிவசுந்தரமூர்த்திகள் வந்து சொன்னாலும் ஏற்கமாட்டேன். தணிகாசலத்தின் வார்த்தையைத் தான் ஏற்பேன் என்றார். நீ எனக்கு எவ்வளவு பெரிய உதவியைச் செய்திருக்கிறாய்...''

''மனிதராகப் பிறந்தால் பிறருக்கு உதவிசெய்தல் வேண்டும். இது என்ன பெரிய உதவி'' என்றார் தணிகாசலம்.

வாரம் ஒன்று கழிந்தது. இரவு பத்துமணி போல் சிவசுந்தரமூர்த்தியின் வீடு திடீரென தீப்பற்றிக்கொண்டது. உள்ளிருந்தோர் தாம் தப்பினால் போதுமென்று நினைத்து வெளியே ஓடிவந்தனர். சிவசுந்தரமூர்த்திக்கு பலத்த எரிகாயம் ஏற்பட்டது. மறுநாள் வந்த மின்சார சபையினர் மின் ஒழுக்கால் தீவிபத்து ஏற்பட்டதை அறிந்து அதைச் சீர் செய்தனர்.

138. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்

என்றும் இடும்பை தரும்.

நல்லொழுக்கம் இன்பமான நல்வாழ்விற்கு வித்தாக அமையும். தீய ஒழுக்கம் எப்பொழுதும் துன்பத்தையே தரும்.

வழுக்கியும் வரா

பகல் பன்னிரண்டு மணி. வெயில் சுட்டெரித்தது. தணிகாசலம் ஒழுங்கையால் நடந்து வந்தார். மணல் காலைக் கடுமையாகச் சுட்டது. அதனால் அவர் வேகமாக நடந்துகொண்டிருந்தார். அவருக்கெதிர்த்திசையில் சபாநாயகமும் துரைசிங்கமும் சின்னத்தம்பியும் வந்தனர். அவர்கள் மூவரும் நண்பர்கள்.

தணிகாசலத்தைக் கண்டதும் சபாநாயகம் சொன்னான், “இப்ப தணிகாசலம் கணேசமூர்த்தீன்ரை வால். முந்தி அவனைக் கண்டால் ஒளித்தோடும் தணிகாசலம் இப்ப வீட்டை கூட்டிக்கொண்டு போய் விருந்து வைக்கிறார். கணேசமூர்த்தி குடிச்சுப்போட்டு பெண்சாதி பிள்ளைகளை அடிக்க அதுகள் ஓடீற்றுதுகள். சாப்பாடில்லாமல் திரியிறானெண்டு குலசிங்கம் கூட்டியந்து சாப்பாடு கொடுத்தது. நாலைந்து நாளையாலை குலசிங்கத்தின்ரை பெண்சாதியைப் பிடிச்சிட்டான்... பிறகு பெரும் அடிபாடு. எல்லாம் உனக்குத் தெரியும் தானே சின்னத்தம்பி...”

“எனக்கே தெரியும்... ஊர் முழுக்கத் தெரியும். அவன் குடிச்சிட்டு கலாட்டா செய்யேக்கை பலர் அவனைக் குற்றம் சொன்னவை. அதாலை இப்ப அவன் ஒழுக்கமுள்ளவனாய் நடிச்சுக்கொண்டு எல்லாம் செய்யிறான். இப்ப பாராட்டீனை... காசு கொடுத்தால், காணி கொடுத்தால் செய்த அக்கிரமங்கள் அழிந்து போய்விடுமே...” என்றான் சின்னத்தம்பி.

“சனத்தை வளைச்சுப் பிடிக்கிறத்திலை கணேசமூர்த்தி சூரன் கண்டியோ. ஐம்பது பரப்புப் காணியைக் குடுத்தவுடனை அதிபர் ஏறுகிற மேடைகளில் எல்லாம் அவரைப்பற்றிப் புகழ்ந்து பேசுறார். அதோடை மகா கணபதி ஆலய தேர்த்திருவிழாவையும் அவனையே செய்யச் சொல்லிப் போட்டார். கோயிலுக்கு காசு கொடுத்தால் செய்த குற்றமெல்லாம் போம் என்று சனம் கதைக்குது...” என்றான் துரைசிங்கம்.

தணிகாசலம் எதுகும் கதைக்கவில்லை. பேசாமல் நடந்துகொண்டிருந்தார்.

“தணிகாசலம்... டேய் உனக்குத் தான் நாங்கள் கதை சொல்லுறம். நீ பேசாமல் போனால் எப்படி” சபாநாயகம் கேட்டான்.

“எனக்கும் கணேசமூர்த்தியின் செயல்களுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை. முன்பு அவனது செயல்களைப் பிடிக்காதத்தாலை நான் விலகி நடந்தன். திருந்திய அவன் கோயிலுக்கும் பாடசாலைக்கும் நன்கொடை அளித்தான். கோயில் நிர்வாகத்திலும் பாடசாலை நிர்வாகத்திலும் நான் இருப்பதால் எல்லோருடனும் சேர்ந்து அவன் அளித்த நன்கொடையை ஏற்றுக்கொண்டன். எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்போது நான் அதை எதிர்க்கலாமா?” என்று கேட்டார் தணிகாசலம்.

“ஒருவன் செய்யத்தகாத குற்றங்கள் பலவற்றைச் செய்துவிட்டு தானதர்மங்கள் செய்தால் அவன் புண்ணியவானாக மாறிவிடுவானா...? அத்துடன் கணேசமூர்த்தி திருந்திவிட்டதாக எப்படிச் சொல்கிறீர்கள். பகலில் குடிக்காதவன் இரவில் குடிப்பான். பகிரங்கமாகக் குற்றச் செயல்கள் செய்யாமல் இரகசியமாகச் செய்வான். பெம்பிளைப் பொறுக்கியான அவன் இரகசியமாகக் காசைக் கொடுத்து என்னென்ன செய்கிறானோ...?” என்றான் சபாநாயகம்.

அதற்கு தணிகாசலத்தால் விடைசொல்ல முடியவில்லை, பேசாமல் நின்றார். “முந்தி நீங்கள் நல்ல மனிசன். இப்ப கெட்டுப்போனியள். அவன் உங்களை மருட்ட நீமாட்டித் தோட்டத்தைத் தந்தவுடனை கட்சி மாறீட்டியள். ஒழுக்கத்தைக் கைவிட்டுட்டியள். இனிமேல் நாங்கள் எதைச் சொன்னாலும் கேட்கமாட்டியள். அவன் சொல்லுறத்தைத் தான் வேதவாக்காக ஏற்பியள்...” என்றான் சின்னத்தம்பி.

“கணேசமூர்த்தி வீடு தேடிவந்து நீமாட்டித் தோட்டத்தைச் செய்யச்சொன்னது உண்மைதான். நானும் ஆரம்பத்திலை அதை விரும்பினனான் தான். தனபாலசிங்கம் நான் செய்த தோட்டத்தை

விற்ற பின்பு என்ரை குடும்ப சீவியத்திற்கு என்ன செய்யலாமெண்டு யோசிச்சனான்...''

தணிகாசலம் சொல்லும் போது ஆத்திரத்துடன் குறுக்கிட்டான் சபாநாயகம் ' ''உமக்கு சீவிக்க வழியில்லாட்டில் நஞ்சைக் குடிச்சுச் சாகிறத்தை விட்டுட்டு குடும்பமானத்தை கணேசமூர்த்தீட்டை அடைவு வைத்திட்டீரே... நாளைக்கு அவன் உன்ரை மனைவியைப் பிடிப்பான், பிறகு உன்ரை மகளைப் பிடிப்பான்...''

தணிகாசலம் சிரித்தார் ''ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்று சொல்வார்கள். நான் கதைத்து முடித்தபின் உங்கடை நிலைப்பாட்டைச் சொல்லுங்கோ... தனபாலசிங்கம் காணி விற்றவுடனை யோசித்தனான் தான். என்னை நான் வணங்கிற மகா கணபதி கைவிடமாட்டார்.... தனபாலசிங்கம் விற்ற தோட்டத்தை வாங்கிய மணிவண்ணன் என்னைத் தொடர்ந்து செய்யச்சொல்லிப் போட்டார். அதனால் கணேசமூர்த்தியின் தோட்டத்தை வேண்டாமென்று சொல்லிப் போட்டன். எனது மானம் சொல்லளவில் போவதைக் கூட போவதை மகா கணபதி விரும்பமாட்டார்.''

''கணேசமூர்த்தி எதைச் செய்தாலும் நாங்கள் அவனை நல்லவனென்று சொல்லமாட்டம். அவன் திருந்தவில்லை, திருந்திமாதிரி நடிக்கிறான்'' என்றான் சபாநாயகம்.

தணிகாசலம் எதுகும் பேசாமல் நடந்துகொண்டிருந்தார்.

139. ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்.

தீய சொற்களை தவறியும் தம் வாயால் ஒழுக்கமுடையவர்கள் சொல்லமாட்டார்கள்.

அறிவிலார்

நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி முன்பள்ளி சனசமூக நிலையக் கட்டடத்திலேயே இயங்கி வருகிறது. சுமார் அறுபது பிள்ளைகள் வரை கல்வி பயிலும் அம்முன்பள்ளியில் மூன்று ஆசிரியைகள் கற்பித்தனர். அதன் தெற்குப் பக்கமாக மரம்போட்டு

கிடுகால் வேய்ந்து சனசமூக நிலையம் நடைபெற்றது. பகல் பன்னிரண்டு மணிக்கு முன்பள்ளி விட்டதும் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் முன்பள்ளி நடைபெற்ற சனசமூகக் கட்டிடத்துள் கொண்டுசென்று வைப்பது வழக்கம். முன்பள்ளிக்கென ஒரு தனியான கட்டிடம் அமைப்பதற்காக அதன் தலைவர் வேலாயுதபிள்ளை பெரும் சிரமமெடுத்தும் இன்றுவரை அதற்கென ஒரு தனியான கட்டிடத்தை அமைக்க முடியவில்லை. சனசமூக நிலையத்தின் அருகே தனபாலசிங்கத்தின் காணி உள்ளது. பனங்காடாக இருக்கும் அக்காணியின் முற்பகுதியில் முன்பள்ளி அமைப்பதற்குத் தேவையான இடத்தை இலவசமாகத் தருவதாக தனபாலசிங்கம் கூறியிருந்தார். அதன்படி சனசமூக நிலையத்தின் பெயருக்கு காணியையும் எழுதிக் கொடுத்துவிட்டார்.

சனசமூக நிலையத் தலைவர் வேலாயுதபிள்ளை நல்லதொரு சமூகசேவகர். துன்பப்படும் குடும்பங்களுக்கு வலியச்சென்று உதவி புரிபவர். அந்த மாவட்டத்தில் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி சனசமூக நிலையம் முதலிடம் பெறவேண்டுமென்று நினைத்து உழைப்பவர். அவரின் அயராத உழைப்பின் பயனாகத் தான் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி சனசமூக நிலையம், முன்பள்ளி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தாகசாந்தி நிலையம், அன்னதான மடம், விவசாய நிலையம் எனப் பல்கிப் பெருகியது. ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாகக் கட்டிடங்கள் இருந்த போதும் முன்பள்ளிக்கு தனியானதொரு கட்டிடம் இல்லாதது வேலாயுதபிள்ளைக்குப் பெரும்குறையாக இருந்தது. இந்த வருட முடிவுக்குள் முன்பள்ளிக்கென தனியானதொரு கட்டடத்தை அமைப்பதென வேலாயுதபிள்ளை நினைத்தார். அவர் ஒரு செயல் வீரர். நினைத்ததை நடத்தி முடிப்பதில் வல்லவர். சனசமூக நிலையத்தின் ஒவ்வொரு கட்டிடத்தையும் நாடகங்கள் நடாத்தியும், அதிஸ்டலாபச் சீட்டுகள் விற்றும், இசை நிகழ்வுகள் வைத்தும் சேர்த்த பணத்தைக் கொண்டு கட்டி முடித்தார். முன்பள்ளிக்கு தனியானதொரு கட்டிடமமைக்க பல இலட்ச ரூபா வேண்டும். அதை நாடகமோ, இசைநிகழ்ச்சி நடத்தியோ பெற முடியாது. எனவே பெரும் மனிதர்களின் உதவியை நாடினார் வேலாயுதபிள்ளை.

முதலில் வேலாயுதபிள்ளை கணேசமூர்த்தியிடம் சென்று முன்பள்ளிக்கு தனியானதொரு கட்டிடம் அமைப்பதற்கான காரணங்களைக் கூறினார்.

“வேலாயுதபிள்ளை நான் காசு தருவதைப்பற்றி பிரச்சினை இல்லை. நான் கொடுக்கிறத்தை வாங்கக்கூடாதெண்டு சொல்லிப் பிரசாரம் செய்யினை. நான் கொடுப்பதை வாங்கினால் பாவமாம். எனக்கேன் வீண் பிரச்சினை” என்றார் கணேசமூர்த்தி.

“சொல்லுறவன் சொன்னால் கேட்பாருக்கு என்னமதி.? அப்படிச் சொல்லுறவை கட்டிடத்தைக் கட்டித் தரலாம் தானே...”

“நான் ஒரு காலத்திலை கெட்டவன்தான். ஒப்புக்கொள்ளுறன். நான் செய்த தவறுகளை உணர்ந்து திருந்தீட்டன். ஆனால் சிலர் நான் திருந்தக்கூடாது என்று சொல்லீனை. உலகத்திலை எத்தனையோ பேர் கெட்டவர்களாக இருந்து திருந்தி பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். ஏன் எமது சமயத்திலேயே அருணகிரிநாதர் பட்டணத்தார் போன்றோர் இளமைக் காலத்தில் தவறுகள் செய்துவிட்டு திருந்தவில்லையா? அருணகிரிநாதர் அருளிய திருப்புகழை இப்பொழுது ஓதவில்லையா?” என்றார் கணேசமூர்த்தி. அவரின் குரல் கரகரத்தது.

“எதற்கும் குறை சொல்வதற்கென்று ஒரு சாரார் இருக்கிறார்கள். அதைப் பெரிதுபடுத்தினால் நல்ல விஷயங்களைச் செய்ய முடியாது. அதோடு வாழவும் முடியாது. நீங்கள் உதவி செய்யுங்கோ” என்று கூறிவிட்டு எழுந்தார் வேலாயுதபிள்ளை.

மறுநாள் அவர் கைலாயநாதனிடம் சென்று உதவி கோரினார். அவன்தான் உதவி செய்வதுடன் மணிவண்ணனிடமும் பணம்பெற்றுத் தருவதாகக் கூறினான்.

அன்று நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய மண்டபத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் வேலாயுதபிள்ளை கூறினார் “எமது முன்பள்ளிக்கு தனியானதொரு கட்டிடம் அமைக்கும் திட்டம் வெற்றியளித்துள்ளது. எமது ஊரில் வர்த்தக நிலையம் வைத்து நடாத்தும் கைலாயநாதன் ஓர் இலட்ச ரூபாவும், மணிவண்ணன் இரண்டு இலட்ச ரூபாவும், கணேசமூர்த்தி இரண்டு இலட்ச ரூபாவும், அதிபர் விக்னேஸ்வரமூர்த்தி ஐம்பதினாயிரம் ரூபாவும் தருவதாக ஒப்புக்கொண்டுள்ளனர்...” வேலாயுதபிள்ளை பேசும்போது சிவசுந்தரமூர்த்தியும் பேரம்பலமும் குறுக்கிட்டனர்.

“கைலாயநாதனிடமும் மணிவண்ணனிடமும் காசு வாங்கக்கூடாது...”

“கணேசமூர்த்தியிடமும் காசு வாங்கக்கூடாது” சபாநாயகமும் உருத்திரமூர்த்தியும் கர்ச்சித்தனர்.

“நல்லது கெட்டதற்கு ஒருசதமும் கொடுக்க மாட்டார்கள். எவற்றிலும் குறை பிடிக்கிறது தான் சிலரின் வேலை. கணேசமூர்த்தி ஒரு காலத்திலை கெட்டவன் தான். அவனைத் திருந்தவிடுங்கோ. அவன் பழையபடி நடக்கத் தொடங்கினால் எத்தனை பேருக்குத் தொல்லை தருவான் என்பதை ஏன் உணர மறுக்கிறியள். அவனால் பலருக்கு பாதிப்புத்தான். அதற்காக அவன் மனம் வருந்துகிறான்.

மன்னிப்புக் கேட்கிறான். காலிலை விழுறான். அதையும் பொறுக்காவிட்டால் அவன் என்ன செய்யிறதெண்டு சொல்லுங்கோடா...'' அதட்டினார் ஒரு முதியவர்.

''மணிவண்ணனும் கைலாயநாதனும் ஊருக்கு என்ன கேடு செய்தவையெண்டு காசு வாங்கவேண்டாம் என்று சொல்கிறீர்கள்'' என்று ஓர் இளைஞன் கேட்டான்.

''ஊரைக் கொள்ளையடிக்கிறான். கொள்ளையடிக்கிற பணத்தை தந்து பழி தீர்க்கிறான்'' என்றான் பேரம்பலம்.

''ஊரில் உள்ளவைக்கு எல்லாரைப் பற்றியும் எமக்குத் தெரியும். ஆகவே உங்களுக்கு விருப்பமில்லாவிட்டால் சபையாலை எழும்பிப் போங்கோ... படியாதவன் ஒருவன் சொன்னால் பரவாயில்லை. உயர் படிப்புப் படித்தனீங்கள், உயர்ந்த உத்தியோகங்களில் உள்ள நீங்கள் சொன்னால் எப்படி ஏற்கிறது. எத்தனை நூல்கள் படித்திருப்பீர்கள். எந்த நூலிலையாவது கெட்டவர்கள் திருந்தி வந்தால் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கா... படித்த படிப்பின்படி நடவுங்கோ...'' என்றார் வேலாயுதபிள்ளை.

சிவசுந்தரமூர்த்தியும் பேரம்பலமும் உருத்திரமூர்த்தியும் சபாநாயகமும் கோபமாக ஏசியபடி கூட்டத்தை விட்டுச் சென்றனர்.

140. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்

கல்லார் அறிவிலா தார்.

உலகத்தவரோடு இணைந்து நடக்கும் முறையைத் தெரிந்து கொள்ளாதவர்கள், பல்வேறு வகையான நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவர் ஆவர்.

பேதைமை

திருமதி நிர்மலா சத்தியநாதன் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆசிரியை நல்ல அழகி. பார்த்தவர்களைப் பரவசமடையச் செய்யும் அழகு அவளது உடலெங்கும் வியாபித்திருந்தது. அலங்காரப் பிரியையான அவளது கவர்ச்சியான கண்கள் எவ்வேளையிலும் மைதீட்டப்பட்டிருக்கும்.

போதையைத் தருகின்ற அவளது விழிகள் ஆடவரைச் சுண்டியிழுக்கும் சக்தி வாய்ந்தவை. அவள் கதைக்கும் போது கண்களும் உதடுகளும் கன்னங்களும் நாட்டியமாடும். அவள் எல்லோருடனும் இனிமையாகக் கதைத்துச் சிரிப்பாள். அவளின் தரிசனம் கிடையாதா என்று அவள் திருமணம் முடிக்குமுன் பலர் ஏங்கியதுண்டு. அவள் தன்னுடன் சிரிப்பவர்களுடன் சிரிப்பாள், கதைப்பவர்களுடன் கதைப்பாள். அவளைத் திருமணம் செய்யப் பலர் போட்டி போட்டனர்.

சத்தியநாதன் பெரும் வணிகன். பட்டணத்தில் பல வியாபார நிலையங்களின் சொந்தக்காரன். அவன் நிர்மலாவைக் கண்டு அவளது அழகிலே மயங்கித் திருமணம் செய்தான். பெரும் பணக்காரனான அவனுக்கு நிர்மலா வேலைக்குச் செல்வது பிடிப்பதில்லை. அதனால் திருமணம் முடித்த மறுநாள் சொன்னான்; ‘‘அன்பே உமது ஒரு வருடச் சம்பளத்தை நான் ஒரு நாளில் உழைப்பேன். அப்படி இருக்க நீர் வேலைக்குச் செல்லவேண்டுமா? வேலையை விட்டுவிட்டு வீட்டிலேயே இரும்...’’

‘‘வீட்டில் இருந்தால் பொழுது போகாது. எமக்குக் குழந்தை கிடைக்கும் வரை நான் வேலைக்குச் செல்கிறேன்’’ என்றாள் நிர்மலா.

அதன்பின் சத்தியநாதன் அவளை வற்புறுத்தவில்லை. திருமணம் நடந்து ஒருவருடம் கழிந்தும் நிர்மலா கருவுறவில்லை. சத்தியநாதன் பெரிய வியாபாரி. அவன் வீட்டில் நிற்கும் நாட்கள் மிகவும் குறைவு. வீட்டில் நின்றாலும் வியாபாரம் சம்மந்தமான நடவடிக்கைகளிலேயே ஈடுபடுவான். அதோடு மாதத்தில் நான்கு ஐந்து முறை வெளியூர்களுக்குச் சென்றுவிடுவான். அவன் திரும்பிவர நாலைந்து தினங்கள் செல்லும்.

நிர்மலா கலகலப்பானவள். எந்நேரமும் சிரித்துப் பேசுபவள். மிகவும் கலகலப்பான கணவனை எதிர்பார்த்த அவளுக்கு கண்ணால் காணமுடியாத கணவன் கிடைக்கப்பெற்றது பெரும் ஏமாற்றமாக இருந்தது.

ரவியின் போக்கு அவளுக்கு மிகவும் பிடித்தது. அதனால் அவள் ரவியோடு அடிக்கடி கதைக்கும் சந்தர்ப்பத்தை உருவாக்கினாள். விஞ்ஞான பாடத்திற்கு அப்பாடசாலையில் ரவியே பொறுப்பாக இருந்தமையால் அடிக்கடி அவள் ரவியைச் சந்தித்துக் கதைக்கவேண்டி இருந்தது. ரவியின் தோற்றத்தையும் அவனது பண்புகளையும் அவள் அளவுக்கதிகமாக விரும்பியமையால் அவளின் கனவுகளில் ரவி வலம்வரத் தொடங்கினான்.

ரவியிடம் பாடக்குறிப்பு, பாடத்திட்டம் போன்றவற்றைக் காட்டி ஒப்பமிடும் போது அவனுக்கு மிக அருகில் நிற்பாள். அவள் உடுத்திருக்கும் சேலை அவனுடன் உரசும். பேனாக்கள், புத்தகங்கள்

கொடுக்கும் போதும் வாங்கும் போதும் அவளது மிருதுவான விரல்கள் அவனது விரல்களைத் தீண்டும். கதைக்கும் போதும் இரட்டை அர்த்தத்தில் கதைப்பாள்.

''நீங்கள் ஏன் இன்னும் திருமணம் செய்யவில்லை''

''செய்வம் இப்ப என்ன அவசரம்'' என்றான் ரவி.

''அந்தந்த வயதில் அந்தந்தக் கருமங்களைச் செய்தல் வேண்டும். உங்களுக்கு பாடசாலை தான் காதலி'' என்று சிரிப்பாள்.

ரவி வஞ்சகமில்லாது பழகுவான். அவளது கவர்ச்சியான கண்கள் அவனுக்குத் தெய்வீகத்தன்மை உடையவளாகத் தோன்றும். அவளது சாயம் பூசப்படாத சிவந்த ஈர உதடுகள், பளபளக்கும் போதையூட்டும் கன்னங்கள், அழகான நெற்றி என்பன அவனுக்கு ஆச்சரியத்தைத் தராது அமைதியைக் கொடுக்கும். அவன் அவளைப் பார்ப்பதே இல்லை. பார்த்தாலும் அம்முகம் அவனது சகோதரியின் முகமாகவே தோன்றும்.

அன்று வெள்ளிக்கிழமை. பாடசாலை வருவதற்கு முன்பாக ரவியைச் சந்தித்தாள் நிர்மலா. ''நாளைக்கு உங்களுக்கு ஏதாவது வேலை இருக்கா...''

''இல்லை ஏன்?'' என்று கேட்டான் ரவி.

''நாளைக்கு என்னுடைய இனத்தவர் ஒருவர் வெளிநாட்டில் இருந்து வருகிறார். அவருக்கு மதிய உணவு கொடுக்கிறோம். நீங்களும் வாருங்கோ.''

''சீச்சீ வேண்டாம்....'' மறுத்தான் ரவி.

நிர்மலாவின் முகம்வாடிச் சோர்ந்தது; ''நான் உங்களைப் பெரிதாக நினைத்து வைத்திருக்கிறன். நேசிக்கிறன். அன்பு வைத்திருக்கிறன். ஒருமுறை வீட்டுக்கு வந்தால் என்ன...?'' கெஞ்சினாள்.

ரவீந்திரனுக்கு அங்கு செல்ல விருப்பமில்லை. எனினும் அவளின் வற்புறுத்தலுக்காக மனமின்றிச் சென்றான். அவன் சென்றபோது நிர்மலா மட்டும் வீட்டில் இருந்தாள்.

''வாருங்கோ வாருங்கோ'' என அன்பொழுக அழைத்தாள்.

ரவீந்திரன் உள்ளே சென்று ஆடம்பரமான நாற்காலி ஒன்றில் அமர்ந்தான். உள்ளே சென்று குளிர்பானத்துடன் வந்த நிர்மலா

குளிர்பானத்தைக் கொடுத்துவிட்டு அவனுக்கு எதிரே இருந்த நாற்காலியொன்றில் கால்மேல் கால்போட்டு அமர்ந்தாள்.

ஒருமுறை குளிர்பானத்தை உறிஞ்சிய ரவீந்திரன் ‘‘இன்னும் உங்கள் விருந்தினர் வரவில்லையா?’’ என்று கேட்டான்.

‘‘அவர்களுக்கு இன்று மத்தியானம் இன்னொரு இடத்தில் சாப்பாடாம். இரவு வருவதாக தொலைபேசியில் சொன்னார்கள். மத்தியான உணவு நாங்கள் இரண்டு பேரும்தான். அவர் வெளியூருக்குப் போய்விட்டார். வர மூன்று நாட்கள் செல்லும்...’’

ரவீந்திரன் குளிர்பானத்தை உறிஞ்சியபடி நிர்மலாவைப் பார்த்தான். சிவப்புநிற சட்டையில் வழமையைவிட மிகவும் அழகாக இருந்தாள். காலுக்கு மேல் கால் போட்டு அமர்ந்திருந்ததால் முழங்காலுக்கு மேலுள்ள கால்களின் திரட்சியான பகுதி வெகுதூரம் வரை தெரிந்தது. அதைப் பார்த்ததும் அவனது கண்கள் கூசின. மேலே பார்த்தான். மேற்சட்டையின் நடுப்பகுதியில் பெரியதொரு வெளி தெரிந்தது. அதனூடாக மார்புப்பகுதியின் கவர்ச்சி துல்லியமாகத் தெரிந்தது. ரவீந்திரன் கண்களை மூடினான். அதைப் பார்க்க அருவருப்பாக இருந்தது. வயிற்றைக் குமட்டியது. அவன் தடுமாறுவதைக் கண்ட நிர்மலா எழுந்து அவனருகே வந்து நின்றாள். அவளது முழங்கால்ப் பகுதி ரவீந்திரனது தொடையை உரசியது. ரவீந்திரனுக்கு நெருப்புச் சுட்டது போல் இருந்தது. எழுந்து அவளைப் பார்த்தான். அவளது கண்கள் சிவந்திருந்தன. உதடுகள் துடிதுடித்தன. உமிழ்நீரைக் கஸ்ரப்பட்டு விழுங்கினான். அவளது பற்கள் கீழுதடைக் கடிக்க நா மேலுதடைத் தடவியது.

‘‘இன்னொரு தினம் வருகிறேன்’’ என்று கூறிவிட்டு அவளது பதிலை எதிர்பாராது ஓடிச்சென்றான் ரவீந்திரன்.

141. பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை ஞாலத்து

அறம்பொருள் கண்டார்கண் இல்.

பிறனுக்கு உரியவளாகிய மனைவியை விரும்பி நடக்கும் அறியாமை அறம், பொருள் என்பவற்றை ஆராய்ந்து அறிந்தவரிடம் இல்லை.

பேதையர்

கணேசமூர்த்திக்கு தொண்டு துரவு செய்பவன் சண்முகநாதன். கணேசமூர்த்தி சிறைக்குச் செல்ல பலவருடங்களுக்கு முன்பிருந்தே சண்முகநாதன் கணேசமூர்த்தியிடம் வேலைக்குச் சேர்ந்தான். அவன் வேலைக்குச் சேரும்போது அவனுக்கு வயது பதினைந்து.

கணேசமூர்த்தியின் தோட்டங்களில் வேலை செய்பவர்களுக்கு உணவு கொண்டுசென்று கொடுத்தல், தென்னந்தோப்பில் பறிக்கப்படும் தேங்காய்களைக் கணக்கெடுத்தல், தென்னந்தோப்பில் நிற்கும் கால்நடைகளுக்கு தண்ணீர் வைத்தல் போன்றன சண்முகநாதனது வேலைகளாகும்.

தென்னந்தோப்பின் நடுவே வசதியான ஒரு சிறிய வீடு இருந்தது. அதில் சண்முகநாதன் தங்கியிருந்தான். அவ்வீட்டில் இரவு வேளைகளில் கணேசமூர்த்தியும் அவனது நண்பர்களும் தங்குவார்கள். தோப்பில் உள்ள தென்னைகளில் சீவப்படும் கள்ளை கொண்டுவந்து சண்முகநாதன் வீட்டில் வைப்பான். அவர்கள் அருந்தும் போது உவப்பான உணவு வகைகளைச் செய்து கொடுப்பான்.

கணேசமூர்த்தியின் தென்னந்தோப்பில் வேலை செய்பவள் சரோஜினி. அவள் சண்முகநாதனின் முறைப்பெண். எனினும் இரு குடும்பங்களுக்குமிடையில் இருந்த பகை காரணமாக அவர்கள் இருவரும் கதைப்பதில்லை. சரோஜினி நல்ல அழகி. பார்ப்பவர்களைக் கவரும் ஓர் அபூர்வ சக்தி அவளது முகத்தில் குடிகொண்டிருந்தது. அவள் வேலைக்குச் சேர்ந்த புதிதில் சண்முகநாதனைக் கண்டால் முகத்தை மறுபக்கம் திருப்புவாள். பின் தொழில் காரணமாக கதைத்தாள். காலப்போக்கில் அது காதலாக மலர்ந்தது.

கணேசமூர்த்தி பெண்கள் விசயத்தில் மிகவும் பலவீனமானவன். அழகான ஒரு பெண்ணைக் கண்டால் அசடு வழிவான். அவனுக்கு சரோஜினி மீது ஒரு கண் இருந்தது. சமயம் வரும்வரை பொறுத்திருந்தான். சண்முகநாதனின் காதல் விசயம் வீட்டுக்குத் தெரிந்த போது இரு வீட்டாரும் கொதித்தெழுந்தனர். சரோஜினியை அவளது தகப்பனார் வேலைக்குச் செல்லவிடாது தடுத்தார்.

கணேசமூர்த்தி தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்காக சண்முகநாதனைத் தூண்டிவிட்டான். “வாழ்க்கையில் நினைத்ததைச் சாதிக்க வேண்டும். இல்லாவிட்டால் வாழ்வதில் பிரயோசனமில்லை. சரோஜினி உன்னுடைய மாமன் மகள். குடும்பங்களுக்கிடையில் சண்டை சச்சரவு இருந்தால் உறவில்லாமல் போய்விடுமோ?. சிலநேரம் நீ அவளைக் கலியாணம் செய்தால் ஒற்றுமையும் வந்திடும்...”

“எனக்கு பயமாக இருக்கு அண்ணை. சரோஜினியின் தகப்பன் ஒரு முரடன். சரோஜினி என்னைக் கலியாணம் செய்தால் தான் சாவன் என்று சொல்கிறாராம். அந்தாள் தற்செயலாகச் செத்தால் வீண் பழியெல்லே வரும். அதுதான் பயமாக இருக்கு” என்றான் சண்முகநாதன்.

“சும்மாய் வெருட்டுறத்துக்காக சொல்லியிருப்பார். அவர் என்ன பெரிய பணக்காரனே உத்தியோகத்தில் செய்ய. சில தாய், தகப்பன்மார் பிள்ளைகள் கூட்டிக்கொண்டு போகட்டும் என்பதற்காகவும் இப்பிடியான கதையளைக் கதைக்கிறவை. நீ அவளைக் கூட்டிக்கொண்டு வா. எல்லாம் சரியாகிவிடும்...”

கணேசமூர்த்தி சண்முகநாதனின் தந்தையுடன் கதைத்தபோது அவர் சொன்னார்; “எனக்கு இருக்கிறது ஒரே ஒரு பிள்ளை. அவளுக்கு நல்ல இடமாகப் பார்த்துத்தான் சம்மந்தம் செய்ய வேணும். தெரியாத் தனமாய் என்ரை தங்கச்சியை அவனுக்குச் செய்து கொடுத்துவிட்டு இப்பநான் கலங்கிறமாதிரி அவளையும் செய்து கொடுத்துவிட்டுக் கலங்கேலாது.”

கணேசமூர்த்தி எதுகும் பேசவில்லை. ஒரு நாள் சண்முகநாதனுக்குச் சொன்னார் “இப்ப நீ முன்புபோல் வேலை செய்வதில்லை. அவளின் நினைப்பில் தான் இருக்கிறாய். வேணுமெண்டால் அவளைக் கூட்டிக்கொண்டு வந்து தென்னந்தோப்பு வீட்டிலை இரு. உனக்குத் தேவையான உதவிகள் எல்லாம் நான் செய்யிறன். தாலிக்கொடி வாங்கித்தாறன். செலவுக்கும் காசுதாறன். பிறகு சம்பளத்தில் கழிக்கிறன்.”

சண்முகநாதன் பூரித்துப் போனான். “மிகவும் நன்றி அண்ணை. நான் இந்த உதவியை மறக்கமாட்டன்” என்றான்.

மறுநாள் சண்முகநாதன் சரோஜினியைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டான். கணேசமூர்த்தி சொன்னபடி உதவிகள் பலவும் செய்து கொடுத்தான். அவர்களுக்குத் திருமணமான பின்பு தனது நண்பர்களோடு சேர்ந்து தென்னந்தோப்பு வீட்டில் கணேசமூர்த்தி கள் அருந்துவது இல்லை. நண்பர்களுடன் கள்ளருந்திவிட்டு தென்னந்தோப்பு வீட்டுக்கு வருவான். அங்கே சண்முகநாதன் கணேசமூர்த்திக்காக கள்ளு வாங்கி வந்து வைத்திருப்பான். அதையும் குடித்துவிட்டு சில சமயம் அங்கேயே படுத்துவிடுவான் கணேசமூர்த்தி.

சரோஜினி தமக்கு வீடும், பொருள் உதவியும், பண உதவியும் செய்த கணசமூர்த்தியை மதித்து நடந்தாள். அந்தத் தென்னந்தோப்பை அவளின் பொறுப்பிலேயே விட்டுவிட்டான் கணேசமூர்த்தி. அதனால் அவள் கணேசமூர்த்திக்குத் தெரியாமல் தேங்காய்களை விற்பாள்.

விற்கும் தேங்காய்களைக் குறைத்துச் சொல்வாள். சரோஜினி மீதிருந்த மோகத்தால் கணேசமூர்த்தி அவள் சொல்வதை அப்படியே நம்பினான்.

அன்று கணேசமூர்த்தி திட்டமிட்டு சண்முகநாதனை வயற்காவலுக்கு அனுப்பினான். இரவு அவன் குடிக்கும் போது சரோஜினி அவனுக்கு சுவையான கறி கொண்டுவந்து கொடுத்தாள். கொடுக்கும் போது கணேசமூர்த்தி அவளின் கையில் பிடித்தான். அவள் ‘‘விடுங்கோ’’ என்று சிணுங்கினாள். கணேசமூர்த்தி விடவில்லை, பிடியை இறுக்கினான்.

அதன் பின் அவளே கதியென தென்னந்தோப்பு வீட்டிலேயே தங்கினான் கணேசமூர்த்தி. அவன் வீடு செல்வது மிகமிகக் குறைவு. அதன்பின் சிறைக்குச் சென்றான். சிறையால் வந்தபின் அவன் சண்முகநாதனது வீட்டுப்பக்கம் செல்வதில்லை.

அன்று நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி சனசமூக நிலையப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதன் செயலாளராக கணேசமூர்த்தியின் பெயரைப் பிரேரித்தான் பாலசிங்கம்.

உடனே சபாநாயகம் எழுந்து சொன்னான்; ‘‘நான் ஆட்சேபிக்கிறேன். அறத்தின் வழி நடவாத பேதையர்களுள்ளே பிறன் மனைவியை விரும்பி அவளையே கதியென்று நினைக்கின்றவர்கள் பேதையர்களுள் கீழானவர்கள். அப்படியானவர்களைப் பதவியில் அமர்த்தக்கூடாது. கள் அருந்துபவன், களவெடுப்பவன், முற்கோபக்காரன் போன்றவர்கள் செய்யும் குற்றம் சாதாரணமானவை. ஆனால் பிற பெண்களைத் தீண்டும் பழக்கமுள்ளவன் மகாபாவி. அவனை நம்பி நாம் வீட்டுக்கு அழைத்துச் செல்லக்கூடாது. சனசமூக நிலையத்திற்கு பல கன்னிப்பெண்கள் வருவார்கள். திருமணமான பெண்கள் வருவார்கள். அப்படியான இடத்திற்கு கணேசமூர்த்தியை செயலாளராகத் தெரிதல் கூடாது’’ என்றான்.

கணேசமூர்த்தி எதுகும் பேசாமல் தலையைக் குனிந்தபடி எழுந்து சென்றான்.

142. அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை

நின்றாரின் பேதையார் இல்.

அறத்தை விட்டு தீய வழியில் ஒழுகுவோர் எல்லோரிலும் பிறன்மனைவியை விரும்பி அவளுடைய வீட்டு வாயிலில் சென்று நிற்பவரைப் போல் அறிவிலிகள் இல்லை.

இறந்தவர்

கணேசமூர்த்தி தனது வாழைத்தோட்டத்தில் நின்றான். முன்பு போல் அவன் இப்பொழுது கூலிக்காரரை நம்பி விடுவதில்லை. முன்பென்றால் வேலைகள் செய்யும்போது நண்பர்களோடு சேர்ந்து குடித்துவிட்டு காடைத்தனம் பண்ணுவான். இப்பொழுது அப்படி அல்ல வேலை நடக்கும் எல்லா இடங்களுக்கும் சென்று வேலை சரியாகச் செய்கிறார்களா என்று பார்ப்பான். குறிக்கப்பட்ட வேலையை ஒழுங்காகச் செய்தால்த் தான் சம்பளம் கொடுப்பான். அவனது தோட்டங்களிலும் வயல்களிலும் வேலை செய்வோர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வேலை செய்யாமலும், கூலியாட்களின் தொகையைக் கூடுதலாகச் சொல்லியும் பணம் பெறுவதுண்டு. அதனால் அவன் இப்பொழுது மிகவும் கடுமையாக நடந்துகொண்டான்.

அவன் இப்பொழுது குடிப்பதில்லை. மனைவி மக்களுடன் மிகவும் சந்தோசமாக வாழ்ந்துகொண்டிருந்தான். முன்புதான் வாழ்ந்த வாழ்க்கையை நினைக்க அவனுக்கு அருவருப்பாக இருந்தது.

‘‘அண்ணை’’

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான் கணேசமூர்த்தி. எதிரே அவனது நண்பன் தேவராஜனின் மனைவி அபிராமி நின்றாள். அவளைக் கண்டதும் அவனது இதயம் ‘‘திக்திக்’’ என்று அடித்தது.

தேவராஜா அவனுடன் கூடப்படித்தவன். உயிர் நண்பன். படிக்கும் போது இருவரும் ஒன்றாகவே எங்கும் செல்வார்கள். தேவராஜாவின் தந்தை ஓர் ஏழை விவசாயி. தேவராஜாவுக்கு கீழ் ஐந்து சகோதரர்கள் இருந்தனர். அதனால் அவர் தேவராஜாவைப் பாடசாலையால் மறித்து தன்னுடன் வேலைக்குக் கூட்டிச்சென்றார். மாலை வேளைகளிலும் வேலை இல்லாத நாட்களிலும் இருவரும் ஒன்றாகவே இருப்பார்கள். தேவராஜாவுக்கு அடிக்கடி பணக்கஸ்ரமேற்படும். அவனுக்கு பணக்கஸ்டம் ஏற்படும் போதெல்லாம் கணேசமூர்த்தி கொடுத்துதவுவான். அதை தேவராஜா திருப்பிக் கொடுப்பதில்லை. திருப்பிக்கொடுத்தாலும் கணேசமூர்த்தி வாங்கமாட்டான்.

கணேசமூர்த்தியுடன் நட்பாக இருந்தபோதும் தேவராஜா குடிப்பதில்லை. தேவராஜாவின் தம்பி ஒருவன் பட்டணத்திலுள்ள

பெரிய பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்க விரும்பினான். அதற்கான பணத்தை கணேசமூர்த்தியே கொடுத்தான்.

கணேசமூர்த்தியின் தோட்ட வேலைகளுக்குப் பொறுப்பாக தேவராஜா இருந்தான். கணேசமூர்த்தி குடித்துவிட்டு காடைத்தனங்களில் ஈடுபட்டிருந்த வேளையில் தேவராஜாவே முழு நிர்வாகத்தையும் கவனித்தான்.

தேவராஜா திருமணம் செய்தபின்பும் கணேசமூர்த்தியின் நட்பை விடவில்லை. இரவு எட்டு மணிக்குப் பின்பு தேவராஜா கணேசமூர்த்தியைச் சந்தித்துக் கதைப்பான். கணேசமூர்த்தி தான் செய்யும் அடாவடித்தனங்கள் பற்றி கூறிப் பெருமைப்படும் போது தேவராஜா நியாயங்களை எடுத்துக் கூறுவான். அந்த நேரத்தில் தனது பிழைகளை ஒத்துக்கொள்ளும் கணேசமூர்த்தி மறுநாள் அவற்றை மறந்துவிடுவான். அத்துடன் தேவராஜாவிடம் தனது மனக் கிடக்கைகளை ஒளிவு மறைவின்றி கணேசமூர்த்தி சொல்வான்.

தேவராஜா திருமணமான பின் கணேசமூர்த்திக்கு விசேட நாட்களிலும், விசேடமாக சமையல் செய்யும் வேளைகளிலும் வீட்டுக்கு அழைத்துவந்து உணவு கொடுப்பான். அவனது மனைவி அபிராமி அவனை ‘‘அண்ணா அண்ணா’’ என்று பாசம் பொங்க அழைப்பாள். ‘‘அபிராமி உன்னைப் போல் ஒரு பெண் எனக்குத் தங்கையாக இருந்து அன்பு செலுத்தியிருந்தால் நான் இப்படிக் கெட்டழிந்திருக்க மாட்டேன்’’ என்பான் கணேசமூர்த்தி.

‘‘கெட்டவர்கள் எல்லோரும் நெடுகக் கெட்டவர்களாகவா இருக்க வேண்டும்? இனியாவது திருந்தலாம் தானே...’’ என்பாள் அபிராமி.

ஆரம்பத்தில் கணேசமூர்த்தி மரியாதையாக அவளுடன் நடந்தபோதும் காலப்போக்கில் அவன் அபிராமியுடன் காதல் விளையாட்டுகள் புரியத் தொடங்கினான். ஆரம்பத்தில் அவனது சேட்டைகளைப் புரியாதவள் போல் நடந்தாள் அபிராமி. அன்று தேவராஜா இல்லாத நேரம் வந்த கணேசமூர்த்தி தண்ணீர் கேட்டான். அவள் செம்புடன் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்த போது செம்புடன் சேர்த்து அவளது கையையும் பிடித்தான். அபிராமிக்கு உடல் பற்றி எரிந்தது. ‘‘நீயும் ஒரு மனிதனா?. உன்னை நண்பனென நினைத்து சந்தேகம் கொள்ளாது வீட்டுக்குக் கூட்டிவரும் நண்பனின் மனைவியின் மீது தகாத ஆசை கொள்ளலாமா? அவருக்கு முன் தங்கை என்று கூறும் நீ அவரில்லாத வேளைகளில் என்னை மனைவியாக்கப் பார்க்கிறாய். உனக்கு ஏன் இந்தப் பெண்மோகம். ஊரில் உள்ள சில பெண்கள் உனது இச்சைக்கு இணங்கியதால் எல்லோரையும் அப்படி நினைத்துவிட்டாய். உன்னை நம்பி வீட்டுக்குக் கூட்டிவரும் எனது கணவருக்கு நான் உனது நடவடிக்கைகள் பற்றிச் சொல்லமாட்டேன்.

நானே உனக்கு தகுந்த தண்டணை தருவேன். நீ இனிமேல் தவறாக நடக்க முற்பட்டாயானால் உன்னைக் கொலை செய்வன்'' என்றாள்.

அதன்பின் கணேசமூர்த்தி தேவராஜாவின் வீட்டுக்குச் செல்வதைக் குறைத்துக்கொண்டான். சென்றாலும் அவளைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை.

''இப்ப நீங்கள் முன்பு போலில்லை. திருந்தி விட்டீர்கள் என்று நம்பியதால் தான் உங்களிடம் வந்தேன். எனது கணவர் சுகமில்லாமல் ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெறுகிறார். உங்களை பார்க்க ஆசைப்படுகிறார். போய் ஒருமுறை பாருங்கள்... மகாலிங்கம் அண்ணனிடம் ஒரு விஷயமாக வந்தேன். வந்த வழியில் உங்களைக் கண்டதால் எனது கணவரின் விருப்பத்தைச் சொன்னேன்...'' என்றாள்.

கணேசமூர்த்தி தன்னைச் சுதாகரித்துக் கொண்டு ''சரி.. சரி... நான் பின்னேரம் போய்ப் பார்க்கிறேன்'' என்றான்.

143. விளித்தாரின் வேறுஅல்லர் மன்ற தெளிந்தாரில்

தீமை புரிந்துஒழுகு வார்.

சந்தேகமல்லாமல் நம்பி நடப்பவனுடைய மனைவியை விரும்பி தீமையைச் செய்து நடப்பவர் செத்தவரை விட வேறுபட்டவர் அல்லர்.

பயனில்லாதவர்

திருமதி நிர்மலா சத்தியநாதனின் வீட்டில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி ரவீந்திரன் விக்னேஸ்வரமூர்த்திக்கு விபரமாகச் சொல்லியிருந்தான். அவர் எதுகும் பேசாது மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

''மற்றவர்களை நாம் திருத்து முன்பு, நாம் தான் திருந்தி நடக்க வேண்டும் என்று மூத்தோர் சொல்வார்கள். அதன்படி நீர் நடந்துகொண்ட முறையை நான் பாராட்டுகிறேன். இந்த விசயத்தை நீர் உம்முடனேயே வைத்துக்கொள்ளும். யாருக்கும் சொல்லவேண்டாம். யாருக்காவது சொன்னால் அவர்கள் உங்களையும் குறைசொல்வார்கள்.

அத்துடன் தாமே இயற்றிப் பல கட்டுக் கதைகளைக் கட்டி உலாவ விடுவார்கள். அத்துடன் இது மானப் பிரச்சினை. நீர் நேர்மையானவர், சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் மற்றையோர் அப்படி நினைக்கமாட்டார்கள். ஒரு பாவம் செயல்கள் மூலம் தான் செய்யப்படுவது அல்ல. நினைவுகள் மூலமும் செய்யப்படலாம். பிறர் தவறாகக் கதைப்பதன் மூலமும் ஏற்படலாம்'' என்றார்.

ரவீந்திரன் அதன் பின்பு நிர்மலாவுடன் கதைப்பதைத் தவிர்த்துக்கொண்டான். ஆவள் சிரித்துக் கதைத்தால் எரிந்து விழுந்தான். அதனால் அவள் ரவீந்திரனோடு பழகுவதைக் குறைத்துக்கொண்டாள்.

கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர் வகுப்புகளுக்கு கணிதபாடம் கற்பிப்பவர் குருமூர்த்தி. நல்லாசிரியர். கடமை தவறாதவர். பின்தங்கிய மாணவர்களுக்கு மாலை வேளைகளில் தினமும் வகுப்பு எடுப்பவர். அதிபருடன் முரண்படாது பாடசாலையின் சகல விடயங்களிலும் ஒத்துழைப்பவர். மக்களிடையே நல்லாசிரியர் எனப் பெயர் வாங்கியவர். அவருக்கு மூன்று பிள்ளைகள். மூத்தமகள் ஆனந்தி கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவில் கல்வி கற்கிறாள்.

நிர்மலா அவருடன் கலகலப்பாகப் பழகுவாள். பொதுவாக நிர்மலா எல்லா ஆசிரியர்களுடனும் கலகலப்பாகப் பழகுவதால் யாரும் அவளைச் சந்தேகிப்பதில்லை. ரவீந்திரன் நிர்மலாவின் நடத்தையைப் பற்றி விக்னேஸ்வரமூர்த்திக்குச் சொன்ன பின்பு அவர் அவளைச் சற்றுக் கண்காணிக்கத் தொடங்கினார். நிர்மலா குருமூர்த்தியுடன் சற்று நெருக்கமாகப் பழகுவது அவருக்குத் தெரிந்தது. என்னதான் ரவீந்திரன் நம்பிக்கை உடையவனாக இருந்தாலும் கலகலப்பாகப் பழகும் ஒரு பெண்ணை காரணமின்றி சந்தேகப்பட்டிருப்பானோ? என எண்ணினார். பொதுவாக பாடசாலை ஆசிரியர்கள் கலகலப்பாகவும், அன்பாகவும், ஒற்றுமையாகவும் இருந்தால் தான் பாடசாலை நல்ல முறையில் நடைபெறும். ஆசிரியர்களுக்கிடையில் பிரச்சினைகளை வளர்த்துக்கொண்டு ஓயாமல் சண்டைபிடித்தால் அதைத் தீர்ப்பதே நிர்வாகத்தின் பெரும் வேலையாக இருக்கும்.

அன்று சனிக்கிழமை. நிர்மலாவின் வற்புறுத்தலுக்காக குருமூர்த்தி அவளின் வீட்டுக்குச் சென்றார். நிர்மலா அவரை முகம்மலர வரவேற்றாள். அவர் கொண்டுவந்த இனிப்புப் பொட்டலத்தை அவளிடம் கொடுத்துவிட்டு அங்கிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தார் குருமூர்த்தி. அவருக்கு எதிரே இருந்த இன்னொரு நாற்காலியில் அமர்ந்தாள் நிர்மலா. அவள் அணிந்திருந்த இறுக்கமான சட்டையினூடாக இளமையின் பூரிப்பு தெளிவாகத் தெரிந்தது. அதைப் பார்த்ததும் சற்று ஆடிப்போனார் குருமூர்த்தி.

அவளின் சிரிப்பில் இதுவரை அனுபவித்திராத ஓர் இன்பம் அவருக்கு ஏற்பட்டது. பற்களின் கவர்ச்சி, கன்னங்களின் திரட்சி, உதடுகளின் நளினம் அவரை மெய்மறக்கச் செய்தது. அவளையே பார்த்தபடி அமர்ந்திருந்தார்.

அதன்பின் தினமும் அவளைப் பார்க்கவேண்டும் என்ற உணர்வு அவரின் உள்ளத்தில் கிளர்ந்துகொண்டிருந்தது. பாடசாலையில் அவளைக் காணாது விட்டால் அல்லற்பட்டார். அவள் பாடசாலையில் கதைக்கும்போது சற்று அதிகமாகக் கதைத்தார். நிர்மலா அடிக்கடி தனது வீட்டுக்கு வருமாறு அவரைக் கேட்பாள். அதனால் அவர் பாடசாலையில் மாலைநேர வகுப்புக்கள் வைப்பதை நிறுத்தினார். நாளடைவில் அவர்களுடைய நெருக்கம் கூடியது. அவர் அடிக்கடி நிர்மலாவின் வீட்டுக்குச் சென்றுவந்தார்.

அன்று விக்னேஸ்வரமூர்த்தி குருமூர்த்தியை தனது அலுவலகத்திற்கு வருமாறு அழைத்தார். குருமூர்த்தி வந்ததும் ஆசனத்தில் அமருமாறு பணித்தார்.

“இப்பாடசாலையில் ஒழுக்கம், கட்டுப்பாடு, முன்னேற்றம் என்பன மாணவர்களில் மட்டும் தங்கியிருப்பதல்ல. ஆசிரியர்கள், அதிபர், சிற்றூழியர் யாபேரிலும் தங்கியுள்ளது. ஒரு மனிதன் ஒழுக்கமுள்ளவனாக வாழவேண்டும். ஆசிரியர்கள் மற்றையோருக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ளல் வேண்டும். ஒரு திருடன தான் திருடிய பொருளைத் திருப்பிக் கொடுப்பதன் மூலம் நல்லவனாகலாம். ஒரு குடிகாரன் குடியை விடுவதன் மூலம் ஒழுக்கமுள்ளவனாக மாறலாம். சிறுசிறு குற்றங்களைச் செய்பவன் தண்டனைகள் மூலம் திருந்தி நல்லவனாகலாம். ஆனால் திணையளவும் ஆராயாமல் பிறனுடைய மனைவியின் மேல் இச்சை கொண்டு அவளோடு உறவுகொள்பவன் எவ்வளவு பெருமை உடையவனாக இருந்தாலும் அப்பெருமையால் பயன் இல்லை. எனவே நீர் நிர்மலாவின் வீட்டுக்குச் செல்வதை நிறுத்த வேண்டும்...” என்றார்.

குருமூர்த்திக்கு வியர்த்துக் கொட்டியது. அவமானத்தால் உடல் நடுங்கியது. எதுகும் சொல்லத் தோன்றாது தடுமாறினார். “நீர் நிர்மலாவின் வீட்டுக்குச் சென்று வருவதைப் பற்றியும், பாடசாலையில் அவாவுடன் நடந்துகொள்வது பற்றியும் எனக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. இதோ பாரும் அது பற்றிய கடிதம்....” என்று ஒரு கடிதத்தை நீட்டினார் விக்னேஸ்வரமூர்த்தி. குருமூர்த்தி அதை வாங்கிப் பார்த்தார்.

“நீர் ஒரு சிறந்த ஆசிரியர். எனக்கு மிகவும் நம்பிக்கைக்கு உரியவர். பாடசாலைக் கடமைகளை நல்ல முறையில் செய்து வருகிறீர். மாணவர்களும் பெற்றோரும் உம்மில் பெரும்நம்பிக்கை வைத்துள்ளனர். உமது தகாத உறவால் யாவும் கெட்டழிந்துவிட்டது.

எனவே உம்மை இடமாற்றம் செய்யும்படி கல்விப்பணிப்பாளருக்கு அறிவித்துள்ளேன்...'' என்றார்.

குருமூர்த்தி எதுகும் பேசாது எழுந்து சென்றார். அவரின் மனதுள் நிர்மலாவுடனான தொடர்பு தெரிந்தமைக்கான வெட்கம் தோன்றவில்லை.

144. எனைத்துணையர் ஆயினும் என்ஆம்? தினைத்துணையும்

தேரான் பிறனில் புகல்.

தினையளவு கூட ஆராய்ந்து பாராமல் பிறனுடைய மனைவி மேல் மோகம் கொண்டு செல்லுதல், எவ்வளவு பெருமை உடையவர்களானாலும் என்னவாகும்?

அழியாத பழி

குருமூர்த்தியால் நிர்மலாவை மறக்க முடியவில்லை. ஆவள் நடந்துகொள்ளும் விதம், அவளது அங்கங்களின் கவர்ச்சி என்பன அடிக்கடி அவரின் மனதில் தோன்றி நிம்மதியை விரட்டிக்கொண்டிருந்தது. ஒரு வழியில் யோசித்துப் பார்த்தால் தான் செய்வது பெரும் பிழை என்று நினைத்தார். அழகான மனைவி வீட்டில் இருக்க அடுத்தவன் மனைவியை நேசித்து அவளே தஞ்சமெனக் கிடக்கும் நிலை அருவருக்கத்தக்கது என்று நினைப்பார். இனிமேல் அவளது தொடர்பு தேவையில்லை. இனிமேல் அவளைப் பார்க்கக்கூடாது. அவளோடு பேசக்கூடாது என்று நினைப்பார். மறுகணம் அந்நினைவு பஞ்சாய்ப் பறந்துவிடும். அவளின் அழகான அங்கங்கள், கவர்ச்சியான சிரிப்பு, போதையூட்டும் சொற்கள் ஆகியன மனதில் எழுந்து இன்பமூட்டும். மிகவும் எளிதாக அவர் நினைத்துக்கூடப் பார்த்திராத வேளையில் கிடைத்த பெரும் இன்பம் தரும் பொக்கிசமான அவளை இழக்க அவரால் முடியவில்லை. அதனால் அவர் அடிக்கடி நிர்மலாவின் வீட்டுக்குச் சென்று வந்தார்.

இருவரினதும் தொடர்பு ஊர்முழுவதற்கும் தெரியவந்தது. ஊர்ச்சனங்களும் மாணவர்களும் அதைப்பற்றியே கதைத்தனர். அதனால் விக்னேஸ்வரமூர்த்தி நிர்மலாவை அழைத்துச் சொன்னார். ''ஓர் ஆசிரியை ஒழுக்கமாக வாழ வேண்டும். ஒருவர் தவறு செய்யாத போதும் தவறு செய்கிறார் என்று சமூகம் கதைத்தால் நாம்

கோபப்படாது, ஏன் மக்கள் அப்படிக் கதைக்கிறார்களென யோசித்துப்பார்த்தல் வேண்டும். தவறுகளை நாம் தெரிந்தும் செய்வோம். தெரியாதும் செய்வோம். தெரிந்து தவறு செய்பவன் திருந்தமாட்டான். தான் செய்வது தான் சரியென்று வாதிடுவான். இல்லாவிட்டால் தான் செய்யவில்லை என்பான். நான் நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்களென கேட்கவரவில்லை. ஊரில் பலர் உங்களையும் குருமூர்த்தியைப் பற்றியும் அவதூறாகக் கதைக்கிறார்கள். சம்மந்தப்பட்ட இருவரும் எனக்குக் கீழ் வேலைசெய்யும் ஊழியர்கள் என்பதால் ஊரவர்கள் கதைப்பது எனக்கும் இந்த நிறுவனத்திற்கும் அவமானமாகும். நான் குருமூர்த்திக்கு இதுபற்றி விரிவாக எடுத்துக்கூறியும் அவர் திருந்தவில்லை. அதனால் அவரை இப்பாடசாலையில் இருந்து மாற்றும்படி எழுதிவிட்டேன். அதேபோல் உங்களையும் மாற்றும்படி எழுதப்போகிறேன்...''

நிர்மலா பதறிப் போனாள்; ''ஐயா தயவு செய்து அப்படி எழுதி விடாதீர்கள். நான் இடமாற்றப்பட்டால் எனது கணவர் சந்தேகிப்பார். அத்துடன் ஊரவர்களும் தவறாகக் கதைப்பார்கள். குடும்பத்தில் பெரும் சிக்கல் உண்டாகும். எனது கணவர் திருமணம் செய்த நாள் முதல் என்னை வேலையால் நிற்கும்படி வற்புறுத்துகிறார். அதனால் நாளை முதல் நான் பாடசாலைக்கு வரமாட்டேன்'' என்றாள்.

''ஒரு கணவன் தன் மனைவிக்குத் துரோகம் செய்தல் ஆகாது. அதே போல் ஒரு மனைவி தன் கணவனுக்குத் துரோகம் செய்தல் கூடாது. திருமணமான நீ இன்னொரு ஆடவனோடு தொடர்பு வைத்ததன் மூலம் அழியாத பழிக்கு ஆட்பட்டுள்ளாய். அப்பழியை நீக்க முடியாது என்றாலும் இனியாவது பழி செய்யாமல் வாழப் பழகு'' என்றார்.

நிர்மலா சிலகணம் விக்கி விசும்பி அழுதாள். பின் எழுந்து சென்றாள். அதன்பின் அவள் பாடசாலைக்கு வரவில்லை.

குருமூர்த்திக்கு வேறொரு பாடசாலைக்கு இடமாற்றம் கிடைத்தது. அவருக்கு அப்பாடசாலைக்குச் செல்ல விருப்பமில்லை. இடமாற்றத்தை இரத்துச் செய்ய விக்னேஸ்வரமூர்த்தி விடாப்பிடியாக மறுத்துவிட்டார். குருமூர்த்தியின் இடமாற்றம் பற்றி ஊரவர் பல்வேறு விதமாகக் கதைத்தனர். நல்லதொரு ஆசிரியர் என்ற காரணத்தால் தணிகாசலம் அவரைத் தேடிவந்தார்; ''ஏற்கனவே உங்களை விக்னேஸ்வரமூர்த்தி அழைத்து எல்லாம் சொன்னவர். நீங்கள் கேட்கவில்லை. நல்ல ஆசிரியரான நீங்கள் இங்கிருந்து செல்வதை விட, நீங்கள் செல்லும் பாடசாலை அதிபரும் மாணவர்களும் உங்களைத் தமக்கு வேண்டாமென்று கல்விப்பணிப்பாளருக்கு எழுதிக்கொடுத்தமை தான் எனக்கு வேதனையைத் தருகிறது. ஒரு மனிதனுக்கு மற்றவர்களாலும், கிரகங்களாலும் கேடுகள் வரும். அதைத் தாங்கிக்கொள்ளலாம்.

ஆனால் சிறிதேனும் யோசிக்காமல் இது மிகவும் எளிது என்று கருதி பிறன் மனைவியோடு கூடி இன்பம் பெறுவோர் அடையும் பழி அழியாது நிலைத்து நிற்கும் என்பதை நன்கு கற்ற நீங்கள் உணரத் தவறியதால் தான் இன்று உங்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது. ஊரவர்களும் உங்கள் மாணவர்களும் நீங்கள் நிர்மலாவுடன் கொண்ட தகாத உறவு காரணமாகத்தான் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளீர்கள் என்று பேசிக் கொள்கிறார்கள். இதனால் தான் நீங்கள் இடம்மாறிச் செல்ல உள்ள பாடசாலை அதிபரும் மாணவர்களும் உங்களை வேண்டாம் என்கிறார்கள். கல்விப் பணிப்பாளரும் திணைக்கள ஊழியர்களும் இதுபற்றி என்னை விசாரித்தார்கள்.''

குருமூர்த்தி எதுகும் பேசவில்லை. அவரால் பேசமுடியவில்லை.

''நான் வாறன் வாத்தியார். இனிமேலென்றாலும் யோசித்து நடவுங்கோ. பலவற்றையும் கற்று வயதுவந்த நீங்கள் யோசித்து நடக்காவிட்டால் உங்களைச் சூழுற பழி காலப்போக்கிலை உங்கடை குடும்பத்தையும் சூழ்ந்திடும்.''

145. எளிதுஎன இல்லிறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

இச்செயல் எளியது என எண்ணி பிறருடைய மனைவியோடு நெறி தவறி நடப்பவனை எப்போதும் அழியாமல் பழி சூழ்ந்து நிற்கும்.

என்றும் நீங்காதவை

''நல்லாசிரியரான நீங்கள் இங்கிருந்து செல்வதை விட நீங்கள் செல்லும் பாடசாலை அதிபரும் மாணவர்களும் உங்களைத் தமக்கு வேண்டாமென்று கல்விப்பணிப்பாளருக்கு எழுதிக்கொடுத்தமை தான் எனக்கு வேதனையைத் தருகிறது'' என்று தணிகாசலம் கூறிய வார்த்தைகள் குருமூர்த்தியின் காதில் ஒலித்தன. அதனால் அவர் மிகவும் பயந்துவிட்டார். புதிய பாடசாலை ஏற்காமல் விட்டால் என்ன செய்யலாம் என்ற பயம் அவரின் நெஞ்சைக் கௌவியது. அதனால் தான் இடமாற்றம் பெற்ற பாடசாலையின் அதிபரின் வீட்டுக்குச் சென்றார்.

“வாருங்கோ... உங்களை எனக்குத் தெரியவில்லை” என்று வரவேற்றார் புதிய பாடசாலையின் அதிபர்.

“நான் தான் குருமூர்த்தி. உங்கள் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட கணித ஆசிரியர்...”

“ஓ அது நீர்தானா...? எமது பாடசாலையில் கணித பாடத்திற்கு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். உம்மைத் தேவையில்லை என்று கல்விப் பணிப்பாளருக்கு எழுதிக்கொடுத்துவிட்டேன். எனக்கு நேரமாகிறது. நான் அவசர விடயமாக வெளியே செல்கிறேன்...” என்று கூறிவிட்டு அவரின் பதிலுக்குக் கூட காத்திராது புறப்பட்டார் அப்பாடசாலையின் அதிபர் பத்மநாதன்.

குருமூர்த்திக்கு அவமானமாக இருந்தது. கணபதி மத்திய மகா வித்தியாலயம் மிகவும் பெயர்பெற்ற பாடசாலை. அப்பாடசாலையில் என்னை எப்படியெல்லாம் மதித்தார்கள். இச்சிறிய பாடசாலை அதிபர் இருக்கக்கூடச் சொல்லாது புறப்பட்டுப்போவது எவ்வளவு அவமானமானது என்று நினைத்தார் குருமூர்த்தி. அவரால் வேதனையைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. யாருடனாவது மனந்திறந்து கதைத்தால் தான் ஆறுதலாக இருக்கும் என நினைத்து தணிகாசலத்தைத் தேடிச் சென்றார்.

வழியில் நிர்மலாவின் தந்தையார் நாகலிங்கம் வந்தார். அவரைக் கண்டதும் நாகலிங்கம் நின்றார். “தம்பி நீர் படித்தனீர். பண்பு குறைவாக நடக்கக்கூடாது. உமது நடத்தையால் எனது மகளின் வாழ்வே சீரழிந்துவிட்டது. மருமகன் இப்போது முன்போல் எம்முடன் கலகலப்பாகக் கதைப்பது குறைவு. அவளை நான் விசாரித்துப் பார்த்தேன். அவள் சொன்னாள் குருமூர்த்தி நல்ல மனிதர். எல்லோருடனும் அன்பாகப் பழகுபவர். வீட்டுக்கு வந்தால் எப்படி வரவேண்டாம் என்று சொல்வது. அதனால் தான் வரவேற்றேன். இப்படி நடக்குமென்று எனக்குத் தெரியாது. எனக்கும் அவருக்கும் தொடர்பில்லை என்று சத்தியம் பண்ணினாள். இனிமேல் தயவுசெய்து வீட்டில் நடைபெறும் நல்லது கெட்டதுகளுக்குக் கூட நீங்கள் எங்கடை வீட்டுக்கு வரவேண்டாம்...”

கூனிக்குறுகிப் போனார் குருமூர்த்தி. அப்பொழுது கணபதி மத்திய மகாவித்தியாலயத்தில் உயர் வகுப்புப் படிக்கும் மாணவிகள் சிலர் கூட்டமாக வந்தார்கள். அவர்கள் பெரிதாக கதைத்துச் சிரித்துக்கொண்டு வந்தார்கள். “தன்னைப் பற்றித்தான் கதைத்துச் சிரிக்கிறார்களோ.?” என்று குருமூர்த்தி நினைத்தார்.

அருகில் வரும்போது ஒரு மாணவி கேட்டாள் “நீங்கள் இன்னும் புதுப் பள்ளிக்கூடத்திற்குப் போகேல்லையே...?” சாதாரணமாகக்

கூறப்பட்ட அந்த வார்த்தைகள் அவரைத் தடிகொண்டு துரத்துவது போல் இருந்தது.

அவர்களுக்குப் பின் ரதீஸ்வரி ஆசிரியை பாடசாலைக்கு வந்துகொண்டிருந்தாள். பாடசாலையில் கலகலப்பாகக் கதைக்கும் ரதீஸ்வரி ஆசிரியை அவரைக் காணாதது போல் சென்றுகொண்டிருந்தாள். அவளைப் பார்த்துச் சிரிக்கவோ அல்லது பெயர்சொல்லி அழைக்கவோ குருமூர்த்திக்குப் பயமாக இருந்தது. அவருக்கு அருகில் வந்த ரதீஸ்வரி ‘‘எப்பிடி சுகமாக இருக்கிறீர்களே... உங்களோடை நின்று கதைக்க பயமாக இருக்கு’’ என்று சொல்லிக்கொண்டு நடந்தாள். அவளது செயலை குருமூர்த்தியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மெதுவாக நடந்து தணிகாசலத்தின் தோட்டத்தை அடைந்தார். தணிகாசலம் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தார். குருமூர்த்தியைக் கண்டதும் அருகில் வந்தார்.

அன்று நடந்த சம்பவங்கள் அனைத்தையும் தணிகாசலத்திடம் வேதனையோடு சொன்னார் குருமூர்த்தி.

‘‘படித்த நீங்கள் இவற்றையெல்லாம் முன்பே யோசித்திருக்க வேணும். மூவாயிரம் பிள்ளைகள் படிக்கிற பெரிய பள்ளிக்கூடத்திலை பேரோடையும் புகழோடையும் இருந்தனீங்கள். உங்களை அந்தப் பள்ளிக்கூடம் செங்கம்பளம் விரித்து வரவேற்க வேணும். அதுக்கென்ன செய்யமுடியும். மனதைத் தேற்றுங்கோ...’’

‘‘தினமும் வேதனையான பல சம்பவங்கள் நடக்கேக்கை எப்பிடி மனதைத் தேற்றுறது’’ அழுதார் குருமூர்த்தி.

தணிகாசலத்தால் எதுகும் பேசமுடியவில்லை. ‘‘என்ரை கெட்ட நடத்தையால் பழி, பாவம், அச்சம், பகை என்ற நான்கும் என்னைப் பற்றிப் பிடிச்சிட்டுது. இவைகளில் இருந்து என்னாலை மீள முடியாது போல் தெரிகிறது. நீங்கள் தயவுசெய்து ஒருக்கால் கல்விப் பணிப்பாளரோடு கதைத்து பாடசாலைக்கு நான் செல்ல ஒழுங்குசெய்து தாருங்கோ...’’ கெஞ்சினார் குருமூர்த்தி.

‘‘சத்தியநாதன் பணபலம் மிக்கவன். யாரையாவது ஏவிவிட்டு உங்களை அடிப்பிப்பான். எனவே இரவில் கண்டபடி வெளியில் செல்லாதைங்கோ...’’ என்றார் தணிகாசலம்.

குருமூர்த்திக்கு பயமாக இருந்தது. ‘‘தற்செயலாக சத்தியநாதன் அடியாட்களை ஏவிவிட்டு அடித்தால் என்ன செய்வது’’ என்பதை நினைக்க அவருக்கு உடல் நடுங்கியது.

146. பகைபாவம் அச்சம் பழியென நான்கும்

இகவாவாம் இல்இறப்பான் கண்.

பகை, பாவம், அச்சம், பழி என்னும் நான்கு தீமைகளும் பிறன் மனைவியோடு நெறிதவறி நடப்பவனை விட்டு என்றும் நீங்காது.

விரும்பாதவன்

தணிகாசலத்தின் வீட்டுக்கு நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய பிரதமகுரு இராஜசங்கரக் குருக்கள் வந்தார். தணிகாசலம் அவரை வரவேற்று ஆசனத்தில் அமர்த்திவிட்டு அவரின் முன்னால் கைகட்டியபடி நின்றார்.

''தணிகாசலம் நீயும் இரு. பெரியதொரு பிரச்சினையைப் பற்றி நான் கதைக்க வந்திருக்கிறன்.''

''அப்பிடியென்ன பெரும் பிரச்சினை குருக்கள்'' என்று கேட்டார் தணிகாசலம்.

''ஒவ்வொரு ஊதிலும் கோயில்களுக்கு இராஜகோபுரம் கட்டுகிறார்கள். எங்கள் மஹா கணபதிக்கும் இராஜகோபுரம் கட்டவேணுமென்று நெடுநாளாய் நான் ஆசைப்பட்டனான். இதுவரை என்னுடைய ஆசை நிறைவேறவில்லை. விக்னேஸ்வரமூர்த்தியோடு கதைத்தனான். அவர் தானே இந்த ஊரிலை பெரிய மனிதன். பாவம் அவருக்கு நேரமில்லை. விடிய பள்ளிக்கூடத்திற்குப் போனால் இரவு பத்து மணிக்குத்தானே வீட்டை வாறார். சிலநேரம் மூன்று நேரச் சாப்பாடும் பள்ளிக்கூடத்திற்குப் போகுது. ஓய்வு எடுத்த பின் கோயில் வேலைகளைப் பற்றிக் கேளுங்கோ. அதுக்கு முன்னம் எனக்குக் கரைச்சல் தராதைங்கோ குருக்கள் என்கிறார். சிவசுந்தரமூர்த்தியிலை எனக்கு நம்பிக்கை இல்லை. பேருக்கும் புகழுக்கும் ஒத்துக்கொள்ளுவார். காரியமாற்றமாட்டார். அதோடை சனங்களோடையும் புழங்கத் தெரியாது. பொது வேலையென்றால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரக் கதைப்பினை. அதைச் சமாளிக்கத் தெரியாது. கணேசமூர்த்தி முன்னையமாதிரி இல்லை. திருந்தீட்டான், என்றாலும் அவனை முன்னுக்கு வைத்தால் கூட்டங்களிலை அவன்ரை அடாவடித்தனங்களைப் பற்றியும், பெம்பிளைப் பிரச்சினைகள் பற்றியும் பெரியதாய்த் தூக்கிக் கதைப்பார்கள். எனவே இதுக்குப் பொருத்தமான ஆள் நீங்களும் வேலாயுதபிள்ளையும் தான். உங்களோடை கதைச்சுப்போட்டு வேலாயுதபிள்ளையோடு கதைக்கப்போறன்.

தயவுசெய்து மறுத்துப் போடாதைங்கோ. தெய்வ காரியம், கட்டாயம் செய்து முடிக்க வேண்டும்.''

தான் வந்த விசயத்தை சுருக்கமாகச் சொல்லிவிட்டு தணிகாசலத்தின் பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்தார் குருக்கள்.

தணிகாசலத்தால் எதுவும் பேசமுடியவில்லை. அவரது குடும்ப வருமானம் மிகக்குறைவு. தனது வேலைகளைச் செய்வதை விட பாடசாலை, கோயில் வேலைகளையும், பொது வேலைகளையும் தான் அவர் செய்வார். இராஜகோபுர வேலையும் தொடங்கினால் எப்படி இருக்கும் என்று யோசித்தார்.

''ஒன்றைப் பற்றியும் யோசியாதையப்பா. மகா கணபதி விடமாட்டார். நாளையிண்டைக்கு பௌர்ணமி தினம். அதிலை தொடங்கினால் நல்லது. தனபாலசிங்கமும் நல்ல மனிசன். அதோடை ரவியையும் கேட்டுப் பார்க்கலாம்'' என்றார் குருக்கள்.

''எனக்கு விருப்பம் தான் ஐயா. ஆனால் குடும்பப் பிரச்சினை தான் பெரிதாக இருக்கு. மூத்தவன் இந்தமுறை உயர்தரப் பரீட்சை எடுக்கிறான். வைத்தியராக வேண்டுமென்று சொல்லுறான். நான் அதுக்காக கடுமையாக உழைக்கவேணும்...''

''கட்டாயம் உன்னுடைய மகன் மருத்துவக் கல்லூரிக்குப் போவான். மகா கணபதியை நம்பித் தொடங்கு. கடைசிவரையும் கைவிடமாட்டார். நான் உங்களைத் தெரிந்ததற்குக் காரணம் நீங்கள் அறத்தின் இயல்போடு பொருந்தி இல்வாழ்வு வாழ்கிறீர்கள். அப்படி வாழும் நீங்கள் பிறருக்கு உரிமையானவளின் பெண்மையை விரும்பாதனீங்கள் அந்தத் தகுதிக்குரியவர் நீங்கள் என்பதால் தான் கோயில் கைங்கரியத்தை முன்நின்று செய்யும்படி கேட்கிறேன். அதேபோல் அறத்தின் வழி நடக்கும் தனபாலசிங்கத்தையும் வேலாயுதபிள்ளையையும் ரவீந்திரனையும் சேர்த்துக்கொள்ளுங்கள்'' என்றார்.

தணிகாசலம் அதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. குருக்கள் பெரும் பிரச்சினை ஒன்று தீர்ந்துவிட்ட மகிழ்ச்சியில் தணிகாசலத்திடமிருந்து விடைபெற்றார்.

நாவலடிக் கிராமத்தில் சமாதான நீதிவான் பதவி கொடுக்காமல் குடும்பங்களைச் சமாதானம் செய்து வைப்பவர் தணிகாசலம். அவ்வூரில் வாழும் தில்லைநடராசா என்பவன் பக்கத்து வீட்டில் வசிக்கும் கந்தசாமியின் மனைவியோடு இரகசியத் தொடர்பு வைத்திருந்தான். அதனால் அவனது உழைப்பு முழுவதும் கந்தசாமியின் வீட்டுக்கே சென்றுவிடும். இதனால் கஸ்டப்படும் தில்லைநடராசாவின் மனைவி பார்பதி தணிகாசலத்திடம்

முறையிட்டாள். தணிகாசலம் தில்லைநடராசாவுடன் கதைத்து சமாதானம் செய்வதற்காகச் சென்றார். தில்லைநடராசா வீட்டின் ஒரு மூலையில் இருந்தான். தணிகாசலத்தைக் கண்ட பார்பதி பெருங்குரலெடுத்து அழுதாள். ‘‘தணிகாசலம் அண்ணை உங்களை மாதிரி ஒரு புண்ணியவான் இந்தக் கிராமத்திலை யார் இருக்கிறார்கள். எல்லா வழிகளிலும் ஒழுக்கமாக நீங்கள் வாழ்கிறீர்கள். எந்த ஒரு பெண்ணையும் உங்களோடு நம்பி விட்டுட்டு எங்கும் போகலாம். இந்தப் பாவி நான் குத்துக்கல்லு மாதிரி இருக்க ஒரு நோஞ்சானிட்டை திரிகிறான்...’’

‘‘சரி... சரி அழாதை’’ என்ற தணிகாசலம் தில்லைநடராசாவின் பக்கம் திரும்பிச் சொன்னார்; ‘‘தில்லை ஒரு மனிதன் நேர்மையாக வாழவேண்டும். பிறன் மனைவி மீது ஆசை வைப்பது மகாபாவமானது. அந்தப் பழி அவனை ஒரு போதும் விட்டுவைக்காது. உனக்கு நல்லதொரு மனைவி இருக்கிறாள். நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். அதைவிட கௌரவமான தொழிலில் இருக்கிறாய். வருமானத்தைப் பிடுங்குவதற்காக சிலர் பழிபாவங்களுக்கு அஞ்சாது கேவலமான விபச்சாரத்தைச் செய்கிறார்கள். உனது உழைப்பை நீ பாதகமான செயல்களுக்கு செலவு செய்தால் நாளைக்கு நீயும் உனது குடும்பமும் நடுத்தெருவில் நிற்கும். அத்துடன் கந்தசாமி மிகவும் நல்லவன். பலசாலி. குடும்பப் பொறுப்புக்களை நல்ல முறையில் கவனிக்கிறான். அவனுக்கே துரோகமிழைக்கும் அவனது மனைவி நல்லவளா என்று சற்றுச் சிந்தித்துப் பார். நாளை அவள் தனது நலனுக்காக உன்னை விட்டுவிட்டு இன்னொருவன் மீது ஆசைப்படமாட்டாள் என்று எப்படி நம்பலாம். எனவே இனியாவது திருந்தி நட’’ என்றார் தணிகாசலம். அவனுக்கு தணிகாசலம் சொல்வது நியாயமாகப் பட்டது.

தில்லைநடராசா எதுவும் பேசாமல் ஒரு மூலையில் இருந்தான்.

147. அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலான்

பெண்மை நயவா தவன்.

அறத்தின் இயல்புணர்ந்து வாழும் இல்வாழ்வான், பிறருக்கு உரிமையானவளின் பெண்மையை விரும்பமாட்டான்.

ஆண்மை

கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் அறுபதிற்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் நெடுநாளைய ஆசை தாம் எல்லோருமாகச் சேர்ந்து ஒரு நாள் சுற்றுலாவுக்குச் செல்ல வேண்டும் என்று. பலமுறை முயன்றும் சரிவரவில்லை. அதனால் எல்லா ஆசிரியர்களுமாகச் சேர்ந்து அதிபர் விக்னேஸ்வரமூர்த்திக்கு ஒரு கடிதம் எழுதிச் சமர்ப்பித்தார்கள். விக்னேஸ்வரமூர்த்தி அது நெடுநாளையக் கோரிக்கை என்பதால் உடனேயே சம்மதித்துவிட்டார். அதனால் சனிக்கிழமை காலை ஏழு மணிக்கு பெரியதொரு பேரூந்தில் தமது சுற்றுலாவை ஆசிரியர்கள் ஆரம்பித்தனர்.

பிரயாணம் தொடங்குவதற்கு முன்பே விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார்; ‘‘இன்று நான் அதிபர் அல்ல. உங்கள் நண்பன். உங்களில் ஒருவன் என்று நினைத்துக்கொள்ளுங்கள். நான் அதிபர் என்று நீங்கள் நினைத்தால் இந்தச் சுற்றுலா சுவையற்றதாக இருக்கும். நீங்கள் ஆடலாம், பாடலாம். எதுகும் செய்யலாம். சந்தோசமாக இருங்கள்’’ என்றார்.

பேரூந்து புறப்பட்டதும் விக்னேஸ்வரமூர்த்தி பாட்டு ஒன்றைப்பாடி குதூகலத்தை ஆரம்பித்து வைத்தார். மிகவும் இனிமையாக அவர் பாடுவதைக் கண்ட ஆசிரியர்கள் திகைத்துவிட்டனர். அதைத் தொடர்ந்து ஆசிரியர்களும் ஆசிரியைகளும் பாடல்களைப் பாடத் தொடங்கினர்.

பத்து மணிக்கு கீரிமலை புண்ணிய தீர்த்தத்தில் அனைவரும் நீராடினர். தாம் கொண்டு வந்த வகைவகையான தீன்பண்டங்களை எல்லோரும் பரிமாறிக்கொண்டனர்.

வளர்மதி ஆசிரியை தான் வீட்டில் தயாரித்துக் கொண்டுவந்த உணவுப் பதார்த்தமொன்றைக் கொண்டுவந்து விக்னேஸ்வரமூர்த்திக்குக் கொடுத்தாள். வளர்மதி ஆசிரியைக்கு விக்னேஸ்வரமூர்த்திக்கு அளவு கடந்த பயம். வந்த புதிதில் தொப்புள் தெரிய சேலைகட்டி, கட்டைக் கை சட்டை அணிந்து அலங்காரப் பூச்சுக்களுடன் வந்த வளர்மதியை அலுவலகத்திற்கு அழைத்துச் சொன்னார்; ‘‘வளர்மதி பெண்கள் அலங்காரமாக வரலாம். அரைகுறை ஆடைகளைக் கட்டிக் கொண்டு வரக்கூடாது. இப்பாடசாலையில் இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் உயர்தர வகுப்புக்களில் கற்கிறார்கள். அறுபதிற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். உங்கள் உடை மாணவர்களை சஞ்சலப்படுத்தக்கூடாது. எமது கலை, கலாசாரம், பண்பாடு என்பன பேச்சிலும், நடத்தையிலும் மட்டும் தங்கியிருப்பதல்ல. உடையிலும், உணவிலும் கூடத் தங்கியுள்ளது. வீதியில் அரைகுறை ஆடைகளை பெண்கள் அணிந்து செல்வதால் விபத்துக்கள் அதிகரிப்பதைப் போல் பாடசாலையில் கல்வி பாதிக்கப்படலாம். அத்துடன் ஆசிரியைகள் தலையை வாரிப்பின்னிவிடுதல், முன்பகுதியைச் சுருட்டிவிடுதல் என்பன கூடாது பாடசாலையின் ஒழுக்கத்திற்கு கட்டுப்பட்டு நடக்கத்

தெண்டியுங்கள். இல்லாவிட்டால் வேறு பாடசாலைக்கு செல்லவேண்டிய நிலை உண்டாகும்'' என்றார்.

கணபதி மத்திய மகாவித்தியாலயத்திற்கு அவள் வந்தன்றே ஆசிரியர்கள் பலர் சேலையை ஒழுங்காகக் கட்டும்படி கூறினார்கள். அப்பாடசாலையில் ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மிகவும் தீவிரமாகக் கடைப்பிடிப்பவர் விக்னேஸ்வரமூர்த்தி. அயலூர்ப் பிரமுகரின் செல்ல மகளான அவள் விக்னேஸ்வரமூர்த்தியைப் பற்றி சாதாரணமாகவே மதிப்பிட்டிருந்தாள். தனது தந்தையின் செல்வாக்குக்கு முன் அவரால் செயலாற்ற முடியாது என்று நினைத்தாள். ஆனால் பாடசாலைக்கு வந்த பின்பு தான் அங்கு நடைபெறும் நிர்வாகத்தின் தன்மையைப் புரிந்துகொண்டாள்.

''இது யார் தயாரித்தது. மிகவும் சுவையாக இருக்கிறது'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''நான் தான் தயாரித்தேன்...'' என்றாள் வளர்மதி.

''உமது குடும்பத்தவர்கள் அதிட்டம் செய்தவர்கள்'' என்று சிரித்தார் விக்னேஸ்வரமூர்த்தி. அன்று அவர் மிகவும் கலகலப்பாகவும் சந்தோசமாகவும் இருந்தார்.

''இதேமாதிரி அதிபர் ஒவ்வொரு நாளும் இருந்தால் எப்படி இருக்கும்'' என்று கேட்டாள் காயத்திரி.

''இதே மாதிரியோ? உலக அழிவுதான். அந்தாளுக்கு வீதியிலை எங்களைக் கண்டாலே தெரியாது. இண்டைக்குத் தான் இப்படிக் காண்கிறம்'' என்றாள் சரஸ்வதி.

''அவர் பெண்களை நிமிர்ந்தே பார்ப்பதில்லை. பெண்கள் நிற்கும் திசைக்கு எதிர்த்திசையாகப் பார்த்துத்தான் கதைப்பார். இங்குள்ள ஆசிரியர்கள் என்ன நிறச்சேலை கட்டிக்கொண்டு வருகிறார்களென்பது கூட அவருக்குத் தெரியாது'' என்றாள் காயத்திரி.

''சீலையின் நிறம் தெரியாதவருக்குத்தான் வளர்மதிச் ரீச்சர் சேலை கட்டின விதம் தெரிந்தது'' என்றாள் சுமித்திரா.

''அவர் எங்கை பார்த்தார். ரவீந்திரன் சொல்லியிருப்பர். வளர்மதியைக் கூப்பிட்டு மற்றக்கரை பார்த்துக்கொண்டு பேசியிருப்பர். உன்னைப் பார்த்தவரே... பார்த்திருந்தால் மயங்கியிருப்பார்...'' என்று காயத்திரி சொல்லிக்கொண்டிருக்க சுமித்திரா குறுக்கிட்டுச் சொன்னாள்; ''வளர்மதீன்ரை அழகான பிரதேசத்தை ரசிச்சிருந்தால் நிதமும்

ஏதாவது ஒரு சாட்டாய்க் கூப்பிட்டுப் பார்ப்பரே தவிர பேசுவரே... அதுகும் மதிப்பு, மரியாதை இல்லாமல்...''

''அவர் இராமனடி. தனது மனைவியைத் தவிர வேறு பெண்களை கனவிலை கூட நினைக்கமாட்டார். பெண்களின் பிரச்சினையிலையென்றாலென்ன ஒழுக்கப் பிரச்சினையிலையென்றாலென்ன அவர் தவறியதை நான் கண்டதே இல்லை. பதினைந்து வருடமாய் அவரோடை ஒன்றாக இருக்கிறன்'' என்றாள் காயத்திரி.

பிற பெண்களை இச்சையுடன் நோக்காத பெரிய ஆண்மை உடைய அவர் ஒழுக்கத்தை உயிரிலும் மேலாகப் போற்றி வருகிறார்'' என்றாள் சுமித்திரா.

148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு

அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.

பிறனுடைய மனைவியை இச்சையுடன் நோக்காத ஆண்மை ஆன்றோர்க்கு அறம் மட்டும் அன்று; நிறைந்த ஒழுக்கமும் ஆகும்.

விரும்பும் நல்லோர்

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய இராஜ கோபுரம் கட்டுவதற்கான பணி விக்னேஸ்வரமூர்த்தியின் தலைமையில் தொடங்கியது. இராஜகோபுரம் அமைப்பதற்கென அதிபர் விக்னேஸ்வரமூர்த்தியின் தலைமையில் ஒரு சபை உருவாக்கப்பட்டது. கோயில் குருக்கள் போசகராகவும், விக்னேஸ்வரமூர்த்தி தலைவராகவும் ரவீந்திரன் ஆசிரியர் பொருளாளராகவும் தணிகாசலம் செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். ஐந்துபேர் கொண்ட சபை அன்று தெரிவானது.

அன்று இரவு சத்தியநாதனின் வீட்டுக்கு நிதி சேகரிப்பதற்காக விக்னேஸ்வரமூர்த்தியும், ரவீந்திரனும், தணிகாசலமும், தனபாலசிங்கமும் சென்றனர். அவர்கள் சென்றபோது சத்தியநாதன் மதுமயக்கத்தில் இருந்தான். இருந்த போதும் அவர்களைக் கண்டதும் எழுந்து ஓடிவந்து வரவேற்றான்.

“கடவுள் வீட்டுக்கு வந்தாலும் வருவர். விக்னேஸ்வரமூர்த்தி ஐயா வீட்டுக்கு வரமாட்டார். அவர் வீட்டுக்கு வந்தால் அதிஸ்டம் வந்திருக்கு என்றுதான் நான் நினைப்பன். சிவனோடு மும்மூர்த்திகளும் சேர்ந்து வந்தமாதிரி தனபாலண்ணையும், தணிகாசலம் அண்ணையும், ரவி ஆசிரியரும் வந்திருக்கிறியள். என்னெண்ட சொல்லுங்கோ...”

“கேள்விப்பட்டிருப்பியள் எங்கடை மஹா கணபதிக்கு ஒரு இராஜகோபுரம் கட்ட நினைக்கிறம். அனேகமாய் எல்லாக் கிராமக் கோயில்களிலையும் இராஜகோபுரம் இருக்கு. எமது ஊரிலை தான் இல்லை...” என்றார் தணிகாசலம்.

“நல்லது... நல்லது... கட்டுங்கோ. கோயில்களும் பள்ளிக்கூடங்களும் நல்லாய் இருந்தால் தான் ஊருக்குச் சிறப்பு. இஞ்சை பள்ளிக்கூடம் ஓகோ என்று இருக்கிறத்தாலை பட்டணத்திலை உள்ள பெரிய பெரிய வியாபாரிகளெல்லாம் அனுமதி எடுத்துத் தரச்சொல்லி எனக்குக் கரைச்சல் குடுக்கிறாங்கள். நல்லாய் நடத்திறியள் வாத்தியார். உங்களைப் போல நாலுபேர் இருந்தால் நாடு முன்னேறிவிடும்... நீங்கள் என்னட்டை எவ்வளவை எதிர்பார்க்கிறியள்...” என்று கேட்டான் சத்தியநாதன்.

அவனது அக்கேள்வியால் சற்றுத் தடுமாறிப்போன விக்னேஸ்வரமூர்த்தி தணிகாசலத்தைப் பார்த்தார்.

“உம்மாலை முடிந்ததைக் குடும்தம்பி. குறைந்தது ஐம்பது இலட்ச ரூபா வேணுமென்று நினைக்கிறன்” என்றார் தணிகாசலம்.

“சரி ஒரு ஐந்து இலட்சம் தாறன். அதுகும் நீங்கள் வந்தபடியால் தான். கணேசமூர்த்தி, கேசவமூர்த்தி, சபாநாயகம், குருமூர்த்தி இப்பிடியானவர்களைக் கூட்டிக்கொண்டு வந்திருந்தால் அடித்துக் கலைத்திருப்பன். இவன் குருமூர்த்தி மனிதனே. ஒரு நல்ல ஆசிரியன். நல்லாய்ப் படிப்பித்தவன். உயர்தர வகுப்பு மாணவர்களுக்குக் கற்பிப்பவன் என்றதாலை தான் நிர்மலா அவனோடை கலகலப்பாகப் பழகினவள். கலகலப்பாகக் கதைத்தால் தன்னை விரும்பிறனெண்டதே அர்த்தம். அவன் தவறாய் நினைச்சுக்கொண்டு வீட்டை வந்திருக்கிறான். அதையறியாத நிர்மலா கலகலப்பாகக் கதைச்சு சிரிச்சிருக்கிறாள். மிச்சமெல்லாம் உங்களுக்குத் தெரியும் தானே... என்னைப் பொறுத்தமட்டிலை நான் நல்லாய்க் குடிப்பன். வியாபாரத்திலை பல தந்திரோபாயங்களைக் கையாளுவான். ஆனால் என்ரை மனைவியைத் தவிர மற்றைய பெம்பிளைகளை நான் தாயாகவும் தங்கையாகவும் தான் நினைப்பன்...”

“நாங்கள் இன்றும் பல வீடுகளுக்குப் போக வேண்டும்” என்று எழுந்தார் தணிகாசலம்.

“பொறுங்கோ... பொறுங்கோ... வந்தனீங்கள், தண்ணீர் குடியாமல் போறதே... பெரிய மனிதர், வீடு தேடி வந்திருக்கிறியள். இனிமேல் எப்ப வரப்போறியள் இருங்கோ... இந்தக் கடல் சூழ்ந்த உலகத்திலை நான் விரும்புதற்குரிய நல்ல மனிதர்கள் யாரென்றால் பிறன் மனைவியின் தோள்களைத் தழுவாதவர்கள். நீங்கள் நான்கு பேரும் அப்படியானவர்கள். இருந்து தேனீர் குடித்துவிட்டுச் செல்லுங்கோ...”

நிர்மலா ஒரு தட்டில் சிற்றுண்டி வகைகள் பலவற்றைக் கொண்டுவந்து வைத்தாள். பின் வேறொரு தட்டில் தேனீரைக் கொண்டுவந்து அவர்களுக்கு முன்பிருந்த மேசையில் வைத்தாள்.

“குருமூர்த்திக்கு கடவுள் சரியான தண்டனை கொடுத்துள்ளார். அவர் இடமாற்றம் பெற்ற பாடசாலை அதிபரும் மாணவர்களும் குருமூர்த்தியை வேண்டாம் என்கிறார்களாம். அப்ப என்ன செய்யப்போறார்” சத்தியநாதன் கேட்டான்.

“கல்விப் பணிப்பாளர் தான் முடிவு எடுக்க வேண்டும்...” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“நிர்மலா காசோலைப் புத்தகத்தை எடுத்தாரும்” என்றான் சத்திநாதன். நிர்மலா காசோலைப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்ததும் ஐந்து இலட்சம் ரூபாவுக்கான காசோலையை எழுதிக்கொடுத்துவிட்டுக் கேட்டான்; “என்னைப் பெற்று கஸ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கிய எனது தந்தையாரின் பெயரில் உங்கள் பாடசாலையில் நிதியம் ஒன்றை ஆரம்பிக்க உதவி செய்வீர்களா...?”

“ஓம்... ஓம்...” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“வாத்தியார் எனக்கு மூன்று வயது நடக்கேக்கை அம்மா செத்துப்போனா. அப்பா மறுமணம் செய்யாமல், எந்தப் பெண்களோடும் தொடர்பில்லாமல் என்ரை நன்மை கருதி வாழ்ந்தவர். அவருடைய பெயரில் மூன்று இலட்சம் ரூபா தாறன். அதன் வட்டிக்காசில் ஏழை மாணவர்களுக்கு உதவி செய்யுங்கோ. வருடாவருடம் என்னால் முடிந்ததை நான் வைப்புச் செய்கிறன்” என்றான் சத்தியநாதன்.

விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்த தணிகாசலம் சொன்னார் “சத்தியநாதனின் தகப்பனார் சற்குணநாதன் மிகவும் நேர்மையாகவும், ஒழுக்கமாகவும் வாழ்ந்த நல்ல மனிதன். இளமைக் காலத்தில் மனைவியை இழந்த போதும் பெண்கள் விசயத்தில் எந்தவிதமான குற்றமும் கேளாதவர். ஒழுங்கானவர்.”

149. நலக்குஉரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்

பிறற்குஉரியாள் தோள்தோயா தார்.

கடல் சூழ்ந்த பெரிய உலகிலே எல்லோரும் விரும்புதற்குரிய நல்லவர் யார் என்றால் பிறனுக்கு உரிமையானவளின் தோள்களைத் தழுவாதவரே.

நன்றான ஒன்று

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய இராஜகோபுர வேலைகள் ஆரம்பமாகி மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. அன்று முடிக்கப்பட்ட வேலைகளைப் பற்றியும், மேற்கொண்டு செய்யப்பட வேண்டிய வேலைகளைப் பற்றியும் கோயில் மண்டபத்தில் கூட்டமொன்று நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் இரவு எட்டு மணிக்கு நாவலடிக் கிராமத்தில் வாழும் அத்தனை பேரும் குழுமி இருந்தனர்.

விக்னேஸ்வரமூர்த்தியின் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய இராஜகோபுரச் சபை நிர்வாக உறுப்பினர் திரு. வேலாயுதபிள்ளை அவர்கள் தேவாரமும் புராணமும் பாடி முடிந்ததும் தலைவரான விக்னேஸ்வரமூர்த்தி எழுந்து நின்று இராஜகோபுரம் கட்டுவதற்கு நிதி அன்பளிப்புச் செய்தவர்களின் பெயர்களை வாசித்தார். ஒவ்வொருவரினதும் பெயர் வாசிக்கும் போது பேசாமல் இருந்த சபாநாயகம் கணேசமூர்த்தி ஐம்பதினாயிரம் ரூபா என்று வாசித்ததும் எழுந்து சொன்னான் ‘‘கணேசமூர்த்தி ஐம்பதினாயிரம் ரூபா கொடுப்பதைப் பற்றி நான் ஆட்சேபிக்கிறேன். விக்னேஸ்வரமூர்த்தி, தணிகாசலம், ரவீந்திரன், வேலாயுதபிள்ளை, தனபாலசிங்கம் ஆகியோருக்கு எந்த வகையில் சமப்பட்டவன் கணேசமூர்த்தி. சபையில் இருப்போர் ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். கனவில் கூட பிறன் மனையாளை நினையாதவனாக இருத்தல் வேண்டும். மற்றைய உறுப்பினர்களோடு இவன் இருப்பது அவமானம். அவனை நீக்கிவிட்டு சத்தியநாதனை நியமிக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்...’’

‘‘கணேசமூர்த்தியை அன்று கூடிய நிர்வாகசபை தான் தெரிவுசெய்தது. ஒருவர் தெரிவு செய்வதை நீக்கும் உரிமை எமக்கு இல்லை. இருந்தபோதும் கணேசமூர்த்தி தான் இச்சபையில் இருக்க

விரும்பவில்லையென எமக்கு கடிதம் எழுதியுள்ளார்...'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

கணேசமூர்த்தி சபையில் இருக்க விரும்பாததால் அவரின் தெரிவை நீக்கிவிட்டு புதியதோர் அங்கத்தவரைத் தெரியும்படி கூறினார் விக்னேஸ்வரமூர்த்தி. உடனே சபாநாயகம் எழுந்து சத்தியநாதனின் பெயரைப் பிரேரித்தார். சின்னத்தம்பி அதை அனுமதித்தான்.

சோதிநாதன் என்ற பெரியவர் எழுந்து சொன்னார்; ''இது கோயிற் கைங்கரியம். புனிதமான செயல். இச்செயலில் பங்குகொள்வோர் உடலும், உள்ளமும் சுத்தமானவர்களாக இருத்தல் வேண்டும். மாமிசம் உண்போர், மதுபானம் அருந்துவோர் யாராவது இருந்தால் தயவுசெய்து இப்பணியில் இருந்து விலகிக்கொள்ளுங்கள். நாம் புண்ணியம் செய்யாவிட்டாலும் பாவத்தைச் செய்தல் கூடாது'' சத்தியநாதன் பெரிய வியாபாரி. பெரும் பணக்காரன். மதுவை நன்றாகக் குடிப்பான். அதனால் தான் சோதிநாதன் அவனது பெயரைக் குறிப்பிடாது அப்படிச் சொன்னார்.

''ஒருவன் அறத்தின் வழியில் நடவாதவனாயினும் அவன் பிறனுக்கு உரியவளை விரும்பாதிருப்பின் அது ஒன்றே நன்றாகும் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே சத்தியநாதன் அவர்களை நான் மிகவும் வினயமாக வேண்டுவது என்னவென்றால் தங்கள் தகப்பனார் ஒழுக்கசீலர். தர்மமான முறையில் வாழ்ந்தவர். அத்துடன், பிறன் இல் விழையாதவர். அந்த வழியில் வந்த நீங்கள் ஏன் குடிப்பவன் என்ற இழிவான பழியைக் கேட்டல் வேண்டும். தயவுசெய்து அந்தக் கூடாத பழக்கத்தை விட்டுவிடுங்கள்'' என்றான் சிவபாலன்.

சத்தியநாதன் கூட்டத்தில் கலந்திருந்த போதும் நல்ல வெறியில் இருந்தான். ''சபாநாயகம் சொன்னது போல் எல்லாக் கெட்ட பழக்கங்களும் இருக்கலாம். ஆனால் பிறன் மனைவியிலை ஆசைப்பட்டு அவளே கதியென்று கிடப்பதுதான் கூடாது. அதை என்ரை தகப்பனும் செய்யேல்லை. நானும் செய்யமாட்டன். ஆனால் குடிக்கு அடிமையாயிட்டன். குடிக்கிறதை விடவேணுமெண்டுதான் நினைக்கிறனான். ஆனால் முடியேல்லை. தெண்டித்துப் பார்க்கிறன். அதுக்காக குடிக்கமாட்டன் என்று சொல்லமாட்டன்...''

சத்தியநாதனின் தெரிவை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. விக்னேஸ்வரமூர்த்தி வரவு விபரத்தை வாசித்துவிட்டு செலவு விபரங்களை வாசித்தார். பின்பு ''இன்னும் இருபது இலட்ச ரூபா தேவைப்படுகிறது. எமது மக்களில் பெரும்பான்மையானோர் விவசாயிகள். அவர்கள் தம்மாலியன்றளவு பணஉதவி செய்துவிட்டனர்.

இனிச் செய்வது கஸ்டம். எனவே பெரும் பணக்காரர்களும் வசதி உள்ளவர்களும் உதவவேண்டும்'' என்றார்.

கணேசமூர்த்தியின் மகன் வந்து ஐம்பதினாயிரம் ரூபா தகப்பன் கொடுத்ததாகக் கொடுத்தான். அவன் செல்லும் இடங்களில் சபாநாயகம் தொல்லை கொடுப்பதால் அவன் பொது விஷயங்களில் கலந்துகொள்வதை தவிர்த்து வந்தான். அது சபாநாயகத்திற்கு பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது. ''எந்தக் கேவலமான செயல்களையும் செய்யட்டும். ஆனால் பிறர் மனைவி மேல் ஆசைப்பட்டு அவர்களது குடும்பத்தைக் குலைப்பதைப் பொறுத்துக்கொள்ள முடியாது'' என்று சின்னத்தம்பிக்குச் சொன்னான் சபாநாயகம்.

150. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்

பெண்மை நயவாமை நன்று

ஒருவன் அறத்தின் வழியில் வாழாமல் அறமில்லாத பல செயல்களைச் செய்தாலும், பிறனுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாமல் வாழ்தல் ஒன்றே நல்லது.

நிலம் போல

வீதியால் சென்றுகொண்டிருந்த வேலாயுதபிள்ளையைக் கைதட்டிக் கூப்பிட்டார் சபாநாயகம். வேலாயுதபிள்ளை அவருக்கு அருகே வந்தபோது அவன் குடித்த மது மணத்தது. அவனுக்கு அருகே சின்னத்தம்பியும் நின்றான்.

''வேலாயுதம் நீங்கள் எல்லோருமாகச் சேர்ந்து நாவலடிக் கிராமத்தைக் கொள்ளையடிக்கிறியள். தணிகாசலமும், நீயும், தனபாலசிங்கமும் சேர்ந்து ஊரைப் புரட்டுறியள். கூட்டங்கள் நடக்கிறதெண்டால் முன்னுக்கே போய் ஆட்களோடை கதைச்சு சிரிச்சு உங்களைத் தெரிவு செய்யச் சொல்லிப் போடுவியள். பேய்ச்சனம் நீங்கள் ஏதோ ஊருக்கு நல்லது செய்யிறதாய் நினைத்துக்கொண்டு உங்களைத் தெரியுங்கள். தெரியாமல் தான் கேட்கிறன் தணிகாசலத்திற்கு என்ன உழைப்பு. இரவும், பகலும் மாடாய் உழைக்கிற எங்கடை பிள்ளைகள் இவ்வளவு வடிவாய் பள்ளிக்கூடத்திற்குப் போறேல்லை. தணிகாசலத்தின்ரை பிள்ளைகள் பெரிய உத்தியோககாரற்ரை பிள்ளைகள் மாதிரி நல்ல உடுப்புகள்

அணிந்து விலை உயர்ந்த புத்தகப்பைகளோடை போகுதுகள். பிள்ளைகளில் வறுமையின் வாட்டமும் இல்லை. உதுகளுக்கெல்லாம் எங்காலை காசு'' என்று கேட்டான் சபாநாயகம்.

''உதுகளைப் பற்றி என்னைக் கேட்டால் தெரியுமே. எதையும் நேரை நேரை கேட்க வேணும். போய் தணிகாசலத்தைக் கேள்'' என்றார் வேலாயுதபிள்ளை. வேலாயுதபிள்ளையின் பதில் மதுமயக்கத்தில் நின்ற சபாநாயகத்திற்கு கோபத்தை அதிகரிக்கச் செய்தது ''நேரை தான் கேட்கப்போறன். அதுகும் கூட்டத்திலை வைச்சு. ஊர்ச்சனத்தை ஏமாற்றி சேர்த்த பணத்திலை என்னவெல்லாம் செய்யுறியள். அதைவிட ஊர்ப் பிரச்சினை முழுவதுக்கும் தணிகாசலம் தான் நீதவான். குருமூர்த்தீன்ரை இடமாற்றத்திற்கு காரணம் ஆர்...? பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகிறார். கல்விப் பணிப்பாளருக்கும் தான் அடிக்கிறத்திலை கொண்டுபோய்க் குடுத்து தான்தான் செல்வாக்குள்ளவன் என்பதைக் காட்டுறார். ஒவ்வொரு காலத்திற்கு ஒவ்வொருவரை பிடிச்சுப்போடுவர். இப்ப சத்தியநாதனைப் பிடிச்சிருக்கிறார். பணக்காரன் அதோடை குடிகாரன். ஏமாற்றிப் பிழைக்க வேண்டியதுதான். தணிகாசலம் நினைத்திருந்தால் குருமூர்த்தியைக் கணபதி மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து இடம்மாற்றி இருக்கேலாது. செய்யுறதெல்லாவற்றையும் செய்யுங்கோ. ஒரு காலத்திலை அனுபவிப்பியள்...'' சபாநாயகம் பெரிதாகக் கதைத்தான். போவோர் வருவோர் ஐம்பது பேருக்கு மேல் கூடிவிட்டனர்.

சிலர் சபாநாயகம் சொல்வதில் அர்த்தமிருக்கிறது என்று நினைத்தனர். சிலர் குடிகாரனின் பேச்சைக் கேட்பதே பாவம் என நினைத்துச் சென்றனர்.

''வீணாகக் கற்பனை பண்ணிப் பாவத்தைச் சேர்த்துக்கொள்ளாதை. தணிகாசலம் நேர்மையான மனிதன். அவன் தவறு செய்யமாட்டான் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு'' என்று கூறிவிட்டு நடந்தார் வேலாயுதபிள்ளை.

''ஏனண்ணை வீணாய்க் கதைக்கிறாய். நீ கதைச்சாப்போலை தணிகாசலம் திருந்தி விடுவானே. அவனுக்கு எல்லாத் தந்திரமும் தெரியும். அதோடை அவன் கவலைப்படவும் மாட்டான். வறுமை வறுமை என்று சொல்லிக்கொண்டு நல்லாய்ப் பிழைப்பு நடத்தப் பழகீட்டான்'' என்றான் சின்னத்தம்பி.

வேலாயுதபிள்ளை நடந்த சம்பவத்தைப் பற்றி தணிகாசலத்திற்குச் சொன்னார். தணிகாசலம் கவலைப்பட்டான். அவனது கண்கள் கலங்கின. ''பொது வேலைகளைச் செய்யாமல் என்ரை குடும்ப வேலைகளைக் கவனிச்சிருந்தால் நான் பெரிய

பணக்காரனாகியிருப்பன். இன்று உலையிலை போட ஒருமணி அரிசிகூட இல்லை...''

''கவலைப்படாதை தணிகாசலம். அடுத்தவன் எம்மை இகழ்கிறான் என்பதற்காக நாம் கவலைப்படவோ, பொது வேலைகள் செய்வதை நிறுத்தவோ கூடாது. சிலர் பொறாமையாலை சொல்லுவினை. சிலர் குழப்புறத்துக்குச் சொல்லுவினை. சபாநாயகம் குடிகாரன். அதோடை அவனுக்கு மற்றவர்களைப் பற்றிக் கதையாட்டில் நித்திரை வராது. நீ சுவாமியாரைப் பற்றி நூல் எழுதினாயே தவிர அவருடைய போதனைகளைக் கைக்கொள்ளவில்லை. அவர் சொல்கிறார் ''பொறுமையைக் கடைப்பிடிப்பவன் மனஉறுதி வாய்ந்தவனாக இருப்பான். அதனால் அவன் பாவம் செய்யமாட்டான். அடுத்தவனைக் கெடுக்கமாட்டான். சினம்தான் பாவங்களுக்குக் காரணகர்த்தா. மனக்கவலை தான் மனிதனை அழிக்கும் நோய் என்கிறார்.'' நீ கவலைப்படாதை. தன்னை வெட்டிக்கொத்தி வெடிவைத்து தகர்த்துத் துன்பம் செய்வோரையும் பொறுத்து அவர்களுக்கு இன்பத்தைக் கொடுத்து வாழ்வை அளிக்கின்ற நிலத்தைப் போல் நாமும் எம்மை இகழ்பவர்களைப் பொறுத்துக்கொள்ளல் வேண்டும். மரம், செடி, கொடிகளெல்லாம் தம்மை அழித்துத் தானே உயிர்களை வாழ வைக்கின்றன...''

''ஒரு கணம் தடுமாறிவிட்டேன். என்னை மன்னித்துக்கொள் வேலாயுதம். குற்றம் செய்பவன் தான் பயப்படல் வேண்டும். கோபம் கொள்ளல் வேண்டும். மனக்கவலை அடைதல் வேண்டும். நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. அதனால் யார் என்னை இகழ்ந்தாலும் பரவாயில்லை'' என்றார் தணிகாசலம்.

151. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

நிலமானது தன்னை வெட்டுவோரையும் மன்னித்துத் தாங்கிக்கொள்வதைப் போல், தம்மை இகழ்வாரைப் பொறுப்பதே தலைசிறந்த பண்பாகும்.

பொறுத்தலில் நன்று

“இப்ப நீங்கள் முன்பு போல் இல்லை. திருந்திவிட்டீர்கள் என்று நினைத்துத்தான் உங்களிடம் வந்தேன். எனது கணவர் சுகமில்லாமல் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெறுகிறார். உங்களைப் பார்க்க ஆசைப்படுகிறார். போய் ஒருமுறை பாருங்கள்” என்று அபிராமி கூறியதால் கணேசமூர்த்தி தேவராஜாவைப் பார்க்க மருத்துவமனைக்கு வந்தான்.

மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெறும் அறையில் இருந்த கட்டில் ஒன்றில் தேவராஜா படுத்திருந்தான். அவனைப் பார்க்க கணேசமூர்த்திக்கு வேதனையாக இருந்தது. பெரும் பலசாலியாக இருந்த அவன் நாராக இளைத்திருந்தான். முகத்தில் எலும்புகள் வெளியே தெரிந்தன. கண்கள் குழிவிழுந்திருந்தன. கணேசமூர்த்தியைக் கண்டதும் எழும்பினான்.

“நீ படு தேவா... நல்லாய் இளைச்சுப் போனாய். பெரும் நோய் வருமென்று நான் எதிர்பார்க்கேல்லை. என் உயிர் நண்பனான நீ இருக்கும் நிலை எனக்குக் கவலையைத் தருகிறது. ஒன்றுக்கும் யோசிக்காதை நான் இருக்கிறன்...” கலங்கினான் கணேசமூர்த்தி.

தேவராஜா மிகவும் வறியவன். அவனுக்கு மூன்று பிள்ளைகள். நோய்வாய்ப்பட்டதால் வருமானமின்றிக் கஷ்டப்பட்டான். நோயை விட சரியான உணவில்லாதது தான் அவனை வாட்டியது. தன்னிடமிருந்த ஆயிரம் ரூபாவை எடுத்து தேவராஜாவிடம் கொடுத்தான்.

“என்னட்டை ஏனண்ணை தாறியள். போற வழீலை மனிசீட்டைக் குடுங்கோ. இன்றைக்கு காலமை மனிசி வந்திட்டுப் போட்டுது. இனி நாளைக்குத்தான் வரும்” என்றான் தேவராஜா.

கணேசமூர்த்தி தேவராஜாவிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டை நோக்கிச் சென்றான். அவனுக்கு தேவராஜாவின் வீட்டுக்குச் செல்லப் பயமாக இருந்தது. தேவராஜா மருத்துவமனையில் இருப்பதைப் பயன்படுத்தி தான் அங்கு செல்வதாக யாராவது நினைப்பார்கள். அதைவிட அபிராமி அப்பொழுது பேசிய வார்த்தைகளை அவன் பெரிதாக எடுக்கவில்லை. இப்பொழுது நினைத்தால் அவளைப் பார்க்கவே வெட்கமாக இருந்தது. “உன்னை நண்பனென்று நினைத்து சந்தேகம் கொள்ளாது வீட்டுக்குக் கூட்டிவரும் நண்பனின் மனைவி மீது தகாத ஆசை கொண்டிருக்கும் நீ மனிதன் தானா...? ஒன்று இரண்டா... எத்தனை பெண்களுடன் நீ சேட்டை விட்டிருக்கிறாய். உன்னை சந்தேகிக்காது உன்னைத் தன் வீட்டுக்குக் கூட்டிவரும் எனது கணவருக்கு உனது செயல்களைப் பற்றிச் சொல்லமாட்டன். நானே உனக்குத் தகுந்த தண்டனை தருவன்...” அபிராமியை தொட்டபோது அவள் சொன்ன வார்த்தைகள் காதில் ஒலித்தன.

தான் அவளுக்குச் செய்த அருவருப்பான செயல்களை குடிக்காது இருந்து யோசித்துப் பார்த்த போது கணேசமூர்த்திக்கு அவமானமாகவும், வெட்கமாகவும் இருந்தது. தேவராஜா இல்லாத வேளைகளில் திட்டமிட்டுத் தான் செய்த செயல்களை நினைத்துப் பார்த்தான். அன்று சித்திரைப் பௌர்ணமி நாள். அபிராமியின் தாய் இறந்தமையால் அவள் விரதமிருந்தாள். முழுகியதால் அவளது நீளமான தலைமுடி காற்றில் பறந்து கொண்டிருந்தது. இயல்பாகவே அழகிய சிற்பமாக இருந்த அவளின் உடல் அன்று நீறணிந்து குங்குமப் பொட்டுமிட்டிருந்ததால் பொலிந்திருந்தது. விரதத்திற்கு உணவருந்த வருமாறு கணேசமூர்த்திக்கு தேவராஜா அழைப்பு விடுத்திருந்தான். கணேசமூர்த்தி வீட்டுக்கு வந்தபோது தேவராசா அங்கு இருக்கவில்லை. அபிராமி கணேசமூர்த்தியை உணவருந்த வருமாறு அழைத்தாள்.

குசினியுள் சென்ற கணேசமூர்த்தி அபிராமியின் கோலத்தைக் கண்டு சொக்கிப் போனான். அவனுக்கு தான் செய்வது என்னவென்று புரியவில்லை. அவனது அணைப்புக்குள் திமிறிய அபிராமி குசினிக்குள் இருந்த கத்தியை எடுத்து அவனை வெட்டிவிட்டாள். சிறிய காயம் என்றாலும் மத்தியான வேளை இரத்தம் சற்று அதிகமாக வந்தது. அதனால் அவன் அதன்பின் தேவராசா இல்லாத நேரத்தில் செல்வதில்லை.

மெதுவாக வீட்டினுள் சென்ற கணேசமூர்த்தி முற்றத்தில் நின்று ‘‘அபிராமி’’ என்று அழைத்தான். அபிராமி வெளியே வந்தாள். சட்டைப் பைக்குள் இருந்த பணத்தை எடுத்து திண்ணையில் வைத்துவிட்டுச் சொன்னான்; ‘‘நான் இஞ்சை வரவிரும்பேல்லை. தேவராஜாதான் காசை உன்னிடம் கொடுக்கச் சொன்னவன். நான் முன்பு உங்களோடு தப்பான முறையில் நடந்திட்டன். இப்ப திருந்தீட்டன். நான் தெரியாத்தனமாகச் செய்த பிழைகளை தயவுசெய்து மன்னித்துக் கொள்ளுங்கோ.’’

‘‘எனக்கு உங்கள் மீது சரியான கோபம் இருந்தது. இப்ப நீங்கள் திருந்தி நல்ல மனிதனாகிவிட்டீர்கள். அதனால் வரம்பு கடந்து நீங்கள் செய்த தீங்குகள் யாவற்றையும் பொறுத்துக் கொண்டேன். அத்துடன் அவை யாவற்றையும் கெட்ட கனவாக நினைத்து மறந்தும்விட்டேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்’’ என்றாள் அபிராமி.

152. பொறுத்தல் இறப்பினை என்றும்; அதனை

மறத்தல் அதனிலும் நன்று.

அளவு கடந்த தீங்கை பிறர் செய்தாலும் எப்பொழுதும் பொறுத்தல் நன்று. அத்தீங்கை நினைவில் கொள்ளாது மறத்தல் அதனிலும் நன்று.

வலிமையுள் வலிமை

அன்று ஞாயிற்றுக்கிழமை. சத்தியநாதனின் வீட்டுக்குச் சென்றான் கணேசமூர்த்தி. ஞாயிற்றுக்கிழமைகளில் பட்டணத்துக் கடைகள் யாவும் பூட்டப்படுவதால் சத்தியநாதன் வீட்டில் நிற்பான் என்ற நம்பிக்கையில் தான் கணேசமூர்த்தி அங்கு சென்றான். வீட்டின் முன்னால் உள்ள வேப்பமர நிழலில் படுத்திருந்த சத்தியநாதனது நாய் குரைத்துக்கொண்டு ஓடிவந்தது.

''யாரது?'' என்று கேட்டபடி கதவைத் திறந்த சத்தியநாதனின் மனைவி கணேசமூர்த்தியைக் கண்டதும் கதவைச் சாத்திவிட்டு சிறிதாகத் திறந்து தலையை மட்டும் வெளியே நீட்டி ''அவர் இல்லை'' என்றாள்.

''எங்கை போட்டார்?'' கணேசமூர்த்தி கேட்டான்.

''பட்டணத்தில் உள்ள அவரது நண்பனின் வீட்டுக்குப் போனவர். பத்துப் பதினொரு மணிக்கு முன்னம் வாறனென்றவர். இப்ப இரண்டு மணியாச்சு வந்திடுவர் இருங்கோ'' என்று கூறிவிட்டு தலையை உள்ளே எடுத்தாள்.

''காலமை அவசரமாய்ப் புறப்பட்டதாலை காலமையும் சாப்பிடேல்லை. பசிக்குது நான் பிறகு வாறன்..'' என்ற கணேசமூர்த்தி திரும்பி வீட்டுக்குச் சென்றான். அவன் வீட்டுக்குச் சென்றபோது சபாநாயகத்தின் தந்தை தர்மரட்ணம் அவனது வீட்டில் இருந்தார். கணேசமூர்த்தியைக் கண்டதும் எழுந்து வந்தார்.

''என்னட்டை காசு இல்லை அண்ணை. எந்த வேளையிலும் எனக்கு காசுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவது இல்லை. இப்ப கொஞ்ச நாளாய் தட்டுப்பாடாய் இருக்கு. காலமை சத்தியநாதனை வழியிலை கண்டு கேட்டனான். பன்னிரண்டு மணிக்கு வரச்சொன்னவன். இப்ப அங்கைதான் போட்டு வாறன். பட்டணத்துக்குப் போனவனாம். இன்னும் வரேல்லை. மனிசிக்காரி இருந்து பார்க்கச் சொன்னவா. நான் வந்திட்டன். முந்தி குடியாலை ஏற்பட்ட சில தவறுகளாலை இப்பவும் சிலபேர் என்னைத் தவறாய் நினைக்கினை. அதாலை நான் நிக்கேல்லை... வந்திட்டன். கொஞ்சநேரம் பொறுங்கோ போய் வாங்கிவந்து தாறன்.''

“யாரையும் குறை சொல்லேலாது. என்ரை கஷ்டகாலம் என்னைப்போட்டு ஆட்டுது. அதுக்காக பிறரைக் குறைசொல்லிப் பிரயோசனமில்லை. என்ரை மகன் சபாநாயகம் எத்தனை பேரோடை சினேகிதம். அவனுக்கு பாம்பு கடிச்சு மருத்துவமனையிலை விட்ட உடனை எல்லாரும் போய்ப் பார்த்தவங்கள். மருந்துக்குப் பத்தாயிரம் ரூபா வேணுமெண்டவுடனை எல்லாரும் விலத்தீற்றாங்கள். நீ ஒரு மனிசன்தான் உதவி செய்யிறதாய் சொன்னனீ... அவன் குடிச்சுப் போட்டு ஆற்றையன் சொல்லைக்கேட்டு உன்னை பொது இடங்களிலையும், கூட்டங்களிலையும் அவமதித்தவன். அப்படி இருந்தும் நீ அதெல்லாத்தையும் பொறுத்திட்டாய். பொறுமை கடலை விடப் பெரிது என்று சொல்லுவினை” கண்கலங்கினார் தர்மரட்ணம்.

“மற்றையோர்க்கு நான் பல தீங்குகள் செய்தும் அவர்கள் என்னைத் தண்டிக்காமல் பொறுத்துக்கொண்டவை. ஒருவன்ரை பலம் மற்றவன் செய்யும் தீங்குகளைப் பொறுத்துக் கொள்வதாகும். இப்ப நான் முன்புபோல் சண்டைக்குப் போவதில்லை. பிரச்சினைகளுக்குப் போவதில்லை. மற்றையோர் என்னோடு பிரச்சினைக்கு வந்தாலும் நான் அதைப் பொறுத்துக் கொள்வேனே தவிர சண்டைக்குப் போவதில்லை என்று தீர்மானித்திருக்கிறேன்” என்றான் கணேசமூர்த்தி.

“மற்றையோர் செய்யும் தீங்கைப் பொறுத்துக்கொள்வது ஒருவனது வலிமைக்கு வலிமை சேர்ப்பதாகும்...” என்று தர்மரட்ணம் கூறிக்கொண்டிருக்கும் போது சத்தியநாதன் வந்தான்.

“என்ன கணேஸ் வீட்டை வந்தனியாம், ஐந்து நிமிடம் நிற்கக் கூடாதே... காலமையும் சாப்பிடேல்லை பசிக்குது பிறகு வாறன் என்றனியாம். என்ரை வீடுதேடி வந்து பசியென்று சொல்லிவிட்டு சாப்பிடாமல் வந்தவன் நீ ஒருவன் தான். பசியென்று சொன்னவனுக்கு உணவளிக்காவிட்டால் அவனுக்கு வறுமை வந்து சேரும். அவன் வறுமையுள் வறுமைப்பட்டவனாவான். இந்தா பிடி. நீ கேட்ட பத்தாயிரம் ரூபா. வா.. வந்து சாப்பிட்டு விட்டுப் போ”

சத்தியநாதன் வருவதைக் கண்ட தர்மரட்ணம் கணேசமூர்த்தியின் வீட்டுக்குள் சென்று ஒளித்துக்கொண்டார். கணேசமூர்த்தி வீட்டுள் சென்று அவரிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு வந்தான்.

“வா... வா நானும் சாப்பிடேல்லை. போய்ச் சாப்பிடுவம். இப்ப நானென்ன காசு தரவே வந்தனான். சாப்பிடாமல் வந்த உன்னைக் கூட்டிக்கொண்டுபோய் சாப்பாடு தரத்தான் வந்தனான்.”

கணேசமூர்த்தியால் மறுக்க முடியவில்லை. அதனால் சத்தியநாதனுடன் சென்றான். சத்தியநாதனுக்குப் பணத் தட்டுப்பாடு ஏற்படும் வேளைகளில் கணேசமூர்த்தி அவனுக்குப் பணம் கொடுப்பான்.

அத்துடன் இருவரும் முன்பு சேர்ந்து குடிப்பது வழக்கம். அதனால் சத்தியநாதனின் சொல்லைக் கணேசமூர்த்தியால் நிராகரிக்க முடியவில்லை.

153. இன்மையுள்இன்மை விருந்தொரால்; வன்மையுள்

வன்மை மடவார்ப் பொறை.

ஒருவனுக்கு வறுமையுள் வறுமை விருந்தினரை உபசரியாமல் விடுதல். வலிமையுள் வலிமை பிறர் செய்த தீங்கைப் பொறுத்தல்.

போற்றிப் பேணு

பாலகுமாரன் மிகவும் கடுமையான காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த சின்னத்தம்பியின் ஒரே மகனான கௌசிகனைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார். ஐந்து நாட்களுக்கு முன்பு கடும் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்ட கௌசிகனுக்கு காய்ச்சல் சிறிதும் குறையவில்லை. அன்று காய்ச்சலுடன் வலியும் வந்துவிட்டது. சுய நினைவின்றிக் கிடந்த கௌசிகனுக்கு இரத்தம் குழாய் வழியாக ஏற்றப்பட்டது. மிகவும் பலவீனமான நிலையில் அவன் இருந்ததால் மருந்தை ஊசிமூலம் ஏற்றினார்கள்.

சின்னத்தம்பி துடிதுடித்துப் போனான். அவனுக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. செய்வதறியாது மஹா கணபதியே தஞ்சமெனக் கோயிலில் அமர்ந்திருந்தான்.

“எல்லாம் வல்ல மஹா கணபதியே எனக்கிருப்பது ஒரே ஒரு பிள்ளை. அதற்கு இப்படி ஒரு நோயைக் கொடுத்து நீ வருத்த வேண்டுமா...? உனக்கு நான் என்ன குறை வைத்தேன். பொங்கவில்லையா...? பூசை செய்யவில்லையா...? கட்டட நிதிக்கு காசு தரவில்லையா...? விரதம் இருக்கவில்லையா...? ஏன் என்னை இப்படிச் சோதிக்கிறாய். ஊர் மருத்துவமனை என்ற படியாலும் இரகுநாதன் ஐயாவின் பிள்ளை மருத்துவராக இருப்பதாலும் செலவுகளுக்கு அஞ்சாமல் நான் இருக்கிறேன். பட்டணத்தில் உள்ள பெரிய மருத்துவமனைக்குக் கொண்டு சென்றால் செலவுக்கு நான் என்ன செய்வேன்...?” என்று அழுதான்.

ஸ்ரீனிவாசன் சுவாமிகள் அவனை அழைத்தார் ‘‘சின்னத்தம்பி மஹா கணபதி இருக்க நீ ஏன் துன்பப்படுகிறாய். எவனொருவன் தனக்கு நேர்ந்த துன்பங்களை கடவுளிடம் ஒப்படைத்துவிட்டு கவலைப்படாமல் இருக்கிறானோ, அவனுக்கு துன்பங்களால் துயரம் ஏற்படாது. நீ மஹா கணபதியிடம் உனது துன்பத்தைப் பற்றிக் கூறிவிட்டாய் அல்லவா. நிம்மதியாகப் போ...’’ என்றார்.

சின்னத்தம்பி மருத்துவமனைக்குச் சென்றான். அவன் அங்கு செல்லும்போது மது அருந்தியிருந்தான். அளவுக்கதிகமான கவலையில் அவன் இருந்ததால் வழமையை விடச் சற்று அதிகமாகக் குடித்திருந்தான்.

மருத்துவமனைக்குள் நுழைந்த சின்னத்தம்பியை வாசலில் நின்ற காவலாளி தடுத்தான். ‘‘இப்ப நோயாளிகளைப் பார்ப்பதற்காக மருத்துவமனைக்குள் செல்ல முடியாது. போய் மாலை நான்கு மணிக்கு வாருங்கள்.’’

‘‘நான் என்னுடைய பிள்ளையைப் பார்க்க வேண்டும். நீ யாரடா தடுக்க’’ என்று கோபமாக ஏசியபடி காவலாளியைத் தாக்கினான் சின்னத்தம்பி. காவலாளியின் நெற்றியில் இருந்து இரத்தம் வழிந்தது. அவன் பலமாகக் குழறியபடி மருத்துவரின் அறைக்குச் சென்றான்.

சின்னத்தம்பி புலம்பியபடி மகன் தங்கிச் சிகிச்சை பெறும் அறைக்குச் சென்றான். கட்டிலில் மருந்தும், இரத்தமும் ஏற்றிய நிலையில் படுத்திருந்த கௌசிகனைக் கண்டதும் சின்னத்தம்பிக்கு துயரம் கட்டு மீறியது. மகனை அணைத்துப் புலம்பினான். அவன் அணைத்த போது இரத்தம் ஏற்றும் போத்தலுக்கும் கௌசிகனின் கைக்கும் இடையே இணைக்கப்பட்டிருந்த குழாய் அறுந்தது.

மருத்துவத் தாதி பரபரப்புடன் போத்தலைப் பிடித்துக்கொண்டு சொன்னாள்; ‘‘பிள்ளையை விடு... விடு... விடு...’’ மருத்துவமனை ஊழியர்களும், ஏனைய நோயாளிகளும் அவ்விடத்திற்கு ஓடி வந்தனர். சின்னத்தம்பியின் செயலால் கௌசிகன் படுத்திருந்த கட்டில் சரிய கௌசிகன் நிலத்தில் விழுந்தான்.

‘‘என்ரை பிள்ளையைச் சாக நான் விடமாட்டன். மஹா கணபதி காப்பாற்றுவார். என்ரை குஞ்சு. நான் தவமிருந்து பெற்றனான்’’ கௌசிகனைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதான் சின்னத்தம்பி.

பாலகுமாரன் செய்தி அறிந்து ஓடிவந்தார். கௌசிகனது நிலையைப் பார்த்ததும் பதறிப்போனார் பாலகுமாரன். பாலகுமாரனைக் கண்டதும் சின்னத்தம்பி கோபத்துடன் பேசினான். ‘‘ஐந்து நாட்களாய் இங்கு என்ன செய்கிறீர்கள். என்ரை பிள்ளை உயிருக்குப் போராடுது.

நீங்கள் என்னடாவென்றால் என்னைப் பார்க்க விடுகிறீர்கள் இல்லை. உங்களாலை இயலாவிட்டால் விடுங்கோ. நான் பெரிய மருத்துவமனைக்குக் கொண்டுபோறன். அந்தக் காலத்திலை மருத்துவர்மார் கடவுள் மாதிரி இருந்தார்கள். அவர்களின் கை பட்டாலே நோய்கள் மாறிவிடும். இப்ப நோயாளிகளில் தான் நீங்கள் பழகிறீர்கள்...''

''இவரைப் பிடித்துக்கொண்டு போய் வெளீலை விடுங்கோ...'' என்று கூறிவிட்டு கௌசிகனைத் தூக்கி கட்டிலில் வளர்த்தினார் பாலகுமாரன்.

நாலைந்து மருத்துவமனை ஊழியர்கள் சின்னத்தம்பி பேசப்பேச தூக்கிக்கொண்டு சென்றனர்.

மறுநாள் காலையில் வந்த சின்னத்தம்பியை அழைத்து பாலகுமாரன் சொன்னார்; ''பிள்ளைக்கு கடுமையான நோய் வந்தால் பெற்றார்களுக்கு கவலை வரத்தான் செய்யும். அதற்காக கள்ளைக் குடித்துவிட்டு வந்து கலாட்டா செய்வதா?. விரதமிருந்து கடவுளைப் பிரார்த்தித்தல் வேண்டும். அதை விட்டுவிட்டு குடித்துவிட்டு வந்து நீங்கள் கலாட்டா செய்ததால் உங்கள் மகனின் உயிருக்குத்தான் ஆபத்து ஏற்படும். நேற்று நீங்கள் குடித்துவிட்டு வந்து மருத்துவமனையில் நடந்து கொண்டவிதம் பற்றி காவல் துறையில் புகாரிட்டால் என்ன நடக்கும் தெரியுமா...? நீங்கள் கவலையால் அப்படி நடந்ததாக ஊழியர்களிடம் கூறி நான் அவர்களை அடக்கினேன். கவலைக்கு மருந்து கள்ளல்ல. இனிமேலாவது மரியாதையாக நடக்கப் பாருங்கோ'' என்றார் பாலகுமாரன்.

சின்னத்தம்பியிடம் அடி வாங்கிய காவலாளி சொன்னான் ''குணவானான ஐயா சொன்னதற்காக நாங்கள் பொறுத்துக்கொண்டோம். எங்களால் அவரின் சொல்லை மீற முடியவில்லை. நிறைந்த குணவானால் தான் பொறுமையைக் கடைப்பிடிக்க முடியும்'' சின்னத்தம்பிக்கு வெட்கமாக இருந்தது.

154. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.

ஒருவன் நிறையுடையவனாக எப்பொழுதும் இருக்க வேண்டுமென விரும்பினால், அவன் பொறுமையைப் போற்றி ஒழுகுதல் வேண்டும்.

மதிப்பு

குருமூர்த்திக்கு வீட்டில் இருந்து ஐம்பது மைல்களுக்கு அப்பால் உள்ள கஷ்டப் பிரதேசத்தில் உள்ள ஒரு பாடசாலைக்கு இடமாற்றம் கொடுக்கப்பட்டது. இடமாற்றத்தை இரத்துச் செய்ய அவர் முயற்சித்தும் கிடைக்காததால் வேறு வழியின்றி அப்பாடசாலையில் பொறுப்பை ஏற்றார். அது மிகவும் பின்தங்கிய கிராமம். தரம் ஒன்றில் இருந்து தரம் பதினொன்று வரை அப்பாடசாலையில் கல்வி கற்பிக்கப்பட்டது. ஒவ்வொரு வகுப்புக்களிலும் ஐந்தாறு பிள்ளைகள் கல்வி கற்றனர்.

அக்கிராமத்தின் எல்லையில் பாடசாலை இருந்தது. பேரூந்தில் சென்றால் பிரதான வீதியில் இறங்கி இரண்டு மைல்கள் நடந்து பாடசாலைக்குச் செல்ல வேண்டும். அதனால் பிரதான வீதியில் இருந்து பாடசாலைக்குச் செல்ல குருமூர்த்தி துவிச்சக்கரவண்டி ஒன்றை வைத்திருந்தார். வீட்டில் இருந்து வெகுதூரத்தில் பாடசாலை இருந்தமையால் அவர் திங்கட்கிழமை பாடசாலைக்குச் சென்று வெள்ளிக்கிழமை மாலையே வீட்டிற்கு வருவார்.

குருமூர்த்தி பாடசாலையில் உள்ள ஓர் அறையில் தங்கியிருந்தார். பாடசாலை விட்ட பின்பு படுக்கப்போகும் வரை பொழுது போகாமையால் தன்னிடம் படிக்கும் மாணவர்களுக்கு பாடம்சொல்லிக் கொடுத்தார். இதுவரை காலமும் பாடசாலை நேரத்திலேயே ஆசிரியரைக் காணாத அப்பாடசாலை மாணவர்களுக்கு குருமூர்த்தியின் வருகையால் இரவு ஒன்பது மணிவரை கற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனால் மாணவர்களும், பெற்றோர்களும் மகிழ்ந்தனர்.

“பெரிய பாடசாலைகளுக்கென்றால் ஆயிரம் பேர் போட்டிபோட்டு வருவார்கள். கஷ்டப் பிரதேசப் பாடசாலையென்றால் ஒருத்தர் கூட வரமாட்டார்கள்” என்று நினைத்தார் குருமூர்த்தி. தண்டனைக்குரிய மாற்றமென்றாலும் அக்கிராமச் சூழ்நிலை அவருக்கு மன ஆறுதலை அளித்தது. அத்துடன் இடமாற்றத்திற்குப் பின்பு நடைபெற்ற சம்பவங்களால் புண்ணாகிப் போயிருந்த அவரது மனதிற்கு நிம்மதியையும் அளித்தது.

அன்று வெள்ளிக்கிழமை. பாடசாலை முடிந்தவுடன் வரும் பேரூந்து வண்டி பழுதடைந்ததால் வரவில்லை. அடுத்த பேரூந்து ஐந்து மணிக்குத்தான் வரும். எனவே குருமூர்த்தி பாடசாலைக்குச் சென்று தேநீர் வைத்துக் குடித்துவிட்டு ஐந்து மணிக்கு வந்த பேரூந்தில் ஏறினார்.

அவர் இரவு ஒன்பது மணியளவில் பேரூந்தால் இறங்கித் தனது வீட்டுக்குச் செல்லும் ஒழுங்கை வழியாக நடந்துகொண்டிருந்தார். அப்போது ‘‘குருமூர்த்தி’’ என்று யாரோ அழைக்கும் சத்தம் கேட்டது. குருமூர்த்தி நின்று திரும்பிப் பார்த்தார். நாலைந்து பேர் எதிர்த்திசையில் இருந்து ஓடிவந்தனர். கண் இமைக்கும் நேரத்துள் ஓடிவந்தோர் பொல்லுகளாலும் கொட்டன்களாலும் குருமூர்த்தியைத் தாக்கினர். ‘‘ஐயோ... ஐயோ... என்னைக் கொல்லுறாங்கள்’’ என்று கத்திய குருமூர்த்தி சிறிது நேரத்தில் மயக்கமடைந்தார்.

மறுநாட் காலை மருத்துவமனையில் கண்விழித்துப் பார்த்த குருமூர்த்தி ‘‘நான் எங்கே இருக்கிறேன்?’’ என்று கேட்டார். அவரது மனைவியும், பிள்ளைகளும், வேலாயுதபிள்ளையும், தனபாலசிங்கமும் தணிகாசலமும் அவனைச்சுற்றி நின்றனர்.

‘‘உனக்கு அடித்தவர்களை தெரியுமே?’’ தணிகாசலம் கேட்டார்.

‘‘கூப்பிட்ட குரல் வரதன்ரை குரல் மாதிரி இருந்தது. ஆனால் நான் யாரையும் குறை நினைக்கவும் இல்லை. குற்றம் சாட்டவும் இல்லை. அவையை ஒன்றும் செய்யாதைங்கோ... காவல் துறையிலையும் புகாரிட வேண்டாம்’’ என்றார் குருமூர்த்தி.

‘‘அவருக்குத் தொல்லை கொடாதைங்கோ. பார்த்தவை போங்கோ. இஞ்சை கதைக்கக்கூடாது’’ என்றாள் தாதி.

தணிகாசலமும், வேலாயுதபிள்ளையும் வெளியே வந்தனர். வெளியே பெருங்கூட்டம் ஒன்று நின்றது. ‘‘சத்தியநாதன் தான் ஆள் வைத்து அடிப்பிச்சவன். தன்ரை மனிசியைத் திருத்திறத்தை விட்டுட்டு அடுத்தவனைத் திருத்த முடியுமே?. அவள் குமரிலையும் அப்பிடி இப்பிடித்தான். தாயின்ரை நடத்தையும் சரியில்லை...’’ என்றான் சின்னத்தம்பி.

‘‘ஆளை வைத்து அடித்து தன்ரை சூத்தையை வெளியிலை கொண்டந்திட்டார். காசு, பொருள் இருந்தால் இப்பிடியே செய்யிறது’’ என்றான் வரதராஜன்.

‘‘நடந்தது நடந்துபோச்சு. அதைப் பொறுத்துக்கொள்ளுறத்தை விட்டுட்டு பழிவாங்கினால் மானம் மரியாதைதான் போகும்’’ என்றான் சின்னத்தம்பி.

அடிவாங்கின குருமூர்த்தி குற்றம் செய்தவணெண்டாலும் காவல் துறைக்குப் போகவேண்டாம் என்று சொன்னது அவன்ரை பண்பைக் காட்டுது. அந்தாள் திறமான மனிதன். நல்ல ஆசிரியன். உவள்தான் ஆட்டமாடிக் கொடுத்தவள். என்னமாதிரிப் பிள்ளைகளுக்குப்

படிப்பிச்சவர். அந்தாளிட்டைப் படிச்ச ஆர் சித்தியடையேல்லை. நல்ல மனிதனைக் கெடுத்துப்போட்டாள்'' என்றான் வரதராஜன்.

தணிகாசலம் அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டு நின்றார். வரதராஜன் சொல்வது நியாயம் போல் தோன்றியது. ''பாவம் குருமூர்த்தி. நல்ல ஆசிரியர். என்ன செய்வது'' என்று பெருமூச்சு விட்டார் தணிகாசலம்.

155. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே; வைப்பர்

பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.

தீங்கு செய்தவரைப் பொறுக்காமல் அவருக்கு பதில் தீங்கு செய்தவரை உலகத்தார் ஒருபோதும் மதிக்கமாட்டார்கள். ஆனால் பொறுத்தவரை பொன்போல மனதில் இருத்தி மதிப்பர்.

ஒருநாள் இன்பம்

மயக்க நிலையில் இருந்து குருமூர்த்தி மீண்டதை அறிந்த காவல் துறையினர் மருத்துவமனைக்கு வந்து குருமூர்த்தியை விசாரணை செய்தனர்.

''உங்களுக்கு அடித்தவர்களைத் தெரியுமா...?'' காவல்துறை அதிகாரி கேட்டார்.

''எனக்குத் தெரியாது...''

''உங்களுக்கு அடித்தவரைத் தெரிந்தால் பயப்படாமல் கூறுங்கள். நாங்கள் உங்களுக்கு சகல வகையிலும் பாதுகாப்பு அளிப்போம்...'' என்றார் அதிகாரி.

''அன்று பாடசாலை விட்டதும் வரும் பேரூந்து பழுதடைந்துவிட்டதால் ஐந்து மணிக்கு வரும் பேரூந்தில் தான் பயணம் செய்தேன். இரவு வீட்டுக்கு வரும் ஒழுங்கையால் வரும்போதுதான் எனக்குப் பலர் அடித்தார்கள். இருட்டான படியால் எனக்கு ஆட்களைத் தெரியவில்லை'' என்றார் குருமூர்த்தி.

''உங்களுக்கு எதிரிகள் யாராவது இக்கிறார்களா...?''

“எனக்குத் தெரிந்தவரை இல்லை.”

“நல்ல காலம். உடனடியாக நீர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதால் தப்பினீர். ஆட்கள் காணாவிட்டால் நீர் இறந்திருப்பீர். இப்படிக் கடுமையாகத் தாக்குவதற்குக் காரணம் இல்லாமலா இருக்கும்” அதிகாரி கேட்டார்.

சில நிமிடங்கள் பேசாமல் இருந்த குருமூர்த்தி பின் சொன்னார்; “எனக்கு எதிரிகள் என்று யாரும் கிடையாது. ஆளை மாறி அடித்தார்களோ தெரியவில்லை.”

காவல் துறை அதிகாரி சில கணங்கள் யோசித்தார். பின்பு “அப்படியும் இருக்கலாம். திட்டமிட்டுத்தான் தாக்கியிருக்கிறார்கள். நீங்கள் வழமையாக எத்தனை மணிக்கு வீட்டுக்கு வருவீர்கள்..?”

“ஐந்து மணிக்கு முன்பு வந்து விடுவேன்...”

“நீங்கள் வழமையாக ஒன்பது மணிக்கு வருவதாக இருந்தால் திட்டமிட்டுத் தாக்கியிருக்கலாம். ஆனால் நீங்கள் அன்று மட்டும் தான் தாமதமாகி வந்துள்ளீர்கள். எனவே யாரையோ தாக்கத் திட்டமிட்டிருந்தவர்களால் தான் நீங்கள் தாக்கப்பட்டிருத்தல் வேண்டும்” என்ற காவல் துறை அதிகாரி அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார்.

“சத்தியநாதன் தான் திட்டமிட்டு தாக்கியவன் என்று நீங்கள் சொல்லியிருக்கலாம்” என்றான் அவரது நண்பன் ஐங்கரன்.

“சொல்லலாம். சொல்லிப் போட்டு கோடு கச்சேரி என்று அலைய முடியுமே. அதோடை மானம் கெட்ட விஷயம். கோட்டுக்குப் போனால் எத்தனையோ பிரச்சினைகள் வரும். அதுகளை நினைச்சுத்தான் பொறுத்தனான். பொறுமையைக் கடைப்பிடிப்பதன் மூலம் பல நன்மைகளை அடையலாம். தவறு செய்யாவிட்டாலும் தவறு செய்பவனைப் பொறுத்து மன்னிப்பது நல்லது.”

அன்றைய தினம் இரவு சத்தியநாதனின் வீட்டில் குருமூர்த்தியைத் தாக்கிய வரதன், நாகராசா, வடிவேலு ஆகியோர் கூடி இருந்தனர். அனைவரும் மதுமயக்கத்தில் இருந்தனர்.

“நாலு நாளைக்கு குருமூர்த்தியை மருத்துவமனையிலை படுக்கப்பண்ண வேணுமெண்டு நினைச்சனான். இப்ப நீங்கள் நாலு மாதத்திற்குக் கிடத்திப் போட்டியள்” என்று சிரித்தான் சத்தியநாதன்.

“உங்கடை சொல்லுக்காகச் செய்தனாங்கள். ஆளை முடிச்சிருப்பம். பிறகு நீங்களும் கோடேற வேண்டி வருமென்று நினைச்சு விட்டனாங்கள்” என்றான் நாகராசா.

“வாத்தியார் இப்பதான் சத்தியநாதனைப் பற்றி நினைச்சுப் பார்ப்பர்...” என்றான் சத்தியநாதன்.

“நாங்கள் அடிச்சதெண்டு ஊருக்கை ஒருத்தருக்கும் தெரியாது. அப்பிடித் திட்டமிட்டு அடிச்சனாங்கள். பள்ளிக்கூடம் விட்ட உடனை வாற பேரூந்தின்ரை சாரதிக்கு சாராயம் குடுத்து மடக்கீற்றம். அவனை மடக்காட்டில் அஞ்சு மணிக்கு வாத்தி வந்து இறங்கிவிடும்” என்றான் வரதன்.

வருடம் ஒன்று கழிந்தது. சத்தியநாதன் நண்பனோடு காரில் வந்து கொண்டிருந்தான். வரதன் காரை மறித்தான்.

“ஐயாயிரம் ரூபா தாருங்கோ...” என்று கேட்டான் வரதன்.

“நெடுகக் காசு கேட்டால் என்ன கணக்கு” சத்தியநாதன் கோபமாகக் கேட்டான்.

“குருமூர்த்தீன்ரை வசுவண்டிக்காரனுக்கு காசு கொடுக்கவேண்டிய கணக்கு” வரதன் வெறியில் உழறினான்.

சத்தியநாதனுக்கு வெட்கமாகவும், அவமானமாகவும் இருந்தது. சட்டைப் பையில் இருந்து ஆயிரம் ரூபாவை எடுத்துக் கொடுத்துவிட்டுச் சொன்னான் “பிறகு வீட்டைவா...”

வரதன் சத்தியநாதனின் வீட்டுக்குச் சென்றபோது நாகராசாவும், வடிவேலுவும் கூட இருந்தனர். “வரதன்ரை கரைச்சல் பெரிய கரைச்சலாய்க் கிடக்கு. நான் ஆட்களோடை வரும்போது வழிமறித்து நாகரீகம் இல்லாமல் நடக்கிறான். மத்தியானம் ஒரு பெரிய மனிதனோடு வந்தனான். வழி மறித்து மரியாதை இல்லாமல் கதைத்தான்.”என்றான் சத்தியநாதன்.

ஒரு வேலையைச் செய்ய முன்னம் யோசித்திருக்க வேணும். எனக்குப் பணம் தேவையான நேரங்களிலை கேட்பன். தரமறுத்தால் ஊர் முழுக்கச் சொல்லுவான்...” வரதன் வெறியில் கதைத்துக்கொண்டிருந்தான்.

சத்தியநாதனுக்கு எதுகும் பேசத் தோன்றவில்லை. குருமூர்த்தியைப் பழிவாங்கியதால் ஏற்பட்ட நிலையை எண்ணி வருந்தினான்.

156. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.

தீங்கு செய்தவரை பொறுக்காமல் வருத்தினவருக்கு ஒருநாள் மட்டுமே இன்பம் உண்டாகும். பொறுத்தவர்களுக்கு உலகம் அழியும் வரைக்கும் புகழ் உண்டு.

அல்லாதன செய்யாதே

சிவசுந்தரத்தின் மகன் கௌதமன். வெளிநாட்டில் பொறியியலாளராகப் பணிபுரிகிறான். சிவசுந்தரத்தின் மனைவியின் சகோதரன் விநாயகரத்தினம். விநாயகரத்தினம் சிவசுந்தரமூர்த்தியோடு வேலை செய்பவன். இருவரும் நல்ல நண்பர்கள். அலுவலகத்தில் இருவருமாகச் சேர்ந்து பல தில்லுமுல்லுகளைச் செய்வார்கள். வேலை இல்லாத நேரங்களில் வெளியே சென்று இருவரும் மது அருந்துவார்கள். ஒருநாள் இருவரும் மது அருந்தினார்கள். சிவசுந்தரமூத்தி அன்று அதிகமாகக் குடித்துவிட்டான். அதனால் தனது மகளை நினைத்து அழுதான். ‘‘இரத்தினம் எனக்கிருக்கிறது ஒரே ஒரு பெம்பிளைப் பிள்ளை. நடன ஆசிரியராக இருக்கிறாள். கோடிக் கணக்கிலை சொத்திருக்கு. ஆனால் கலியாணம் தான் சரிப்பட்டு வருதில்லை. எத்தனையோ இடங்களிலை பேசினனான். என்னிலை உள்ள பொறாமையாலை பேசிவாற சம்மந்தங்களை ஊரவர்கள் குழப்புறாங்கள்’’ அழுதான் சிவசுந்தரமூர்த்தி.

‘‘அழாதை சிவா... நானிருக்கிறன். நீ ஒண்டுக்கும் பயப்படாதை. மகளின்ரை சாதகத்தைத் தா. என்ரை மருமகன் வெளிநாட்டிலை பொறியியலாளராய் இருக்கிறான். சாதகம் பொருந்தினால் செய்யலாம்’’ என்றான் விநாயகரத்தினம்.

‘‘அப்பிடியே... சாதகம் பொருந்தினால் நான் எவ்வளவு சீதனம் வேண்டுமானாலும் தருவன். ஆனால் கலியாணம் முடியுமட்டும் வெளீலை ஆருக்கும் சொல்லக்கூடாது. தெரிஞ்சால் குழப்பிப் போடுவாங்கள்’’ என்றவாறு தினக்குறிப்பு புத்தகத்தைத் திறந்து தனது மகளின் சாதகத்தை எடுத்துக் கொடுத்தார் சிவசுந்தரமூர்த்தி.

மறுவாரம் விநாயகரத்தினம் சாதகம் பொருந்திவிட்டதாக சிவசுந்தரமூர்த்திக்குச் சொல்லி கௌதமனின் சாதகத்தைக்

கொடுத்தான். சிவசுந்தரமூர்த்திக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ‘‘இரத்தினம் இந்தக் கலியாணத்தை ஒப்பேற்றிப் போடு’’ என்று கெஞ்சினான் சிவசுந்தரமூர்த்தி.

‘‘சிவா ஒன்றுக்கும் பயப்படாதை. கலியாணம் முடிஞ்சுது என்று நினைத்துக்கொள்’’ என்றான் விநாயகரத்தினம்.

வாரம் ஒன்று கழிந்தது. வேலாயுதபிள்ளையின் வீட்டுக்கு வந்தார் சிவசுந்தரம். வேலாயுதபிள்ளை அவரை அன்புடன் வரவேற்றார். வேலாயுதபிள்ளையுடன் பல வருடங்கள் ஒன்றாக வேலை செய்தவர் சிவசுந்தரம்.

‘‘வேலாயுதம் என்னுடைய நம்பிக்கைக்குரிய நண்பன் நீ. முக்கியமான விஷயம் ஒன்றைப் பற்றிக் கேட்க வந்தனான். உண்மையைச் சொல்ல வேணும்.’’

‘‘என்னெண்டு சொல்லுங்கோ...’’

‘‘எனது மகனுக்கு மச்சான் தன்னோடை வேலை செய்யிற சிவசுந்தரமூர்த்தியின்ரை மகள் கஜேந்தினியைச் செய்யும்படி வற்புறுத்துகிறார். சாதகம் நல்ல பொருத்தம். மச்சான் சரியான குடிகாரன். அவன்ரை பேச்சை நம்பேலாது. சிவசுந்தரமூர்த்தீன்ரை குடும்பம் எப்படி...?’’ சிவசுந்தரம் கேட்டார்.

வேலாயுதபிள்ளைக்கு தர்மசங்கடமாகிவிட்டது. சிவசுந்தரம் நல்ல நண்பன். சிவசுந்தரமூர்த்தி இனத்தவன். ஒரு பெண்ணின் திருமணத்தைக் குழப்புதல் பாவம்.’’

‘‘என்னடாப்பா யோசிக்கிறாய் சொல்லு...’’

‘‘ஒண்டுமில்லை. சாதகம் பொருந்தினால் செய்யிறது தானே...’’

‘‘இதைக் கேட்க நான் உன்னட்டை வரேல்லை. நான் சில விஷயங்கள் கேள்விப்பட்டனான். அது உண்மையோ என்று அறியத்தான் வந்தனான். உன்ரை கதையிலை இருந்து அறிஞ்சிட்டன். நான் வாறன்’’ என்றார் சிவசுந்தரம்.

‘‘வந்தனீங்கள் தேநீர் குடிச்சிட்டுப் போங்கோ.’’

‘‘வேலாயுதம் உன்னை எனக்கு இருபது வருடங்களாகத் தெரியும். உன்னட்டை நான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கக்கூடாது’’ என்ற சிவசுந்தரம் வேலாயுதபிள்ளையின் மனைவி கொடுத்த தேநீரை வாங்கிக் குடித்துவிட்டுச் சென்றார்.

மறுநாள் சிவசுந்தரமூர்த்தி ஆத்திரத்துடன் வேலாயுதபிள்ளையின் வீட்டுக்கு வந்தான். ‘‘நீங்கள் எல்லாரும் என்னை மடையன் என்று நினைத்துக்கொண்டிருக்கிறியள். நேற்று உன்ரை வீட்டை வந்த சிவசுந்தரத்திற்கு இல்லாதது பொல்லாததுகளைச் சொல்லி மகளின்ரை சம்மந்தத்தைக் குழப்பிப் போட்டாய். நீ தணிகாசலம், தனபாலசிங்கம் இன்னும் நாலைந்து பேருக்குத்தான் இந்த ஊர் சொந்தம் என்று நினைச்சிட்டியளோ...? ஊர்ச்சனத்தை ஏமாற்றி காசடிக்கிறத்தோடை நில்லாமல் உங்களை மதிக்காதவன்களின்ரை வாழ்க்கையையும் கெடுக்கிறியள்’’ என்றவாறு வேலாயுதபிள்ளையைத் தள்ளி விழுத்தி அடித்தார்.

அன்று இரவு காவல் துறையினர் வேலாயுதபிள்ளையை சிவசுந்தரமூர்த்திக்கு அடித்ததாகக் கைது செய்தனர். விக்னேஸ்வரமூத்தி வேலாயுதபிள்ளையைப் பிணை எடுத்தார்.

மறுநாள் வேலாயுதபிள்ளை சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்று தனது இளைய மகனின் சாதகத்தைக் கொடுத்துவிட்டுச் சொன்னார்; ‘‘நான் கூடாத காரியங்கள் எவற்றையும் செய்வதில்லை. எனது இளைய மகன் பொறியியலாளராக வெளிநாட்டில் வேலை செய்வது உங்களுக்குத் தெரியும். விரும்பினால் சாதகத்தைப் பாருங்கோ. உங்கடை அடாவடித்தனங்களைப் பற்றியும், உங்கள் மகளின்ரை திமிர்க் குணத்தைப் பற்றியும் எனக்கு நன்கு தெரியும். நீங்கள் இருவரும் திருந்துவீர்கள் என்ற நம்பிக்கையிலை தான் என்ரை மகன்ரை சாதகத்தைத் தாறன். சிவசுந்தரம் எனது வீட்டுக்கு வந்தது உண்மைதான். ஆனால் நான் உங்களைப்பற்றி எதுகும் சொல்லவில்லை’’ என்றார் வேலாயுதபிள்ளை.

157. திறன்அல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து

அறன்அல்ல செய்யாமை நன்று.

தீங்குகளைப் பிறர் தனக்குச் செய்தாலும், அதனால் அவர்களுக்கு வரும் துன்பத்திற்காக வருந்தி, அறம் அல்லாதவற்றை செய்யாமல் இருப்பதே நன்று.

வென்று மற

சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்கு வேலாயுதபிள்ளை சென்றபோது சிவசுந்தரமூர்த்தி அங்கு இருக்கவில்லை. வேலாயுதபிள்ளையைக் கண்ட கஜேந்தினி இன்முகத்துடன் அவரை வரவேற்றார்.

''வாருங்கோ மாமா... உள்ளுக்கு வந்து கதிரையில் இருங்கோ...''

''அப்பா எங்கை பிள்ளை?''

''அவர் வெளியிலை போட்டார். வந்திடுவார் இருங்கோ... தேநீர் கொண்டுவாறன்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள் கஜேந்தினி. கஜேந்தினி உள்ளே சென்ற சில நிமிடங்களில் அவளது தாய் வந்தாள்.

''இருங்கோ வேலாயுதண்ணை. வந்திடுவார்...'' என்று நிறுத்தியவள் சில நிமிடங்களின் பின்பு சொன்னாள்; ''இவரைப்பற்றி உங்களுக்குத் தெரியும் தானே. ஒருத்தற்ரை சொல்லும் கேளார். யார் சொன்னாலும் நம்பமாட்டார். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்று நிற்பார். உங்களைப்பற்றி எனக்குத் தெரியும். நீங்கள் பிழைவிடமாட்டியள் என்றாலும் இவற்ரை அகந்தையான பேச்சாலும், திமிரான நடத்தையாலும் கோபம் வராதவர்களுக்கும் கோபம் வந்துவிடும். அன்றைக்கு உங்களுக்கு அடிச்சுப்போட்டு மறுநாள் காவல் துறையில் புகாரிட்டதாலை உங்களைக் கைதுசெய்து இரண்டு நாட்கள் அடைத்து வைத்திருந்தவங்கள். அதையும் மறந்து மன்னித்து உங்கடை பிள்ளையின்ரை சாதகத்தைத் தந்தனீங்கள்'' அழுதாள்.

''சீச்சீ... இதுக்கெல்லாம் அழுறதே. எனக்கு உங்கடை கணவன் இந்த ஒரு தீங்கையே செய்தவர். நான் வேலையாலை ஓய்வு பெற்றபோது ஓய்வூதியக் கிளையில் வேலை செய்த உங்கள் கணவன் எனது சுயவிபரக் கோவையை எடுத்து மறைத்து வைத்துவிட்டார். பிறகு நான் விநாயகரத்தினத்தைப் பிடித்து ஆயிரம் ரூபா கொடுத்துத்தான் சுயவிபரக் கோவையை எடுத்தனான். அதைவிட கோயில் கட்டட நிதியிலையும், வாசிகசாலைக் கட்டட நிதியிலையும் நான் காசு களவாடியதாய் கூட்டத்திலை சொன்னவர்... பொய்யானவற்றையெல்லாம் சொன்னதாலும், செய்ததாலும் எனக்கு எந்த விதமான நட்டமும் ஏற்படவில்லை. அவருக்குத்தான் பிரச்சினைகள் ஏற்பட்டது.''

அப்போது கஜேந்தினி தேநீருடன் வந்தாள். வேலாயுதபிள்ளை அவள் கொடுத்த தேநீரைக் குடித்துக்கொண்டு இருக்கும்போது சிவசுந்தரமூர்த்தி வந்தார். ''குருக்களிட்டை நீங்கள் தந்த சாதகத்தைக் கொடுத்தனான். தாலிப்பொருத்தம் இல்லாட்டில் தாலியைக் கொடியிலை

கோர்க்காமல் பிள்ளையாற்றை உருவத்தைப் பவுணாலை செய்து கொடியிலை கோர்த்துக்கட்டலாமாம்.''

''திருமணப் பொருத்தத்திலை தாலிப் பொருத்தம் மிகவும் முக்கியமானது. தாலிப் பொருத்தமில்லாட்டில் பெண் விதவையாவாள். இல்லாவிட்டால் புருசனை விட்டுப் பிரிந்திருப்பாள் என்று மனையடிச் சாத்திரம் சொல்கிறது. உங்களுக்கு இருக்கிறது ஒரே ஒரு மகள். நாளைக்கு அவள் புருசனோடை பிரச்சினைப்பட்டு பிரிஞ்சு வந்திட்டாள் என்றால் அதைவிடப் பெரிய துன்பம் வேறு ஒன்றுமில்லை. இந்தச் சம்மந்தத்தைக் கைவிடுவம்'' என்றார் வேலாயுதபிள்ளை.

சிவசுந்தரமூர்த்திக்கு அவரது வார்த்தைகள் சொல்லொனாத் துக்கத்தைக் கொடுத்தன. குருக்கள் சாதகத்தைக் கொடுத்துவிட்டுச் சொன்ன வார்த்தைகள் அவரின் காதில் ஒலித்தன. ''சிவா தாலிப்பொருத்தம் மிகவும் முக்கியமானது. ஆனால் தாலிப்பொருத்தம் இல்லாவிட்டால் தாலியைக் கொடியில் கோர்க்காமல் கட்டலாம். அதுக்கு மாப்பிளையின் பெற்றோர் சம்மதிக்கமாட்டினை. அதோடை வேலாயுதம் சாத்திரம், சம்பிரதாயங்களிலை அதீத நம்பிக்கை வைத்திருப்பவர். அவருக்கு ஓரளவு சோதிடம் தெரியும். அதனால் சம்மதிப்பாரோ தெரியாது. தாலியைக் கோர்க்காமல் கொடி கட்டலாமென்று நான் கூறியதாகச் சொன்னால் உடனே என்னிடம் வந்து எந்தச் சோதிடப் புத்தகத்தில் அது உள்ளது என்று கேட்பார். இவையெல்லாம் புத்தகங்களிலை இல்லை. மரபு வழியாக வந்தவை. ஆனால் இதை வேலாயுதம் நம்ப மாட்டுது.''

''ஊரிலை எத்தனையோ மாப்பிளைமார் இருக்கினை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவரை கடவுள் தீர்மானித்து வைத்திருப்பார். உரியகாலம் வர அவர் வலியத்தேடி வருவார். நாங்கள் ஆசைப்பட்டாப் போலை எதுகும் நடக்காது'' என்றார் வேலாயுதபிள்ளை.

''வேலாயுதம், அப்பா தேடி வைத்த சொத்துக்கள் பல இலட்ச ரூபா பெறுமதியானவை என்ற திமிராலும், உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கிறேன் என்ற அகந்தையாலும் உனக்குப் பல தீங்குகளைச் செய்துவிட்டேன். நீ கோபப்படாது பொறுமையாய் இருந்தாய். அதோடை நான் செய்த தீமைகள் அனைத்தையும் மறந்துவிட்டாய். அதேபோல் எனது மகளுக்கு நல்லதொரு இடத்தில் திருமணம் செய்துவை'' என்று அழுதார் சிவசுந்தரமூர்த்தி.

158. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்

தகுதியான் வென்று விடல்.

செருக்கினால் தீங்கு செய்தவரைத் தாம் தம்முடைய பொறுமையினால் பொறுத்து மறந்துவிடல் வேண்டும்.

தூயவர்

விக்னேஸ்வரமூர்த்தியின் மகள் கௌதமி. சுமாரான அழகுடையவள். விக்னேஸ்வரமூர்த்தியும் அவரது மனைவியும் சிவந்த நிறமுடைய போதும் கௌதமி சற்றுக் கறுப்பு நிறமுடையவளாக இருந்தாள். விக்னேஸ்வரமூர்த்தியின் ஏனைய பிள்ளைகள் யாபேரும் சிவந்த நிறமுடையவர்கள். விக்னேஸ்வரமூர்த்தியின் தந்தையின் தாயார் கறுப்பு நிறமுடையவர். அவரின் நிறத்தில் பிறந்த கௌதமி அவரைப் போலவே இருந்தாள்.

ரவீந்திரன் பாடசாலை விடயமாக அடிக்கடி விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்குச் செல்வான். அநேகமான நாட்களில் இருவரும் பாடசாலையில் இருந்து வீட்டுக்கு வர இரவு எட்டு மணியாகிவிடும். அதன் பின் ரவீந்திரன் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்து அவருடன் கதைத்துவிட்டுச் செல்ல பத்து மணியாகிவிடும். சில நாட்களில் விக்னேஸ்வரமூர்த்தி வற்புறுத்தி அவனுக்கு இரவுச் சாப்பாட்டைக் கொடுப்பார்.

விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு ரவீந்திரன் செல்வது சிவசுந்தரமூர்த்திக்குப் பிடிப்பதில்லை. விக்னேஸ்வரமூர்த்தி தனது மகளுக்கு அவனைத் திருமணம் செய்யத்தான் வீட்டுக்குக் கூட்டிச்செல்கிறார் என நினைத்தார் சிவசுந்தரமூர்த்தி. தான் கலியாணம் பேசியபோதும் விக்னேஸ்வரமூர்த்தியிடம் சென்று ரவீந்திரனைக் கேட்டுச் சொல்லும்படி கேட்டபோதும் விக்னேஸ்வரமூர்த்தி அக்கறைப்படாததற்கு காரணம் அதுவாகத்தான் இருக்கும் என்று கற்பனை பண்ணினார் சிவசுந்தரமூர்த்தி.

அன்று அவர் ரவீந்திரனின் தந்தையான தனபாலசிங்கத்தைக் கண்டு கதைத்தார் ‘‘ரவீந்திரனுக்கு முப்பது வயதிருக்குமென்று நினைக்கிறன். இன்னும் ஏன் கட்டிக் கொடுக்காமல் வைத்திருக்கிறீர்கள். விக்னேஸ்வரமூர்த்தியின்ரை போக்கைப் பார்த்தால் ரவியை தன்ரை கறுத்தப் பெட்டைக்குக் கட்டி வைக்கப் போறார் போலை தெரியுது. மூன்று பெண் பிள்ளைகள் இருக்கிறது. என்ன வைச்சிருக்கிறார். இப்ப ரவிக்கு சீதனமாக பதினைந்து இருபது இலட்சம் வாங்கலாம். நீ அவனைக் கட்டுப்படுத்தி வை’’ என்றார்.

தனபாலசிங்கம் பொறுமையாக யாவற்றையும் கேட்டுவிட்டுச் சொன்னார் "விக்னேஸ்வரமூர்த்தியின் மகளைச் செய்ய ரவீந்திரன் கொடுத்து வைத்திருக்க வேண்டும். கறுப்புச் சிவப்பிலை ஒண்டுமில்லை. குடும்பம் நல்லதாய் இருக்க வேண்டும். குணவதியாய்ப் பெண் இருக்க வேண்டும். இரண்டும் இருக்கு. எனக்கு விருப்பம். ரவி விரும்பினால் செய்யட்டும்" என்றார்.

தனபாலசிங்கம் இப்படிக் கூறுவார் என சிவசுந்தரமூர்த்தி எதிர்பார்க்கவில்லை. அதிர்ச்சியுடன் மெல்ல நழுவினார்.

அன்று சனிக்கிழமை. விநாயகரத்தினம் அவரது வீட்டுக்கு வந்தான். இருவரும் நன்றாகக் குடித்துவிட்டு விக்னேஸ்வரமூர்த்தியைச் சந்திக்க பாடசாலைக்கு வந்தனர். சிவசுந்தரமூர்த்தியுடன் வரும் விநாயகரத்தினத்தை தெரியாத போதும் இருவரையும் வரவேற்று அமரச்சொன்னார் விக்னேஸ்வரமூர்த்தி.

"இவர் என்னுடன் வேலை செய்பவர். இவரது மகனுக்கு தரம் ஆறில் அனுமதி வேணும்" என்றார் சிவசுந்தரமூர்த்தி.

"வருட நடுப்பகுதியில் நாம் பிள்ளைகளை பாடசாலையில் அனுமதிப்பதில்லை. அதைவிடத் தரம் ஆறில் அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தால் தான் அனுமதிப்போம். உங்கள் நண்பரின் மகன் அனுமதிப் பரீட்சை எழுதவில்லை."

விநாயகரத்தினத்திற்குத் தான் பெரிய மனிதன் என்பதைக் காட்டக் கூட்டிவந்த சிவசுந்தரமூர்த்திக்கு விக்னேஸ்வரமூர்த்தியின் பதில் அவமானத்தையும் கோபத்தையும் கொடுத்தது.

"பெரிய சட்ட நுணுக்கங்களோடை தான் பாடசாலையை நடத்துகிறீர்கள். இந்த வருடம் நடேசலிங்கத்தின்ரை மகனை பங்குனி மாதம் அனுமதிக்கேல்லை..."

"அவன் அனுமதிப் பரீட்சையில் சித்தியடைந்தவன். மூன்று மாதமாக நோய்வாய்ப்பட்டிருந்தவன்..."

விக்னேஸ்வரமூர்த்தி கதைத்துக்கொண்டிருக்கும் போது குறுக்கிட்டார் சிவசுந்தரமூர்த்தி "ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காரணம் வைத்திருப்பீர்கள். நடேசலிங்கம் பெரிய வியாபாரி. வீட்டை கொண்டுவந்து காசைத் தள்ளியிருப்பான்... கதைக்கிறது தான் அரிச்சந்திரன் மாதிரி. செய்யிறதெல்லாம் சகுனி வேலை. நான் என்னுடைய மகளுக்கு ரவீந்திரனைக் கேட்டுச் சொல்லச் சொன்னனான். நீங்கள் திட்டமிட்டு செயலாற்றிவிட்டு இப்ப உங்கடை மகளுக்குச் செய்ய யோசிக்கிறியள்..."

விக்னேஸ்வரமூர்த்தி திகைத்துப் போனார். அப்படியான ஓர் எண்ணம் இதுவரை அவரது மனதில் எழுந்ததில்லை. சிவசுந்தரமூர்த்தியைப் பார்த்தார். அவனது முகம் அளவுக்கதிகமாகச் சிவந்திருந்தது. தொடர்ந்து பலமாகப் பேசிக்கொண்டிருந்தான் ‘‘ஊரிலை செல்வாக்குள்ள நாலைந்து பேரை மடக்கி வைச்சுக்கொண்டு உங்கடை எண்ணத்திற்கு பாடசாலையையும், கோயிலையும் நடத்துகிறீர்கள். உங்களுக்கு வசதியான நேரங்களிலை தான் கோயிலில் பூசை செய்கிறீர்கள். அந்த நேரம் எல்லாருக்கும் வசதிப்படுமே. மஹா கணபதிக்கும் சட்டம் வைக்கிறியள். கெதியாய் அழியப்போறியள். கல்விப் பணிப்பாளரையும் கையுக்கை வைத்திருக்கிறீர்கள். அவர் பதவி உயர்வோடை வாற மாதம் கல்வி அமைச்சுக்குப் போறாராம். அவற்ரை இடத்திற்கு என்னோடை படிச்ச பொன்னம்பலம் வாறார். அதுக்குப் பிறகு செய்யிறன் வேலை’’ என்று கூறிவிட்டு எழுந்து நடந்தார் சிவசுந்தரமூர்த்தி.

விக்னேஸ்வரமூர்த்தி அவர் செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவனது அறியாமையை நினைக்க அவருக்குச் சிரிப்பு வந்தது.

159. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்

இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

வரம்பு கடந்து கொடிய சொற்களைப் பேசுபவர்களைப் பொறுத்துக்கொள்பவர், துறந்தவர்களைப் போல தூய்மையானவர் ஆவர்.

நோற்பாரில் பெரியர்

மனக்கவலை ஏற்படும் போது விக்னேஸ்வரமூர்த்தி நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி கோயிலுக்கு வந்து பிரார்த்தனை செய்வார் ‘‘நான் அறியாமல் ஏதாவது பிழை செய்திருந்தால் என்னை மன்னித்தருளல் வேண்டும். நான் பிழை செய்யாது விட்டால் என்னைத் தவறாக நினைத்தவர்கள் எனது உண்மை நிலையை உணர அருளல் வேண்டும்’’ என்று நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதியை வேண்டுவார்.

அன்று சிவசுந்தரமூர்த்தி வந்து உண்மைக்கு மாறானவற்றைக் கூறியபோது பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த

விக்னேஸ்வரமூர்த்தி, அவன் சென்றதும் தான் அறியாமல் ஏதாவது தவறு செய்திருப்பேனோ என்று நினைத்துப் பார்த்தார். ‘‘ரவீந்திரன் என்மீது மதிப்பு வைத்துள்ள சிறந்த ஆசிரியர். அதுபோல் நான் நம்பிக்கைக்குரியவனாக ரவீந்திரனை நினைத்துப் பழகுகிறேனே தவிர சிவசுந்தரமூர்த்தி சொன்னது போல் எனது மகளை அவனுக்குத் திருமணம் செய்ய எள்ளளவும் நினைக்கவில்லையே’’ என்று நினைத்தார். உண்மைக்குப் புறம்பான வார்த்தைகள் பலவற்றை பலரும் கூறக்கேட்டுப் பழக்கப்பட்ட விக்னேஸ்வரமூர்த்திக்கு மகளின் விடயம் சற்று மனவருத்தத்தைக் கொடுத்தது. அதனால் பாடசாலையில் இருந்து நேரே மஹா கணபதி ஆலயத்திற்குச் சென்று வணங்கினார்.

கோயிலில் நின்றோர் ஆச்சரியத்துடன் விக்னேஸ்வரமூர்த்தியைப் பார்த்தனர். அவர் ஒருநாளும் கோயிலுக்கு மேல் சட்டை அணிந்து வருவதில்லை. அத்துடன் நீளக்கால் சட்டையுடன் வருவதும் இல்லை. காலணியைக் கழற்றிவிட்டு கால்கழுவி மஹா கணபதியை வணங்கும் விக்னேஸ்வரமூர்த்தியைக் கண்ட கோயில் குருக்கள் வீபூதியுடன் வந்தார். விக்னேஸ்வரமூர்த்தி குருக்களிடமிருந்து வீபூதியை வாங்கிப் பூசிவிட்டுச் சொன்னார் ‘‘மனதிற்கு கொஞ்சம் இடைஞ்சலாக இருந்தது. மஹா கணபதியை வணங்கினால் தீருமென்று வந்தேன். பாடசாலையில் இருந்த எனக்கு வீட்டுக்குச் சென்று உடை மாற்றத் தோன்றவில்லை. உங்கள் கையால் வீபூதி பெற்றுப் பூசியதன் மூலம் மனச்சாந்தி கிடைத்துவிட்டது’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘அப்படி என்னவாக இருக்கும். எதற்கும் கலங்காத விக்னேஸ்வரமூர்த்தியின் மனதிற்கு துன்பம் விளைவித்த செயல் என்னவாக இருக்கும்’’ என்று யோசித்தார் குருக்கள்.

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதியை வணங்கிவிட்டு திரும்பிப் பார்த்தார் விக்னேஸ்வரமூர்த்தி. வழமையாக அந்நேரம் அரச மரத்தின் கீழ் இருக்காத சுவாமிகள் அன்று இருந்தார். விக்னேஸ்வரமூர்த்தி அவரின் அருகே சென்று அவரது பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டு அவரின் அருகில் அமர்ந்தார்.

சுவாமிகளின் முகத்தில் அமைதியான புன்னகை தவழ்ந்தது ‘‘ஒருபோதும் இப்படியான கோலத்தில் வராத நீ இன்று வந்தது எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. ஒரு காரணமில்லாது காரியமாகாது. நாம் கெட்டவர்கள் என்று நினைத்து ஒதுக்கி வைத்தவர்களது கோபத்தாலும் பொறாமையாலும் உதிரும் கொடிய வார்த்தைகள் கூட நற்பயனைத் தரும். ஒருவன் காரணமில்லாமல் பழிச்சொற்களைக் கூறினால் அவை நிகழ்ந்துவிடும் வாய்ப்பு உருவாகும். நேர்மையாக நடப்பவன். பிறரின் கொடுமையான

சொற்களைப் பொறுத்து மன்னிப்பவன். உணவை ஒறுத்து நோன்பு செய்பவனை விடப் பெரியவன்'' என்றார் சுவாமிகள்.

''நான் யாவற்றையும் பொறுத்துக்கொண்டேன். ஆனால் நான் மனதில் நினைத்துப் பாராத ஒன்றை சிவசுந்தரமூர்த்தி கூறினான். நான் ரவீந்திரனை எனது மகளுக்குக் கட்டுவதற்காகத் தானாம் தன்ரை மகளுக்கு அவனைத் திருமணம் பேசியபோது தடுத்தேன் என்கிறான். அப்படியான எண்ணம் இப்போதும் எனது மனதில் இல்லை.''

சுவாமியார் மீண்டும் புன்னகைத்தார். ''எல்லாம் பூர்வ புண்ணியப் பயன். நாம் நினைக்காவிட்டாலும் நல்ல காரியங்கள் பலவும் நடக்கத்தான் செய்கின்றன. தனபாலசிங்கம் சென்றவாரம் வந்து என்னுடன் கதைத்தார். சிவசுந்தரமூர்த்தி நீங்கள் ரவீந்திரனை தனது மகளுக்குச் செய்யத் திட்டமிட்டிருப்பதாகவும், அதைச் செய்ய வேண்டாமென்றும் கூறினாராம். தனபாலசிங்கம் உங்கள் வீட்டில் திருமணம் செய்யத் தான் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். பிறகேன் மனக்கவலை. நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி வல்லவர். நாம் நினைக்காவிட்டாலும் தனது பக்தர்களின் நிலைமைகளை உணர்ந்து நல்லவர்கள் மூலமாகவோ கெட்டவர்கள் மூலமாகவோ ஆகவேண்டியவற்றைச் செய்கிறார். உமது மகளின் பல்கலைக்கழகப் படிப்பு முடிந்ததும் ரவீந்திரனுக்குத் திருமணத்தைச் செய்துவையும். கெட்ட செயல்கள் மூலம் ஒருவனுக்கு பெரும் நன்மைகள் வந்துசேரும் என்பதற்காகத்தான் நீதி நூல்கள் பொறுமையைப் பற்றி வற்புறுத்திக் கூறுகின்றன. உனது பொறுமை உனக்கு எவ்வளவு பெரிய அதிஸ்டத்தைக் கொடுத்திருக்கிறது பார்த்தாயா'' என்றார் சுவாமிகள். விக்னேஸ்வரமூர்த்தி பூரித்துப் போனார்.

160. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்

இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

உணவு உண்ணாமல் நோன்பு இருப்பவர், பிறர் சொல்லும் தீய சொற்களை பொறுக்கும் பொறுமையானவருக்கு அடுத்த பெரியவர் ஆவார்.

நெறி

தனபாலசிங்கம் தனது மனைவியுடன் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தார். விடியற்காலை ஏழு மணிக்கெல்லாம் விக்னேஸ்வரமூர்த்தி பாடசாலைக்குப் புறப்பட்டு விடுவார். பின்பு வீட்டுக்கு வர எப்படியும் இரவு எட்டு மணியாகும். பாடசாலையில் வேலை செய்யும் சிற்றூழியனான பாலசிங்கம் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்று பகல் உணவை எடுத்து வருவான். இவ்விடயங்களை அறிந்திருந்த தனபாலசிங்கம் விடியற்காலை ஆறு மணிக்கு மனைவியுடன் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்துவிட்டார்.

விடியற்காலையில் தனபாலசிங்கத்தையும் மனைவியையும் எதிர்பாராத விக்னேஸ்வரமூர்த்தி சற்றுத் தடுமாறிப் போனார். எனினும் சமாளித்துக்கொண்டு ‘‘வாருங்கோ வாருங்கோ’’ என அன்பொழுக வரவேற்று நாற்காலியில் இருத்தினார்.

‘‘இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு சிவசுந்தரமூர்த்தி என்னைக் கண்டு மகன்ரை கலியாணப் பிரச்சினையைப் பற்றிச் சொன்னான். அறிந்திருப்பியள் என்று நினைக்கிறன். பணம், பொருள்களெல்லாம் இன்றைக்கு வரும் நாளைக்குப் போகும். நான் ஒழுங்காகவும் மற்றவர்களின் பொருட்களில் ஆசைப்படாமலும் பொறாமைப்படாமலும் வாழ்ந்தபடியால் தான் எனது மகளை வீடு தேடிவந்து பெண் கேட்டவை. என்னைப் போல நீங்களும் நல்ல முறையில் வாழ்ந்தமையால் தான் இன்றைக்கு நான் உங்கடை வீடுதேடி வந்திருக்கிறன்...’’ என்று நிறுத்திய தனபாலசிங்கம் சிறிது நேரம் பேசாமல் இருந்தார். விக்னேஸ்வரமூர்த்திக்கு அவர் வந்த விடயம் விளங்கியபோதும் அவர் எதுகும் கதைக்கவில்லை.

‘‘ஸ்ரீனிவாசன் சுவாமிகளோடு நான் இதைப்பற்றிக் கதைத்தனான். அவர் சொன்னார் எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணமானது அழுக்காறு என்கின்ற பொறாமை. அடுத்தவனது உயர்ச்சியை, நல்வாழ்வை எவன் ஒருவன் விரும்பாமல் இருக்கிறானோ அவன் ஒரு பொழுதும் இன்பமாக இருக்கவும் மாட்டான். நல்வாழ்வு வாழவும் மாட்டான். சிவசுந்தரமூர்த்தி தணிகாசலத்தின் மீது கூட பொறாமைப்படுகிறான். தணிகாசலம் ஏழையென்றாலும் மற்றையோர் மீது பொறாமை கொள்ளாததால் எல்லோரும் அவனை மதிக்கின்றனர். அதைவிட அவனிடம் என்ன இருக்கிறது. பணம் இருக்கா?, பொருள் இருக்கா?, காணி பூமி இருக்கா? இல்லை உத்தியோகமிருக்கா...? இவையெல்லாவற்றையும் வைத்திருக்கின்ற சிவசுந்தரமூர்த்தி தணிகாசலத்தின் மீது பொறாமைப்படுகிறான். அதேபோல் விக்னேஸ்வரமூர்த்தியின் உயர்வையும் அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதனால் தான் விக்னேஸ்வரமூர்த்தியைப் பற்றித் தவறாகப் பேசுகிறான். நீ எதற்கும் யோசிக்க வேண்டாம். உனது மகனுக்கு பெரியதொரு எதிர்காலம் இருக்கிறது. உடனே சென்று

விக்னேஸ்வரமூர்த்தியோடு கலந்துபேசி திருமணத்தை முடி என்றார். அதனால் தான் நானும் மனைவியும் வந்தோம்'' என்றார் தனபாலசிங்கம்.

''நானும் சுவாமிகளுடன் கதைத்தேன். அவர் உங்களுடன் கதைத்ததாகச் சொன்னார்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''ஒருவன் தன் நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பை தனது வாழ்க்கை நெறியாகக் கொள்வானானால் அவனுக்கு எந்தக் குறையும் வராது என்பதற்கு உதாரணமாக நீங்கள் வாழ்ந்து வருகிறீர்கள். அதனால் தான் சிவசுந்தரமூர்த்தி அழகில்லாத பெண் என்று உங்கள் மகளைக் குறை கூறியபோதும் விரும்பி வந்திருக்கிறேன். உங்கள் சம்மதத்தைச் சொன்னீர்களானால் மகிழ்ச்சியடைவேன்'' என்றார் தனபாலசிங்கம்.

''உத்தியோகம் ஒன்றை மட்டும் நம்பித்தான் நான் வாழ்ந்து வருகிறேன். பாடசாலையை நிர்வகிக்கவே எனக்கு நேரம் போதாமல் இருக்கிறது. அதனால் வேறு தொழில்கள் எதையும் செய்து சம்பாதிக்கவில்லை. இன்னும் இரண்டு பெண்பிள்ளைகள் எனக்கு இருக்கிறார்கள். பெரிதாக என்னால் சீதனம் கொடுக்க முடியாது'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

சீதனத்தைப் பற்றி நான் கேட்கவில்லை. அழுக்கில்லாத நல்ல மனதையுடைய ஒருவனுக்கு எல்லாச் செல்வமும் தேடிவரும். உள்ளத்தில் பொறாமை இல்லாத இயல்பை ஒழுக்கநெறியாகக் கொண்டு வாழும் உங்களின் மகளை மருமகளாக அடைய நான் பாக்கியம் செய்திருத்தல் வேண்டும்'' என்றார் தனபாலசிங்கம்.

161. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.

ஒருவன் தனது நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பை ஒழுக்க நெறியாகக் கொள்ளல் வேண்டும்.

பேறு

மணிவண்ணன் பெரும்வர்த்தகன். பட்டணத்தில் இருந்த அவனது வியாபார நிலையம் பலதுறைகளிலும் பல்கிப் பெருகி இருந்தது. நாவலடிக் கிராமத்தில் விளையும் தானியங்கள் முழுவதையும் அவனே கொள்வனவு செய்தான். அதைவிட ஏனைய பல கிராமங்களில் விளையும் விவசாயப் பொருட்கள் அனைத்தையும் அவனுக்கே விவசாயிகள் விற்றனர். ஆரம்பத்தில் கருணாகரனே நாவலடிக் கிராமத்தில் விளையும் விவசாயப் பொருட்களைக் கொள்வனவு செய்து வந்தான். அவன் கொள்வனவில் பல தில்லு முல்லுகள் செய்ததால் கிராம மக்கள் எவரும் பொருட்களைக் கொடுப்பதில்லை. அத்துடன் விவசாய உள்ளீடுகளையும் தமக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் இதர பொருட்களையும் மணிவண்ணனிடம் கொள்வனவு செய்ததால் கருணாகரன் மிகவும் கஸ்ரப்பட்டான். அதனை அறிந்த மணிவண்ணனுக்கு கவலையாக இருந்தது.

ஒருநாள் மணிவண்ணன் நாவலடிக் கிராம மக்களைச் சந்தித்துக் கதைத்தான் ‘‘முன்பு உங்களது விவசாயப் பொருட்களை கருணாகரனுக்கே விற்று வந்தீர்கள். தற்பொழுது கருணாகரனுக்கு யாரும் பொருட்களைக் கொடுப்பதில்லை. அதனால் அவன் தனது வியாபாரத்தை நிறுத்தவேண்டிய நிலைக்கு வந்துள்ளான். அவனை நம்பி ஏராளமான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்படக் கூடாது. எனவே உங்களின் விளைபொருட்களை இம்முறை கருணாகரனுக்குக் கொடுங்கள்’’ என்றான்.

‘‘உங்களின் நல்ல குணத்தை உங்கள் வார்த்தைகள் எமக்குப் புலப்படுத்தகிறது. அடுத்தவர்களின் முன்னேற்றத்தில் பொறாமை கொள்ளாத ஒருவன் பெறத்தக்க மேம்பாடான பேற்றைப் பெறுவான். பொறாமை தான் ஒருவனின் முன்னேற்றத்தைக் கெடுக்கிறது. நீதியான முறையில் சம்பாதிக்கும் சொத்துத்தான் நிலைத்திருக்கும். இன்பத்தைக் கொடுக்கும். கருணாகரன் மற்றைய வியாபாரிகளை விட தான்தான் பெரியவனாக வேண்டுமென்று நினைத்தான். அப்படி நினைத்து பல தில்லு முல்லுகளைச் செய்தான். அதனால் அவன் விரைவாக முன்னேறினான். அவனது தில்லுமுல்லுகளை அறிந்த மக்கள் அவனுக்கு தமது விளைபொருட்களைக் கொடுக்காமல் விட்டுவிட்டனர். நீதியான முறையில் நடக்கும் உங்களுக்குப் பொருட்களைத் தந்தனர். எமக்கு யார் மீதும் விருப்போ வெறுப்போ கிடையாது. யார் எம்மை மதித்து நீதியான முறையில் எமது விளைபொருட்களைக் கொள்வனவு செய்கிறார்களோ அவர்களுக்கே கொடுப்போம்...’’ என்றார் தணிகாசலம்.

‘‘இந்த விடயத்தில் நீங்கள் வற்புறுத்தக்கூடாது. தணிகாசலம் சொன்னது போல் கஸ்ரப்பட்டு உழைத்த விவசாயிகள் தமது உழைப்பை உறிஞ்சுபவனுக்கு தமது விளைபொருட்களைக் கொடுக்க

மாட்டார்கள். நியாயமான முறையில் யார் கொள்வனவு செய்தாலும் நாம் கொடுப்போம்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''கருணாகரன் கஸ்ரப்படுகிறான் என்பதற்காகச் சொன்னேன். அவருடைய கஸ்ரத்திற்குக் காரணம் ஏனைய வியாபாரிகள் மீதுள்ள பொறாமை என்பது எனக்குத் தெரியும்'' என்றான் மணிவண்ணன்.

''கருணாகரனின் நிலமையை நினைக்க எமக்கும் கவலையாகத்தான் உள்ளது. ஒரு காலத்தில் எமது கிராம விவசாயிகளுக்கு கைகொடுத்தவன் அவன்தான். எனவே அவன் நீதியான முறையில் கொள்வனவு செய்தால் நாம் மீண்டும் அவனுக்குப் பொருட்களைக் கொடுப்போம்'' என்றார் தணிகாசலம்.

இதை அறிந்த கருணாகரன் தணிகாசலத்திடம் வந்தான். ''அண்ணை நான் இனிமேல் பிழைவிடமாட்டன். என்னுடைய பேராசையாலை தான் எல்லாம் நடந்தது. அடுத்தவனை விட வசதியாக இருக்க வேண்டுமென்ற அவாவால் தான் மணிவண்ணன் மீது பொறாமைப்பட்டு தீய செயல்களில் ஈடுபட்டுவிட்டேன். இனிமேல் அப்படிச் செய்யமாட்டேன். எனக்கும் பொருட்களைத் தாருங்கள்'' என்றான் கருணாகரன்.

''ஒருவருடைய நடத்தை தான் மக்களைக் கவர்வது. நீ நல்ல முறையில் நட. யாவும் நன்றாக நடைபெறும்'' என்றார் தணிகாசலம்.

162. விழுப்பேற்றின் அ.ஃதுஒப்பது இல்லை யார்மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.

யாரிடத்தும் பொறாமை கொள்ளாமல் இருத்தலே ஒருவன் பெறத்தக்க பேறுகளிலெல்லாம் மேலானது. அதற்கொப்பானது வேறு இல்லை.

ஆக்கம்

சிவசுந்தரமூர்த்தியின் கீழ் எழுதுவினைஞனாக வேலை செய்பவன் ஞானப்பிரகாசம். கடமை தவறாதவன். எந்தச் சிக்கலான விடயங்களையும் மிகவும் இலகுவாகத் தீர்த்து வைப்பவன். சகல கோவைகளையும் படித்தவன். அதனால் அவ் அலுவலகத்தில்

கோவைகள் சம்பந்தமாக ஏதாவது சந்தேகங்கள் எழுந்தால் அவனிடம் வந்துதான் கேட்பார்கள். சிவசுந்தரமூர்த்தி அவ் அலுவலகத்தின் நிர்வாகக் கிளைக்கு தலைமை அதிகாரியாக இருந்தார். வேலைகள் எதுகும் செய்வதில்லை. அவரது வேலைகள் முழுவதையும் ஞானப்பிரகாசமே செய்வான். இருந்த போதும் அவர் அவனை மதிப்பதில்லை. தனது வீட்டு வேலைக்காரனைப்போல் நடத்துவார். அதற்குக் காரணம் தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற திமிர். ஞானப்பிரகாசம் நாவலடிக் கிராமத்தைச் சேர்ந்தவன். கணபதி மத்திய மகா வித்தியாலய மாணவன். நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதியின் தீவிர பக்தன். அத்துடன் பரிபாலன சபையின் நிர்வாக உறுப்பினன்.

சிவசுந்தரமூர்த்தி வேலை செய்யும் திணைக்கள உயர் அதிகாரிக்கான பரீட்சை ஒன்று மாவட்ட மட்டத்தில் நடைபெற்றது. அப்பரீட்சைக்கு அத்திணைக்களத்தில் இருந்து ஏராளமான ஊழியர்கள் தோற்றினர் "ஞானப்பிரகாசத்திற்கு என்ன தெரியும் என்று பரீட்சை எழுதினான். இந்தச் சின்ன வேலையிலேயே எவ்வளவு பிழை விடுகிறான். நானென்றபடியால் பொறுத்துக்கொள்கிறேன். வேறு யாராவதாக இருந்தால் எவ்வளவு பிரச்சினைகள் வரும்" என்று நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய மண்டபத்தில் கதைத்துக்கொண்டிருந்தார் சிவசுந்தரமூர்த்தி. அலுவலகத்திலும் பரீட்சை எழுதியவர்களைப் பற்றித் தாழ்வாகக் கதைப்பார். ஞானப்பிரகாசம் எதுகும் கதைக்கமாட்டான். ஏனையோரில் சிலர் சிவசுந்தரமூர்த்தியோடு சண்டைக்குப் போவார்கள். வாய்த்தர்க்கம் சிலவேளைகளில் கைகலப்பாகவும் மாறி உயர் அதிகாரியிடம் விசாரணைக்குச் செல்லுமளவிற்கும் மாறிவிடும்.

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின. அவ் அலுவலகத்தில் ஞானப்பிரகாசம் மட்டுமே பரீட்சையில் சித்தியடைந்ததால் அத்திணைக்களத்தின் உயர் அதிகாரியாக நியமிக்கப்பட்டான்.

ஞானப்பிரகாசம் உயர் அதிகாரியாக நியமிக்கப்பட்டமையை பலரும் பாராட்டினார்கள். நேரிலும், கடித மூலமாகவும் பத்திரிகை மூலமாகவும் பலர் பாராட்டினர். ஆனால் சிவசுந்தரமூர்த்தி அவனைப் பாராட்டவில்லை. அதற்கு மாறாக கேவலமாகக் கதைத்தார் "ஆற்றையன் கையைக் காலைப் பிடித்து வந்திருப்பான். சாதாரணமான அலுவலகத்திலேயே வேலை செய்யத் தெரியாத இவன் மாவட்ட உயர் அதிகாரியாக எப்படி வேலை செய்யப் போறான்..?"

ஞானப்பிரகாசத்திற்குப் பலர் வந்து சிவசுந்தரமூர்த்தி கேவலமாகக் கதைப்பதைப் பற்றிக் கூறிய போதும் அவன் அதைக் கேளாதது போல் நடந்துகொண்டான்.

ஞானப்பிரகாசம் தனது வேலையைப் பொறுப்பேற்றதும் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்திற்கு வந்தான். அப்பொழுது அவ்வூர் மக்கள் அனைவரும் வேலாயுதபிள்ளையின் தலைமையில் திரண்டிருந்து பெருவரவேற்பளித்தனர். குருக்கள் விஷேட பூசை செய்து காளாஞ்சி கொடுத்தார்.

கணபதி மத்திய மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர்கள் சங்கமும் சேர்ந்து ஞானப்பிரகாசத்தை அழைத்துக் கௌரவித்தனர். அக் கௌரவிப்பு விழாவில் பலர் ஞானப்பிரகாசத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசினர். ஞானப்பிரகாசத்தின் முன்நாள் மேலாளர் என்ற வகையில் சிவசுந்தரமூர்த்தியை விழாவுக்கழைத்தும் அவர் அவ்விழாவுக்கு வரவில்லை.

விக்னேஸ்வரமூர்த்தி பாடசாலையின் சார்பில் ஞானப்பிரகாசத்தை வாழ்த்திப் பேசிவிட்டு வாழ்த்துப்பா ஒன்றைக் கொடுத்தார். ஆசிரியர்களும், மாணவர்களும் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும், பழைய மாணவர்களும் ஞானப்பிரகாசத்திற்கு மாலை அணிந்து கௌரவித்தனர்.

விழாவின் பின் வேலாயுதபிள்ளையைத் தேடி வந்த சிவசுந்தரமூர்த்தி சொன்னார்; ‘‘காசு தந்தால் யாருக்கும் மாலை போடும் குழு ஒன்று பாடசாலையிலும், கோயிலிலும் இருக்கு. நானும் இரண்டிலும் உறுப்பினனாய் இருக்கிறன். விழா வைக்க முன்னம் என்னுடனும் கலந்தாலோசித்திருக்கலாம்...’’ என்றார் சிவசுந்தரமூர்த்தி.

வேலாயுதபிள்ளை வழமையான சிரிப்பைச் சிரித்தாரே தவிர வாய்திறந்து எதுகும் கூறவில்லை. கோயிலில் நடைபெற்ற வரவேற்பின் போது சுவாமிகள் கூறிய வார்த்தைகள் வேலாயுதபிள்ளையின் காதில் எதிரொலித்தன் ‘‘தனக்கு அறத்தால் வரும் ஆக்கத்தை விரும்பாதவனே பிறருடைய உயர்வைக் கண்டு மகிழாமல் பொறாமை கொள்கிறான். பிறர் மீது பொறாமை கொள்ளாமல் எவனொருவன் வாழ்கிறானோ அவன்தான் சிறந்த மனிதன். அவனுக்கு உலகில் உள்ள அனைத்து சௌகரியங்களும் கிடைக்கும். ஞானப்பிரகாசத்தின் உயர்வு இக்கிராமத்தின் உயர்வு; எமது பாடசாலையின் உயர்வு என்று நாம் நினைத்தல் வேண்டும்.’’

163. அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்

பேணாது அழுக்கறுப் பான்.

தனக்கு அறமும் ஆக்கமும் வருவதை விரும்பாதவனே, பிறனுடைய ஆக்கத்தைக் கண்டு மகிழாமல் அதற்காகப் பொறாமைப்படுவான்.

நல்லோரின் குணம்

ஞானப்பிரகாசம் அன்று வேலையைப் பொறுப்பேற்கும் நாள். அன்று அவன் வழமையை விட நேரத்திற்கு எழுந்து குளித்துவிட்டு அர்ச்சனைப் பொருட்களுடன் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்திற்கு வந்தான். குருக்களும் அன்று ஞானப்பிரகாசம் வேலையைப் பொறுப்பேற்கும் நாள் என்று தெரிந்து நேரத்துடனே எழுந்து கோயில் வேலைகளைச் செய்து முடித்துவிட்டார். ஞானப்பிரகாசம் கோயிலுக்கு வந்தபோது தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் தனபாலசிங்கமும் அங்கு நின்றனர். குருக்கள் அர்ச்சனைப் பொருட்களை ஞானப்பிரகாசத்திடம் வாங்கிக்கொண்டு உள்ளே சென்றார்.

அன்று மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் மஹா கணபதி அலங்காரக் கணபதியாக ஞானப்பிரகாசத்திற்குக் காட்சியளித்தார். அர்ச்சனை முடிந்ததும் குருக்கள் கொடுத்த அர்ச்சனைத் தட்டையும், வீபூதி, பிரசாதத்தையும் ஞானப்பிரகாசம் பெற்றுக்கொண்டார் ‘‘ஞானி உனது நல்ல குணத்திற்கு இதைவிட இன்னும் நீ உயர் பதவிகளைப் பெறுவாய். மகா கணபதி என்றும் உனக்குத் துணையாக இருப்பார்’’ என்றார் குருக்கள்.

ஞானப்பிரகாசம் குருக்களை வணங்கிவிட்டுச் சொன்னார்; ‘‘குருக்களும் எமக்கு ஒரு கொடைதான். இந்த ஊரவர்களின் நன்மை, தீமைகளில் அக்கறையுடன் தலையிடுகிறார். மஹா கணபதியைப் பற்றுடன் அலங்கரித்துப் பூசை செய்கிறார்’’ என்றார் ஞானப்பிரகாசம்.

‘‘சிவசுந்தரமூர்த்தியின் குணங்களைப் பற்றி எங்களை விட உங்களுக்கு அதிகமாகத் தெரியும். அவனது பேச்சை கணக்கில் எடுக்காதையுங்கோ’’ என்றார் வேலாயுதபிள்ளை.

ஞானப்பிரகாசம் சிரித்தார். அப்பொழுது ஸ்ரீனிவாசன் சுவாமிகள் வந்து மஹா கணபதியை விழுந்து வணங்கிவிட்டு அரசமர நிழலில் சென்று அமர்ந்தார். ‘‘சுவாமியைக் கண்டு ஆசி பெறவேண்டும் என்று நினைத்தனான். வழமையாகச் சுவாமிகள் ஒன்பது மணிக்குத்தான் கோயிலுக்கு வருவார். இன்று ஏழு மணிக்கே வந்துவிட்டார்’’ என்றார் ஞானப்பிரகாசம்.

சுவாமிகளுக்கு யாவும் தெரியும். நீங்கள் ஆசிபெற வேண்டும் என்று நினைத்திருப்பீர்கள். சுவாமிகள் ஆசீர்வதிக்க வேண்டும் என்று எண்ணியிருப்பார்'' என்றவாறு நால்வரும் அரச மரத்தடிக்குச் சென்றனர்.

ஞானப்பிரகாசம் சுவாமிகளின் பாதங்களைத் தொட்டு வணங்கினார். ''சுவாமி இன்று நான் கடமையைப் பொறுப்பேற்கச் செல்கிறேன். எந்தவித இடர்பாடுகளும் இல்லாமல் மகிழ்வுடனும் நிம்மதியுடனும் நான் கடமை புரிய ஆசீர்வதியுங்கள்'' என்றார் ஞானப்பிரகாசம்.

''பொறாமைதான் எல்லாத் துன்பங்களுக்கும் காரணகர்த்தா. பொறாமைப்படுபவன் நோயாளியாகிறான். அதனால் அவனுக்கு ஆயுள் குறைவடைகிறது. எந்நேரமும் துன்பம் ஏற்படுகிறது. நல்லவர்கள், பலசாலிகள், கற்றவர்கள் பொறாமைப்படமாட்டார்கள். அதனால் அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் ஏற்படும். இலட்சுமி கடாச்சம் உண்டாகும். நீ நல்ல முறையில் சேவையைச் செய். அது உனது மனதிற்கு திருப்தியளிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். கற்றவரின் நல்ல கருத்துக்களைக் கேள். அதன்படி நட. கெட்டவர்கள் எப்பொழுதும் திருப்திப்படாமல் குறைகூறியபடி இருப்பார்கள். அதை ஒரு பொருட்டாக எடுக்காதே. அதற்குப் பதில் சொல்லப் போனாலோ, நடவடிக்கை எடுத்தாலோ அவமானப்பட வேண்டியது நீதான்'' என்றார் சுவாமிகள்.

ஞானப்பிரகாசம் பதவி ஏற்றதும் சிவசுந்தரமூர்த்தியை மாவட்ட அலுவலகத்தில் உள்ள நிர்வாகக் கிளைக்கு உயர் அதிகாரியாக நியமித்தான். அந்நியமனத்தை எவரும் எதிர்பார்க்கவில்லை.

சிவசுந்தரமூர்த்திக்கு இடமாற்றம் பயத்தைக் கொடுத்தது. மிகவும் திறமைசாலியான ஞானப்பிரகாசம் ஏதோ திட்டத்துடன் தான் செயற்படுகிறான் என்று நினைத்தார். ஆனால் ஞானப்பிரகாசத்தின் திட்டத்தை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதனால் தனது வேலைகளைக் கவனமாகச் செய்தார். ஞானப்பிரகாசத்தைப் பற்றிக் கதைக்கவே பயப்பட்டார்.

ஞானப்பிரகாசம் ஊழியர்கள் எல்லோருடனும் ஏற்றத்தாழ்வு பாராது பழகினான். ஊழியர்களின் பிரச்சினைகளை பிறர் உதவியின்றி தானே தீர்த்து வைத்தான். அதனால் எல்லோரும் அவனுடன் அன்பாகப் பழகினர். ஞானப்பிரகாசத்தின் நடத்தையால் சிவசுந்தரமூர்த்தியால் எதுவும் செய்ய முடியவில்லை. தப்பித் தவறிக்கூட ஞானப்பிரகாசத்தைப் பற்றித் தவறாக ஏதும் பேசினால் கேட்டுக்கொண்டிருக்கும் ஊழியனே பதில் சொல்லிவிடுவான். அதனால் அவரால் வாய்திறந்து எதுவும் கதைக்க முடியவில்லை. அதனால் மனதுக்குள் புழுங்கினார்.

அன்று அலுவலகத்தில் வேலை செய்துகொண்டிருந்த சிவசுந்தரமூர்த்திக்கு கடுமையான நெஞ்சுவலி ஏற்பட்டது. அவரை உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்தனர். அவரைப் பரிசோதித்த வைத்தியர் சொன்னார் ‘‘உடல் ரீதியாக உங்களுக்கு நெஞ்சுவலி ஏற்படக் காரணமில்லை. மனத்தாக்கம் ஏதோ இருக்கு. என்னெண்டு சொல்லுங்கோ...’’

‘‘அப்படி ஒன்றும் இல்லை.’’

‘‘நான் நம்பமாட்டன். நாம் உண்ணும் உணவு மனத்தாக்கத்தினால் சமிபாடு அடையாமல் போகும். யோசனைகளால் இருதயம் பாதிக்கப்படும். மன அமைதி பெற நல்ல புத்தகங்களை வாசியுங்கள். எல்லோருடனும் அன்பாகப் பழகுங்கள். கடவுளைப் பிரார்த்தனை செய்யுங்கள். அமைதியாக இருங்கள். ஒரு மாதத்தில் உங்கள் நோய் குணமாகும். அதையிட்டு மனம் குழம்பினீர்களானால் நோயின் தாக்கம் அதிகரிக்கும்’’ என்றார் வைத்தியர்.

‘‘எவனொருவன் பொறாமையால் வரும் தீமைகளை உணர்ந்து, மற்றையோர்க்கு தீயன செய்ய நினைக்காதிருக்கிறானோ, அவனுக்கு நோயின் தாக்கம் இராது. இம்மையிலும் மறுமையிலும் அவன் இன்பமாக இருப்பான்.’’

ஸ்ரீனிவாசன் சுவாமிகளின் அருளுரை சிவசுந்தரமூர்த்தியின் காதுகளில் ஒலித்தது.

164. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்

ஏதம் படுபாக்கு அறிந்து.

பொறாமைப்படுதலால் துன்பம் தம்மை வந்தடையும் என்பதை அறிந்த அறிவுடையோர், தீமையான செயல்களைச் செய்யமாட்டார்கள்.

தன்வினை

மருத்துவமனையில் தங்கிச் சிகிட்சை பெற்றுக்கொண்டிருந்த சிவசுந்தரமூர்த்தியைப் பார்ப்பதற்காக வேலாயுதபிள்ளை அன்பளிப்புப்

பொருட்களுடன் சென்றார். கட்டிலில் ஓய்வாகப் படுத்திருந்த சிவசுந்தரமூர்த்தி வேலாயுதபிள்ளையைக் கண்டதும் எழுந்து உட்கார்ந்தார். வேலாயுதபிள்ளையைப் பார்க்க அவருக்குப் பொறாமையாக இருந்தது. யாருடனும் எந்த வேளையிலும் கோபிக்கமாட்டார். தானுண்டு தனது கடமையுண்டு என்று இருப்பார். யார் குறை சொன்னாலும் சிரிப்பாரே தவிர கோபிக்கமாட்டார். யார் எந்த நேரம் எதைக் கேட்டாலும் செய்து கொடுப்பார். இப்படி வாழ அவரால் எப்படி முடிகிறது. அறுபத்தைந்து வயதுடைய அவரின் தோற்றத்தைக் கொண்டு பார்த்தால் நாற்பத்தைந்து வயது மதிக்கலாம். நோயென்று அவர் ஒரு நாளென்றாலும் பாயில் படுத்ததில்லை.

“என்ன சிவா யோசிக்கிறாய்? ஒரு மனிதனின் நோய்க்கு யோசனை தான் முதல் காரணி...” என்று சிரித்தர் வேலாயுதபிள்ளை.

“யோசிக்காமல் எப்படி இருக்கிறது அண்ணை. முப்பது வயதைக் கடந்தும் எனது ஒரே மகள் திருமணமாகாமல் இருக்கிறாள். எவ்வளவோ கெட்டித்தனமிருந்தும் எனக்கு பதவி உயர்வு கிடைக்கவில்லை. நான் பெரிய உத்தியோகத்தில் இருந்தும் என்னை ஊரவர் மதிப்பதில்லை. அப்படி இருக்க கவலைப்படாமல் எப்படி இருக்க முடியும்” என்றார் சிவசுந்தரமூர்த்தி.

வேலாயுதபிள்ளை சிரித்தார். “ஒரு மனிதனால் ஆகக்கூடியது எதுகும் இல்லை. முயற்சி செய்தல் வேண்டும். கடுமையாக உழைத்தல் வேண்டும். அடுத்தவர்களுக்கு தீங்கு செய்யாதிருத்தல் வேண்டும். கடவுளை வணங்குதல் வேண்டும். இவ்வளவற்றையும் செய்தால் நடப்பவை எல்லாம் நன்றாக நடக்கும்...”

“நான் யாருக்குத் தீங்கு செய்தனான். நான் யாரைக் கெடுத்தனான். கடுமையாக நான் உழைக்கவில்லையா? இல்லை கடவுளைத்தான் வணங்கவில்லையா...? என்று கேட்டார் சிவசுந்தரமூர்த்தி.

வேலாயுதபிள்ளைக்கு அதற்குப் பதில் சொல்லச் சிரமமாக இருந்தது. “எல்லாம் பூர்வ புண்ணியப் பலன். எனக்கு என்னென்னவெல்லாம் நடக்கவேண்டும், என்ன என்னவெல்லாம் நடக்கக்கூடாதென்று நான் நினைக்கிறேனோ அது மற்றையோர்க்கும் பொருந்த வேண்டுமென்று சுவாமிகள் கூறியிருக்கிறார். இதைவிட வாழ்க்கைக்குத் தேவையான பலவற்றை அவர் கூறியுள்ளார். அவற்றையெல்லாம் தொகுத்து ரவீந்திரன் ஆசிரியர் வெளியிட்டிருக்கிறார். அந்நூலை ஒருக்கால் வாசித்துப் பாருங்கோ...” என்றார் வேலாயுதபிள்ளை.

“வைத்தியரும் நன்றாகச் சோதித்துவிட்டு எனக்கு எந்த வருத்தமும் இல்லை என்று சொல்கிறார். ஆனால் நெஞ்சுவலி குறையவே இல்லை. நெஞ்சு வலிக்கிறது என்று சொன்னால் அவரும் உங்களை மாதிரித்தான் சொல்கிறார். நான் என்ன செய்கிறது. என்ரை பிள்ளையைக் கரை சேர்த்தாலாவது நிம்மதியாய்ப் போயிடுவன்...” அழுதார் சிவசுந்தரமூர்த்தி.

“அழாதையுங்கோ. அழுதால் வருத்தம் கூடுமே தவிரக் குறையாது. மனிதனைப் படைத்த கடவுள் அவனை அனாதையாக விடவில்லை. உலகத்தையும் கோடிக் கணக்கான ஜீவராசிகளையும் படைத்துள்ளார். அவற்றின் துணையோடு மனிதன் இன்பமாக வாழ வேண்டும் என்பதே இறைவனின் நோக்கமாகும். கவலைகள், கஸ்ரங்கள், பிரச்சினைகள் வரும் போகும். அதைப்பற்றிச் சிந்திக்கக் கூடாது. உங்கள் மகளுக்கு காலநேரம் வரும்போது திருமணம் நடைபெறும்” என்று கூறிய வேலாயுதபிள்ளை அவரிடம் விடைபெற்றுச் சென்றார்.

அன்று மனைவியிடம் சுவாமிகள் பற்றிய நூலைக் கொண்டுவந்து தரும்படி கூறினார். அவரது மனைவி உடனே கொண்டுவந்து கொடுத்தாள். புத்தகத்தை விரித்து முதலாம் பக்கத்தைப் படித்தார் சிவசுந்தரமூர்த்தி. “பொறாமை உடையவர்களை அழிப்பதற்கு வேறு பகைவர்கள் தேவையில்லை. அவர்கள் தம்மைத் தாமே அழித்துக்கொள்வார்கள். வல்லவனைக் கூட அழிக்கும் சக்தி பொறாமைக்கு உண்டு. எனவே அடுத்தவனது ஆக்கத்தைப் பாராட்டுங்கள். உயர்வைப் போற்றுங்கள். உங்களுக்கு மகிழ்வு தானாக வரும். இன்பம் தேடி வரும்.” அந்த வாக்கியங்களை வாசித்துவிட்டு கண்களை மூடிச் சிந்தித்தார். நெஞ்சில் இருந்து வலி நீங்கியதைப் போல் இருந்தது.

165. அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடுஈன் பது.

பொறாமை உள்ளவர்களுக்கு வேறு பகை தேவையில்லை. அது ஒன்றே போதும். பகைவர் தீங்கு செய்யாவிட்டாலும் தவறாமல் தீங்கை அது செய்யும்.

பெரும் வறுமை

வேலாயுதபிள்ளையின் இளைய மகன் மகேந்திரன். வெளிநாட்டில் இருந்து பெற்றோரைப் பார்ப்பதற்காக ஊருக்கு வந்திருந்தான். அவன் திரும்பிச் செல்வதற்கு முன்பு அவனுக்கு திருமணம் செய்து வைத்துவிட வேண்டுமென்று நினைத்தார் வேலாயுதபிள்ளை. சீதனமில்லாவிட்டாலும் பரவாயில்லை. நல்ல குடும்பப் பெண்ணாகவும் அழகாகவும் இருக்க வேண்டுமென்று விரும்பினார். ஊரில் பலர் மகேந்திரனுக்கு பொன்கொடுக்க முன்வந்தபோதும் வேலாயுதபிள்ளை பிடிக்காததால் ஒவ்வொரு சாட்டுச்சொல்லி தட்டிக்கழித்துக் கொண்டிருந்தார்.

மகேந்திரன் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்திற்கு வந்தான். கோயில் முன்பை விட மிகவும் அழகாக இருந்தது. அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. தணிகாசலம் வெளி வீதியைக் கூட்டிக்கொண்டிருந்தார். அவன் தணிகாசலத்திற்கு அருகே சென்று ‘‘என்னைத் தெரிகிறதா மாமா..?’’ என்று கேட்டான்.

தணிகாசலம் நிமிர்ந்து பார்த்தார். மிகவும் அழகான திடகாத்திரமான ஓர் இளைஞன் அவரின் முன் சிரித்துக்கொண்டு நின்றான். தணிகாசலம் சிரித்தார். ‘‘நான் தோளிலை தூக்கி வளர்த்த பிள்ளை. வளர்ந்து வாட்டசாட்டமாய் வந்தால் தெரியாதே... என்ரை பிள்ளை மாதிரித்தானே உன்னோடை பழகினனான்...’’

‘‘வெளிநாட்டிலை நான் இருக்கும் போது உங்களைத் தான் நினைக்கிறனான். அந்த நேரம் அப்பாவுக்கு பெரிதாய் வருமானம் இல்லை. நான் படிக்கிற காலத்திலை என்ரை படிப்புச் செலவின் பெரும்பகுதியை நீங்கள் தானே ஏற்றனீங்கள். வாழ்க்கையிலை நான் உங்களை மறக்கமாட்டன். வீட்டை எப்போது நிற்பீர்கள்.’’

‘‘இரவுக்கு வா. வீட்டிலை சாப்பிடலாம்’’

‘‘முந்தி நீங்கள் கலியாணம் கட்டாமல் இருக்கேக்கை ஆச்சி குழைச்சுத் தந்த பழஞ்சோத்தின்ரை ருசி இப்பவும் என்ரை நாக்கிலை இருக்கு. நான் இரவைக்கு வாறன்...’’ என்றான் மகேந்திரன்.

இரவு மகேந்திரன் தணிகாசலத்தின் வீட்டுக்குச் சென்றபோது அவர் அவனை அன்புடன் வரவேற்றார். அவரது வீடு இருக்கும் நிலையைக் கண்ட மகேந்திரன் கவலைப்பட்டான். ‘‘மாமா இந்த வீட்டை பிரித்துக் கட்டுங்கோ, நான் காசு தாறன்...’’

“வேண்டாம் தம்பி நாளைக்கு ஊரிலை பலமாதிரிக் கதைப்பினை.”

“யாரும் எதையும் கதைக்கட்டும் நான் கவலைப்படமாட்டன். நீங்கள் கட்டுங்கோ...” என்ற மகேந்திரன் கொண்டுவந்த பொருட்களைக் கொடுத்தான். பின் சொன்னான் “நீங்கள் எனக்குச் சொந்தக்காரன் இல்லாவிட்டாலும் அயல்வீட்டில் இருந்து எவ்வளவு உதவிகள் செய்தனீங்கள். உங்கடை உதவிகளாலைதான் நாங்கள் இன்றைக்கு இந்த நிலைமைக்கு வந்தனாங்கள். அதாலை எவ்வளவு உதவியும் நான் செய்வன். நீங்கள் மறுக்கக்கூடாது” என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

மறுநாட்காலை வேலாயுதபிள்ளையும் மகேந்திரனும் மேசன்மாரைக் கூட்டிக்கொண்டு தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்தனர். வேலாயுதபிள்ளை சொன்னார்; “மகேந்திரனுக்கு உனது மகளைக் கட்டிக் கொடுத்திடுவன். அவளுக்கு பதினைந்து வயது. மகேந்திரனுக்கு முப்பது வயது...”

“அவளை நான் கட்டாவிட்டாலும் அவளுக்கு நான்தான் சீதனம் கொடுத்து கல்யாணம் செய்துவைப்பது...”

தணிகாசலத்தின் வீட்டுவேலைகள் மும்முரமாக நடந்துகொண்டிருந்தன.

சபாநாயகம் வேலாயுதபிள்ளையின் வீட்டுக்கு நல்ல வெறியில் வந்தான். “என்னட்டையும் இரண்டு குமர் இருக்கு. ஒரு வழீலை பார்த்தால் மகேந்திரனுக்கு அவளவை மச்சாள் முறை. ஊர் முழுக்க பெண் தேடுகின்ற உனக்கு என்ரை வீட்டிலை பெண் இருக்கிறது தெரியேல்லையே. அதோடை மகேந்திரன் படிக்கும் போது என்னுடைய மூத்த மகனோடை தான் சினேகிதமாய் இருந்தவன். வீட்டை அடிக்கடி வாறவன். நான் பாம்பு கடிச்சு பத்துநாள் மருத்துவமனையில் சாகக் கிடந்தனான். வந்து பார்க்கத் தோன்றேல்லை. தணிகாசலத்திற்கு வீடுகட்டிக் கொடுக்கிறானாம். என்ன சொக்குப்பொடி போட்டவளவை. ஊரிலை உள்ள எல்லாரையும் வளைச்சு வைச்சிருக்கிறான். ஒருத்தர் மாறி ஒருத்தர் கொடுக்கினை. எனக்கார் தாறது.”

வேலாயுதபிள்ளை மெதுவாக விலகிச் சென்றார். சபாநாயகம் விடவில்லை. “எல்லாரும் பசை இருந்தால் தான் கொண்டாடுவினை. நீங்கள் எல்லாம் முந்திப் பட்டதெல்லாத்தையும் மறந்திட்டியள். இப்ப பெரிய மனிசர். வேலாயுதம் பஞ்சம் போகும். ஆனால் பஞ்சத்திலை பட்ட வடுப் போகாது. முந்தினதை நினைச்சுப் பாருங்கோ...” என்றான்.

வேலாயுதபிள்ளை எதுகும் பேசாமல் சென்றுவிட்டார். அன்று இரவு சபாநாயகத்தின் தந்தை தர்மரட்ணம் வேலாயுதபிள்ளையின் வீட்டுக்கு வந்தார். ‘‘வேலாயுதம் அவன் வெறீலை சொன்னதைப் பற்றி பெரிதாக எண்ணிக் கவலைப்படாதை. ஒருவன் வறியவனாக இருந்தால் பரவாயில்லை. நல்லவனாக இருந்தால் தான் சனம் மதிக்கும். இவனை யார் மதிக்கிறார்கள். சினேகிதர்கள் என்று அவனுக்குப் பலர் இருந்தும் ஆபத்து நேரத்தில் ஒருத்தரும் உதவேல்லை. நீயும் கணேசமூர்த்தியும் தான் உதவினீர்கள். இப்ப உங்களையே பேசுறான். கணேசமூர்த்தியோடு சண்டைக்குப் போறான். தணிகாசலத்தைக் கண்டபடி ஏசுறான். தணிகாசலத்திற்கு உங்கடை மகன் வீடுகட்டிக் கொடுப்பதையிட்டு பொறாமைப்படுகிறான். ஒருவன் பிறருக்கு உதவியாக கொடுக்கப்படும் பொருளைக்கண்டு பொறாமைப்பட்டால் அவனைச் சார்ந்தவர்கள் யாபேரும் உண்ண உணவின்றியும் உடுக்க உடையின்றியும் அவதிப்படுவர் என்று தர்மநூல்கள் கூறுகின்றன. அது எவ்வளவு உண்மை என்பதை நான் தெரிந்துகொண்டன்’’ என்றார் தர்மரட்ணம்.

வேலாயுதபிள்ளை தனது சட்டைப் பையில் இருந்து ஆயிரம் ரூபா பணம் எடுத்துக்கொடுத்தார்.

166. கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்

உண்பதூஉம் இன்றிக் கெடும்.

பிறருக்கு உதவி செய்வதைக் கண்டு பொறாமைப்படுபவனது சுற்றம், உடையும் உணவும் இல்லாமல் கெடும்.

வழிகாட்டி

சபாநாயகம் வழியில் சொன்னதை நினைக்க வேலாயுதபிள்ளைக்குக் கவலையாக இருந்தது. யாரும் கேளாமலே அவரின் மனநிலை அறிந்து தன்னாலியன்றவற்றைக் கொடுத்துதவுபவர் வேலாயுதபிள்ளை. சபாநாயகம் கஸ்ரப்படும் போதெல்லாம் அவரது மனைவிக்கு தன்னாலியன்ற பொருளுதவி செய்பவர். அதனால் சபாநாயகத்திற்கு பொருள் உதவி புரிய எண்ணினார். சபாநாயகம் விவசாயம் செய்பவன். வருமானத்தின் பெரும் பகுதியை தானும் குடித்து, தனது நண்பர்களுக்கும் குடிக்காக செலவு செய்பவன். மனைவிக்கு வேலாயுதபிள்ளை கொடுத்தது தெரிந்தால் அவளை அடித்து மிரட்டி அவர் கொடுத்ததை வாங்கிச் சென்றுவிடுவான். வேலாயுதபிள்ளை பலமுறை இரங்கிக் கொடுத்தவற்றை சபாநாயகம்

மிரட்டி வாங்கி செலவு செய்த விதங்கள் பற்றி அவனது மனைவி வேலாயுதம்பிள்ளையிடம் முறையிட்டிருக்கின்றாள். அதனால் பெரும் தொகையாக அவர் கொடுக்க விரும்பவில்லை. மகனிடம் சொல்லி வீட்டைதிருத்திக் கொடுக்கலாம் என்று நினைத்தார்.

வேலாயுதபிள்ளை மகனிடம் அது பற்றிச் சொன்னார். ‘‘தம்பி சபாநாயகம் எமது நெருங்கிய சொந்தக்காரன். ஒரு முறையில் அவன் உனக்கு மாமன் முறையானவர். நேற்றுக் கண்டு உன்னைத் தனது மகளுக்கு திருமணம் செய்து தரும்படி கேட்டார்.’’

வேலாயுதபிள்ளை கதைத்துக் கொண்டிருக்கும் போது மகேந்திரன் குறுக்கிட்டான் ‘‘அந்தக் கதையே கதைக்கக்கூடாது. மனிதனாக பிறந்தவன் ஒழுங்காக வாழவேண்டும். அடுத்தவனுக்கு தொல்லை கொடுக்கக்கூடாது. பணம் இன்று வரும் நாளை போயிடும். ஏழையாக இருந்த பலர் பணக்காரர்களாகவும், பணக்காரர்களாக இருந்த பலர் ஏழைகளாகவும் மாறியிருப்பதை நாம் காண்கிறோம். ஆனால் ஒழுக்கமாக இருந்த யாராவது கெட்டுப்போனதை நாம் காணவில்லை. சபாநாயகம் மாமாவைத் திருத்த முடியாது. அவரை சொந்தக்காரன் என்று சொல்லவே எனக்கு வெட்கமாக இருக்கிறது.’’

‘‘நான் உன்னை சபாநாயகத்தின் மகளைத் திருமணம் செய்யச் சொல்லிச் சொல்லவில்லை. தணிகாசலத்திற்கு வீடு திருத்திக் கொடுத்தது போல் சபாநாயகத்தின் வீட்டையும் திருத்திக்கொடுத்தால் நல்லது.’’

‘‘அப்பா உதவியின் பெறுமதி தெரிந்தவர்க்குத்தான் நாம் உதவி செய்தல் வேண்டும். கெட்டவர்களுக்குச் நாம் செய்யும் உதவி அவர்களை மேலும் கெட்டவர்களாக்கும். நான் வெளிநாட்டில் இலேசாகப் பணத்தை சம்பாதிக்கவில்லை. இரத்தத்தைப் பிளிந்துதான் சம்பாதித்தனான். அந்தப் பணத்தை பெறுமதியான வழியில் செலவு செய்யவேண்டும். சபாநாயகம் மாமாக்கு வீட்டைத் திருத்திக் கொடுக்கலாம். ஆனால் அவர் வீட்டுப் பொருட்களைக் கழற்றிக் கொண்டுபோய் விற்கக்கூடியவர். சில சமயம் வீட்டையே விற்றுவிடுவார். எனவே மாமிக்கு அன்றன்றேல் தேவைக்கு ஏதாவது கொடுங்கோ. முத்த மகளுக்கு எங்கேயாவது கலியாணம் பேசினால் சீதனமாய் நான் கொஞ்சப் பணம் கொடுப்பன். முன்னுக்கே கொடுத்தால் அந்தப் பணம் வீணாகச் செலவாகிவிடும்’’ என்றான் மகேந்திரன்.

‘‘அவளுக்கும் வயதாகிவிட்டது. நான் எத்தனையோ இடத்தை கலியாணம் பேசினனான். ஒருத்தனும் அந்த வீட்டில் பெண் எடுக்க விரும்புகிறார்கள் இல்லை. அடுத்த வீட்டிலை அடுப்புப் புகையிறது சபாநாயகத்திற்கு விருப்பமில்லை. யாராவது நல்லவர்கள் என்று கோயிலிலை அல்லது வாசிகசாலையிலை சொன்னால் சண்டைக்கு

வருவான். எல்லாரிலையும் பொறாமை. தணிகாசலத்திற்கு நீ காசு கொடுத்து விட்டாயென அறிந்து என்னோடை கோபப்பட்டான். ஒருவர் மீது பொறாமைப்படாமல் எல்லாருடனும் சந்தோசமாக இருந்தால் எல்லோரும் உதவுவினை. ஊருக்கு சேவை செய்யிற தணிகாசலத்தோடை கூடச் சண்டைக்குப் போறான். தன்னைவிட தணிகாசலம் கேவலமானவனாம். அவனை எல்லாரும் மதிக்கினையாம் தன்னை மதிக்கேலையாம். இதுக்கெல்லாம் காரணம் பொறாமைதான்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''பொறாமை உடையவரின் வீட்டைவிட்டு இலக்கமி வெளியெறி தனது தங்கையான முதேவியை அனுப்பிவிடுவாள். என்று பெரியோர் சொல்வார்கள். அதுதான் சபாநாயகம் மாமா வீட்டில் நடக்கிறது'' என்றான் மகேந்திரன்.

167. அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்

தவ்வையைக் காட்டி விடும்.

பொறாமை உடையவனைக் காணப் பொறுக்காத திருமகள், தன் தமக்கைக்கு அவனைக் காட்டிவிட்டு நீங்கிச்சென்று விடுவாள்.

பாவி

மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்று வரும் சிவசுந்தரமூர்த்தியைப் பார்ப்பதற்கு வந்தார் விநாயகரத்தினம். உடல் மெலிந்து சோர்வாக கட்டிலில் படுத்திருந்த சிவசுந்தரமூர்த்தியைப் பார்க்க அவருக்குக் கவலையாக இருந்தது. ''நல்லாய் மெலிந்து போனீர்கள். இஞ்சை சரிவராட்டால் கொழும்பிற்குப்போக வேண்டியது தானே'' என்றார் விநாயகரத்தினம்.

''எனக்கு ஒரு வருத்தமும் இல்லையாம். மனவருத்தம் தானாம். எதையும் யோசிக்காமல் இருந்தால் சரி என்கின்றார் வைத்தியர். அவர் சொல்லுறது உண்மைதான். என்னாலை ஞானப்பிரகாசத்திற்கு கீழை வேலைசெய்ய முடியேல்லை. அந்தக் காலத்திலை அவற்ரை தகப்பன் எங்கடை வீடுகளிலை கைகட்டி நின்று சீவகம் செய்தவர். இப்ப நான் அவன்ரை மோனுக்குக் கீழை வேலை செய்ய முடியுமே? அதோடை விக்னேஸ்வரமூர்த்தியின் மகளுக்கும் இரவீந்திரன் ஆசிரியருக்கும் சம்மந்தம் முற்றாய்ப் போய்ச்சு. விக்னேஸ்வரமூர்த்தியிட்டை பெரிசாக

சீதனமில்லை. தனபாலசிங்கமும் மனைவியும் வீடுதேடிப்போய் சீதனம் ஒன்றும் வேண்டாம் பொம்பிளையைத் தந்தால் காணும் என்று சொல்லிப் போட்டு வந்திட்டினையாம். பொம்பிளையும் அவ்வளவு வடிவில்லை. பாரன் அதுகளுக்கு வந்த காலத்தை. என்னட்டை இலட்சம் இலட்சமாய் பணமிருக்கு என்னபயன்?'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''ஞானபிகாசத்தைப்பற்றி நீங்கள் சொல்லத்தான் நினைவு வந்தது. அமைச்சிலை இருந்து செயலாளற்றை நெருங்கின சினேகிதன் ஒருத்தர் வந்திருக்கிறார். அவர் முந்தி என்னோட வேலை செய்தவர். அவர் தானாம் ஞானப்பிரகாசத்திற்கு பதவி உயர்வுக்கு உதவிசெய்தவர்.'' விநாயகரத்தினம் கூறிக்கொண்டிருக்கும் போது சிவசுந்தரமூர்த்தி குறுக்கிட்டுச் சொன்னார்; ''நான் அப்பவே சொன்னனான் தானே உவருக்கு ஒரு வேலையும் தெரியாது. எனக்குக் கீழை வேலை செய்யும் போது வேலை செய்யத் தெரியாமல் கஸ்ரப்பட்டவன். ஊரவன் தெரிந்தவன் என்பதற்காக நான் ஒரு மாதிரி சமாளிச்சனான். இப்ப அவற்றை பொட்டுக்கேடுகள் தெரியுது'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''இரண்டு இலட்சம் ருபா குடுத்துத்தானாம் பதவி உயர்வு பெற்றவன். இன்றும் இரண்டு பேருக்குக் குடுக்கப் போயினையாம். விருப்பமெண்றால் சொல்லுங்கோ ஆளைக் கூட்டிக்கொண்டு வாறன்.''

''சிறிது நேரம் யோசித்தார் சிவசுந்தரமூர்த்தி. ''இப்ப எங்கை கெட்டித்தனம் இருக்குது. எல்லாரும் அவனை இவனைப் பிடிச்சுத்தான் வாறான்கள். காசில்லாத ஞானப்பிரகாசமே இரண்டு இலட்சம் கொடுத்து பெரியவனாகிட்டான். பணக்காரனான உங்களுக்க இரண்டு இலட்சம் ஒரு காசே'' என்றார் விநாயகரத்தினம்.

''காசு குடுக்கிறதைப் பற்றி பரவாயில்லை. ஆள் நம்பிக்கையானவனாய் இருக்க வேணும். அதோடை நான் காசு கொடுக்கிற விசயம் வெளியிலை யாருக்கும் தெரியக் கூடாது.''

''நீங்கள் குழந்தைப் பிள்ளைகள் மாதிரிக் கதைக்கிறியள். அவன் என்ரை நண்பன் அதோடை என்னோடை வேலை செய்தவன். இப்ப அமைச்சிலை வேலை செய்கிறான்'' என்று விநாயகரத்தினம் சொல்லும் போது சிவசுந்தரமூர்த்தி குறுக்கிட்டார். ''நான் உன்னை நம்புறனடாப்பா. ஒரு கதைக்குச் சொன்னான். நீ அவனை கூட்டியா''

மறு நாள் வினாயகரத்தினம் தனது நண்பனைக் கூட்டிக் கொண்டு மருத்துவமனைக்கு வந்தார். ''எனது பெயர் நாகராசா. உங்களின் நண்பனின் நண்பன். ஞானப்பிரகாசம் ஒரு வழிலை எனக்கு

சொந்தக்காரன். வந்து கேட்டான் செயலாளரிட்டைச் சொல்லிச் செய்து கொடுத்தனான். நீங்கள் வந்திருந்தால் செய்திருக்கலாம்.''

''எனக்குத் தெரியாமல் போய்ச்சு. வினாயகரத்தினம் சொல்லேல்லை'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''பரவாயில்லை நிர்வாகத்தை இரண்டாகப் பிரிக்கப்போறம். அதனால் இன்னுமொராளை நியமிக்க வேண்டியிருக்கு. நீங்கள் கெட்டிக்காரன்'' என்றான் நாகராசா.

நாகராசாவின் பேச்சை நம்பிய சிவசுந்தரமூர்த்தி இரண்டு இலட்சம் ருபாவை நாகராசாவிடம் கொடுத்தார். மறுவாரம் பத்திரிகையில் வந்த செய்தி சிவசுந்தரமூர்த்திக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. திரும்பவும் அச்செய்தியை வாசித்துப்பார்த்தார். அமைச்சின் செயலாளரை தெரியும் என்று கூறி பொதுமக்கள் பலரிடம் வேலை பெற்றுத் தருவதாக பெரும் தொகையான பணத்தைப் பெற்ற நாகராசா என்பவனைக் காவல் துறையினர் கைது செய்துள்ளனர். ''பொறாமை என்பது கொடும்பாவி, அது ஒருவனின் செல்வத்தை அழிக்கும். அத்துடன் தீய வழியில் செல்ல ஊக்குவிக்கும்'' என்று சுவாமிகளின் சரித்திரத்தில் இரவீந்திரன் எழுதிய வாசகம் சிவசுந்தரமூர்த்தியின் நினைவுக்கு வந்தது.

168. அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்

தீயுழி உய்த்து விடும்.

பொறாமை என்ற கொடிய பாவி, ஒருவனது செல்வத்தை அழித்து தீய வழியில் அவனை வழி நடத்தும்.

ஆய்வு

நாகராசா காவல் துறையினரால் கைது செய்யப்பட்டதும் தான் பணம் பெற்றுக் கொண்டவர்களின் விபரங்களை காவல் துறையினரிடம் கூறினான். அதன் படி சிவசுந்தரமூர்த்தியை விசாரிக்கவென காவல் துறையினர் சிவசுந்தரமூர்த்தியின் வீட்டிற்கு வந்தனர். அதனால் சிவசுந்தரமூர்த்தி காசு கொடுத்த விடயம் ஊர் முழுவதற்கும் தெரிந்து விட்டது. தனபாலசிங்கம் அதுபற்றிக் கதைப்பதற்காக வேலாயுதம்பிள்ளையிடம் வந்தார்.

“சிவசுந்தரமூர்த்திக்கு இன்னும் நோய் சரியாகக் குணமாகவில்லை. அதற்கிடையில் வினாயகரத்தினம் தன்னோடை வேலை செய்த ஒருவனைக் கூட்டி வந்து அமைச்சரின் செயலாளற்றை நண்பன் என்று கூறி இரண்டு இலட்சம் ரூபாவை வாங்கிக் கொடுத்திருக்கிறான். அவன் வேலை நீக்கம் செய்யப்பட்டவனாம்” என்றார் வேலாயுதபிள்ளை.

“தகப்பன் ஒழுங்காகத் தேடின சொத்தில்லை. தணிகாசலத்தின்ரை பேர்த்தியார் சொத்திச் சின்னம்மாவெண்டு. பிள்ளைகள் இல்லாத மனிசி ஒன்றிருந்தது. மனிசியின்ரை புருசன் சிங்கப்பூரில் வேலை செய்தவர். மனுசன் செத்தாப்பிறகு மனிசி இவையோடைதான் இருந்தது. நல்ல காசுக்காரி. மனிசியை ஏமாற்றி காணி பூமிகளை எழுதுவிச்சுப்போட்டினம். காசையும் வாங்கிப்போட்டினை.” என்றார் தனபாலசிங்கம்.

“அது மட்டுமே? நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயம் கட்டவென்று அந்த நாளிலை இந்தியாவுக்கும், சிங்கப்பூருக்கும் தகப்பன் போய் காசு சேர்த்தவர். அதோடை ஊரிலை உள்ள சிதம்பர சொத்துக் காணிகளையெல்லாம் தகப்பன் பராமரித்தவர். ஊர்ச் சனத்திட்டை காணிக் குத்தகைக் காசுகளை வாங்கிக் கொண்டுபோய் தமிழ் நாட்டில் உள்ள கோயிலுக்குக் குடுக்கிறதெண்டு சொல்லி ஏமாத்தினவை. அதைவிட ஊருக்கை எத்தனை உருட்டுப்பிரட்டுச் செய்தவர். இப்ப சிவசுந்தரமூர்த்தி திறமே. யாராவது கச்சேரிக்கு அலுவலாகப் போனால் காசு வாங்காமல் எதுவும் செய்யமாட்டார். என்ரை சுயவிபரக் கோவையை எடுத்து ஒளித்துப்போட்டார். நான் ஓய்வு பெறேக்கை ஆயிரம் ரூபா கொடுத்தாப்பிறகு தான் சுயவிபரக் கோவையைத் தேடித்தந்தவர்” என்றார் வேலாயுதபிள்ளை.

“ஆரும் கஸ்ரப்பட்டுத் தேடின சொத்தை அபகரிச்சால் இப்படித்தான் போகும். அதாலைதான் பெட்டைக்கும் கலியாணம் முற்றாகாமல் கிடக்கு. அது சரி தணிகாசலத்திற்கு உங்கடை மகன் வீடுகட்டிக் குடுக்கிறதாய் அறிந்தன். உண்மையே?” தனபாலசிங்கம் கேட்டார்.

“ஓம் அண்ணை. அந்த நேரத்திலை தணிகாசலம் எங்கடை வீட்டுக்குப் பக்கத்திலை தான் இருந்தது. தகப்பன் செத்துப் போனார். தாயும் தணிகாசலமும் தானே. என்ரை பிள்ளைகளோடை நல்ல மாதிரி. மகேந்திரன் அங்கை தான் சாப்பிடுறது. தணிகாசலத்தோடை தான் படுக்கிறது. எந்தநேரமும் அவனைத் தூக்கிக் கொண்டு திரிவார். அவன் பல்கலைக்கழகத்திலை படிக்கேக்கையும் அங்கை தான் போயிருந்து படிப்பான். தாய் மனிசி அவன் படிக்கேக்கை இரவு பன்னிரெண்டு மணிக்கும் தேத்தண்ணி குடுக்கும். அவையின்ரை பிள்ளை மாதிரித்தான் அவன். வெளிநாட்டிலை இருக்கேக்கை காசு

அனுப்புறவன். நான் கொண்டு போய்க் குடுக்கிறனான். தணிகாசலத்திற்கு இளகின மனசு. கையிலை காசிருந்தால் ஆர்கேட்டாலும் குடுத்திடும். அதோடை ஊர்த்தொண்டு, துரவு முழுவதையும் தன்ரை தலையிலை தூக்கி வைச்சிருக்கிறார். பக்கத்திலை ஒரு குடிகாரன் இருக்கிறான். அவன் குடிசுப்போட்டு மனிசிக்கு அடிப்பான். பிள்ளைகளும் மனிசியும் தணிகாசலத்தின்ர வீட்டை போயிடுங்கள். பிறகு எப்படி அவன்ரை வறுமை நீங்கும். அவன் இடம் கண்டிட்டான். உழைப்பில்லாத நேரங்களிலை மனிசிக்கு அடிச்சால் பிள்ளைகளுக்கு தணிகாசலம் ஏதாவது கொடுக்குமென்று அவனுக்குத் தெரியும். குடிகாரனுக்கு இரக்கம் பார்க்கக்கூடாது'' என்றார் வேலாயுதபிள்ளை.

தணிகாசலத்திற்கு சரியான கஸ்ரம்தான். காசு தட்டுப்படும் நேரத்திலை என்னட்டையும் வருவன். சொன்ன நாளைக்குத் திருப்பித தந்திடுவன். நேர்மையான மனிசன். கோவில் வேலை பள்ளிக்கூட வேலை எல்லாவற்றையும் தன்ரை தலையிலை தூக்கிப்போட்டுக் கொண்டு திரியுறான், சொன்னாலும் கேளான். பிள்ளைகள் தான் பாவம்!

''இதுகளெல்லாம் தெரிந்துதான் என்ரை மகன் வீட்டைக் கட்டிக் குடுக்கிறான். தணிகாசலத்தின்ரை கையிலை காசைக் குடுத்தால் நாலு பேர் வந்து மருட்டினால் குடுத்திடுவன். இல்லாட்டில் மஹா கணபதி கோயிலைத் திருத்த வெளிக்கிடுவன்'' என்று சிரித்தார் வேலாயுதபிள்ளை.

''அவனுக்கென்ன வறுமை. உழைக்கிற முழுத்தையும் வங்கிக் கணக்கிலை இடுகிறமாதிரி நல்லகாரியங்களுக்குச் செலவு செய்கிறான். கடவுள் நல்ல பிள்ளைகளைக் கொடுத்திருக்கிறார். எல்லாம் படிப்பிலை சூரைப்புலிகள். ஒரு காலத்திலை நல்லாயிருப்பான். ஆவன்ரை பொம்பிளைப் பிள்ளைகளைச் செய்ய எத்தனை பேர் காத்திருக்கினை. என்ரை மகனுக்கு செய்ய எனக்கு விருப்பம் ஆனால் வயது காணாது'' என்று கவலைப்பட்டார் வேலாயுதபிள்ளை.

169. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்

கேடும் நினைக்கப் படும்.

பொறாமை பொருந்திய நெஞ்சை உடையவனின் செல்வமும் பொறாமை இல்லாதவனுடைய வறுமையும் மற்றையோரால் ஆய்வு செய்யப்படும்.

யாரும் இல்லை

மருத்துவ மனையால் வீட்டக்கு வந்ந சிவசுந்தரமூர்த்தியைப் பார்ப்பதற்காக, சிவசுந்தரமூர்த்தியின் வீட்டிற்குச் சென்றார் வேலாயுதபிள்ளை. கட்டிலில் ஓய்வாகப் படுத்திருந்த சிவசுந்தரமூர்த்தி வேலாயுதபிள்ளை வந்திருப்பதை அறிந்து வெளியே வந்தார்.

''எனக்கு ஒரு உதவி செய்ய வேணும் வேலாயுதம்''

''சொல்லுங்கோ'' என்றார் வேலாயுதபிள்ளை.

''அரசடலை இருந்து ஒரு சம்மந்தம் மகளுக்குப் பேசி வந்திருக்கு. காணி பூமி வீடுவளவொன்றும் வேண்டாமாம். முழுவதையும் காசாகத் தரட்டாம். ஒரேயொரு பிள்ளை. வீடுவாசலெல்லாம் இருக்கு. மாப்பிள்ளை வைத்தியராகப் பணிபுரிகிறார். பட்டணத்திலை மருத்துவமனையொன்று திறக்கப்போறாராம். அதுக்கு ஐம்பது இலட்சம் ரூபா வேணுமாம். என்ன கஸ்டப்பட்டென்றாலும் குடுக்கிறதென்று தீர்மானிச்சிட்டன். உங்கை ஒன்றுக்கும் வழியில்லாததுகள் வாத்திமாரை சீதனமில்லாமல் செய்யுதுகள். நான் பரம்பரைப் பணக்காரன். நல்ல இடத்திலை செய்ய வேணும். என்ரை மடைத்தனமான வேலையாலை இரண்டு இலட்சத்தை இழந்திட்டன்....''

வேலாயுதபிள்ளை பதில் சொல்லவில்லை. ''சிவசுந்தரமூர்த்தியிடம் ஆயிரம் இரண்டாயிரம் கொடுத்தாலே வாங்க முடியாது. இலட்சக்கணக்கிலை கொடுத்திட்டு என்ன செய்வது'' என்று யோசித்தார்.

''செம்பாட்டுக் காணியை விற்பம் என்று யோசிக்கிறன். ஆருங்கேட்டால் ஒழுங்கு பண்ணு. மகன் வந்திருக்கிறான். காசு கொண்டு வந்திருப்பன். அஞ்சு இலட்சம் ரூபா தந்தியெண்டால் காணிகளை வித்துப் போட்டுத் தந்திடுவன்.''

''செம்பாட்டுக்காணி சிங்கப்பூரில் வாழும் சிவசுந்தரமூர்த்தியின் மாமனுடையது. சிவசுந்தரமூர்த்தி அதற்கு கள்ள உறுதி முடித்து வைத்திருப்பதாக ஊர்மக்கள் பேசிக்கொள்கிறார்கள். அந்தக் காணியை யார் வாங்கப் போகிறார்கள். பிறகு எப்படி காணியை விற்பது, எனக்குக் காசு தருவது?''

''என்ன வேலாயுதம் யோசிக்கிறாய்?''

“ஒண்டுமில்லை அண்ணை. ஆரன் காணியைக் கேட்டால் சொல்லுறன். மகன் பெரிசாய்க் காசு கொண்டு வரேல்லை. கொண்டு வந்த காசையும் சொந்தக்காரருக்கும் நண்பர்களுக்கும் கொடுத்திட்டான். மஹா கணபதிக்கு ஒரு மஞ்சம் செய்துகொடுக்கப் போறதாயும் சொல்கிறான். அதோடை போகமுன்னம் கலியாணத்தையும் முடிக்கவேணும்” என்றார் வேலாயுதபிள்ளை.

“அதைப்பற்றி எனக்குத் தெரியாது. கட்டாயம் நீ இந்த உதவியைச் செய்ய வேணும். நான் முந்தின ஆளென்றால் ஓடியாடி வேலைபார்ப்பன். பாலகுமாரன் எழும்பி நடக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார். அதனாலை தான் கேட்கிறன்” சிவசுந்தரமூர்த்தியின் குரல் தழுதழுத்தது.

“என்னாலை முடிஞ்சவரை பார்க்கிறன்.” என்ற வேலாயுதபிள்ளை எழுந்தார்.

“வேலாயுதம் என்ன கஸ்ரப்பட்டாவது இந்த உதவியைச் செய்திடு” வேலாயுதபிள்ளையின் கையைப் பிடித்துக் கெஞ்சினானர் சிவசுந்தரமூர்த்தி.

சிவசுந்தரமூர்த்தியின் வீட்டை விட்டு வெளியே வேலாயுதபிள்ளை வந்த போது தனபாலசிங்கமும் தணிகாசலமும் வந்தனர். “சிவசுந்தரமூர்த்தி என்னவாம்” என்று கேட்டார் தனபாலசிங்கம். வேலாயுதபிள்ளை சிரித்துவிட்டு யாவற்றையும் சொன்னார்.

“சிவசுந்தரமூர்த்திக்குக் கொடுத்தால் அவ்வளவுதான். மனிதனுக்கு மனிதன் உதவி செய்யத்தான் வேணும். ஆனால் இவன் மனிதன் இல்லை. பத்து வருடத்துக்கு முன்னம் ஏதோ அவசரமெண்டு என்னட்டை வந்தான். பத்தாயிரம் ரூபா குடுத்தனான். இன்றுவரைக்கும் தரேல்லை. கேட்டுப் பார்த்திட்டு விட்டுட்டன்” என்றார் தனபாலசிங்கம்.

“வேலாயுதண்ணை... கா.பொ.த உயர்தரப்பரீட்சை முடிவு வந்திட்டுது. மகன் மருந்துவக்கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளான்” என்றார் தணிகாசலம். அவரின் முகத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சி தாண்டவமாடியது.

“அப்படியே எனக்கு இது எப்பவோ தெரியும். நீ கொடுக்கிற தானதர்மமெல்லாம் உன்னை வந்து சேர்ந்திருக்கு. பொன்னைப் பொருளைக் கொடுக்கிறது தான் தருமம் என்றில்லை. நல்ல வார்த்தைகள் பேசுவதும் தர்மம்தான். உனக்கு இனி என்ன குறை?” என்றார் வேலாயுதபிள்ளை.

“நீங்கள் சொல்லுறத்தைப் பார்த்தால் முந்தி எனக்கு குறை இருந்தமாதிரி எல்லே இருக்கு. நான் என்னத்துக்கண்ணை கஸ்ரப்பட்டனான். ஆண்டவன் அந்தந்த நேரம் என்ரை தேவைகளை அறிந்து தந்து கொண்டுதான் இருந்தவன். என்னட்டைக் காசில்லைத்தான். ஆனால் ஒருபோதும் என்ரை தேவைக்குக் காசு வராமல் போகேல்லை. என்னை நம்பி ஆரண்ணை காசு தரமாட்டினை” என்று கேட்பார் தணிகாசலம்.

“உனக்கு எவ்வளவு காசு வேணுமெண்டு சொல்லு. நான் தாறன்” என்றார் வேலாயுதபிள்ளை.

“ஏன் நான் தரமாட்டனே? ஊருக்கை தணிகாசலம் கேட்டால் ஆர்தான் குடுக்கமாட்டினை. தணிகாசலம் தேர்தலிலை நின்றால் அவனை யாரும் வெல்லேலாது” என்று சிரித்தார் தனபாலசிங்கம்.

170. அழுக்கற்று அகன்றாரும் இல்லை;அ∴து இல்லார்

பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்லை

பொறாமையினால் உயர்ந்தவர்கள் எவரும் உலகத்தில் இல்லை. பொறாமை இல்லாமையினால் பெருமைகளில் இருந்து நீங்கியவர்களும் இல்லை.

பெருங்குற்றம்

பெரும்வர்த்தகனான மணிவண்ணன் தன்னைப்போல் வர்த்தகம் செய்து நஸ்டப்பட்டிருந்த கருணாகரனுக்கு உதவி செய்வதற்காக அம்முறை நாவலடிக்கிராம விவசாயிகளின் விதைபொருட்களை கொள்வனவு செய்யவில்லை. அவன் ஏற்கனவே தணிகாசலத்தையும் ஊர்ப்பிரமுகர்களையும் அழைத்து கருணாகரனின் நிலைமையை விளக்கிக்கூறியதால் தணிகாசலம் நாவலடிக்கிராம மக்களின் விளைபொருட்களை கருணாகரனுக்கு விற்குமாறு கூறினார். அதற்கிணங்க நாவலடி மக்கள் தமது பொருட்களை கருணாகரனுக்குக் கொடுத்தனர்.

ஆரம்பத்தில் கருணாகரன் மிகவும் நேர்மையாக நடந்து கொண்டான். பொருட்களை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யமுன்பே அதற்கான பணத்தின் ஒரு பகுதியை

விவசாயிகளுக்குக் கொடுத்தான். சில விவசாயிகள் கஸ்ரம் காரணமாக அவன் கொடுத்த பணத்தை வாங்கினர். அனுபவப்பட்ட விவசாயிகள் அவனிடம் பணம் வாங்க மறுத்துவிட்டனர். அறுவடை தொடங்கு முன்பு விவசாயிகள் தாம் அறுவடை செய்யப்போகும் நாளை தணிகாசலத்திற்கு தெரிவிப்பார்கள். தணிகாசலம் சந்தை நிலவரம் அறிந்து அவர்கள் அறுவடை செய்யும் தினங்கள் பற்றிக்கூறுவார். மாலையில் அறுவடை செய்யும் தோட்டத்திற்கு கருணாகரன் பாரம் சுமக்கும் வண்டியில் சென்று விவசாயிகள் சாக்கில் நிரப்பிக் கட்டிவைத்த விளைபொருட்களை நிறுத்து வாங்கி பாரம் சுமக்கும் வண்டியில் ஏற்றி கொழும்புக்கு அனுப்புவான். தன்னிடம் முற்பணம் பெற்ற விவசாயிகளுக்கு அவன் அதைக் கழித்துக்கொண்டு கொடுப்பான். முற்பணம் பெறாதவர்களுக்கு முழுப்பணத்தையும் கொடுப்பான்.

மணிவண்ணன் நாவலடிக் கிராமப்பக்கம் வருவதில்லை. அதனால் இனியும் வரமாட்டான் என்று நினைத்த கருணாகரன் காலப்போக்கில் தனது குணத்தைக் காட்டத் தொடங்கினான். சில விவசாயிகளிடம் பொருட்களை கொள்வனவு செய்துவிட்டு கொழும்பால் பணம் வந்த பின்பு தருகிறேன் என்றான். விவசாயிகள் ஓரிரு நாட்கள்தானே பொறுத்துக்கொள்வோம் என்று பொறுத்துக்கொண்டனர். ஆனால் கருணாகரன் ஓரிரு நாட்களில் அவர்களுக்கப் பணத்தைக் கொடுக்காமல் வாரக்கணக்கில் தவணை சொல்லி அதன் பின் கொடுத்தான். அதனால் விவசாயிகள் தணிகாசலத்தைக் கரைச்சல் கொடுக்கத்தொடங்கினர். அதனால் தணிகாசலம் கருணாகரனைச் சந்தித்தார்.

“விவசாயிகள் விதைத்த காலத்திலிருந்து நாலைந்து மாதங்களுக்கு பணத்தை அதிகமாகச் செலவு செய்கிறார்கள். எல்லா விவசாயிகளும் வசதியானவர்கள் அல்ல. அதனால் பிள்ளைகளினதும் மனைவிமாரதும் நகைகளை அடைவு வைத்தும், நண்பர்களிடமும் உறவினர்களிடமும் கடன் பட்டும்தான் விவசாயம் செய்கிறார்கள். இதை நீங்கள் உணரவேண்டும். பல விவசாயிகளிடம் நீங்கள் விளைபொருட்கள் கொள்வனவு செய்வதால் பணத்தட்டுப்பாடு ஏற்படும்தான். ஆனால் பொருட்களை விற்ற பின்பும் பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்றுவது சரியல்ல. எனவே உடனடியாகப் பணத்தைக் கொடுங்கள்” என்றார்.

அதன் பின் கருணாகரன் ஒழுங்காகப் பணம் கொடுத்தான். அன்று இராமநாதன் தணிகாசலத்திடம் வந்து சொன்னார்; “தம்பி கருணாகரன் நிறையைக் குறைத்துச் சொல்கிறான்போல் தெரிகிறது எதற்கும் கவனித்துப்பார்” என்றார்.

அன்று சபாநாயகம் வெங்காயம் அறுவடை செய்திருந்தான். முழு வெங்காயத்தையும் அறுபது சாக்குகளில் நிரப்பிக் கட்டியிருந்தான். தராசுடன் சபாநாயகத்தின் தோட்டத்திற்கு வந்த தணிகாசலம் அறுபது சாக்குகளிலும் இருந்த வெண்காயத்தை நிறுத்து வைத்திருந்தார். இதை அறியாத கருணாகரன் தான் கொண்டுவந்த தராசில் வெண்காயத்தை நிறுத்தான். இரண்டு பேருக்கும் இடையில் ஐம்பது கிலோ வித்தியாசம் இருந்தது.

தணிகாசலத்திற்கு என்றுமில்லாத கடும் கோபம் வந்தது; ‘‘நீ மிகவும் கெட்டவன் என்று தெரிந்தும் மணிவண்ணனுடைய வேண்டுகோளுக்காகத்தான் விவசாயிகள் தமது விளைபொருட்களை உனக்குத்தந்தனர். ஆனால் நீ ஏழை விவசாயிகளின் பொருட்களை நடுநிலைமை தவறி பெற்றிருக்கிறாய். நடுவு நிலைமை தவறி பிறரின் பொருட்களைப் பெறுபவனது குடும்பம் அழிவதோடு பெருங்குற்றமும் வந்துசேரும். இனிமேல் நாவலடி விவசாயிகள் உனக்கு பொருட்களைத் தரமாட்டார்கள். இனிமேல் இந்தப்பக்கம் வரவேண்டாம். இன்றைக்கே நீ ஆயிரம் ரூபா கொள்ளை அடித்திருக்கிறாய். இவ்வளவு நாட்களும் நீ எவ்வளவற்றைக் கொள்ளையடித்திருப்பாய்’’ என்றார். கூடியிருந்த மக்கள் தணிகாசலத்தின் கோபத்தைக்கண்டு திகைத்துவிட்டனர்.

171. நடுவுஇன்றி நன்பொருள் வெ∴கின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

நடுவு நிலையை இல்லாமல் பிறரின் பொருளை ஒருவன் கவர நினைத்தால், அவனது குடி கெடுவதோடு குற்றமும் வந்து சேரும்.

அஞ்சுவோர்

சபாநாயகம் மிகவும் வறியவன். அத்துடன் பாம்பு கடித்தமையால் இரண்டு வாரங்கள் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிட்சை பெற்று வீட்டுக்கு வந்த போதும் அவனால் முன்பு போல் உழைக்க முடியவில்லை. எழுந்து நடந்தால் தலை சுற்றியது. களைப்பாக இருந்தது. அதனால் அவன் வேலைக்கோ தோட்டத்திற்கோ செல்வதில்லை. அவனது மனைவியும் பிள்ளைகளும்தான் நட்ட வெங்காயத்திற்கு நீர் பாய்ச்சினர். பெண் ஒருத்தி கஸ்ரப்பட்டு கடுமையாக உழைத்த உழைப்பை பாவம் பழிக்கு அஞ்சாது சுரண்டிய கருணாகரனை மன்னிக்க தணிகாசலத்தால் முடியவில்லை.

அதனால் மணிவண்ணனிடம் சென்றார். மணிவண்ணன் அயலூருக்கு வியாபார விடயமாகச் சென்றதால் அவன் வரும்வரையில் காத்திருந்தார். இரவு எட்டுமணிக்கே மணிவண்ணன் வீட்டுக்கு வந்தான்.

“பெரிய பிழை நடந்துவிட்டது. நடுவு நிலைமை தவறாத நீங்கள் பிறரின் செல்வத்தை அபகரிப்பதால் இன்பம் உண்டாகும் என்று தெரிந்திருந்தும் அறத்திற்கு பயந்து நேர்மையான வழியில் நடந்தமையால் தான் நானும் எனது கிராம மக்களும் உங்களுக்கு எமது விளைபொருட்களைத் தந்தோம். ஆனால் நீங்கள் அதர்ம வழியில் பொருள் சேர்க்கும் கருணாகரன் கஸ்டப்படுகிறான் என்பதற்காக எமது விளைபொருட்களை கருணாகரனுக்குக் கொடுக்கச்சொன்னீர்கள். உங்களுக்காக நாம் விருப்பமின்றி அவனுக்குப் பொருட்களைக் கொடுத்தோம். அவன் அநீதியான முறையில் நடந்து கெட்டவன். இனியாவது திருந்தி நல்லமுறையில் நடப்பான் என்று நம்பினோம். ஆனால் அவன் தான் திருந்த மாட்டான் என்று நிரூபித்துவிட்டான். இன்று அறுபது சாக்கு வெண்காயத்தை சபாநாயகத்திடம் வாங்கினான். ஐம்பது கிலோ நிறை குறைத்துத்தான் நிறுத்திருக்கிறான்.”

மணிவண்ணன் அதிர்ந்து போனான். “தான் கஸ்டப்பட்டு விட்டதாகவும், தனக்கு உதவி செய்யச் சொல்லி அவன் வந்து என்னிடம் கெஞ்சியதால் தான் நான் உங்களிடம் வந்து அவனுக்குப் பொருட்களைக் கொடுக்கச் சொன்னேன். தான் இனிமேல் தவறாக நடக்க மாட்டன் என்று சத்தியம் பண்ணினான்.” மணிவண்ணனின் குரல் தழுதழுத்தது.

“பாவம் அந்தப் பெம்பிளை வேகா வெயிலுக்கை கஸ்டப்பட்டு உழைச்சதாலை தான் அறுபது சாக்கு வெண்காயம் விளைந்தது. ஈவு இரக்கமில்லாமல் ஐம்பது கிலோ வெண்காயத்தை அந்த ஏழைப் பெண்ணிட்டையே வெட்டினவனெண்டால் முந்தி எவ்வளவு வெட்டியிருப்பான். இரகுநாதன் வந்து கருணாகரன் நிறைகுறைத்து நிறுக்கிறான் போலத் தெரிகிறது கவனித்துக் கொள்ளுங்கோ என்று சொன்னபிறகு நான் தராசு கொண்டுபோய் நிறுத்து வைத்தனான். பின் கருணாகரன் வந்து நிறுத்தபோது ஐம்பது கிலோ குறைஞ்சிட்டுது..” ஆத்திரப்பட்டார் தணிகாசலம்.

“இனிமேல் நான் தவறு செய்ய மாட்டன் அண்ணை. பாவம் பிழைப்பில்லாமல் கஸ்டப்படுகிறான் என்பதற்காக இரக்கப்பட்டன். அவன் என்ரை மரியாதையைக் கெடுத்திட்டான். இனிமேல் நான் அப்படிச் சொல்லமாட்டன். நானே வந்து உங்களின் பொருட்களைக் கொள்முதல் செய்யிறன்” என்றான் மணிவண்ணன்.

மறுநாள் சின்னத்தம்பியின் உருளைக்கிழங்கும் கந்தசாமியின் வெண்காயமும் அறுவடை செய்யப்பட்டு சாக்கில் அடைக்கப்பட்டன. தணிகாசலம் தராசு கொண்டு வந்து அவற்றை நிறுத்துப்பார்த்தார். மாலை ஐந்து மணிக்கு மணிவண்ணன் பாரம் சுமக்கும் வண்டியில் வந்து உருளைக்கிழங்கையும் வெண்காயத்தையும் நிறுத்து ஏற்றினான். தணிகாசலத்தின் நிறையை விட உருளைக்கிழங்கில் ஐந்து கிலோவும் வெண்காயத்தில் நான்கு கிலோவும் கூட இருந்தன. அதன் பின் தணிகாசலம் அறுவடையாகும் பொருட்களை நிறுக்கவில்லை.

மாதம் ஒன்று கழிந்தது. அன்று சிவராசாவின் தோட்டத்தில் வெண்காயம் அறுவடை செய்யப்பட்டது. சிவராசா பெரிய விவசாயி. ஏக்கர் கணக்கில் விவசாயம் செய்பவன். அன்று அவன் நூற்றியம்பது சாக்குகளில் வெண்காயத்தை நிரப்பியிருந்தான். தணிகாசலம் தராசு கொண்டுவந்து அதை நிறுத்துப்பார்த்தார். மாலையில் வந்து மணிவண்ணன் நிறுத்து பாரம் சுமக்கும் வண்டியில் ஏற்றினான். இருவருடைய நிறையும் சமமாக இருந்தது. தணிகாசலத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.. அதனால் மணிவண்ணனுக்கு தான் முன்பே வெண்காயத்தை நிறுத்து வைத்ததைச் சொன்னார்.

“பிறரின் பொருட்களைக் கவர்வது இன்பம்தான். ஆனால் பழி விடாது. எனக்கு போதிய சொத்து இருக்கு. நான் உழைக்கத்தேவையில்லை. ஆனால் கஸ்டப்படும் விவசாயிகள் நட்டமடையக்கூடாதென்பதற்காகத்தான் தொழில் செய்கிறேன்” என்றான் மணிவண்ணன்.

172.படுபயன் வெ.ஃகிப் பழிப்படுவ செய்யார்

நடுவன்மை நாணு பவர்.

நடுவு நிலைமை அல்லாதவற்றைக் கண்டு அஞ்சி ஒதுங்குகின்றவர்கள், பிறரின் பொருட்களைக் கவர்வதால் வரும் பயனை எண்ணி அப்பொருள் மீது விருப்பம் கொள்ளும் பழியான செயலைச் செய்யார்.

நல்லோரின் செயல்

ஞானப்பிரகாசத்தின் வீட்டுக்கு நகரின் பிரபலமான கட்டிட ஒப்பந்தக்காரரான சோமேஸ்வரபிள்ளையும் சிவசுந்தரமூர்த்தியும் வந்தனர். அவர்களை வரவேற்று ஆசனத்தில் இருத்தினார் ஞானப்பிரகாசம். ‘‘உங்களுக்கு என்னைத் தெரியுமென்று நினைக்கிறேன்’’ என்றார் சோமேஸ்வரபிள்ளை.

‘‘உங்களைத் தெரியாதவர்கள் யார் இருக்கிறார்கள்?’’ என்றார் ஞானப்பிரகாசம்.

‘‘பெரிய பதவி உயர்வு பெற்றதைப் பாராட்டிவிட்டுப் போகத்தான் வந்தனான். வீடு தெரியாது. அதுதான் சிவசுந்தரமூர்த்தி ஐயாவைக் கூட்டிவந்தனான். முந்தி உங்களின் பதவியில் இருந்து பதவி உயர்வு பெற்று கொழும்புக்கு மாற்றமான சண்முகவடிவேலு என்னுடைய நண்பர். நல்ல மனிதர்.’’ என்றார் சோமேஸ்வரபிள்ளை.

ஞானப்பிரகாசம் எதுவும் பேசவில்லை. சோமேஸ்வரபிள்ளை கட்டிட ஒப்பந்தக்காரர். நகரில் மிகவும் பிரபலமானவர். திணைக்களங்களிலும் அமைச்சிலும் செல்வாக்குள்ளவர். மாவட்டத்தில் கட்டப்படும் பெரும் பெரும் கட்டிடங்களை ஒப்பந்தம் செய்து கட்டிக்கொடுப்பவர்.

வேலையாள் கொண்டுவந்த தேனீரை எடுத்துக் குடித்த சோமேஸ்வரபிள்ளை கோப்பையை மேசைமீது வைத்துவிட்டுச் சொன்னார்; ‘‘மாவட்ட மருத்துவமனைக்கு ஐந்து மாடிக் கட்டிடம் ஒன்று கட்டுவதற்கு ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விப்பத்திரம் கோரி இருக்கிறீர்கள்’’ நிறுத்தினார் சோமேஸ்வரபிள்ளை.

ஞானப்பிரகாசம் எதுவும் பேசாமல் இருந்தார். அவர்கள் வந்த காரணம் அவருக்கு புரிய ஆரம்பித்தது.

‘‘சோமேஸ்வரபிள்ளை அந்தக் கட்டிடத்தை எடுத்துச் செய்ய விரும்புகிறார். எங்கடை திணைக்களகத்திலை முந்தி விண்ணப்பம் கோரியபின் சோமேஸ்வரபிள்ளைக்குத்தான் கொடுப்பது’’ என்றார் சிவசுந்தரமூர்த்தி.

எதுவும் தெரியாதது போல் கேட்டார் ஞானப்பிரகாசம்; ‘‘எப்படிக் கொடுப்பது? பலரும் விண்ணப்பித்திருப்பார்கள். கேள்வி கோரிய விண்ணப்பப்பத்திரத்தை பிரித்துப் பார்த்து யார் குறைவாகக் கேட்டிருக்கிறார்களோ அவர்களுக்குத்தானே கொடுப்பது வழக்கம்.’’

சிவசுந்தரமூர்த்தி மனதுக்குள் சிரித்துக்கொண்டார். எனினும் வெளிப்படுத்தாது சொன்னார்; ‘‘அது தான் நடைமுறை. ஆனால் அப்படி யாரும் செய்யுறேல்லை.- கடந்த பத்து வருடங்களாக நான்தான் பெரிய பெரிய கட்டிடங்களை எடுத்துக் கட்டிக்கொடுக்கிறனான். ஒப்பந்தம் கோரினால் பலரும் விண்ணப்பிக்கத்தான் செய்வார்கள்.’’ சற்றுத் தயங்கிய சோமேஸ்வரபிள்ளை சிவசுந்தரமூர்த்தியைப் பார்த்தார்.

‘‘தொழிலில் கொஞ்சம் அனுபவம் தேவை. நீங்கள் என்னுடைய கிளையில் வேலை செய்தமையால் சில விஷயங்கள் தெரியாமல் இருக்கும். வழமையாக எல்லோரையும்போல் சோமேஸ்வரபிள்ளையும் விண்ணப்பிப்பார் ஆனால் தொகை போடமாட்டார். விண்ணப்பித்த படிவங்களைப் பிரித்துப்பார்க்கும் அதிகாரிகள்தான் தொகையைப் போடுவார்கள். எல்லா விண்ணப்பப் பத்திரங்களையும் பார்வையிட்டு அவை எல்லயவற்றிலும் பார்க்க குறைவான தொகையைப் போடுவார்கள்.’’

ஞானப்பிரகாசம் சில கணங்கள் மௌனமாக இருந்தார். பின் சொன்னார்; ‘‘ஐயா நான் மிகவும் நேர்மையாக வாழ்ந்து பழக்கப்பட்டவன். என்னால் அறத்திற்குப் புறம்பான வேலைகளைச் செய்யமுடியாது.’’

‘‘இதில் பெரிதாக ஏதும் இல்லை. உங்களோடு விண்ணப்பங்களைப் பிரித்துப் பார்ப்பதற்கு இருக்கும் அதிகாரிகள் யாபேரும் இதைப் பலவருட காலமாகச் செய்துவருகிறார்கள். நீங்கள் தலைமை அதிகாரி. முன்பிருந்தவர் எம்மோடு ஒத்துளைத்தார். இலட்சக்கணக்கில் பணம் கொடுத்தோம். நீங்கள் ஒத்துளைத்தால் பத்து இலட்சம் ரூபா தருவேன்’’ என்றார் சோமேஸ்வரபிள்ளை.

‘‘தயவு செய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்கள் தரும் பணத்தால் எனக்குக் கிடைக்கப்போகும் சிற்றின்பத்தைவிட மேலான அறத்தால் வரும் பேரின்பத்தையே நான் விரும்புகிறேன்.. நீங்கள் தயவு செய்து சென்றுவிடுங்கள்’’ என்றார் ஞானப்பிரகாசம்.

சோமேஸ்வரபிள்ளை எதையோ சொல்ல முயன்றார். அதற்குமுன் ஞானப்பிரகாசம் எழுந்து வீட்டினுள் சென்றுவிட்டார்.

அடுத்த வாரம் விண்ணப்பங்கள் பிரிக்கப்பட்டபோது குறைவாக கேள்வி கோரிய நடராசலிங்கத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. முதல் தடவையாக ஒப்பந்தம் கை மாறியதையிட்டு ஒப்பந்தக்காரர் மகிழ்ச்சியடைந்தனர்.

173. சிற்றின்பம் வெ∴கி அறன்அல்ல செய்யாரே
மற்றுஇன்பம் வேண்டு பவர்.

அறநெறியால் வந்தடையும் பேரின்பத்தை விரும்புபவர்கள் சிற்றின்பத்தைத் தரும் அறனல்லாத செயல்களைச் செய்யார்.

வறியவர்க்கு அழகு

ஞானப்பிரகாசம் பெரும் வசதியானவர் அல்ல. அவரது தந்தை ஒரு விவசாயி. அவருக்கு மூன்று ஆண் சகோதரர்களும் ஐந்து பெண் சகோதரர்களும் உள்ளனர். அவர்கள் எல்லோரும், விவசாயம் செய்து வந்தனர். ஞானப்பிரகாசம் படிக்கும்போது கல்வியில் மிகுந்த அக்கறை காட்டினார். க.பொ.த உயர்தரப்பரீட்சை எடுக்கும் வேளையில் அவர் விண்ணப்பித்து பரீட்சை எழுதியிருந்த எழுதுவினைஞர்களைத் தேர்ந்தெடுக்கும் பரீட்சையில் சித்தியடைந்தார். அதனால் தனது உயர் கல்வியைக் கைவிட்டு கச்சேரியில் எழுதுவினைஞராகச் சேர்ந்தார். அவர் தொடர்ந்து கல்வி கற்றிருந்தால் பல்கலைக்கழகத்திற்குச் சென்றிருப்பார். ஆனால் குடும்பத்தில் நிலவிய வறுமை காரணமாக படிப்பை அவர் கைவிட்டு விட்டு உத்தியோகத்தில் சேர்ந்தார். அவர் உத்தியோகம் பார்த்த போதும் அவரது சகோதரர்கள் மிகவும் கஸ்ரப்பட்டுக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு அவ்வப்போது உதவவே அவரது சம்பளம் போதாமல் இருந்தது. ஞானப்பிரகாசத்திற்கு நான்கு பிள்ளைகள். அவர்களில் ஒருத்தி பெண். நால்வரும் கணபதி மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கிறார்கள்.

தனது வருமானத்திற்கு அளவாக குடும்பத்தை திட்டமிட்டு நடத்திய போதும் மாதமுடிவில் அவருக்குப் பற்றாக்குறை ஏற்படும். ஆனால் அவற்றைப் பற்றியெல்லாம் ஞானப்பிரகாசம் கவலைப்படாது மிகவும் நேர்மையாக வாழ்ந்து வந்தார். அவர் எழுதுவினைஞராக கடமையாற்றிய காலங்களில் மக்களுக்குத் தன்னாலான பல உதவிகளைச் செய்து கொடுப்பார். இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்கள் ஓய்வூதியம் பெறவரும் வேளைகளில் அவர்களிடமிருந்து இலஞ்சம் பெறாமல் உரிய வேலைகளைச் செய்து கொடுப்பார். அவர் செய்துகொடுத்த வேலைகளுக்கு அவரின் தலைமை அதிகாரியான சிவசுந்தரமூர்த்தி இலஞ்சம் பெற்றுவிடுவார். அத்துடன் தான் இலஞ்சம் பெற்றுவிட்டு ஞானப்பிரகாசத்தைக்கொண்டு பலவேலைகளைச் செய்விப்பார். அவர் இலஞ்சம் பெறுகிறார் என்று

தெரிந்தும் ஞானப்பிரகாசம் கவலைப்படுவதும் இல்லை. கேட்பதும் இல்லை கடையின் சொந்தக்காரர் வரி மதிப்பிடப்படும் போது கடையின் பெறுமதியைக் குறைத்தப் போடுவார்கள் வரி மதிப்பீட்டு அதிகாரிகள் வர்த்தகர்கள் குறிப்பிட்ட பெறுமதியை இலஞ்சம் பெற்றுக்கொண்டு சரியென உறுதி செய்வார்கள். ஞானப்பிரகாசம் வர்த்தகக்கிளையில் கடமையாற்றியபோது பல வர்த்தகர்கள் அன்பளிப்புப் பொருட்களைக் கொண்டு வருவார்கள். ஆனால் அவற்றை ஞானப்பிரகாசம் வாங்கமாட்டார். கட்டிட ஒப்பந்தங்கள் கைச்சாத்திட்டதும் அதிகாரிகளுக்கு ஒப்பந்தகாரர் பெரும் விருந்துகள் வைப்பார்கள். ஞானப்பிரகாசத்திற்கும் அழைப்புக்கிடைக்கும். ஆனால் ஞானப்பிரகாசம் அதில் கலந்து கொள்ளமாட்டார். கச்சேரியில் வேலை செல்வதற்காக சிற்றூழியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப்பரீட்சை நடைபெற்றது. ஐம்பது சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்களே இருந்தன. ஆனால் விண்ணப்பித்தோர் ஐயாயிரம் பேர். பலர் வழக்கம் போல் இலஞ்சம் கொடுத்து தொழிலைப் பெறமுயன்றனர். அன்று காலை சிவசுந்தரமூர்த்தி ஞானப்பிரகாசத்தின் வீட்டுக்கு வந்தார்.

“நீங்கள் என்னுடன் வேலை செய்தமையாலும் எனது ஊரவன் என்பதாலும் சொல்கிறேன் கஸ்ரப்பட்டு நேர்மையாக வேலை செய்வதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. பதவி ஒருவனுக்கு ஒருமுறைதான் வரும் கடவுள் தந்த சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்தவேண்டும். உங்களின் சகோதரர்கள் எல்லோரும் கஸ்ரப்படுகின்றனர். நீங்களும் கஸ்ரப்படுகிறீர்கள். சந்தர்ப்பத்தை பயன்படுத்துங்கோ. சிற்றூழியர் நியமனத்தில் ஒருவனுக்கு பத்தாயிரம் ரூபா வாங்கலாம்.” சிவசுந்தரமூர்த்தி பேசும்போது குறுக்கிட்டார் ஞானப்பிரகாசம். “என்னுடன் இப்படியான கதைகளைக் கதைக்க உமக்கு எப்படித்துணிவு வந்தது. நீங்கள் சொல்வது போல பதவி ஒரு முறைதான் வரும். கடவுள் தந்த சந்தர்ப்பத்தை நல்லமுறையில் பயன்படுத்தவேண்டும் என்பதற்காக நேர்மையான முறையில் நடக்க நான் தீர்மானித்து விட்டேன். ஓர் உயர் அதிகாரியின் வீட்டுக்கு வந்து இலஞ்சம் கொடுக்க முற்பட்ட உம்மைக் கைது செய்ய என்னால் முடியும். நீங்கள் என்னுடன் வேலை செய்தமையாலும் எனது ஊரவன் என்பதாலும் விடுகிறேன். இனிமேல் இப்படிப் பேசினால் கடுமையாக நடந்து கொள்வேன். எனது குடும்பத்திவர்களின் வறுமையைக் காட்டி எனது ஐம்புல ஆசைகளை நீர் தூண்டப் பார்க்கிறீர். ஆனால் அது உம்மால் முடியாது” என்றார் ஞானப்பிரகாசம்.

சிவசுந்தரமூர்த்தி பயத்துடன் எழுந்து சென்றார்.

174.இலம்என்று வெ∴குதல் செய்யார் புலம்வென்ற

புன்மையில் காட்சி யவர்.

ஐம்புலன்களையும் வென்ற அறிவுடையோர் தாம் வறுமையடைந்த போதிலும் பிறரின் பொருளை விரும்பமாட்டார்.

அறிவின் பயன்

இரவு எட்டு மணிக்கு தணிகாசலம் ஞானப்பிரகாசத்தின் வீட்டுக்கு வந்தார். அவர் வந்தபொழுது அவருக்குத்தெரியாத பலர் ஞானப்பிரகாசத்துடன் கதைத்துக்கொண்டிருந்தனர். தணிகாசலத்தைக் கண்டதும் ஞானப்பிரகாசம் எழுந்து வந்து சொன்னார்; ‘‘நான் முக்கியமான சில அதிகாரிகளுடன் கதைத்துக்கொண்டிருக்கிறேன். ஒரு மணித்தியாலம் கழித்து வாருங்கள்.’’

தணிகாசலம் மஹா கணபதி ஆலயத்திற்கு வந்தார். விக்னேஸ்வரமூர்த்தியும் வேலாயுதபிள்ளையும் அரச மர நிழலில் இருந்தனர். சுவாமியாரையும் வீமனையும் காணவில்லை; ‘‘நீங்கள் இன்றைக்கு வரமாட்டீர்கள் என்று நினைத்தேன்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘ஓர் அலுவலாக ஒருவரைச்சந்திக்கச் சென்றேன். அவரைச் சந்திக்க முடியவில்லை. மகா கணபதியைக் கும்பிடாமல் போனதற்கு தண்டனைபோல் தெரிகிறது’’ சிரித்தார் தணிகாசலம்.

‘‘கோபுர வேலை முடிய வர்ணப்பூச்சுப் பூசவேண்டும். அதற்கு நாலைந்து இலட்சம் ரூபா தேவை. என்ன செய்யிறதாய் உத்தேசம்?’’ என்று கேட்டார் வேலயயுதபிள்ளை.

‘‘இவ்வளவு கட்டிடங்ளையும் கட்டிய மஹா கணபதி இதற்கு வழி விடமாட்டாரா என்ன?’’ என்ற தணிகாசலம். சிறிது நேரம் கதைத்துவிட்டு மகா கணபதியை வணங்கினார். அவரின் மனதில் இருந்தவற்றைக் மஹா கணபதிக்குக் கூறிவிட்டு அது நடைபெறவேண்டுமென்று வணங்கினார்.

தணிகாசலம் ஞானப்பிரகாசத்தின் வீட்டுக்குச்சென்ற போது அங்கு யாரும் இருக்கவில்லை. ஞானப்பிரகாசம் மட்டும் வெளி விறாந்தையில்

அமர்ந்திருந்தார். தணிகாசலத்தை கண்டதும் ‘‘வாருங்கள்’’ என்று வரவேற்றார்.

தணிகாசலம் அவருக்கு அருகில் சென்று அமர்ந்து கொண்டார். எனினும் கதையைத் தொடங்க தயங்கினார்.

‘‘என்னத்திற்கு அண்ணை வந்தநீங்கள். முந்திய வேலையிலையே இருந்திருக்கலாம். பதவி உயர்வு பல பிரச்சனைகளைக் கொண்டந்திருக்கு’’ என்றார். ஞானப்பிரகாசம்.. அவரின் குரலில் வேதனை தொனித்தது.

‘‘பிரச்சினைகள் இல்லாமல் வாழ்க்கையா? மனிதனாகப் பிறந்தாலே பிரச்சினை தான். அதுகும் உயர் அதிகாரி என்றால் பிரச்சினைகளின் முழு வடிவமே அவர்தானே’’ சிரித்தார் தணிகாசலம்.

‘‘சரியாகச் சொன்னீர்கள் என்று சிரித்த ஞானப்பிரகாசம் சிறிதுநேரம் கழித்துச் சொன்னார்; ‘‘நேர்மையாக வாழ நினைக்கிறவன் உயர் பதவியிலை இருக்கக்கூடாது. ஒவ்வொரு விஷயத்திற்கும் தரகர்மார் வரீனை.. கட்டிடம் கட்ட ஒப்பந்தம் கோரினால் தரகன் வாறான். சிற்றூழியர் நியமனமென்றால் தரகன் வாறான். கடை குத்தகைக்கு கொடுப்பதென்றால் தரகன் வாறான். சீச்சீ எல்லவற்றிற்கும் காசு வாங்கிப் பழகீட்டாங்கள். நேர்மையாக வாழ்ற என்னாலை இதுகளை பொறுக்கமுடியேல்லை. படிக்காதவன் இப்படியான செயல்களில் ஈடுபட்டால் மன்னிக்கலாம்.. பல நூல்களைப் படித்துப் பட்டம் பெற்றவங்களே பிழைப்புக்காக தாம் படித்த படிப்பை மறந்து இலஞ்சம் கொடுக்கவாறாங்கள். காலைப்பிடிக்கிறாகள். தெரிந்தவை அறிந்தவையைக் கூட்டி வாறார்கள். என்னாலை வேலை செய்ய முடியவில்லை..’’

‘‘பல அரிய நூல்களை நுணுகி ஆராய்ந்து கற்றவர்கள் தமது அறிவை இழந்து வரும் போது அறிவுள்ள நீங்கள் அவர்களை நெறிப்படுத்த வேண்டும். அத்துடன் அறிவாளியான நீங்கள் உயர் பதவியில் இருப்பதால் நேர்மையும் அடக்கமும் நிறைந்திருக்கிறதென்று மகிழ்வடைதல் வேண்டும். நீங்கள் இப்பதவியில் இருந்து விலகினால் அறத்திற்குத் தீங்கேற்படும். புதிதாக நியமனம் பெறுபவன் அறத்தைக்காக்காது நேர்மையீனமான செயல்களில் ஈடுபட்டால் உங்களுக்கும் அப்பழி வந்து சேரும். நீங்கள் ஏன் இதை கடினமானது என்று நினைக்கிறீர்கள். எல்லாப்பாரத்தையும் மஹா கணபதி மீது சுமத்தி விட்டுக் கடமையைச் செய்யுங்கள். நீங்கள் புதியவர். உங்களை யாரும் புரிந்து கொள்ளவில்லை. இன்னும் சில காலத்தில் புரிந்துகொண்டால் யாரும் வரமாட்டார்கள். உங்கள் மூலம் ஏழை எழியவர்கள் பயனடைகிறார்கள். நீதி நிலை நாட்டப்படுகிறது என்ற திருப்தி மக்களுக்கு உண்டு’’ என்றார் தணிகாசலம்.

ஞானப்பிரகாசம் பூரித்துப் போனார்; ‘‘உங்கள் வார்த்தைகள் கிருஷ்ணரின் உபதேசம் போல் இருக்கிறது. இனி நான் கவலைப்படமாட்டேன். நீங்கள் வந்த விஷயத்தைச் சொல்லுங்கோ’’ என்றார் தணிகாசலம்.

சிறிது நேரம் தயங்கிய தணிகாசலம் சொன்னார்; ‘‘சபாநாயகத்திற்கு பாம்பு கடித்த பிறகு தொழில் செய்ய முடியாமல் இருக்கிறான். ஆறு பேரைக்கொண்ட குடும்பம் சரியாய் கஷ்டப்படுது. அவன்ரை மகன் சிற்றூழியர் பதவிக்கு விண்ணப்பிச்சிருக்கிறான்.’’

ஞானப்பிரகாசம் எதுகும் பேசாமல் யோசித்தார்; ‘‘நீங்கள் நேர்மையானவர் என்பது எனக்குத்தெரியும். சலுகை காட்டச் சொல்லி நான் சொல்லேல்லை நிலைமையைச் சொன்னான். இனி உங்கடை விருப்பம்.’’

சிறிதுநேரம் யோசித்த ஞானப்பிரகாசம் ‘‘சரி நான் செய்து கொடுக்கிறேன்’’ என்றார் ஞானப்பிரகாசம். தணிகாசலம் பூரித்துப் போனார்.

175.அ.ஃ.கி அகன்ற அறிவுஎன்னாம் யார்மாட்டும்

வெ.ஃ.கி வெறிய செயின்.

பிறரின் பொருளைக் கவர விரும்பி தீய செயல்களைச் செய்தால், சிந்திக்கும் திறனை உடைய அறிவால் பயன் என்ன?

கெட்டழியாதோர்

சபாநாயகத்தின் மகன் செந்தூரனுக்கு கச்சேரியில் சிற்றூழியர் பதவி கிடைத்தது. அதனால் மகிழ்ந்த தணிகாசலம் ஞானப்பிரகாசத்தின் வீட்டுக்குச் சென்று நன்றி கூறினார்.

‘‘அண்ணை நான் செய்ததாக சபாநாயகத்திற்கோ அல்லது வேறு யாருக்காவதோ சொல்லாதீர்கள். ஏனெண்டால் நாளைக்கு ஊரில் உள்ள எல்லோரும் வந்து வீட்டில் இருப்பார்கள். அதனால் ஏராளமான பிரச்சனைகள் வரும். பிறகு இனத்தவர் அயலவர்களுக்காக நான்

கடமை தவறவேண்டிய நிலையும் ஏற்படும். அற வழியில் வாழும் ஒருவன் பந்தபாசங்களாலும் நட்பாலும் குற்றம் குறை கேட்க வேண்டிய நிலைக்கு ஆட்படுவன். சபாநாயகத்தின் குடும்பத்தைப் பற்றி நீங்கள் சொன்னதற்காகவோ அல்லது இரக்கப்பட்டோ நியமனம் வழங்கப்படவில்லை. நாம் கேட்ட தகுதிகள் யாவும் இருந்ததால்தான் நியமனத்தை வழங்கினேன்'' என்றார் ஞானப்பிரகாசம்.

''யார் அறியாவிட்டாலும் தொழிலைப் பெற்றவன் அறிதல் வேண்டும்'' என்று தணிகாசலம் கூறும் போது ஞானப்பிரகாசம் குறுக்கிட்டார்; ''இல்லை இல்லை யாரும் அறிய வேண்டாம். இறைவன் ஒருவன் நான் செய்வது நியாயமானது என்று அறிந்தால் போதும்'' என்றார் ஞானப்பிரகாசம்.

தணிகாசலம் அதற்கு விடை சொல்லத்தயங்கினார். பின் தான் சபாநாயகத்தின் மகனுக்காக பரிந்த பேசியது பிழையோ என்று நினைத்தார். சபாநாயகத்தின் கஸ்ரங்களைக் கண்டு இரங்கியமையால் தான் வந்து சொன்னார். ஞானப்பிரகாசத்தின் கதைகளை நினைக்க அவருக்கு கவலையாக இருந்தது. ''பதவியில் உள்ள ஒருவன் உதவி செய்யக் கூடாது. கடமையைத் தான் செய்தல் வேண்டும்'' என்று அடிக்கடி கூறும் விக்னேஸ்வரமூர்த்தியை ஒரு கணம் நினைத்துப் பார்த்தார்.

''எண்ணண்ணை யோசிக்கிறியள்?''

''ஒன்றுமில்லை. நான் சபாநாயகத்தின் கஸ்ரம் கவலையைப் பார்த்துப் பொறுக்கமுடியாததால் தான் வந்து உங்களுடன் கதைத்தனான். அவை ஒருத்தரும் சொல்லவில்லை. அதோடை நானும் சொல்லவில்லை. இது பிழையெண்டால் மன்னிச்சுக் கொள்ளுங்கோ மற்றையோர்க்குஉதவி செய்ய வேண்டுமென்று நான் நினைக்கிறன். நீங்களும் விக்னேஸ்வரமூர்த்தியும் கடமையைச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்கள். நான் இனிமேல் உங்களின் கடமையில் குறுக்கிடமாட்டன்'' என்றார் தணிகாசலம்

''நேர்மையாக நாங்கள் நடந்தாலும் மற்றையோர் குற்றம் தானே சொல்கிறார்கள்.''

''எதற்கும் குற்றம்சொல்லிப் பழக்கப்பட்டவர்களை நாம் திருத்தமுடியாது. அதோடு அவர்கள் திருந்தவும் மாட்டார்கள். அவர்கள் கூறுவதற்கு நாம் மதிப்பளித்துக் கொண்டிருந்தால் கடமையைச் செய்ய முடியாது'' என்றார் தணிகாசலம்.

தணிகாசலத்தின் வார்த்தைகள் ஞானப்பிராகாசத்தின் மனதை வருடிக்கொண்டிருந்தன. என்னதான் நுல்களைக் கற்றுத் தேர்ந்தாலும் அனுபவம் தான் முக்கியம் என்று உணர்ந்த ஞானப்பிரகாசம் ‘‘குறைநினைத்துக் கொள்ளாததைங்கோ என்னுடைய வாழ்க்கையை ஓர் அமைப்புக்குள்ளை கொண்டுவந்திட்டன். அதாலை கஸ்டமாக இருக்கு.’’

‘‘கஸ்ரம் என்று நினைத்தால் எதையும் செய்யமுடியாது இலகுவானது என்று நினைத்தாலும் செய்ய முடியாது. ஓர் அமைப்புக்குள் வாழ்க்கையை கொண்டு நடத்துவதனால் தான் சிறந்தவனாக வரமுடியும்’’ என்றார் தணிகாசலம்.

‘‘அடிக்கடி வாருங்கோ உங்களின் ஆக்கபூர்வமான பேச்சுக்கள் எனது மனதிற்கு தைரியமூட்டுகின்றன’’ என்றார் ஞானப்பிரகாசம்.

தணிகாசலம் தனது வீட்டுக்கு வந்த போது அங்கு சபாநாயகமும் மகன் செந்தூரனும் இருந்தனர். தணிகாசலத்தைக் கண்டதும் இருவரும் எழுந்தனர்.

‘‘என்ன தகப்பனும் மகனும் வந்திருக்கிறியள்?’’

‘‘நீங்கள் பெரிய மனிதன் அண்ணை. நீங்கள் சொல்லாவிட்டாலும் எமக்குத் தெரியும் வேலாயுதண்ணை எல்லாவற்றையும் சொன்னவர். நான் என்ன தான் பேசினாலும் நீங்கள் பெரிய மனிதன் தான்’’ என்றார் சபாநாயகம்.

செந்தூரன் கையில் வைத்திருந்த அன்பளிப்புக் பொருள் ஒன்றைக் கொடுத்தான்; ‘‘தம்பீ இதெல்லாம் நான் வாங்குவதில்லை, வாங்கவும் மாட்டேன். நீ அன்பாகத்தர மற்றையோர் வித்தியாசமாக நினைப்பார்கள். அற வழியில் செல்லும் ஞானப்பிரகாசம் நான் உங்களிடமிருந்து பொருட்களைப் பெற்றுக் கொண்டதை அறிந்தால் என்னைத் தவறாக நினைப்பார். அத்துடன் என் மீது கொண்ட நல்லெண்ணம் மாசுபடும். அத்துடன் எனது வீட்டுக்கு வந்ததாக யாருடமும் கூறாதீர்கள். அதுதான் நீங்கள் எனக்குத் தரும் பரிசு’’ என்றார் தணிகாசலம்.

176.அருள்வெ.ீகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெ.ீகிப்

பொல்லாத சூழக் கெடும்.

அருளை விரும்பி அறநெறிப்படி வாழ்பவன், பிறனுடைய பொருளை விரும்பி கொடிய தீமைகளைச் செய்ய நினைத்தால் கெட்டழிவான்.

உதவாத ஆக்கம்

சிவசுந்தரமூர்த்தியிடம் இரண்டு இலட்சம் ரூபாவை இலஞ்சமாக பெற்ற விநாயகரத்தினம் ஐம்பதினாயிரம் ரூபாவைத் தான் எடுத்துக் கொண்டு மிகுதிப்பணத்தையே நாகராசாவுக்கு கொடுத்தார். இதற்கு முன்பு ஒரு முறை அவருடன் வேலை செய்யும் கெங்காதரனின் மகன் நிர்மலன் எழுதுவினைஞர் சேவைக்கான பரீட்சை எழுதியிருந்தான். நிர்மலன் கெட்டிக்காரன். பரீட்சைக்காக இரவுபகலாகப் படித்தான். நிர்மலனுக்கு கட்டாயம் வேலைகிடைக்கும் என்று நினைத்த விநாயகரத்தினம் கெங்காதரனிடம் சென்று சொன்னான்; ‘‘இந்தக் கிராமத்திலை பலர் எழுதுவினைஞர் வேலைக்கு விண்ணப்பித்துப் பரீட்சை எழுதியுள்ளனர். இந்தக்காலத்தில் பரீட்சை எழுதுவதில் பிரயோசனமில்லை. கெட்டிக்காரன் பரீட்சையில் நம்பிக்கை வைத்திருக்க காசுக்காரன் முந்தியிடுவான். எனவே என்னோடு வேலைசெய்த ஒருவர் அமைச்சரின் செயலாளராக இருக்கிறார். இரண்டு பேருமாய் சேர்ந்து எழுதுவினைஞர் வேலைசெய்து கொடுக்கிறம், விரும்பினால் சொல்லு.’’

கெங்காதரன் எதுவும் சொல்லவில்லை. அவருக்கு காசுகொடுத்து வேலை பெறுவது விருப்பமில்லை.

‘‘விரும்பினால் சொல்லு. நீ என்னோட வேலை செய்யிறாய். நாளைக்கு நான் வேலை எடுத்துக் கொடுப்பதை நீ அறிந்தால் சொல்லவில்லையென்று சொல்லுவாய். அதைவிட இது இரகசியமாய் இருக்கவேணும். வெளியில் தெரிந்தால் என்னுடைய வேலைக்கும் ஆபத்து வந்திடும்.’’

அதற்கும் கெங்காதரன் பதில் கூறவில்லை. மறுநாள் கெங்காதரன் விநாயகரத்தினத்தை தேடிவந்தார்; ‘‘வீட்டில் நீங்கள் சொன்ன விசயத்தைச சொன்னான். அப்பா எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை காசைக்கொடு என்று சொல்லுகிறார். மனைவியும் அதையே சொல்லுகிறாள். எனவே நீங்கள் செய்துதாருங்கோ எவ்வளவு கொடுக்க வேணும்?’’

“முப்பதினாயிரம் ரூபா கேட்கிறான். நீங்கள் என்னுடைய நண்பன், இருபத்தையாயிம் ரூபா தாருங்கோ. அதுவும் இப்ப வேண்டாம் . நியமனக் கடிதம் கிடைத்த பிறகு தாருங்கோ” என்றார் விநாயகரத்தினம்.

மாதம் ஒன்று கழிந்தது. கெங்காதரன் மகனையும் அழைத்துக் கொண்டு விநாயகரத்தினத்தின் வீட்டுக்குச் சென்றான்.

“என்னைக் காண மகனோட வாறியள்.”

“நியமனக்கடிதம் காலமை வந்திட்டுது. நான் வீடடை போனபின்புதான் தெரியும். தம்பியின்ரை நண்பர்கள் ஒருத்தருக்கும் கிடைக்கேல்லை. கடவுள் மாதிரி பொறுத்த நேரத்தில வந்து உதவிசெய்தனீங்கள், நாங்கள் இந்த உதவியை மறக்க மாட்டம்” என்ற கெங்காதரன் தான் கொண்டு வந்த பணத்தைக் கொடுத்தான்.

“இதுக்கு ஏன் அவசரப்பட்டனீங்கள். ஆறுதலாய்த் தந்திருக்கலாம்” என்றார் விநாயகரத்தினம்.

“என்னுடைய மருமகனும் சோதினை எழுதினவன். கடிதம் வரேல்லை. செய்து தரமுடியுமே?” என்று கேட்டார் கெங்காதரன்.

“முன்னுக்கே சொல்லியிருந்தால் இலகுவாகச் செய்திருக்கலாம். இனிக் கொஞ்சம் கஸ்டம். எதுக்கும் பெயரைத் தாருங்கோ. ஆனால் நம்பியிருக்க வேண்டாம்.”

கெங்காதரன் கொண்டு வந்த மருமகனின் விபரங்களைக் கொடுத்துவிட்டுச் சென்றார். வினாயகரெத்தினத்துக்கு அலாதியான மகிழ்ச்சி. தனது புத்திசலித்தனத்தால் இருபத்தையாயிர்ம் ரூபா உழைத்து விட்டதாக நினைத்தார்.

நாகராசாவைக் கைதுசெய்த காவல்துறையினர் அவனை விசாரித்தபோது தனக்கு காசு வாங்கித் தந்தவர்களின் பெயர்களைக் கூறினான். அதனால் காவல்துறையினர் விநாயகரத்தினத்தைக் கைதுசெய்து விசாரித்தனர். முதலில் விநாயகரத்தினம் மறுத்தபோதும் காவல்துறை அதிகாரியின் கடுமையான விசாரணையால் தான் இரண்டுலட்சம் ரூபா வாங்கி ஐம்பதினாயிரம் ரூபா எடுத்ததை ஒப்புக் கொண்டான்.

நீதி மன்றத்திற்கு காவல்துறையினர் வழக்கைப் பாரப்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி விநாயகரத்தினத்தை வேலையிலிருந்து நீக்கும்படி உத்தரவிட்டார் “பிறருடைய செல்வத்தை கவர்வதனால் பெரும் இன்பம் உண்டாகும். ஆனால் அதனால் வரும் துன்பத்தை

நீக்க அச்செல்வம் கடைசி வரையும் உதவப் போவதில்லை. மாறாக பெரும் துன்பத்தைத்தான் தரும். ஒருவன் நீதியான முறையில் செல்வத்தை சம்பாதித்தால்தான் அதனூடாக அவனுக்கு இன்பம் ஏற்படும். அறத்திற்கு மாறாக சம்பாதிக்கும் செல்வம் தீராத பழியையும் துன்பத்தையும் கவலையையும் தரும். இனிமேலாவது நீ தவறான வழியில் செல்வத்தைத் தேடாதே'' என்றார் நீதிபதி

வினாயகரத்தினம் கைதிக்கூண்டில் கவலையோடு நின்றார்.

177. வேண்டற்க வெ∴கிஆம் ஆக்கம்; விளைவயின்

மாண்டற்கு அரிதுதாம் பயன்.

பிறரின் பொருட்களைக் கவர்வதன் மூலம் கிடைக்கும் ஆக்கத்தை விரும்பக்கூடாது. அது பயன்தரும் போது அப்பயன் நன்மை தருவது அரிதாகும்.

செல்வம் பெருகும்

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயத்தின் இராச கோபுர வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. கோபுர வேலைகள் செய்வதற்காக தமிழகத்தில் இருந்து பல சிற்பாசாரிகள் வந்து கோயிலில் தங்கியிருந்து சிற்ப வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர். அச்சிற்ப வேலைக்கு இன்னமும் பத்து இலட்ச ரூபா தேவைப்பட்டது. தணிகாசலமும் விக்னேஸ்வரமூர்த்தியும் தனபாலசிங்கமும் வேலாயுதபிள்ளையும் வீடு வீடாகச் சென்று நிதி திரட்டிய போதும் போதியளவு நிதி சேரவில்லை.

''ஒரே வருடத்தில் பெருந்தொகைப் பணத்தை நாம் மக்களிடம் எதிர்பார்க்க முடியாது. எனவே தமிழகத்தில் இருந்து வருகை தந்த சிற்பாசாரியார்களை நாம் திருப்பி அனுப்பிவிட்டு போதியளவு பணம் சேர்ந்தபின்பு வரவழைப்போம்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''இரண்டு வருடங்களாக நாம் கஸ்டப்பட்டு அழைத்த போதும் வராத அவர்கள் தற்பொழுதுதான் வந்துள்ளனர். இந்த நிலையில்

அவர்களைத் திருப்பி அனுப்பினால் அவர்கள் திருப்பி வராவிட்டால் என்ன செய்வது'' என்று கேட்டார் தணிகாசலம்.

''அதற்காக காசுக்கு என்ன செய்வது. நாம் மக்களையும் நெருக்க முடியாது. இரண்டு வருடங்களாக மழையில்லாததால் மக்கள் மிகவும் கஸ்டப்பட்டனர். அதிலிருந்து மீள முடியாமல் கஸ்டப்படுவோர் பலர் இருக்கிறார்கள். இந்த நிலமையில் நாம் எப்படி அவர்களை வற்புறுத்த முடியும'' என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

''சிற்பாசாரிகள் போகட்டும் காசு சேர்ந்தபின்பு வரவழைப்போம். இராச கோபுரம் ஓரிரு வருடங்களில் பூர்த்தியாக்கப்படுவதில்லை. ஐந்தாறு வருடங்கள் செல்லும்'' என்கிறார் தனபாலசிங்கம்.

''வேலாயுதண்ணை எனக்கு வீடு திருத்தாவிட்டாலும் பரவாயில்லை. உங்கடை மகனை இராச கோபுரம் கட்ட உதவச் சொல்லுங்கோ'' என்றார் தணிகாசலம்.

அப்போது மணிவண்ணன் அங்கே வந்தான் ''இந்த முறை நான் கொழும்பில் விற்கும் விலைக்கே விவசாயிகளிடமிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்யப்போகிறேன். இவ்வளவு காலமும் எனக்கு கூலியாக கொஞ்சப்பணம் அறவிட்டேன். பிறர் முயன்று தேடிய செல்வத்தை நான் விரும்பாததால் போலும் மகா கணபதி பல வழிகளாலும் எனக்கு அள்ளித்தந்துள்ளார். நான் தேடிய சொத்துக்கள் எனக்குப் போதும். நான் எமது கிராம விவசாயிகள் நட்டமடையாதிருப்பதற்காகவே தொழில் செய்கிறேன்'' என்றான்.

''இராசகோபுர வேலைகளுக்கு காசில்லாததால் சிற்பாசாரிகளை திருப்பியனுப்ப யோசித்துள்ளோம். நல்ல வேளை மகா கணபதி உங்களை இங்கு அழைத்து வந்துள்ளார். எனவே நீங்கள் வழக்கம்போல விவசாயப்பொருட்களை கொள்வனவு செய்து வில்லுங்கள். மேலதிகமாகக் கிடைக்கும் பணத்தை கோயிலுக்குத் தாருங்கள்'' என்றார் தணிகாசலம்.

''இல்லை... இல்லை நான் அப்படித் தீர்மானிச்சிட்டன். இராசகோபுர வேலைக்கு என்னால் இயன்றதைத் தருகிறேன்'' என்றான் மணிவண்ணன்.

''நீங்கள் விரும்பியபடி கொள்வனவு செய்யுங்கள். நாங்கள் ஒரு தொகையை விவசாயிகளிடம் கேட்டுப்பெறுகிறோம்'' என்றார் தணிகாசலம்.

''எனக்குப் பிரச்சனை இல்லை. நான் இதைச் சொல்லத்தான் தணிகாசலம் அண்ணையின்ரை வீட்டை போனனான். உங்கடை

மனைவிதான் நீங்கள் கோயிலுக்கு கூட்டத்திற்குச் சென்றதாக கூறினார். அது தான் இங்கு வந்தேன். நான் வாறன்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் மணிவண்ணன்.

''ஒருவன் பிறரின் பொருளில் ஆசைப்படாவிட்டால் அவனது செல்வம் பெருகும் என்பார்கள். அது எவ்வளவு உண்மையென்பதை மணிவண்ணனின் வாழ்க்கையில் இருந்து நாம் உணர்ந்து கொள்ளலாம். அவன் விவசாயிகளின் விளைபொருள் மீது விருப்பங் கொள்வதே இல்லை. தன்னுடைய கடமையை ஒழுங்காய் செய்தான். கடவுள் அவனது செல்வத்தை பெருக்கிக்கொண்டே இருக்கிறார்'' என்றார் தணிகாசலம்.

''விவசாயிகள் முயன்று தேடிய பொருளை அவாப்பட்டு கொள்ளையடித்த கருணாகரனின் பாடு மிகவும் மோசமாகிவிட்டது. அவன் வியாபாரத்தை கைவிட்டுவிட்டான்'' என்றார் தனபாலசிங்கம்.

178. அ∴காமை செல்வத்திற்கு யாதெனின் வெ∴காமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

ஒருவனது செல்வம் குறைவடையாமல் இருக்க வேண்டுமானால் அவன் பிறனுடைய கைப்பொருளை விரும்பாதிருத்தல் வேண்டும்.

தேடிச் செல்லும் செல்வம்

ஞானப்பிரகாசம் உயர் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்பு முன்பை விட நேர்மையாக நடக்கத் தொடங்கினார். முன்பு அவ்வலுவலகத்தில் பொது மக்கள் ஏதாவது வேலை விடயமாக வந்தால் அவர்களின் வேலையைச் செய்து முடிக்க ஊழியர்கள் இலஞ்சமாக பணத்தையோ பொருட்களையோ பெற்றுவிடுவார்கள். இந்த நடைமுறை சாதாரண ஊளியர்களிலிருந்து மேலதிகாரி வரை இருந்து வந்தது.

தனது அலுலகத்தில் சிற்றூழியர் நியமனம் தொடர்பாக, அவ்வலுவலகத்தில் தலைமை எழுது வினைஞராகக் கடமை புரியும் சதாசிவம் என்பவரை தனக்கு உதவியாளராக வைத்திருந்தார் ஞானப்பிரகாசம். சதாசிவம் ஞானப்பிரகாசத்துடன் வேலை செய்தவர். அவர் வேலை செய்யும் காலத்தில் இலஞ்சம் வாங்கியதாக ஞானப்பிரகாசம் கேள்விப்பட்டதில்லை. தானுண்டு தனது கடமையுண்டு என இருப்பார். எல்லோருடனும் அன்பாகப் பழகுவார். அதனால் ஞானப்பிரகாசம் உயர் பதவியை ஏற்றதும் அவர் மீதிருந்த நம்பிக்கையால் தனது உதவியாளராக நியமித்து மிகவும் பொறுப்பு வாய்ந்த பல வேலைகளை அவரிடம் ஒப்படைத்தார். அவர் நியமனம் வழங்கு முன் சதாசிவத்தை அழைத்துச் சொன்னார்; ‘‘உங்களை எனக்கு பல காலமாகத் தெரியும். இவ்வலுவலகத்தின் இன்னொரு கிளையில் நீங்கள் வேலை செய்தாலும் உங்களைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால தான் நான் உங்களிடம் பொறுப்பான வேலைகளைத் தரவுள்ளேன். அவற்றின் இரகசியத்தை தாங்கள் பேணுதல் வேண்டும். மிகவும் பொறுப்பான வேலை ஆகையால் தங்கள் அலுவலகத்திலுள்ள மற்றைய ஊழியர்களுடன் நெருங்கிப் பழகுதல் கூடாது. அத்துடன் பலர் இலஞ்சம் தர முற்படுவார்கள். அறத்தின் வழி இது என்பதை உணர்ந்து பிறர் பொருளை விரும்பாதவர்களை இலட்சுமி தேடி வருவாள். அவர்களுக்கு வாழ்வில் எந்தக்குறையும் ஏற்படாது. எனவே உண்மையாக நடந்து கொள்ளுங்கள். அப்படி நடந்தால் ஒரு காலத்தில் நான் இருக்கும் கதிரையில் நீங்களும் இருக்கலாம்’’ என்றார்.

‘‘நூற்றுக்கும் மேற்பட்ட அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் இவ்வலுவலகத்தில் வேலை செய்யும் போது பொறுப்பான பதவிக்கு என்னைத் தேர்ந்தெடுக்கிறீர்கள். உங்களின் நம்பிக்கைக்கு விரோதமாக நான் கடைசி வரையும் நடக்க மாட்டேன்’’ என்றார் சதாசிவம்.

வாரம் ஒன்று கழிந்தது. தலைமை அலுவலகத்திலிருந்து உயர் அதிகாரி ஒருவர் ஞானப்பிரகாசத்தின் அலுவலகத்திற்கு வந்தார்; ‘‘ஞானப்பிரகாசம் உமது உதவியாளராக வேலை செய்யும் சதாசிவம் என்பவர் சபாநாயகத்தின் மகன் செந்தூரனுக்கு இலஞ்சம் பெற்றுக்கொண்டு சிற்றூழியர் பதவி வழங்கியதாக புகார் கிடைத்துள்ளது. இது பற்றி நீர் என்ன கூறுகின்றீர்?’’

அதைக் கேட்டு ஒருகணம் தடுமாறிய ஞானப்பிரகாசம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு சொன்னார்; ‘‘அப்படி நடக்க வாய்ப்பில்லை. நான் தான் அந்த நியமனத்தை வழங்கினேன்.’’

‘‘சதாசிவத்தின் நெருங்கிய உறவினன் சபாநாயகம். அதனால் உதவி செய்ய வாய்ப்பு இருக்கிறது’’ என்றார் அதிகாரி.

“விசாரித்துப் பார்த்தால் சிற்றூழியர் பதவி வழங்கப்பட்ட பலர் இவ்வலுவலகத்தில் வேலை செய்பவர்களின் இனத்தவர்கள். அத்துடன் சிற்றூழியர் நியமனம் வழங்கிய பின்பே சதாசிவத்தை எனது உதவியாளராக நியமித்தேன்” என்றார் ஞானப்பிரகாசம்.

“இவ்வலுவகத்தில் மூத்த அனுபவசாலிகள் பலர் இருக்கின்றார்கள். அவர்களை விட்டுவிட்டு ஏன் சதாசிவத்தை உமது உதவியாளராக நியமித்தீர்?” என்று அதிகாரி கேட்டார்.

“மூத்தவர் பலர் இருக்கலாம். ஆனால் எனக்கு சதாசிவத்தில் தான் நம்பிக்கை இருக்கிறது. மூத்த பல அதிகாரிகள் இலஞ்சம் பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நீங்கள் யாரை நியமிக்கலாம் என்று சொல்லுங்கள்” என்று கேட்டார் ஞானப்பிரகாசம்.

“சிவசுந்தரமூர்த்தி நேர்மையானவர். அவருடன் நான் வேலை செய்தனான்”.

அவருக்கெதிராக காவல் நிலையத்தில் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. நீங்கள் சிபார்சு செய்வதானால் எழுத்தில் சிபார்சு செய்யுங்கள்” என்றார் ஞானப்பிரகாசம்.

தலைமை அலுவலகத்தில் இருந்து வந்த அதிகாரி அதன்பின் ஏதும் கதைக்கவில்லை. தனது கடமைகளை முடித்து விட்டு சென்றார். அடுத்த வாரம் சிவசுந்தரமூர்த்தி இலஞ்சம் கொடுத்த வழக்கில் அவரும் குற்றவாளியாகக் காணப்பட்டு இலஞ்சத்திணைக்களத்தினால் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

வருடம் ஒன்று கழிந்தது. சதாசிவத்தின் நேர்மையான நடத்தையைப் பாராட்டிய ஞானப்பிரகாசம் அவருக்கு உயர் பதவி வழங்கினார்.

179. அறன்அறிந்து வெ.ஃகா அறிவுடையார்ச் சேரும்

திறன்அறிந்து ஆங்கே திரு.

அறநெறியை அறிந்து பிறர்பொருளை விரும்பாத அறிவுடையாரை செல்வம் தேடிச் சென்றடையும்.

கெடுவோர்

தனது வீட்டுக்கு வந்த சிவசுந்தரமூர்த்தியைக் கண்டதும் தடுமாறிப் போனார் விநாயகரத்தினம்.

“என்னடாப்பா திகைச்சுப்போய் நிற்கிறாய். என்னை எதிர்பார்க்கேல்லையோ? அல்லது நான் வந்தது பிடிக்கேல்லையோ”?

“சீச்சீ அப்படி ஒன்றும் இல்லை. இருங்கோ” என்றார் விநாயகரத்தினம்.

சிவசுந்தரமூர்த்தி கதிரையில் இருந்தார். சில நிமிடங்கள் இருவரும் எதுகும் பேசவில்லை; “நேற்று காவல் துறையினர் வீட்டை வந்து என்னை காவல் துறைப் பணிமனைக்கு வரச்சொன்னவை. நான் போனனான். இலஞ்சத் திணைக்களத்திட்டை வழக்கை பாரப் படுத்தியிருக்கினையாம். எங்கடை மேலதிகாரியோட கலந்தாலோசித்துத் தானாம் முடிவெடுப்பினை” என்றார் சிவசுந்தரமூர்த்தி.

“ஞானப்பிரகாசத்தை எந்த வழியிலும் மடக்கேலாது. அவன் உள்ளதை அப்படியே சொல்லிப் போடுவன். வசமாய் மாட்டுப்பட்டுப் போனம். என்ன செய்யிறதென்று புரியேல்லை” என்று கவலைப்பட்டார் விநாயகரத்தினம்.

சில கணங்கள் பேசாமல் இருந்த சிவசுந்தரமூர்த்தி சொன்னார்; “அதை பிறகு பார்ப்பம் காவல் நிலையத்திலை நாகராசா உன்னட்டை ஒன்றரை லட்சம் ரூபா பெற்றதாகச் சொல்லியிருக்கிறான். நீ என்னட்டை இரண்டு லட்சம் வாங்கினனீ ˙ அப்ப ஜம்பதினாயிரம் எங்கை?”

சிவசுந்தரமூர்த்தியின் எதிர்பாராத கேள்வியால் சற்றுத் தடுமாறிய விநாயகரத்தினம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு சொன்னான்; “அவன் மாறிச் சொல்லிப்போட்டான் போலை கிடக்கு. சத்தியமாய் அண்ணை நான் இரண்டு லட்சத்தையும் கொடுத்திட்டன்.”

“இரண்டு லட்சத்தையும் கொடுத்தால் அவன் அப்படிச் சொல்ல மாட்டான். நீதிக்குப் பிறம்பான செயல்களைச் செய்கிற எல்லோரும் இப்படி நடப்பது இயற்கை. என்னையும் சேர்த்துத்தான் சொல்லுறன். உனக்கு முன்னாலை தான் நான் இரண்டு லட்சம் ரூபா கொடுத்தனான். பிறகு நீ ஜம்பதினாயிரம் ரூபா வாங்கியிருப்பாய்.”

“இதென்னண்ணை பேச்சு. என்னைச் சந்தேகிக்கிறியளே?”

“குற்றவாளிகளில் பலர் தண்டனைகளுக்கஞ்சி உண்மைகளைச் சொல்லுவினை. நீ முந்தி செய்த தில்லு முல்லுலெல்லாம் எனக்குத்தெரியும். நீ உனக்கு நன்மை இல்லாமல் எந்த தொழிலிலும் ஈடுபட மாட்டாய். எனவே நீ எடுத்த ஜம்பதினாயிரம் ரூபாவை திருப்பித்தா. திருப்பித் தந்தியெண்டால் நான் ஒண்டரை லட்சம் ரூபாதான் நாகராசாவுக்கு கொடுத்ததாகச் சொல்லுவன்.”

விநாயகரத்தினம் தடுமாறிப் போனார். சிவசுந்தரமூர்த்தி வல்லவன். தனது நன்மைக்காக எதுவும் செய்யக் கூடியவன். சில வேளை ஞானப்பிரகாசத்துடன் சேர்ந்து கொண்டு சபாநாயகத்தின் மகனின் சிற்றூழியர் நியமனம் பற்றி தலைமையகத்திற்கு நான் தான் உண்மைக்கு மாறான கடிதம் எழுதியதென்று சொன்னால் பெரும் பிரச்சினைகள் வரும் என்று நினைத்தான்.

“எனக்கு நீ இப்பிடி சொல்வாய் என்று நான் சற்றும் எதிர்பார்க்கேல்லை. நீ எடுத்த காசைத் தராட்டால் அதன் பலனை அனுபவிப்பாய்” என்றார் சிவசுந்தரமூர்த்தி.

“நான் செலவு செய்திட்டன். கொஞ்ச நாள் பொறுங்கோ தாறன்” என்றார் விநாயகரத்தினம்.

“பின் விளைவுகளை எண்ணாது பிறரின் பொருளை விரும்பி அதை கவர்வோர் கடுந் தண்டனைக்குள்ளாவர்” என்று அடிக்கடி ஞானப்பிரகாசம் கூறுவது விநாயகரத்தினத்தின் காதில் ஒலித்தது.

“ஞானப்பிரகாசத்திறகுத்தான் காலம் வேலை செய்யுது. இப்ப ஒரு புலமைப் பரிசில் கிடைத்து லண்டனுக்கு மூன்று மாதப் பயிற்சிக்குப் போறான். செலவெல்லாததையும் அரசாங்கம் கொடுக்குது. எமது நாட்டிலிருந்து இரண்டு பேர் தான் எடுபட்டிருக்கினை. அந்தப் பயிற்சி முடிஞ்சுதென்றால் தலைமையகத்திற்கு பதவி உயர்வோட இடமாற்றம் கிடைக்கும். நேர்மையான ஊழலில்லாத அதிகாரி என்ற பெயரை தலைமைப் பீடத்திலை ஞானப்பிரகாசம் பெற்றிட்டான். இனி அவனை அசைக்கேலாது” என்றார் சிவசுந்தரமூர்த்தி.

180. இறல்ஈனும் எண்ணாது வெ.ஃகின்; விறல்ஈனும்

வேண்டாமை என்றுஞ் செருக்கு.

விளைவுகளை எண்ணாமல் பிறரின் பொருளை விரும்பினால் அது அழிவைத் தரும். அப்பொருளை விரும்பாமல் வாழ்ந்தால் வெற்றியைத் தரும்.

இனியவை

தணிகாசலம் சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தபோது சிவசுந்தரமூர்த்தி கட்டிலில் படுத்திருந்தார். தணிகாசலத்தை கண்டதும் எழுந்து உட்கார்ந்து ‘‘இருங்கோ’’ என்று சொன்னார்.

நாற்காலியில் அமர்ந்த தணிகாசலம் சில நிமிடங்கள் பேசாமல் இருந்தார். எப்படிக் கதையைத் தொடங்குவது என்று சிந்திக்கும்போது சிவசுந்தரமூர்த்தி சொன்னார்; ‘‘என்னாலை இப்ப இயலாமலிருக்கு. எனக்கு ஏதாவது நடக்குமுன்னம் மகளின்ரை கல்யாணத்தை முடித்துவிட வேண்டும். மருத்துவ நிபுணனான பாலகுமாரன் முழு உடம்பையும் பரிசோதித்துப் பார்த்திட்டார். இரத்தம் எடுத்தும் இயந்திரங்கள் பொருத்திச் சோதித்துப் பார்த்தும் நோயைக்கண்டு பிடிக்கமுடியவில்லை.’’ சிவசுந்தரமூர்த்தியின் குரல் தடுதடுத்தது.

‘‘வீணான யோசனைகளும் கற்பனைகளும் தான் மனிதனுக்கு நோயை தோற்றுவிக்கின்றன. மகிழ்வுடன் இருந்தால் எந்த நோயும் அணுகாது. பாலகுமாரளை நான் சந்தித்து கதைத்தனான். அவர் உங்களுக்கு எந்தவிதமான வருத்தமும் இல்லை என்று சொல்லுறார்.’’

‘‘அப்படித்தான் எனக்கும் நெடுகச் சொல்லுகிறார். ஆனால் நெஞ்சு வலிக்குது. தலை சுற்றுது. சாப்பிட முடியாமல் இருக்கு. பேய் பிசாசு பிடிச்சுதோ தெரியேல்லை. இல்லாட்டில் ஆரன் செய்வினை சூனியம் செய்தாங்களோ..?’’ கவலைப்பட்டார் சிவசுந்தரமூர்த்தி.

‘‘பேய் பிசாசு எங்கை இருக்கு. எனக்கெண்டால் பேய் பிசாசிலை நம்பிக்கை இல்லை. செய்வினை சூனியம் செய்து ஒருத்தருக்கு வருத்தத்தை உண்டாக்கலாம் அல்லது அவனைக் கெடுக்கலாமென்றால் ஊரிலை உள்ள முழுப்பேரையும் செய்வினை செய்து விழுத்திப்போடலாம். நொந்தவன். நோயுள்ளவன் பேய் பிசாசையும் செய்வினை சூனியத்தையும் நமபிக்கெட்டழிகிறான். படிச்ச நீங்களே இப்படி கதைச்சால் பாமரச்சனம் என்ன செய்யும்.’’

சிவசுந்தரமூர்த்தி எதுகும் பேசவில்லை. அதனால் தணிகாசலம் சொன்னார்; ‘‘வீணான கற்பனைகளை விட்டுட்டு மகிழ்ச்சியாகவும்

நிம்மதியாகவும் இருக்கப்பாருங்கோ. நேற்றைக்கு ஞானப்பிரகாசம் என்னை வரச்சொல்லிச் சொல்லியனுப்பிப் போனனான்'' என்று கூறிவிட்டு நிறுத்தினார் தணிகாசலம்.

''ஞானப்பிரகாசம் வரச்சொன்னவரோ... என்னத்திற்கு?'' பரபரத்தார் சிவசுந்தரமூர்த்தி மேலும் சில கணங்கள் மௌனமாக இருந்த தணிகாசலம் செருமிவிட்டு சொன்னார்; ''நீங்களும் விநாயகரத்தினமும் தன்னைப்பற்றி மற்றையோரிடம் குறை கூறுகிறீர்களாம். உண்மையைச்சொன்னால் பரவாயில்லை. உண்மைக்கு மாறான பல தகவல்களைத் திரித்துச் சொல்லுகிறீர்களாம். அலுவலகத்தில் உள்ள பலர் அதை நம்பவில்லையாம். தனது தகப்பன் கூலிவேலை செய்துதான் தன்னை வளர்த்தவர் என்றும் அதைபற்றி கேவலமாக நீங்கள் கதைத்ததாகவும் சொன்னார். நீங்கள் முன்பு தனக்கு மேலதிகாரியாய் இருந்தமையால் பொறுத்திருக்கிறாராம். அத்துடன் நீங்கள் செய்த பல தில்லுமுல்லுகளை மறைக்கப் பார்க்கிறீர்களாம். இவற்றைப்பற்றி என்னைச் சொல்லச்சொன்னார்''.

சிவசுந்தரமூர்த்தி திகைத்துப்போனார். ''அப்படி நானொன்றும் கதைக்கேல்லை. என்னைப் பிடிக்காத யாரோ கதைகட்டி விட்டிருக்கிறார்கள்.''

''ஒருவன் அறவழியில் வாழாவிட்டாலும் பரவாயில்லை மற்றவனைப்பற்றி புறம் கூறாமல் இருந்தால் அதுவே நல்ல செயலாகும் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். தவறுகள் செய்யாத ஒருவனைப்பற்றி அவதூறாகப் பேசுவதும் அதைக்கேட்பதும் மகா பாவம். ஞானப்பிரகாசம் மிகவும் நல்ல மனிதன் நேர்மையான வழியில் செல்பவர். அதனால்தான் அவருக்கு பதவி உயர்வு கிடைத்தது'' என்றார் தணிகாசலம்.

''சத்தியமாய் அண்ணை நான் கதைக்கேல்லை.''

''ஒரு பொய்யை மறைக்க ஆயிரம் பொய் சொல்ல வேண்டும். ஞானப்பிரகாசத்திற்கு நம்பிக்கையான பலர் நீங்கள் குறை கூறுவதைப்பற்றிக் கூறியுள்ளனர். ஒருவன் தவறு செய்வது இயல்பு. அதை தவறு என்று அவனுக்கு தெரிய வைப்பதுதான் நியாயம்.. அதைத்தான் நல்லவர்கள் விரும்புவார்கள். தயவுசெய்து இனிமேல் ஞானப்பிரகாசத்தைப்பற்றி இல்லாதது பொல்லாததைக் கூறாதீர்கள். அப்படிக் கூறினால் நீங்கள் வேறு மாவட்டத்திற்கு மாற்றப்படலாம்'' என்றார் தணிகாசலம்.

181. அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்

புறம்கூறான் என்றல் இனிது.

ஒருவன் அறத்தைப்பற்றிப் பேசாது அறமல்லாதவற்றைச் செய்தாலும், மற்றவனைப்பற்றி புறங்கூறாமல் இருக்கிறான் என்று சொல்லப்படுவது நன்று.

தீயவை

சபாநாயகம் நன்றாகக் குடித்து விட்டு நண்பர்களுடன் வீதியால் வந்து கொண்டிருந்தான். செந்தூரன் வேலையாகிய பின் சபாநாயகம் தான் உழைப்பது முழுவதையும் குடித்துச் செலவு செய்தான். இப்பொழுது குடும்பத்தை பராமரிக்க வேண்டிய தேவை தனக்கு இல்லை என அவன் நினைத்தான். முன்பு பாம்பு கடித்து ஆஸ்பத்திரியில் தங்கியிருந்த காலத்தில் விலகியிருநத சின்னத்தம்பியும் சுந்தரமும் பழைய படியும் சபாநாயகத்துடன் சந்தித்து சேர்ந்து விட்டனர்.

சபாநாயகத்திற்கு கணேசமூர்த்தியைப் பிடிப்பதில்லை. குடித்து விட்டால் கணேசமூர்த்தியைப் பற்றி கண்டபடி ஏசுவான். இரண்டு மூன்று பேர் சேர்ந்து விட்டால் கணேசமூர்த்தியைப் பற்றி இல்லாதது பொல்லாதது எல்லாம் கூறுவான் பாம்பு கடித்த பின்பு சபாநாயகம் கணேசமூர்த்தியைப் பற்றி அவ்வளவு கதைப்பதில்லை. யாராவது கணேசமூர்த்தியைப்பற்றி குறையாகச் சொன்னாலும் அதைக் கேளாதவன் போல் இருந்து விடுவான். இதைச் சின்னத்தம்பி அவதானித்த போதும் அதைப் பற்றிக் கேட்கவில்லை. சின்னத்தம்பி நல்ல வெறியில் இருந்தமையால் சொன்னான்; ‘‘கணேசமூர்த்தியை நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய நிர்வாக சபை உறுப்பினராக சேர்க்கப் போவதாய்க் கதை ஒன்று உலாவுது. உண்மையோ?’’

சபாநாயகம் கேளாதது போல் இருந்தான். பாம்பு கடித்து அவன் போராடிக்கொண்டிருந்த போது ஊரவை , அயலவை , இனத்தவை எவரும் உதவ முன் வரவில்லை. மருந்துக்கு காசில்லாத நிலையில் கணேசமூர்த்தி தான் உதவினான். அதனால் சபாநாயகத்தின் தந்தை அவன் சுகமடைந்த பின்பு கூறினார்; ‘‘தம்பி ஒருவன் தகாத செயல்கள் செய்தாலும் அதைத் தண்டிக்கிற உரிமை எவருக்கும் கிடையாது. அதற்கென்று அமைப்புக்கள் இருக்கின்நன. ஒருவன் கெட்ட வழியில்

செல்கினறான் என்றால் அவனை நாம் அன்பான வார்த்தைகளால் திருத்த வேண்டுமே தவிர அவதூறு சொல்வதோ, ஏசுவதோ, குறை கூறுவதோ கூடாது. கணேசமூர்த்தி கெட்டவன் தான். ஆனால் இப்போது திருந்தி விட்டான். அவன் எப்படி நடந்தாலும் அது உன்னைப் பாதிக்காது. பிறருக்காக நீ ஏன் அவனோடு சண்டைக்கு போகிறாய்? உனது நண்பர்கள் எவரும் உனக்கு ஆபத்து வந்த காலத்தில் உதவ முன்வரவில்லை. அவன்தான் பத்தாயிரம் ரூபா தந்து உதவினான். அதனால் தான் உனது உயிர் காப்பாற்றப்பட்டது. உனது நண்பர்கள் பலர் உன்னோடு சேர்ந்து அவனைப் பற்றி குறை கூறி விட்டு, பின் அவனிடம் சென்று உதவி பெறுகின்றார்கள். தாம் உதவி பெறும் போது உன்னைப்பற்றி தவறாகவும் கூறுகிறார்கள். ஒருவன் இல்லாதவிடத்து அவனைப் பழித்துப் பேசி நேரில் காணும் போது பொய்யாக முகமலர்ந்து பேசும் தன்மை தீமையைத தரும். அத்துடன் அப்படியானவர்களுடன் கூடித் திரிதல் என்றும் தீமையையே தரும்.'' தகப்பனாரின் சொற்கள் அவனது காதில் ஒலித்தன.

''என்னண்ணை பேசாமல் இருக்கிறியள். கணேசமூர்த்தியைக் கோயில் பக்கம் விடக்கூடாது. பணம் இருந்தால் அவர் பெரிய மனிதனே. செய்யிறது முழுவதும் அட்டுழியம் அதை மறைக்க பணத்தை கொடுக்கிறார். ஊரிலை உள்ள பெரிய மனுசரெல்லாம் அவற்றை காசுக்காக அவரைப் பெரியவராக நினைக்கினை. இது எத்தனை நாட்களுக்கென்று பார்ப்பம்.''

அப்போது கணேசமூர்த்தி அவ்வழியால் நடந்து வந்தான். அவனைக் கண்டதும் சின்னத்தம்பி குழைந்தான்; ''இந்த வேகாத வெயிலுக்கை எங்கை அண்ணை போறியள். நான் துவிகச்சக்கர வண்டியில் கொண்டு வந்து விடட்டா?''

''வேண்டாம் வேண்டாம் நான் நடந்து போறன்'' என்ற கணேசமூர்த்தி அவர்களைக் கடந்து சென்றான்.

''ஒருவன் இல்லாத இடத்தில் அவனைப் பழித்துப பேசி நேரில் பொய்யாக முகமலர்ந்து பேசுதல் தீமையைத் தரும்'' என்ற தந்தையின் வார்த்தைகள் சபாநாயகத்தின் காதில் ஒலித்தன.

சின்னத்தம்பிக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. பேசாமல் நடந்தான்.

''என்னைப் போல் குற்றம் குறைகளை நேரில் பேசிப் பழகு. ஆளில்லாத இடத்தில் அவனைப் பற்றி பேசிவிட்டு அவனைக் கண்டதும் முகமலர்ந்து போலியாகப் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை'' என்று கூறிவிட்டு நடந்தான் சபாநாயகம்.

182 அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறன் அழீஇப் பொய்த்து நகை.

அறத்தை அழித்துப் பேசி தீயவற்றைச் செய்தலை விட, ஒருவன் இல்லாத இடத்தில் அவனைப் பழித்துப் பேசி நேரில் புகழ்ந்து பேசுதல் தீமையானதாகும்.

சாதல் நன்று

சபாநாயகம் வீட்டுக்கு வந்தபோது அவரின் தந்தையார் கோபமிகுதியினால் நெருப்பாக நின்றார். சபாநாயகத்தைக் கண்டதும் அவரது கோபம் சுடர்விட்டு எரிந்தது. ‘‘மனிதரில் பெரும்பான்மையோரைத் திருத்தலாம். ஏனென்றால் அவர்களுக்குள் கொஞ்சமென்றாலும் மனிதத் தன்மை இருக்கிறது. ஒருவன் நல்லவற்றைச் சிந்திக்கவேண்டும். இல்லாவிட்டால் நல்லவர்கள் சொல்வதைக் கேட்கவேண்டும். அவர்கள் சொல்வதைக் கேட்க விரும்பா விரும்பாவிட்டால் பழம் தமிழ் நூல்களைப் படித்துப் பார்க்க வேண்டும். இவை ஒன்றும் செய்ய மாட்டேன் என்று நினைத்துக்கொண்டு தீய வழியில் செல்லும் நீ ஒருபோதும் திருந்தமாட்டாயா.? உனக்கு நன்றிசொல்வதற்கு மனமில்லா விட்டாலும் உதவி செய்தவர்களைப் பழித்துச் சொல்லாமல் இருக்கலாம் தானே’’ ஆரம்பத்தில் கோபாவேசத்தில் தர்மரட்ணத்தின் வாயால் உதிர்ந்த வார்த்தைகள் பின்பு துயரத்தில் தோய்ந்து உதிர்ந்தன. பின் அவரால் எதுகும் பேசமுடியவில்லை.

பொதுவாக குடும்பத்தவர் யாராவது எது சொல்வதானாலும் சபாநாயகம் பதில் சொல்வதில்லை. கேள்வியுடன் சம்பந்தப்படாத வார்த்தைகள் பேசுவான். அல்லது தூசன வார்த்தைகள் பேசுவான். இல்லாவிட்டால் சொன்னவர்களை மிருகத்தனமாகத் தாக்குவான். தகப்பனார் ஏதாவது சொன்னால் அதைக் கவனத்தில் எடுக்கமாட்டான். ஆனால் பாம்பு கடித்த பின்பு தகப்பனார் சொல்வதைக் கேட்பான். ஆதற்கு மறுமொழி சொல்லுவான்.

‘‘அப்பு நீங்கள் சொல்வதொன்றும் எனக்கு விளங்கவில்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று புரியும்படி சொல்லுங்கள்’’ என்றான் சபாநாயகம்.

தர்மரட்ணம் சில கணங்கள் எதுவும் சொல்லவில்லை. அவனைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தார். பின்பு சொன்னார்; ‘‘பகலில் நாம் நெருங்கியவர்களுடன் கதைப்பதானாலும் அக்கம் பக்கம் பார்த்துக் கதைத்தல் வேண்டும். அத்துடன் ஆபத்தான காலத்தில் உதவக்கூடியவர்கள் தான் நண்பர்கள். அப்படிப் பார்த்தால் உனக்கு நண்பர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் யாரும் இல்லை. அப்படி இருக்க உனது பழைய நண்பர்களான சின்னத்தம்பியோடும், சுந்தரத்தோடும் சேர்ந்து திரிகிறாய். ஆபத்தான வேளையில் பணஉதவி செய்யத்தான் அவர்களிடம் பணம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் சரீர உதவியாவது செய்யக்கூடாதா? நானும் செந்தூரனும் தான் இராப்பகலாக உன்னோடு மருத்துவமனையில் நின்றோம். தூரத்தில் இருக்கும் மருத்துவமனையில் உன்னைப் பராமரிக்கும் எமக்கு வேலாயுதபிள்ளையும், தனபாலசிங்கமும் தான் உணவு கொண்டுவந்து தந்தார்கள். கணேசமூர்த்தி கெட்டவன் என்று நீ பேசியபோதிலும் என்னில் உள்ள பாசம் காரணமாக பத்தாயிரம் ரூபா தந்து உதவினான். நீ குடித்துவிட்டு சின்னத்தம்பிக்கும், சுந்தரத்திற்கும் அவனைப்பற்றி கண்டபடி சொல்லியிருக்கிறாய். அவன் தந்த பத்தாயிரம் ரூபாவை வட்டியோடை தூக்கி எறிவன் எண்டியாம். முதலைக் கொடுக்க வேண்டாம் வட்டியாவது கொடு பார்ப்பம்...’’

சபாநாயகம் திகைத்துப் போனான். ‘‘அப்பு சத்தியமாய் நான் அப்படிச் சொல்லேல்லை. யாரோ வேணுமெண்டு என்னைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.’’

‘‘சரி நான் ஒத்துக் கொள்ளுறன். அப்படிப்பட்ட நண்பர்களோடை நீ ஏன் சேர்கிறாய். இனிமேலென்றாலும் அவர்களின் குணத்தை அறிந்து சேராமல் விடு. புறம் கூறி பொய்யாக வாழ்வதைவிட சாவதுமேல். உதவி செய்தவர்களைப் பற்றி புறம் கூறும் நீ அன்று செத்திருந்தால் கூட நான் கவலைப் பட்டிருக்க மாட்டேன். ஒருவரின் செயல்களை அவை நல்லதாக இருந்தாலென்ன கெட்டதாக இருந்தாலென்ன நேரே சுட்டிக்காட்டிக் கதைப்பவன் தான் மனிதன். நீயும் உனது நண்பர்களும் அப்படியாவனர்கள் அல்ல. உனது நண்பர்கள் தமது சிறுசிறு நன்மைகளுக்காக நீ சொல்லாதவற்றைக் கூறுகிறார்களேயானால் அவர்களுடன் ஏன் நீ சேர்ந்து திரிகிறாய்.

சபாநாயகம் கவலைப்பட்டான். வாழ்க்கையில் முதல் முறையாக அவனின் கண்கள் கலங்கின.

183. புறம்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்

அறம்கூறும் ஆக்கம் தரும்.

புறங்கூறிப் பொய்யாக உயிர்வாழ்வதை விட, வறுமையுற்று இறந்துவிடுதல், அறநூல்கள் கூறுகின்ற ஆக்கம் யாவும் தரும்.

நேரில் பேசு

ஸ்ரீனிவாசன் சுவாமிகள் கேசவமூர்த்தியை தன்னை வந்து சந்திக்குமாறு கூறியிருந்தார். கேசவமூர்த்தி ஆசிரியராக இருந்தாலும் கடவுளை நம்பாதவர். கடவுளுக்குப் பொங்கல் பூசை செய்வதில் அர்த்தமில்லை என்று நினைப்பவர். அதனால் நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய நிர்வாகத்துடன் அடிக்கடி பிரச்சினைப்படுவார். கேசவமூர்த்தியுடனும், தணிகாசலத்துடனும், விக்னேஸ்வரமூர்த்தியுடனும், வேலாயுதபிள்ளையுடனும், தனபாலசிங்கத்துடனும் அடிக்கடி முரண்படுவதோடு அவர்களைப் பற்றி மக்களுக்கு தவறான கருத்துக்களைச் சொல்வார். சுவாமிகளைப் பற்றியும் இல்லாதது பொல்லாததுகளைச் சொல்வார். அண்மையில் அவரும் சபாநாயகமும் சுவாமிகளைப் பற்றி மிகவும் கேவலமாகக் கதைத்தனர்; ‘‘சுவாமியார் பெண்கள் சென்றால்த்தான் நினைத்தகாரியம் சொல்வார். பழம் தமிழ் நூல்கள் தவவாழ்வு வாழ்வதைவிட குடும்ப வாழ்வு வாழ்வதுதான் சிறப்பானது என்று சொல்லும்போது, இவர் ஏன் தவவாழ்வு வாழ்கிறார்?’’ என்று கேசவமூர்த்தி சபாநாயகத்திற்குச் சொன்னான்.

அது விடயமாகத்தான் வரச்சொல்லியிருக்கிறாரோ என்று நினைத்தபடி மகாகணபதி ஆலயத்திற்கு வந்தார் கேசவமூர்த்தி.

கேசவமூர்த்தியைக் கண்ட சுவாமியார் புன்னகைத்தார்; ‘‘வாங்கோ வாத்தியார். உங்களோடு ஆறுதலாகக் கதைக்கவேண்டும் என்று பல நாட்களாக நினைத்திருந்தேன். அது இப்பொழுதுதான் கைகூடியுள்ளது. ஒருவன் தான் நினைத்தபடி வாழ உரிமை இருக்கிறது. சமூகத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வாழ்கிறார்கள். அவர்களையெல்லாம் நாம் கட்டுப்படுத்த முடியாது. உங்களுக்கு கடவுளின் மேல் நம்பிக்கையில்லை. கடவுளில் நம்பிக்கை வைக்கும்படி உங்களுக்கு நான் கூறமாட்டேன். ஆனால் அடுத்தவர்களிடம் உங்களின் கொள்கைகளைத் திணிப்பது கூடாது. நல்லவையென்றால் திணித்துக்கூறலாம். கட்டாயப்படுத்தலாம். நீங்கள் ஓர் ஆசிரியர். உங்களிடம் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அவர்களின் பெற்றோர் விரும்பாத ஒன்றை ஏன் கற்பிக்கிறீர்கள்.

ஆதனால் உங்களுக்கு எவ்வளவு துன்பங்கள் வந்தன. மீண்டும் மீண்டும் ஏன் தவறுகளைச் செய்கிறீர்கள?'' என்று கூறிவிட்டு கேசவமூர்த்தியைப் பார்த்தார் சுவாமியார்.

கேசவமூர்த்தி சில கணங்கள் பேசாமல் இருந்தார். பின்பு சொன்னார்; ''எனக்குக் கடவுளில் நம்பிக்கை இல்லை. கடவுளில் நம்பிக்கை உள்ள நீங்கள் மக்களுக்கு உபதேசம் செய்யும்போது நான் ஏன் செய்யக்கூடாது?''

''உபதேசத்தை மக்கள் விரும்பிக் கேட்டல் வேண்டும். பசிக்காதவன் உணவை உண்ணக்கூடாது. அதேபோல் உபதேசத்தை விரும்பாதவனுக்கு உபதேசம் செய்யக்கூடாது. அத்துடன் உபதேசம் செய்வதற்கும், கேட்பதற்கும் வயது இருக்கிறது. சிறிய பிள்ளைகளின் உள்ளத்தில் நல்ல கருத்துக்களை, வீரமான உணர்வுகளை புகட்டவேண்டுமே தவிர நாஸ்திகக் கருத்துக்களைக் கூறக்கூடாது. அதைவிட ஒவ்வொரு பிள்ளையையும் எப்படி வளர்ப்பதென்று பெற்றோருக்குத் தெரியும். பெற்றோரின் கண்காணிப்பில் இருக்கும்வரை பிள்ளைகளின் நலன்களைக் கவனிப்பது பெற்றோரே. அவன் வளர்ந்த பின்பும் அவனது வாழ்க்கையைச் சிறப்பிப்பதும் பொற்றோரின் கடனாகும்'' என்றார் சுவாமிகள்.

சுவாமிகளின் வார்த்தைகளுக்கு எதிர்வார்த்தைகள் கூற கேசவமூர்த்தியால் முடியவில்லை. அதனால் அவர் பேசாமல் இருந்தார்.

''ஒருவனைப்பற்றி எத்தகைய கருத்துக்களையும் யாரும் கூறலாம். அவற்றை அவனின் முன்னால் நின்று கூறுதல் வேண்டும். என்னைப்பற்றி நீங்கள் எத்தனையோ குற்றங் குறைகளை மக்களுக்குக் கூறுகிறீர்கள். அப்படி நான் பெருங்குற்றங்கள் பல செய்யாவிட்டாலும், நீங்கள் அதை நான் செய்ததாக நினைத்தால் அவற்றைப்பற்றி நீங்கள் என்னோடு நேரில் பேசலாம். ஆசிரியரான உங்களுக்கு புறங்கூறுதல் தவறென்றும், குற்றமென்றும் தெரியவில்லையா?''

கேசவமூர்த்தி மௌனமாக இருந்தார். அவரால் எதுவும் பேசமுடியவில்லை.

''இதைக் கூறத்தான் உங்களை நான் வரச்சொன்னேன். கடவுளை நம்பாவிட்டாலும் பரவாயில்லை. ஒருவனைப்பற்றி புறம்கூறுதல் ஆகாது. அது உங்கள் வம்சத்தைப் பாதிக்கும்'' என்ற சுவாமியார் கண்களை மூடினார்.

கேசவமூர்த்தி எழுந்து சென்றார்.

184. கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்நோக்கச் சொல்.

ஒருவன் எதிரே இருக்கும் போது கடுமையான வார்த்தைகளைச் சொல்லலாம். அவன் இல்லாதவிடத்து புறங்கூறக் கூடாது.

தன்மை

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய பரிபாலன சபைக்கூட்டம் அதன் தலைவர் விக்னேஸ்வரமூர்த்தியின் தலமையில் நடைபெற்றது.

"இராச கோபுரம் கட்டுவதற்கு பத்து இலட்ச ரூபா நிதி தேவையென சென்ற கூட்டத்தில் கூறியிருந்தேன். அத்துடன் நிதி சேராமையால் சிற்பாசாரிகளை தமிழ் நாட்டிற்குத் திருப்பி அனுப்பிவிட்டு, போதியளவு நிதி சேர்ந்ததும் சிப்பாச்சாரியார்களை அழைத்து கட்டிட வேலையைத் தொடங்கலாமென்றும் சொன்னேன். ஆனால் வர்த்தகனான மணிவண்ணன் இரண்டு இலட்சம் ரூபா நிதி தந்துள்ளார். அத்துடன் விவசாயிகளின் விளைபொருட்களை கொழும்பு விலைக்கு கொள்வனவு செய்வதென்றும், போக்குவரத்துக் கூலியை மட்டும் விவசாயிகள் தந்தால் சரியென்றும் சொல்கின்றார். அதன்படி பார்த்தால் ஒவ்வொரு விவசாயிக்கும் இரண்டாயிரம் மூவாயிரம் ரூபா கூடுதலாகக் கிடைக்கும். அத்தொகையை விவசாயிகள் கொயிலுக்குத் தந்தால் ஆறேழு இலட்சம் ரூபா சேரும். உங்கள் விருப்பத்தைச் சொன்னீர்களானால் நாம் அதன்படி நடந்து கொள்ளலாம" என்றார் விக்ணேஸ்வரமூர்த்தி.

பொதுச் சபை சில கணங்கள் அமைதியாக இருந்தது. எவரும் எதுவும் பேசவில்லை. அதனால் வேலாயுதபிள்ளை சொன்னார்; "நாம் வற்புறுத்திக் கேட்கவில்லை விரும்பியவர்கள் தரட்டும்."

"பொதுச்சேவையில் நீங்கள் வற்புறுத்துவது கூடாது. இரண்டு வருடகாலமாக மழை பெய்யாததால் பலர் கஸ்ரப்பட்டுள்ளனர்.

அவர்களின் நிலையையும் நீங்கள் உணரல் வேண்டும்'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''நாம் வற்புறுத்தவில்லை. விரும்பியவர்கள் மட்டும் கொடுக்கலாம். போதியளவு நிதி சேராவிட்டால் வேலையை ஒத்திவைப்போம்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

பலர் எழுந்து தாம் தருவதாகச் சொன்னார்கள். இறுதியில் கூட்டத்திற்கு வந்த அனைவரும் தாம் பணம் தருவதாக ஒப்புக்கொண்டனர் ''காசு கொடுக்க விரும்பியோர் ரவீந்திரன் ஆசிரியயோடு தொடர்புகொள்ளுங்கள். எனக்கு பாடசாலையில் வேலை இருப்பதால் நான் செல்கிறேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

சிவசுந்தரமூர்த்தி சபாநாயகத்தின் அருகே வந்தார்; ''விக்னேஸ்வரமூர்த்தி பாடசாலையில் ஒரு சர்வாதிகாரியைப்போல நடந்து கொள்கிறார். நல்லதோ, கெட்டதோ தான் வைத்ததுதான் சட்டம். மற்றவரின் சொல்லுக்கும் மதிப்புக் கொடுக்கவேணும். ஆதைப் போலத்தான் கோவிலையும் நடத்துகிறார். அவர் சொல்வதைச் சரி என்று பாடசாலையில் சொல்லலாம். ஏனென்றால் வாத்திமார் எதிர்த்துக் கதைத்தால் மாற்றம் வந்திடுமென்று பயப்படுவினம். இங்கையும் அப்படிக் கதைக்க முடியுமே? அதோடு அவருக்கென்று ஒரு குழு பாடசாலையிலும் இருக்கு. கோயிலிலும் இருக்கு. இரண்டு இடத்திலையும் அவர் சொல்லுறத்திற்கு அவை தலையாட்டுவினை'' என்று பலமாகச் சொன்னார். அவர் சொல்வதை யாரும் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. வழமையதகப் பதில்கூறும் சபாநாயகரும் பேசாது மௌனமாக இருந்தான். அதனால் சற்றுக் கோபமடைந்த சிவசுந்தரமூர்த்தி ''சபா நீயும் இப்ப அங்காலிப்பக்கம் சேர்ந்திட்டாய். ஏதோ செய்யுங்கோ'' என்றார்.

சபாநாயகம் எழுந்து ரவீந்திரனின் அருகில் சென்று; ''சாகக் கிடந்த என்னைக் காப்பாற்றினது மஹா கணபதி தான். அவருக்குக் கொடுக்காமல் நான் யாருக்குக் கொடுப்பது. நான் தாறன்'' என்று கூறினார். அதை சின்னத்தம்பியும், சிவசுந்தரமூர்த்தியும் எதிர்பார்க்கவில்லை.

''கட்சி கட்டிப் பிரயோசனமில்லை. என்னோடை கூடத் திரியுறவை எவையையும் நான் இப்ப நம்பமாட்டன். நான் பாம்பு கடிச்சு சாகக் கிடக்கேக்கை யாரும் உதவேல்லை. இப்பவும் என்னோடை சேர்ந்து திரியுறவை நான் சொல்லாதவற்றையும் சொன்னதாய்ச் சொல்லீன. ஒருவன் மற்றவர்களைப் பற்றிக் கூறும்

வார்த்தைகளில் இருந்து கூறியவனைப் பற்றி நல்லவனோ கெட்டவனோ என்று அறிந்து கொள்ளலாம் என்பதை நான் இவ்வளவு நாளும் அறிந்துகொள்ளவில்லை. இப்ப நீங்கள் எவ்வளவு கதை சொன்னியள் அதை யாரும் கேட்கவில்லையே. உங்களின் பேச்சிலிருந்து உங்களைப் பற்றி அறிந்திருப்பினை. இனிமேல் நான் யாரைப்பற்றியும் கதைக்கமாட்டன்'' என்று கூறிவிட்டு நடந்தான் சபாநாயகம். சிவசுந்தரமூர்த்தி சிலையாக நின்றார்.

185.அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம்சொல்லும்
புன்மையால் காணப் படும்.

ஒருவனது நெஞ்சில் அறத்தினைப் போற்றுகின்ற தன்மை இல்லை என்பதை, அவன் புறங்கூறுகின்ற தன்மையால் காணலாம்.

பழிப்பு

சபாநாயகம் செல்வதைப் பார்த்துக்கொண்டு நின்றார் சிவசுந்தரமூர்த்தி. சபாநாயகம் குடித்துவிட்டு எவருடனும் வலியச் சண்டைக்குச் செல்வான். சம்பந்தப்பட்டவரை நேரிலும், அவர் இல்லாதவிடத்தும் வாய்க்கு வந்தபடி ஏசுவான். அதனால் யாரும் அவனைக் கண்டால் விலகிவிடுவார்கள். விலகிச் சென்றாலும் ஏசுவான். ஏதாவது கேட்டாலும் ஏசுவான். அதனால் அக்கிராம மக்கள் பெரும் சிரமப்பட்டனர். அப்படிப்பட்ட சபாநாயகம் பேசாமல் போனது அங்கு கூடியிருந்தனர்க்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. சபாநாயகம் சென்றதும் சிவசுந்தரமூர்த்தியும் அவரது நண்பர்களும் எதுகும் பேசாது நின்றனர் ''அப்பனே மகாகணபதியே எப்படியோ ஒரு பிரச்சினையைத் தீர்த்த வைத்துவிட்டாய். சபாநாயகம் இப்படியே சிவசுந்தரமூர்த்தியோடை சேராமல் விட்டால் சரி'' என்று மனதுள் மஹா கணபதியை வணங்கினார் தணிகாசலம்.

''யாரையும் ஒரு வழிக்கு கொண்டுவந்து விடலாம், ஆனால் கூடித்திரியிறவை அவனை வழிக்கு வரவிடாயினை. சிவசுந்தரமூர்த்திதான் இஞ்சை உள்ள பெரும்பான்மையான ஆட்களைக் கெடுக்கிறது. இதிலையும் கலகத்தை உண்டாக்குவதற்கு

எவ்வளவு பாடுபட்டான். அவன் சொன்ன கதை ஒன்றுக்கும் சபாநாயகம் எதுகும் பேசேல்லை'' என்றார் தனபாலசிங்கம்.

''அவன்ரை பிறவிக்குணம் அது. யாரையும் ஒழுங்காக வேலை செய்யவிடான். அலுவலகத்திலை ஞானப்பிரகாசத்திற்கு ஒரே தொல்லை. அவர் மேலிடத்திற்குப் புகாரிடப் போவதாகச் சொல்கிறார். இஞ்சை சபாநாயகத்தை வைச்சிருக்கிற மாதிரி அலுவலகத்திலும் இரண்டொருவர் இருக்கினை. அவைக்கு கள்ளச்சாரயத்தை வாங்கிக்கொடுத்து கலகத்தை விளைவிக்கிறான்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''ஒருவன் தான் செய்த தவறை உணர்ந்து திருந்த வடுறான் இல்லை. சபாநாயகத்தைக் கெடுத்தது சிவசுந்தரமூர்த்திதான். அவன் திருந்திவிட்டால் தனது தில்லு முல்லுகள் வெளியாகி விடுமோ என்ற அச்சமும், அவன் திருந்திவிட்டால் தனது கெட்ட செயல்களுக்கு உடந்தையாக இருக்கமாட்டானெனவும் சிவசுந்தரமூர்த்தி நினைக்கிறான். அதோடை சின்னத்தம்பியும், சுந்தரமும் தனிமையில் எல்லாவற்றையும் சொல்லுவாங்களே தவிர சம்பந்தப்பட்டவர்களுக்கு முன்னால் சபாநாயகத்தைப் போல கண்டபடி பேசி சண்டைக்குப் போகமாட்டார்கள். இரண்டு பேரும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற மாதிரி நடிக்கத்தெரிந்தவர்கள்'' என்றார் தணிகாசலம்.

''கருணாகரன் இப்ப அடிக்கடி சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுப் பக்கம் செல்கிறான். நமது கிராம மக்கள் அவனுக்கு பொருட்களைக் கொடுக்காததாலும், மணிவண்ணன் கொழும்பு விலைக்கு பொருட்களைக் கொள்வனவு செய்வதாலும் கருணாகரனால் தொழில் செய்ய முடியாமல் இருக்கிறது. அதனால் சிவசுந்தரமூர்த்தியோடு சேர்ந்துள்ளான். அதனால் தான் சிவசுந்தரமூர்த்தி இரண்டு வருடங்கள் மழை பெய்யாததால் மக்கள் கஸ்டப்படுகிறார்கள். அவர்களிடம் காசு வாங்கக் கூடாது என்று சொன்னவன்'' என்றார் வேலாயுதபிள்ளை.

ஒருவன் செய்த பழியை இன்னொருவன் புறம் கூற, அவனின் பழியை பிறர் கதைத்து அவர்களால் அவன் பழிப்புக்குள்ளாவான் என்று பெரியவர்கள் கூறுவார்கள். சுபாநாயகம் செய்த பழியைப்பற்றி இப்ப சிவசுந்தரமூர்த்தி புறங்கூறிக்கொண்டுதிரிகிறான். ஆனால் தான்செய்த பழிகளைப்பற்றி ஊர்முழுவதும் தெரியும் என்பதை ஏனோ அவன் உணர மறுக்கிறான். இது நல்லதுக்கில்லை. இதைப்பற்றி நான் எத்தனையோ தரம் அவனுக்கு எடுத்துக்கூறியும் அவன் திருந்துவதாக இல்லை. ஒருவன் இல்லாத இடத்தில் நாம் அவனைப்பற்றி தீயவற்றைக் கதைக்கக்கூடாது என்பதைப்பற்றி அவனுடைய வீட்டுக்குச் சென்று பலதடவைகள் கூறினேன். அதனால்தான் வருத்தம் என்றும் கூறினேன். அந்த நேரத்தில் ஏற்றுக்கொள்வான். பின் மாறி விடுகிறான்'' என்றார் வேலாயுதபிள்ளை.

186. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

பிறரின் பழியை ஒருவன் புறங்கூறினால், அவனது பழியைப் பிறர் நோக்கி அவனைப் பழிப்பர்.

தெரியாதவர்

வீட்டுக்கு வந்த சபாநாயகம் தணிகாசலம் சொன்னவற்றை நினைத்துப் பார்த்தான்; "சபா நாம் பழகுகின்றவர்களெல்லாம் நல்லவர்கள் அல்ல. மகிழ்வுடன் பேசி நம்மை வஞ்சிப்பவர்களும் உண்டு. நல்லவர்களுடன் சேர்ந்தால் சேருபவனுக்கு அதிக நன்மைகள் வந்துவிடும் என்பதற்காகவும், நல்லவர்களோடு சேராமல் பிரிந்து விடுபவர்களும் உண்டு. மகிழும்படியாகப் பேசி நட்புக் கொள்ளல் நன்மை என்று தெரியாதவர்கள் தம்மை விட்டு நீங்கும்படியாக புறங்கூறி நண்பர்களைப் பிரித்துவிடுவர். அந்த வகையில்தான் நீ இருக்கிறாய். நீ கெட்டவர்களுடன் சேரக் கூடாது என்பதற்காகவும், உனக்கு நன்மை செய்வதற்கு விரும்பும் நண்பர்களைப் பற்றி குற்றங் குறைகளைக் கூறி அவர்கள் உன்னை அணுகாவண்ணம் செய்துவிடுகிறாய். இது தவறு என்று நீ ஒரு காலத்தில் உணர்வாய்."

"உண்மைதான் விக்னேஸ்வரமூர்த்தி வேலாயுதபிள்ளை, தணிகாசலம் போன்றோர் ஊரில் உள்ள அனைவர்க்கும் உதவி செய்கிறார்கள். தணிகாசலம் எனது குடும்ப நிலையை உணர்ந்து எவ்வித பயனையும் எதிர்பாராது... ஏன் எனக்குக் கூடத் தெரியாமல் ஞானப்பிரகாசத்திடம் சென்று கதைத்து எனது மகனுக்கு வேலை வாங்கிக் கொடுத்தார். ஆனால் நான் சின்னச் சின்னப் பிரச்சனைகளுக்கும் ஒவ்வொருவரையும் வாய்க்கு வந்தபடி ஏசினேன். அப்படி நான் ஏசியபோதும் அவர்கள் எனது அறியாமையால்தான் நான் ஏசுகிறேன் எனப் பொறுத்துக் கொண்டனர்" என்று நினைக்க சபாநாயகத்திற்கு துக்கமாக இருந்தது. தனது துக்கத்தை யாரிடமாவது பகிரவேண்டும்போல் இருந்தது. அதனால் அவன் மகாகணபதி ஆலயத்திற்குச் சென்றான்.

கூட்டத்திற்கு வந்த பெரும்பாண்மையான மக்கள் தத்தமது வீடுகளுக்குச் சென்றுவிட்டனர். தணிகாசலமும், வேலாயுதபிள்ளையும் கோயில் வெளிமண்டபத்தில் இருந்தனர். சபாநாயகத்தை கண்ட தணிகாசலம் கேட்டான்; ‘‘காசு தருவதாகக் கூறிவிட்டு சென்றாய் இப்ப ஏன் திரும்பி வருகிறாய்?’’

‘‘ஆறுதலாக இருந்து நான் இது நாள் வரை சிந்தித்துப் பார்க்கவில்லை. அப்ப நான் சிந்திக்கக்கூடிய நிலையிலும் இருக்கவில்லை. கெட்டவர்களின் சகவாசத்தால் நல்லவர்கள் யார், கெட்டவர்கள் யார் என்று தெரியாமல் மிருகமாய் வாழ்ந்திட்டன். இப்ப நான் மிருகமாய் வாழும்போதும் என்னை மனிதன் என்று கருதி எனது குடும்பத்திற்கு உதவிகள் பல செய்த உங்களையும் வேலாயுதண்ணையையும், கணேசமூர்த்தியையும் நான் கடுமையாய்ப் பேசீட்டன். அதை நினைக்கத் துக்கமாக இருக்கு’’ கலங்கினான் சபாநாயகம்.

‘‘ஒருவன் தான் செய்த பாவச்செயல்களை உணர்ந்தாலே அவன் செய்த பாவங்களால் வரும் பழி நீங்கிவிடும். இக்கிராமத்தில் உள்ள அனைவரும் நன்றாக வாழவேண்டும் என்று விரும்புபவன் தான் நன்றாக வாழ்வான். ஒரு விவசாயி எந்த விதையை நட்டானோ அந்த விதை தான் முளைக்கும். அதைப்போல் நாம் என்னென்ன பிறர்க்குச் செய்கிறோமோ அவைதான் எமக்குக் கிடைக்கும் என்று நான் உனக்குப் பலதடவைகள் சொன்னனான். எப்பவோ ஒரு நாளைக்கு நீ திருந்துவாய் என நான் நம்பியிருந்தேன். இப்பொழுது திருந்தியதையிட்டு மிகவும் சந்தோசப்படுகிறேன்’’ என்றார் தணிகாசலம்.

‘‘நாம் உனக்கு நன்மை செய்வதற்காக உன்னை அனுகியபோதெல்லாம், எம்மைப் பற்றிப் புறம்சொல்லி உனது கெட்ட நண்பர்கள் எம்மைவிட்டு உன்னைப் பிரித்து தமது கெட்ட செயல்களுக்குக் கையாளாக உன்னை வைத்திருந்தனர். இப்பொழுதாயினும் நீ அதைப்புரிந்து கொண்டதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இனிமேலாவது புரிந்து நடந்துகொள்’’ என்றார் வேலாயுதபிள்ளை.

‘‘நல்ல மனிதர்களை பிறரின் ஏவலால் நான் புறங்கூறியது உண்மைதான். ஆனால் இனிமேல் அப்படி நடக்க மாட்டேன்’’ என்றான் சபாநாயகம்.

187. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி

நட்பாடல் தோற்றா தவர்.

மற்றவர்கள் மகிழும்படியாகப் பேசி நட்புக்கொள்ளத் தெரியாதவர்கள் தம்மைவிட்டு வெறுத்து நீங்கும்படியாக புறங்கூறி நண்பரைப் பிரித்துவிடுவர்.

தீயோர்

நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலய வெளி வீதியை கூட்டித் துப்பரவு செய்து கொண்டிருந்தார் தணிகாசலம். அப்பொழுது நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதியை வணங்கிவிட்டு வந்த சிவசுந்தரமூர்த்தி தணிகாசலத்தின் அருகே வந்தார்.

''வேலாயுதபிள்ளை வரவில்லையா?'' என்று கேட்ட சிவசுந்தரமூர்த்தி சிறிது நேரம் யோசித்துவிட்டு சொன்னார்; ''அவன் எனக்கு என்ன வேலை செய்தான் என்று தெரியுமே? வெளிலை நல்ல மாதிரிக் கதைக்கிறது, நடிக்கிறது உள்ளாலை கெடுக்கிறது'' ஆத்திரப்பட்டார் சிவசுந்தரமூர்த்தி.

தணிகாசலத்திற்கு அதைக் கேட்க விருப்பமில்லாமல் இருந்தது. ''நிம்மதியாக கோயிலில் கும்பிடக்கூட இவன் விடுகிறான் இல்லை'' என்று நினைத்தார்.

''நாவலடிலை இருந்து ஒரு குறிப்புக் கொண்டுவந்து தந்தவன். அதைப் பார்த்த குருக்கள் குறிப்பு எழுதியது பிழை என்று சொல்கிறார்.''

''அதுக்கு வேலாயுதம் என்ன செய்யும். குறிப்பை எல்லாரும் சரியாகக் கணிக்க மாட்டினை.'' தணிகாசலத்தைத் தொடர்ந்து பேசவிடாமல் குறுக்கிட்டார் சிவசுந்தரமூர்த்தி; ''இது கணிப்பால் ஏற்பட்ட பிழை இல்லை. என்ரை பிள்ளையினரை சாதகத்திற்கு ஏற்றமாதிரி மாற்றப்பட்டிருக்கு.''

என்றுமே கோபம் வராத தணிகாசலத்திற்குக் அதைக் கேட்டதும் அளவுக்கதிகமான கோபம் வந்தது. கூட்டிய விளக்குமாற்றை ஒரு கரையில் வைத்துவிட்டு; ''நீங்கள் வேலாயுதத்தைப் பற்றி எப்பவும் தப்பாத்தான் கதைக்கிறனீங்கள். வேலாயுதம் மிகவும் நல்ல மனிதன். கனவிலைகூட கெடுதியாக நினைக்காது. அதோடை அந்தாள் ஏன் குறிப்பை மாற்றவேண்டும். தரகு கூலி பெறவா? இல்லாட்டில்

மாப்பிள்ளை பகுதி சொந்தக்காரரா? எதையும் ஆராய்ந்து கதைக்க வேண்டும். குருக்கள், சாதகம் பிழையாகக் கணிக்கப்பட்டிருக்கு என்று நேற்றே எனக்குச் சொன்னவர். மாற்றப்பட்டிருக்கென்றால் அதை அவர் மாற்றி எழுதியிருக்கு என்று சொல்லியிருப்பர்.

சிவசுந்தரமூர்த்தி தணிகாசலம் அப்படிக் கதைப்பார் என்று எதிர்பாராததினால் சற்றுத் தடுமாறினார்; "நீங்கள் ஒருவனைப் பற்றி அறியாமல் கதைத்தல் கூடாது. அப்படிக் கதைப்பதை நீங்கள் வழக்கமாகக் கொண்டிருக்கிறீர்கள். நன்றாக அறிந்த ஒருவரைப்பற்றி புறங்கூறக் கூடாது. நீங்கள் எந்த நாளும் உங்களோடு நண்பராகப் பழகி, உங்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறவர்களைப் பற்றி கேவலமாகக் கதைத்து வருகிறீர்கள். விக்ணேஸ்வரமூர்த்தி, தனபாலசிங்கம், வேலாயுதபிள்ளை எல்லாரும் தன்நலம் கருதாமல் ஒவ்வொரு துறையிலையும் வேலை செய்துவரீனை. எமது பாடசாலையை விக்னேஸ்வரமூர்த்தியைப் போல் பொறுப்பாக யாராவது நடத்துவினையே? பாடசாலைகளிலும், திணைக்களங்களிலும் தலைமைப்பதவி வகிக்கிறவர்கள் எவ்வளவு அடடூழியங்களைச் செய்யினை. விக்னேஸ்வரமூர்த்தி தன்னையே பாடசாலைக்கு அர்ப்பணித்திருக்கிறார். அதோடை கோயில் நிர்வாகத்தையும் ஏற்று நடத்திறார். குற்றங் குறைகள் இருக்கத்தான் செய்யும். அதைக் கண்டிக்கிறதையோ, புறங்கூறுறதையோ விட்டுவிட்டு திருந்தவேணும்..." உணர்ச்சிப் பிழம்பானார் தணிகாசலம்.

"தெரியாத் தனமாகக் கதைத்து விட்டேன். தணிகாசலத்திற்கு இன்றைக்கு என்ன நடந்தது" என்று யோசித்தார் சிவசுந்தரமூர்த்தி.

"எமக்குத் தெரிந்தவர்கள், அறிந்தவர்கள், இனத்தவர்கள், நண்பர்கள் குற்றம் செய்வதாக யாராவது நினைத்தால் அன்பாகவும், ஆதரவாகவும் சொல்லித்திருத்த வேணும். வேலாயுதத்தின் மீது உங்களுக்கு சந்தேகமேற்பட்டிருந்தால் அவரை அழைத்துக் கேட்கவேண்டுமே தவிர குற்றம் சொல்லக்கூடாது. நீங்கள் என்னைவிடப் படிச்சனீங்கள். பெரிய உத்தியோகத்திலை இருக்கிறனீங்கள். எமக்கு முன்னுதாரணமாய் நடந்து காட்டவேண்டும்" ஏன்றார் தணிகாசலம்.

"நான் வேலைக்குச் செல்ல வேணும். பிறகு வாறன்" என்று புறப்பட்டார் சிவசுந்தரமூர்த்தி.

"கொஞ்சம் பொறுங்கோ". நான் இன்றைக்கு கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டன். தெரிந்தவை அறிந்தவையைப் பற்றி ஆராவது புறங்கூறும் நீங்கள் உங்களோடு நெருங்கிப் பழகாத பிறரோடு எப்படி நடந்து கொள்வீர்கள். தயவுசெய்து வேலாயுதத்தைக் கண்டு குறிப்பைப் பற்றிய உண்மை நிலையைக் கேளுங்கோ. கிராமத்தில் உள்ளவர்களின் வீட்டில் மணிக்கூடுகள் இருந்திராது.

இருந்தாலும் பிழையாகவும் ஓடியிருக்கலாம். உண்மையைத் தெரிந்துகொள்ளாது வாய்க்கு வந்தபடி கதைப்பதை இனியாவது விடுங்கோ'' என்றார் தணிகாசலம். சிவசுந்தரமூர்த்தி எதுவும் பேசாமல் சென்றார்.

188. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்

என்னைக்கொல் ஏதிலார் மாட்டு?

தம்முடன் நெருங்கிப் பழகுபவரின் குற்றத்தை புறங்கூறும் இயல்புடையவர், பழகாத பிறரிடத்தில் என்ன செய்வாரோ..?

அறம்

தணிகாசலம் வேலாயுதபிள்ளையின் வீட்டுக்கு வந்த போது அங்கு விக்கினேஸ்வரமூர்த்தி இருந்தார். வேலாயுதபிள்ளையின் மகன் மகேந்திரன் வெளிநாட்டில் இருந்து வந்தவுடன் தான் கற்ற பாடசாலைக்குச் சென்று தன்னைக் கற்பித்த விக்கினேஸ்வரமூர்த்தியின் பாதங்களைத் தொட்டு வணங்கினான். தான் பாடசாலைக்கென வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்த பணத்தை அவரிடம் கொடுத்தான். அதனால் அவனைப் பார்ப்பதற்காக வேலாயுதபிள்ளையின் வீட்டிற்கு விக்கினேஸ்வரமூர்த்தி வந்திருந்தார். மூவருக்கும் வேலாயுதபிள்ளையின் மனைவி தேநீர் கொண்டுவந்து கொடுத்தாள்.

''காலமை நான் கோயில் கூட்டிக் கொண்டிருந்தபோது சிவசுந்தர மூர்த்தி வந்து வேலாயுதத்தைப்பற்றி குறையாகச் சொன்னான். எனக்கு என்னவோ தெரியவில்லை என்னைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. சபாநாயகமும் சின்னத்தம்பியும் எவ்வளவோ கேவலமாகப் பேசிய போதும் வராத கோபம் இண்டைக்கு வந்திட்டுது'' என்று கூறிய தணிகாசலம் காலையில் நடந்த சம்பவத்தைப்பற்றிக் கூறினார்.

வேலாயுதபிள்ளை வழக்கம்போல பெரிதாகச் சத்தமிட்டு சிரித்தார். ''அவன் படித்த முட்டாள். ஒருவன் கல்வி கற்பது அறிவுக்கு. அடுத்தவர்களுக்கு உதவுவதற்கு சிவசுந்தரமூர்த்தி களவுகள் செய்யவும் அடுத்தவர்களைக் கெடுக்கவுந்தான் தான் கற்ற கல்வி உதவ வேண்டுமென்று நினைக்கிறான். அவனைத் திருத்தேலாது.

பாவம் என்பதற்காகவும், வயது போயும் அவரது மகள் திருமணமாகாமல் இருக்கிறாள் என்பதற்காகவும் நாவலடியில் இருக்கிற சுந்தரபிள்ளையின்ரை மகன்ரை சாதகத்தை வாங்கிவந்து கொடுத்தனான். சுந்தரம்பிள்ளை நல்ல மனிசன் குறிப்பை மாத்தி எழுத அந்தாளுக்குத் தெரியாது. படிப்பறிவு இல்லாதவர். மகன் கஸ்ரப்பட்டு படிச்சு மருத்துவராக வந்திட்டான். குருக்கள் சாதகம் பிழையாகக் கணிக்கப்பட்டிருக்கென்று எனக்குச் சொன்னவர். நான் சுந்தரம்பிள்ளையைப் போய் விசாரிச்சனான். அந்த நாளிலை இந்தியாவில் இருந்து வந்த சாஸ்திரி ஒருவன் தானாம் குறிச்சுக் கொடுத்தவன். அவன் சாத்திரியோ ஆருக்குத் தெரியும். பிழைப்புக்காக கைரேகை, நினைத்தகாரியம் சொல்லிற மாதிரி குறிப்பையும் குறித்துக் கொடுத்திருப்பன். தாய் மனிசி இருபதாம் திகதி வெள்ளிக்கிழமை இரவு பன்னிரண்டு மணி பதினெட்டு நிமிடத்திற்குப் பிறந்ததாய் சொன்னவள். ஆனால் பத்தொன்பதாந் திகதி இரவு பன்னிரெண்டு மணி பதினெட்டு நிமிடத்திற்கு பிறந்ததாய் எழுதிருக்கு'' என்றார் வேலாயுதபிள்ளை.

விக்கினேஸ்வரமூர்த்தி சிரித்தார் "என்னுடைய குறிப்பும் அப்பிடித்தான் எழுதப்பட்டிருக்கு. பங்குனி மாதம் இருபத்தைந்தாம் திகதி ஒருமணி இரண்டு நிமிடத்தில் பிறந்தனான். பிறப்புச் சான்றிதழில் இருபத்திநாலாம் திகதி என்றிருக்கு.''

"அந்த நாளையிலை குறிப்புப் பார்த்து ஆர் கலியாணம் செய்தவை. தாய் தகப்பன் நிச்சயித்தால் சரி. பிள்ளைகள் கலியாணத்தன்றுதான் தமக்கு நிச்சயக்கப்பட்டவையை அறிஞ்சு கொள்ளுவினம். அது சரி காலம் காலத்தால நீ ஏனப்பா அந்தாளோட சண்டைக்குப் போனனி. அவன் படிச்சாலும் பாமரர்களைப் போல நடக்கிறான். தவறு என்று தெரிந்தும் சரி என்று சொல்பவனை எப்படித்திருத்துவது. அவன் எதையும் கதைக்கட்டும் விடு. எப்பவோ ஒரு நாளைக்கு சிவசுந்தரமூர்த்தி சபாநாயகம் திருந்தின மாதிரி திருந்துவன். அதுவரை நாங்கள் பொறுக்கத்தான் வேணும்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''காலமை நீங்கள் கதைத்த கதையாலை வேலாயுதத்தின்ரை மகன் உங்களுக்கு உதவி செய்ததால் தான் நீங்கள் வேலாயுத்திற்கு ஆதரவாய்க் கதைக்கிறியள் என்று சிவசுந்தர மூர்த்தி நினைப்பார்'' என்றார் விக்கினேஸ்வர மூர்த்தி.

வேலாயுத பிள்ளை பலமாச்சிரித்தார்; ''நினைக்கிறது மட்டுமில்லை இத்தறுதீலை பல பேருக்குச் சொல்லியுமிருப்பார்'' என்றார் தணிகாசலம். அப்பொழுது தனபாலசிங்கம் அங்கே வந்தார் "நீ ஏன்ராப்பா காலமை கோயிலடீலை சிவசுந்தரமூர்த்திக்கு அடிக்கப்போனனி. ஒருநாளும் இல்லாத கோபம் இன்றைக்கு உமக்கு

வந்திட்டுதோ? வேலாயுதத்தின்ர மகன் காசு தந்தவுடனை குணம் மாறீட்டுது'' என்றார் தனபாலசிங்கம்.

''நான் நினைத்தது சரி'' என்றார் தணிகாசலம்.

பூமியானது தனக்குத் தீமை செய்பவர்களையும் பொறுத்துக் கொள்கிறது. ஏனென்றால் அதைப் பொறுத்துக் கொள்வது தனது கடமையென நினைக்கிறது. அதைப் போலத்தான் நாமும் அறியாமையால் எம்மைப்பற்றி புறங்கூறுபவர்களைப் பொறுத்துக் கொள்ளல் வேண்டும்'' என்றார் விக்கினேஸ்வரமூர்த்தி.

189. அறன்நோக்கி ஆற்றுங் கொல் வையம் புறம்நோக்கிப்

புன்சொல் உரைப்பான் பொறை?

புறங்கூறுவோனுடைய உடல் பாரத்தையும், ''இவனையும் சுமப்பது எனது அறம்'' என்று கருதி நிலம் சுமக்கிறதோ..?

தம்குற்றம்

சிவசுந்தரமூர்த்தி வேலாயுதபிள்ளையின் மீது கூறிய குற்றச்சாட்டைக் கேட்டு அதிர்ந்து போனார் சுந்தரம்பிள்ளை. இதுவரை காலமும் மிகவும் நேர்மையாக வாழ்ந்து வந்த சுந்தரம்பிள்ளையைப்பற்றி ஊரவர்கள் சிலர் தப்பாகக் கதைத்தமையை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அத்துடன் வேலாயுத பிள்ளையைப்பற்றி நன்கு அவருக்குத் தெரியும். தனக்கு ஆபத்து வந்த வேளையில் கூட வேலாயுதபிள்ளை பிறருக்குத் துன்பம் செய்யமாட்டார். துன்பம் செய்பவருக்கு எதிராக நடவடிக்கையும் எடுக்கமாட்டார் என்பதை சுந்தரம்பிள்ளை நன்கு அறிவார். அதனால் அவர் வேலாயுபிள்ளையைத் தேடி வந்தார். அவர் வந்தபோது வேலாயுதபிள்ளை சனசமூக நிலையத்தில் இருந்தார். அவருடன் தனபாலசிங்கமும் தணிகாசலமும் இருந்தனர்.

சுந்தரம்பிள்ளை கொழுத்தும் வெயிலில் களைத்து விழுந்து வருவதைக் கண்டு வேலாயுதபிள்ளை பதறிப்போனார். ''ஏன் ஐயா கடும் வெயிலுக்குள்ளால் வருகிறீர்கள் மாலை நேரம் வந்திருக்கலாம் தானே'' என்றார்.

“கேட்கக்கூடாத செய்தியொன்றை நான் கேள்விப்பட்டேன். அதனால் எனது மனம் ஆறாத்துயரில் உள்ளது. உங்கள் நிலையும் அதுவாகத்தான் இருக்கும் என்று நினைத்து வந்தேன்.” என்றார் சுந்தரம்பிள்ளை.

“உண்மைக்குப் புறப்பான வார்த்தைகளை மற்றையோர் ஆராய்வின்றிக் கூறுகின்றார்கள் என்பதற்காக நாம் கவலை கொள்ளலாமா? நேர்மையான ஒரு மனிதன் வேண்டுமென்று குற்றம் செய்தால் தான் அது தவறு என்று வருந்துதல் வேண்டும். அவனுக்குத் தெரியாமல் குற்றம் செய்வானானால் அது தவறாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. உங்களைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் எந்த ஒரு கருமத்தையும் ஆராயாமல் செய்யமாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். இந்தியாவில் இருந்து வந்த சாஸ்த்திரி ஒருவன் உங்களை ஏமாற்றிவிட்டான். அதற்காக நான் வருத்தப்படவில்லை” என்றார் வேலாயுதபிள்ளை.

“நீங்கள் வருத்தப்படாமல் விட்டது உங்கள் பெருந்தன்மையைக் காட்டுகிறது. ஆனால் எனது மனச்சாட்சி என்னை நிம்மதியிழக்கச் செய்கிறது. அதனால் சிவசுந்தரமூர்த்தியைச் சந்தித்து எனது நிலையை விளக்கிக் கூற வேண்டும்” என்றார் சுந்தரம்பிள்ளை.

“நான் உங்கள் மனைவியோடு எல்லாவற்றையும் கதைத்துவிட்டு வந்து சிவசுந்தமூர்த்தியைச் சந்தித்து எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். அவர் அதற்காக கவலைப்பட்டார். அவர் அதற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்பதாகவும் சென்னார்” என்றார் வேலாயுதபிள்ளை.

“அவரோடு நேரில் பேசினால்தான் எனது மனம் சாந்தியடையும்” என்றார்.

அவர் காலையில் வேலைக்குச் சென்று விடுவார். மாலை ஆறு மணிக்குத்தான் வீட்டுக்கு வருவார். நீங்கள் சனிக்கிழமை வந்தால் சந்திக்கலாம் என்றார் வேலாயுதபிள்ளை..

“ஒவ்வொருவனுக்கும் துன்பங்கள் வந்தால் தான் அதன் தாக்கம் தெரியும். என்னால் சிவசுந்தரமூர்த்திக்கு எவ்வளவு துன்பம் நேர்ந்திருக்கும். இப்படி ஒரு வீண் பழி எனக்கு நேர்ந்திருந்தால் எப்படி நான் துடிதுடித்துப் போவேன். அதுபோலத் தானே சிவசுந்தரமூர்த்தியும் துடிதுடிப்பார். நான் சென்று சனிக்கிழமை வருகிறேன்” என்றார் சுந்தரம்பிள்ளை.

சுந்தரம்பிள்ளை சென்றதும் வேலாயுதபிள்ளை சொன்னார்; “மிகவும் நல்ல மனிதன். வஞ்சகம் சூதே தெரியாது. அவருக்கு நம்பிக்கையானவர்கள் காகம் வெள்ளை என்றால் கூட நம்பிவிடுவார்.

எனது வீட்டாருக்கு தலைவலி வந்தாலும் உடனே மகனையும் கூட்டிக்கொண்டு வந்துவிடுவார். மகன் வந்து பார்த்துவிட்டு "இது வருத்தமே மருந்து கொடுக்க?" என்று கூறிச் சிரிப்பார். அப்படி மெதுமையானவர் சுந்தரம்பிள்ளை" என்றார் வேலாயுதபிள்ளை.

பிறருக்கு வரும் குற்றங்களை தன் குற்றம் போலக்கருதி புறங்கூறாமல் எல்லோரும் வாழ்ந்து வந்தால் எந்த உயிர்களுக்கும் தீங்கு ஏற்படாது.

சுருங்கச் சொன்னால் எல்லோரும் சுந்தரப்பிள்ளையைப் போல் வாழ்ந்தால் பூமி சொர்க்கபுரி ஆகிவிடும் என்றார் தணிகாசலம்.

190. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்

தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு

பிறருடைய குற்றத்தைப் போல தன் குற்றத்தையும் காண்பவனால் உயிர்களுக்கு வாழ்க்கையில் துன்பம் உண்டாகுமோ?

கேலிக்குரியவன்

சின்னத்தம்பியின் மகன் சிவபாலன். கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தர வகுப்பில் கற்கும் மாணவன். படிப்பில் கெட்டிக்காறன். கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து மாணவிகளை கேலி செய்வான். பட்டணத்தில் பெரும் வியாபாரியான மணிவண்ணனின் மகள் தர்சினி கணபதி மத்திய மகாவித்தியாலயத்தில் சிவபாலனுடன் ஒரே வகுப்பில் கல்வி கற்பவள். அவளின் மீது சிவபாலனுக்கு விருப்பம் இருந்தது. பெரும் பணக்காரியும், நல்ல அழகியுமான அவள் படிப்பிலேயே கவனம் செலுத்தினாள். சிவபாலன் வகுப்பிலும், அவளைக் கண்ட இடங்களிலும் அவளுடன் கதைப்பான். ஆரம்பத்தில் அவன் தன்னுடன் கற்கும் மாணவன் என்ற வகையில் அவள் கதைத்தாள். பின்பு சிவபாலனின் கதை திசை மாறியதைக் கண்டு அவனோடு கதைப்பதைத் தவிர்த்து வந்தாள். அன்று அவள் வீட்டுக்குச் செல்வதற்காக காத்து நின்றபொழுது சிவபாலனின் நண்பர்கள் அங்கு வந்து சிவபாலனின் பெயரைக் கூறிக் கேலி செய்தனர். அதை

விரும்பாத தர்சினி மறுநாள் அதிபரான விக்கினேஸ்வரமூர்த்திக்குச் சொன்னாள். உடனே விக்கினேஸ்வரமூர்த்தி சம்பந்தப்பட்ட மாணவர்களை அழைத்தார் "நீங்கள் எல்லோரும் படிக்கவேண்டியவர்கள் உங்கள் படிப்பு முடிய இன்னும் ஆறேழு வருடங்கள் செல்லும். அதன் பின்பு தான் திருமண வாழ்வைப் பற்றி யோசிக்க முடியும். சிவபாலன் நீ கெட்டிக்காரன். உனக்குக் குடும்பப் பொறுப்புகள் பல இருக்கின்றன. நன்றாகப் படித்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நீ படிக்காமல் காதல் வயப்பட்டு படிப்பைக் கெடுத்து விடாதே. இன்னொரு முறை தர்சினி தன்னைக் கேலி செய்ததாகப் புகாரிட்டால் பாடசாலையில் இருந்து உங்களை நீக்கவேண்டிய தேவை ஏற்படும். எனவே கவனமாக நடந்து கொள்ளுங்கள்'' என எச்சரிக்கை செய்தார்.

அதன் பின் சிவபாலனும் நண்பர்களும் சில நாட்கள் அமைதியாக இருந்தனர். நாட்செல்ல பழையபடியும் அவளைக் கேலி செய்யத் தொடங்கினர். அன்று பாடசாலை விட்டதும் ரவீந்திரன் பௌதீகவியல் பாடம் கற்பித்தார். வகுப்பு முடிய ஐந்து மணியாகிவிட்டது. அதனால் தர்சினி மாலதியின் துவிச்சக்கர வண்டியில் சென்றாள். சிவபாலனும் அவனது நண்பன் மயூரனும் அவர்களுக்குப் பின்னால் துவிச்சக்கர வண்டியில் சென்றனர்.

"ஏன் சிவபாலனுக்கு என்ன குறை. படிப்பில் கெட்டிக்காறன் எப்படியும் மருத்துவராக வருவான். நீங்கள் விரும்பலாம் தானே'' என்றான் மயூரன்.

"அவருக்கு ஒரு காதல். நீ அவன்ரை தூதுவன். காதல் கதைகள் பேசுவதை விட்டுவிட்டு படியுங்கோடா. கலியாண வயசு வந்தபிறகு அதைப்பற்றி யோசியுங்கோ'' என்றாள் மாலதி.

"இப்பவே கதைத்து வைத்தால் தான் கலியாண வயசு வந்த பின்பு செய்யலாம் இப்ப செய்யச் சொல்லி நான் சொல்லேல்லை'' என்றான் மயூரன்.

"இனி கதைதால் அதிபரிட்டைச் சொல்லுவம். வாயை மூடிக்கொண்டு போங்கோடா'' என்று சொன்ன மாலதியை விலத்திக் கொண்டு சென்ற ரவீந்திரன் விக்கினேஸ்வரமூர்த்திக்கு அதைப்பற்றி சொன்னார்.

விக்கினேஸ்வரமூர்த்தி மாலதியையும் தர்சினியையும் அழைத்து விசாரித்தார். பின் சின்னத்தம்பியை அழைத்து சிவபாலனின் நடத்தைகளைப் பற்றிச் சொன்னார். அதனால் கோபமடைந்த சின்னத்தம்பி குடித்துவிட்டு வாசிகசாலையில் நின்று ஏசினான். "மணிவண்ணன்ரை மோளுக்காக என்ரை பிள்ளையை குற்றம் சொல்கிறார் விக்கினேஸ்வரமூர்த்தி. தன்ரை மகள் ரவீந்திரனை

வளைச்சுப் பிடித்தது குற்றமில்லை. என்ரை பிள்ளை வழியிலை ஏதோ கதைத்தது தான் குற்றம். ஊரவை அறிந்தவை என்றால் நான் கதையாமல் விடமுடியுமே. சிவசுந்தரமூர்த்தி சொல்லுற மாதிரி ஊரிலை இரண்டொருத்தரை பதவிகளாலை விலத்த வேணும்.''

அப்பொழுது அவ்வழியால் வேலாயுதபிள்ளை வந்தார். அவரைக் கண்ட சின்னத்தம்பி "வேலாயுதண்ணை இது நியாயமே? என்ர பிள்ளையை பள்ளிக்கூடத்தாலை விலத்தப்போறாராம். எங்கை விலத்தச்சொல்லு பார்ப்பம். கொலைவிழும். என்னை ஆரெண்டு நினைச்சுக்கொண்டிருக்கிறியள்?''

''வீணாய் வீதீலை நின்று பயன் இல்லாத சொற்களைப் பேசாதை. என்ன பிரச்சனை என்றாலும் வீண் கதைகள் கதைக்கக்கூடாது'' என்றார் வேலாயுதபிள்ளை.

''நீ ஏன் அண்ணை உவனோடை கதைக்கிறாய். உவன்ரை கதையை ஆர் கேட்கப்போகினை'' என்றார் பேரம்பலம்.

''விசரன். எப்பெண்டாலென்ன உருப்படியாய் ஏதாவது கதைத்தவனே. உவனோட ஏன் கதைக்கிறியள். நீங்கள் போங்கோ.'' என்றார் இராமநாதன .

''உவன்ரை கதையை விட்டுட்டு நீங்கள் போங்கோ'' என்றார் குமரகுருபன். வேலாயுதபிள்ளை கதைப்பதை நிறுத்திவிட்டு நடக்கத் தொடங்கினார்.

191. பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்

எல்லாரும் எள்ளப் படும்.

கேட்பவர் எல்லோரும் கோபப்பட்டு வெறுக்கும்படி பயனில்லாத சொற்களைப் பேசுகிறவன் எல்லோராலும் இகழப்படுவான்.

தீதில் தீது

நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய இராஜ கோபுரம் கட்டுவது சம்பந்தமான பொதுக்கூட்டம் கோயில் மண்டபத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மண்டபத்திற்கு வெளியே சின்னத்தம்பியும் சிவசுந்தரமூர்த்தியும் வேறு சிலரும் இருந்து

கதைத்துக்கொண்டு இருந்தனர். தணிகாசலம் வந்து அவர்களை உள்ளே வரும்படி அழைத்தார்.

“தணிகாசலம், சின்னத்தம்பியின்ரை மகன் சிவபாலனை விக்கினேஸ்வரமூர்த்தி இரண்டு வார காலத்திற்கு பாடசாலைக்கு வரவேண்டாம் என்று சொல்லியிருக்கிறாராம். இது சரியே? சோதினை இன்னும் இரண்டு மூன்று மாதங்களிலை வர இருக்கிறது. இப்படிச் செய்யிறது அவன்ரை முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும்.”

“நீங்கள் படிச்சனீங்கள். அதோடை உயர் பதவி வகிக்கிறனீங்கள் இப்படிப் பேசலாமே?” என்று தணிகாசலம் பேசிக் கொண்டிருக்கும்போது சிவசுந்தரமூர்த்தி குறிக்கிட்டார். “படிக்கிறது உயர்பதவி வகிக்கிறது வேறை. ஒரு மாணவன்ரை எதிர்காலத்தைப் பற்றி சிறிதென்றாலும் சிந்திக்காமல் ஒரு பக்கச் சார்பான கதையை நம்பி நல்லாப் படிக்கிற ஒரு மாணவன்ரை எதிர்காலத்தைத் திட்டமிட்டு அழிக்கிற மாதிரி அவனை இடைநிறுத்தம் செய்திருக்கிறார் விக்கினேஸ்வாமூர்த்தி. இதை அனுமதிக்க முடியாது. நாங்கள் கல்வி அமைச்சுக்கு அறிவிப்பம்.”

“இஞ்சை பாருங்கோ அந்தந்த இடத்தில் அந்தந்த கதைகளை கதைக்கவேணும். பள்ளிக்கூடக் கதையை கோயிலடியில் கதையாதையுங்கோ. பள்ளிக்கூட நிர்வாக விடயம் அது. அதைப்பற்றி முடிவெடுக்க வேண்டடியவர் அதிபர். இஞ்சை வீண் கதை கதையாமல் கோயில் கட்டட விடயம் பற்றிக் கதையுங்கோ” என்றார் தணிகாசலம்.

“மணிவண்ணன் செல்வாக்கான ஆள். ஆயிரக்கணக்கில் தருவான். என்னாலை அஞ்சு சதம் தரமுடியுமே? காசு வாங்கிற பக்கம் எல்லோரும் சேர்ந்து கதைப்பியள். நீதி நியாயத்தை நீங்கள் பார்ப்பியளே?” என்றார் சின்னத்தம்பி.

சின்னத்தம்பி பலமாக கதைத்ததால் மண்டபத்தில் இருந்து பலர் எழுந்து வெளியே வந்தனர். “மணிவண்ணன் இந்த ஊரவனில்லை. இஞ்சை இருக்கிற ஆருக்கும் சொந்தக்காரனும் இல்லை. பிறகேன் அவனிட்டை காசு வாங்கிறியள். ‘பணமென்றால் பிணமும் வாய்திறக்கும்’ என்று பெரியவை சொல்லுவினை. இப்ப இந்த ஊர்ப் பெரியவர்களெல்லாம் பணமென்றவுடனை அவனுக்குப் பின்னாலை போயினை. இந்த ஊரை மணிவண்ணுக்கு வித்துப்போட்டியள். அவன் சொல்லுறது தான் சட்டம். அவன் வைத்தது தான் விலை. மஹா கணபதியை விட இந்த ஊர்க்காரருக்கு மணிவண்ணன் பெரிசாய்ப் போனான்” என்றார் சிவசுந்தரமூர்த்தி கோபமாக. பலமாகப் பேசியதால் அவருக்கு மூச்சுவிடக் கஸ்ரமாக இருந்தது.

“பலர் முன்னே பயனில்லாத சொற்களைப் பேசுதல், அறமில்லாத செயல்களைச் செய்வதை விட தீமை பயக்கும் என்று சொல்வார்கள்.

உங்களுக்கு எந்த வருத்தமும் இல்லை. வீணாக தேவையற்றவற்றைப் பேசுவதாலும், நினைப்பதாலும் தான் நோய் ஏற்பட்டுள்ளது. பயனில்லாத சொற்களைப் பேசாமலும், நினைக்காமலும் விடுங்கள் எல்லா நோயும் மாறிவிடும் என்று மருத்துவரான பாலகுமாரன் சொன்னதை நினைத்துப்பாருங்கள்'' என்றார் தணிகாசலம்.

அதைக்கேட்டு சிவசுந்தரமூர்த்தி திகைத்துப்போனார். அவரது நெஞ்சில் யாரோ ஏறி இருப்பதைப் போல் இருந்தது. தலைசுற்றியது. ''தணிகாசலம் வீட்டை போய் நெஞ்சுவலிக்கு சாப்பிடுகிற மாத்திரைகளை வாங்கி வா'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''கொஞ்சம் விலத்தி காற்றுவர விடுங்கோ'' என்ற வேலாயுதபிள்ளை. தான் கொண்டுவந்த வாரப் பத்திரிகையை இரண்டாக மடித்து விசுக்கினார் .

''இதுகளெல்லாம் தேவையே? போன மாசம் பத்துப் பதினைந்து நாட்கள் மருத்துவமனையில் படுத்திருந்தவர். கோயிலடிக்கு வந்தால் கோயில்க் கதைகளை கதைக்கிறதை விட்டுட்டு பயனில்லாத கதைகளைக் கதைச்சது மஹா கணபதிக்கே பொறுக்கேயில்லை. இவங்களெல்லாம் நேரத்தோடை போய்ச்சேர்ந்தால் தான் ஊர்திருந்தும். சீச்சீ தாங்களும் கெட்டு மற்றவங்களையும் கெடுக்கிறாங்கள்'' என்று பரமேஸ்வரன் சொன்னது சிவசுந்தரமூர்த்திக்கு கேட்டது.

''சரி சரி... சிவசுந்தரமூர்த்தியை தணிகாசலம் பார்க்கட்டும். நீங்கள் உள்ளுக்கு வாங்கோ கூட்டத்தை முடிப்பம்'' என்றார் தனபாலசிங்கம் .

192. பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல

நாட்டார்கண் செய்தலின் தீது

பலர் முன்நிலையில் பயனில்லாத சொற்களைப் பேசுதல், நண்பரிடத்தில் அறமில்லாத தீய செயல்களைச் செய்தலை விடத் தீமையானதாகும்.

ஆறமில்லாதவன்

''வேலாயுதம் எனக்கு முன்பு போல நெஞ்சு வலிக்குது. மருத்துவமனைக்கு கொண்டு போங்கோ. ஐயோ! என்னாலை வலியைத்

தாங்கேலாதாம்... நான் சாகப்போறன்'' என்று அலறினார் சிவசுந்தரமூர்த்தி.

வேலாயுதபிள்ளை உள்ளே சென்று கணேசமூர்த்தியை வெளியே கூட்டி வந்தார். "கணேசு உனது மோட்டார் வண்டியை எடுத்துவா. சிவசுந்தரமூர்த்தி நெஞ்சு வலியால் அவஸ்தைப் படுகின்றான். மருத்துவமனைக்கு கொண்டுபோக வேணும்...''

கணேசமூர்த்தி சற்றுத் தாமதித்தான். அதைக் கவனித்த வேலாயுதபிள்ளை சொன்னார் "தீமை செய்தவனுக்கும் நன்மை செய்தல் வேண்டும். ஒருவன் பயனில்லாத செயல்களைப்பற்றி விரிவாகக் கூறும் சொற்கள் அவன் அறமில்லாதவன் என்பதை எல்லோருக்கும் அறிவிக்கும். அத்துடன் ஒருவனது செயலும் அவன் கூறும் பயனில்லாத கொடிய சொற்களும் அவனைத் தாக்குமே தவிர பிறரைத் தாக்காது என்பதற்கு சிவசுந்தரமூர்த்தியே சாட்சியாக இருக்கிறான். பழையவற்றை மறந்துவிடு. தயவு செய்து உனது வாகனத்தைக் கொண்டு வா...''

"நீங்கள் என்னைத் தவறாக நினைக்கிறீர்கள். எனக்குத் தீமை செய்பவர்களுக்கும் நான் நன்மையே செய்வேன். நான் உடனே எனது மோட்டார் வண்டியை எடுத்துக் கொண்டு வருகின்றேன்'' என்று புறப்பட்டான் கணேசமூர்த்தி.

சிவசுந்தரமூர்த்தி வேதனையால் துடிதுடித்தான். அப்பொழுது மணிவண்ணன் தனது மோட்டார் வண்டியில் கோயில் கூட்டத்திற்கு வந்தான். வேலாயுதபிள்ளை மணிவண்ணனின் மோட்டார் வண்டியில் சிவசுந்தரமூர்த்தியை ஏற்றினார். தணிகாசலமும் தனபாலசிங்கமும் வேலாயுதபிள்ளையோடு சென்றனர்.

"திடீரென்று சிவசுந்தரமூர்த்தி நோய்வாய்ப்பட்டதற்குக் காரணம் சின்னத்தம்பி தான். அவனுக்கு வருத்தமெண்டவுடனை அவனோட கூட இருந்து மண்டபத்துக்கு வெளியே கதைத்தவை. எல்லாரும் மெல்ல நழுவிவிட்டினை. மணிவண்ணனைப்பற்றி என்ன மாதிரிக் கதைத்தார். இப்ப அவனுடைய மோட்டார் வண்டியிலை தான் மருத்துவமனைக்குப் போறார். உவைக்கெல்லாம் வெக்கம் ரோசம் மானம் இருக்கே? நான் எண்டால் இதிலை கிடந்து சாவனே தவிர மணிவண்ணனின்ரை வாகனத்திலை ஏறியிருக்கமாட்டன்'' என்றான் இராமநாதன்.

சிவசுந்தரமூர்த்தியின் மனைவியும் பிள்ளைகளும் பரபரப்புடன் கோயிலடிக்கு வந்தனர்.

“சிவசுந்தரமூர்த்தியை இப்பத்தான் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயினை. நீங்கள் அங்கை போறது நல்லது” என்றார் விக்கினேஸ்வரமூர்த்தி.

“அப்பாவுக்கு கடுமையே?” என்று குழறினாள் கயேந்தினி .

அப்பொழுது கணேசமூர்த்தி தனது மோட்டார் வண்டியில் வந்தான். சிவசுந்தமூர்த்தியின் மனைவியும் மகளும் விக்கினேஸ்வரமூர்த்தியும் அதில் ஏறி மருத்துவமனைக்குச் சென்றனர்.

“கூடித் திரியிறவங்களும் வாங்கிக் குடிக்கிறவங்களும் நிலைமையை அறிந்து மெல்ல விலகிவிட்டாங்கள். சிவசுந்தரமூர்த்தி சுகப்பட்டு வந்தாப்பிறகு போய் அணைந்திடுவங்கள். அவரும் நடந்ததெல்லாத்தையும் மறந்து சேர்த்துப்போடுவார். அவர் கூடாதவர் என்று திட்டுறவை தான் அவரைத் தூக்கிச் சுமக்கிறது. முன்னுக்கு உவையைத் திருத்த வேணும். கூட்டம் மண்டபத்திற்கு வெளியில் நடந்தது கடைசியாகப் பார்த்தால் அதிபரைப்பற்றி மோசமாக குறை கூறியவரை அதிபர் மருத்துவமனைக்கு கொண்டு போகிறார்” என்று கோபமாகச் சொன்னான் பாலச்சந்திரன்.

“ஒருவன் பேசும் வார்த்தைகளில் இருந்து அவனை நல்லவனா அல்லது கெட்டவனா என்று அறிந்து கொள்ளலாம். தீய செயல்களைச் செய்பவனுக்குத்தான் தீமை வரும். அதிபருக்கு நன்மை தான் வரும் கவலைப்படாதை” என்றார் கந்தசாமி.

193. நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல

பாரித்து உரைக்கும் உரை

ஒருவன் பயனில்லாத பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதைப்பற்றி விரிவாகச் சொல்லும் சொற்கள், அவன் அறமில்லாதவன் என்பதைத் தெரியப்படுத்தும்.

நல்லன செல்லும்

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிவசுந்தரமூர்த்தியை மருத்துவர் பாலகுமாரன் பரிசோதனை செய்து கொண்டிருந்தார். சிவசுந்தரமூர்த்தி அவருடன் கதைத்துக்கொண்டிருந்தார். “கோயிலில்

கூட்டம் நடைபெறவிருந்தது. நான் அதற்குப் போவதில்லை என்றுதான் தீர்மானித்தனான். சின்னத்தம்பியும் சுந்தரமும் வந்து வற்புறுத்தினதாலை தான் போனனான்.''

''நீங்கள் கனக்கக் கதைக்கக் கூடாது. நான் கேட்கிற கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லுங்கோ'' என்றார் பாலகுமாரன்.

''கோயிலடியில் நான் கொஞ்சம் கூடக் கதைத்திட்டன். இடப்பக்க நெஞ்சு சரியாய் வலிக்குது'' முனகினார் சிவசுந்தரமூர்த்தி.

பாலகுமாரன் அவருக்கு மருந்து கொடுத்தார். ''நான் உங்களுக்கு பல தடவைகள் சொன்னனான் அதிகமாகக் கதைக்கக்கூடாது, உணர்ச்சிவசப்படக்கூடாது, கோப்படக்கூடாது, பலமாகக் கதைக்ககூடாது என்று. நீங்கள் ஏன் கோயிலுக்குச் சென்றீர்கள். கோயிலுக்குப் போனால் கடவுளை வணங்கிவிட்டு வாருங்கோ. கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டாம்'' என்றார் பாலகுமாரன். அப்போது விக்கினேஸ்வரமூர்த்தியுடன் வந்த அவரது மனைவியும் மகளும் உள்ளே வந்தனர். அவர்களைக் கண்ட பாலகுமாரன் சொன்னார்; ''அம்மா இவரைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். கண்டபடி கதைக்கவிடாதீர்கள். கோயிலுக்குப் போகலாம். ஆனால் கூட்டங்களில் கலந்து கொள்வதையும் உணர்ச்சிவசப்பட்டு பேசுவதையும் தவிர்த்தல் வேண்டும்.''

''நாங்கள் எப்படிச் சொன்னாலும் அவர் கேட்பதில்லை. கூட்டத்திற்குப் போய் ஏதோ உணர்ச்சிவசப்பட்டு பேசியிருக்கிறார். இவருக்கெல்லாம் அது தேவையில்லை'' என்றாள் கயேந்தினி.

பாலகுமாரன் வெளியே சென்றதும் தனபாலசிங்கமும் வேலாயுதபிள்ளையும் மணிவண்ணனும் உள்ளே வந்தனர். அவர்களைக் கண்டதும் சிவசுந்தரமூர்த்தி கண்கலங்கினர். ஏதோ சொல்ல முயன்றார். ''உணர்ச்சிவசப்படக்கூடாது என்று மருத்துவர் சொன்னவர். அழாதையுங்கோ'' என்றாள் கயேந்தினி.

சிவசுந்தரமூர்த்தி கண்களைத் துடைத்தார். ''நாங்கள் போயிட்டு வாறம்'' என்று கூறிவிட்டு புறப்பட்டார். தணிகாசலம் அவரைத் தொடர்ந்து அவருடன் வந்தார். அனைவரும் புறப்பட்டனர். ''ஏன் அவசரப்படுறீயள். கொஞ்ச நேரம் நில்லுங்கோ'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''நாங்கள் நிற்கிறதைப்பற்றி பிரச்சனையில்லை. மருத்துவர் உடனே பார்த்துவிட்டு செல்லுங்கோ. தேவையில்லாமல் அவருடன் கதைக்காதையுங்கோ. அவர் தேவையில்லாமல் கதைக்கிற கதைகளால் தான் அவரின் உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கிறது

என்றார். நீங்கள் படுத்து நித்திரை கொள்ளுங்கோ'' என்றார் தணிகாசலம்.

''நித்திரை கொண்டால் வருத்தம் எல்லாம் சுகமாகிவிடும். நித்திரை கொள்வதற்காக மாத்திரைகள் தருகிறார்கள். அதைக் குடித்தாலும் நித்திரை வருகுதில்லை. நித்திரை வராதத்தாலை விபரீதமான எண்ணங்கள் மனதில் எழுகின்றன. அதுதான் வருத்தத்திற்கு காரணி'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''அது தெரிந்தும் பிறகேன் கதைக்கிறியள். தேவையில்லாத சிந்தனைகளும், வார்த்தைகளும் அறத்தோடு பொருந்தாது. நமக்கு வரும் நலங்கள் பலவற்றை போக்கிவிடும். அதனால் தான் மருத்துவர்களும் பெரியவர்களும் கண்டபடி கதைக்கக்கூடாது என்று சொல்வார்கள். அதில் எவ்வளவோ உண்மை இருக்கிறது. நாம் நினைப்பது எதுவும் நடப்பதில்லை. எல்லாம் மேலை இருக்கிறவன் நினைக்கிறபடி தான் நடக்கும். நீங்கள் வீணான கற்பனைகளை விட்டுவிட்டு படுங்கோ'' என்றார். வேலாயுதபிள்ளை சிவசுந்தரமூர்த்தி எதுவும் கதைக்கவில்லை. அதனால் அவர்கள் வெளியே சென்றனர்.

அவர்கள் வெளியே செல்ல விக்கினேஸ்வரமூர்த்தியும் கணேசமூர்த்தியும் உள்ளே வந்தனர். சிவசுந்தரமூர்த்தி எதுவும் பேசாமல் அவர்களைப் பார்த்துச் சிரித்தார். அச்சிரிப்பில் முன்னைய சுருதி இல்லை. ''நீங்கள் ஓய்வாகப் படுத்திருங்கோ நாங்கள் வாறம்'' என்ற கணேசமூர்த்தி அவரின் பதிலை எதிர்பாராது திரும்பி நடந்தார். விக்கினேஸ்வரமூர்த்தியும் தலையை ஆட்டிவிட்டுச் சென்றார் .

''வாரம் இரண்டு கழிந்தும் சிவசுந்தரமூர்த்தி மருத்துவமனையிலேயே தங்கியிருந்தார். அடிக்கடி அவருக்கு நெஞ்சிலே வலி ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அன்று மருத்துவமனையில் நோய்வாய்ப்பட்ட சிவசுந்தரமூத்தியை அனுமதித்தபின் தணிகாசலமோ வேலாயுதபிள்ளையோ தனபாலசிங்கமோ அவரை வந்து பார்க்கவில்லை. அது சிவசுந்தரமூர்த்திக்கு கவலையாக இருந்தது. அதனால் தணிகாசலத்தை தன்னை வந்து சந்திக்கும் படி சொல்லி அனுப்பினார்.

சொல்லியனுப்பி ஐந்து நாட்களுக்குப் பின்பு தான் தணிகாசலம் வந்தார். ''என்னை மறந்திட்டியளெ?'' சிவசுந்தரமூத்தி கலங்கினார்.

''நான் இங்கே வந்தால் நீங்கள் தேவையில்லாமல் கதைப்பீகள். ஒவ்வொருவரையும் பற்றி குறை சொல்வீர்கள். அதனால் உங்களுக்கு வருத்தம் கூடும். அதனால் தான் நாங்கள் வரவில்லை'' என்றார் தணிகாசலம் சிவசுந்தரமூத்தி அதன்பின் சில கணங்கள் பேசவில்லை.

194. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து

பயன் ஏதும் இல்லாத பண்பற்ற சொற்களைப் பலரிடத்தும் பேசுதல், அறத்தோடு பொருந்தாமல் நன்மைகளில் இருந்து நீங்கச் செய்யும்.

சிறப்புகள் நீங்கும்

அன்று சனிக்கிழமை. சுந்தரம்பிள்ளை சனிக்கிழமை சிவசுந்தரமூர்த்தியைச் சந்திப்பதற்காக வருவதாக கூறிச் சென்றதற்கிணங்க விடியுமுன்பே வேலாயுதபிள்ளையின் வீட்டிற்கு வந்தார். அந்த விடயத்தை முற்றாக மறந்து போயிருந்த வேலாயுதபிள்ளை சுந்தரம்பிள்ளையைக் கண்ட பின்பு தான் சிவசுந்தரமூர்த்தியைச் சந்தித்துக் கதைக்க வேண்டும் என்று நினைத்தார்.

“நேற்றைக்கு கோயிலுக்கு வந்த சிவசுந்தரமூத்திக்கு திடீரென்ற நெஞ்சுவலி வந்ததாலை மருத்துவமனையில் மறிச்சிட்டினை. நாம் இந்தப்பிரச்சினையை ஆறுதலாக கதைத்தாலென்ன?” என்று கேட்டார் வேலாயுதபிள்ளை.

“சிவசுந்தரமூத்தி முன்பும் நெஞ்சுவலி வந்து மருத்துவமனையிலை தங்கியிருந்து சிகிச்சை செய்தவர் தானே. நீதியாகவும் நேர்மையாகவும் வாழ்ந்து பழக்கப்பட்ட நான் இந்தச் செய்தியை அறிந்தபிறகு சரியாகச் சாப்பிடவில்லை. ஒழுங்காய் நித்திரை கொள்வதில்லை. மனம் ஏதோ பெருங்குற்றத்தை செய்ததைப் போல பரபரப்பாக இயங்குது. அவரைச் சந்தித்து என்னுடைய நிலைமையை விளக்கினால் தான் ஒழுங்காக நித்திரை கொள்ளமுடியும்.”

அப்பொழுது அங்கே தணிகாசலம் வந்தார். “சுந்தரம்பிள்ளை தன்னுடைய மகனின் சாதகத்திற்கு ஏற்றதாக சிவசுந்தரமூர்த்தியின் மகளின் சாதகத்தை எழுதியதாகச் சொன்னதை அறிந்த நாள் தொடக்கம் சுந்தரம்பிள்ளைக்கு நித்திரை வருவதில்லை. உண்மை நிலையை அவனுக்குச் சொல்லவேணும் என்கிறார். சிவசுந்தரமூத்தி மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகிறார். அவரோடு எப்படிக் கதைக்கிறது என்று யோசிக்கிறன்” என்றார் வேலாயுதபிள்ளை.

“பண்பாடு உள்ளவர்கள் பயனில்லாத வீண் சொற்களைப் பேசமாட்டார்கள். அப்படிப் பேசினால் அவை அவர்களின் சிறப்பையும் மதிப்பையும் நீக்கிவிடும். சுந்தரம்பிள்ளை நீதிக்குப் புறம்பான காரியங்களை செய்யமாட்டார். அப்படிச் செய்ததாக சிவசுந்தரமூர்த்தி கதைத்தால் சுந்தரம்பிள்ளையின் ஊரவர்கள் அவரைத் தப்பாக நினைக்கிறார்கள். அதனால் அவரின் மதிப்பும் புகழும் மாசுபட்டு விட்டது. அதனால்த் தான் அவர் வந்திருக்கிறார். நீ மருத்துவமனைக்கு கூட்டிக்கொண்டு போய் சிவசுந்தரமூர்த்திக்கு உண்மையைச் சொல்லிவிடு” என்றார் தணிகாசலம்.

“எனக்கு அது தெரியாதே? மனிசன் நோய்வாய்ப்பட்டிருக்கின்ற நேரத்தில் சொல்லிறதை நினைக்க ஒரு மாதிரியாய் இருக்கு” என்றார் வேலாயுதபிள்ளை.

“சிவசுந்தரமூர்த்திக்கு எப்ப நோய் மாறப்போகுது அவர் சொல்ல அவரை வருத்தம் பார்க்கப்போவது போலச்சென்று சொல்லுங்கோ. இல்லாட்டில் சுந்தரம்பிள்ளைக்கு நெஞ்சுவலி வந்துவிடும்” என்று சிரித்தார் தணிகாசலம்.

வேலாயுதபிள்ளை உடையை மாற்றிக் கொண்டு சுந்தரம்பிள்ளையுடன் புறப்பட்டார். அவர்கள் மருத்துவமனைக்கு வந்தபோது சிவசுந்தரமூர்த்தியை மருத்துவர்கள் பரிசோதனை செய்து கொண்டிருந்தனர்.

“ஒரு மணித்தியாலத்திற்குப் பிறகு வேலாயுதபிள்ளையும் சுந்தரம்பிள்ளையும் சிவசுந்தரமூர்த்தி தங்கியிருந்த அறைக்குச் சென்றனர். இருவரையும் கண்டதும் சிவசுந்தரமூர்த்தி கஸ்ரப்பட்டு கட்டிலால் எழுந்தார்.

“நீங்கள் படுத்திருங்கோ எழும்ப வேண்டாம்” என்ற வேலாயுதபிள்ளை அவருக்கு அருகில் போய் இருந்தார். சுந்தரம்பிள்ளை அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டார்.

“வேலாயுதபிள்ளையும் நானும் சேர்ந்து எனது மகனின் சாதகக் குறிப்பை உங்களது மகளது சாதகத்துக்குப் பொருந்தும் படியாக எழுதியதாகச் சொன்னீர்களாம். அதனால் எனது ஊரில் என்னைப்பற்றித் தவறாகக் கதைக்கிறார்கள். அது பரவாயில்லை. நல்லபடி வாழும் வேலாயுதபிள்ளைக்கும் என்னால் கெட்டபெயர் ஏற்பட்டுவிட்டது. பண்பாக வாழ்ந்த ஒருவரைப்பற்றி தவறாகக் கதைத்தால் அவரது மானமும் மரியாதையும் போய்விடும்” என்றார் சுந்தரம்பிள்ளை.

“நான் அப்படிச் சொல்லவில்லை. குருக்கள் சாதகம் பிழையாகக் கணிக்கப்பட்டுள்ளது என்று சொன்னார். அதைத்தான் நான் சொன்னான்” என்றார் சிவசுந்தரமூத்தி.

“அப்படியானால் சரி நான் மாற்றிவிட்டேன் என்று தான் ஊரில் கதைத்தார்கள். தவறாயின் மன்னித்துக்கொள்ளுங்கோ” என்றார் சுந்தரம்பிள்ளை.

“இதற்கெல்லாம் என்ன மன்னிப்பு?” என்று சிரித்தார் சிவசுந்தரமூர்த்தி.

“பல நாட்களுக்குப் பிறகு இன்றைக்குத்தான் நான் மகிழ்வுடன் இருக்கிறேன்” என்றார் சுந்தரம்பிள்ளை.

195. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல

நீர்மை உடையவர் சொலின்

பயனில்லாத சொற்களை நல்ல பண்புடையவர்கள் பேசினால், அது அவர்களுடைய உயர்வான மேன்மையையும் மதிப்பையும் நீக்கிவிடும்.

பதர்

கருணாகரன் சிவசுந்தரமூர்த்தியை பார்ப்பதற்காக மருத்துவமனைக்கு வந்தான். “கடவுளும் சிலபேருடைய பக்கம் தான் அண்ணை. நான் நல்லா இருக்கேக்கை அள்ளி அள்ளி மஹா கணபதிக்கு கொடுத்தனான். தேர் கட்டிறத்துக்கு இரண்டு லட்ச ரூபா கொடுத்தனான். அதைவிட பூசைகள் விழாக்கள் எல்லாம் நல்லாச் செய்யிறனான். இருந்தும் என்ன பயன்? இண்டைக்கு ஒட்டாண்டியாய் இருக்கிறன். மஹா கணபதி கொஞ்சமென்றாலும் கண் திறந்தால் நான் இப்படி இருப்பனே. அதோடை உங்களையும் போட்டு வாட்டுகிறார். மணிவண்ணுக்கு அள்ளிக்கொடுக்கிறார். கணக்கு வழக்கில்லாமல் கொடுக்கிறார்” துயரப்பட்டான் கருணாகரன்.

பெருமூச்சு விட்டார் சிவசுந்தமூர்த்தி; “மணிவண்ணனென்றதும் தான் ஞாபகத்திற்கு வருகுது. பெட்டை சின்னத்தம்பியின்ரை பெடியனோட காதலாம். மஹா கணபதி அள்ளிக் கொடுத்துப்போட்டு தள்ளி விழுத்தியிருக்கிறார். நான் சின்னத்தம்பியை கையாளாய் எடுபிடி வேலைக்கெல்லோ வைத்திருக்கிறன். வீடு வாசலுக்கை விடமாட்டன். முற்றத்தோடை அவற்ரை பிழக்கம் சரி. சரியான குடிகாரன். அவன்ரை சகோதரர்கள் ஒன்றும் ஒழுங்காய் இல்லை. எல்லாம் குடிச்சுக்கொண்டு

திரியுதுகள் சின்னதம்பியின்ரை பெடியனும் நல்லாய்க் குடிக்கிறானாம்'' என்றார் சிவசுந்தரமூத்தி.

''பறந்து பறந்து தேடுறத்தை அழிக்கவும் ஒருத்தன் வேணும் தானே. மேலாப்பாய்ப் பார்த்தால் பெரிய ஒழுக்கசீலன் தர்மாவான் என்று மணிவண்ணன் காட்டிக்கொள்கிறான். அவனுக்கு உதவியாக இரண்டு மூன்று பேர் இருக்கினை. அவர்களை ஒழுங்காய்க் கவனிக்கிறான். வேலாயுதத்தைத் தான் விடு. பிள்ளைகள் வெளிநாடுகளிலை இருக்கு. தனபாலசிங்கத்துக்கு ஆர் இருக்கினை. எடுக்கிற ஓய்வூதியம் போதுமே? அதைவிட தானும் தோட்டம் செய்யிறதெண்டு கொஞ்சத் தோட்டத்தை செய்யிற தணிகாசலத்தின்ரை பிள்ளைகள் இப்படிப் பெரும் எடுப்பிலை வாழ தோட்ட வருமானம் காணுமே. அட்டூழியங்களைச் செய்துகொண்டு எல்லாரும் நாடகமாடுறாங்கள். அதைப் பேய்ச் சனம் நம்பூது'' என்றான் கருணாகரன்.

''மணிவண்ணன் சின்னத்தம்பியின்ரை மோனைச் செய்யச் சம்மதிப்பனே'' சிவசுந்தரமூத்தி கேட்டார்.

''காதலிக்கிறவைக்கு சம்மதம் வேணுமே? பெற்றார் கரைச்சல் படுத்தினால் காணாமல் ஓடிப்போயிடுவினை. ஒரு பிள்ளை பிறக்க எல்லாம் சரியாயிடும். ஊரிலை நடவாததே. நடராசற்ரை மோன் பண்டாரின்ரை கதிரவன்ரை மோளைக் கூட்டிக்கொண்டு போனவன். பத்து வருஷமாய்க் கதைபேச்சில்லாமல் இருந்தவை.'' கருணாகரன் கதைக்கும் போது சிவசுந்தாமூர்த்தி குறிக்கிட்டுச் சொன்னார்; ''ஆர்சொன்னது பத்து வருஷமாய் கதைபேச்சில்லை என்று. நடராசா சரியான குடிகாரன். குடித்துப்போட்டு போறவன். மருமோள் நல்ல காசுக்காறி. நடராசாவின்ரை பொட்டைக்கு சீதனமாய் இரண்டு லட்சம் கொடுத்ததாய் கதைச்சவை. அந்த மாதிரி மணிவண்ணனும் சேருவன்'' என்றார் சிவசுந்தரமூத்தி.

இதைக் கேட்டுக்கொண்டு அடுத்த கட்டிலில் படுத்திருந்த அவ்வூரவரான பத்மநாதன் சொன்னார்; ''ஐயா குறை நினைத்துக் கொள்ளாதைங்கோ மருத்துவர் உங்களை தேவையில்லாத கதைகளைக் கதைக்கவேண்டாம் என்றவர். அதோடை நடராசா என்னுடைய இனத்தவர். நானே அவனுடைய குடும்பத்தைப் பற்றி எதுவும் கதைப்பதில்லை. அத்துடன் எனது மருமகன் தான் நடராசாவின் மகளைச் செய்தது. உங்களுக்கு ஏன் வீண் கதைகள. ஒருவன் தருமமான முறையில் எப்படியும் வாழலாம். காதலைப் பற்றி நீங்கள் ஏன் இழிவாகக் கருதுகிறீர்கள். எமது தெய்வங்கள் பலவும் காதலித்து திருமணம் செய்தவை. புராண இதிகாச நாயகர்கள் பலர் காதலித்துத்தான் திருமணம் செய்தனர். பயனில்லாத சொற்களை போற்றிப் பேசுவனை நீதி நூல்கல் மனிதன் என

ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் மனிதருக்குள்ளே பதர்கள். அவர்களால் யாருக்கும் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை.''

கருணாகரனும் சிவசுந்தரமூத்தியும் எதுவும் பேச முடியாது திகைத்துப் போனார்கள் .

196. பயன்இல்சொல் பாராட்டு வானை மகன்எனல்

மக்கட் பதடி உனல்

பயனில்லாத சொற்களைப் பேசுகின்றவனை மனிதன் என்று சொல்லக்கூடாது; அவனை மக்களுள் பதர் என்று சொல்லல் வேண்டும்.

சொல்லாமை நன்று

சிவசுந்தரமூத்தியைப் பார்ப்பதற்காக சபாநாயகம் மருத்துவமனைக்கு வந்தான். அவன் அங்கு வந்தபோது பார்வையாளர்களை உள்ளே அனுமதிப்பதற்கான மணி அடித்தது. சபாநாயம் சிவசுந்தரமூர்த்தி அனுமதிக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்றபோது சிவசுந்தரமூர்த்தி அன்றைய புதினப் பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்தார் "இன்றைக்குத்தான் என்னுடைய நினைவு வந்ததோ'' என்று கேட்டார்.

"என்ன செய்யிறது அண்ணை. தோட்டத்துக்கை வேலைகள்'' என்றான்சபாநாயகம்.

"எல்லாரும் இப்ப எங்களை மறந்திட்டியள். உங்கடை நோக்கம் சிவசுந்தரமூர்த்தி படுத்தபடுக்கையாயிட்டான். அவனாலை இனி ஒன்றும் செய்யமுடியாதெண்டு. சிங்கம் கிழன்டினாலும் சிங்கம் தான். அதை எதிர்க்கிற துணிவு எந்த மிருகங்களுக்குமில்லை. உன்ரை மகன் கச்சேரியிலை நிர்வாக அதிகாரியே? கூட்டிற துடைக்கிற வேலைக்குச் சேர்ந்தவுடனே உனக்குப் பெரிய நினைப்பு''.

சபாநாயகத்திற்கு கோபம் வந்தது. எனினும் அவன் எதுவும் கதைக்கவில்லை "தோட்ட வேலைகள். அதோட சுகமில்லை அதுதான் வரவில்லை. உங்களை நான் மறப்பனே'' என்றன் சபாநாயகம்.

“சரி சரி இதிலே இரு” என்ற சிவசுந்தரமூர்த்தி சொன்னார்; “வேலாயுதபிள்ளை உனக்கு மச்சான் என்ன ? வெளிநாட்டாலை வந்த அவன்ரை மகன் யாரோ ஒருவனுக்கு வீடு திருத்திக் கொடுக்கிறான். ஏன் உனக்கும் உதவி செய்தால் என்ன..? அதைவிட உன்னட்டை ஒரு குமர் இருக்கு. காசு பணம் இல்லாட்டிலும் நல்ல அழகான பொம்பிளை. இப்பிடிப்பட்ட அழகிலை அவருக்கு பொம்பிளை கிடைக்குமே? வேலாயுதத்தின்ரை பெடியன் அந்தசந்தமில்லாதவன். அவனுக்கு ஒரு விறுத்தமான பொம்பிளை கிடைக்குமே பெண்களைப் பெத்த நீ போய்க்கேட்டுப்பார்.”

சபாநாயகம் அவரது பேச்சில் அக்கறை காட்டவில்லை. “அது சரிப்பட்டு வராதண்ணை. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படக்கூடாது.”

“பேயா பேய்க்கதை கதைக்கிறதை விட்டுட்டு போய்க்கேள்.”

“சபாநாயகம் முன்னைய ஆளாய் இருந்தால் சிவசுந்தரமூர்த்தி கூறிய கதைகளுக்கு பல கதைகள் கூறியிருப்பான். முன்பு நடந்து கொண்ட விதத்தால் தான் தனது மகளை வேலாயுதபிள்ளையின் மகன் திருமணம் செய்ய மறுக்கிறான் என்று வேலாயுபிள்ளை அவனிடம் நேரடியாகக் கூறிவிட்டார் “சபா நீ தணிகாசலத்துக்கு உனது மகளை எனது மகனுக்கு திருமணம் பேசும்படி கூறினாயாம். தணிகாசலம் வந்து யாவற்றையும் சொன்னார். திருமணம் என்பது உறவுகளால் ஏற்படுவதொன்றல்ல. எனது மகனைப் பொறுத்தவரை அவன் ஒழுக்கத்தை உயிராக மதிக்கிறான். தனது மனைவியின் குடும்பம் பொன் பொருள் காணி பூமியுடைதாக இருக்க வேண்டியதில்லை. நல்ல குடும்பமாக இருக்க வேண்டும். ஊரில் யாராவது ஒருவர் சபாநாயகம் மாமாவின் குடும்பம் நல்லது. குறைசொல்ல முடியாதது என்று சொல்லட்டும். நான் அக்குடும்பத்தில் பெண் எடுக்கிறேன் என்றான். தலைக்கு மேலை வளர்ந்த பிள்ளைகளுக்கு நாம் புத்திமதி கூறமுடியுமா...?” வேலாயுதபிள்ளை கூறியது சபாநாயாகத்தின் மனதில் ஒலித்தது.

“என்னடாப்பா யோசிக்கிறாய்” என்று சிவசுந்தரமூத்தி கேட்டதும் திடுக்கிட்டு சுயநினைவுக்கு வந்தான் சபாநாயகம். “பொடியனுக்கு எனது மகளைச் செய்ய விருப்பமில்லை அண்ணை. வேலாயுதமும் தனக்கு மேலை வளர்ந்தவனுக்கு புத்திமதிகள் கூறமூடியாது என்று சொல்லீட்டுது. இதுக்கு மேலை நான் என்ன செய்யிறது?

“எப்ப வந்தது இந்தப் பணம். ஐந்தாறு வருசத்திற்கு முந்தி வேலாயுத்திட்டை பணம் இருந்ததே. ஊரிலை ஐஞ்சப்பத்தை மாறிக்கொண்டு திரிந்தவன்” சிவசுந்தரமூர்த்தி பேசும்போது சபாநாயகம் குறுக்கிட்டுச் சொன்னான்; “ஒருவன் நன்மை பயவாத அறம் இல்லாத சொற்களைச் சொல்லலாம். ஆனால் பயனில்லாத சொற்களைச்

சொல்லாமல் இருக்கிறது நல்லது என்று பெரியவை சொல்லுவினை. இனிமேல் வேலாயுத்தின்ரை சம்பந்தக் கதையை விடுங்கோ. அதைப்பற்றி கதைக்கிறதாலை எந்தவிதமான பயனும் இல்லை'' என்றான் சபாநாயகம். சிவசுந்தரமூர்த்தி அதை எதிர்பாராததால் சற்று திகைத்து விட்டார்.

197. நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்

பயன்இல சொல்லாமை நன்று

நன்மையைத் தராத அறமில்லாத சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம்; சான்றோர் அறமில்லாத சொற்களைச் சொல்லாமல் இருப்பது நன்மையானதாகும்.

நற்பயன் அறிந்தோர்

அன்று கணபதி மத்திய மகா வித்தியாலத்திற்கு மணிவண்ணன் வந்திருந்தான். அவனை வரவேற்று தனது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார் விக்கினேஸ்வரமூர்த்தி. ''ஐயா எனது மகள் தர்சினி கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் படிக்கிறாள். அவளோடு படிக்கும் மாணவனொருவனின் தொல்லைகளைத் தாங்கமுடியவில்லை. எத்தனை நாட்களுக்கென்று நான் பொறுத்துக் கொள்வது. எனது மகளுக்கு படிப்புத் தேவையில்லை. போதியளவு சொத்துக்கள் இருக்கு. வசதியான ஓர் இடத்தில் திருமணம் செய்து கொடுக்கலாம். ஆனால் அவள் அதை விரும்புகிறாள் இல்லை. தான் படிக்கப்போவதாகக் கூறுகிறாள். சோதனைக்கு இன்னும் ஆறு மாதங்கள் இருக்கின்றன. அதுவரையும் பாடசாலைக்கு விட எனக்கு பயமாக இருக்கிறது. அதனால் வேறு பாடசாலைக்கு மாற்றலாம் என்று யோசிக்கிறேன்'' என்றார் மணிவண்ணன்.

விக்கினேஸ்வரமூர்த்தி அதை எதிபார்க்கவில்லை. அத்துடன் மணிவண்ணனுக்கு உடனடியாகப் பதில்கூறவும் முடியவில்லை. சிறிது நேரம் யோசித்துவிட்டுச் சொன்னார்; ''எதற்கும் அவசரப்படாதையுங்கோ. சோதனைக்கான விண்ணப்பம் அனுப்பியாயிற்று. இனிப்பாடசாலை மாறுவது நல்லதல்ல. அத்துடன் தர்சினியின் சகல கோவைகளும் எம்மிடத்திலேயே உள்ளன. புதிய பாடசாலை அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் அதனைப் பற்றித் தெரியாது.''

“எனக்குப் படிப்பைப் பற்றி அக்கறையில்லை ஐயா. பெண்களைப் பொறுத்த வரையில் வாழ்வு தான் முக்கியம்.”

“அருமையான நற்பலன்களைப் பற்றி அறிந்துள்ள அறிஞர்கள் பெண்களின் கல்வியைப்பற்றி குறைவாகச் சொன்னதில்லை. நீங்கள் வர்த்தகர் என்றாலும் கல்வியறிவுடைவர். அறநெறிப்படி வாழ்பவர். உங்களுக்கு நான் ஆலோசனையோ புத்திமதியோ கூறத்தேவையில்லை. வீட்டில் எலித்தொல்லை தாங்கமுடியாது என்று கூறி யாராவது வீட்டைக் கொழுத்துவார்களா..? சிவபாலனின் தொல்லை தாங்க முடியாவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்” என்றார் விக்கினேஸ்வரமூத்தி.

“சட்டப்படி நடவடிக்கை எடுப்பதானால் நாம் காவல்துறையினருக்கு அறிவிக்க வேண்டும். ஒரு கன்னிப்பெண்ணின் விடயத்தில் காவல்துறைக்கு சென்றால் அவளது வாழ்வு நாசமாகிவிடும்” என்றார் மணிவண்ணன். அவனது குரல் கரகரத்தது.

“வீணாக நீங்கள் அச்சம் கொள்ளாதீர்கள். அநியாயமான செயல்களுக்கு நாம் சட்டம்மூலம் தான் பரிகாரம் தேடுதல் வேண்டும். நாமே தண்டிக்க முற்பட்டாலோ அன்றி பழிபாவத்திற்கு அஞ்சி நடவடிக்கை எடுக்கத் தயங்கினாலோ தான் விபரீதமான விளைவுகளை எதிர்நோக்கவேண்டி வரும். எதற்கும் பயப்படாதீர்கள். எம்மைப் பாதிக்கும் விடயங்களுக்கு பயப்படாமல் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இல்லாவிட்டால் எம்மை அதை விழுங்கிவிடும். நான் சிவபாலனுக்கு பலமுறை இதுவிடயமாக எச்சரிக்கை செய்துள்ளேன். தொடர்ந்தும் அவன் அப்படி நடந்தானாயின் நானே சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன் தகப்பன் ஊரவன். குடிகாரன், சண்டியன் என்பதற்காக நான் இரக்கப்படவோ பயப்படவோ மாட்டேன். நீங்கள் தைரியமாக இருங்கள். மனதை தளரவிடாதீர்கள். தர்சினி இங்கேயே படிக்கட்டும். இனிமேல் உங்களுக்கு தொல்லைகள் வராமல் நான் பார்த்துக்கொள்கிறேன்” என்றார் விக்கினேஸ்வரமூத்தி .

மறுநாள் காவல்துறை அதிகாரிகள் நால்வர் பாடசாலை ஆரம்பமாகும் நேரத்திலும் முடிவடையும் நேரத்திலும் வீதி ஒழுங்குகளை கவனிக்கத்தொடங்கினர். அன்று மாலை சிவபாலனும் அவனது நண்பர்களும் விதியோரத்தில் நின்ற போது அவ்விடத்திற்கு காவல்துறை அதிகாரிகள் வந்தனர்.

“நீங்கள் பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்கள். தேவையில்லாமல் யாரும் வீதியில் கும்பலாக நிற்கக்கூடாது. இன்று உங்களைப் போகவிடுகிறோம். இனிமேல் வீதியில் நிற்பதைக் கண்டால் தகுந்த தண்டனை தருவோம்” என்றனர். அதன்பின் அவர்கள் வீதியில் நிற்பதில்லை. தர்சினியுடன் வீதியில் சேட்டைகள் விடுவதுமில்லை.

198. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்

பெரும்பயன் இல்லாத சொல்

அருமையான பயன்களை அறியக்கூடிய வல்லமை படைத்த அறிஞர்கள் பெரும் பயன் தராத பயனில்லாச் சொற்களைச் சொல்லமாட்டார்.

மறந்தும் உரையார்

வேலாயுதபிள்ளை காய்ச்சல் காரணமாக மருந்து எடுப்பதற்காக மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். அவரை பாலகுமாரன் சோதித்துப்பார்த்தார்.

“மழையில் நனைந்தீர்களா?”

“இல்லை.”

“வீட்டில் நுளம்பு அதிகமா ?”

“நுளம்பு வலைக்குள் தான் படுப்பேன். அண்மையில் நுளம்பு வலைக்கு மருந்து தோய்ப்பித்தனான்.”

பாலகுமாரன் சிரித்தார் “யாவற்றிலும் முன்னேற்பாட்டுடன் தான் செயலாற்றி வருகிறீர்கள். உங்களுக்கு எந்த வருத்தமும் இல்லை. இரத்த அழுத்தம் இல்லை. இரத்தத்தில் கொழுப்பு இல்லை. சலரோகம் இல்லை. யாவும் நல்ல சுகதேகிக்கு உள்ளதுபோல் உள்ளன. மொத்தத்தில் முப்பத்தைந்து வயது இளைஞனுக்கு இருக்கிற உடலமைப்பு .உங்களுக்கு. இப்ப எத்தனை வயது?”

“அறுபத்தெட்டு ” என்றார் வேலாயுதபிள்ளை.

“அறுபத்தெட்டோ? என்னால் நம்பமுடியவில்லை. நாற்பத்தைந்து வயதிருக்குமென நான் நினைச்சன்.”

“என்னுடைய மூத்த மகனுக்கு நாற்பத்திரண்டு வயது” என்றார் வேலாயுதபிள்ளை.

“மனிதன் சந்தோசமாக இருந்தால் வயது போனாலும் உடலுறுதி குலையாது. அடுத்தவனைப் பற்றி நினைப்பது, பொறாமைப்படுவது, பயனில்லாத வார்த்தைகளை அதிகம் பேசுவது இவற்றால் தான் மனிதன் நோயாளியாகின்றான். சத்தான உணவு, சுத்தமான காற்று, நீர் போன்று நல்ல சிந்தனைகளும், பேச்சும் ஒருவனின் ஆரோக்கியத்திற்கு முக்கியமானவை. நல்லதைப்பேசி, நல்லதைச்சிந்தித்து நல்லபடி வாழ்பவனை நோய் நெருங்காது. உங்களைப் போல இளமையாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கலாம்” என்றார் பாலகுமாரன்.

“நான் எல்லோரும் நன்றாக இருக்கவேண்டும் என்று நினைப்பேன். எனக்கு ஆறு சகோதரர்கள். அவர்கள் நன்றாக இருந்தால் நான் அவர்களுக்கு உதவி செய்யவேண்டிய தேவை இருக்காது. அவர்களும் என்னிடம் உதவி கோரமாட்டார்கள். எனது ஐந்து சகோதரர்களும் நன்றாக இருக்கிறார்கள். ஒருவனால் தான் எனக்கு கவலை. உழைப்பது முழுவதையும் குடித்து விடுவான். நான் தான் அவர்களது குடும்பத்தைப் பராமரிப்பது. சிலபேரைத் திருத்த முடியாது. சிவசுந்தரமூர்த்தி பலநாட்களாக மருத்துவ மனையில் தங்கிச் சிகிட்சை பெறுகின்றார். அவரின் உடல்நிலை எப்படி?” என்று கேட்டார் வேலாயுதபிள்ளை.

“ஒவ்வொருவரும் நோயைத் தாமே தேடிக்கொள்கின்றனர். சிலர் குடித்து நோயைத் தேடிக்கொள்கின்றனர். சிலர் புகைத்தும், வெற்றிலை பாக்கை உண்டும் நோயைத் தேடிக்கொள்கின்றனர். பலர் தேவையில்லாத காரியங்களில் ஈடுபட்டும், பயனில்லாத செயல்களைச் செய்தும், பயனில்லாத வார்த்தைகளைப் பேசியும் நோய்களைத் தேடிக்கொள்கின்றனர். துன்பததைத் தரும் அறியாமையில் இருந்து நீங்கிய அறிஞர்கள் இவற்றையெல்லாம் தவிர்த்ததால் நோய்கள், துன்பங்கள் இன்றி உடல் உறுதியோடு இன்பமாக வாழ்கின்றனர். சிவசுந்தரமூர்த்திக்கு எல்லாப் பரிசோதனைகளும் செய்தாயிற்று. ஆனால் நோயைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் பயனில்லாத பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு மகிழ்ச்சியாக இருந்தால் நோய் மாறும் என நான் நினைக்கின்றேன். அவருக்கு இதைப்பற்றி பல தடவைகள் எடுத்துக் கூறியுள்ளேன். ஆனால் அவரைப் பார்க்க வருவோர் பிரச்சினைகளைப் பற்றித்தான் பேசுகிறார்கள். அவர்கள் பேசாவிட்டாலும் சிவசுந்தரமூர்த்தி ஊரில் உள்ள பிரச்சினைகள் பலவற்றை தன் தலையில் தூக்கி வைத்திருக்கிறார். அப்படி இருந்தால்நோய் எப்படிச் சுகமாகும்.”

“வேலாயுதபிள்ளை பாலகுமாரனிடம் விடைபெற்றுக்கொண்டு சிவசுந்தரமூர்த்தியைப் பார்க்க வந்தார். பாலகுமாரன் சொன்னவற்றைக் கூறினார். சிவசுந்தரமூர்த்தி எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தார். பயனில்லாத செயல்களும் சொற்களும் தான் தனது நோய்க்குக் காரணம் என்பதை அறிந்தும் அவரால் திருந்த முடியவில்லை.

199. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த

மாசறு காட்சி யவர்

அறியாமையைத் தருகின்ற மயக்கத்தில் இருந்து நீங்கிய அறிவை உடையவர், பயனற்ற சொற்களை மறந்தும் சொல்லமாட்டார்.

சொல்லும் சொல்

பலநாட்களுக்குப்பின் ஸ்ரீனிவாசன் சுவாமிகள் அரசமர நிழலில் வந்து அமர்ந்தார். நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலய இரவுப் பூசை முடிந்ததும் வசந்த மண்டபத்திற்குத் தெற்காக இருக்கும் மண்டபத்தில் பஜனை ஆரம்பமானது. மாணவர்களும் அடியார்களும் அரைமணி நேரம் பஜனைப் பாடல்களை மிகவும் இனிமையாகப் பாடினார்கள். பஜனை முடிந்து அடியார்கள் வெளியே வரும் போது அரசமரத்தின் கீழ் சுவாமியார் இருந்ததால் அடியார்கள் அவரின் பக்கத்தில் சென்று அமர்வார்கள். அவர் சமயம் சம்பந்தமாக மக்களின் மனதைக் கவரக்கூடியவகையில் ஏதாவது சொல்வார்.

அன்று பஜனை முடிந்து அடியார்கள் வெளியே வந்தபோது சுவாமிகள் அரச மரத்தின் கீழ் அமர்ந்திருந்தார். அடியார்கள் அனைவரும் சுவாமியாரின் அருகில் சென்று அமர்ந்தனர். எல்லோரையும் பார்த்து புன்முறுவல் செய்த சுவாமியார் சொன்னார்; “நாம் பயனுள்ள செயல்களையே எந்நாளும் செய்தல் வேண்டும். நமக்கு பயன்தராத தாவரங்களையோ மிருகங்களையோ நாம் வளர்ப்பதில்லை. வயலை உழுது பண்படுத்தி பசளையிடும் விவசாயி நல்ல இன விதைகளையே விதைப்பான். அதனால் தான் பயன் உண்டாகும். அது விவசாயியின் பயனுள்ள செயல். அதே போல் எமது அன்றாட நிகழ்வுகளும் பயனுள்ளனவாக அமைதல் வேண்டும். கோயிலுக்கு தேர் செய்து கொடுக்கிறோம். இராஜகோபுரம் கட்டுகிறோம். இதே போல் நாம் சமூக சேவைகளும் செய்தல் வேண்டும். சமூகத்திற்கும் தனிமனிதனுக்கும் பயனுள்ள சேவைகளைச் செய்பவனின் சேவை இறைவனைச் சென்றடையும். உயிர்களில்

இறைவன் தங்கியுள்ளார். உயிர்களுக்கு உதவுதல் இறைவனுக்கு உதவுவதற்கு ஒப்பாகும். உயிர்கள் உடல்களில் தங்கியுள்ளன. உடல்களுக்கு செய்யும் சேவையும் இறைவனைச் சென்றடைகின்றன. பசித்தவருக்கு அன்னமிடுங்கள். நோயாளிகளுக்கும், வயோதிபர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் உதவி செய்யுங்கள்.

"பயன் நிறைந்த சேவைகளைப்போல் பயன் நிறைந்த வார்த்தைகளையும் பேசுங்கள். அதனால் உங்கள் மனம் மகிழும். உடலில் இளமை திரும்பும். அன்பே சிவம் என்று சொல்வார்கள். அன்புக்கு ஆட்படாத உயிர்கள் உலகிலே இல்லை. கருங்கற்கள் கூட அன்பால் கசியும். ஒருவனை இழிவுபடுத்தவோ, கெடுக்கவோ நினைக்காதீர்கள். நீங்கள் ஒருவனை இழிவுபடுத்தினால் அது உங்களை ஒரு நாள் தேடிவரும். மற்றவனைக் கெடுப்போர் தம்மைத் தாமே கெடுத்தவர்களாகின்றார்கள்".

"ஒவ்வொருவரும் தான் சொல்வதுதான் சரி என்று நினைக்கிறார்கள். ஆனால் அது சொல்பவனுக்கு நல்லவையாக இருக்கலாம். மற்றொருவன் அதை ஏற்கவேண்டும் என்று சொல்ல உனக்கு உரிமை இல்லை. ஒருவனுக்குப் பொருத்தமான உடை, உணவு என்பன கூட மற்றவனுக்குக் பொருத்தமானதாக இருப்பதில்லை. இரண்டொருவர் உனது வார்த்தைகளை பயனுள்ளவை என்று சொல்லிவிட்டால் அதை அடுத்தவர்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று எதிர்பாராதே. அத்துடன் அடுத்தவனது செயல்கள் தவறானவை என்று விமர்சிக்க உனக்கு யார் உரிமை தந்தது. அவனது செயல்கள் உனக்குத் தவறானதாக இருக்கலாம். ஆனால் அச்செயல்கள் மூலம் பயனடைய முடியாது என்று நீ எண்ணக்கூடாது. ஒருவன் அறியாமையால் தவறு செய்கிறான். பலர் ஆணவத்தால் தவறு செய்கிறார்கள். ஆணவமும் அறியாமையே ஆகும். அதை அறிந்து கொண்டவன் செயல்களுக்காக வருத்தப்படுவானேயொழிய கோபப்படமாட்டான். கோபப்படுபவனும் அறியாமையில் மூழ்கியிருப்பவனே. பழக்கப்பட்ட விலங்குகளைக் கொண்டு காட்டு மிருகங்களைப் பிடிப்பது போல அவனோடு சேர்ந்து பழகி, அவனிடத்தில் அன்பு காட்டி அவனை நல்வழிக்கு கொண்டு வருதல் வேண்டும். எதைச் சொல்லியும் திருந்தாதவன் தான் பெரிய அறிவாளி என நினைத்திருப்பான். அவனை இயற்கை திருத்தும். அவனும் திருந்தியே ஆகவேண்டும். திருந்தாதவன் என யாரும் உலகில் இருக்கமுடியாது. நல்லவை தீயவற்றை பகுத்தறியும் ஆற்றல் ஒவ்வொருவருக்குள்ளேயும் இருக்கிறது. அவ்வாற்றல் ஒவ்வொரு செயலின்போதும் மனதுள் வெளிப்படும். இதை மூடி மறைப்பவன் தனிமையில் பல்வேறு துன்பங்களால் அவதிப்படுவான். காலப்போக்கில் அவன் நோயாளியாகி விடுவான். அது உங்களுக்குத் தேவைதானா...?"

சிவசுந்தரமூர்த்தி, சுவாமிகள் தனக்காகத்தான் அவற்றைக் கூறுவதாக நினைத்தார். நினைத்துப் பார்த்தால் சுவாமிகள் கூறுவது உண்மையெனப் புரிந்தது. அறிஞர்கள் எப்பொழுதும் பயனுள்ள சொற்களையே பேசுவார்கள். பயனில்லாச் சொற்களைப் பேசமாட்டார்கள் என்று நினைத்தார்.

200. சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க

சொல்லின் பயனிலாச் சொல்

சொல்லும் பொழுது பயனள்ள சொற்களை மட்டுமே சொல்லுங்கள். பயனில்லாத சொற்களைச் சொல்லாதீர்கள்.